# தாய்வீடு

THAIVEEDU | AUGUST 2020 ஒகஸ்ட் | HOME & LIVING | One Dollar | www.thaiveedu.com | info@thaiveedu.com









ISSN 2369-3657



NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Professional Corporation
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR BBA, LLB, LLM
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir. 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir. 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு....
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RL RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours)
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX ROYAL PROPERTIES
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com


• வீடு • வாழ்வியல் • சமூகம் • இலக்கியம்

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON Homes Realty Inc. Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905.209.8080
Dir. 416.803.7344
www.reon.ca

விசேட சலுகை விலையில்
UNLIMITED INTERNET
TV - HOME PHONE
SMART HOME MONITORING
SAVE UP TO $1350
தமிழில் உரையாட அழையுங்கள்
சுந்தர் சின்னத்தம்பி
Rogers Local Area Advisor
416.908.6845
puvanendran.sinnatha@rci.rogers.com
ROGERS

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON, M1P 4S6

www.inayam.net
இணையம் .net
inayam
416-400-6406
முற்றிலும் இலவசம்
த மி ழ் நி க ழ் வு க ளி ன் ச ங் க ம ம்

MLT
RENTALS FOR HOUSEPARTY
416-625-1826
647-955-1721
Chair, Round Table, Tent, Square Table
Cake Table & Etc.

SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

Dr. Rajkumar Arulthasan
Forestbrook Pet Hospital
3-1105 Finch Ave, Pickering, ON L1V 1J7
Phone: 905-831-1118
Fax: 905-831-4119
info@forestbrookpethospital.com
www.forestbrookpethospital.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)

VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental • Commercial • Investment

Maliny Bridal
Bridal makeup, Arangretram makeup
And for all your makeup needs
for auspicious ceremonies
Maliny Bridal
H 416 497 0052 | C 416 670 6942
malinyb@hotmail.com
Specialized in saree pleating
Professional makeup expert with 25 years

"It's your Journey. I am Here to Help."
Ragu Mahesu Sales Represnative
Cell 416-450-6833
Home Life Top Star Realty Inc. Brokerage
PHONE 905-209-1400 FAX 905-209-1403

MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

Uthayan Iyampillai
Sales Representative
Dir. : 416-827-1366
E-Mail : iuk2410@gmail.com
Website : www.iyamhomes.com
Century 21 Green Realty Inc.,
Each Office Independently Owned & Operated
Off : 905-565-9565 Fax : 905-565-9522
6980 Maritz Dr. Unit 8, Mississauga ON. L5W 1Z3

Nadodi EVENTS & TOURISM (India)
இந்தியாவில் உங்கள் இல்லத்திருமணநிகழ்வு மற்றும் அனைத்து சுபநிகழ்வு சம்மந்தமான தேவைகள்
உல்லாசசுற்றுலா ஆன்மீகசுற்றுலா! மருத்துவ உதவிகள் வழி காட்டல்கள்
அனைத்துவிதமானவசதிகளுடன் கூடியதங்குமிடம் மற்றும் வாகனவசதிகள்
இவை அனைத்தும் உங்கள் நிதிநிலைக்குஏற்றார் போல்
மிகசிறந்தமுறையில் செய்துதரப்படும்.
- Thusiyanthan K
+91 9677089577
+91 9941030100
- nadodiind@gmail.com
உங்கள் தேவைகள் அனைத்தும் எங்கள் சேவைகளில் மிளிரட்டும்

நம்பி வாங்க தம்பி பிரபாவிடம்
திரும்பி சந்தோசமா போங்க...
வங்கிகளில் MORTGAGE பெற்றுக்கொள்ள அழையுங்கள்
தம்பி பிரபா (416) 645 3027
அதிகுறைந்த வட்டி வீதத்தில் ஆரம்பித்து
over $1 Million
வரை பெற்றுக்கொள்ளலாம்
TD Canada Trust · NATIONAL BANK · Manulife Bank · ICICI Bank · Scotiabank · B2B BANK · HomeEquity Bank · EQ EQUITABLE BANK
MATRIX MORTGAGE GOLOBAL LIC# 11108

# தாய்வீடு

## மாறிவரும் கல்விச் சூழலை ஏற்குமா உலகம்?

கோவிட் 19 தொற்றுக்குப் பின்னர் இவ்வுலகம் அனைத்துத் தளங்களிலும் பாரிய மாற்றங்களைச் சந்தித்து வருகின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் பாதிப்புகளுக்கும் மாறுதல்களுக்கும் உட்பட்டுவரும் துறையாகக் கல்வித்துறையைக் கருதலாம். 'கோவிட் 19 பரவலைக் குறைப்பதற்கு மருத்துவத்துறை பரிந்துரைத்த மனித இடைவெளி பேணல், முகக்கவசம் அணிதல், அடிக்கடி கைகளைக் கழுவுதல் போன்றவற்றைப் பள்ளிகளில் முறையாக நடைமுறைப்படுத்த இயலுமா?' என்பதே இன்று கல்வித்துறை எதிர்நோக்கும் சவாலாகும்.

கொரோனா நுண்மித் தொற்று அதிகரித்திருந்த காலத்தில் பல நாடுகளும் இணையவழிக் கல்வியைச் சடுதியாக அறிமுகப்படுத்தின. ஆயினும் அவை வெற்றிகரமான கற்பித்தல்முறையாக அமையவில்லை. மேலும், கணிசமான பெற்றோரும் பாரம்பரிய வகுப்பறைக்கல்வி முறைமையில் இருந்து வேறுபட்டதொரு முறைமையைக் கருத்தளவிலேனும் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. இப்போதும் தற்காலிகத் தீர்வாகவே பல பெற்றோர் இணையவழிக் கல்வியை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகள் பள்ளிகளைச் செப்ரெம்பர் மாதத்தில் மீளத்திறப்பது தொடர்பில் அதிக கவனமெடுத்து வருகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் எண்ணிக்கையுடன் வகுப்புகள் தொடங்குமெனத் தெரியவருகின்றபோதும், இன்னும் முழுவிபரமும் வெளியாகவில்லை.

உலகளாவிய ரீதியில் கல்வித்துறை எதிர்நோக்கும் சிக்கல்களுக்குத் தீர்வாக தொடர்பாடல் தொழினுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட இணையவழிக் கல்வியே முன்னிலைப்படுத்தப்படுகிறது. இது மாணவருக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் சவாலானதாக மாறிவிட்டது.

பேரிடர்க்காலங்களில் பிள்ளைகள் கல்வியைத் தொடர வேண்டுமெனில் மாற்றங்களை ஏற்கும் மனோநிலையைப் பெற்றோர் பெற்றாக வேண்டும். கணினி அறிவியலைப் பெற்றோரும் அறிந்திருக்கவேண்டிய காலமிது. இதன் மூலம் பிள்ளைகள் என்ன செய்கிறார்களென பெற்றோர் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் - Parental control என்ற பொறிமுறையும் இந்தக் கணினி அறிவின் மூலம் பெற்றோருக்குக் கிடைக்கிறது.

பிள்ளைகளின் கல்வி தடைப்படாது பாதுகாப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். அதேவேளை, அரசும் கல்வி நிறுவனங்களும் எதிர்கொள்ளும் இடர்களையும் கருத்திற்கொண்டு, கல்வி தொடர்பான முடிவுகளை நாம் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, தொடக்கப்பள்ளி மாணவர்களே கணிசமான இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். கணினிகளைப் பயன்படுத்துவதில் இவர்களுக்கு அருகே இருக்கக்கூடிய உதவியாளர்களும் தேவைப்படுகின்றனர். சிறார்கள் பள்ளிக்குச் செல்லும் நிலையில் சுகாதாரச் செயற்பாடுகளை எந்தளவுக்குக் கடைப்பிடிப்பர் என்பதும் கேள்விக்குரியதே.

உலகளாவிய கல்விச் சமூகம் மாற்றுக் கல்வித்தளம் குறித்து ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளது. துறைசார் வல்லுநர்களும் பல கருத்துகளைத் தெரிவித்துவருகின்றனர். எனினும் அரசுகளும் பெற்றோருமே இறுதி முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

அறிவும் ஆளுமையும் கொண்ட வலுவான எதிர்கால மாணவர் சமூகத்தை வடிவமைக்கும் பணியில் எந்நிலையிலும் எவரும் பின்வாங்கிவிடக் கூடாது என்பதே எமது கருத்தாகும். சூழ்நிலைகளை உணர்ந்து, மாற்றங்களை ஏற்று, மாணவர்களின் கல்வியை உறுதியுடன் முன்னெடுப்போம்.

■ ■ ■

முகப்பு ஓவியம்: ட்ராட்ஸ்கி மருது


Publisher & Editor : PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர் : கருணா

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை), ட்ராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), ரமணி (இலங்கை), சௌந்தர் (இங்கிலாந்து), றஷ்மி (இங்கிலாந்து). எஸ். தர்மதாஸ் - செல்வன் (இலங்கை),

புகைப்படங்கள் : K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), சர்வேசன், துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி, மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper


# மாற்று வடிவங்களைத் தேடும் கல்வி




- பொன்னையா விவேகானந்தன்

கோவிட் 19 தொற்றால் பெருமாற்றங்களுக்கு உட்பட்டிருக்கும் துறை உலகளாவிய கல்வித்துறையே. கோவிட் தொற்றுக்கு முன் - தொற்றுக்குப் பின் என்ற இரு மாறுபட்ட கல்வித்தளங்களை இத்தொற்றுநோய் உருவாக்கியிருக்கின்றது. இதன் வழியே கல்வித்துறையில் ஏற்படப் போகும் மாற்றங்களையும் தாய்மொழிக் கல்வி தொடர்பில் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் எவ்வாறான மாற்றங்களுக்கு உட்பட வேண்டும் என்பதையும் இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.




### யாழ். பல்கலைக்கழகமும் அதன் வரலாற்றுப் பொறுப்பும்!

- எஸ்.கே. விக்னேஸ்வரன்

பல்கலைக்கழகத்தினுள் அரசியல் தலையீடு, எதிர்கால மாணவ சமூகத்தையே சீரழிக்கும்.




### இந்தியக் குடியுரிமைச் சட்டமும் இலங்கைத் தமிழ் அகதிகளும்

- நெல்லை ஜெயசிங்

ஈழத்து அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை கிடைக்காதவகையில் சட்டத்தில் திருத்தம்?




### அமைச்சர் குணவர்த்தனா - தூதர் அலைனா உரையாடல்

- காமினி கோபல்லவா
தமிழாக்கம்: எம்.எல்.எச். மொகிதீன்

நாடகம்: அமைச்சரும் தூதுவரும்.




### ஆஸ்திரேலியாவில் அழித்தொழிக்கப்படும் தொல்குடிமக்கள்

- பொன். பாலராஜன்

அந்நிய நாட்டில் வாழ்வது போல் உணரும் ஆஸ்திரேலிய தொல்குடி மக்கள்.


'இரத்த ஆறு ஓடும்!' தேரர்களின் எச்சரிக்கை வரலாற்றில் கற்றுக்கொண்ட பாடம் 4
அ. கணபதிப்பிள்ளை

ஈழத்தவர் மீது நிகழும் பண்பாட்டுப் படையெடுப்பு 66
அருண்மொழிவர்மன்

சாதி ஒழிப்புச் சாத்தியமற்றது 70
ந. இரவீந்திரன்

தமிழ்நாட்டில் தொல்லியல் அருங்காட்சியகம் 73
செல்வநாயகி ஸ்ரீதாஸ்

மனதோடு பேசிய மலைகள் 76
என். கிருஷ்ணகுமார்

'மனோகர' மதுரை 79
சாம்ராஜ்

நாகம்மாளும் நிலக்கிளியும் 82
மைதிலி தயாநிதி

பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் 'யாழ்ப்பாண இராச்சியம் - ஒரு சுருக்க வரலாறு' 86
க. சண்முகலிங்கம்

வென்றிலன் என்ற போதும் 89
மு.புஷ்பராஜன்

சலனங்களும் கனவுகளும் 92
முல்லைஅமுதன்

இப்படிக்கு ஜன்னல்கள்! 95
போல் ஜோசேப்

உயிரோடு உறவாடும் மனசு! 99
க. ரவீந்திரநாதன்

ஆறாவது ஒழுங்கை கடைசி வீடு 102
த. சாள்ஸ் குணநாயகம்

நினைவேற்றம்: நாணயமூர்த்தியின் கடன் 104
தேவகாந்தன்

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 108
நா. சுப்பிரமணியன்


*மேலும் ஆக்க விபரங்கள் 7ம் பக்கம்*

Funded by the Government of Canada | Canada

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# ‘இரத்த ஆறு ஓடும்!’
# தேரர்களின் எச்சரிக்கை வரலாற்றில் கற்றுக்கொண்ட பாடம்

- அ. கணபதிப்பிள்ளை -

சாதாரணமாக தேர்தற் காலங்களில் கட்சிகளிடையே தோன்றும் பிணக்குகள்தான் பழிவாங்குதல்களாகவும் காரசாரமான விவாதங்களாகவும் தோற்றம் பெறும். சிறுபான்மையினர் வாழும் பகுதியெங்கும் அண்மைக்காலங்களில் அரச இயந்திரத்தின் செல்வாக்கினைக் காலங்காலமாக அனுபவித்து வருபவர்கள் ‘எதற்கும் ஒருகை பார்த்துவிடுவோம்’ என வீராப்புப் பேசுவதும், அதற்காக அரச சலுகைகளைத் துர்ப்பிரயோகம் செய்வதும் மூன்று காரணங்களாற் தீர்மானிக்கப்படுவதாகக் கொள்ள முடிகிறது.

தமிழர்கள் பாராளுமன்ற ஆசனங்களுக்கான போட்டியில் பல குழுக்களாகப்பிரிந்து இயங்கும் நிலை தோற்றுவிக்கப்பட்டமை முதலில் முக்கியம் பெறும். அடுத்ததாகச் சிங்களத் தேசியக் கட்சிகளின் ஆதிக்கமானது தமிழர்களிடையே நேரடியாகவும் மறைமுகமாகவும் ஊடுருவியிருக்கும் பாங்கானது காணப்படுகிறது. மூன்றாவதாகத் தமிழ்ப் பிரதேசமெங்கும் பௌத்த தேரர்களது பௌத்தமதம் சார்ந்த ஆக்கிரமிப்புகளும் பௌத்தத்துக்குப் புறம்பான அரசியல் நடவடிக்கைகளில் இராணுவத்துடன் சேர்த்துக் களமிறக்கப்பட்டிருப்பதும் அரச செல்வாக்கானது ஆதரவற்றவர்களைத் தாக்கும் காரணியாக மாறிவிட்டது.

அண்மையில் தமிழர் தேசியக் கூட்டணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்த வேளையில் சமஸ்டி என்பது தனிநாட்டுக் கோரிக்கை என்பதாகச் சிங்களக் கடும்போக்காளர்களாலும் பௌத்த தேரர்களாலும் சாதாரண சிங்கள மக்களிடையே பரப்பப்படுகிறது. அதுதொடர்பாகவே தேரர்களால் ‘தமிழர்கள் சமஸ்டியைக் கோரினால் இரத்த ஆறு ஓடும்’ என்ற எச்சரிக்கை விடப்பட்டதாகவும் அதற்கு பதிலிறுத்த கூட்டணியின் பேச்சாளர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்திருந்தார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் மகிந்த ஆட்சியின் தாரகமந்திரமாக இருப்பது எல்லோருக்கும் தெரியும். கற்றுக் கொண்ட பாடங்களைத் தமிழர்கள் அடிக்கடி மறந்து விடுகிறார்கள். ஆட்சிக்கு வரும் எந்தச் சிங்களக் கட்சியினரும் கற்றுக் கொண்ட பாடங்களை மறந்திருக்கவில்லை என்பதற்குத் தேரர்களுடைய எச்சரிக்கையானது சான்றாக அமைந்துவிட்டது. இதனைச் சாதாரணமாகத் தேர்தற் கால இனவாதப் பரப்புரையின் வார்த்தைப் பிரயோகமாக மட்டும் எண்ணிவிடமுடியாது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிங்களக் கட்சியொன்றின் அபரிமிதமான வெற்றிதான் இனவாதிகளது தான்தோன்றித்தனமான இனச் சுத்தீகரிப்புக்கும் இனத்தின் இருப்பினைச் சூறையாடுவதற்கும் வழிகோலியிருக்கிறது. தமிழர்களைப் பொறுத்தவரையில் தனிநாடு பற்றிய எத்தகைய முன்னெடுப்பினைச் செய்திருந்தாலும் அது முடிவில் தமிழின அழிப்பில்தான் போய் முடிந்திருக்கிறது. அவையாவும் இனக்கலவரங்களாக மட்டும் வெளியுலகுக்குக் காட்டப்பட்டாலும் அதில் திட்டமிட்ட செயற்பாடுகள் இருந்ததனைத் தமிழர்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

இணக்க அரசியலுக்கு முதலில் சிறுபான்மையினரும் இலங்கையின் இடதுசாரிகளும் ஆதரவு தெரிவித்திருந்தனர். சிங்கள மகாசபையின் தனிச்சிங்களக் கோசமும் படித்தவருக்கன்றி எல்லோருக்கும் வாக்குரிமை வேண்டுமென்ற சிங்களத் தலைவர்களது கோரிக்கையும் சுதந்திரத்தில் காலடிவைக்கப் போகும் இலங்கையில் பெரும்பான்மையினர் ஆட்சியின் கீழ் தமிழர்களுக்கு விமோசனம் கிட்டப் போவதில்லை என்ற சிந்தனையைச் சேர். பொன். இராமநாதன் போன்ற கல்லிமான்களிடையே உணரவைத்தது. பிரித்தானியாவுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய தமிழ்த் தலைவர்கள் கற்றுக் கொண்ட பாடங்களைவிட நல்லிணக்கத்துக்கே முன்னுரிமை கொடுத்திருந்தனர்.



சோல்பரி பிரபுவால் தரப்பட்ட அரசியற் திட்டத்தில் சர்வசன வாக்குரிமையின் அடிப்படையில் பெரும்பான்மைச் சிங்களவர் ஆட்சியொன்று உதயமாகப் போவது தெளிவாகத் தெரிந்தது. இக்காரணத்தால் சோல்பரி அரசியல் திட்டத்தில் 29வது சரத்தானது சிறுபான்மையினரது உரிமைகளைப் பாதுகாக்கும் எனவும் தீர்மானமாகச் சொல்லப்பட்டிருந்தது. போராடாமலேயே பிரித்தானியா உவந்தளித்த சுதந்திரத்தால் இலங்கையர் பிரித்தானிய முடிக்கு விசுவாசமாக இருப்பார்கள் எனப் பிரித்தானியர் நம்பியிருந்ததனால், தமிழர் சிங்களவர் ஆகிய இருதரப்பினரதும் கையில் இலங்கையின் ஆட்சியதிகாரம் 1948ல் ஒப்படைக்கப்பட்டது.

இந்தநேரத்தில்தான் பேரம்பேசும் உரிமையானது தமிழர்களின் ஒரே கட்சியான தமிழ்காங்கிரஸ் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் கையில் விடப்பட்டது. 50க்கு 50 என்பதில் தொடங்கிய பேரமானது ஆட்சியில் பங்காக மாற்றம் பெற்றது. மந்திரிப்பதவியால் வடக்கிலும் கிழக்கிலும் தொழிற்சாலைகள் உதயமாகின. வடக்குக்கு மகாவலிகங்கை வரக்கூடியதாக இணக்க அரசியலைச் செய்ய முனைந்த ஜீ.ஜீ. பொன்னம்பலத்துக்குத் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தினால் சமஸ்டிக் கட்சி அல்லது தமிழரசுக்கட்சி தோற்றுவிக்கப்பட்டதும், மலையகத் தமிழர்களது குடியுரிமையினை டி.எஸ் சேனநாயக்காவின் ஐக்கியதேசியக் கட்சியால் பறித்தெடுக்கப்பட்டமையும் பெரிய முட்டுக்கட்டையாக அமைந்துவிட்டது.

தமிழ்ப்பகுதியெங்கும் தமிழ்க் காங்கிரசுக்குப் பெரிய போட்டிக்கட்சியாக மாறிய தமிழரசுக்கட்சி, தமிழ் பேசும் இரு இனங்களையும் இணைத்துச் சமஸ்டியை உருவாக்கப் போகும் கனவில் ஓரளவு வெற்றியினைப் பெற்றிருந்தது. தமிழ் பேசப்படும் வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்திருந்த வேளையில் மறுபகுதியினர் இணக்க அரசியலில் முழு நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

இந்தநிலையில்தான் சுமஸ்டிக் கொள்கையில் 40களில் தீவிர ஈடுபாடுகொண்ட எஸ்.டபுள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்திருந்தார். சமஸ்டி கிடைக்கும் என நம்பியிருந்த தமிழரசுக் கட்சியினருக்குப் பண்டாரநாயக்காவின் பேரின இனவாதப் போக்குத் தெரியத் தொடங்கியது. தேர்தலுக்காக மட்டும் 24மணித்தியாலத்தில் சிங்களத்தை மட்டும் ஆட்சிமொழியாகக்கொண்டு வருவேனென்று சொல்லப்பட்ட வாக்குறுதியானது 1956ல் சட்டமாக மாற்றப்பட்டிருந்தது. அதில் சிங்களம் மட்டும் அரசகரும மொழியென்பது முக்கியம் பெற்றது. பல எதிர்ப்புகளின் மத்தியில் 1958ல் தமிழுக்கு விசேட அந்தஸ்தும் கொடுக்கப்பட்டிருந்தது.

தனிச் சிங்களச் சட்டத்துக்கெதிராகச் சமஸ்டிக்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் காலிமுகத்திடலில் காந்தியவழியில் தமிமின் சுதந்திரத்துக்கான முதற் போராட்டமான சத்தியாக்கிரகத்தினை நடத்தினர். அரசால் ஏவி விடப்பட்ட படையினரால் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர்களும் தொண்டர்களும் கடுமையாகத் தாக்கப்பட்டு சத்தியாக்கிரகத் திடலிலிருந்து வெளியில் இழுத்துவரப்பட்டனர் அன்றுதான் சுதந்திரமில்லாத இலங்கையின் பிரஜை என்ற உணர்வினைத் தமிழ் இனம் பெற்றுக்கொண்டதுடன், சத்தியாக்கிரகத்தினைச் சிங்களவர்கள் ஒரு போதும் விளங்கிக் கொள்ளமாட்டார்கள் என்ற பாடத்தையும் கற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்தது.

அதன் எதிரொலியாக இலங்கையின் வடக்குக் கிழக்கெங்கும் மக்கள் கொதித்தெழுந்தனர். மோட்டார் வாகனங்களில் இடப்பட்டிருந்த சிங்களச் சிறி அழிக்கப்பட்டது. தமிழர் பிரதேசத்துக்கான தனித் தபாற் தலை அல்லது முத்திரை வெளியிடப்பட்டது. இதுவே தமிழர்களின் முதல் தனிநாட்டுப் பிரகடனமாக அமைந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து 1957ல் தமிழரசுக் கட்சி பேரம் பேசியதன் முடிவில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் முடிவாகப் பண்டாரநாயக்கா மாகாணசபை மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார். அதுவே தேரரொருவரால் அவர் கொல்லப்படுவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியினராற் கொண்டுவரப்பட்ட மாகாணசபை மசோதா தேரர்களினதும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினதும் கண்டி யாத்திரையால் கைவிடப்பட்டது.

தமிழர்கள் தனிநாட்டுக்காகத் தயாராகிவிட்டார்கள் என்பது பற்றிய சிங்களவர்களது கருத்து நிலைப்பாடு 1958ம் ஆண்டின் மிகப்பெரிய திட்டமிடப்பட்ட தமிழ்-சிங்கள இனக்கலவரத்துக்குக் காரணமாக அமைந்தது. அதுவே முதலாவது திட்டமிடப்பட்ட இனப்படுகொலையாகக் கூறப்படுகிறது.

அடுத்து தமிழர் கூட்டணியால் 1976 மே மாதம் 14ந் திகதி வெளியிடப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானமானது இரண்டாவது தனிநாட்டுக் கோரிக்கையாகச் சொல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1977ல் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்த ஜே.ஆரின் ஐக்கிய தேசியக்கட்சியினர் ஆட்சியின் கீழ் தமிழருக்கெதிரான இனப் படுகொலைகள் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டிருந்தன.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் 1983ல் விடுதலைப்புலிகள் இராணுவத்தைத் தாக்கத் தொடங்கியிருந்த பொழுதில் ‘போர் என்றால் போர்’ என்று ஜே.ஆரினால் தமிழருக்கு எதிராகப் போர் அறைகூவல் விடுக்கப்பட்டதுடன், முடிவில் 1983ன் இனப்படுகொலையும் திட்டமிட்டு நடத்தப்பட்டிருந்தது.

தெடர்ந்து 2005ல் மகிந்தவுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட பெரியதொரு தேர்தல் வெற்றியினால் 2009 மே மாதம் தமிழர்கள் வரலாறு காணாத பெரிய இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

இம்முறை தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏக்கிய இராச்சியச் சிக்கல் போன்றதொரு விளக்கம் தேரர்களின் கையில் கிடைத்திருக்கிறது. தமிழர்கூட்டணியினரது தேர்தல் விஞ்ஞாபனத்தை விளங்கிக் கொள்ள முடியாத மகிந்த அணி எவ்வாறு தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்ற சந்தேகத்தினைச் சந்திரிகா அம்மையார் வெளியிட்டிருந்தார். அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பலத்தினை வழங்கமுடியாத தமிழர்கள் அரசியற் தீர்வை எவ்வாறு கேட்கமுடியுமென பசில் ராஜபக்ச ஆணித்தரமான பதிலைக் கொடுக்கிறார்.

மொட்டு வென்றாலும் தோற்றாலும் இலக்கு சிறுபான்மையினர் மீதுதான் வைக்கப்பட்டிருக்கிறது எவ்வாறு இருப்பினும் தேரர்களின் கையில் தமிழர்களின் எதிர்காலமென்பது தமிழசுக்கான ஆபத்தின் எச்சரிக்கையாகவே கொள்ளப்பட வேண்டும்.



kanapathipillai.a@thaiveedu.com

# ஈழத்தில் பரவும் மதவாதம்

- கண்ணன் ராஜ் -

கடந்த சில வருடங்களாக இந்தியாவின் செயற்பாடுகளை அவதானிக்கும்போது அது தனது மத வலயமாகவும் ஈழத்தை எப்படி மாற்றுகின்றது என்பதை வெளிப்படையாகவே அவதானிக்க முடியும். தனது பிராந்திய வலிமையை அதிகரித்துக் கொண்டே செல்லும் இந்திய வெளியுறவின் செயல்பாடுகள், தன்னாலான அளவில் தான் நுழையும் அத்தனை இடங்களிலும் நெருக்கமான ஒரு இணைப்பை ஏற்படுத்துகிறது, முதலிடுகிறது. தனது நிகழ்ச்சி நிரலினை சீரான வகையில் முன்னெடுக்கிறது. அதில் வெற்றியடைந்தும் வருகிறது.

இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சியின் இரண்டாவது ஆட்சியேற்றம், மோடியை சக்தி உள்ளவர் ஆக்கியிருக்கிறது. வெளிப்படையான இந்துத்துவ வெறிக்கூச்சல்களும், தங்களது நலன்களை முன்னிலைப்படுத்தி இந்துக்களை இணைக்கிறோம் என்ற போர்வையில் இஸ்லாமிய வெறுப்பை ஆயுதமாக்குவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகளின்றி தெருக்களில் உறங்கும் நாட்டில், பல வீடுகளில் மலசலகூட வசதி இல்லாத நாட்டில் வல்லபாய் பட்டேலுக்கு மூவாயிரம் கோடி ரூபாய் செலவில் சிலை எழுப்பியிருக்கிறார்கள், தங்களது நாட்டில் வறுமையில் மக்கள் வாடும் பொழுது யாழ்ப்பாணத்தில் 'யாழ்ப்பாண கலாசார மையம்' என்ற பெயரில் யாழ் நூலகத்தின் அருகில் எழுபத்தி ஐந்து கோடி ரூபாய் செலவில் அதனை விட பிரமாண்டமான கலாசார நிலையம் ஒன்றை அமைத்து முடியும் தறுவாயில் இருக்கிறது.

அதே நேரம் நம்மில் சிலர் தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பில் இந்தியா வழங்குவதாகச் சொல்லும் அரசியல் தீர்வு வருவதை விரும்புவதும் கவனிக்கத்தக்கது.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது; இந்தியாவின் நேரடியான ஒடுக்குமுறையையோ, அதன் உள் நுழைவையோ நாம் அறியாமல் இருப்பதும், அதனை லேசாக எடுத்துக் கொள்வதும் தான். அதே நேரம் நம்மில் சிலர் தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பில் இந்தியா வழங்குவதாகச் சொல்லும் அரசியல் தீர்வு வருவதை விரும்புவதும் கவனிக்கத்தக்கது. நீண்ட காலமாக இந்தியாவின் மீது ஈழத் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இருந்திருக்கிறது, தமிழகத்தோடு இருக்கின்ற உணர்வு ரீதியான நெருக்கம், மற்றையது சிங்கள அரசோடு தமக்கிருக்கும் போராட்டத்தைத் தொடர, தமது தரப்பை பலப்படுத்த என்று இருக்கின்ற ஏக்கம் எல்லாம் கலந்திருக்கிறது இச் சூழலில். ஆனால் நாம் அப்பாவித்தனமான அரசியலைச் செய்ய முடியாது. இந்தியாவின் மூளை தனது நலன்களிலேயே தங்கியிருக்கும். அதற்கு இதயமிருக்கப்போவதில்லை. பெரும்பான்மையான உலக அரசுகள் அப்படியானவை தான். இங்கு இந்தியாவின் நலன் என்பது அதை அப்போது ஆளும் அரசின் நலன் என்பதாகவே நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அங்கும் அது மக்களுக்கானதாக இல்லை. இல்லையென்றால் கொரோனா பரவிய காலத்தில் அத்தனை லட்சம் தொழிலாளர்கள் கால்நடையாக ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் நடந்து செல்லும் போது இந்திய அரசு வல்லபாய் பட்டேலின் சிலைக்கு மேலிருந்து வேடிக்கை தான் பார்த்துக்கொண்டிருந்தது. அது தான் உலகின் உயரமான சிலையாம்.

சீனாவுக்கும் இந்தியாவிற்குமான ஆதிக்கப் போட்டி என்பது உலகறிய நடந்து கொண்டிருப்பது. எல்லைகளில் மோதல் நிலைமை, சீன பொருட்கள் மற்றும் செயலிகள் பலவற்றை இந்திய அரசு தடை செய்திருந்தது. இவை இந்திய - சீன அண்மை நிலவரங்கள் பற்றிய உதாரணங்கள். இந்த நிலையில் இலங்கை அரசு தன் ராஜதந்திர ரீதியிலான உறவை இரண்டு நாட்டினோடும் பேணும். தனது நலன்களை பேணும் வகையிலேயே இலங்கை அரசு செயற்படும். இதில் சீனாவோடு இலங்கைக்கு இருக்கும் நெருக்கத்தை இந்தியா கட்டுப்படுத்தும் கயிறு ஈழத்தமிழர்களிடமும் இருக்கிறது. ஈழத்தமிழர்களை வைத்து இந்தியா தனது நலன்களில் சிலதை பேணும், அந்த நலன்களிற்கு உதவ அது ஈழத்தமிழர்களுக்கு உதவ வேண்டும் என ஈழத்தமிழர்கள் எதிர்பார்ப்பார்கள், இவர்களைச் சமாளித்து தனது நலன்களைப் பாதுகாக்க இலங்கை அரசு மற்றும் சீன அரசு இயங்கும். இதுவொரு அண்ணளவான அரசியல் கணக்குத் தான். இங்கு நாம் விழிப்புடன் இருக்க வேண்டியது நாமும் மூளையால் சிந்திப்பது மாத்திரமே எங்கள் நலன்களை அடகு வைப்பதல்ல நமக்கு இந்திய அரசுடனான உறவு, அதை வைத்துப் பேரம் பேசப் பார்ப்பது தான் தேவையானது. ஆனால் அந்தளவு பலத்துடனான அரசியல் சக்தியுடன் நாம் இருக்கிறோமா என்றால், ஆயுத வழிப் போராட்டம் முடிவடைந்த கடந்த பத்தாண்டுகளில் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது என்றே கருத வேண்டும். மக்கள் தேர்தல் ஜனநாயக வெளிக்குள்ளேயே பெருமளவு அரசியல் விடுதலை தொடர்பான நோக்கு நிலையுடன் இருக்கும் இடத்திற்குள் சுருக்கப்பட்டிருக்கிறார்கள்.



ஈழத்தமிழர்கள் தங்களது அரசியல் உரிமைகள் மீதிருந்த அக்கறையை படிப்படியாய் இழந்து வருகிறது. உயிர்வாழ்வதே முதன்மையான பிரச்சினையாக இருக்கிறது. பொருளாதாரம் நொறுங்கிப் போய் இருக்கிறது. பெரும்பான்மை மக்கள் இதைத் தாண்டிச் சிந்திக்க முடியாத அளவிற்கு அரசியல் நீக்கம் செய்யப்பட்டு விட்டார்கள். இந்த நிலையில் இருக்கும் கொஞ்ச நஞ்ச ஓர்மத்தையும் உறுதியையும் மத வாதத்தை அடிப்படையாக வைத்துப் பிளக்க ஆரம்பித்து விட்டார்கள். கிழக்கிலும் வடக்கிலும் இந்தியாவின் நேரடி வாரிசுகளான, ஆர்.எஸ்.எஸ்சின் அன்பு நண்பர்களான சிவசேனையும் இராவண சேனையும் தமது செயற்பாடுகளை கடந்த சில ஆண்டுகளாக அடித்தட்டு மக்களிடம் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மதத்தால் இணைவோம் என்ற கோசத்தையும், இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ எதிர்ப்பையும் கையிலெடுத்திருக்கிறார்கள். இது உடனடியாக விளைவுகளை ஏற்படுத்தவல்லது. முஸ்லீம் அரசியல்வாதிகளின் செயல்பாடுகள் சிலவும், கிறிஸ்தவ சபைகளின் அளவுக்கு மீறிய மூட நம்பிக்கைப் பிரச்சாரங்களும், நோயிலிருந்து காப்பாற்றுகிறோம் வாருங்கள், மருத்துவமனை வேண்டாம் ஆண்டவர் காப்பாற்றுவார் என்ற வாதங்களுடனும் பலரையும் இந்தச் சபைகள் பாழ்படுத்தி வருகின்றன. மக்களுக்குத் தமது மதத்தைப் பரப்பும் உரிமை யாருக்கும் உண்டு. ஆனால் மதங்களின் நற்கருத்துக்களை சொல்வதென்பது வேறு, இதையே ஒரு வேலையாக எடுத்து சாதாரண மக்களை ஊழியம் என்ற பெயரில் வீடு வீடாக அலைய வைத்து, மக்களிடம் கிறிஸ்தவம் மீதான நன்மதிப்பையே கெடுத்து விட்டார்கள். இதை விட ஆவி எழுப்புதல் கூட்டம், ஆண்டவர் செய்தது போல் செய்கிறேன் என்று தண்ணீர் தொட்டிக்குள் ஞானஸ்நானம் செய்தல், ஆட்களின் பெயரை மாற்றுதல், உதவிகளின் பெயரில் பதிலுக்கு மதமாற்றத்தை எதிர்பார்த்தால் என்று பெரிய நீண்ட பட்டியல் உள்ள மூடத்தனங்களை கிறிஸ்தவத்தின் பெயரில் செய்து கொண்டிருந்தால் மக்கள் இதனை எதிர்க்கவே செய்வார்கள். இந்த எதிர்ப்பு இந்துத்துவத்தின் சார்பு நோக்கி மக்களைச் சாய்க்கும். கிழக்கில் முஸ்லிம்களுடன் நிகழும் நெருக்கடிகளால், அரசியல்வாதிகளின் ஆதிக்கங்களால் அங்குள்ள சைவ மக்களும் கொதித்துப் போய் இருப்பார்கள், அதன் மேலே தான் இராவண சேனை தனது உலையை வைத்திருக்கிறது.

இப்படியாக மதக் குழப்பங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது அவை நேரடி அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தும். மக்களை பண்பாட்டு அடிப்படையில் நிபந்தனையின்றி இந்திய மைய வாதத்துடன் தம்மை இணைக்கும், நமது மக்களில் ஒரு பகுதியினர் இந்துத்துவத்தை தமது தற்காப்புத் தேர்வாக எடுப்பார்கள், அதுவொரு ஆபத்தான போக்கு. தமிழ் மக்கள் தம்மை பலமாக வைத்துக் கொண்டு இந்திய அரசுடன் பேரம் பேசுவதென்பது வேறு, தான் இந்தியாவின் காலனி என்கிற மனநிலையுடன் பேரம் பேசுவதென்பது வேறு. அங்கு நாம் அடிமைகளாக்கப்பட்டு விடுவோம், நம் சுயாதீனத்தை இழந்து விடுவோம். சுயாதீனத்தை இழக்காத அரசியல் விடுதலையே நமக்குத் தேவையானது. அதே நேரம் நமக்குள் நிலவும் இந்த மதக் குழப்பங்களுக்குத் தீர்வும் வேண்டும். பிரச்சினையை உள் வீட்டிற்குள் வைத்துக் கொண்டு உதவிக்கு கூட்டிக்கொண்டு வரும் பேயை நாம் விரட்ட முடியாது.

இலங்கைக்குள் இருக்கும் நான்கு பிரதான மதங்களும் தம்மளவில் வேறு வேறு அதிகார எல்லைகள் கொண்டவை. பவுத்தம் இலங்கையின் முதன்மை மாதமாக இருக்கும் நாட்டில் மற்றைய மாதங்கள் ஏற்கனவே இரண்டாம் இடம் தான். இந்த நிலையில் தமிழர்கள் மத அடிப்படையில் இல்லாமல் மொழி அடிப்படையில் இணைய ஏதேனும் வாய்ப்பிருக்கிறதா என்று பார்த்தால் அதற்கான தீர்க்கதரிசனம் மிக்க தலைவர்கள் இலங்கையில் உள்ள எந்தவொரு தமிழ் பேசும் சமூகங்களிடமும் இல்லை. மலையாகத் தமிழர்கள், முஸ்லிம்கள், ஈழத் தமிழர்கள் என்று மூன்று அடையாளங்களாக சிதறிப்போயிருக்கும் தமிழின் மொழி வழி இணையக்கூடிய வாய்ப்பென்பது, இப்போது சைவம், கிறிஸ்தவம் என்று வேறு உடைந்து கொண்டிருக்கிறது. மதத்தை நேரடி அரசியலுடன் இணைத்தே இலங்கை அரசு தன்னை கட்டமைத்திருக்கிறது. அது வசதியானது. மக்களைத் தமக்கு அப்பாலானதின் மீதான நம்பிக்கையை காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு காலத்தை நகர்த்தலாம்.

இந்தியா அரசியல் அமைப்பின் அடிப்படையில் மதச் சார்பற்றது என்பது மிக முக்கியமானது. ஆனால் அது ஒரு இந்துத்துவ சித்தாந்தமுடைய அரசியல் கட்சியால் ஆளும் நிலைமை வரும் போது, அது முழு இந்துத்துவ மிருகமாக மாறி நம் முன்னால் எழுந்து நிற்கிறது. இலங்கை ஏற்கனவே பவுத்த நாடாக இருக்கிறது. அதைப் பெயரளவில் கூட மதச் சார்பற்ற நாடாக மாற்றுவது இப்போதைக்குச் சாத்தியமில்லை. அதற்குரிய உரையாடல்களும், களச் செயற்பாடுகளும் கூட நடைபெறுவதில்லை.

இந்தப் பின்னணிகளின் அடிப்படையில் தான் சிவசேனை, சங்கிலிய மன்னனின் நினைவாக இந்தியக் குருக்கள்மாரைக் கூட்டிக்கொண்டு வந்து குளங்களில் நீர் வார்த்தும், மாட்டிறைச்சிக் கடையை மூடுங்கள் என்று பவுத்த குருமார்களுடன் சேர்ந்து போராட்டம் நடத்துவதும், சைவ மக்களே உங்கள் வாக்குகளை சைவருக்கு வழங்குங்கள் என்று சுவரொட்டி ஒட்டுவதும், மன்னார் ஆலய வளைவு உடைப்பை பெரும் மதவாதத் தாக்குதலாகச் சித்தரித்து களமாடியதும் எல்லாமும். இன்னும் ஏராளமான வேலைகளை அவர்கள் படிப்படியாகச் செய்து வருகிறார்கள். இதே நேரம் கிறிஸ்தவ சபைகள் மக்களின் ஏழ்மையை தமக்குச் சாதகமாக்குகிறார்கள். சபையில் சேர்ந்தால் தான் உதவி என்னும் போது ஏதோ சங்கத்தில் சேருவது போல் சேர்ந்து விடுகிறார்கள். அண்மையில் கொரோனா வந்த ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் தொற்றுப் பரவியமைக்கு முக்கிய காரணமாயிருந்த சுவிஸிலிருந்து வந்த பாஸ்டர், அவரது சபை சார்பில் செய்து கொண்டிருப்பவற்றை இணையமெங்கும் இப்போது பார்க்க முடிகிறது. முன்னர் குறிப்பிட்டது போல, தண்ணீர் தொட்டிக்குள் ஞானஸ்நானம் கொடுத்தவர் இந்தப் பாஸ்ட்டர் தான். தனக்கு வருத்தம் முடிந்து விட்டது, சபைக்குரிய பங்குப்பணத்தைக் கட்டுங்கள் மக்களே என்று சொல்பவரும் இவர் தான். இலங்கையில் ஒவ்வொரு ஊரிலும் சபை திறப்போம் என்று அறைகூவல் விடுபவரும் இவர் தான். இவரைப் போல் இன்னும் பலரும் இருக்கலாம். இப்போது நாம் என்ன செய்வது. இந்தக் கும்பல்களின் நலன்களுக்காக நமது மக்கள் உடைவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க விதிக்கப்பட்டிருக்கிறோம். ஏன் என்றால் மக்கு அரசியலில் அக்கறையில்லை. அரசியல் என்பது பொழுதுபோக்கு உரையாடலாகவே மிச்சமிருக்கிறது. இங்கு நிகழ்ந்திருக்க வேண்டியது அரசியல் விழிப்பு. ஆனால் நிகழ்ந்திருப்பதோ மதவாத அரசியல் விழிப்பு. நாம் மதச்சார்பற்ற அரசியலிடம் சென்று சேர வேண்டியவர்கள். அதுவே நம்மை, நமது நலன்களைப் பாதுகாக்கும்.

இறுதியாக, அண்மையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று, தமிழ் நாட்டில் உள்ள 'கறுப்பர் கூட்டம்' என்ற யுடியூப் சனல், கந்த ஷஷ்டி கவசத்தில் உள்ள ஆபாசங்கள் என்ற விடயத்தைப் பற்றி பேசியிருந்தார்கள். அவர்கள் அதில் பயன்படுத்திய அர்த்த வியாக்கியானங்களில் நாம் முரண்படவும் வாய்ப்புண்டு. ஆனால் இதை பிஜேபி பெரியதொரு விவகாரமாக ஆக்கியது. அவர்கள் மேல் வழக்குகள், கொலைமிரட்டல்கள் பாய்ந்தன. நெருக்கடி தாங்க முடியாமல் குறித்த வீடியோவைச் செய்திருந்தவர், பொலிஸில் சரணடைந்தார். இந்த நிலையில் ஈழத்திலிருந்து ஒருவர் வெளியிட்ட எதிர்ப்பு வீடியோவும் பரவலாகப் பகிரப்பட்டது. கறுப்பர் கூட்டம் பெரியார் ஆதரவாளர்கள். ஆகவே பெரியாரையும் பேசி சகட்டு மேனிக்கு புலம்பியிருந்தார். ஆனால் இந்த நேரத்தில் மத உணர்ச்சிகள் தூண்டப்பட்டுவிட்ட இடத்தில் மக்கள் இந்த பேச்சை கேட்பார்கள். இதில் உச்ச பட்சமாக பிஜேபியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான எச் ராஜா இந்தக் காணொலியை தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்து தன் பங்குக்கு தன் சேவையை ஆற்றினார். அவ் வீடியோவைச் செய்த இளைஞர் மதத்திற்கொன்று என்றால் ஈழத்தமிழர்கள் பொறுக்கமாட்டார்கள், பொங்கி எழுவார்கள் என்றெல்லாம் பேசியிருக்கிறார். இது போன்ற வாதங்கள் வெல்லும் காலத்தில் நிற்கிறோம் என்பது தான் துயரமானது. மதச் சார்பின்மையை நோக்கி எழும் குரல்கள் வலிமையிழந்து கிடைக்கும் இந்த நேரத்திலும் சத்தமாகக் கேட்கும், இந்தக் குரல்களின் பின்னால் ஒளிந்திருக்கிறது, இந்துத்துவ ஈழம் என்ற கற்பனை.

kannan@thaiveedu.com

# காணாமல் போனவர்களும் மௌனப் பதில்களும்

- குரு அரவிந்தன் -

கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக கடந்த சில மாதங்களாக உலகெல்லாம் ஆள் (சமூக) இடைவெளி கடைப்பிடிக்கப்படுகின்றது. நோய் தொற்றிவிடும் என்ற பயத்தில், அனேகமான குடும்பங்கள் வெளியே செல்லாமல் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கின்றன. இதனால், குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் மன ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். உலகின் ஒவ்வொரு பகுதியிலும் யார் யாரோவெல்லாம் அவ்வப்போது திடீரென காணாமல் போயிருக்கிறார்கள். தேடிப்பார்க்காவிட்டால் அவர்கள் காணாமல் போனவர்களாகவே இருப்பார்கள், யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள். காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்று தேடிப்பார்த்தால் அவர்களில் பலர் உண்மையாகவே காணாமல் போகவில்லை, காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்ற உண்மையைப் பலராலும் புரிந்து கொள்ள முடியும். உண்மையை அறிந்து கொள்ளும் வரை தேடுதல் மிகவும் முக்கியம் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இதனால்தான், நான் இங்கே முக்கியமாகக் குறிப்பிட வருவது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றியே, காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா என்பது கூடத் தெரியாமல் உறவுகள் துடிக்கும் போது ஏற்படும் வலி... சொன்னாலும் புரியாதது. அவரவர் அப்படி ஒரு வலியை அனுபவித்தால்தான் அவர்களால் புரிந்து கொள்ள முடியும், மற்றும்படி யாரிடம் இருந்து ஆறுதல் வார்த்தைகள் வந்தாலும், எல்லாம் வெறும் கண்துடைப்புத்தான். தனிப்பட்ட முறையிலும் சரி, கூட்டமாகவும் சரி, எப்பொழுதுமே பழி வாங்கும் படலம் ஆரம்பமாகும்போது, பாதிக்கப்படுபவர்கள் அனேகமாகப் பெண்களாகவே இருக்கின்றார்கள். யுத்தங்களின் முடிவிலும், ஆண்கள் இறந்த பின்னும் இறுதியில் உயிரோடு இருக்கும் பெண்கள்தான் பாதிக்கப்படுகின்றார்கள். பலவீனமான பெண்களைக் குறிவைத்துத் தாக்குவது என்பது, ஆணாதிக்கத்தின் ஒருவகை வெறித்தனம் கொண்ட வெளிப்பாடே என்றும் சொல்லலாம். அது தனிப்பட்ட முறையிலும் சரி, சமூக அரசியல் மட்டத்திலும் சரி, தொடர்ந்தும் நடைபெறுகின்றது. இப்படியான பழிவாங்கும் படலத்தில் இரையாகிப்போன பெண்களின் எண்ணிக்கை சொல்லில் அடங்காது. காலா கலமாய் இது நடந்து கொண்டுதான் இருக்கின்றது. தொடர்ந்தும் நடக்கத்தான் போகிறது?.

அவ்வப்போது மனதில் குடைந்து கொண்டிருந்த பல சம்பவங்களை நினைவுபடுத்திப் பார்த்தாலும், எல்லாவற்றையும் குறிப்பிட முடியாவிட்டாலும் அதில் நான்கைந்து சம்பவங்களை மட்டுமே இங்கே எடுத்துக் காட்டலாம் என நினைக்கின்றேன். எமது காலத்தில் நடந்த, பரபரப்பாக வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்ட பல சம்பவங்களை எடுத்துப் பார்த்தால், அச்சம்பவங்களில் அனேகமாகப் பெண்களே பலியாக்கப்பட்டிருந்தனர். இதுபோன்ற பல சம்பவங்கள் உலகின் பல நாடுகளில் நடந்திருந்தாலும் எல்லாவற்றையும் இந்தக் கட்டுரையில் குறிப்பிட முடியாது. அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு எதுவும் செய்வதற்கில்லை. வலிகளைச் சுமந்து கொண்டிருப்பவர்கள் காலமெல்லாம் தேடித் தேடிக் காலப்போக்கில் அந்த வலிகளின் சுமையைத் தாங்க முடியாமலே அழிந்து போனார்கள். எல்லாவற்றையும் 'காலம் கடந்து போகும்' என்பது போல, இப்படியான நிகழ்வுகள் எல்லாம் அவ்வப்போது ஆவணப்படுத்தா விட்டால் காலத்தால் அழிக்கப்பட்டு விடும். காலம் அழித்து விடும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் பழி வாங்குபவர்களும் தொடர்ந்தும் இத்தகைய செய்கைகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.



கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாகக் கனடாவில் மக்கள் ஒரு பக்கம் மரணமாகிக் கொண்டிருக்க, பெண்களின் கொலைகளும் மறுபக்கம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இவை எல்லாம் வெளிச்சத்திற்கு வருவதில்லை. கொரோனா நோய்த் தொற்றுக்குப் பயந்து வீட்டுக்குள் அடைந்து கிடப்பதால் சென்ற ஏப்ரல் மாதம் தொடக்கம் மே மாதம் 15ம் திகதிவரை எடுத்துப் பார்த்தால், மனவழுத்தத்தால் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாகப் பதினொரு பெண்கள் கனடாவில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொலைகள் ஒன்ராறியோ, கல்காரி, பிரிட்டிஸ்கொலம்பியா, நோவாஸ்கோஷியா, நியூபிறஸ்விக், அல்பேட்டா, வின்னிப்பெக், மனிற்ரோபா போன்ற இடங்களில் இடம் பெற்றிருக்கின்றன. இரண்டு வாரங்களுக்கு முன் கியூபெக்கில் தந்தையும் இரண்டு மகளும் காணாமல் போயிருந்தார்கள். ஆறு வயதான ரோமி, பதினொரு வயதான நோரா ஆகிய இரண்டு பெண்களின் உடலும் பற்றைக்காட்டில் சென்ற வாரம் பொலிஸார் கண்டெடுத்தனர். தந்தைக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை. சுயபாதுகாப்பு காரணங்களுக்காக, அனுமதியுடன் துப்பாக்கி வைத்திருக்க, அமெரிக்காவிலும் கனடாவிலும் வசதிகள் இருப்பதால், திடீரென வரும் ஏமாற்றம், கோபம், சந்தேகம், பழிவாங்கல் போன்ற காரணங்களால் இத்தகைய கொலைகள் நடக்கின்றன.

எனக்குத் தெரிந்த உறவினர் குடும்பமாக இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினையால் படகில் வெளிநாடு சென்றார்கள். கடைசியாக ஜேர்மனிக்குச் செல்வதற்கு எல்லையைக் கடப்பதற்கு இரவிலே ஒரு சிற்றாற்றை கடக்க வேண்டி இருந்தது. கணவன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கூட்டமாக ஆற்றைக்கடக்க, மனைவி பெண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆற்றைக் கடந்தார். அவர் குழந்தையோடு கஸ்டப்படுவதைப் பார்த்த அருகே வந்த ஒருவர் தான் குழந்தையைக் கொண்டு வந்து கரையில் தருவதாகப் பிள்ளையை வாங்கினார். இருட்டுக்குள் ஒருவாறு ஆற்றைக்கடந்து கரைக்கு வந்து சேர்ந்ததும், குழந்தையை வாங்கியவரைத் தேடிப்பார்த்தபோது, அவரைக்

தொடர்தல் 7ம் பக்கம்


Thaas Sivathason
Sales Representative
(416) 562-0340
realtorthaas@gmail.com
21 CENTURY 21 INNOVATIVE REALTY INC. Brokerage
Office:
(416) 298-8383
REALTOR
MLS MULTIPLE LISTING SERVICE


# காணாமல் போனவ...

6ம் பக்கத் தொடர்ச்சி...

காண முடியவில்லை. ஒரு பெட்டியைத் தொலைத்தாலே கவலைப்படும் எமக்குக் குழந்தையைத் தொலைத்தால் எப்படி இருக்கும்? தொலைந்த குழந்தை இதுவரை தொலைந்ததுதான். அந்த வலியிலும் வேதனையிலும் இருந்து பெற்றோர் இன்னும் மீளவே இல்லை.

கனடாவில் வான்கூவரைச் சேர்ந்த முதற் குடி இனத்தவரான 26 வயதான ஷான்ரெல் மோ என்ற ஐந்து வயது பெண் குழந்தையின் தாய், நியூபிறவுன்ஸ்விக் மாகாண பொலிஸார் ஒருவரால் சென்ற மாதம் சுடப்பட்டு மரணமடைந்தது மீண்டும் பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. 'பெண் மணி கையிலே கத்தி வைத்திருந்தார், தற்பாது காப்புக்காகச் சுட்டேன்' என்று 40 வருட சேவையில் இருந்த பொலிஸார் சொல்லியிருக்கின்றார். கையிலே கத்தி வைத்திருந்த தனியே இருந்த பெண்ணை சுட்டுக் கொன்றுதான் பொலிஸ்காரர் தன்னைப்பாதுகாக்க வேண்டுமா என்ன கேள்வி பலரிடம் எழுந்திருக்கிறது. அந்தத் தாயைச் சுட்டதற்கான விளக்கம் இன்னும் கொடுக்கப்படவில்லை. விசாரணைக்கு காலம் எடுக்கும் என்று சொல்கிறார்கள். நடந்ததை எல்லாம் மூடிமறைப்பதற்கு இந்த மரணத்திற்குப் பின்னாலும் ஒரு கதை இருக்கலாம்.

எங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை ஊடகங்கள் சுட்டிக் காட்டாவிட்டால் பல விடயங்கள் எமக்குத் தெரியாமலே போய்விடும். கொலை செய்யப்பட்டவர்கள் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பெண்களாகவும், அழகானவர்களாகவும், பாலியல் காரணங்களுக்காகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவும் இருந்தால், அப்படியான துயர நிகழ்வுகள் தான் அதிகமாக ஊடகங்களில் இடம்பெறுகின்றன. சில ஊடகங்களும் இது போன்ற சந்தர்ப்பத்தில் வேறு பல நிகழ்வுகளை ஒப்பிட்டு, உதாரணம் காட்டி வாசகர்களைக் கவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதும் உண்டு. இதனால் பல உண்மைகளை வெளிக் கொண்டுவர முடியும். உண்மையை அறிந்து கொள்வதற்காக, அதை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து காட்டுவதற்காகத் தொலைந்து போனவர்களின் குடும்பத்தினரும் ஊடகங்களுடன் ஒத்துழைப்பார்கள். உண்மை தெரிய வந்ததும், ஒரு மன்னிப்போ அல்லது இழப்பீட்டுடனோ அந்தக் கதை முடிந்துவிடும்.

தென்பகுதியில் ஜே.வி.பி இயக்கத்தினர் போராடிய போதும் இப்படித்தான் பலர் காணாமல் போனார்கள். 1971ம் ஆண்டு கதிர்காமம் பொலீஸ் நிலையம் தாக்கப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்த பலர் கொல்லப்பட்டார்கள். 1970ம் ஆண்டு, இந்த இயக்கத்தைச் சேர்ந்த - 'கதிர்காம அழகியாக தெரிவு செய்யப்பட்ட - பிரேமாவதி மானம்பரி என்ற 22 வயதான பெண்ணொருவரும், அவரது ஆடைகள் அகற்றப்பட்ட நிலையில் வீதிவழியாகக் கொண்டு செல்லப்பட்டு, தபாலகத்திற்கு அருகே பல தடவைகள் சுடப்பட்டு உயிரோடு மண்ணில் புதைக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் ஈடுபட்டவர்கள் அதன் பின் தங்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தனர். ஆனால் இந்த சம்பவம் ஆவணமாக்கப்பட்டதால், 17 வருடங்களின் பின் மானம்பரியின் கொலைக்குக் காரணமானவரைப் பாதிக்கப்பட்டவர்கள் தேடிப் பிடித்து பழி தீர்க்கும் நோக்கத்தோடு சுட்டுக் கொன்றனர். பெரும்பான்மை இனதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இலகுவாக அவர்களால் பழிக்குப் பழி தீர்க்க முடிந்தது.

பின்னாளில் தமிழர்களுக்கும் விடுதலைப் போராட்ட காலத்தில் இதே போன்றதொரு நிலை ஏற்பட்டது. 2009ம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது பல பெண் போராளிகள் கொல்லப்பட்டனர். பலர் சரணடைந்தனர். அப்படிச் சரணடைந்தவர்களில் இசைப் பிரியாவும் ஒருவர். 1982ம் ஆண்டு பிறந்த இவர் 1999ம் ஆண்டு போராளியாகத் தன்னை இணைத்துக் கொண்டு, தொலைக்காட்சி செய்தி வாசிப்பவராகக் கடமையாற்றினார். ஊடகத்துறையில் இருந்ததால் பலராலும் அறியப்பட்டவராக இருந்தார். சனல் 4 தொலைக்காட்சியினர் தேடி எடுத்து வெளியிட்ட ஆவணத்தில் இசைப்பிரியாவும் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது தெரிந்தது. அரசு கொடுத்த வாக்குறுதியை நம்பி வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் பலர் யுத்தம் முடிந்தபின் மிக அருகே வைத்து ஒவ்வொருவராக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். காணாமல் போனவர்களில் சிலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்ற உண்மை சனல் 4 தொலைக்காட்சி மூலம்தான் தெரியவந்தது. இது போன்ற பல ஆவணங்கள் இன்னும் இருக்கலாம், யுத்தத்தில் கலந்து கொண்ட இருதரப்பினரிடமும் இருக்கலாம். காரணம் எல்லோரிடமும் நவீன செல்லிடத் தொலைபேசிகள் பாவனையில் இருந்தன. நிச்சயமாகப் பலர் களத்தில் தங்கள் வீரதீரச் செயல்களைப் பதிவு செய்திருப்பார்கள், பணம் பத்தும் செய்யும் என்பது தெரிந்திருந்தாலும் அவற்றை வெளிக்கொண்டுவர யாரும் முழுமனதுடன் முயற்சிக்கவில்லை. எம்மவர்கள் பதவிக்காக ஆசைப்பட்டார்களே தவிர, அன்று சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிவராமல், இதுவரை மூடி மறைக்கப்பட்டே இருக்கின்றது. தடயங்களை மெல்ல மெல்ல அழித்துக் கொண்டே இருக்கின்றது. அதைத்தான் சுயநலம் கருதும் எல்லாத்தரப்பினரும் விரும்புகிறார்கள், அதுதான் அவர்களுக்குத் தேவை. தேடுதல் நடத்திய சில பெற்றோர்கள் கவலையில் இறந்து போய்விட்டார்கள். வேலியே பயிரை மேய்வதால், காலம்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

இத்தகைய சம்பவங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய மேலிடங்களின் மௌனத்தின் பின்னால் பல காரணங்கள் இருக்கும். அதை நியாயப்படுத்துவதற்கு பதவியை வைத்துக் கொண்டு எது வேண்டுமானாலும் செய்வார்கள். பாதிக்கப்பட்ட குடும்பத்தை மிரட்டுவார்கள் அல்லது பணத்தைக் கொடுத்து வாயை மூடிவிடுவார்கள். ஆனால் அவர்கள் என்னதான் ஆடினாலும், தேர்தல்கள் வரும்போது மக்களின் வாக்குகள் மிகவும் முக்கியம் என்பதை மக்கள்தான் நிரூபிக்க வேண்டும், குறிப்பாக எம்மவர்கள் செயலில் காட்ட வேண்டும். ஆனால் அப்படி நடப்பது வெகு குறைவானது, காரணம் பொதுமக்கள் எல்லாவற்றையும் மறந்து மீண்டும் பதவி, பணம், இனம், மதம் என்று ஆசை காட்டப்பட்டு அவர்கள் விரிக்கும் வலைக்குள் விழுந்து விடுவார்கள். இறந்தவர்களைப்பற்றி இனி ஏன் கவலைப்படுகிறீர்கள், இறந்தது இறந்ததுதான், கொலைகாரர்களை மன்னித்து விடுவோம், அவர்களுடன் சேர்ந்து போனால் பல பலன்கள் கிடைக்கும்... என்று தங்கள் சயநலத்திற்காக ஆசை காட்டுவார்கள். ஆசை வார்த்தைகளுக்கு எடுபடுபவர்களும் சிலர் இருப்பார்கள், பலர் இதற்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று, மிரட்டல் காரணமாக உயிர்ப் பயத்தில் மௌனமாகவே ஒதுங்கி இருந்து விடுவார்கள்.

கனடாவின் இராணுவத்தில் 15 வீதமானவர்கள் பெண்களாவார். அவர்களில் 27.3 வீதமானவர்கள் தாங்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாக இதுவரை முறையிட்டிருக்கின்றனர். சமீபத்தில் இன்னும் ஒரு சம்பவம் அமெரிக்காவில் நடந்தது. அமெரிக்க இராணுவத்தில் காணாமல் போனவர்களும் பலர் உண்டு. இராணுவத்தில் இணைந்த இளம் பெண்களும் பலர் காணாமல் போயிருக்கிறார்கள். இவர்களில் சிலர் யுத்தத்தில் இறக்கவில்லை. வேட்டையாடப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் 20 வயதான வனீஷா குல்லின் என்ற பெண் காணாமல் போனபோதுதான் பல உண்மைகள் வெளிவந்தன. சின்னவயதில் இருந்தே அமெரிக்க இராணுவத்தில் சேர வேண்டும் என்ற ஆசை காரணமாக வனீஷா இராணுவத்தில் சிறிய ஆயுதங்களைப் பராமரிக்கும் பிரிவில், டெக்ஸாஸ் மாகாணத்தில் உள்ள போர்ட்கூட் இராணுவ முகாமில் இணைந்து கொண்டார். மிகவும் துடிப்பான இவரது அழகும், பருவமும் பலரையும் கவர்ந்திழுத்தது. ஒரு முறை வேலை முடிந்து இவர் குளியலறையில் குளிக்கும் போது உயரதிகாரி உள்ளே வந்து தான் குளிப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றதாகச் சகோதரியிடம் சொல்லியிருக்கின்றார். ஆனால் அந்த அதிகாரியின் பெயரைக் குறிப்பிடவில்லை. மேலிடத்தில் புகார் செய்தால் வேலை பறிபோய்விடும், பழிவாங்கப்படலாம் என்ற பயத்தில் மௌனமாக இருந்து விட்டார். தொடர்ந்தும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானார். குடும்பத்தினரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து, அப்படி ஒன்றும் நடக்கவில்லை. அதற்கு ஆதாரம் இல்லை என்று மேல்மட்டம் நிராகரித்து விட்டது. நாட்டைக் காப்பாற்ற முன் வந்தவருக்குத் தன்னைக் காப்பாற்ற முடியாத சூழ்நிலையில் அந்தப் பெண் இருந்தார். அதுவே அவரது உயிருக்கும் உலை வைத்து விட்டது. சென்ற ஏப்ரல் மாதம் 22ம் திகதி முகாமுக்கு வேலைக்குச் சென்ற வனீஷா திடிரெனக் காணாமல் போய்விட்டார். பதில் சொல்ல வேண்டியவர்கள் மௌனம் சாதித்தார்கள். குடும்பத்தினர் ஊடகங்கள் மூலம் மேற்கொண்ட விடா முயற்சியால் இராணுவ முகாமில் சக ஊழியரான ரொபின்ஸன் என்பவரால் வனீஷா கொல்லப்பட்டதாகத் தெரியவந்தது. தேடுதல் வேட்டையின் போது, யூன் மாதம் 30ம் திகதி சுமார் 20 மைல்களுக்கு அப்பால் உடல் துண்டுகளாக வெட்டப்பட்டு எரிக்கப்பட்டு, எச்சங்கள் புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்தார்கள். தலையிலே சுத்தியலால் அடித்துக் கொன்றதற்கான அடையாளம் காணப்பட்டது. இதில் சம்பந்தப்பட்டவரைத் தேடிச் சென்ற போது அந்த இராணுவவீரன் தற்கொலை செய்து விட்டதாகச் சொன்னார்கள். அது தற்கொலையா, கொலையா என்ற சந்தேகம் பலருக்கு இருக்கின்றது. குடும்பத்தைச் சமாதானப்படுத்த, மரணமடைந்த வனீஷாவிற்கு இறந்தபின் பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள். குளியலறைக்குள் சென்ற அந்த உயரதிகாரி யார் என்ற மர்மமான கேள்விக் குறியோடு இந்த உண்மைச் சம்பவம் விடை தெரியாமல் இன்னும் தொடர்கிறது.

சென்ற மாதம் நடந்த, திருச்சி அதவத்தூர் பாளையத்தைச் சேர்ந்த பதின்நான்கு வயதான ஒன்பதாம் வகுப்பு மாணவி கங்காதேவி என்ற பெண்ணின் மரணமும் சந்தேகத்துக்கு இடமானதாகவே இருக்கின்றது. தோழி வீட்டிற்குத் தனியாகச் சென்றவர் திரும்பி வரவே இல்லை. காணாமல் போன இவரைத் தேடிய போது, முள்ளிக்கருப்பூர் பழைய பாலம் அருகே, எரிந்த நிலையில், சடலமாகக் காணப்பட்டார். 'காவல் துறை உங்கள் பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கும்' என்று திருச்சி பகுதிக்கு உயர் அதிகாரியாகப் பொறுப்பேற்ற அனி விஜயா என்பவர் உறுதி அளித்திருந்தார். அடையாளம் காட்டிய உறவினர்கள் இருவரிடமும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குற்றவாளிகள் தங்கள் இரையை அடையாளம் தெரியாமல் எரித்து விடுவதில் கவனமாக இருப்பதும் அனேகமான மரணங்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. திட்டமிட்டுச் செயற்படுபவர்கள், கொலைகளையும் தற்கொலைகளாக மாற்றும் தந்திரத்தை அறிந்து வைத்திருக்கிறார்கள். மனிதராகத் திருந்தினால் சரி, இல்லாவிட்டால் இது போன்ற கொலைகள் தொடரத்தான் செய்யும்.

***உசாத்துணை:***

- *https://www.nytimes.com/article/vanessa-guillen-fort-hood.html*
- *https://globalnews.ca/news/7167674/quebec-search-suspect-death-of-two-girls-memorial/*



*kuruaravindan@thaiveedu.com*

## வீட்டினுள்ளே...

ஈழத்தில் பரவும் மதவாதம் 5
கண்ணன் ராஜ்

காணாமல் போனவர்களும் மௌனப் பதில்களும் 6
குரு அரவிந்தன்

சக்கராசனம் 8
பாதுசா ஆனந்தநடராசா

புதிய வீடுகளைக் கொள்வனவு செய்தலும் தரம் உயர்த்துதலும் 11
வேலா சுப்ரமணியம்

மாற்றாற்றல் உடையோர் உலகை மாற்றும் திறனாளிகள் 13
சி. நற்குணலிங்கம்

பனையின் பெருமையும் காரைநகர் மக்களும் 15
தம்பையா நடராசா

குவலயம் ஆளும் குடிசார் பொறியியல் 20
அகணி சுரேஸ்

இராணுவ மயமாக்கலும் யாழ். பல்கலைக்கழகமும் 23
சுலோச்சனா

நாடக நெறியாளர் புராந்தகன் 27
ப. ஸ்ரீஸ்கந்தன்

நினைவில் நீங்காப் பேராசான் மு.பி. பாலசுப்ரமணியன் 30
பொன்னையா விவேகானந்தன்

எழுதி ஓய்ந்த பேனா! 32
எஸ். மல்லிகா

பெண்களின் தார்மீகக் குரல் மௌனமானது! 33
லெ. முருகபூபதி

அறிவார்ந்தோர் ஏன் சர்வாதிகாரிகளை ஆதரிக்கிறார்கள்? 36
- பில் கெலர்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

முறைமைக் கல்வியும் முறைசாராக் கல்வியும் 40
த. சிவபாலு

தொல்காப்பியம் - செய்யுளியல் - செய்யுள் உறுப்புகள் 42
சி. சண்முகராஜா

இலெமூறியா அல்லது குமரிக் கண்டம் 44
அ. கணபதிப்பிள்ளை

சித்தர் இலக்கியம் 45
சர்வேசுவரி சோமசுந்தரம்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் 48
பால. சிவகடாட்சம்

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி 53
மல்லியப்புசந்தி திலகர்

மலையகக் கூத்துகள் 57
ஞானம் லெம்பட்

குட்டக்குட்ட குனிபவர் 64
குமார் புனிதவேல்

திறமையை இனங்காணல் 111
P. விக்னேஸ்வரன்

மனிதன் படைத்த குரங்கு 118
வல்லிபுரம் சுகந்தன்

கிம்பெல் என்ற முட்டாள் 120
ஐசாக் பாசெவிஸ் சிங்கர்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

பனி விழும் பனை வனம் 127
செல்வம் அருளானந்தம்

# சக்கராசனம்

- பாதுசா ஆனந்தநடராசா -

இந்த ஆசனத்தில் உடலானது வளைக்கப்பட்டு வட்ட வடிவமான தோற்றத்தில் இருப்பதனால் சக்கராசனம் எனப்பட்டது. உடலானது வட்டவடிவமான நிலையில் வளைக்கப்படும் பொழுது உடலின் பாரமானது உடலின் மேற்பகுதியில் இருப்பதுடன் வயிற்றுப்பகுதியில் இயங்கும் சக்தியின் மையமான மணிப்பூரகச் சக்கரத்தின் செயல்பாட்டையும் அதிகரிக்கிறது. ஒரு இயந்திரத்தின் இயக்கமானது எரிபொருளின் உதவியுடன் ஒரு வாகனத்தை எவ்வாறு இயங்க வைக்கிறதோ அவ்வாறு உயிரை உடலில் தக்கவைத்துக் கொள்வதற்கும் உயிர் ஆற்றலை இயக்குவதற்கும் நெருப்பானது முக்கியமான ஆற்றலாக விளங்குகின்றது. நெருப்பின் ஆற்றலானது உடலில் வயிற்றுப் பகுதியிலேயே மையப்படுத்த பட்டுள்ளது. இந்த ஆசனத்தை செய்வதன் மூலம் நெருப்பின் ஆற்றல் தூண்டப்பட்டு சக்தி நிலையை அதிகரிப்பதன் மூலம் உடலின் முழு இயக்கத்தையும் எங்களது ஆளுமைக்குள் கொண்டுவர இந்த ஆசனப் பயிற்சி உதவுகின்றது. அத்துடன் உடலின் சமநிலை தன்மையை பேணுவதற்கு இந்த ஆற்றல் மையமே காரணமாக உள்ளது. எனவே இந்த ஆசனத்தை பயிற்சி செய்வதன் மூலம் முழு உடம்புக்குமான பயனை பெறுவதுடன் மனதின் சமநிலையைப் பேணுவதற்கும் முக்கிய பங்காற்றுகிறது.

## பயிற்சிக்கு தயார்படுத்தல்:

எந்த ஒரு ஆசனத்தை செய்யும் முன்பும் உடலையும், மனதையும் ஆறுதல் படுத்தி சவாசனம் நிலையிலிருந்து பின் பயிற்சியை செய்ய மேற்கொள்ளும் பொழுது ஆசன பயன்களை முழுமையாக அடைய வழி-வகை செய்யும். சக்கர ஆசனத்தைப் பொறுத்தவரையில் சவாசனத்திலிருந்து முழங்கால்களை மடித்து பாதத்தை இடுப்புக்கு அருகாமையில் வைத்து நிலத்தில் அழுத்திக் கொள்ளவும். பாதங்களை இடுப்பின் அகலத்திற்கு அகட்டி வைத்திருக்க வேண்டும். கைகளைதோள்களுக்கு மேல் கொண்டு வந்து விரல்கள் தோள்களை நோக்கியவாறு காதுகளுக்கு அருகாமையில் வைத்துக்கொண்டு, உள்ளங்கைகளை நிலத்திலே வைத்திருக்கவும். இந்நிலையில் பாதங்களும் முழங்கால்களும் சிறிதாக அகட்டிய நிலையிலும் முழங்கைகள் தலைக்கு மிக அருகாமையிலும் மேல் பக்கமாக பார்த்தவண்ணம் இருத்தல் வேண்டும். இந்த நிலையில் மூச்சை ஆறுதல் படுத்தி பயிற்சிக்கு தயாராக வேண்டும்.

## ஆசனத்திற்குள் செல்லும் முறை:

மேற்குறிப்பிட்ட நிலையில் தலை, கைகள், தோள்கள், முதுகு மற்றும் பாதங்களை நிலத்தில் வைத்து மூச்சை உள்ளே இழுத்தவாறு முழுமையாக இடுப்பை மேலே தூக்கி, முதுகையும் தோள்களையும் தலையையும் உயர்த்தவும். இந்நிலையில் முதுகு வளைந்து சக்கர வடிவத்தை உடலால் ஏற்படுத்தியிருக்கும். உடல் பாரம் மேல் பக்க உடலில் இருக்கும். முதுகுப் பகுதியை வளைத்து உடலை உயர்த்தும் பொழுது முழங்கால்களை முடிந்த அளவு நீட்டியவாறு, தொடைப்பகுதி புட்ட பகுதி தசைகளுக்கு அழுத்தம் கொடுத்து, உடலை தலைப்பக்கமாக கொண்டு செல்லவும். இந்நிலையில் கைகள் காதுகளுக்கு அருகாமையில் இருக்கும். நெஞ்சுப் பகுதி விரிவடையும்.

முடிந்தவரை கைகளுக்கும் கால்களுக்கும் அழுத்தம் கொடுத்து ஆசனத்தின் முழு நிலையை அடையவும்.

## ஆசனத்தில் நிலை கொள்ளல்:

இந்த ஆசனத்தில் நிலை கொள்ளும் பொழுது நீட்டப்பட்ட கைகளுக்கு இடையில் உச்சிப் பகுதி நிலத்தை பார்த்தவாறு தலையை தொங்கிய நிலையில்





வைத்திருக்க வேண்டும். கண்கள் நிலத்தைப் பார்த்தவாறும் இருக்கும். கால்கள் சிறிதாக அகட்டிய நிலையிலும் இருக்கும். தொடைகள், வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதி நீட்டிக்க படுவதுடன் உடம்பின் பாரத்தை இந்த தசைகளில் வைத்திருக்க முயற்சி செய்யவும். இடுப்பு மற்றும் தோள் பகுதித் தசைகளைப் பயன்படுத்தி உடலை மேல் நோக்கித் தள்ளவும். உள்ளங்கைகளும் பாதங்களும் இந்த ஆசனத்தின் நிலை கொள்வதற்கு அடித்தளமாக விளங்குகின்றது. உள்ளங்கைகளையும் நிலையாக அழுத்தி வைத்துக் கொள்வது முக்கியமான விடயமாகும். மூச்சை உள்ளெடுக்கும் பொழுது வயிற்றுப்பகுதி விரிந்த நிலையிலும் மூச்சை வெளிவிடும் பொழுது வயிற்றுப்பகுதி சுருங்கியும் இருக்கும். முழங்கைகள் நீட்டிய நிலையில் கைகள் நிலத்தில் நன்கு அழுத்தப் பட்டும் இருக்கும். கழுத்துப் பகுதியில் உடல் பாரத்தை வைக்காது ஆறுதலான நிலையில் இருக்கும்படி வைத்துக் கொள்ளவும்

## ஆசனத்தை விட்டு வெளிவரும் முறை:

மெதுவாக தொங்கவிட்ட தலையை தூக்கி முகத்தை மேலே பார்த்தவாறு முழங்கைகளை மடித்து மூச்சை வெளியே விட்டவாறு பிடரியையும் தோள்களையும் நிலத்தில் வைத்து, பின்னர் முதுகையும் இடுப்பையும் நிலத்திற்கு கொண்டுவந்து ஆசனத்தை விட்டு வெளியில் வரவும். முழங்கால்களை நீட்டி, கைகளை உடலுக்கு அருகாமையில் கொண்டு வந்து 45 பாகை தள்ளிவைத்து, உள்ளங்கைகள் மேற்பக்கம் பார்த்த நிலையில் சவாசன நிலையில் ஓய்வாக இருக்கவும்.

## மூச்சின் தன்மை:

ஆசனத்திற்குள் வரும்பொழுது மூச்சை உள்ளே இழுத்தவாறு தலையையும் உடலையும் மேலேதூக்கி முழங்கால்களையும் உள்ளங்கைகளையும் நேராக நீட்டித்து ஆசனத்திற்குள் வரவேண்டும். சக்கர ஆசனத்தில் நிலையாக இருக்கும் பொழுது மூச்சை ஆழமாக உள்ளே எடுத்து முழுமையாக வெளியே விட்டு ஆசனத்திற்கு நிலை கொள்ள வேண்டும். இவ்வாசனத்தை விட்டு வெளியே வரும் பொழுது மூச்சை வெளியே விட்டவாறு முழங்கைகளையும் முழங்கால்களையும் மடித்து மெதுவாக வெளியே வரவேண்டும்.

## பயிற்சியின் கால அளவு:

முடிந்தவரையில் பயிற்சியில் நிலை கொள்ளலாம். மூன்று தடவைகள் இப்பயிற்சியை திரும்பவும் செய்யலாம். ஆரம்பத்தில் சில வினாடிகள் வரையும், படிப்படியாக ஒரு நிமிடம் வரையும் கால அளவை அதிகரிக்கலாம்.

## எளிமைப்படுத்தப்பட்ட பயிற்சிகள்:

ஆரம்பநிலை பயிற்சியாளர்கள் இந்த ஆசனத்தை முழுமையாக அணுகமுடியாத பொழுது, அரைச் சக்கர ஆசனத்தை பயிற்சி செய்யலாம்.

## அரைச் சக்கராசனம் செய்யும் முறை:

அரைச்சக்கர ஆசனத்திற்கு உள் வருவதற்கு சவாசனத்தில் இருந்து முழங்கால்களை மடித்து அருகாமையில் குதிகால்களை கொண்டுவந்து நிலத்திலே வைத்துக் கொள்ளவும். பாதங்களை இடுப்பின் அகலத்திற்கு அகட்டி வைத்துக் கொண்டு, கைகளை உடம்புக்கு அருகாமையில் நீட்டி, கணுக்கால்களை கைகளால் பிடித்துக் கொள்ளவும். இவ்வாறு செய்ய இயலாதவர்கள் கைகளை நிலத்திலே அழுத்திக் கொள்ளலாம். மூச்சை உள்ளே எடுத்து இடுப்பை நன்றாக மேலே உயர்த்தி, நெஞ்சை நாடியை நோக்கி கொண்டு வந்து ஆசனத்தில் நிலை பெறவும். இந்நிலையிலும் தொடைகளும் வயிற்றுப் பகுதியும் நெஞ்சுப் பகுதியும் நீட்டிக்கப் பெறுகின்றது. முதுகுப் பகுதி வளைந்து, தளர்ந்த நிலையில் அரைச் சக்கர வடிவத்தில் இருக்கும்.

## பொதுவான தவறுகள்:

- தலையின் உச்சிப் பகுதியை நிலத்தில் அழுத்தி வைத்திருக்கக்கூடாது.
- பாதங்களையும், முழங்கால்களையும் வெளிப்பக்கமாக திருப்பியும், அதிக அளவிலும் அகட்டியவாறும் வைக்கக் கூடாது.
- இடுப்பை வெளிப்பக்கமாக பக்க வாட்டில் திருப்பக் கூடாது.
- தோள்களை மேல்நோக்கித் தள்ளி வளைக்கக் கூடாது.
- இடுப்பு பகுதியை கீழ்பக்கமாக தொங்க விட்டு முதுகுப் பகுதியை மேலே வளைக்கக் கூடாது.
- கைகளை அகட்டிய நிலையிலோ முழங்கைகளை மடித்தோ வைத்திருக்கக்கூடாது.
- பாதங்களை நிலத்திலிருந்து தூக்கி வைத்திருக்கக் கூடாது.
- கழுத்தில் உடல் பாரத்தை வைக்கக் கூடாது.

## ஆசனத்தின் பயன்கள்:

- சக்கர ஆசனத்தைப் பொறுத்தவரையில் தசைகள் நன்கு நீட்டப்பட்டு இழுக்க படுவதனால் தசைகள் வலிமை பெறுவதுடன் உடம்பில் சமநிலை தன்மையையும் ஏற்படுத்துகின்றது. உடம்பின் முன்பகுதி பலமான சக்தியுடன் இழுக்கப் படுவதோடு தொடைப்பகுதி, வயிற்றுப் பகுதி தசைகள் நன்கு இழுக்கப்பட்டு உள்ளுறுப்புகள் யாவும் நன்கு சக்தியூட்டப்படுகின்றது.
- ஆசன நிலையை அடைவதற்காக கைகளை நன்கு நீட்டி இழுத்து முயற்சி செய்யும்பொழுது புட்டப்பகுதித் தசை

தொடர்தல் 9ம் பக்கம்

# சக்கராசனம்...

8ம் பக்கத் தொடர்ச்சி...

கள் இறுக்கமான நிலையை அடைகின்றது. தொடைப்பகுதி இழுக்கப்படும் பொழுது வயிற்றுப்பகுதி மேல் பக்கமாக தள்ளப்படுகின்றது. உடல் முழுவதற்குமான தசைப்பகுதி நன்கு இழுக்கப்படும் நிலை அடைவதோடு, உடல் நீட்ட படுவதனால் உடலின் செயல்பாடுகள் துரிதமாக்கப்படுகின்றன.

- இப்பயிற்சியின் போது படிப்படியாக உடல் மேல்நோக்கி உயர்த்தி வளைக்கப் படுவதன் மூலம் முதுகுப் பகுதி நெகிழ்வு தன்மையை அடைந்து வளைந்து கொடுக்கும் நிலையை அதிகரிக்கின்றது. இடுப்பு மற்றும் தோள் பகுதியில் ஏற்படும் வலிகளை குறைக்கிறது.
- கைகள் நன்கு நீட்டப் படுவதனால் கைகள் மற்றும் மணிக்கட்டு பகுதிகள் அழுத்தப்பட்டு வலிமை பெறுகின்றன.
- தலைப்பகுதியின் பாரமானது கழுத்துப்பகுதியின் முள்ளெலும்புகளுக்கு கிடைக்கிறது. இதனால் கழுத்து மற்றும் தோள் பகுதிகளில்தசைகளின் இறுக்க மடையும் தன்மை தடுக்கப்படுகின்றது.
- வயிற்றுப்பகுதி செயல்பாடு அதிகரிப்பதனால், அளவிற்கு அதிகமான கொழுப்புகள் கரைக்கப் படுவதுடன் வயிறு பெருத்த நிலையில் உள்ளவர்களுக்கும், வயிற்றின் மந்த நிலைக்கும் இந்த ஆசனம் நல்லதொரு தீர்வை தருகின்றது.
- முள்ளந்தண்டு பகுதி நெகிழ்வுத் தன்மையை அடைவதுடன் வலிமையையும், ஆரோக்கியத்தையும் ஏற்படுத்துகின்றது.
- வட்டவடிவமான முறையில் முதுகுப் பகுதி வளைக்கப் படுவதனால் சரியான உடல் அமைப்பை பேணுவதற்கும் அதிக ஆறுதல் நிலையை அடையவும் இப்பயிற்சி உதவுகின்றது.
- நெஞ்சுப் பகுதி விரிவடைந்து மூச்சு சம்பந்தமான தசைகள் நன்கு இழுக்கப் படுவதால், மூச்சு விடுவதற்கு உதவும் அத்தசைகளின் செயல்பாடு அதிகரிக்கப்பட்டு மூச்சு விடும் நிலையானது இலகுவாகவும் ஆழமாகவும் ஏற்பட வழிவகுக்கின்றது. மூச்சுக்குழாய், குரல் வளை இவற்றில் ஏற்படும் வலிகளுக்கு தீர்வைத் தரவல்ல நல்லதொரு ஆசனமாகும்.



- தலைவலியை போக்குவதுடன் முகத்தில் ஏற்படும் இறுக்கமான நிலையையும் குறைக்கிறது.
- மூளைப் பகுதியின் செயல்பாடு தூண்டப்பட்டு புத்திக்கூர்மையை அதிகரிக்கின்றது.
- இந்த ஆசனத்தை செய்வதினால் ஏற்படும் உடலின் சமநிலை தன்மையானது மற்றைய ஆசனங்களை செய்வதற்கும் இலகுத் தன்மையை அதிகரிக்கின்றது.
- உடற் சக்கரங்களில் முக்கியமாக மணிப்பூரகச் சக்கரத்தின் செயல்பாட்டை அதிகரிக்கச் செய்கிறது. உடலின் சமநிலை தன்மையை பேணுவதற்கு இச்சக்கரத்தின் செயல்பாடு முக்கிய மானதாகும்.

## உடல்நலம் கருதி மனதில் கொள்ள வேண்டியவை:

பொதுவாக ஆசன பயிற்சிகளுக்கு செல்லு முன் சில விதிமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் ஆசனப் பயிற்சி நிலையில் முழுமையையும் பயனையும் அடைய முடியும்.

- உடல் கழிவுகள் அகற்றப்பட்டு, உணவு சமிபாடு அடைந்திருக்க வேண்டும்.
- பயிற்சியின்போது உணவோ நீரோ அருந்தக்கூடாது.
- உணவுக்குப்பின் நான்கு மணி நேரமும், சிற்றுண்டிக்கு பின் இரண்டு மணி நேரமும் இடைவெளி அவசியம்.
- எளிமையான மூட்டுப் பயிற்சிகளைச் செய்து ஆசனத்திற்கு தயாராக வேண்டும்.
- அதிக ரத்த அழுத்தம் உள்ளவர்களும் இருதய பலவீனம் உடையவர்களும் இந்த ஆசனத்தை (சக்கராசனத்தை) அதிகமான கவனத்துடன் பயிற்சி செய்ய வேண்டும்.

ஓர் உடலின் இயக்கத்திற்கு சக்தி ஓட்டமானது முக்கியமான பங்கை வகிக்கின்றது. இந்த ஆசனம் ஆனது உடலின் மையப்பகுதியில் செயல்படுவதன் மூலம் நெருப்பின் ஆற்றல் மையமான வயிற்றுப் பகுதியிலிருந்து மற்ற நான்கு ஆற்றல் மையங்களிலும் உயிர் சக்தியின் செயல்பாட்டை அதிகரித்து உடல் முழுவதற்குமான செயல்திறனை அதிகரிக்கச் செய்கின்றது எனலாம். இலகுவான ஆசனம் என்றாலும் நாள்தோறும் பயிற்சி செய்வதன் மூலம் இந்த ஆசனத்தின் பயனை முழுமையாக பெறுவதற்கு முடியும்.

■ ■ ■






மேலதிகமான உள்ளூர் சமூக வணிகங்களும் சேவைகளும் மீண்டும் திறக்கப்படுவதனாலும், சமூகமாக ஒன்றுகூடும் நபர்களின் தொகை 10 ஆக அதிகரிப்பதனாலும், நாம் அனைவரும் ஒருவரையொருவர் பாதுகாக்கும் எமது முயற்சிகளைக் கண்டிப்பாகத் தொடர வேண்டும்.




**உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்**, இரண்டு மீட்டர் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்



உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிப்பது ஒரு சவாலாக இருக்கும்போது, **முகக்கவசம் ஒன்றினை அணிந்து கொள்ளவும்.**



**தொடர்ச்சியாக அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளவும்**



உங்களுக்கு COVID-19 இருப்பதாக அல்லது அந்த வைரஸ் தாக்கத்துக்கு நீங்கள் முகம் கொடுத்திருப்பதாக எண்ணினால், **சோதனைக்கு உட்படவும்.**

**வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பாக இருந்து கொள்ளவும். உயிர்களைப் பாதுகாக்கவும்.**

ontario.ca/coronavirus ஐப் பார்வையிடவும்.
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# புதிய வீடுகளும் தரம் உயர்த்தலும்

வீடும் விடியலும் - 169

- வேலா சுப்ரமணியம் -

## நிலக்கீழ் தளம் (Basement):

கனடா போன்ற வட அமெரிக்க நாடுகளில் கட்டப்படும் புதிய வீடுகளில் நிலக்கீழ்தளம் இருக்கக் கூடியதாக வீடுகளை அமைப்பது மிகப் பெரியதொரு வரப்பிரசாதம். நிலமட்டத்தில் அல்லது முதலாவது தளத்தில் இருக்கக் கூடிய தளத்தின் சம அளவான பரப்பளவு, கட்டப்படும் வீடுகளின் நிலக்கீழ் தளத்தில் மேலதிகமாகக் கிடைப்பதும், அதனை வாழ்க்கைக்குகந்த இடமாக மாற்றுவதும் எமது முதலீட்டிற்குக் கிடைக்கும் உச்சப்பயன்பாடாகும்.

ஒவ்வொருவரது தேவைக்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் ஏற்றவாறு, இருக்கக் கூடிய நிலக்கீழ் தளத்தை மாற்றியமைத்து பலவித சுக போகங்களை இருக்கும் இடத்திலேயே அனுபவிக்க முடியும். பலவிதமான தொழில்நுட்பங்களும், நவீன வசதிகளும் பெருகிவிட்ட இக்கால கட்டத்தில் அவற்றை நாம் இருக்கும் வீட்டிற்குள்ளேயே உருவாக்குதல் ஒன்றும் எட்டாப் பொருள் அல்ல. எண்ணங்கள், கற்பனைகள், தேடல்கள் இவற்றை ஒன்று சேர்த்து அமைக்கும் திறன், அதனுடன் பொருளாதாரவசதி, குடும்பத்தின் கருத்தொருமித்த முடிவு இவை யாவும் ஒன்று சேர்க்கப்படுமாயின் வாழ்க்கையின் வசந்தத்தை அனுபவிக்க வாசற்படியைத் தாண்ட வேண்டியதில்லை.

நிலக்கீழ் தளங்களை எவ்வாறு மாற்றி அமைக்கலாம் என்பதற்குச் சிலவற்றை இங்கு அடையாளப்படுத்தலாம்.

- நிலக்கீழ் தளத்தை ஒரு வாடகைக் குடியிருப்பாக மாற்றி அமைத்து அத்துடன் மேலதிக மாதாந்த வருமானத்தைப் பெருக்குதல்.
- உள்ளக சினிமா அரங்கு (Home Theatre) போன்ற அமைப்புகளை நவீன தொழில் நுட்பங்களுடன் உருவாக்கி வாழும் வீட்டையே ஒரு பொழுதுபோக்கு மையமாக மாற்றுதல்.
- Recreational Bar போன்ற அமைப்புகளை உருவாக்கி ஒரு தனிமைப்படுத்தப்பட்ட கேளிக்கைக் கூறாக மாற்றுதல்.
- மேலதிக களஞ்சியப்படுத்தும் அலகாக மாற்றுவதன் மூலம் வாழும் பகுதியை அழகாகவும் புனிதமாகவும் வைத்திருக்க வழி ஏற்படுத்தல்.
- வீட்டின் ஒரு பகுதியை அலுவலகத் தேவைக்காக (Home Office) மாற்றி அமைத்தல். COVID 19 தொற்று தொடங்கிய காலத்தில் இருந்து அலுவலக தொழில்துறைகள் இத்தகைய வசதிகளை ஊக்கப்படுத்தி அத்துடன் அத்தகைய நகர்வுகளை நோக்கி முனைப்புடன் செயற்படுவதும் இங்கு கோடிட்டுக் காட்டப்பட வேண்டியதொன்று.
- சிறு கைத்தொழில் அல்லது கல்விக்கூடம் போன்றவற்றிற்கு ஏற்றதாக மாற்றுதல்.

இவ்வாறு பலவிதமான தேவைகளுக்கு ஏற்றவிதத்தில் எதிர்காலத்தில் நிலக்கீழ் தளத்தை மாற்றக் கூடியதாக நிலக்கீழ் தளங்களின் அமைப்புகள் இருக்க வேண்டியதும். அத்துடன் பொருத்தமான முறையில் தரம் உயர்த்தப்பட வேண்டியதும் மிக அவசியமாகும். புதிய வீடுகள் கொள்வனவு செய்யும் போது பலவித எண்ணங்கள் அல்லது அவற்றை அமுல்படுத்தக் கூடிய வசதிகள் இல்லாது இருந்தாலும் காலப்போக்கில் ஏற்படக்கூடிய தேவைகளுக்கும் எண்ணங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கும் ஏற்றவிதத்தில் முன் கூட்டியே தரம் உயர்த்தத் தவறிவிட்டால், பிற்காலத்தில் வீட்டை மாற்றிக் கொள்வது அல்லது எண்ணங்களை கைவிடுவது அல்லது கவலைகளை கொட்டிக் கொள்வதைத்தவிர வேறெதுவும் செய்ய முடியாது.



## உயரம்:

ஆரம்ப காலங்களில் வீடுகள் கட்டப்படும் போது நிலக்கீழ் தளம் Crawl Space உள்ளதாக அமைக்கப்பட்டு வந்தது. அதாவது தவழ்ந்து போகும் அளவுக்கு உயரம் கொண்டதாக மட்டும் இத்தகைய நிலக்கீழ் தளங்கள் இருந்தன. இத்தகையை இடத்தை சிறு களஞ்சியப்படுத்தும் அளவுக்குப் பயன்படுத்த முடியுமே தவிர மேலதிகப் பலன் எதையும் பெற முடியாது.

கடந்த மாதக் கட்டுரையில் குறிப்பிட்டதைப்போல தற்போது புதிய வீடுகளைக் கொள்வனவு செய்யும்போது நிலக்கீழ் தளத்தை முடிந்தளவு 9 - 11 அடிக்கு தரம் உயர்த்துதல் எதிர்காலத்தில் செய்யக் கூடிய பலவித மாற்றங்களுக்கும், பயன்பாடுகளுக்கும் அனுகூலமாக அமையும்.

## Walkout Basement:

குறிப்பாக அடித்தளம் நிலமட்டத்தில் உள்ளதாக வீடுகள் அமைக்கப்படும் பட்சத்தில் வீட்டின் அடித்தளத்தில் இருந்து படிகள் இன்றி பின் வளவிற்குப் போகக் கூடியதாக இருப்பதையே இந்த அமைப்பு குறிக்கும்.

இத்தகைய தளங்களைச் சுற்றி இருக்கக் கூடிய சாளரங்கள் யாவும் உயர்ந்தவையாகவும் தளம் முழுவதும் மிகப் பிரகாசமானதாகவும் இருக்கும்.

இவ்வகையான தளங்களை வசிக்கக்கூடிய 2, 3 படுக்கை அறைகள் கொண்ட வாடகைக் குடியிருப்பு அலகாக இலகுவில் மாற்றிவிடவும் முடியும். அத்துடன் வாடகை வீட்டிற்குரிய சட்டரீதியான அந்தஸ்தை பெறுவதும் மிகவும் இலகுவானதாக இருக்கும்.

புதிய வீடுகளைக் கொள்வனவு செய்யும் போது இத்தகையை அமைப்பை உள்ளடக்க மேலதிகப்பணம் செலுத்தினாலும் அதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பலன்கள் மிக அதிகம். நீங்கள் குறித்த வீட்டில் வசிக்கும் காலத்தில் அடித்தளத்தை வாடகைக் குடியிருப்பாக மாற்றச் சந்தர்ப்பம் இல்லாது போனாலும் அந்த வீட்டை விற்பனை செய்யும்போது அதிக விலைக்கு மிக வேகமாக விற்பனை செய்யக்கூடியதாக இருக்கும்.

## Walkup Basement:

மாநகர சட்ட திட்டங்கள், நிலமட்டத்தின் உயரம் போன்றவற்றின் அடிப்படையில் எல்லா வீடுகளிலும் Walkout Basement ஐ அமைத்துவிட முடியாது. ஆனால் கட்டட அமைப்பாளர்களிடமிருந்து Walkup Basement ஐ அமைத்துத் தரும்படி கேட்கலாம். அதாவது பின்வளவில் அல்லது பின்சுவர் ஓரமாக நிலக்கீழ் தளத்தில் இருந்து வெளியேற அகன்ற படிகளை அமைத்தலையே இது குறிக்கும்.

வீடுகளைக் கட்டும்போதே நிலமட்டத்தில் இருந்து இத்தகைய படிகளுக்கு ஏற்ற விதத்தில் Grading செய்யப்படும். அத்து

தொடர்தல் 12ம் பக்கம்



# புதிய வீடுகளைக்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

டன் இது சட்ட ரீதியானதாகவும் இருக்கும். பொதுவாக Estate Home கட்டப்படும் போது காணியின் பரப்பளவு சற்று அதிகமாக இருப்பதால் மிக அகன்ற படிகளை அமைத்து மிக வசதியான Walkup Basement களை கட்டட அமைப்பாளர்கள் உருவாக்கி இருப்பதை அவதானிக்கமுடியும். இத்தகையை அமைப்பும் மிகப்பல னுள்ளது.

அத்துடன் மீழ் விற்பனையின் போது இத்தகைய அமைப்பை கொண்ட வீடுகளுக்குப் பலரும் அதிக விலை கொடுக்க தயாராக இருக்கிறார்கள் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## Look out Basement

மேற்குறிப்பிடப்பட்ட 2 வகைத் தளங்களும் கிடைக்காத பட்சத்தில் அடுத்த நிலையில் கவனத்திற் கொள்ள வேண்டியது Look out Basement. அதாவது நிலக்கீழ் தளம் வழமைக்கு மாறாகச் சற்று உயரத்தில் இருக்கும். சற்று விளக்கமாகக் கூறுவதானால் 8 - 9 அடிகள் கொண்ட தளத்தில் 4 - 5 அடிகள் மட்டுமே நிலமட்டத்தின் கீழ் இருக்கும். ஆதலால் பெரிய சாளரங்களைப் போடக் கூடியதாக இருப்பதும் நிலக்கீழ் தளம் முழுவதும் பிரகாசமாக இருப்பதும் முக்கிய அம்சங்களாகும்.

அவசரகால நிலைகளில் இத்தளத்தில் இருந்து சாளரங்கள் ஊடாக வசிப்போர் வெளியேறக் கூடிய வாய்ப்புகள் இருப்பதால் சட்ட ரீதியான வாடகைக் குடியிருப்பாக இதனை மாற்றுவதிலும் அதிக சிரமம் இருக்காது. தரம் உயர்த்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்களில் இதுவும் முக்கியமான ஒன்று.

## தனிவழி (Separate Entrance)









வீட்டைக் கொள்வனவு செய்யும் போது, நிலக்கீழ் தளத்திற்கு செல்வதற்குத் தனி-வழி அமைத்துக் கொள்வது மிகவும் நன்று. இதற்கான செலவு சற்று அதிகமாகத் தென்பட்டாலும் எதிர் காலத்தில் நாங்களாகச் செய்ய முற்படும்போது இதற்கான அனுமதியை மாநகராட்சியில் இருந்து பெறுதல் சிக்கலானதாக அமையலாம் அல்லது மேலதிக சிரமங்கள் ஏற்படலாம். சட்டச் சிக்கல் காரணமாக நகராட்சியினரின் நிர்ப்பந்தத்தின் பேரில் தாங்கள் திறந்த வழிகளை மூடிய பலரும் சாட்சிகளாக இருக்கிறார்கள். எனவே தவறவிடக்கூடாத தரமுயர்த்தலில் இதுவும் ஒன்று.

ஒரு வீட்டை மீழ் விற்பனை செய்யும் போது பலரும் போட்டி போட்டு அதிக விலை கொடுக்கும் வீட்டின் வகைகளில் இதுவும் ஒன்று.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள தரம் உயர்த்தல்கள் சகல கட்டட அமைப்பாளர்களுக்கும் அல்லது கொள்வனவாளர்களுக்கும் பொருத்தமானதல்ல. ஆனால், இத்தகைய வாய்ப்புகளும் அதற்கேற்ற பொருளாதார வசதியும் கிடைக்கும் பட்சத்தில் அவற்றைத் தவறவிடாது பயன்படுத்துவதால் அதிக நன்மை அடையலாம் என்பது உண்மை. அத்துடன் ஒரு சிலருக்காவது இது பயன்படும் என்பது எனது கருத்தாகும்.



velasubramaniam@thaiveedu.com



# மாற்றாற்றல் உடையோர் உலகை மாற்றும் திறனாளிகள்

- சி. நற்குணலிங்கம் -

மாற்றாற்றல் உடையோர் சிறப்புத் தேவையுடையவர்களாக, விசேட தேவையுடையவர்களாக கணிக்கப்படுகிறார்கள். பிறக்கின்ற காலத்தில் வலுவளரினராகப் பிறப்பவர்கள், வாழ்க்கைப் பயணத்தில் சந்திக்கின்ற அசம்பாவிதங்களால் உடல், உளப் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றவர்கள் என்போரை மாற்றாற்றல் உடையவர்கள் என அடையாளப்படுத்திக் கொள்ளலாம். குறை என்பது நாம் அளவிடும் அளவுகோல் எதுவென்பதைப் பொறுத்தே அமையும். குறையில்லாத மனிதர் என்று எவருமே இல்லை. இருக்கவும் முடியாது. குறையின் அளவைப் பொறுத்து மனிதரின் இயற்கையான செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு குறைக்கும் நிகரானதொரு நிறைவை இயற்கை அளித்தே தீரும் என்பது நியதி. தமக்கு ஏற்பட்ட குறைபாட்டுக்கு மாற்றாற்றல் உடையோர் எவ்விதத்திலும் பொறுப்பானவர்கள் இல்லை. பிறப்பில் ஏற்படும் குறைபாடுகளாலும், போர், இயற்கை இடர், விபத்து, போசாக்குக் குறைபாடு, வாழ்வில் ஏற்படும் பாரதூரமான நோய்கள் காரணமாகவும் இவர்கள் வலுவிழந்து சிறப்புத்தேவை உடையோராக வாழ்கிறார்கள்.

உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிபரப்படி உலகில் உள்ள மக்கள் தொகையில் 10% மானவர்கள் மாற்றுத்திறன் படைத்தவர்கள். அதிலும் ஏழை மக்களில் 20% மாற்றுத்திறன் படைத்தவர்களாக உள்ளனர். பெரும்பாலான மாற்றாற்றல் உடையோர் ஏழைகளாகவே உள்ளனர் என்பதே இதன் பொருளாகும். குறை உடையவர்கள் என நாம் நினைப்பவர்கள் இன்னுமொரு விதத்தில் மற்றவர்களை விட அதிக ஆற்றல் படைத்தவர்களாக விளங்குவர். இந்த உண்மையை உணர்ந்த உலகம் இவர்களை குறையுடையவர்கள் என அழைப்பதை விடுத்து மாற்றாற்றல், மாற்றுத்திறன் படைத்தோர் என அழைக்கிறார்கள். இவர்கள் உதவு கருவிகள், அணுகு வசதிகள், பயிற்சிகள் மூலம் திறன் விருத்தி செய்துகொண்டு தமக்கு ஏற்படும் சவால்களை வெற்றிகொள்கிறார்கள். தன்னாலான தடைகள், சமூகத் தடைகள், சூழல் தடைகள், குடும்பத்திலுள்ள தடைகள் ஆகியவற்றைத் தாண்டி பயணிக்கின்றார்கள். விளையாட்டு, கலை, தொழில்நுட்பம், அரசியல் எனப் பல துறைகளிலும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக மாறிவரும் இவர்கள் உண்மையில் சிறப்புத் தேவையுடையவர்கள் அல்ல உலகத்தையே மாற்றும் திறனாளிகள்.

மாற்றாற்றல் உடையோர் கடவுளால் உருவாக்கம் பெறுபவர்கள் அல்ல. நாம்தான் இவர்களை உருவாக்குகிறோம். கருத்தரிப்புக் காலத்தில் தாய் போசாக்கான உணவில் கவனம் செலுத்தாமை அல்லது கவனம் செலுத்த இயலாமை, வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக ஒழுங்காகச் செல்லாமை, கருத்தரித்த காலத்தில் தாயானவள் குடும்ப வன்முறைக்கு ஆளாகுதல், மரபணுநிலை ஆகிய காரணிகள் பிறக்கும் பிள்ளையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இவர்கள் விசேடதேவை உடையோராக உதிக்கிறார்கள்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை மிக அதிகமாகக் காணப்பட்டது. ஐ.நா. மட்டத்தில் இது பற்றி ஆராய்ந்து பல முடிவுகள் எட்டப்பட்டன. 1978ல் இவர்களுக்கான சமவாயம் அங்கு அறிமுகமானது. அதில் மாற்றுத்திறன் படைத்தவர்களை இயலாமையுடன் கூடிய நபர்கள் என்று விளிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு அவர்களுக்கான உரிமைகளை வலியுறுத்தியும் 1992ல் ஐக்கியநாடுகள் சபையில் ஏற்றுக்கொண்டபடி மார்கழி மூன்றாந் திகதி அனைத்துலக நாளாக மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கான நாள் உலக நாடுகளில் கொண்டாடப்படுகிறது. இவர்கள் வேலைவாய்ப்பு அற்றவர்களாகவும் உள்ளனர். வளர்முக நாடுகளில் உள்ள மாற்றுத்திறனாளிக் குழந்தைகளில் 90% பேர் பாடசாலைக்குச் செல்வதில்லை என யுனெஸ்கோ அமைப்பு தெரிவிக்கின்றது. மாற்றுத் திறனாளிகளின் பங்களிப்பை ஏற்காத ஒரு நாட்டை வளர்ந்த நாடாக மாற்றிவிடலாம் என் நினைப்பது தவறு என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை செய்கின்றனர். எந்த நாடாயினும் மாற்றுத்திறன் படைத்தவர்களையும் இணைத்து, அணைத்து செல்ல வேண்டும்.

குறை என்பது உடலில் ஏற்பட்டுள்ள சிறு மாற்றம் என உணர்ந்து கொண்டால் அந்தக் குறையால் எம்மை எதுவும் செய்து கொள்ள முடியாது. உடலளவில் பலவீனமாக இருந்தாலும், மனதளவில் தைரியமாக இருப்பவர்கள்தான் மாற்றாற்றல் உடையோர். இவர்களுக்குள் பல்வேறு திறமைகள் மறைந்து கிடக்கின்றன. சிறப்புத்தேவையுடைய அனைவரையும் சமூகத்தின் குழந்தைகளாகப் பார்ப்பது அவசியமாகிறது. சிறப்புத் தேவைக்கு உட்பட்டவர்களாக இருப்பினும் தமக்குரிய உரிமைகளுடன் வாழ உரித்துடையவரகள். கல்வி, கலை, கலாசாரத்தில் பங்கு பற்றும் உரிமைகளையும் புறக்கணிப்பிலிருந்து முழுமையான விடுவிப்பையும் பெற்று வருகிறார்கள், பெறவேண்டும். மாற்றுத்திறனாளிகள் தாம் எதிர்கொண்ட சவால்களை வெற்றிகொள்வதன் மூலம் தம்மை வளப்படுத்திக் கொண்டு நாட்டின் பங்காளராகவும் இருக்கிறார்கள்.

இவர்களது சாதனைகளும், வேதனைகளும் இவர்களது பெற்றோர்களிலும் தங்கியுள்ளது. ஏனையோரைப்போல இவர்களாலும் செயற்பட முடியவில்லையே என ஏங்கும் பெற்றோரும் உளர். தம் பிள்ளைகளின் பலம், பலவீனம், திறன், இயலுமை போன்றன பற்றிய தெளிவு பெற்றோருக்கு இருக்க வேண்டும். இவற்றை அறிந்து வைத்திருப்பதால் அவர்களது மேலோங்கி உள்ள திறனை வளர்ப்பதால், மெருகூட்டுவதால் அவர்களது எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும். இயலுமையை தெரிந்து கொள்வதால் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். தன்னால் எதனையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையை அவர்களுக்கு ஊட்ட வேண்டும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவோர் எந்தச் செயல்களிலும், எந்தச் சூழ்நிலையிலும் தோல்வி கண்டவர்கள் அல்ல. இதனால் பிள்ளையின் செயல்களில் திருப்தி காணமுடியும். அஞ்சா நெஞ்சத்தால் வெற்றி பெறுவர். அவர்கள் சாதனை படைப்பார்கள். பிள்ளையை நாடு மெச்சும் வகையில் மாற்றிக் காட்டமுடியும். உலகை தன் பக்கம் திசை திருப்ப முடியும் என்பதில் நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும்.

உலகை தம் வசப்படுத்திய மாற்றாற்றல் உடயவர்கள் பலர் உள்ளனர். தனது மூளைப் பலத்தை வைத்துப் பௌதீகத் துறையில் மிகப் பெரிய சாதனையை நிலைநாட்டிய ஸ்ரீபன் ஹாக்கிங்கைக் குறிப்பிடலாம். இரண்டாம் உலகப்போரின் போது தமது நாட்டை ஜேர்மனி மற்றும் ஜப்பான் நாடுகளிடமிருந்து காப்பாற்றிய அமெரிக்க அதிபர் பிராங்ளின் ரூஸ்வெல்ட் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு நெஞ்சிலிருந்து கால்வரை செயல் இழந்த ஒருவராவார். அமெரிக்காவின் துணையுடனும், ரூஸ்வெல்ட்டின் திறமையாலும் அன்று சர்வாதிகாரி ஹிட்லர் தோற்கப்பட்டிருக்காது விட்டிருந்தால் முழு உலகமும் இன்று பல மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கும். இதனைவிட ரூஸ்வெல்ட் நான்கு முறை அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமைக்கு உரியவர். புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் மில்டன் ஆகியோர் கண்பார்வை அற்றவர்கள். இசை மேதை பீதோவன், மின்சாரத்தைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் ஆகியோர் கேட்கும் திறனைக் கொண்டிராதவர்கள். இவ்வாறு பல மாற்றுத்திறன் சாதனையாளர்கள் தமது குறைகளை வென்று நிறைகளை நாட்டி உலகை மாற்றியுள்ளார்கள். இன்றும் இவர்களை உலகம் போற்றுகின்றது.

நிக்வுயுசிக் என்பவர் அவுஸ்த்திரேலிய மெல்பேன் நகரில் இரு கைகளும், இரு கால்களுமில்லாது பிறந்தார். இவர் பிறந்தவுடன் இவரை தகப்பனாரிடம் காட்டிய போது அவர் பிரசவ அறையை விட்டு வெளியே வந்து வாந்தி எடுத்தார். பிள்ளையை தாயிடம் காட்டியபொழுது இப்பிள்ளையை என் முன் கொண்டுவர வேண்டாம் தூரக்கொண்டு செல்லுங்கள் என்று கூறினார். பின்னர் தம் மனதைத் தேற்றி ஒரு வைராக்கியத்துடன் பிள்ளையை வளர்த்தனர். இந்தக் குழந்தைதான் இன்று உலகறிந்த நம்பிக்கையின் சின்னமாக விளங்குகின்றது. இவர் தனது நான் என்ற நம்பிக்கையின் காரணமாக பலவற்றை சாதித்து வந்தார். மாற்றாற்றல் உடையோர் உலகை மாற்றும் திறனாளிகள் என்பதற்கு நிக்வியூச்சின் சிறந்த உதாரணமாகும்.

பாடசாலைக் காலத்தில் அவனுக்கு ஏற்பட்ட அவமானங்கள், சோகங்கள், வேதனைகள் அவனை தற்கொலை முயற்சிக்கு கொண்டுசென்றது. ஆனாலும் அவனுக்கு கிடைத்த வாழ்வுக்கான விடயம் இடது கால் அமையவேண்டிய இடத்தில் விரல் போன்ற ஒருவித அங்க வளர்ச்சி காணப்பட்டமை ஆகும். அவனது வளர்ச்சிக்கு அதுவே பலமானது. பிறந்து பதினெட்டாவது மாதத்திலேயே இவன் நீச்சலைக் கற்றுக்கொண்டான். தன்னைப் போன்ற ஒருவன் தனது கழுத்தையும், நாடியையும் பயன்படுத்தி கோல்ப் விளையாடுவதை அறிந்த பின் சாதனை படைக்க விளைந்தான்.

நீச்சல், கோல்ப், மீன்பிடித்தல், கால்ப்பந்தாட்டம் தனது பொழுதுபோக்காக கொண்டிருந்தார். இவர் இரண்டு பட்டப்படிப்புகளை முடித்திருந்தார். நன்றாக நீந்தக் கூடியவர். துன்பத்தில் துவண்டு போகின்றவர்களை அழைத்து அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் ஒளியாக திகழ்ந்தார். நம்பிக்கை மனிதர்களுக்கு மூன்றாவது கை என்பதில் நம்பிக்கை கொண்டவர். அதை மக்கள் மத்தியில் நன்றாக விதைத்தவர். கடின உழைப்பாலும், முயற்சியாலும் இவர் போன்றவர்கள் செயலாற்றுவதை தூண்டக்கூடிய உரைகளை நிகழ்த்தும் நிறுவனத்தை நிறுவினார். இதன் மூலம் தனது அனுபவங்களையும், செயல் திறமைகளையும் மக்களுக்கு தெளிவு படுத்துவதன்மூலம் மிகச் சிறந்த உற்சாகப்படுத்தும் நபராக திகழ்ந்தார். இவரால் பயன் அடைந்தவர்கள் அதிகம். 'வரம்புகள் இல்லாத வாழ்க்கை' என்ற தன்னம்பிக்கை ஊட்டக்கூடிய நூலை எழுதியதன்மூலம் சிறப்புத்தேவையுடையோர் உலகை மாற்றும் திறனாளிகளாக மிளிர வகை செய்தார்.

இரண்டு கைகளும் இல்லாதவர்களும் கூட இந்தக் கை இருந்துவிட்டால் எவ்வளவு உயரத்தையும் எட்டிப்பிடித்துவிடலாம் என்பர் ஆம்ஸ்ரோங். பலவீனங்கள் அதிஸ்டத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள் என்பர் எமர்சன். சோதிடத்தை நம்பினேன் பார்த்தவன் வாழ்ந்தான். லொட்டரியை நம்பினேன் விற்றவன் வாழ்ந்தான். நான் உழைப்பையே நம்பினேன் உண்மையில் நான் வாழ்கிறேன் என்றார் வைரமுத்து. எனவே மாற்றாற்றல் உடையோர் தம்மை நம்பினால் உலகை மாற்றும் திறனாளிகள் ஆவர். வளர்முக நாடுகளிலும் உள்ள சிறப்புத்தேவை உடையோர் பெற்றோராலும், அரசாலும் நன்கு கவனிக்கப்பட்டு அவர்களது தேவைகள் நிறைவு செய்யப்பட்டு, சமூகத்துடன் இணைக்கப்பட்டு முன்னேற்றத்துக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுமாயின் இந்நாட்டு மாற்றாற்றல் உடையோரும் உலகை மாற்றியமைக்கும் திறனாளிகளாக, சாதனையாளர்களாக மாற்றம் பெறுவர்.



natkunalingam@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2010 - 2019)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272




# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

797 Milner Avenue, Unit 200
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

# பனையின் பெருமையும் காரைநகர் மக்களும்

இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்த காலத்திலும், அதன் பின்னரும் இலங்கையில் இறக்குமதிகள் குறைந்து உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அரிசி, கோதுமை மா, சீனி போன்றன பங்கீட்டு முறையில் மக்களுக்கு வழங்கப்பட்டன. உள்ளூரில் அரிசி, நெல் என்பன விலையேற்றம் கண்டன, பணப்புழக்கமும் குறைந்தே காணப் பட்டது. அது மட்டுமன்றி மக்கள் வெளி நாட்டுப் பொருட்களில் அதீத கவனம் செலுத்த ஆரம்பித்தனர். அதனால் பல பெரியோர்களும் குழுக்களும் முனைந்து அதிக கவனம் செலுத்தி தடுத்து நிறுத்த பெருமுயற்சி எடுத்ததன் பயனாக, மக்கள் பனம் பொருட்களுக்குப்புத்துயிர் கொடுக்க ஆரம்பித்தனர். இதற்குக் காரைநகர் மக்களும் இயைந்து செயற்படத் தொடங்கினர்.

இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினரால் எடுக்கப்பட்ட கணக்கெடுப் பின்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏறக் குறைய 42,000 ஏக்கர் நிலப்பரப்பில் 77,00,000 பனைகள் இருப்பதாகக் கணக் கிடப்பட்டுள்ளது. இதில் வலிகாமம் மேற் குப் பகுதி 22,05,388 பனைகளுடன் 1ம் இடத்திலும், தீவுப்பகுதி 13,69,284 பனை களுடன் 2ம் இடத்திலும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றை உற்று நோக்கும் போது காரைநகரில் குறைந்தது 300,000 பனைகளாவது இருந்திருக்க வேண்டும் என எண்ணத்தோன்றுகின்றது. அவற்றில் புதிய வீடுகளுக்கான கூரைகள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கென ஒதுக்கப்பட்ட நிலங்களில் இருந்த பனை களும், அண்மையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைகள் காரணமாகப் பாது காப்புக் கருதி காரைநகர் துறைமுகப்ப குதி, இராசாவின் தோட்டம், தோப்புக் காடு, நீலங்காடு பகுதியில் அழிக்கப் பட்ட பனைகளின் எண்ணிக்கை என்பன அண்ணளவாக 8 - 10 வீதமாகும்.

பனைகள் கூட்டமாகக் காணப்படும் பகு தியை பனங்கூடல் என அழைக்கின்றோம். பனை மரத்தைக் கற்பகதரு எனவும் அழைக்கின்றோம். இதற்குப் புற்பதி, காலம் பெண்ணை, பொந்தி, காகக்க ருப்பை கருங்குந்தி, செங்குந்தி, கட் டைச்சி பூமணத்தி, கங்கிநுங்கி, கொட் டைச்சி எனப்படுகின்ற மறுபெயர்களும் உள்ளன.

பனை, போரசஸ் என்னும் தாவர இனத் தைச் சேர்ந்தது.

பனைகளில் ஆண் பனை, பெண் பனை என இரு இனங்கள் பற்றியே நாம் இது வரை படித்தோம். ஆனால் தமிழகத்தில் இருந்து வெளி வந்த 28.08.2019 தினகரன் பத்திரிகையில் வெளி வந்த கட்டுரையில் 34 விதமான பனைகள் இருப்பதாகக் கூறுகின்றது.

**அவையாவன:**

ஆண் பனை, பெண் பனை, தாளிப்பனை, கூந்தப்பனை, சாற்றுப்பனை, ஈச்சம்பனை, குமுதிப்பனை, ஆதம்பனை, திப்பிலிப் பனை, ஈழப்பனை, சீமைப்பனை, உடலற் பனை, கிச்சிலிப்பனை, குடைப்பனை, இளம்பனை, கூரைப்பனை, இடுக்குப் பனை, தாதம்பனை, காந்தம்பனை, பாக் குப்பனை, ஈரம்பனை, சீனப்பனை, குன் டுப்பனை, அலாம்பனை, கொண்டைப் பனை, ஏரிலைப்பனை, ஏசறுப்பனை, காட்டுப்பனை, கதலிப்பனை, வலியப் பனை, வாதப்பனை, அலகுப்பனை, நிலப்பனை, சனம்பனை.

பனைமரத்தின் ஒவ்வொரு வளர்ச்சிப் பரு வத்தைப் பற்றியும் அதற்கான காலங்கள் பற்றியும் பார்ப்போம்.

| | |
|---|---|
| விதைப் பருவம் | - 22 நாள் |
| முறிகிழங்கு | - 22 நாள் - 3 மாதம் |
| நார்க்கிழங்கு | - 3 மாதம் - 4 மாதம் |
| பீலிப்பருவம் | - 4 மாதம் - 2 வருடம் |
| வடலிப்பருவம் | - 2வருடம் - 10 வருடம் |
| பனைப்பருவம் | - 10வருடம் - 45 வருடம் |

இப்பனைப் பருவத்தில் ஆண்டொன்றுக்கு 12 அங்குல வளர்ச்சி காணும், இதன் பின் செழிப்புற்று வைரம் பெறுகின்றதெனக் கூறப்படுகின்றது.

பனைபற்றி ஆய்வு செய்த ரென்னற் என் பவரும், பேர்குசன் என்பவரும் பனை 801 விதமான பயன்களைத் தருமென்று கூறியிருக்கிறார்கள், பனையில் இருந்து கிடைக்கும் பயன்கள் இருவகைப்படும். ஒன்று, உணவு வகை. மற்றையது, பாவ னைப் பொருட்கள்.

### உணவுப் பொருட்களாவன:

பனம்பழம், பனங்கிழங்கு, பனாட்டு, பனங்கட்டி, பனங்கற்கண்டு, பனங்காய்ப் பணியாரம், பனஞ்சீனி, பனங்களி, ஒடி யற் பிட்டு, ஒடியற் கூழ், புழுக்கொடியல், கருப்பட்டி, நுங்கு, கள்ளு, பதநீர், பூரான், சாராயம், ஒடியல்.

### பாவனைப் பொருட்களாவன:

பாய், தடுக்கு, களப்பாய், சுளகு, விசிறி, பட்டை, நீர் இறைக்கும் பெரிய பட்டை, பெட்டி, கடகம், புத்தகப்பை, கொட்டப் பெட்டி, ஏடுகள் (சுவடிகள்), வள்ளத்த லைப்பாகை, பிளா, உமல், ஓலை, பனங் குருத்து, ஓலைக்குட்டான், கங்குமட்டை, பன்னாடை, குரும்பை, ஊமல், நெல்லுக் கூடை, மீன் பறி, திருகாணி, நீத்துப்பெட்டி, உறி.

### வேறு பொருட்கள்:

பனை மரத்தில் இருந்து துலா, வீட்டுக் கூரைக்கான மரங்கள் தீராந்தி, சிலாகை மற்றும் மாட்டுத் தொழுவம் வண்டிலுக்கான மரம் மற்றும் இன்னோரன்ன பொருட்க ளும் செய்யப்படுகின்றன. இவற்றில் அநே கமானவை காரைநகர் மக்களிடையே இப்போதும் பாவனையில் உள்ளன.

பனையானது உணவு மற்றும் வீட்டுத் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வது அல்ல. இதற்கு விசேட ஆற்றல் உண்டு. நிலத்தடி நீரைச் சேமித்து வைக்கும் ஆற்றலும் பனைக்கு உண்டு. கிணற் றினை சுற்றி பனைமரங்கள் இருந்தால் அக்கிண்று இலகுவில் வற்றாது. வறட்சிக் காலங்களிலும் கூட குறைந்தளவு நீரைக் கொண்டு தாக்குப் பிடிக்கும் தன்மை பனை மரங்களுக்குண்டு. குறிப்பிட்ட இடத்தில் உள்ள நீர் மட்டத்தை பனை மரங்களே பாதுகாப்பதாக ஆராச்சியாளர் கள் கூறுகின்றனர். முன்னையகாலத்தில் வயல்களில் எல்லைகளில் பனை மரத்தை நாட்டியுள்ளனர். காரணத்துடன் தான் அப்படி செய்திருக்கிறார்கள். பனை மரத் தில் இருந்து விழக்கூடிய பனம் பழம் மற்றும் இதர பொருட்கள் வயல்களுக்கு சிறந்த இயற்கைப் பசளைகளாகப் பயன் பட்டு வந்துள்ளன.

தமிழகத்தைச் சேர்ந்த பனை ஆர்வலர் கடும் புயல் வந்தாலும் இலகுவில் சாய்ந்து விழாத மரம் பனையே என உறுதியாகக் கூறுகிறார். அதற்குக் காரணம் 3 வகை யான வேர்த்தன்மை கொண்டதேயாகும் என்கிறார். வெளிப்புறவேர் மழை நீரை வேகமாக உள்ளே கொண்டு செல்லும். உள்வேர் மழை நீரைச் சேமித்து வைக் கும். நடுப் பகுதியில் உள்ள வேர் கிடைக்கும் நீரை கொஞ்சம் கொஞ்சமாக உச்சி மரத்துக்கு அனுப்பிவைக்கின்றது. பனை முக்கிய வேர் மண்ணிற்குள் 100 முதல் 150 அடிவரை செல்லும் தன்மை கொண்டது. பனை தமிழர்களின் நல்வாழ் வின் அடையாளம்.



### நுங்கு:

வைகாசி மாதம் முதல் ஆடி மாதம் வரை நுங்குக் காலமாகும். பாளைகள் வெளி வந்து குரும்பைகள் தோன்றும். அவை முற்றி நுங்குகளாகப் பரிணமிக்கின்றன. இது இரு வகைப்படும். ஒன்று இளம் நுங்கு, மற்றையது கல் நுங்கு. இளம் நுங்கு வெட்டியவுடன் நீர்த்தன்மை நிறைத் தாக இருக்கும். பருகுவதற்கு இலகுவாக வும் இனிப்புத் தன்மை நிறைந்தாகவும் இருக்கும். கல்நுங்கு என்பது சற்று முற்றிய தன்மை கொண்டதாகவும் இறுக் கத்தன்மை கொண்டிருப்பதனாலும் அதனைக் கைவிரலால் தோண்டியுண்பர், இது சற்று இனிப்புத்தன்மை குறைந்தது காணப்படும். நுங்கில் அதிகளவு வைற்ற மின் B, C என்பனவும், இரும்புச்சத்து, கல்சியம் போன்றனவும் இருப்பதாகக் கூறப்படுகின்றன. சிறுவர் முதல் பெரியோர் வரை இதனை விரும்பியுண்பர். நுங்கு குடித்தபின் எஞ்சும் கோம்பைகளைச் (கோழை) சிறுசிறு துண்டுகளாக அரிந்து ஆட்டுக்கடாக்களுக்கும் இளம் மாட்டுக் காளைகளுக்கும் உணவாகக் கொடுக் கின்றனர். இது அவற்றிற்கு சக்தியையும் வளர்ச்சியையும் கொடுக்கின்றது.

### பனம் பழம்:

நுங்கு முற்றி சீக்காயாகவும், அச்சீக்காய் முற்றி பனம் பழமாகவும் பரிணமிக்கின்றது.

- தம்பையா நடராசா -

ஆவணி மாதம் முதல் ஐப்பசி மாதம் வரையான காலப்பகுதி பனம்பழக் கால மாகும். பனம் பழங்கள் ஒவ்வொன்றும் கிட்டத்தட்ட 6 - 8 அங்குல விட்டமுள்ள னவாகவும், குலைகளாகவும் காட்சியளிக் கின்றன. நார்த்தன்மை பொருந்திய இப்பழங்களின் மேற்தோல் கறுப்பு நிறம் கொண்டவையாகும். அவை ஒரு விதை யுடையனவாகவும், இருவிதைகள் கொண் டவை இருக்காலி எனவும், மூன்று விதை கள் கொண்டவை முக்காலி எனவும் அழைக்கப்படுகின்றன. இவற்றினுள்ளே சுற்றிவர உள்ள பகுதிகள் தும்புகள் நிறைந்தனவாகவும் அத்தும்புகளிடையே களித்தன்மை கொண்ட பனம்பழத்தில் செம்மஞ்சள் நிறமுடைய திரவப் பொருள்



காணப்படுகின்றது. இது பனங்களி எனப் படும், இதனை மாடுகள் எடுத்தவுடனையே தோலை நீக்கிவிட்டு, விதையை உறந்து உறிஞ்சிச் சாப்பிடுகின்றன. ஆனால் மனி தரோ அவ்வாறில்லாமல் இனிப்புத் தன்மை கொண்ட பழங்களாக எடுத்து நெருப்பி லிட்டு சுட்டு, அதன் பின் அதனை நன் றாகக் கழுவி மேலுள்ள தோலை நீக்கி, நன்றாகப் பிசைந்து உண்கின்றனர். 1950க்கு முன்னர் பெரும்பாலான மக்க ளின் வீடுகளில் மதிய உணவாகப் பனம் பழமே இருந்தது என்று சொன்னால் மிகையாகாது. ஒரு விதையினை உறிஞ் சியுண்டால் ஒரு நேரப் பசிதீரும் சாத்தி யம் இருந்தது.

தொடர்தல் 16ம் பக்கம்

# பனையின் பெருமை...

15ம் பக்கத் தொடர்ச்சி...

*'மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூறி இரந்தழைப்பார் யாருமுண்டோ'* என் பதற்கிணங்க காரைநகர் மக்கள் பனம் பழகாலத்தில் அதிகாலையில் எழுத்து கடகங்களுடன் தத்தம் தோட்டங்களுக்குச் சென்று, பனம் பழங்கள் பொறுக்கி வரு-வதைக் காணக்கூடியதாக இருந்தது. அது மட்டுமல்ல, வேறெந்த இடத்திலும் பனம் பழத்தைக் கண்டாலும் பொறுக்கி வரத் தவறுவதில்லை, இது எம்மக்களின் வழமையாக இருந்தது. பனம் பழத்தில் இனிப்புத்தன்மை கொண்டவை காறல் தன்மை கொண்டவை என இருவகை உண்டு.

## பனாட்டு:

பனாட்டு தயாரிப்பதென்பது இலகுவான காரியமன்று. மேலும் எல்லோராலும் பொறு மையுடன் செய்யமுடியாது என்பதே உண்மை. பனாட்டுத் தயாரிப்பவர்கள் இனிப்புத்தன்மை கொண்ட பனம் பழங் களை மரத்தில் இருந்து விழுந்தவுடனேயே எடுத்துச் சேகரித்துவிடுவார்கள், பின்னர், அப்பழங்களின் மேற்பகுதி முழுவதையும் நன்றாகக் கழுவிசுத்தம் செய்து கொள்வர்.

அடுத்து, அதன் மேலுள்ள கறுப்புத் தோலை நீக்கிவிட்டு, பழத்தை நன்றாகப் பிசைந்து களியை உறந்து ஒரு சுத்தமான பாத்திரத்தில் இடுவார்கள். பாத்திரத்தில் நிரம்பிய களியை பனங்களித் துண்டு எனக்கூறப்படும் துண்டின் உதவியுடன் வடித்தெடுப்பார்கள். வீட்டு முற்றத்தின் ஒருபகுதியில் நான்கு கம்பங்களை நாட் டிப் பந்தலிட்டு, அதன் மேல் பாயைவி ரித்து, அப்பாயின் மேல் வடித்தெடுத்த களியை ஊற்றி, நன்றாகப் பரவி, அதில் உள்ள நீர்த்தன்மை நீங்கும் வரை ஏழெட்டு முறை பரவிக் காயவிடுவர். இரவில் குளிர்த்தன்மை ஏற்படுமெனக்கருதி பாயுடன் சுற்றி வீட்டுக்குள் வைப்பர். பனாட்டுக் காய்வதற்கு வெய்யில் படக்கூடிய பகுதி யையே தேர்ந்தெடுப்பர். பனாட்டு நன் றாக காய்ந்து நீர்த் தன்மை முற்றாக நீங்கியதும், உழவாரை கொண்டு செதுக் கியெடுத்தும், அளவாக மடித்து, இதற்கென இழைக்கப்பட்ட (பனாட்டுக்கூடை) கூடை களில் அடுக்கிக், குசினியில் உள்ள பற னில் வைத்து விடுவர். மேற்கூறியவைக-ளைக் காரைநகர் சல்லை எனும் பகுதி யில் வாழ்ந்த எனது பேத்தியார் பொன் னாத்தை என்பவர் வருடந்தோறும் செய்து வந்ததை நான் சிறுவனாக இருந்த பொழுது அவதானித்து வந்தேன். இவர் மட்டுமல்ல மேலும் பலர் பனாட்டுத் தயா ரிப்பில் ஈடுபட்டார்கள் என அறிய முடிந் தாலும் விபரங்களைத் திரட்ட முடிய வில்லை.

பனாட்டு பெரும்பாலும் காலை உணவா கக் கொள்ளப்பட்டது. எனது பேத்தியோர் ஒரு துண்டு பனாட்டும் தேங்காய்ச் சொட் டும் தந்தது இன்னும் ஞாபகத்தில் இருக் கிறது. அந்தக்காலத்தில் 'ஒரு கூடை பனாட்டுக்கு ஒரு பரப்புக் காணி எழுதிக் கொடுத்தார்கள்' எனக் கேள்விப் பட்டி ருக்கிறேன். ஆனால், அதன் உண்மை தன்மையை ஸ்திரப்படுத்த முடியவில்லை. இருந்தும் அத்தகவல் உண்மையானால் அக்காலத்தவர் பனாட்டுக்கும், பனம் பொருட்களுக்கும் எவ்வளவு மதிப்புக் கொடுத்தார் என்பது புலனாகின்றது. அதி யமான் என்னும் அரசன் கொடுக்க நெல் லிக்கனியை உண்ட ஔவைப்பிராட்டி நீண்ட காலம் வாழ்ந்தது போல, பனாட்டு மற்றும் பனம் பண்டங்களை உண்டவர்க ளும் நீண்ட காலம் வாழ்ந்தார்கள், வாழ் கிறார்கள் என்பதைச் சரித்திரம் பறை சாற்றிவருவதை நீங்கள் அறிவீர்கள். இது காரை நகரைச் சார்ந்த முதியோர்களுக்கும் சாலப் பொருந்தும்.

## கள்ளு, பதநீர்:

தை மாதம் முதல் ஆனி மாதம் வரை கள்ளு மற்றும் பதனீர் இறக்கும் காலமா கும். கள் இறக்குபவர்கள் பனையில் இருந்து வெளிவரும் பாளைகளைத் தட் டிப் பதப்படுத்தி, அவற்றைக் கயிற்றினால் வரிந்து கட்டி, அவற்றில் மண்முட்டிகளை கட்டிவிடுவார்கள். அப்பாளையில் இருந்து ஒழுகும் கள்ளு கட்டப்பட்ட முட்டியில் ஒருங்கு சேரும். அப்படிச் சேரும் கள் ளினை நாள்தோறும் காலையிலும் மாலை யிலும் சேர்த்து வருவார்கள். அப்படி பல பனைகளிலும் சேர்த்து வந்த கள்ளினை மரத்தின் கீழேயே வைத்தும் விற்பனை



செய்து வந்தனர். உடலுழைப்பின் பின் களைப்புற்று வருபவர்களும், நிரந்தரக்கு டிகாரர்களும், மற்றும் இரகசியக் குடிகா ரர்களும் அங்கேயே கள்ளினை அருந்தி வந்தார்கள். மரத்தில் இருந்து இறக்கிய வுடன் அக்கள்ளினைக் குடித்தால் இனிக் கும். நேரம் செல்லச் செல்ல அக்கள்ளின் தன்மை மாற்றம் அடையும்.அது புளிக்கும். வெறித்தன்மையை ஏற்படுத்தும். கணைச் சூடு உள்ள சிறுவர்களுக்கும் அம்மை, சின்னமுத்து போன்ற வெப்பத்தினால் ஏற் படும் நோய்களுக்குமாக பெற்றோரும் மற்றோரும் உடன் கள்ளினை அதாவது மரத்தில் இருந்து இறக்கிய 'உடன்கள்' ளினை வாங்கிச் சென்று அருந்தக் கொடுப்பார்கள். இதனால் சூடு தணிந்து நோய் நீங்கவழி பிறந்தது. இரகசியக் குடிகாரர்களுக்கும், புதிதாகக் குடிப்பவர் களுக்கும் இது தேனாமிர்தமாய் இருந்தது. உழைத்துக் களைத்து வருபவர்கள் சற்று வித்தியாசமாகப் புளித்த கள்ளையே விருப்புடன் பருகினர். இது அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. நேரம் செல் லச்செல்ல அவர்கள் தன்னிலை மறந்து நடக்க முடியாதவர்களாய் மற்றவர்களின் உதவியுடனேயே வீடு செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

கள்ளுக்கொட்டில்களில் சாத்தாவயல் பகு தியில் அமைந்திருந்த கள்ளுக்கொட்டில் பிரபல்யம் பெற்றதாக அமைந்திருந்தது. இது கருங்காலி கிராமத்தில் உள்ள கேச டைப் பகுதியூடாக வயல்களை ஊடறுத் துக் களபூமி, சத்திரத்தைப் பகுதியின் ஊடாகக் காரைநகர் கிழக்கு வீதியைச் சென்றடையும் வீதியின் அருகே, வயல் களுக்கு மத்தியில் அமைந்துள்ளது. வயல் களில் வேலை செய்துவிட்டு வருபவர்க ளும், வேறு இடங்களில் வேலை செய்து விட்டு வருபவர்களும் இங்கு வந்து சுதந் திரமாகவும், மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாமலும் கள்ளினை அருந்த வச தியாக இருந்தது. இது போன்று வேறு பகுதிகளில் கள்ளுக்கொட்டில்கள் அமைந் திருந்தாலும், சாத்தாவயல் கள்ளுக்கொட் டில் முதன்மை பெற்றிருந்ததாக அறியப்ப டுகின்றது. அங்கு பலர் கள் அருந்திய பின் சுவைக்காகப் பனங்கிழங்கு, கருவாடு போன்றனவற்றைக் கொண்டுவந்து காவோ லையைக் கொழுத்தி அதில் வைத்துச் சுட்டுச் சுவைத்தனர்.

1970களில் இருந்து இந்நிலமையில் மாற் றம் ஏற்பட்டது. பனை அபிவிருத்திச் சபை ஏற்படுத்தப்பட்டு கள்ளுக் கொட் டில்களுக்கு மூடுவிழா ஏற்படுத்தப்பட்டது. மாறாகக், கள்ளுத் தவறணை ஆரம்பிக் கப்பட்டது. கள் இறக்குபவர்கள் அனை-வரும் தாம் இறக்கும் கள்ளினைக் கள் ளுத் தவறணைக்கே விற்கவேண்டுமென்ற கட்டாய நிலை ஏற்பட்டது. வெளியில் விற்பது தடை செய்யப்பட்டது, கள்ளுக் குடிப்பவர்களும் தவறணைக்கே வந்து பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அறி வுறுத்தப்பட்டது. இதனால் உடன் கள்ளி னைப் பெற விரும்புபவர்களுக்கும், இர கசியக் குடிகாரர்களுக்கும் திண்டாட்டம் ஏற்பட்டது.

அடுத்து, பதநீர் பற்றிச் சிறிது ஆராய் வோம். காரைநகரில் பதநீர் இறக்குவது மிக மிகக்குறைவென்றே கூறலாம். கள்ளு விற்பனையில் நாட்டம் கூடுதாக இருந் தமையினாலும் அதில் அதிக விற்பனை யும், அதிக லாபம் கிடைத்தமையுமே கார ணம் எனக்கூறலாம். இதுவும் தை மாதம் முதல் ஆனி மாதம் வரையிலான காலப் பகுதியியே இறக்கப்படுகின்றது. வடமகா ணத்தில் வடமராட்சி, தென்மராட்சி, கீரி-மலை, காங்கேசன்துறை, பொலிகண்டி, சண்டிலிப்பாய் சங்கானை போன்ற பிரதே சங்களில் பதநீர் கூடுதலாகச் சேகரிக்கப் படுகின்றது.

கள்ளு சேகரிப்பது போன்ற நடைமுறை இருந்தாலும், பதநீர் சேகரிப்பதில் சிறுவித் தியாசம் உண்டு, பதநீர் இறக்கும் முட் டியில் அளவாகச் சுண்ணாம்பு இட்டுவிட் டால் அது பதநீராக மாறுகின்றது. இது குடிப்பதற்கு இனிப்பாக இருக்கும்.

காரைநகரில் உள்ள வாரியந்தனைப் பகுதியில் சின்னமுருகர் கேணிக்கு தெற் குப் பக்கமாக வீதியோரத்தில் நிற்கும் ஒற்றைப் பனையிலும், மாவடியார் என அழைக்கப்படும். வாரியந்தனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அவர்களின் வீட்டிலும் உள்ள பனைகளில் பதநீர் சேக ரிப்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். சிறுபையனாக இருந்தபோது அங்கு அத னைச் சுவைத்தும் உள்ளேன். அதன் சுவையை இன்று நினைக்கும் போது நாவூறுகின்றது. ஆண் பனைப் பதநீரைச் சோமபானம் என்றும், பெண்பனைப் பத நீரைச் சுரபான் எனவும் அழைப்பதாக அறியப்படுகின்றது. பதநீரைக் காய்ச்சி பனங்கட்டி, கருப்பட்டி, பனஞ்சீனி, பனங் கற்கண்டு என்பவற்றைக் காரைநகர் தவிர்ந்த மேற்கூறிய இடங்களில் குடி சைக் கைத்தொழிலாகச் செய்து வருகின் றனர். இவற்றிற்கு உள்நாடு, வெளிநாடு களில் நல்ல கிராக்கியுள்ளது. இதனால் இன்று கனடா, பிரித்தானியா, அவுஸ்தி-லேயோ, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற தமிழ் மக்கள் புலம்பெயர்ந்த வாழும் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய் கின்றனார்.

1950க்கு முற்பட்ட காலத்தில் பனங்கட்டி யைச் சிறுதுண்டுகளாக வெட்டிச் சீனிக் குப் பதிலாகத் தேனீருடன் கடித்துக் குடித் தார்கள். இதனைவிட ஆடிக்கூழ், கொழுக் கட்டை போன்றனவற்றிற்கும் பனங்கட்டி யைப்பாவித்தார்கள். ஆடிப்பிறப்பு நாளில் பச்சை அரிசி, பாசிப்பருப்பு, பனங்கட்டி, தேங்காய்ப்பால், அளவான உப்புச் சேர்த் துப் பாற்கஞ்சி செய்வதையே வழமை யாகக் கொண்டுள்ளனர். பனங்கற்கண்டு ஒரு மருத்துவப் பொருளாகும். நாட்பட்ட இருமலாயினும் சரி ஆரம்பகால இரும லாக இருந்தாலும் சரி பனங்கற்கண்டு மூலம் நிவாரணம் கிடைக்கின்றது.

## பனங்கிழங்கு:

பனங்கிழங்கு என்றதும் எமக்கெல்லாம் சத்திமுத்திப்புலவரே ஞாபகத்திற்கு வரு கிறார், இவரால் பாடப்பெற்ற ஒரு பாட லில் பனங்கிழங்கினை உவமானமாகக் காட்டுகின்றார். அப்பாடலின் ஒரு பகுதி வருமாறு:

*'நாராய் நாராய் செங்கால் நாராய்*
*பழம்படுபனையின் கிழங்கு பிளந்தன்ன*
*பவளக் கூர்வாய் செங்கால நாராய்'*

இப்படியாக அவரது பாடல் தொடர்கிறது. இதன் சிறப்பு என்னவென்றால் புலவர்



நாராயின் சொண்டினை பனங்கிழங்கு பிளந்த மாதிரி என வர்ணிக்கின்றார். இப் பாடலை 6ம் வகுப்பில் படித்திருக்கிறேன். காரைநகர் மக்கள் தமது தோட்டங்களிலி ருந்து எடுத்து வந்த பனம் பழங்களை, அவற்றின் மேலே உள்ள கறுப்பு தோலை நீக்கி விட்டு விதைகளை ஓரிடத்தில் குவியலாகப் போட்டுவைப்பார்கள். பின் னர், கொத்திப் பதப்படுத்தப்பட்ட மணற் பாங்கான நிலத்தில் உரிய முறையில் விதைகளை அடுக்கி, அதன்மேல் மண் போட்டுப் பரவிப் பாத்திகட்டி, அணை போட்டு விடுவார்கள். ஐப்பசி மாத முற் பகுதியில் இதனைச் செய்வார். இதனைப் பனம்பாத்தி என அழைப்பர். அங்கு விதைகள் முளைவிடும் போது நிலத்தி னுள்ளே செல்லும் வேரில் மாப்பொருள் சேமிக்கப்பட்டு கிழங்காக உருவாகுகின் றன. இவை பனங்கிழங்கு எனப்படும். இதன் நுனிப்பகுதி கூராகவும் அடிப்பகுதி கிட்டத்தட்ட ஒரு அங்குல விட்டமுடைய தாகவும், ஒரு அடிவரை நீளமுடையதாக வும் காணப்படும். இக்கிழங்கின் வளர்ச்சி உரிய பருவம் அடைந்ததும் மார்கழி மாதத்தில் கிளறி எடுக்கப்பட்டு, கிழங்கு வேறு ஊமல் வேறாகப் பிரத்தெடுப்பர். தமக்குத் தேவையான கிழங்குகளை எடுத்துவிட்டு மீதியைத் தமது உறவினர் களுக்குப் பகிர்ந்தளிப்பர். காரணம் அன்று குடும்ப அன்னியோன்யம் சிறந்து விளங் கியது. பிடுங்கி எடுக்கப்பட்ட கிழங்குளை இருவேறு பிரிவுகளாகப் பதப்படுத்துவர். ஒன்று புழுக்கொடியல், மற்றையது ஒடி யல் ஆகும்.

## புழுக்கொடியல்:

பனம் பாத்தியில் இருந்து கிளறி எடுக் கப்பட்ட கிழங்கின் மேற்தோலை நீக்கி விட்டு, அக்கிழங்கின் நுனிப்பகுதியையும், தலைப்பகுதியையும் சிறிதளவு வெட்டி எறிந்துவிட்டு, சுத்தம் செய்து, நீர் நிரப் பிய கடாரம் போன்ற பாத்திரத்தில் கிழங் கின் அடிப்பாகம் கீழாகவும், நுனிப்பாகம் மேலாகவும் வரக்கூடியதாக இட்டு நன் றாக அவித்தெடுப்பர். அவிந்த கிழங்கு களை இரண்டாகப் பிளந்த பாய்களில் பரவிக் காயவிடுவர். இன்னும் சிலர் பிரித் தெடுத்த கிழங்குகளைப் பனை நாரில் குத்தி உயரமான மரங்களில் வெய்யி லில் படும்படியாக கட்டித் தொங்கவிடு

தொடர்தல் 17ம் பக்கம்

# பனையின் பெருமை...

16ம் பக்கத் தொடர்ச்சி...

வர். மேலும் சிலர் பனங்கிழங்குகளை விலைக்கு வாங்கி மேற்கூறியவாறு பதப் படுத்துகின்றனர். அது நன்றாகக் காய்ந்த பின் புழுக்கொடியல் எனப்படுகின்றது. இவற்றை நீண்ட காலம் வைத்திருந்து உண்ணலாம். சிலர் இவற்றை உரலில் இட்டு இடித்து மாவாக்கி தேங்காய்ப்பூ, சர்க்கரை கலந்து குழந்தைகளுக்கும், முதியோருக்கும் உண்ணக் கொடுக்கின்



றனர். இது சுவைமிக்க பண்டம் மாத்திர மல்ல சத்துக்களும் நிறைந்ததாகும்.

பலர் அவித்த கிழங்குகளைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி மிளகு, பச்சை மிள காய், வெங்காயம், சிறிதளவு உப்பு சேர்த்து உரலில் இட்டு இடித்துத் துவை யலாக்கி உண்கின்றனர். மது அருந்துப வர்கள் சுவைக்காகப் பனங்கிழங்குக-ளையோ அல்லது புழுக்கொடியலைத் தான் விரும்புகிறார்கள்.

## ஒடியல்:

இதுவரை அவித்த கிழங்குகளின் பயன் கள் பற்றி ஆராய்ந்தோம். இனி அவிக் காத (ஒடியல்) கிழங்குகள் பற்றிச் சிறிது கவனிப்போம். பச்சைக் கிழங்குகளின் மேற்தோல்களை நீக்கிவிட்டு அவற்றை இரு கூறுகளாகப் பிரித்து அதன் இரு முனைகளையும் சிறிதளவு வெட்டிச்சத்தம் செய்து பாய்களில் பரவிவிட்டு நன்றாகக் காயவிடுவர். அப்படி நன்றாகக் காய்ந் தவை ஒடியல்கள் எனப்படும். நன்றாகக் காய்ந்தபின் பைகளில் போட்டுக் கட்டி வைப்பார்கள். அவ்வொடியல்களை எடுத்து உரலில் போட்டு இடித்து மாவாக்கி அதி லிருந்து பிட்டு, கூழ் என்பன தயாரிப் பார்கள். பிட்டு அவிக்க நினைப்பவர்கள் முதலில் ஒடியல் மாவை அளவாக எடுத்து தண்ணீர் விட்டுப் பிசைந்து ஊற வைப்பார்கள். சிறிது நேரம் செல்ல தெளிந்து வரும் நீரை வெளியேற்றுவார். இப்படியாக மூன்று அல்லது நான்கு முறை மாவைப் பிசைந்து நீரை வெளி-யேற்றியபின் பனங்களித் துண்டில் போட்டு பிழிந்து எடுத்த மாவைச் சுளகில் போட்டு சாதாரணமாகப் பிட்டுக் குழைப்பதைப் போல் குழைத்தெடுத்து அதற்கு எள்ளு, தேங்காய்ப்பூ என்பன கலந்து அவித்தெ டுப்பர். வேறு சிலர் கீரை, பயற்றங்காய் போன்றனவற்றைச் சேர்த்தும் அவிப்பர்.

ஒடியற்பிட்டை அன்றே உலர்த்தி வைப் பது நன்று. இல்லையேல் வைரம் ஏறி உலர்த்துவது கடினமாக இருக்கும். காரை நகரில் நீண்ட காலத்திற்கு முன்னர் இது பகலுணவாகவே கொள்ளப்பட்டது. பழைய பிட்டுக்கு மோர், மரவள்ளிக்கிழங்குக்கறி சேர்த்து உண்டால் ருசி மிகுந்ததாக இருக் கும். நாம் சிறுவர்களாக இருந்த காலத் தில் இவை நாம் அடிக்கடி உண்ணும் உணவாக இருந்தது. சிலர் பிட்டு சூடாக இருக்கும் பொழுது நல்லெண்ணெயும் சேர்த்துச் சாப்பிட்டனர். உடலுழைப்பில் ஈடுபடுபவர்கள் ஒடியற்பிட்டை விரும்பி உண்டனர். இது அவர்களுக்குச் சக்தி யையும் உற்சாகத்தையும் கொடுத்தது.

## பூரான்:

பனம் பழங்களில் உள்ள ஒவ்வொரு விதைகளிலும் இருந்து பனங்களியை கறந்து எடுத்த பின் அதனைப் பனங் கொட்டை என்கிறார்கள். அப்பனம் விதை கள் புறச்சூழல் காரணிகளினால் முளை விடுவதற்கு தயாராகும் பொழுது அதன் முதற்கட்டத்தில் அவ்விதையினுள் இருக் கும் சத்துப் பொருள் திடமான ஒரு பதார்த் தமாக மாறுகின்றது. இதனையே பூரான் என்கிறார்கள். இதனை எம் சிறார்கள் முதல் பெரியோர்கள் வரை கத்தி கொண்டு இரண்டாகப் பிளந்து அதற்குள் இருக்கும் பூரானை விரும்பி உண்கின்றனர்.

## பனங்குருத்து:

பனையின் குருத்து சற்று முற்றி விரிவ டையக்கூடிய நிலையில் காணப்பட்டால் அவற்றில் இருந்து பெட்டி, கடகம், தண் ணீர் அள்ளும் பட்டை, நீற்றுப்பெட்டி, பாய், களப்பாய், தடுக்கு, நீர் இறைக் கும் பெரியபட்டை போன்ற மற்றும் இன் னோரன்ன கைப்பணிப் பொருட்களும் செய்யப்படுகின்றன. 1960ம் ஆண்டுக்கு முன்னர் பாடசாலைகளில் பன்னவேலை ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. இதற் கெனப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நிய மிக்கப்பட்டுப் பன்னை வேலை கற்பித் தார்கள். வேறு சில இடங்களில் குடிசைக் கைத்தொழிலாக நடத்தப்பட்டு வந்தது. அக்காலத்தில் பிளாஸ்ரிக் பைகளோ வேறெந்தக் கொள்கலன்களோ இருக்க வில்லை. மாறாகப்பெட்டி, கடகம், உமல் போன்றனவே பாவனையில் இருந்தன. குழந்தைகளைப் படுக்க வைப்பதற்கான தடுக்கு, படுப்பதற்கான பாய்கள், சூட்டு மிதிக்கு பயன்படுத்தப்படும் களப்பாய் போன்றனவைகளும் இக்குருத்தோலைக-ளில் இருந்தே செய்யப்படுகின்றன. அதன் ஈர்க்குகளில் இருந்து சுளகு பின்னப்படு கிறது. நாக்கைச் சுத்தம் செய்வதற்கும் இந்த ஈர்க்கு பயன்படுத்தப்படுகின்றது.

## ஓலை:

குருத்து விரிந்து முற்றினால் ஓலை எனப் படுகின்றது. அவ்வோலைகள் வீடு வேய் வதற்கும் வேலி அடைப்பதற்கும் அங்கு பாவிக்கப்படுகின்றன. காரைநகரில் இரண்டு வருடத்திற்கொருமுறை ஓலை வெட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந் தனர். ஐம்பது வருடங்களுக்கு முன்னர் காரைநகரில் மக்களிடையே பணப்புழக் கம் அரிதாகக் காணப்பட்டமையே இதற் குக் காரணமாக அமைந்தது. ஒருசில வீடுகள் சுண்ணாம்புச் சுவர்கள் எழுப்பப் பட்டு அதன் கூரைகள் ஓலைகளினால் வேயப்பெற்றிருந்தன. பல வீடுகள் மண் சுவர்கள் எழுப்பப்பட்டு கூரைகள், ஓலை களினால் வேயப்பெற்றிருந்தன. அதனால் புதிய ஓலைகள் கொண்டு இரண்டு வரு டத்திற்கொருமுறை வீடுகளை வேய்ந்த னர். வீடுகள் வேயமுன் பழைய ஓலைக-



ளைக் கழற்றி எடுப்பர். வேலிகளையும் இரண்டு வருடத்திற்கொருமுறை அடைப் பதையும் வழக்கமாகக் கொண்டிருந்த னர். வேலியில் பழைய ஓலைகளுடன் இருக்கும் பனை மட்டைகளை வெட்டி எடுத்து விறகாகப் பாவித்தனர்.

பனையில் இருந்து ஓலை வெட்டி எடுக் கப்பட்டதும், வேலி அடைக்கத் தேவை யான ஓலைகளை அன்றே மட்டையுடன் கவிழ்த்து மிதித்து விடுவர். மூன்று நாட் கள் சென்றதும் மிதித்த ஓலைகள் கொண்டு வேலிகளை அடைத்து முடிப்பர்.

வீடு வேய தேவையான ஓலைகளை நிமிர்த்தி மிதித்து விடுவர். பின், ஓலைக-ளின் மட்டைகளைத் தனியாக எடுத்து விட்டு வட்டமாக ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கிக் கரம் போடுவார்கள். அதன் மேல் பச்சை மட்டைகளைக் கட்டாகக்கட் டிப் போடுவதுடன் வேறு பாரமான பொருட்களையும் போட்டு ஓலையைப் படியவிடுவர். ஒரு கிழமைக்குப் பின் அவ் வோலைகளினால் வீடுகளை வேய்வர். இதற்கெனச் சிறப்புப் பயிற்சி பெற்றவர்க ளினாலேயே வீடுகள் வேயப்படும். வீடு வேய்வதற்கும் வேலிகள் அடைப்பதற்கும் பனைமட்டையில் இருந்து உரித்தெடுக் கப்படும் நார்களே பாவிக்கப்படுகின்றன. இவை வைரம் மிக்கவையாகும். ஓலை வெட்டும் நாளிலும், வீடுவேயும் பொழு தும், வேலி அடைக்கின்ற நேரங்களிலும் மிக நெருங்கிய உறவினர்களே பெரும் பாலும் உதவிகள் செய்தனர். அக்காலத் தில் குடும்பங்களின் அந்நியோன்யம் பிர திபலித்தது.
வீடுகளில் இருந்து கழற்றி எடுக்கப்பட்ட ஓலைகளையும், வேலிகளில் இருந்து கழற்றி எடுக்கப்பட்ட ஓலைகளையும் தத் தம் வயல்களுக்குப் பசளையாக்கினர். இந்த இயற்கைப் பசளை மூலம் நல்ல விளைச்சலையும் பெற்றனர். வடலியோ லைகளை வெட்டி ஆடு, மாடுகளுக்கு உணவாக்கினர். மீனவர்களும் ஆடு வெட்டுபவர்களும் வடலியோலையிலேயே மீன்களையும், இறைச்சிகளையும் பொதி யாகக் கட்டிக்கொடுத்தனர். இதனை 'ஓலைக்குடலை' என அழைப்பர். இதனாற் போலும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் தான் எழுதிய சிறுவர் செந்த மிழ் என்னும் நூலில் 'ஆடு கதறியது' என்னும் தலைப்பில் எழுதப்பட்ட பாடற்ப குதியில் (36ம் பக்கம்) ஓலைக்குடலை பற்றி பின்வருமாறு பாடுகின்றார். (சிறு பகுதி மட்டும்.)

*'உன்றன் நசைஅரிந்தே*
*ஓலைக்குடலை கட்டிச்*
*சென்று சென்று விற்றனரோ*
*தின்று பசியாறினரோ'*

எனப் பாடியுள்ளார்.

## பனை மட்டை:

முன்னைய தலைமுறைகளில் எம்மூரில் வாழ்ந்த மக்கள் பனைமட்டை கொண்டு



வீட்டுக் குசினிகளுக்கும், வீட்டு வேலிக ளுக்கும் கோழிக் கூடுகளுக்கும் வரிச்சுக் காட்டினர். அதுமட்டுமன்றி கத்தரிப்பட்ட புகளுக்கும் பனை மட்டை கொண்டு வரிச் சுக்கட்டினர். படலைகளுக்குக் கூட பனை மட்டைகளைப் பாவித்தனர். பாவனைக்கு தவாத பனை மட்டைகளை விறகாகவும் பாவித்தனர்.

## கங்குமட்டை:

பனையில் ஓலையுடன் இணைந்து இருக் கும் போதே நன்கு முற்றி அதன் பச்சைத் தன்மை நீங்கி கலகலக்க ஆரம்பிக்கும் போது காவோலை எனப்படுகின்றது, பலத்த காற்றடிக்குபொழுது இது பனை யில் இருந்து தானாகக் கழன்று விழுகின் றது. அப்பொழுது இதற்கு பதிலாக இன்னோரு குருத்தோலை விரிந்து கொண் டிருக்கும். இதனால் போலும் எம்மவர்கள் 'காவோலை விழக்குருத்தோலை சிரிக் கின்றது' எனும் வசனத்தைப் பாவிக்கத் தொடங்கினார்களோ என எண்ணத்தோன் றுகின்றது. இளைஞர்கள், முதியோரை எள்ளி நகையாடும் பொழுது முதியோர் கள் மேற்கூறிய வசனத்தைப் பாவிப்பதை நாம் அவதானிக்க முடிகிறது. காவோ லைகளை ஓலை வேறு மட்டை வேறாக வெட்டியெடுத்து விறகாகப் பாவிக்கின்ற னர்.

## பனையின் சிறப்புக்கூறும் குறள்கள், பாடல்கள் சில:

திருக்குறளின் அறத்துப்பாலில் 104வது குறளிலும், பொருட்பாலில் 433வது குற ளிலும், இன்பத்துப்பாலில் 1282வது குற ளிலும் பனைபற்றிச் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பூவை அமுதன் என் பவரால் எளிய தெளிவு விளக்கத்துடன் தரப்பட்ட நீதிநூற்களஞ்சியம் என்னும் நூலில் அடங்கிய 100 செய்யுள்களில் 91வது செய்யுளில்...

*'உத்தமர் ஈயும் இடத்து ஓங்குபனை*
*- போல்வரே*
*மத்திமர் தாம் தெங்குதனை*
*- முத்து அலரும்*
*ஆம். கமுகு போல்வர் அதமர்*
*- அவர்களே*
*தேம் கதலியும் போல்வர் தேர்ந்து'*

எனக்கூறிப் பனை மரத்தின் அதி உச் சப்பெருமை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இதுவரை அமுதசுரபியாகிய பனையின் பிரயோசனங்கள் பற்றி ஓரளவு கவனித் தீர்கள். இவற்றை எம் முன்னைய சந்ததி யினர் முழுமையாக அனுபவித்து உடல் நலத்துடனும், சந்தோஷத்துடனும் வாழ்ந் தார்கள். பனங்கிழங்கு, புழுக்கொடியல் என்பன நார்ச்சத்து நிறைந்தவையாகும். பனாட்டு, ஒடியற்பிட்டு என்பவற்றில் பல் வகைச் சத்துக்கள் நிறைந்துள்ளன. கூழ் மலச்சிக்கல், வாய்வு என்பனவற்றை நீக் குவதுடன் உடலுக்கு சக்தியையும் அளிக்க வல்லது. அத்துடன் உடலில் உள்ள கழிவுப் பொருட்களையும் நீக்க வல்லது. கள்ளு, பதநீர் போன்றவை கணைசூட் டையும் உஷ்ணத்தினால் ஏற்படும் நோய் களையும் தணிக்கவல்லது. மேற்கூறிய பனம் பண்டங்களை உண்ட நம்முன்னோர் நீண்டகாலம் வாழ்ந்தார்கள். வாழ்கிறார் கள் என்பதைச் சரித்திரம் பறைசாற்றி வருகிறதென்பதை எல்லோரும் அறிவர்.

ஆனால் இன்றைய தமிழர் சமூகம் நாக ரீகத்தின் வளர்ச்சியோ அன்றி இரசாய னப் பொருட்கள் கலந்த உணவுப் பண் டங்களின் கவர்ச்சி காரணமாகவோ பனம் பண்டங்களை ஏறெடுத்தும் பார்ப்பதாகத் தெரியவில்லை. எனவே இவ்விடயத்தை அலசி ஆராய்ந்து பார்த்து உண்மைத் தன்மையை உணருங்கள். பனம் பண் டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை சேமித்து வீடுகளில் களஞ்சி யப்படுத்தி வைப்போமேயானால் எக்கா லத்தும், எந்த இடர்வரினும் அவற்றைச் சமாளித்து கொள்ளவும், பஞ்சம் என்ற நிலையை இல்லாதொழிக்கவும், அதனால் எம்மைத் தற்காத்துக் கொள்ளவும் முடி யும். அது மட்டுமல்ல, அழிவுக்குட்பட்ட பனைகளை ஈடுசெய்யுமுகமாக உங்க ளாலியன்ற பனம் விதைகளை நாட்டி, பனை உற்பத்தியைப் பெருக்கி வளம் படுத்துவோம். நாமும் நலம்பெறுவோம்.

***உசாத்துணை:***

• பனைவளம் - எழுதியவர் க.சி. குலரத்தினம். (மில்க்வைற் பொன்விழா வெளியீடு.)
• பனைச்செல்வம் - சு. மோகனதாஸ், வி.ஜீ. தங்கவேல் (வெளியீடு: வடக்கு கிழக்கு தால மூலவள அபிவிருத்தி நிறுவனம்)
• நீதிநூற் களஞ்சியம் - பூவை அமுதன் தெளிவுரை
• காணாமல் போகும் கற்பகதருக்கள் - உமை பற்குணரஞ்சன் (தாய்வீடு பத்திரிகை - கட்டுரை)
• விக்கிபீடியா தகவல்.



nadarasah.t@thaiveedu.com


BUYING OR SELLING
Residential, Commercial, Land & Investment Properties
For Sellers:
Free Market Evaluation Available
Competitive Commission Packages Available
Will pay for Staging & Condition
Will pay the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold
Will market your home with social medias
SATHY & NITHY REAL ESTATE TEAM
For Buyers:
Will find the home in any area within your budget
Get you the lowest mortgage. rate
NITHY SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com
SATHY SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com
16th Avenue / 9th Line $1,550
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Morningside / Finch $1,200
FOR LEASE BEDROOMS:1+1 WASHROOMS:1
Pharmacy Ave/Lawrence Ave $1,600
FOR LEASE BEDROOMS:3 WASHROOMS:1
Victoria Park / Ellesmere $2,000
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Rossland/Wilson $599,900
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
Crowder Blvd / Leslie St $549,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:2
Simcoe/Britannia $509,000
FOR SALE BEDROOMS:4 WASHROOMS:3
Yonge/Front $659,000
FOR SALE BEDROOMS:1+1 WASHROOMS:1
King/Blue Jays $699,000
FOR SALE BEDROOMS:1 WASHROOMS:1
Lawrence Ave E/Orton Park $699,000
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Finch / Victoria Park $759,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:2
Hoover Park/Tenth Line $769,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Brock/Hwy 2 $799,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Dufferin/Summeridge $889,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Markham/Sheppard $799,000
FOR SALE BEDROOMS:4+2 WASHROOMS:3
Pharmacy/N.Eglinton $838,000
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
RE/MAX
Remax Realtron Realty Inc., Brokerage
Bus: 905 470 9800
Web: realtorsathy.com


TRUE HAIR
REPLACEMENT
LET US MAKE YOU FEEL
YOUNGER AND MORE CONFIDENT
WITH VISIBLE RESULTS FOR YOUR HAIR LOSS.
WE USE ONLY TOP-QUALITY HUMAN HAIR
BEING IN THE BUSINESS OVER 30 YEARS WE TAKE GREAT PRIDE IN OUR WORK.
LET US TRANSFORM YOUR LOOK!!!
பண்டிகைக் காலப் பரிசாக உங்கள்
அன்புக்குரியவர்களுக்கு பரிசளியுங்கள்.
CALL US TO BOOK YOUR FREE CONSULTATION
416-492-7873


RESIDENTIAL SECOND MORTGAGES
FROM 8.99% QUICKLY AND EFFICIENTLY
Residential 1st & 2nd Mortgages
Commercial 1st & 2nd Mortgages
Refinance & Home Equity Line of Credit
Renovation and Debt Consolidation Loan
DON'T FORGET, WE CAN CLOSE YOUR RESIDENTIAL MORTGAGE WITHIN 48 HOURS
PURCHASE AND REFINANCE
✓ Gas Stations, Restaurants and Retail Plazas, Auto Body Shop, Churches, Motels and Cottages
✓ Business Loan for Existing and New Business
✓ Start up Business and Business Line of Credit
✓ Construction Financing for Commercial and Residential
✓ Store with Apartment, Duplex, Triplex and Rental Properties
✓ Vacant Land & Farm Financing and more...
We can arrange COMMERCIAL MORTGAGES with 10% down
(some conditions may apply)
"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE
T. Antony Ponrajah
Mortgage Agent License: M08004007
Brokerage License# 10216
416.457.0651
Email: antonyres@gmail.com
40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5
Tel: 416.431.5115

# குவலயம் ஆளும் குடிசார் பொறியியல்

- அகணி சுரேஸ் -

## பகுதி: 11

இலங்கையில் மலைநாடுகளில் அடிக்கடி ஏற்படும் மண்சரிவுப் பிரச்சினைக்கு, சீரான திட்டமிடலற்ற அபிவிருத்தி வேலைகளும் முக்கிய காரணியாக அமைந்து விடுகின்றது.

நான் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தில் பணிபுரிந்த பொழுது, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட (United Nations Development Fund) நிதியுதவியின் கீழ் மண்சரிவிற்கான காரணிகளை ஆராயும் பணியில் ஈடுபடக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. பல்வேறு துறைசார் அறிஞர்களுடன் குழுவாக 144 மண்சரிவு நடைபெற்ற இடங்களிற்கு சென்று மண்சரிவு ஏற்பட்டதற்கான காரணிகளைக் கண்டறிந்தோம். பின்பு ஒவ்வொரு இடத்திலும் மண்சரிவு ஏற்பட்டதற்கான காரணிகளின் பட்டியலையும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஒரு அறிக்கையைப் பாராளுமன்றக் குழுவின் கலந்துரையாடலுக்காக அனுப்பியிருந்தோம். இந்த ஆய்வில் நாம் கண்டறிந்த முக்கியமான விடயம் சட்ட விரோதமாக மரம் தறித்தல், சட்ட விரோதமாக மண் வியாபாரம், இவற்றுடன் சரியான ஆய்வின்றிச் செய்யப்படும் அபிவிருத்தி வேலைகள் மண்சரிவு ஏற்படுவதற்கான முக்கியமான காரணிகளாக இருந்தன.

மேலும், மண்சரிவு ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு, மண்சரிவு ஏற்படக் கூடிய ஆபத்து மிக்க பகுதிகளை அடையாளம் காட்டும் படங்கள் கணினி மூலம் உருவாக்கப்பட்டு (Landslide Research Project), அரசாங்க திணைக்களங்களிற்கு வழங்கப்பட்டன. இதன் மூலம் அபிவிருத்தி வேலைகளின் பொழுது மேலும் மண்சரிவுகள் ஏற்படுவதை ஓரளவேனும் தவிர்க்கலாம் என்ற கருத்து நிலவியது.

சில அபிவிருத்தி வேலைகளில் பொறியியலாளர்களினதும், ஏனைய ஆய்வாளர்களினதும் அறிவுரையை ஏற்காது எழுந்தமானமாக கட்டுமான வேலைகள் நடைபெறுவது மலைநாடுகளில் ஏற்படும் மண்சரிவுகளுக்கான பொதுவான காரணியாக உள்ளது.

### கொத்மலைத் திட்டம்:

இலங்கையின் மலைப்பிரதேசங்களில் பாய்ந்தோடும் ஆறுகள் பல நீர்மின் வலுத் திட்டங்கள் உருவாகுவதற்கு மூலமாகியுள்ளன. இலங்கையில் உள்ள பாரிய நீர் மின்வலு உற்பத்தித் திட்டங்களில் கொத்மலைத் திட்டமும் மிகவும் முக்கியமானது. நீர் மின்வலுத் திட்டங்கள் பல உருவாக்கப்பட்ட பொழுதும் சில எதிர் பார்க்கப்பட்ட நன்மையை எல்லாத் திட்டங்களும் வழங்கவில்லை என்பது கவலைக்குரியது. நாங்கள் ஒரு நீர் மின்வலுத் திட்டம் உருவாகிறது என்ற நிலையில் அதனால் ஏற்படும் வேலைவாய்ப்புகள், பொருளாதார நன்மைகள் பற்றியே சிந்திப்பது வழக்கம். ஆனால் அதில் பல சமூகவியல் நன்மை, தீமைகள் உள்ளன என்பதை உணர்வதில்லை. இவ்வாறான திட்டங்கள் வருகின்றபொழுது காலம் காலமாக ஒரு இடத்தில் வசித்து வந்த மக்கள் வேறு பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படுகின்றார்கள். அதனால் சில சமயம் மக்களின் எதிர்ப்புகள் ஏற்படுகின்றன. சில சமயங்களில் ஆராய்ந்து தெரிவு செய்யப்படும் இடம் அரசியல் தலையீடுகளால் மாற்றப்படும் பொழுது பாரிய பாதிப்புகள் ஏற்பட்டு விடுகின்றன. கொத்மலைத் திட்டமும் சில குழப்பங்களுக்கு முகம் கொடுத்ததாகவும் செய்திகள் வெளிவந்தன.

கொத்மலைத் திட்டத்திலும் இவ்வாறான அரசியல் காரணங்களால் பாதிப்புக்களும் அயல்கிராமங்களில் மண்சரிவுகளும் ஏற்பட்டன.

கொத்மலை என்ற கிராமம் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ளது. கொத்மலை ஓயா எனப்படும் ஆறு மகாவலி கங்கையின் முக்கிய கிளை ஆறாகும். ஓட்டன் சமவெளியில் - அக்ரான் ஆறாக ஊற்றெடுத்து வழியில் தம்பகஸ்தலாவை ஆறு, நானு ஓயா, புண்டுல் ஆறு, பூணா ஆறு போன்ற ஆறுகளுடன் கலந்து செல்லும் கொத்மலை ஓயா, நாவலப்பிட்டிக்கு தெற்கே மகாவலி கங்கையுடன் இணைகின்றது. கொத்மலை ஆறு மகாவலி கங்கையுடன் கலக்குமிடத்திலிருந்து 6.6 கிலோமீற்றர் தூரத்தில் 87 மீற்றர் உயரமும், 600 மீற்றர் நீளமும் கொண்ட அணைக்கட்டின் மூலம் கொத்மலை நீர்த்தேக்கம் கடதொர என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டு துரித மகாவலி திட்டத்தின் கீழ் சுவீடன் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது. இந்த அணைக்கட்டின் கட்டுமானப்பணிகள் 1979ம் ஆண்டு தொடங்கப்பட்டு 1985ம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டது. கொத்மலை அணை நீர்மின்வலு, நீர்ப்பாசன அணையாகும். இந்த அணைக்கட்டால் மூன்று 67 மெகா வாட்ஸ் விசையாழிகள் (Turbines) மூலம் 201 மெகா வாட்ஸ் மின்சக்தி உருவாக்கப்படுகிறது. இது இலங்கையின் இரண்டாவது அதிக நீர்மின் சக்தியை உருவாக்கும் திட்டமாக உள்ளது. இத்திட்டத்திற்கான கட்டுமான வேலைகள் ஆகஸ்ட் 1979ம் ஆண்டு தொடங்கப்பட்டு 1985ம் ஆண்டு பெப்ரவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது. கொத்மலை நீர்த்தேக்கம் என அழைக்கப்பட்ட நீர்த்தேக்கம் காமினி திசநாயக்கா நீர்த்தேக்கம் என பிரதம மந்திரி ரனில் விக்கிரமசிங்க அவர்களின் வேண்டுகோட்படி 2003ம் ஆண்டிலிருந்து அழைக்கப்பட்டது. இத்திட்டத்தின் அரச சார்பான உரிமையாளராக மகாவலி அதிகாரசபை இருந்தது. இங்கேயுள்ள நீர்மின் சக்தி நிலையம் இலங்கை மின்சார சபையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கே 3 அணைமிகு நீர் வழிகால்கள் (Spillways) உள்ளன.



நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் கொத்மலைத் திட்டம் கட்டுமானப் பணிகள் நடைபெற்றது. எனது அண்ணன் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த காரணத்தால் அங்கு சில தடவைகள் சென்று கட்டுமானப் பணிகளைப் பார்க்க முடிந்தது. கிட்டத்தட்ட சமகாலத்தில் விக்டோரியா நீர்மின்வலுத் திட்டமும், கொத்மலை நீர்மின் வலுத் திட்டமும் நடைபெற்றதால் பல பொறியியலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைத்தன. குடிசார் பொறியியலாளர்களுக்கான பொற்காலமாக இக்காலப்பகுதி அமைந்தது. மேலும் இதே காலப்பகுதியில் காங்கேசன் துறை சீமந்து உற்பத்திச் சாலையில் பல அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றதால் அங்கும் பல குடிசார் பொறியியலாளர்கள் உட்பட பல பொறியியலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்றனர்.

இவ்வாறான திட்டங்களில் பணியாற்றி பட்டறிவு பெற்ற பொறியியலாளர்கள் மத்தியகிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுச் சென்றதையும் 1982 - 1984 ஆண்டுகளில் அதிகமாகக் காணமுடிந்தது. மேலும் பல குடிசார் பொறியியலாளர்கள் இலங்கை பொது குடிசார் பொறியியலாளர் சேவையில் தெரிவாகி இலங்கை கட்டடத் திணைக்களம், இலங்கை பெருந்தெருக்கள் திணைக்களம், இலங்கை தேசிய வடிகாலமைப்புச் சபை போன்றவற்றில் இணைந்து பணியாற்றினர்.

கொத்மலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டு பல வருடங்களுப் பின்னர் மேல் கொத்மலைத்திட்ட வேலைகள் நடைபெற்றன.

### மேல் கொத்மலைத்திட்டம்:

மேல் கொத்மலைத்திட்டம் (Upper Kotmale Project) தோல்வியான திட்டமாகக் கருதப்படுகிறது. டெவோன் ஓயா, சென்றன்ரூ நீரோடைகள், குட ஓயா, டன்சியன்ஸ் ஓயா, புண்டல் ஓயா, ரம்போடா ஓயா, கொத்மலை ஓயா ஆகிய துணை நதிகள் நுவரெலியா மலைச்சரிவின் மேற்குப்பகுதியில் சந்திக்கின்றன. தலவாக்கல்லையில் உள்ள நீர்த்தேக்கத்தில் சேமிக்கப்பட்டு 13 கிலோமீற்றர் நீளமான சுரங்கத்தில் இரண்டு விசையாழிகள் (Turbines) 150 மெகா வாட்ஸ் நீர்மின்வலு உற்பத்தி செய்யப்பட்டது. மேல் கொத்மலை நீர்மின்வலுத் திட்டம் 2012ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

கொத்மலை திட்டத்தின் இறுதிக் கட்டமான மேல் கொத்மலை நீர்மின்வலு நிலையத்திற்கு நீரைப் பாய்ச்சுவதற்கு கொத்மலை ஓயா தலவாக்கெல்லையிலிருந்து 13 கிலோமீற்றர் தூரத்திற்கு 5.9 மீற்றர் உயரமான சுரங்க வழி நீர்மின் நிலையம் வரை அமைக்கப்பட்டது. செக்கன் ஒன்றிற்கு 3 கன அடி உயரத்தில் நீர் சுரங்கத்திற்குள்

*தொடர்தல் 21ம் பக்கம்*

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

# குவலயம் ஆளும்

**20ம் பக்கத் தொடர்ச்சி...**

பிரவேசிக்கும்.

மேல் கொத்மலைத்திட்டம் ஜப்பான் அரச நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது. இந்த



திட்டத்தில் 150 மெகா வோட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு ஜப்பான் 251 மில்லியன் அமெரிக்க டொலர் மென்கடன் மூலம் வழங்கியது.

மேல் கொத்மலைத்திட்டம், லுனுகம்வெகேரா ஆகிய நீர்மின்வலுத்திட்டங்கள் எதிர்பார்த்த சரியான வெற்றியைக் கொடுக்காத திட்டங்கள் ஆகும். இத்திட்டங்களால் செய்யப்பட வேண்டிய மீள்குடியேற்றத் திட்டங்கள் போன்றவற்றால் பல பிரச்சினைகள் எழுந்தன.

மேல் கொத்மலைத்திட்டம் இலங்கையில் உள்ள நீளமான சுரங்கவழி நீர்மின் வலு நிலையமாக உள்ளது. மின்சக்தி எரிசக்தி அமைச்சின் தகவற்படி 1207.45 மெகா வாட்ஸ் கொண்ட இலங்கையின் மின் கட்டமைப்பு இத்திட்டத்தால் 1357.45 மெகா வாட்ஸ் ஆக மேல் கொத்மலைத்திட்டத்தால் உயர்ந்தது.

இலங்கையில் 1950ம் ஆண்டிலிருந்து நீர் மின்வலு உற்பத்தி ஆரம்பித்தது. 2000ம் ஆண்டிற்கும் 2010ம் ஆண்டிற்கும் இடையில் 50 வீதமான மின்சாரம் நீர் மின்வலு மூலம் கிடைத்தது.

ரந்தெனிகல நீர் மின்வலுத்திட்டம் (யூலை 1986), சமனல நீர் மின்வலுத்திட்டம் (அக்டோபர் 1992), உமா ஓயா நீர் மின்வலுத் திட்டம் (2018), நியூ லக்சபானா நீர் மின்வலுத் திட்டம் (மார்ச் 1983), குகுலே கங்கை (யூலை 2003), பொல்பிட்டிய நீர் மின்வலுத் திட்டம் (பெப்ரவரி 1974), கன்யன் நீர் மின்வலுத் திட்டம் (மார்ச் 1983), ரன்ரெம்மை நீர் மின்வலுத் திட்டம் (ஜனவரி 1990), விமலசுரேந்திர நீர் மின்வலுத் திட்டம் (ஜனவரி 1965), பழைய லக்சபானா நீர் மின்வலுத் திட்டம் (டிசம்பர் 1950), போவதென்ன நீர் மின்வலுத் திட்டம் (ஜனவரி 1981), உகுவெல நீர் மின்வலுத் திட்டம் (யூலை 1976), இங்கிலிய கல நீர் மின்வலுத் திட்டம் (1951), உடவலவ நீர் மின்வலுத் திட்டம் (ஏப்ரல் 1969), நிலம்பே நீர் மின்வலுத் திட்டம் (யூலை 1988), டெடுறு ஓயா நீர் மின்வலுத் திட்டம் (நவம்பர் 2014) ஆகிய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பல நீர் மின்வலுத்திட்டங்களில் முக்கிய பணியைச் செய்த மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் வெளிநாடுகளிலும் இவ்வாறான கட்டுமானப் பணிகளில் பணியாற்றியுள்ளது என்பது முக்கியமான செய்தியாகும். தன்சானியா, றுவண்டா, மலாவி போன்ற நாடுகளில் நீர் மின்வலுத்திட்டக் கட்டுமானப்பணிகளில் இந்நிறுவனம் பணியாற்றியுள்ளது.

இவ்வாறான பாரிய குடிசார் பொறியியல் திட்டங்களுக்கான நிதியுதவி நீண்ட கால கடன் அடிப்படையில் பெறப்பட்டதால் காலம் செல்லச் செல்ல கடன்களுக்கான பணத்தைச் செலுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்களாலும், எதிர்பார்த்ததைவிட அதிகமான செலவுகள் ஏற்பட்டதாலும் புதிய திட்டங்களுக்கான நிதியுதவி பெறுவதில் பல தடைகளைக் காண வேண்டிய நிலையும் காணப்பட்டது.

இலங்கையில் நிலவிய போர்ச்சூழலும் பல அபிவிருத்தி வேலைகளுக்குத் தடையாக அமைந்தன. ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார நிலைமைகள் நேரடியான பாதிப்பை குடிசார் பொறியியல் திட்டங்களில் ஏற்படுத்துவது ஒரு பொதுவான வழக்காக உள்ளது. இந்த நிலை இலங்கையிலும் ஏற்பட்டது எனலாம்.

அன்பான வாசகர்களே! குடிசார் பொறியியல் பற்றிய பல விடயங்களை இத் தொடர் கட்டுரை மூலமாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மனநிறைவடைகின்றேன். தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக்கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*(தொடரும்...)*


**உசாத்துணை:**

- *http://www.saadhu.com/kothmale/*
- *https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AF%8A%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%B2%E0%AF%88_%E0%AE%86%E0%AE%B1%E0%AF%81*
- *https://en.wikipedia.org/wiki/List_of_power_stations_in_Sri_Lanka*
- *http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=90080*
- *http://www.mahaweli.gov.lk/Other Pages/Projects/Victoria.html*
- *https://en.wikipedia.org/wiki/Spillway*
- *http://cecb.lk/index.html*
- *https://en.wikipedia.org/wiki/Victoria_Dam_(Sri_Lanka)*
- *https://pdf.usaid.gov/pdf_docs/PDAAX272.pdf*
- *https://assets.publishing.service.gov.uk/government/uploads/system/uploads/attachment_data/file/67900/ev392s.pdf*




akani.suresh@thaiveedu.com





நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
தங்க நகை அடகு சேவை குறைந்த வட்டி வீதம்
புதிய தங்க நகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்துடன்
Licensed Technician | ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280

# இராணுவ மயமாக்கலும் யாழ். பல்கலைக்கழகமும்

- சுலோச்சனா -

இலங்கையில் அண்மைய நாட்களில் இராணுவமயமாக்கம் முன்னெப்போதும் இல்லாத அளவு சிவில் நிர்வாகக் கட்டமைப்புகளுக்குள் நேரடியான இராணுவ பிரசன்னத்தையும் அவர்களின் பங்கேற்பையும் முன்னிலைப்படுத்தி வருகிறது. மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் சேவைக்குள் இராணுவம் உள்வாங்கப்பட இருக்கிறது. அதற்கான வேலைகள் முடிந்து அறிவித்தல் வெளியாகி இருக்கின்றது. கிழக்கில் தொல்லியல் திணைக்களத்திற்குள் இராணுவம் நுழைந்து விட்டது. மன்னன் இராவணனை ஆய்வு செய்வதாகச் சொல்லி புதிய ஆய்வுகளிற்கான கோரல்களும் 'மரபுரிமை' என்னும் சட்டகத்தின் ஊடே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான பொதுவெளி அறிவித்தல்கள் வெளியாகியிருக்கின்றன. இந்த சமூக நிலவரங்களின் பின்னணியில் இராணுவம் சிவில் கட்டமைப்புகளுக்குள் உள் நுழைவதன் மூலம் நேரடியான ஆதிக்கத்தை செலுத்தப் போகிறது. இந்த நிலையில் மிக இருண்ட காலமொன்றிற்குள் இலங்கை நுழைய இருக்கிறது. முன்னாள் இராணுவத் தளபதியாகவும் மற்றும் பாதுகாப்புச் செயலாளராகவும் இருந்த ஒருவர் ஆளும் போது, அவரின் நம்பிக்கைகளின் அடிப்படையில் நாட்டை அவர் தன் வசதிக்கேற்றபடி ஒழுங்குபடுத்துகிறார்.



இதற்கெல்லாம் அப்பால் யாழ் பல்கலைக்கழக சட்டத்துறையின் தலைவராக இருந்த கலாநிதி குமாரவடிவேல் குருபரன் அவர்கள் அண்மையில் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார். அதன் பின்னணியை சற்று விரிவாகப் பார்ப்போம்.



நாவற்குழியில் இராணுவத்தால் பலவந்தமாக கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட பன்னிரண்டு இளைஞர்கள் தொடர்பான வழக்கினை 2017ம் ஆண்டு சட்டத்தரணி எஸ்.சுபாசினி அவர்கள் தாக்கல் செய்திருந்தார்கள். அவை ஆட்கொணர்வு மனுக்கள். அந்த மனுக்களின் ஊடாக பாதிக்கப்பட்ட அந்த இளைஞர்களின் பெற்றோருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் குமாரவடிவேல் குருபரன் அந்த வழக்குகளில் முன்னிலையாகி வாதாடி வந்தார், இதன் பின்னர் இலங்கை இராணுவத்தினர் சிலர் அவ்வழக்கில் பெயர் சுட்டப்பட்டனர். அவர்கள் சார்பிலும் சட்டத் தரணிகள் முன்னிலையாகினர். இந்தப் பின்னணியில் வழக்கு இரண்டு வருடங்களாக இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் இராணுவத் தலைமையகத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதில் ' யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் குமாரவடிவேல் குருபரன், போதனை சார் அலுவலராக உள்ள நிலையில் நீதிமன்றங்களில் முன்னிலையாக்குவதற்கும் அனுமதி உண்டா?' என்று கேட்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 2011ம் ஆண்டு குருபரன் நீதிமன்றங்களில் முன்னிலையாக்குவதற்கு யாழ் பல்கலைக்கழக பேரவை அனுமதி வழங்கியிருந்தமை தகுதிவாய்ந்த அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மானியங்கள் ஆணைக்குழு அந்த அனுமதியை ரத்து செய்து அவர் முன்னிலையாக்குவதற்கு தடை விதிக்கப்படவேண்டும் என்று பதில் கடிதம் அனுப்பியது. அதனை யாழ் பல்கலைக்கழக பேரவை அப்படியே ஏற்றுக்கொண்டது. இதில் கவனிக்கத்தக்க அம்சம், பேரவை குருபரனின் தரப்பைக் கேட்காமலேயே இம்முடிவை எடுத்தது.

பின்னர் குருபரன், இலங்கை உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்தார். இவ்வழக்கு நீதிபதிகள் குழுவொன்றினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த நிலையில் சில மாதங்களின் முன்பு அவ்வழக்கினை விசாரித்த பிரதம நீதியரசர் 'சட்டத்துறை சார்ந்த கல்வியாளர் நீதிமன்றங்களில் முன்னிலையாகி சட்டத்தரணி தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே என் நிலைப்பாடாகும். அதுவே சட்டத்துறை சார்ந்த கல்வியாளர்களுக்குப் பொருத்தமாக அமையும். அதனையே நான் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருந்தேன். எனவே நான் இந்த மனு மீதான விசாரணையிலிருந்து விலகுகி-றேன்' என்று உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த ஜெயவர்த்தன கூறி வழக்கிலிருந்து விலகிக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து எட்டு மாதங்களுக்கு மேல் தன்னுடைய வழக்கு நிலுவையில் இருப்பதால் எதிர்காலம் தொடர்பில் தன்னால் நிச்சயமான முடிவை எடுக்க முடியாமல் இருப்பதாகவும், தான் வேண்டுமென்றே அலைக்கழிக்கப்படுவதாகவும் உணர்ந்த குருபரன் தன்னுடைய முதுநிலை விரிவுரையாளர் பதவியைத் துறந்திருக்கிறார்.

அவர் தன்னுடைய பதவி விலகல் கடிதத்தில் சில முக்கியமான விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

- 'பேரவையின் முடிவானது பல்கலைக்கழகத்தின் முறையான இயங்குகைக்கு அடிப்படையான பல்கலைக்கழக ஆசிரியர்களின் புலமைத்துவ சுதந்திரத்தை காப்பாற்றுவதற்காக பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிறுவன சுயாட்சியை தாரை வார்த்துக் கொடுத்த செயலாகும்.' இப்போது வரை பேரவையோ பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமோ இந்தப் பிரச்சினை தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து, குருபரன் கோரும் நியாயமான கோரிக்கையின் பக்கம் நிற்கவில்லை. முன்னாள் வடக்குமாகாண ஆளுநராக இருந்த சுரேன் ராகவன் அவர்கள், குருபரனின் பதவி விலகலை ஒட்டி பேரவை உறுப்பினர் பதவியை விட்டு விலகுவதாக அறிவித்துள்ளார். ஏனைய பலரும் நீண்ட மவுனத்திலேயே உள்ளனர்.
- மற்றொரு முக்கிய விடயம் குறித்து பத்து வருடகால அவரது பல்கலைக்கழக ஆசிரிய வாழ்க்கையில் அவர் நீதிமன்றில் முன்னிலையாகி வாதாடிய வழக்குகள் பற்றியது, 'அயல்வீட்டுக்காரரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கருக்கலைப்பு செய்ய விரும்பிய 13 வயது பெண் பிள்ளையின் வழக்கு, அபிவிருத்திக்காக கால்வாயை மூடியமையை எதிர்த்த வழக்கு, தனியார் கம்பனி ஒன்று கழிவொயிலை வெளியேற்றி சூழலை மாசடைய செய்தமையை எதிர்த்த வழக்கு, போருக்கு பிந்திய சூழலில் நினைவு கூறுவதற்கான உரிமையை நிலைநாட்டும் வழக்குகள், பேச்சு மற்றும் ஒன்று கூடும் சுதந்திரத்திற்கு எதிரான தடைகளுக்கு எதிரான வழக்குகள் மற்றும் இரண்டு தசாப்தங்களாக தமது பிள்ளைகளை தேடும் இரண்டு தாய்மாரினதும் ஒரு தந்தையினதும் வழக்கு என்பன எனக்கு இந்த திருப்தியை தந்த சந்தர்ப்பங்கள். சட்டத்தினூடு நான் செய்யும் சமூக ஊடாட்டம் என்னைப் பொறுத்த வரையில் சமூக கரிசனையுள்ள பல்கலைக்கழக ஆசிரியனின் பணிகளில் ஒன்று. சட்டத் தொழில் மூலம் எனக்கிருந்த சமூக ஊடாட்டத்தில் இருந்து துண்டிக்கப்பட்டவனாக என்னால் எனது சட்ட ஆசிரியர் தொழிலை செய்ய முடியாது.'
- இறுதியாக யாழ். பல்கலைக்கழகம் தொடர்பான அவரது கறாரான விமர்சனம் 'எனது குறுகிய கால அனுபவத்தில் இந்த பல்கலைக்கழகம் சட்டத்தின் ஆட்சிக்குட்படாத, நல்லாட்சி தத்துவங்களை பின்பற்ற தெரியாத, புலமைத்துவ சுதந்திரம் தொடர்பில் கரிசனை இல்லாத, அடிப்படை சுயமரியாதை விழுமியங்களை கூட மதிக்காத ஓர் இடமாகவே எனக்கு தெரிகின்றது என்பதை கூற எனக்கு அனுமதி தாருங்கள். இது தொடர்பில் இந்த மடலில் விரிவாக பேசுவதை தவிர்க்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் கூற அனுமதியுங்கள்: தம்மை உயர்த்தும் நோக்கமன்றி வேறொன்றையும் அறியாத சுயநல நிகழ்ச்சி நிரல்களின் வலைப்பின்னல்களுக்குள் இந்த பல்கலைக்கழகம் தள்ளாடுகிறது. 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற மகுடவாசத்திற்கும் இந்த பல்கலைக்கழகத்திற்கும் சம்பந்தம் இல்லை. இந்த நிலையானது பல்கலைக்கழகத்தை நல்லாசிரியர்களை தன்னிடத்து தக்கவைத்திருக்கவும் விடாது நல்லாசிரியர்களை ஈர்க்கவும் தவறும்.'

இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று விடயங்களும் அவருடைய பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. துணிச்சலும் புலமையும் மக்கள் பக்கம் நின்று பேசும் ஆளுமைகளும் பொதுவெளியிலேயே குறைந்திருக்கும் காலத்தில் பல்கலைக்கழகத்தில் குருபரன் போன்றவர்கள் இயங்குவதென்பது மிக முக்கியமானது. அவரது பதவி விலகலைத் தொடர்ந்து பல்வேறு தரப்பினரும் அவருக்கு ஆதரவான உறுதியான நிலைப்பாட்டினை எடுத்திருக்கிறார்கள். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தமது நிலைப்பாட்டினை அறிவித்துள்ளது. குருபரன் மீது தொடுக்கப்பட்டுள்ளது மிக மோசமான அரசியல் பழிவாங்கல், அதன் மூலம் மாணவர் மத்தியில் அச்சத்தைத் தோற்றுவிக்க அரசு முனைகிறது. பல்கலைக்கழகத்தின் அரசியல் வெளியை அது கேள்விக்குட்படுத்துகிறது. இந்த நிலையில் பேரவையும், ஆசிரியர் சங்கமும், பிற சமூக இயக்கங்களும் இராணுவமயமாக்கத்தினதும், இராணுவத்தின் தொடரும் அத்து மீறல்களுக்கும் எதிராக ஒன்றுபட்ட குரலில் சேர்ந்து நின்று எதிர்ப்பதே அறம். அதுவே நம் அரசியல் பேசும் சுயாதீன வெளியைக் காப்பாற்றும்.

sulosana@thaiveedu.com

■ ■ ■

# யாழ். பல்கலைக்கழகமும் அதன் வரலாற்றுப் பொறுப்பும்!

- எஸ்.கே. விக்னேஸ்வரன் -

யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளரும் சட்ட பீடத் தலைவருமான கலாநிதி குமாரவடிவேல் குருபரன் அவர்கள் தனது பதவியை விட்டு விலகுவதாக பல்கலைக்கழக பேரவைக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சட்ட பீட ஆசியர்கள் ஒரு சட்டத்தரணியாக நீதிமன்ற வழக்குகளில் தோற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட முடியாது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கடந்த வருடம் நவம்பர் மாதம் எழுதப்பட்ட கடிதத்தை எத்தகைய மறுப்புமின்றி ஏற்றுக்கொண்ட பல்கலைகழக நிர்வாக சபை, அவரை வழக்குரைஞராக செயற்படமுடியாது என்று அறிவுறுத்தி இருந்ததே இந்த விலகல் கடிதத்தை அவர் எழுதுவதற்குக் காரணமாக அமைந்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு இத்தகைய விதத்தில் பல்கலைக்கழக நிர்வாகத்தை, அதன் சுயாதீனத் தன்மையை மீறும் விதத்திலான விதிகளை போதிய காரணங்களேதுமின்றி தாமே உருவாக்குவது சட்ட ரீதியானதா என்பது விவாதத்துக்குரியது. இந்த முடிவை எதிர்த்து கலநிதி குருபரன் அவர்கள் ஏற்கனவே மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தொடர்ந்துள்ளார்.

ஆணைக்குழு பல்கலைக்கழகங்களின் சுயாதீனத்தை பாதிக்கும் விதத்திலான, இதுவரைகால நடைமுறையை மறுதலிக்கும் விதத்தில் அத்துமீறி எடுத்துள்ள ஒரு ஏற்பாடு இதுவாகும். இதை மறுக்கவும், இந்த முடிவை மறுபரிசீலனை செய்யும் படி கோரவும் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் பல்கலைக்கழக நிர்வாக சபை அதை ஏற்றுக்கொண்டுள்ளது உண்மையில் ஒரு பொறுப்பற்ற நடவடிக்கை என்றே கருதவேண்டும். அல்லது நிர்வாக சபை அரசியல் அழுத்தம் காரணமாக இந்த முடிவுக்கு வந்திருக்க வேண்டும். பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழகத்துக்கு வெளியே தாம் சார்ந்த துறை சார்ந்து செயற்படுவதற்கான உரிமை பல்கலைக்கழக நடைமுறை விதிகளுள் அனுமதிக்கப்பட்டுள்ள ஒன்று தான். பல்கலைக்கழக ஆசிரியர்கள், குறிப்பாக தொழிற்துறைசார் பீடங்களான பொறியியல், மருத்துவம், சட்டம், சமூகவியல், முகாமைத்துவம் போன்ற துறைகள் சார்ந்த ஆசிரியர்கள், பல்கலைக்கழகத்துக்கு வெளியே தமது துறைகளில், சமூகத்தின் தேவைகள் சார்ந்தும் செயற்படுவது ஒன்றும் புதிய விடயமும் அல்ல. கல்விப்புலமையும், தொழில்சார் சிறப்புத் தேர்ச்சிகளும் கொண்டிருத்தல் காரணமாக இவர்கள் வைத்தியம், தொழில்நுட்பம், முகாமைத்துவம், சட்டம், சமூகவியல் போன்ற துறைகளில் தனிப்பட்ட முறையிலும், சமூக அமைப்புக்களோடு இணைந்தும் செயற்பட்டு வருவது காலம் காலமாக நடந்துவரும் ஒன்றுதான்.

1978ல் கொண்டுவரப்பட்ட இலங்கை பல்கலைக்கழகங்கள் சட்டம் பல்கலைக்கழகங்களின் சுயாதீனம் மீதான அரச கட்டுப்பாட்டை ஏற்படுத்தி இருந்தபோதும், அது பல்கலைக்கழகங்களின் அதிகாரம், கடமை, செயற்பாடு என்ற (29-q) பகுதியில் சுயாதீனமான சமூகம் சார்ந்த செயற்பாடுகளுக்கு ஓரளவு இடமளிப்பதாக அமைந்திருக்கிறது. இந்த அடிப்படையிலேயே பல்கலைக்கழகத்தின் சமூகம் சார் நடவடிக்கைகளின் சுயாதீனத்தன்மை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது இருந்துவந்தது. இதன் அடிப்படையிலேயே, கலாநிதி குருபரன் அவர்கள் அடையாளம் என்ற தனது அமைப்பினூடாகவும், தனிப்பட்ட முறையிலும் பல மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் சட்ட ஆலோசகராகவும், வழக்குகளில் சட்டத்தரணியாகவும் பல்கலைக்கழகத்துக்கு வெளியே இயங்கிவரமுடிந்தது. அவரது மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயங்கள் பெற்றுத் தரப்பட்டதன் காரணமாக, அதிருப்தியடைந்த அரச தரப்பினதும் இராணுவத்தினதும் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்ட அழுத்தமே இந்த நிலை உருவாகக் காரணமானது. அவரை சட்டத்தரணியாகச் செயற்படவிடாமல் தடுக்கும் நோக்குடன் இராணுவத்தினர் சார்பில் 'ஆசிரியர்கள் சட்டத்தரணியாக செயற்படமுடியுமா?' என்று கேட்கப்பட்ட கேள்வியின் அடிப்படையிலேயே இப்போது இந்த முடிவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மீள வலியுறுத்தி உள்ளது. அதை அப்படியே பல்கலைக்கழக பேரவை வழிமொழிந்திருக்கிறது என்றே நினைக்கத் தோன்றுகிறது. தன்மீதான தடையை எதிர்த்துத் தொடர்ந்த வழக்கு தவிர, அவர் வேறும் சில மனித உரிமை மீறல் வழக்குகளிலும் ஏற்கனவே சட்டத்தரணியாக செயற்பட்டு வருகிறார். இந்த நிலையில் ஒரு மனித உரிமை வாதியான அவருக்கு தான் நடத்த விரும்பும் வழக்குகளை நடத்த அவருக்குத் தன் பதவியிலிருந்து விலகுவதைத் தவிர வேறு வழி இல்லாத ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.




ஆணைக்குழு சட்டபீட ஆசிரியர்கள் நொத்தாரிசாக இருக்கலாம் ஆனால் சட்டத்தரணியாக இருக்க முடியாது என்று அறிவிப்பது, டாக்டர்கள் இனிமேல் மருந்துச்சீட்டு எழுதலாம் நோயாளிக்கு வைத்தியம் செய்யக்கூடாது என்பது போன்ற ஒரு கேலிக்கிடமான அறிவிப்பு. நடைமுறை அனுபவமில்லாமல் எந்தத் தொழில்சார் கல்வியும் முழுமையடையாது என்பதாலேயே இவை எல்லா நாடுகளிலும் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக பாடநேரம் குழம்பாமலிருப்பதை கவனித்துக் கொள்வதை தவிர வேறு எந்தத் தலையீடும் ஆசிரியர்களுக்கு இருப்பதில்லை. ஆனால் இங்கே அமைச்சரின் 'வேண்டுகோளுக்கு' இணங்க ஆணைக்குழு இப்படி முடிவு செய்திருக்கிறது. அதுவும் 2013ம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த ஆணைக்குழுவின் கூட்டமொன்றில் அப்போதைய பொது நிர்வாகம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் தலைவரால் எழுப்பப்பட்ட ஒரு கேள்வி தொடர்பாக எடுக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டிருந்த முடிவை இப்போது தூசுதட்டி எடுத்து அறிவித்திருக்கிறது. இது அன்றைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீண்டும் தொடரப் போகின்றன என்பதற்கான ஒரு அறிவிப்பாக வந்து சேர்ந்திருக்கிறது. இது தவிர்க்கமுடியாமல் எல்லா இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கும் பொதுவாக நடைமுறைக்கு வந்துள்ளது என்றாலும் முதலில் பாதிக்கப்பட்டவர் குருபரன் அவர்களே.

யாழ். பல்கலைக்கழகம் ஒரு நல்ல ஆசிரியரைப் பெறுவது என்பது அதன் வரலாற்றிலேயே விபத்துப் போல்தான் நடந்து வந்திருக்கிறது. பலதுறைகளிலும் திறமை வாய்ந்த பல ஆசிரியர்களை யாழ் பல்கலைக்கழகத்திற்குள் ஏற்றுக்கொள்ளும் விதத்திலான திறந்த மனதுடன் அதன் நிர்வாக சபை இயங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாகப் பேசப்படுகிற ஒன்றுதான். அதனால் தான், விபத்தாகவே நல்லாசிரியர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. அப்படி வந்தவர்களில் பல்கலைக்கழகத்துள்ளும் வெளியிலும், மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் தமது புலமைச் செயற்பாடுகள் மூலமாக பயனுள்ள பங்களிப்பை வழங்கியவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அத்தகைய ஒருசிலரில் ஒருவர்தான் சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குருபரன் அவர்களும். ஆனால் அவருக்கும் இப்போது தனக்கு மறுக்கப்பட்ட ஜனநாயக உரிமைக்காகப் போராட பல்கலக்கழகப் பதவியை உதறிவிட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்துக்கு வெளியே ஒரு ஆசிரியர் சட்டரீதியான செயற்பாடுகளில் ஈடுபடுவது, இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக தடை செய்யப்பட்டுள்ளது. ஒரு சட்டவியல் விரிவுரையாளர் நீதிமன்றத்தில் தோற்றி வாதாடுவதை தடுப்பதென்பது காலப்போக்கில் நீதிமன்ற அனுபவமற்ற பேராசிரியர்களைக் கொண்ட சட்டபீடமாக பல்கலைக்கழக சட்டபீடத்தை மாற்றிவிடும். வெறும் புத்தகப் பூச்சிகளாக மாணவர்களை உருவாக்கும் பட்டறையாக அது மாறிவிடும்.

உண்மையில் இதன் நோக்கம் ஒரு அரசியல் பழிவாங்கல். எதிர்காலத்தில் பல்கலைக்கழகக் கல்வியின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது மிகப் பெரிய ஆபத்து. இது அவரது தனிமனித உரிமை மீதான தாக்குதல். அவரது ஜனநாயக உரிமையை மறுக்கும் ஒரு நடவடிக்கை என்பவற்றுக்கும் மேலாக, ஓர் எதிர்கால மாணவ சமூகத்தையே சீரழிக்கும் நடவடிக்கைக்கான தொடக்கமாகவும் அமையப் போகிறது.

இது சட்டரீதியாக சவாலுக்குட்படுத்தப்பட வேண்டியது. சட்டரீதியாகவும், ஜனநாயக ரீதியிலான போராட்டங்களாலும் எதிர்க்கப்படவேண்டியது. இது அவரது சக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மட்டுமான ஓர் ஆசிரியரின் பிரச்சினை அல்ல. இது ஒரு மோசமான முன்னுதாரணமாகி முழு நாட்டுக்குமே பரவக்கூடிய ஆபத்து. பல்கலைக்கழகங்களதும் மாணவர்களதும் சுயாதீன கல்விக்கான செயற்பாட்டை அரசியற்காரணங்களுக்காக ஒழிக்கும் நோக்குடன் நிர்வாக ரீதியான கட்டுப்பாட்டைக் கொண்டுவரும் ஒரு நடவடிக்கை இது. சட்ட ரீதியாக இதை எதிர்கொள்ளும் அதேவேளை அவரது ஜனநாயக உரிமைக்காகவும் பல்கலைக்கழகத்தின் சுயாதீன செயற்பாட்டுக்காகவும் எதிர்த்துக் குரலெழுப்பவேண்டியது ஒவ்வொரு ஆசிரியரதும், ஒவ்வொரு மாணவரதும் வரலாற்றுப் பொறுப்பு.

இதை முன்நின்று தலைமையேற்று யாழ் பல்கலைகழக ஆசிரிய சமூகமே நடத்த வேண்டும். நடத்த முடியும்.

ஆனால் அது அறிதுயிலில் ஆழ்ந்திருக்கிறது.

வரும் ஆபத்து ஒரு ஆசிரியருக்கு மட்டும் எதிரானதல்ல, அது ஒரு கல்விச் சமூகத்துக்கே, அதன் பண்பாட்டுக்கே எதிரானது. சுயாதீனம், சுயசிந்தனை என்பவற்றைக் கொண்ட புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் கடப்பாடுள்ள ஒரு பல்கலைக் கழகத்தை ஒரு பாலர் பாடசாலை மட்டத்துக்குத் தரமிறக்கும் செயலைநோக்கித் தள்ளக் கூடியது என்பதை அது இன்னமும் உணரவில்லை. இது பற்றி ஏனைய பல்கலைக்கழகங்களுடன் உரையாடி இதற்கு என்ன செய்யலாம் என ஒரு முடிவை எட்டவும் இல்லை. மாறாக அதை அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டிருக்கிறது. இனி அவர் தொடர்ந்திருக்கும் வழக்கில் வெற்றி பெற்றால் மட்டுமே அவர் பல்கலைக்கழகத்துக்கு திரும்ப முடியும். ஆனால், தனது தீர்மானத்தின் அடிப்படை அரசியல் ரீதியானது, சமூக நலன் சார்ந்ததல்ல என்பதை கணக்கில் எடுக்காமல் ஆணைக்குழு இந்த விதியைப் பிறப்பித்திருக்கிறது. அதை அரசியல் ரீதியில் எதிர்கொள்வதற்குப் பதில் அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறது யாழ் பல்கலைக்கழக பேரவை

இது ஒரு மோசமான காலத் துயர்.

நாட்டின் வருங்காலத்தைத் தீர்மானிக்கும் அறிவாளர்களை உருவாக்கும் பெருங் கடப்பாட்டைக் கொண்ட ஒரு பல்கலைக் கழகம், இதற்கெதிராக குரலெழுப்பாமல் இருக்க முடியாது. இது ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமல்ல அனைத்துக்கல்விச் சமூகமும், கட்சி வேறுபாடுகள் இன்றி அனைத்துக் கட்சிகளும் இணைந்து குரலெழுப்ப வேண்டிய ஒரு முக்கியமான விடயம். அமைச்சரதும் ஆணைக் குழுவினதும் முடிவை மாற்றும் எதிர்ப்புப் போராட்டத்தை யாழ் பல்கலைக்கழக நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து நடத்த வேண்டும்.

இது வெறும் குருபரன் அவர்கள் பற்றிய விடயம் அல்ல. நாளை வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் இன்னும் இதுபோன்ற தொழிற் துறைசார் நிபுணத்துவம் பெற்றோரையும்கூட சமூக நடவடிக்கைகளில், அரசியலில் ஈடுபடுவதை நிறுத்துமாறு ஆணைக்குழு கட்டளை இடலாம். இது இனிவரப்போகும் இளந்தலைமுறையின் எதிர்காலத்தை மோசமான பாதிப்புக்குள்ளாக்கும் ஒரு நடவடிக்கை.

ஆகவேதான் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரதும் ஒருமித்த எதிர்ப்பு நடவடிக்கை என்பது அவர்கள் முன்னுள்ள வரலாற்றுக் கடமைகளில் ஒன்று என்றாகிறது!



vickneaswaran.sk@thaiveedu.com

# Insurance & Investments

*"Life insurance is the most tangible form of security devised by man"*

## For all your insurance and investment needs:

- ✓ Guaranteed Investments
- ✓ Annuities and Pensions
- ✓ Registered Retirement Savings Plan (RRSP)
- ✓ RRSP Loan
- ✓ Registered Education Savings Plan (RESP)
- ✓ Life Insurance
- ✓ Disability Insurance
- ✓ Mortgage Insurance
- ✓ Travel Insurance
- ✓ Group Insurance
- ✓ Critical Illness Insurance
- ✓ Health Insurance

**Santhakumar Subramaniam**
**Financial Advisor**

Tif: 437.771.1086
Fax: 905.470.4045
santhan16win@gmail.com



4168 Finch Ave. East, PH 28, Scarborough, ON M1S 5H6

# வீட்டுக்கடன், வியாபாரக்கடன், தனிப்பட்டகடன் தேவைகளுக்கு என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்




**Mortgage for:**

- Self Employed
- New Immigrant
- Investment
- Transfer between family
- Bad Credit
- Second Mortgages

**Business Mortgage & Loan :**

**Personal Line of Credit & Loan**



* some conditions apply

KAPITAL CARE MORTGAGE INC. Lic:-12623

**416.873.5780**

# கேதீஸ்

## சிவசுப்பிரமணியம்

*Mortgage Agent - (Lic # M08006105)*

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

# நாடக நெறியாளர் புராந்தகன்

இலக்கியப்பரப்பில் பெரிதும் அறியப்பட்டு கனடாவில் காத்திரமான பல நாடகங்களை நெறியாள்கை செய்து இம்மண்ணில் நாடகக்கலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வரும் கலைஞர் புராந்தகன் அவர்களை இம்மாத ஆழத்து முத்துக்கள் பகுதியில் பதிவிடுவதில் தாய்வீடு மகிழ்வுறுகிறது.

அளவெட்டியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் - விசாலாட்சி இணையரின் மகனான இவருக்கு, தமிழிலக்கண நுட்பங்களிலும் எண் கணிதத்திலும் சிறப்புற அடித்தளமிட்டவர் இவரது தந்தையார் ஆசிரியர் அமிர்தலிங்கம் அவர்கள். மேலும் இவரது உடன்பிறந்தவர்களான சாரதாமணி, வாமதேவன் ஆகியோர் இவரது கலைவாழ்வுக்கு உந்து சக்தியாக இருந்தனர். இவர், சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலை, முள்ளானை சேர். ககைசபை வித்தியாசாலை, தெல்லிப்பளை மகாஜன கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று, பேராதனை பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்துக்குத் தெரிவானார். இலங்கை சீமெந்து தொழிற்சாலை, அரச நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றில் கடமையாற்றி, பின்னர் கனடாவுக்குக் குடிபெயர்ந்தார்.

இளவயதிலேயே கவிதைகள் எழுத ஆரம்பித்த இவர் பாடசாலையில் நடைபெற்ற இலக்கிய பேச்சு போட்டிகளில் பரிசுகள் பெற்றார். அந்நாளில் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் பேச்சுப்போட்டிகளில் கீழ்ப் பிரிவிலும் மேற்பிரிவிலும் முதற்பரிசுக்கான தங்கப்பதங்களை வென்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கவியரங்குப் போட்டியில் முதற்பரிசு பெற்றமையால் ‘பேராதனை பல்கலைக்கழகத்தின் சிறந்த கவிஞர்’ என்ற கௌரவம் இவருக்கு வழங்கப்பட்டது. மேலும் ஈழத்துப்பாடகர் ‘ஓ... வண்டிக்காரா...’ புகழ் மா. சத்தியமூர்த்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பதிவுசெய்த முதற் பாடலான ‘மேகங்களே...’ என்ற பாடல் புராந்தகன் எழுதிய பாடல் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை நாட்களில் பல நாடகங்களில் பங்குபற்றியிருந்தாலும் இலக்கியங்களில் பெண்கள் இழிவுபடுத்தப்பட்ட சம்பவங்களை மையமாகக் கொண்டு மஹாகவி உருத்திரமூர்த்தி எழுதிய ‘கோலம்’ என்ற பாநாடகத்தில் நடித்ததை இவர் பெருமையாகக் குறிப்பிடுகின்றார். புராந்தகன் இந்நாடகத்தில் பாண்டியன், ராவணன், துரியோதனன் என மூன்று வேடங்கள் ஏற்றிருந்தார். ஆசிரியர் செ.கதிரேசர்பிள்ளை நெறியாள்கை செய்த இந்நாடகம், கூட்டுறவாளர் தின நாடகப்போட்டியில் பரிசு பெற்றது நினைவு கொள்ளத்தக்கது. இந்நாடகத்தில் சேரன், சோழன், பாண்டியன், ஆதவன், இனியாள், ஔவை, இந்துமதி ஆகியோரும் நடித்திருந்தனர். மேலும் கல்லூரி நாட்களில் ஆசிரியர் செல்லத்துரை இயக்கிய பிரபலமான புராண நாடகமொன்றில் புராந்தகன் சிவபெருமானாக நடித்திருந்தார்.

இவர் கனடாவில் குடியேறிய பின்னர் இவரது தீவிரவாசனை, கிரகித்துக்கொள்ளும் பாங்கு, கவிதை - பேச்சுப் போட்டிகளின் ஈடுபாடு காரணமாக பல கவிதா நிகழ்வுகள், சீரிய நாடகங்கள் என்பவற்றை மேடையேற்றினார். 1990ல் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பழைய மாணவர் சங்கத்தினர் நடத்திய வானவில் நிகழ்வில் மேடையேறிய ‘தொலைவு’ என்ற நாடகம் பலராலும் பாராட்டப்பட்ட ஒரு நாடகமாகும். ‘காலம்’ இதழில் வெளிவந்த தனது கவிதையை மையமாகக் கொண்டு கனடாவில் காசு காசு என அலைந்து வாழ்வைத் தொலைத்தவரின் கதையை ஸ்ரீநாதன், செல்வகுமார், அரியம் போன்றவர்களுடன் இணைந்து இவர் நாடகமாக்கியிருந்தார்.

இதன் பின்னர், மஹாகவியின் நாடகங்களுள் இவருக்கு மிகவும் பிடித்தமான ‘கோடை’ என்ற பாநாடகத்தை 1994ல் மகாஜன கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் முத்தமிழ் விழாவில் நெறியாள்கை செய்து மேடையேற்றியிருந்தார். இந்நாடகத்தில் கதிர் துரைசிங்கம், பார்வதி கந்தசாமி, ராதா வரதன், செல்வன், தியாகராசா விஜயசீலன், பத்மசிங்கம் பிரதீபன், செல்வரட்னம், ஐயாத்துரை கணேசானந்தன் ஆகியோருடன் புராந்தகனும் நடித்திருந்தார்.

1994ல் கனடாவில் நடைபெற்ற தாசீசியஸ் அவர்களின் நாடகப்பட்டறையில் கலந்து பயிற்சிபெற்ற சில கலைஞர்களுக்கு இங்கு ஒரு நாடக அமைப்பின் அவசியம் குறித்த எண்ணக்கரு தோற்றம் பெறுகிறது. இக்காலகட்டத்தில் ‘காலம்’ சஞ்சிகையின் இலக்கியமாலையில் புராந்தகனின் நெறியாள்கையில் ‘விட்டு விடுதலையாகி’ என்ற நாடகம் மேடையேறுகிறது. புராந்தகன் எழுதிய நாடகத்துக்குப் பொருந்திவந்த, ‘வெளி’ நாடக இதழில் இமையம் எழுதிய ‘பயணம்’ என்ற நாடகத்தின் பகுதிகள் இணைந்து இந்நாடகம் மேடையேற்றம் கண்டது. இந்நாடகத்தில் செல்வன், டிலிப் குமார், பாபு, பாலன், ராஜன், சுகந்தன், ரமேஷ் ஆகியயோர் நடித்திருந்தனர். இதற்குரிய இசைப் பின்னணியை திவ்யராஜன், விஜயலஷ்மி ஸ்ரீநிவாசன் ஆகியோர் இணைந்து வழங்கியிருந்தார். தனிமனிதருக்கும் சமூகத்துக்கும் இடையே நடக்கும் போராட்டத்தை விளக்கும் இந்நாடகம் அருணோதய கல்லூரியினரின் கலை விழாவில் இரண்டாவது முறையாக மேடையேறியது.

மனவெளி கலையாற்றுக்குழு தோற்றம் பெற்ற பொழுது அதன் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராகவிருந்து இன்று வரை இயங்கிவருகிறார் புராந்தகன்.

இந்த வகையில் மனவெளி கலையாற்றுக்குழு ஆற்றுகைப்படுத்தும் ‘அரங்காடல்’ முதலாவது நிகழ்வில் கவிதையும் இசையும் நடிப்பும் சேர்ந்த குறும்பா நிகழ்வை புராந்தகன் எழுதி நெறியாள்கை செய்திருந்தார். இந்நிகழ்வில் சபேசன், பாலன், செழியன், புராந்தகன், தனா, நந்தினி, பவானி ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இதில் வருகின்ற பாடல்களை திவ்வியராஜன், காரை புண்ணியமூர்த்தி, செந்தூரன் அழகையா ஆகியோர் பாடியிருந்தனர்.

இதேபோல், மஹாகவியின் கவிதைகளைத் தொகுத்து ‘உய்ய விழையும் உளம்’ எனும் கவிதா நிகழ்வை ‘காலம்’ இலக்கிய மாலை நிகழ்ச்சிக்காக இவர் நெறியாள்கை செய்து மேடையேற்றியிருந்தார். இந்நிகழ்வில் பா.அ. ஜயகரன், செழியன், ஆனந்தப்ரசாத், ராஜ், புராந்தகன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இதன் பாடல்களை ஆனந்தப்ரசாத் பாடியிருந்தார்.



பிரபல கவிஞரும் நாடக எழுத்தாளரும் சமூகப் போராளியுமான செழியன் மனவெளி கலையாற்றுக் குழுவினரின் அரங்காடல் நிகழ்வுக்காக எழுதிய பெருங்கதையாடல், வேருக்குள் பெய்யும் மழை, சவக்குறிப்புகள் ஆகிய நாடகங்களை நெறியாள்கை செய்யும் பாக்கியம் புராந்தகனுக்குக் கிடைத்தது. ‘போலித்தனங்களுக்குச்சாட்டையடி கொடுக்கும் பெருங்கதையாடல்’ நாடகத்தில் அ. கந்தசாமி, சபேசன், நந்தினி, சுகந்தன், சிவநாதன், ரமேஷ் ஆகியோர் நடித்திருந்தனர். அமெரிக்காவில் இடம் பெற்ற இரண்டாவது மேடையேற்றத்தின் போது புராந்தகனும் நடித்திருந்தார். ‘மக்களை எவ்வாறு மூளைச்சலவை செய்கிறார்கள்’ என்பதை எள்ளலுடன் கூறும் ‘வேருக்குள் பெய்யும் மழை’ நாடகத்தில் செல்வன், பவானி, சத்தியவரதன், கஜேந்தினி ஆகியோர் நடித்திருந்தனர். எஸ். ராமகிருஷ்ணனின் ‘சவரக் குறிப்புகள்’ என்ற சிறுகதையை செழியன் நாடகமாக ஆக்கியிருந்தார். இந்நாடகத்தில் குரும்பசிட்டி ராஜரட்ணம், வரகுணன்,

## ஆழத்து முத்துக்கள்

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

நர்த்தனன், நீரா சிற்சபைசன், ராஜன், கிருபா, ஸ்ரீதர் ஆகியோர் நடித்திருந்தனர். இவற்றின் நீட்சியாக சுந்தர ராமசாமி எழுதிய ‘சீதை மார்க் சீயாக்காய் தூள்’ என்ற சிறுகதையை புராந்தகன் நாடகப் பிரதியாக்கி, ‘துயருள் தோயும் தூரிகை’ எனும் பெயரில் நெறியாள்கை செய்து ‘அரங்காடல்’ நிகழ்வில் மேடையேற்றினார். இந்நாடகத்தில் சேகர், விமலேஸ்வரி, குமார் ஆகியோர் நடித்திருந்தனர். சீதையின் ஓவியத்தை வரைந்து தரும்படி கேட்ட ஒரு வியாபாரி ஓவியனைப் படுத்தும்பாடு நாடகத்தில் வெளிப்படும்.

இவ்வாறு சுஜாதா எழுதிய ‘சரளா’ என்ற நாடகத்தை அரங்காடல் நிகழ்வுக்காகவும், ராமகிருஷ்ணன் எழுதிய ‘யன்னலைத் தட்டாதே அஷ்ரப்’ என்ற சிறுகதையை, சிறுகதை - நாடகப் பாணியில் மனவெளியினர் நடத்திய ராமகிருஷ்ணனுடனான சந்திப்பு நிகழ்வுக்காகவும் இவர் மேடையேற்றம் செய்திருந்தார். சரளா நாடகத்தில் பவானி, நந்தினி, மாலா விவேகானந்தன் ஆகியோரும் ‘யன்னலைத்தட்டாதே அஷ்ரப்’ நாடகத்தில் குரும்பசிட்டி ராஜரட்ணம், நர்த்தனன் ஆகியோரும் நடித்திருந்தனர்.

இதே போல் ஈழத்து எழுத்தாளரான பா. அகிலனின் ஒரு சிறுகதையை ‘இருளிலும் தொடரும் நிழல்’ என்ற பெயரில் நாடகமாக்கி நெறியாள்கை செய்து அரங்காடலில் இவர் மேடையேற்றினார். காணாமல் போனவர்களின் மன அவலம் குறித்த இந்நாடகத்தில் குமார், குகன், நர்த்தனன், கமலா ஆகியோர் நடித்திருந்தனர். மேலும் சோபாசக்தி எழுதிய ‘ஆறாம் படை’ என்ற நாடகத்தை புராந்தகன் நெறியாள்கை செய்திருந்தார். அரங்காடலில் மேடையேறிய இந்நாடகம் போர் முடிந்த பின்னர் போராளிகள் படும் துயரத்தைச் சொல்லியது. இதில் ஜெயப் பிரகாஷ், கிருந்துஜா, ராஜன், குமார், ஹேமா ஸ்ரீதர் ஆகியோர் நடித்திருந்தனர். யாழ் கண்ணனின் பாடல் மெட்டுக்களுக்கு தாமிரா, அசோக் ஆகியோர் குரல் கொடுத்திருந்தனர். வரகுணன் இசையமைப்பை வழங்கியிருந்தார். இந்நாடகத்தில் இடம் பெறும் நடனத்தில் நடன ஆசிரியை லலிதா கதிர்காமரின் மாணவிகள் பங்கு பற்றியிருந்தனர்.

மேலும் அயனஸ்கோவின் ‘The Lesson’ என்ற நாடகத்தை இவர் அரங்காடல் நிகழ்வுக்காக நெறியாள்கை செய்து மேடையேற்றினார். பென்னேஸ்வரனின் மொழிபெயர்ப்பில் உருவான இந்நாடகம் ‘அரி ஓம் நம’ என்ற பெயரில் மேடையேற்றம் கண்டது. ‘கல்வித் திட்டத்தை நையாண்டி செய்யும்’ இந்நாடகத்தில் குரும்பசிட்டி ராஜரட்ணம், விமலேஸ்வரி, சாளினி ஆகியோர் நடித்திருந்தனர்.

ஆரவாரம் இல்லாமல் மிகவும் அடக்கமாக ஆனால் ஆழமாக சீரிய நாடகங்களை மேடையேற்றி வரும் புராந்தகன் அவர்களை தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com

# MORTGAGE

**MORTGAGE IN ANY SITUATION**

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private 1st Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- ⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



**Cell : 416-624- 4843**



www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை
MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

# முக்கிய வேண்டுகோள்!

சசிகலா மிகவும் நேர்மையான எளிமையான கூர்மையான ஆளுமை நிறைந்த புத்திசாலி ஆவர். பதவிக்காகவோ அந்தஸ்துக்காகவோ அரசியலில் நுழையவில்லை. அவர் எனது அண்ணா காட்டிய வழியில் மக்களுக்கு சேவையாற்றவே அரசியலுக்கு வந்துள்ளார். அண்ணாவின் அகால மறைவுக்குப்பின் தனது பிள்ளைகளை ஆளாக்க வேண்டும் என்று தனி குடும்பத் தலைவியாக பிள்ளைகளை சட்டத்துறையிலும் மருத்துவத்துறையிலும் கற்க விட்டு, பல சவால்களுக்கு மத்தியில் வளர்த்து ஆளாக்கி விட்டார். யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட பட்டதாரியான இவர் ஆசிரியப் பணியை கொழும்பில் பிரபல்யமான தனியார் பாடசாலையில் (Bishop's College) பௌதீகவியல் (Physics) ஆசிரியராக இவ்வாண்டு வரை ஏறத்தாழ 30 வருடங்களுக்கு மேல் கடமையாற்றி, பெண்பிள்ளைகளின் வழிகாட்டியாக திகழ்ந்தவர். இன்று எல்லாப் பொறுப்புகளையும் சரிவர செய்து அண்ணாவின் அபிலாசைகளை நிறைவேற்ற தனது விருப்பத்துடன் அவர் காட்டிய வழியை பின்பற்றி அரசியலில் இறங்கவுள்ளார். சசி அண்ணி அதிகம் தேவையில்லாமல் கதைக்க மாட்டார். கதைத்தால் முக்கிய விடயங்களே பெரும்பாலும் இருக்கும். அவர் அண்ணாவுடன் இணைந்து ஒப்பேற்றி வைத்த திருமணங்கள் ஏராளம். அவர்களின் கொழும்பு இல்லம் எத்தனையோ உறவினர்கள் நண்பர்கள் தங்கிச் செல்லும் இடமாகும். இன்று வெளிநாடுகளில் இருக்கும் பல உறவுக்காரர்கள் இவரின் வீட்டில் இருந்தே சென்றுள்ளார்கள். அண்ணா தான் தேர்ந்தெடுத்த வாழ்க்கை துணைவி. அவர் தனக்கு பொருத்தமானவரையே தேர்ந்து எடுத்திருக்க வேண்டும். எனவே அவர் பாதை வழி சென்று வாழ்க்கையில் அரசியல் பாடத்தை அனுபவித்து உணர்ந்தவர். பல இன்னல்களையும் எதிர் நீச்சல் கொண்டவர் என்ற ரீதியில் எளிமையான அவரை அரசியல் பிரதிநிதியாக தெரிவு செய்து வாக்களிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.




புலம் பெயர் மக்களே எனது அண்ணா விட்டுச்சென்ற பாதையை பின் தொடர்ந்து செல்ல சசிகலா ரவிராஜ் அவருக்கு ஆதரவு வழங்குமாறு உங்கள் உறவுகளுக்கு வேண்டுகோள் விடுங்கள்.

**நடராஜா ரவிராஜின் அன்புத் தங்கை,**
**வாசுகி தேவதாஸ்**
**சட்டத்தரணி**






# நினைவில் நீங்காப் பேராசான் மு.பி. பாலசுப்ரமணியன்

- பொன்னையா விவேகானந்தன் -

பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் கடந்த மாதம் திகதி இவ்வுலகைவிட்டுப் பிரிந்திருந்தார். அவருடைய இழப்பு தமிழ்கூறும் நல்லுலகையும் அவர் மாணவர்களையும் வெகுவாக துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

35 ஆண்டுகாலமாக சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகவும் சில ஆண்டுகள் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி முதல்வராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வுபெற்ற பின் 20 ஆண்டுகள் தமிழ்ப்பணியும் கழகப்பணியும் செய்தவர்.

வாணிதாசன் கவிதைகள், இலக்கியப் புன்னகை, இலக்கிய நெஞ்சம், இதழியல் பதிவுகள், பயணம் போன்ற நூல்கள் உட்பட 40 மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

திமுக ஆட்சியில் தமிழ் வளர்ச்சித்துறையில், அறிவியல் தமிழ்மன்றத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வேளை திரு. தமிழறிஞர் மணவை முஸ்தபாவுடன் இணைந்து பெரும் பணியாற்றினார். தமிழ் வளர்ச்சிப்பணியில், கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு உறுதுணையாக நின்றிருந்தார்.

தமிழ்ச் செம்மொழி மத்திய நிறுவனத்தின் உறுப்பினராகவும் அளப்பரிய பணிகளைச் செய்துள்ளார். மத்திய அரசின் திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பணியாற்றி கலைத்துறை சார்ந்த கடமைகளையும் செய்துள்ளார்.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். திரவிட முன்னேற்றக் கழக இலக்கியப்பணிகளில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு, அவர் நிறைவேற்றிய பணிகள் பல.

கடந்த 17 ஆண்டுகளாக 'தமிழாலயம்' என்ற இலக்கிய இதழ் அவருடைய உன்னத அடையாளமாகவும் ஆற்றலின் பதிவாகவும் வெளிப்பட்டது. இவ்விதழைத் வளம் குன்றாது தொடர்ந்து நடத்தி வந்தவர். மிகச் சிறந்த சொற்பொழிவாளர். எந்தப் பரப்பிலும் சுவை குன்றாது உரையாற்ற வல்லவர்.

அவருடைய வாழ்வை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன்.

தமிழகத்தில் அழகும் வளமும் நிறைந்த தென்காசிப் பகுதியில் அய்யாபுரம் கிராமத்தில் 1939 மே 16ம் நாள் பிறந்தார். இவருடைய தந்தை - தாயார் பெயர் பிச்சைமுத்து, கண்ணியம்மாள். இவருக்கு ஒரு சதோரரும் இரு சகோதரிகளும் இருந்தனர்.

மு.பி.பா வின் மனைவியான இன்பவல்லியும் இதே கிராமத்தைச் சேர்ந்தவரே. இவர்களுக்கும் இரண்டு மகன்மாரும், இரண்டு மகள்மாரும் உள்ளனர். கல்வியிலும் தமிழ்மொழியிலும் ஆர்வம் கொண்ட இவர் தளர்வின்றி முனைவர் கல்விவரை கற்று பி.எச்.டி பட்டம் பெற்றுக் கொண்டார். வாணிதாசன் என்ற பெரும் புலவரின் கவிதைகளை ஆய்வு செய்தே முனைவர் பட்டம் பெற்றார். தமிழ்க்கவிதைகளுக்காக விருதுகளும் பரிசுகளும் பெற்றிருக்கின்றார்.

இவரின் முதல் கல்விப்பணி காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் ஆரம்பமானது. சில ஆண்டுகள் அங்கு கற்பித்துவிட்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரிக்கு மாற்றலாகி நீண்டகாலம் அங்குதான் கற்பித்தார். இவர் எழுதிய கவிதை மேகங்கள் என்ற நூல் கல்லூரிகளில் பாட நூலாகவும் இடம்பெற்றிருக்கின்றது.

வாசிப்பதில் பெருநாட்டம் கொண்ட இவர், வீட்டிலேயே பெருநூலகம் ஒன்றை வைத்திருந்தார். நூல்களைச் சேகரிப்பதிலும் அவற்றைப் பிறருக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதிலும் பெருவிருப்புக் கொண்டவர். நான் அவருடைய மாணவனாக இருந்த காலத்தில் கணிசமான நூல்களை அவரிடமிருந்து பெற்றிருக்கின்றேன்.

அவருடைய 80 அகவை நாளை முன்னிட்டு, அய்யாபுரத்தில் ஒரு நூலகம் ஆரம்பிக்கப்பட்டமை வரலாற்றுச் சிறப்பு



மிக்க நிகழ்ச்சி. கடந்த ஆண்டு மே மாதம் 16ம் திகதி அய்யாபுரம் காந்தி தெருவில் ஒரு நூலகம் திறக்கப்பட்டது. பேராசிரியர் சொலமன் பாப்பையா தலைமையில் சாகித்திய அகாடெமி விருதாளரும் எழுத்தாளருமான பொன்னீலன் நாடா வெட்டிக் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார். நூலகம் திறக்கப்பட்ட நாளிலேயே அவர் பெயரில் ஓர் அறக்கட்டளையும் தொடங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நானும் பேசுவதாக இருந்தது. ஆனால் நினைத்தபடி அங்கு செல்ல இயலவில்லை.

வீட்டிற்கு ஒரு புத்தகச் சாலை தேவை என்றார் பேரறிஞர் அண்ணா. ஒரு நூலகம் திறந்தால் ஒரு சிறைச்சாலையின் கதவுகள் மூடப்படும் என்பது விவேகானந்தரின் வாக்கு. பிரான்சிஸ் பேகனின் கணிப்பு வாசிப்பு மனிதனை முழுமையாக்கும் என்பதே. இதை நன்குணர்ந்த பேராசிரியர் இந்த நூலகத்தைத் தன் சொந்த ஊரில் திறந்திருந்தார் என்பதே மிகச் சிறப்பு. தன்னை வளர்த்து ஆளாக்கிய மண்ணுக்குச் செய்ய வேண்டிய பணியை நன்றே அவர் செய்து முடித்திருக்கின்றார்.

பேராசிரியர் மு.பி.பா அவர்களின் அறக்கட்டளை, மாணவர் கல்விக்காகவும் நூலகத்தின் வளர்ச்சிக்காகவும் மக்கள் நலப் பணிக்காகவும் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதன் தொடக்கமாக அய்யாபுரம் கிராமத்தில் உள்ள தொடக்கப்பள்ளியில் பயிலும் 150 மாணவர்களுக்கு குறிப்பேடுகள், எழுதுகோல்கள் என்பன வழங்கப் பட்டதுடன், வறிய மக்களுக்கு ஆடைகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தன.

பேராசிரியர் அவர்கள் பேராற்றல் கொண்டவராகவும் அறிவுலகால் நன்கு அறியப்பட்ட மனிதராகவும் திகழ்ந்த போதும், பழகுவதற்கு மிக எளிமையானவர். மாணவர் மீது பேரன்பு கொண்டவர். தான் வாழும் பகுதியான அண்ணா நகர் மேற்கு, பாரதி குடியிருப்பில் அனைவராலும் போற்றப்படுபவராக வாழ்ந்தார். அக்குடியிருப்பு ஒன்றியத்தின் தலைவராக பல ஆண்டுகள் பணியாற்றி, அச்சூழலுக்குப் பெரும் சேவை புரிந்துள்ளார்.

இவ்வேளையில் எனக்கும் அவருக்குமான தொடர்பு குறித்தும் சில குறிப்புகளை எழுத வேண்டியுள்ளது.

நான் 1984ல் பச்சையப்பன் கல்லூரியில் மாணவனாக இணைந்தேன். எனக்கு எல்லாமே புதிதாக இருந்தன. ஈழத்தில் இருந்து சென்ற நான் திரைப்படங்கள் வாயிலாக மட்டுமே தமிழகத்தை அறிந்திருந்தேன். கல்லூரியில் மாணவனாக இணைந்த வேளை, பல இடர்களைச் சந்தித்தேன். அவ்வேளை வகுப்பில் பேராசிரியராக கற்பிக்க வந்த மு.பி.பா அவர்கள் என்னையும் எனக்காக இடர்களையும் புரிந்து கொண்டு எனக்கு ஆறுதல் தருபவராக இருந்தார். எனக்கும் அது இதமாகவும் உற்சாகமாகவும் இருந்தது. அடுத்த ஆண்டு நான் விடுதி மாணவனாக இணைந்தபோது, எனக்கு பாதுகாவலர் ஒருவர் தேவைப்பட்டார். மு.பி.பா. அவர்களிடம் இதைச் சொன்னபோது மகிழ்வாக ஒப்புக்கொண்டார். அன்றிலிருந்து நான் பச்சைப்பன் கல்லூரியை விட்டு வெளியேறும்வரை எனக்கு அவரே பாதுகாவலர். பாதுகாவலர் மட்டுமல்ல, என் நன்மை தீமை யாவற்றிலும் பங்குகொள்பவராக அவர் இருந்தார்.

கவிதை எழுதுதல், பேச்சுப் போட்டிகள் என்பவற்றில் நான் வளர்ச்சியும் பரிசில்களும் பெறுவதற்குக் காரணமாக இருந்தார்.

பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்ப்பேரவை வலிமையானதொரு மாணவர் அமைப்பு. இந்த அமைப்பின் செயலாளராக 1987லும் தலைவராக 1989லும் நான் பொறுப்பில் இருந்தேன். தமிழகத்துச் சூழலில் ஈழத் தமிழனாகிய நான் இப்பொறுப்புகளைத் தேர்தல் வாயிலாகப் பெறுவது எளிதானதல்ல. என்னை ஊக்கப்படுத்தி, இப்பணிகளில் ஈடுபடச் செய்ததில் பேராசிரியருக்குப் பெரும் பங்கு உண்டு.

ஒருதடவை என்னை அண்ணாநகரில் நடைபெற்ற ஒரு பட்டிமன்றத்தில் பேச வைத்தார். பேசி முடிந்த பின்னர் ஏற்பாட்டாளர் 50 ரூபாய் கையில் தந்தார். நான் ஒரு மேடையில் பேசியபின் என் வாழ்நாளில் முதல்தடவையாக அதற்கான ஊதியத்தைப் பெற்றிருந்தேன்.

அதற்காக பணம் பெற்ற நிகழ்வு அது தான் முதல்தடவை. அதற்கும் அவரே காரணமாகவிருந்தார்.

நான் 1989ல் தமிழ்ப்பேரவைப் தலைவரான பின், என்னை கலைஞர் கருணாநிதி அவர்களிடம் அழைத்துச் சென்று வாழ்த்துப் பெற வைத்தார். ஈழத்தமிழனாகிய என்னுடன் அவர் சிறிது நேரம் பேசினார். இந்த வாய்ப்பு அந்நாளில் பெரிதாகப் பேசப்பட்டது. அப்போதுதான் கலைஞருக்கும் அவருக்கும் இருந்த நெருக்கத்தை நான் நன்கு புரிந்து கொண்டேன்.

பேராசியர் அன்பழகனுக்கும் மு.பி.பா. அவர்களுக்குமான நட்பு மிக ஆழமானது. கீழ்ப்பாக்கத்தில் இருந்த பேராசிரியர் அன்பழகன் வீட்டிற்கு நான் பலதடவைகள் மு.பி.பா அவர்களுடன் சென்றிருக்கின்றேன். இருவரும் மிக நெருக்கமாக நீண்டநேரம் பேசிக்கொண்டிருப்பார்கள். மு.பி.பா. அவர்கள் நடத்திய பல நூல் வெளியீடுகளைத் தலைமை தாங்கி நடத்தியவர் பேராசிரியர் அன்பழகன்.

நான் கல்லூரியில் முதுகலைக் கல்வியை நிறைவுசெய்து, இலங்கை திரும்பிய சில காலத்தின் பின், போராட்டச் சூழல் காரணமாக மீண்டும் தமிழகத்துக்குச் சென்றேன். அப்போதும் அவரே எனக்குப் பேருதவியாக இருந்தார். அங்கு நடைபெற்ற என் திருமண நிகழ்வில் கலந்து கொண்டு எம்மை வாழ்த்தியிருந்தார்.

நான் கனடாவுக்கு வந்த பின்பும் அவர் அவர் தொடர்பை விட்டுவிடவில்லை. தமிழகம் செல்லும்போதெல்லாம் அவர் வீடு சென்று இட்லி, தோசை உண்ணாமல் வருவதில்லை.

சுவிட்சலாந்தில் வாழும் எனது நண்பரான திரு முருகவேள் அவர்களும் பேராசிரியரின் அன்புக்குப் பாத்திரமானார். அவர் வழியாக கனடாவில் வாழ்ந்து மறைந்த எழுத்தாளர் திரு. பொன்னம்பலம் குகதாசன் அவர்களும் பேராசிரியருக்கு அறிமுகமாகியிருந்தார். இவ்வேளை திரு. குகதாசன் அவர்கள் எழுதிய 'வாலிவதை' என்ற நூலை வெளியிடுவதற்காக பேராசிரியரை கனடாவுக்கு அழைக்க விரும்பினார். என்னோடும் பேசினார். இருவருமாக அவர் பயண ஏற்பாடுகளைச் செய்தோம்.

2014 செம்ரெம்பரில் கனடா வந்த பேராசிரியர் இரு வாரங்கள் எம்மோடு தங்கினார். இவ்வேளையில்தான் தாய்வீடு இதழும் அவருக்கு அறிமுகமானது. தாய்வீடு இதழ் மீது பெருமதிப்புக் கொண்டார். பின்னர் 2015 ஒகஸ்ட் மாதம் நான் தமிழகம் சென்றபோது 'அலைகடலுக்கு அப்பால்' என்ற நூலை என் முன்னிலையில் வெளியிட்டார். அங்கு தாய்வீடு இதழையும் அறிமுகம் செய்தார்.

அவர் இங்கு வந்திருந்த வேளையில் தாய்வீடு ஆசிரியர் டிலிப்குமார், மறைந்த நண்பர் கருணா, கங்காதரன் ஆகியோரும் அவருக்கு நட்பாயினர். கருணா, கங்கா இருவருமே அவருக்கு கனடா பற்றிய பல புதிய தகவல்களை வழங்கியிருந்தனர். அவற்றை அவர் அலைகடலுக்கு அப்பால் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இங்கு பல இடங்களையும் சுற்றிப் பார்த்த அவருக்கு அமெரிக்கா செல்ல முடியவில்லையே என்ற கவலை இருந்தது.

நண்பர் கருணா மறைந்த போது துயருற்ற அவர், கருணா பற்றிய தன் துயரப் பதிவையும் எமக்கு அனுப்பியிருந்தார்.

பேராசியரின் மறைவு எனக்குத் துயரைத் தருவது மட்டுமன்றி, பெரும் இழப்பாகவும் இருக்கின்றது. அவரோடு இணைந்து சில பணிகளை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்தேன். அவர் இல்லையாயினும் அவர் உருவாக்கிய அறக்கட்டளை மூலம் அவர் நினைவை முன்னிறுத்திய பல பணிகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அவர் உருவாக்கிய நூற்றுக்கணக்கான மாணவர்கள் எங்கும் உள்ளார்கள். அவர் நினைவை நிச்சயம் அனைவரும் நெஞ்சில் சுமப்பார்கள். அய்யாபுரத்திலும் தமிழ் கூறும் நல்லுலகிலும் அவர் பெயர் என்றென்றும் நிலைக்கும்.



*vivekanandan.p@thaiveedu.com*

# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE NESAN
## 416-908-5656

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

## Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

# எழுதி ஓய்ந்த பேனா!



**- எஸ். மல்லிகா -**

வாழ்வுக்குள் செத்துக்கொண்டிருக்கும் மனிதர்கள் மத்தியில், சாவுக்குள் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அபூர்வப் பிறவிகள். அதிலும் எழுத்தாளர்களுக்குத் தனியிடம் உண்டு. அந்தத் தனியிடத்தில் தனக்கென்றோர் இடத்தைத் தக்க வைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார் ஈழத்து மூத்த பெண்ணிய எழுத்தாளர் திருமதி பத்மா சோமகாந்தன்.

மரணம் எல்லோருக்கும் பொதுவானது. அது இன்னார், இனியார் என்ற பேதம் பார்த்து வருவதில்லை. உயிர்கள் பூமியில் வாழ்வதற்கான எல்லை நிறைவுற்றுக் காலமுத்திரை கிழிக்கப்படும் தருணத்தில் கணக்காக வந்து உயிர்களை வேட்டையாடிச் செல்லும் கூரிய அம்பு போன்றது. ஆனாலும், சிலரது மரணங்களை ஜீரணிக்க முடிவதில்லை. அந்தப் பட்டியலில் பத்மா சோமகாந்தனும் இருக்கிறார். சென்ற ஜுலை 15ம் நாள் அவரது உயிரைப் பறித்துச் சென்றது அந்தக் கூரிய அம்பு.

எத்தனை வருடம் பூமியில் வாழ்ந்தோம் என்ற கணக்கை விட, அத்தனை வருடமும் எப்படி வாழ்ந்தோம் என்று அடுத்தவர் வியக்கும் வண்ணம் வாழ்வதுதான் வாழ்க்கை. அந்தவகையில், 86 வருடங்கள் இந்தப் பூமியில் வாழ்ந்த பத்மா சோமகாந்தன், அர்த்தமுள்ள ஒரு நிறைவான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார். உயிருடன் இருந்த காலத்தில், ஓங்கியுயர்ந்து நிழல் கொடுத்த விருட்சமாக இருந்தார். உதிரிப் பூவாய் மரணவாசலைச் சென்றடைந்த போது, சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு உரமாகிவிட்டார்.

அன்னையின் கருவறையில் புரட்சி விதையெனத் திகழ்ந்த பத்மா, பெருவிருட்சமாகிப் புதுமைகள் பல படைத்தவர். இந்தப் புதுமைப் பெண் யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை என்ற இடத்தில் பிரம்மசிறி ஏரம்ப பஞ்சநதீஸ்வரக் குருக்கள் - அமிர்தம்மாள் இணையரின் நான்காவது மகளாக மே 03, 1934ல் பிறந்தவர். பத்மாவதி என்பது பெற்றோர் இட்ட பெயர்.

யாழ். இந்துத் தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், இந்து மகளிர் கல்லூரியில் இடைநிலை மற்றும் உயர் கல்வியையும் கற்ற இவர், பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றி, அதிபராகப் பதவி உயர்வு பெற்று, ஓய்வு பெற்றவர். பெண்கள் ஓரளவு படித்தாலே போதும் என்ற கருத்துநிலை ஓங்கியிருந்த காலத்தில், அதனைத் தகர்த்துச் சாதித்துக்காட்டிய பத்மா சோமகாந்தன், தன்னம்பிக்கையின் ஊற்றாகத் திகழ்ந்தவர். சாதாரண பெண்களுக்கே தடைகள் ஆயிரம் இருந்த சூழலில், பத்மா சோமகாந்தன் அவர்கள் அரசியல் மேடைகளிலும் கூட துணிந்து முழங்கியவர், பெண்களுள் பேரொளியாய் விளங்கியவர். தனது துணிச்சல்தான் எழுத்துலகில் தன்னை நிறுத்தியது என்று அவரே கூறியிருக்கிறார்.

படித்த காலத்தில் அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியாரான மங்கையர்க்கரசி அவர்களுடன் இணைந்து அரசியலில் பயணித்த இவர், பெண்கள் தமக்கான அரசியல் உரிமைகளை வென்றெடுக்க அரசியலில் பிரவேசிக்க வேண்டும் என்று உரத்துக் கூறியவர். அரசியல் வெளியில் பெண்களைப் புறந்தள்ளும் ஆண்களைச் சாடியவர். அதேநேரம், பெண்களை மதிக்கும் அவர்கள் வளர்ச்சியை விரும்பும் ஆண்களை வரவேற்றவர். பெண்ணியம் என்பது ஆண்களுக்கு எதிரானது அல்ல என்று தெளிவான விளக்கமளித்து, இது தொடர்பிலும் அதிகம் எழுதியவர்.

பாரதியின்பால் பெருவிருப்புக் கொண்டிருந்த பத்மா சோமகாந்தன்,

*'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள்*
*- செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்,*
*எட்டு மறிவினில் ஆணுக் கிங்கே*
*பெண் இளைப்பில்லை காணென்று*
*- கும்மியடி!'*

என்ற அமரகவியின் வாக்கிற்கிணங்க தன்னோடு படித்த பெண்களுக்கு உத்வேகம் கொடுத்தவர். பாடசாலையில் கற்கும் காலத்திலேயே எழுத்துலகில் காலடி பதித்து, பல படைப்புக்களை உலகுக்கு அளித்தவர்.

'நான் சிறுமியாய் இருக்கும் போதே கல்கி, பாலர் மலர் வாசிப்பதிலும் வீட்டில் வாங்கும் ஆனந்தவிகடன் போன்ற சஞ்சிகைகளை வாசிப்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தேன். அத்துடன், துணுக்குகள் மற்றும் கேலிச்சித்திரங்களில் கண்ணோட்டம் செலுத்துவதிலும் ஆர்வம் ஏற்பட்டது. சில விடயங்களை வாசிக்கும் போது எமது மனதிலும் சில எண்ணங்கள் தோன்றும். அப்படியே நாமும் அவற்றை எழுத்தாக்கினால் எப்படியிருக்கும் என்ற சிந்தனை மனதில் இழையோடும். அந்தச் சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுத்து, ஈழத்தில் வெளிவந்த பத்திரிகைகளின் சிறுவர் பக்கத்துக்கு ஆக்கங்கள் எழுதினேன். அவை பிரசுரமானதும், எனக்குள் பேரானந்தம் குடிகொள்ளும். இந்நிலையில், சுதந்திரன் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பங்கு பற்றி - 'இரத்தபாசம்' என்ற சிறுகதை எழுதினேன். எனக்கு முதற் பரிசும் கிடைத்தது. அந்தப் பரிசு, என்னை எழுதத் தூண்டியது. எமது காலத்தில் இருந்த சாதியப் பிரச்சினை மற்றும் பெண் முன்னேற்றம் குறித்து அதிகம் எழுதியுள்ளேன். இறுதிவரை என் எழுத்துப் பயணம் தொடரும்' என்று அவர் கூறியதைப் போன்றே இடையறாது இயங்கியவர். 'புதுமைப் பிரியை' என்ற புனைபெயரில் புரட்சி விதைகளைத் தூவியவர்.

மூன்றாம் பிறையாகி முழுநிலவான பின்னர் 'காதலொருவனை கைப்பிடித்து அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து' என்று அமரகவி பாடியதற்கிணங்க பிரபல எழுத்தாளர் சோமகாந்தனை காதலித்துக் கைப்பிடித்து, அவருடன் இணைந்து சாதனைகள் பல ஈட்டியவர், எழுத்துக்கள் மூலம் பலர் வாழ வழிகாட்டியவர். கணவரின் சாதனைகளுக்குப் பக்கபலமாக இருந்தவர். கணவன் - மனைவியர் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு இவர்கள் இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள்.

எழுதுவதுடன் நிறுத்திக்கொள்ளாமல் அமைப்புக்களில் இணைந்து இயங்குவதிலும் பேரார்வம் கொண்டிருந்த பத்மா சோமகாந்தன்- இந்து மாமன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், இந்து மகளிர் மன்றம், சாரதா சமிதி, ஆறுமுகநாவலர் சபை, நாவலர் நற்பணி மன்றம், விழுது மேம்பாட்டு மையம் மற்றும் இதனோடு இணைந்த பெண்கள் சார்பு ஊடகத்துறை, ஔவை இலக்கிய வட்டம், தமிழ் - சிங்கள எழுத்தாளர் ஒன்றியம், இலங்கை அரச எழுத்தாளர் மன்றம், அகில உலக சிற்றிதழ் சங்கம் முதலானவற்றிலும் அங்கம் வகித்தவர்.

இவர், 'பெண்ணின் குரல்' எனும் காலாண்டுச் சஞ்சிகையின் ஆசிரியராக 11 வருடங்கள் பணியாற்றியதுடன், 'சொல்' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். அத்தோடு, 'மிமினி' என்ற ஊடக அமைப்பை உருவாக்கி, அதனூடு தமிழ்ப் பெண்களுக்கு ஊடக அறிவை வழங்குவதில் முன்னின்று செயற்பட்டவர். இவரைப் பற்றி தென்கிழக்கு, கிழக்கு, பேராதனை மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது பட்டப் படிப்புக்காக ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

புதிய வார்ப்புகள், கடவுளின் பூக்கள், வேள்வி மலர்கள், கரும்பலகைக் காப்பியங்கள், இற்றைத் திங்கள் (இவை சிறுகதைத் தொகுப்புக்கள்), பாராமுகங்கள், ஈழத்து மாண்புறு மகளிர், நெஞ்சுக்கு நிம்மதி, ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளுமை

தொடர்தல் 34ம் பக்கம்

# பெண்களின் தார்மீகக் குரல் மௌனமானது!

- லெ. முருகபூபதி -

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் சிறந்த பங்களிப்பை வழங்கியவரும், தனது பள்ளிப்பருவத்திலிருந்தே இலக்கிய எழுத்தூழியத்தில் ஈடுபட்டவருமான சகோதரி திருமதி பத்மா சோமகாந்தன் ஜூலை 15ம் திகதி கொழும்பில் மறைந்தார் என்ற துயரமான செய்தி எம்மை வந்தடைந்தது.

இறுதியாக கடந்த ஆண்டு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடந்த எனது ‘இலங்கையில் பாரதி’ நூலின் வெளியீட்டு அரங்கில் தான் சந்தித்தேன்.

ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாக அவரை நன்கு அறிவேன். நெருங்கிய உறவொன்றை இழந்த உணர்வோடு, இந்த அஞ்சலிக்குறிப்பினை கனத்த மனதுடன் எழுதுகின்றேன்.

அவர் இருக்கும்போது நான் அவரைப் பற்றி எழுதிய ஒரு கட்டுரையை வாசித்துவிட்டு, மிகுந்த உற்சாகத்துடன் கொழும்பிலிருந்து தொலைபேசி ஊடாக என்னை வாழ்த்தி பாராட்டினார்.

எங்கள் நீர்கொழும்பூரின் சமய - தமிழ்ப் பணிக்கெல்லாம் அவரும் அவரது கணவர் மறைந்த சோமகாந்தனும் நீண்ட காலமாக முன்னின்று பங்களிப்பு செய்தவர்கள். அதனால், எங்கள் ஊர் மக்கள் சார்பாகவும் நான் எழுதவேண்டும். முன்னர் நான் அவர் பற்றி எழுதிய ஆக்கத்தை படித்துவிட்டு, அவ்வெழுத்துக்களில் தான் பழைய நினைவுகளில் சஞ்சரித்ததாகச் சொன்னார்.

அவர் அன்று சஞ்சரித்த அந்த கடந்த கால செய்திகளுடன் மீண்டும் இந்த குறிப்புகளை பதிவுசெய்கின்றேன்.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை இன்றுவரையில் தீராதிருப்பதற்கு பலரும் பல காரணங்களைச்சொல்லி வருகிறார்கள்.

விதேசியர்கள் வந்து சூறையாட வேண்டியதையெல்லாம் அள்ளிக்கொண்டு, இனி எக்கேடும் கெட்டுப்போங்கள் என புறப்பட்டார்கள். அவர்கள் தந்த சுதந்திரம் எமது அரசியல்வாதிகளுக்கு தந்திரமானதுதான் மிச்சம்.

இந்தப்பின்னணியில் முதல் பிரதமராக பதவிக்கு வந்த டீ.எஸ். சேனாநாயக்கா, 1952ல் காலிமுகத்திடலில் குதிரை சவாரிக்குச்சென்று விழுந்து இறந்ததும், அடுத்த பிரதமர் யார்...? என்ற பதவிப்போட்டியில் வேரோடியிருந்த இனப்பிரச்சினை இன்னமும் தீரவில்லை.

சிங்களத்தலைவர்கள் பதவிக்கு வரவேண்டுமானால் இலங்கை தேசிய சிறுபான்மை இனங்கள் பலிக்கடாவாக வேண்டும்.

1955ல் பிரதமராக யாழ்ப்பாணம் சென்ற சேர். ஜோன் கொத்தலாவலை, வடபுலத்து மக்கள் வழங்கிய மாலை மரியாதை வரவேற்பினால் மனம் குளிர்ந்து, ‘தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து வழங்க சட்டம் கொண்டுவருவேன்’ என்றார்.

இதனை தவறாகப்புரிந்து கொண்ட எச்.எல். மேத்தானந்தா என்ற ஒரு பௌத்த மத தீவிரவாதி ‘சரிதான், இனிமேல் சிங்களவர்களும் தமிழ்தான் படிக்கவேண்டிவரும்’ என்று தென்னிலங்கையில் வகுப்புவாதம் கக்கத்தொடங்கினார்.

அதனை தனக்குச்சாதமாக்கினார் பண்டாரநாயக்கா.

இதனைப்புரிந்துகொண்ட கொத்தலாவலை, தாமதிக்காமல் ஒரு பல்டி அடித்தார். 1956ல் களனியில் ஐ.தே.கட்சி மாநாட்டில், தனிச்சிங்களமே ஆட்சி மொழி என்றார்.

பண்டாரநாயக்கா அதன் பிறகும் சும்மா இருப்பாரா...? தாம் பதவிக்கு வந்தால் 24 மணிநேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் என்றார்.

ஐ.தே.க.வை தோற்கடிக்க ஐம்பெரும் சக்திகளை (பஞ்சமா பலவேகய) திரட்டிக் கொண்டு தேர்தலில் வென்ற பண்டாரநாயக்காவுக்கு உண்மையில் அப்படி ஒரு



எண்ணம் இருக்கவில்லை. டீ.எஸ். சேனாநாயக்காவுக்குப் பிறகு தனக்கு வரவேண்டிய சந்தர்ப்பம் டட்லிக்கும் அவரையடுத்து கொத்தலாவலைக்கும் சென்றதுதான் அவரை சிங்கள தீவிரவாதம் பேசக் காரணமாக இருந்திருக்கிறது.

அதற்குப் பின்னாலிருந்து நெருப்பு மூட்டியவர்கள் மேத்தானந்தா, புத்தரகித்த தேரோ ஆகியோர்.

இன்றும் இந்தக் கதைதான் வேறுவேறு ரூபத்தில் இலங்கையில் நீடிக்கிறது. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம் என்பார்களே... அவ்வாறு, யாராவது ஒரு சிங்களத் தலைவர் இனப்பிரச்சினைக்கு தீர்வு கொண்டுவந்தால் மற்ற சிங்களத் தலைவர் எதிர்ப்பார். இன்று எதிர்ப்பவர் நாளை பதவிக்கு வந்து நல்ல தீர்வு சொன்னால், முன்னர் நல்ல தீர்வு கொண்டுவர விரும்பியவர், அதனை ஆதரிக்காமல் எதிர்ப்பார்.

இது முற்றுப்பெறாத கதை.

இது இவ்விதமிருக்க, இந்த வரலாற்றில் வரும் மேத்தானந்தா போன்றதொரு இனவாதியை அதே பெயரில், சித்திரித்து 1956ல் காலிமுகத்தில் தமிழ்த்தலைவர்கள் சத்தியாக்கிரகம் நடத்தியபோது இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் ஒரு சிறுகதையை தமிழில் எழுதியிருப்பவர் யார் என்று பார்த்தால் எமக்கு அதிசயமாக இருக்கிறது. ஆனால், அது அதிசயம் அல்ல உண்மை.

ஒரு பாடசாலை மாணவி. அதுவும், வடபுலத்தில் ஒரு அந்தணர் குடும்பத்தில் பிறந்த பெண் எழுதியிருக்கிறார். தேவராம், திருவாசகம் மனனம் செய்து படித்துப் பாடவேண்டிய சூழலில் பிறந்த ஒரு யுவதி, சமூகப்பார்வையுடன் இலங்கையில் உதயமாகிய தேசிய இனப்பிரச்சினை தொடர்பான ஒரு கதையை எழுதியிருப்பது... அதுவும் அந்தப் பிரச்சினை எரியத் தொடங்கிய 1956 இலேயே படைத்திருப்பது... என்போன்ற வாசகர்களுக்கு பேராச்சரியம்தான்.

அந்த படைப்பாளியின் பெயர் புதுமைப் பிரியை. வசீகரமான பெயர். இவர்தான் பின்னாளில் ஈழத்து இலக்கிய உலகில் பத்மா சோமகாந்தன் என பிரபல்யம் பெற்றவர்.

1956ல் வெளியான அச்சிறுகதையின் பெயர்: புத்தன் பரம்பரை.

1947ம் ஆண்டு கொழும்பில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சுதந்திரன் பத்திரிகையை தொடக்கியபொழுது சிறுமியாக இருந்த பத்மா, 1954ல், அந்தப்பத்திரிகை நடத்திய அகில இலங்கை சிறுகதைப்போட்டியில் முதல் பரிசுபெறுகிறார். இவருடன் போட்டியிட்ட, இரண்டு முக்கிய படைப்பாளிகள், இரண்டாம், மூன்றாம் பரிசுகளைப் பெற்றார்கள்.

அவர்கள்தான் டானியல், டொமினிக்ஜீவா ஆகியோர்.

பத்மா எழுதிய சிறுகதை இரத்தபாசம்.
பரிசுகள் ஒருவரின் படைப்பாளுமையைத் தீர்மானிப்பதில்லை. மிகக்குறைந்த வயதில், கோயிலையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்த்துக்கொண்டிருக்கவேண்டிய சூழலில் இந்த புறவுலகையும் தென்னிலங்கையில் எரியத்தொடங்கிய தேசிய இனப்பிரச்சினையையும் சித்திரிக்கும் படைப்பாளுமை புதுமைப்பிரியை என்ற பத்மாவிடம் உருவாகியிருப்பது ஆச்சரியமன்றி வேறில்லை.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில், பிரம்மஸ்ரீ ஏரம்ப பஞ்சநதீஸ்வரக் குருக்கள் - அமிர்தம்மாள் இணையரின் செல்வப் புதல்வியாக பிறந்த பத்மாவுக்கும் சில சமூகப்பின்னணிகள் இருந்திருக்கின்றன. பெரியதந்தையார் பிரம்மஸ்ரீ தி. சதாசிவம் தற்காலத்திலிருக்கும் கல்விப்பணிப்பாளர் தகுதிக்குரிய வித்தியாதரிசகர். அத்துடன் கல்விமான். யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்ட ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் ஸ்தாபகர். தாய்மாமன், பிரம்மஸ்ரீ மு. சபாரத்தினம் அய்யர் அக்காலத்தில் வெளியான கவிகலாதீபம் என்ற பத்திரிகையை வெற்றிகரமாக நடத்தியவர்.

இலங்கையிலும் இந்தியாவிலும் இந்த அய்யர்மார் குடும்பங்களில் தோன்றி பிரபலமான பலரின் வாழ்வையும் பணிகளையும் சமுதாயக்கண்ணோட்டத்தில் ஆராய முடியும். அந்த வரிசையில் மகாகவி பாரதி முதலிடம் வகிப்பார். கோயில் பூசகர்களாகியிருக்கவேண்டியவர்கள், படைப்பாளிகளாகவும் கல்விமான்களாகவும் மருத்துவர், பொறியிலாளராகவும் மாறுவதும் அவரவர் மனவெழுச்சிகளின் விளைவே.

பாடசாலையில் ஏழாம் வகுப்பு படிக்கும் போதே கதைகள் கட்டுரைகள் எழுதத் தொடங்கிய பத்மா, சுதந்திரன் சிறுகதைப் போட்டிக்கு புதுமைப்பிரியை என்ற புனை பெயரில்த்தான் ‘இரத்தபாசம்’ என்ற சிறுகதையை எழுதி அனுப்பி முதல் பரிசைப் பெற்றுள்ளார்.

சிறுமியாக இருந்தபோதே புதுமையில் அவருக்கு நாட்டம் வந்திருக்கிறது. அதன் விளைவுதான் அந்தப் புனைபெயரில் எழுதுவதற்கு அவரைத் தூண்டியிருக்கவேண்டும்.

எனக்கு இவர் அறிமுகமானது 1974ற்குப் பின்னர்தான். இவருடைய கணவர் நா.சோமகாந்தன் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவர்.

கொழும்பு துறைமுக அதிகார சபையில் அவர் பணியாற்றிய காலத்தில், சங்கத்தின் தேசிய சபையிலும் கூட்டுறவுப் பதிப்பகத்திலும் இணைந்திருந்தேன். அதனால் அடிக்கடி இவர்களின் கொழும்பு நாரஹேன்பிட்டியில் அமைந்திருந்த அன்டர்ஸன் தொடர்மாடிக் குடியிருப்பு இல்லத்தில் நடக்கும் சந்திப்புகளுக்குச்செல்வேன்.

அங்கு அடிக்கடி சங்கத்தின் கூட்டங்கள் நடக்கும். சோமகாந்தன் பொதுப்பணிகளில் அயராத உழைப்பாளி. பல வெகுஜன அமைப்புகளில் அங்கம் பெற்றிருந்தார். அதனால் வீட்டுக்கு வருபவர்களை பத்மா, முகம் சுழிக்காமல் வரவேற்று உபசரிப்பார். ஆலோசனைகள் சொல்வார். விவாதங்கள் வந்தால் அமைதிப்படுத்துவார். இதுவிடயத்தில் சகோதரி பத்மா சோர்வுற்றதை நான் என்றைக்கும் பார்த்திருக்கவில்லை. இவரும் சங்கத்தின் வளர்ச்சியில் துணையாக நின்றார். பல முக்கிய பொறுப்புகளை ஏற்றார்.

1983ல் தென்னிலங்கையில் வன்செயல் வந்த பின்னர் இவர்களின் குடும்பம், யாழ்ப்பாணம் ஓட்டுமடத்திற்கு இடம்பெயர்ந்து சென்றது. அங்கு நடந்த சந்திப்புகளுக்கும் சென்றிருக்கின்றேன்.

கருத்தொருமித்த இந்தத் தம்பதியர் எங்கள் நீர்கொழும்பின் நெருங்கிய உறவினர்கள். ஊருக்கு உறவினராக முடியுமா...? முடியும். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற மனப்பான்மையுடன் இயங்குபவர்களினால் முடியும். அந்தவகையில் சான்றோர் தகுதி-பெற்றவர்கள்.
பத்மா எமது இனிய நண்பர் சோமகாந்தன் சம்பந்தப்பட்ட அனைத்துப் பொதுப்பணிகளிலும் தோளோடு தோள் நின்றவர்.

மகாகவி பாரதி சொன்னது போல், காதலொருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்து வாழ்ந்தவர்.

இந்தப்பதிவை சில வருடங்களுக்கு முன்னர் நான் எழுதத் தொடங்கியபோது, சில தகவல்களை ஊர்ஜிதப்படுத்துவதற்காக பத்மா அவர்களுடன் தொலைபேசியில் பேசினேன்.

‘பூபதி, நாளை உங்கள் ஊருக்குத்தான் செல்கிறேன். போட்டி ஒன்றுக்கு நடுவராக அழைத்துள்ளார்கள்’ என்றார்.

அதனைக்கேட்டதும் எனக்கு நெகிழ்ச்சியாக இருந்தது. அவரும் - கணவரும் எங்கும் இணைபிரியாமல் செல்வார்கள். நீர்கொழும்புக்கென்ன இலங்கையில் எப்பாகத்திலும் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கும் முடிந்தவரையில் ஒன்றாகத்தான் புறப்படுவார்கள்.

2006ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28ம் திகதி

தொடர்தல் 34ம் பக்கம்

# பெண்களின் தார்மீக...

33ம் பக்கத் தொடர்ச்சி...

கணவர் சோமகாந்தன் மறைந்த பின்னர், பத்மாவுக்கு அகத்தனிமை இருந்தபோதிலும், பொதுப்பணிகளில் முக்கியமாக கலை, இலக்கியம் மற்றும் மகளிர் விவகாரங்களில் தொடர்ந்தும் உற்சாகமாக இயங்கினார். பயணங்கள் மேற்கொண்டார். பயிலரங்குகளில் உரையாற்றினார்.

2008ல் இவரது பாரா முகங்கள் - சில பார்வைகள் வெளியாகியது. இதற்கு தமிழக எழுத்தாளர் திலகவதி (ஐ.பி.எஸ்) முன்னுரை தந்துள்ளார்.

'இந்த நூல் வெறும் கேள்வி - பதில் கூறும் நூல் அல்ல. பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த பிரச்சினைகளையும் அலசும் நூல். ஆசிரியர் பத்மா சோமகாந்தன் அவர்களின் பல்துறை அறிவையும் அனுபவங்களையும் விவேகத்தையும் அறிவிக்கும் நூல்' என்கிறார் இதற்கு அணிந்துரை எழுதியிருக்கும் செ. கணேசலிங்கன்.

இற்றைத்திங்கள் (சிறுகதைத்தொகுதி) 2013ல் வெளிவருகிறது.

இற்றைத்திங்கள் சிறுகதைத்தொகுதிக்கு அணிந்துரை எழுதியிருக்கும் அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்த மூத்த படைப்பாளி பொன்னீலன், 'அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில் என்ற புறநானூறில் இடம்பெற்ற பாடலை முன்னுதாரணமாக்கி, இன்றைய ஈழத்தின் துயர வரலாற்றை பதிவு செய்யும் கதைகளை எழுதி, இற்றைத்திங்கள் என்ற தலைப்பை குறியீடாக்கியிருப்பதாக' புகழாரம் சூட்டியுள்ளார்.

நெஞ்சுக்கு நிம்மதி என்ற நூல் இளம் பெண்களது பிரச்சினைகளின் தீர்வுக்கான ஆலோசனைகளைக் கூறுகிறது. இதற்கு அன்னலட்சுமி இராஜதுரை முன்னுரை தந்திருக்கிறார். வீரகேசரியின் துணைப்பதிப்பான மங்கையர் கேசரியில் சுமார் மூன்றாண்டுகள் வாசகர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு சீர்மிய முறைமையில் (Counselling) தீர்வுகளும் ஆலோசனைகளும் சொன்னவர் பத்மா சோமகாந்தன். அதன் தொகுப்பே நெஞ்சுக்கு நிம்மதி.

பத்மாவின் எழுத்துலகத்தின் தொடக்காலம் சிறுகதைதான்.

பல சிறுகதைகளும் அதேசமயம் ஏராளமான கட்டுரைகளும் எழுதியிருக்கும் பத்மா சோமகாந்தன், தினக்குரல் ஞாயிறு இதழில் நூறுக்கும் மேற்பட்ட சாதனைப்பெண்கள் பற்றியும், கலைக்கேசரியில் 75ற்கும் மேற்பட்ட இசை வல்லுனர்களையும் பற்றி எழுதியிருப்பவர்.

இவை தவிர, பெண்ணின் குரல், சொல், அகவழி, சங்கத்தமிழ், பிரவாகினி ஆகிய இதழ்களில் ஆசிரியராகவும் இயங்கியவர்.

1954ல் மாணவியாக சுதந்திரனில் எழுதத் தொடங்கிய பத்மா, வீரகேசரி, ஈழகேசரி, தினபதி, தினக்குரல், உதயன், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் புதுமை இலக்கியம், சிற்பியின் கலைச்செல்வி, மற்றும் மல்லிகை, ஞானம், இலங்கை விகடன், தமிழகத்தில் வெளியான தாமரை, கல்கி, கலைக்கதிர் முதலானவற்றிலும், அமைப்புகளின் ஆண்டு மலர்கள், சிறப்புமலர்கள், நினைவு மலர்கள், மாநாட்டு, கருத்தரங்கு மலர்களிலும் எழுதியிருப்பவர். அவரது கரம் ஓயாத கரம்.

ஏனென்றால், ஏழாம் வகுப்பு மாணவியாக இருந்த காலத்தில் எழுதத்தொடங்கியவர், உயர்வகுப்புக்குச் சென்றும் எழுதினார். திருமணமானதன் பின்னரும் எழுதினார். பிள்ளைகள் பெற்று குடும்பத் தலைவியானதன் பிறகும் எழுதினார். தனது பேரப் பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாடும் காலப்பகுதியிலும் எழுதிக்கொண்டிருந்தவர் இந்த அயற்சியற்ற ஆளுமை.

ஆசிரியராக, அதிபராக தொழில் துறையில் ஈடுபட்ட காலத்திலும் படைப்பிலக்கியத்தில் ஈடுபட்ட பத்மா சோமகாந்தன், தனது இலக்கியப்பிரவேசத்தை சிறுகதையில் தொடங்கியவர், எண்ணிலடங்காத பத்திகளும் எழுதியிருக்கிறார்.

ஈழத்துச்சிறுகதை வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்கு என்ற தலைப்பில் பத்மா சோமகாந்தன் எழுதிய கட்டுரை, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1996ல் கொழும்பில் நடத்திய இலக்கியப்பேரரங்கு விழாவில் வெளியிட்ட புதுமை இலக்கியம் மலரில் வெளிவந்துள்ளது.

சிறுகதை ஆசிரியராக அறியப்பட்ட பத்மா, தன்னை வளர்த்த தான் ஆய்வுசெய்த பத்திரிகைகள் பற்றி இந்த மலரில் விரிவாக பதிவுசெய்துள்ளார்.

இலங்கையில் பத்திரிகை இலக்கியம் தொடர்பாக ஆராயப்புகும் மாணவர்களுக்கு அக்கட்டுரை பயன்தரவல்லது.

கடவுளின் பூக்கள், வேள்வி மலர்கள், புதிய வார்ப்புகள், கரும்பலகைக் காப்பியங்கள், இற்றைத்திங்கள் முதலான சில சிறுகதைத் தொகுப்புகளை வரவாக்கியிருக்கும் அவர், இந்நூல்களுக்காக தமிழ் நாடு லில்லி தேவசிகாமணி பரிசு, சென்னை இந்து நாளிதழின் பாராட்டு, சார்க் மகளிர் சங்கத்தின் பரிசு, வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய பரிசு பெற்றிருப்பவர்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியில் தொடங்கி, சாந்தி சச்சிதானந்தம் வரையில் 23 பெண்ணிய ஆளுமைகள் குறித்து பத்மா சோமகாந்தன் எழுதியிருக்கும் மற்றும் ஒரு நூல் ஈழத்து மாண்புறு மகளிர்.

இதனைப்படித்தபோது, எனக்கு எனது சிறிய வயதில் கதைகள் சொல்லித்தந்த பாட்டி நினைவுக்கு வந்தார்கள். பாட்டிக்கு எழுதத் தெரியாது அவர் இட்டது கையொப்பம் அல்ல. கைநாட்டு வைத்துத்தான் எங்கள் ஊர் தபால் கந்தோரில் பத்து ரூபா உதவித்தொகையை மாதாந்தம் பெற்றார்.

அதற்கு அவர் வைத்த பெயர் பிச்சைச் சம்பளம்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்ற காலத்தில் பிறந்து எழுத்துலகத்தையும் வாசிப்புலகத்தையும் தரிசிக்காமல் தொலைத்துவிட்ட எனது பாட்டி சிறந்த நாட்டு வைத்தியர். அவரிடம் வந்து சிகிச்சை பெற்று பலன் பெற்றவர்கள் அவரை 'கைராசிக்கார ஆச்சி' என்று புகழாரம் சூட்டியதைப் பார்த்திருக்கின்றேன். அவர் படித்திருந்தால் எப்படி இருந்திருப்பார் என்று காலம் கடந்து சிந்தித்திருக்கின்றேன்.

காலம் எதற்கும் பதில் சொல்லும். அதனைச் சொல்ல வைத்தவர்கள் குறிப்பாக பெண்கள்தான். ஆசாரம் என்ற சிமிழுக்குள் மூடியிருக்கும் ஒரு சமூகத்திலிருந்து வந்திருந்த பத்மா அவர்கள், பெண்களின் குரலாக வாழ்ந்திருந்தமையால்தான் அவரால் மாண்புறு மகளிர் தொடரை எழுத முடிந்திருக்கிறது.

ஆன்மீகம், மருத்துவம், தொழில் நுட்பம், அறிவியல், கல்வி, மேடைப்பேச்சு, சமூகப் பணி, ஒலிபரப்பு, இதழியல் ஊடகம், இலக்கியம், நடனம், இசை, நிருவாகம், பதிப்புத்துறை முதலான பல்துறைகளிலும் ஈடுபட்டு சாதனைகள் புரிந்த பெண்கள் பற்றி எழுதியிருக்கிறார். இது தவிர ஈழத்து தமிழ்ப் பெண் ஆளுமைகள் என்ற நூலையும் வரவாக்கியிருக்கிறார்.

'நமது வரலாற்றை எழுதும்பொழுது, இனி மேலும் நாங்கள் மகளிர் வகிபாகத்தை மறத்தல் கூடாது 'என்பதை பத்மா எழுதிய ஈழத்து மாண்புறு மகளிர் நூல் அழுத்தமாகச்சொல்கிறது.' என்று இந்த நூலுக்கு முன்வாசகக் குறிப்பு எழுதியிருக்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

சிறுவர் இலக்கியமும் படைத்திருக்கும் பத்மா, சிறுவர்களுக்காக அனுமான் கதை என்ற நூலையும் வரவாக்கியவர்.

சுவாமி சின்மயானந்தரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார்.

ஆங்கிலத்திலும் எழுதும் திறன்வாய்ந்தவர். Garland of fifty flower - Stories from Hindu Mythology என்பவை இவரின் இதர நூல்கள்.

அவருக்கும் ஒரு நீண்ட காலக் கனவு இருந்தது. அதுதான் சிறுவர்களுக்காக ஓர் இலக்கிய மாநாடு நடத்தவேண்டும் என்ற கனவு.

நாளும் பொழுதும் எதனையாவது ஆக்கபூர்வமாகச் செய்யவேண்டும் என்ற சிந்தனைக்கே வசப்பட்டிருந்தவர்.

நாம் தினமும் மூழ்கிக்கிடக்கும் மின்னஞ்சல், முகநூல் வலைப்பதிவுக் கலாசாரத் திற்குள் பிரவேசிக்காமல் தொடர்ந்தும் அமைதியாக எழுதிக்கொண்டும் மேடைகளில் பேசிக்கொண்டுமிருந்தவர்.

எழுதுவதுடன் மட்டும் தன்னை நிறுத்திக் கொள்ளாமல், அமைப்புகளிலும் இணைந்து இயங்குவதிலும் ஆர்வம் காண்பித்த பத்மா சோமகாந்தன், இந்து மாமன்றம், கொழும்பு தமிழ்ச்சங்கம், இந்து மகளிர் மன்றம், சாரதா சமிதி, ஆறுமுகநாவலர் சபை, நாவலர் நற்பணி மன்றம், விழுது மேம்பாட்டு மையம் - இதனோடு இணைந்த பெண்கள் சார்பு ஊடகத்துறை, ஔவை இலக்கிய வட்டம், தமிழ் - சிங்கள எழுத்தாளர் ஒன்றியம், இலங்கை அரச எழுத்தாளர் மன்றம், அகில உலக சிற்றிதழ் சங்கம் முதலானவற்றிலும் அங்கம் வகித்திருக்கிறார்.

எப்படித்தான் இவரால் இத்தனை பொறுப்புகளையும் சுமந்துகொண்டு அலுப்போ சலிப்போ இன்றி புன்னகையுடன் செயற்பட முடிகிறது என்பதும் எமக்கு பேராச்சரியமாகவே இருந்தது.

இனி தனக்கு ஓய்வுவேண்டும் என்று சொல்லாமல் சொல்லி தனது கணவரிடம் சென்றுவிட்டார் என்றுதான் கருதுகின்றேன்.

எங்கள் இலக்கியக்குடும்பத்தில் ஒருவராக திகழ்ந்த சகோதரி பத்மா சோமகாந்தனுக்கு எமது
இதய அஞ்சலி.



murugaboopathi@thaiveedu.com

# எழுதி ஓய்ந்த பேனா...

32ம் பக்கத் தொடர்ச்சி...

கள், பதில் தருகிறார் பத்மா, அனுமான் கதை, சுவாமி சின்மயானந்தரின் வாழ்க்கை வரலாற்று நூல், Garland of fifty flower - Stories from Hindu Mythology (இது, சைவ சமயக் கதைகள் கூறும் ஆங்கில நூல்.) என பல நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அளித்தவர். 'நமது வரலாற்றை எழுதும்பொழுது, இனிமேலும் நாங்கள் மகளிர் வகிபாகத்தை மறத்தல் கூடாது என்பதை பத்மா எழுதிய ஈழத்து மாண்புறு மகளிர் நூல் அழுத்தமாகச் சொல்கிறது' என்று இந்த நூலுக்கு முன் வாசகர் குறிப்பு எழுதியிருக்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்.

திருமணத்தின் பின்னர் பல பெண்கள் எழுத்துலகினின்றும் காணாமல் போய்விடும் நிலையில், பத்மா சோமகாந்தன் கணவரின் துணையோடு அதிகம் எழுதியவர். இவரை நன்றாகப் புரிந்துகொண்ட துணைவர் கிடைத்தமையால், சுதந்திரமாக இவரால் இயங்க முடிந்தது. பெண் முன்னேற்றத்தில் பெருவிருப்பம் கொண்டு கடினமாக உழைத்த இவர், எப்போதும் உயர்ந்த கனவுகளில் மிதப்பவர். உள்ளூர நதியலையாய் ஊற்றெடுக்கும் புனிதமான எண்ணங்களால் அனைவரையும் ஈர்த்தவர். தாயைப் போல எல்லோரையும் நேசித்தவர். அந்த நேசம்தான் என்னை அவர்பால் அதிகம் ஈர்த்தது.

ஈழத்து மூத்த பெண் எழுத்து ஆளுமையான அவரை எனக்கு நன்கு பிடிக்கும். பத்திரிகைகளில் பிரசுரமாகும் அவரது ஆக்கங்களை விரும்பி வாசிப்பேன். அவரது முற்போக்குப் பெண்ணியச் சிந்தனைகளை நானும் நேசிப்பேன். என் ஊடகப் பயணத்தில், 2017ம் ஆண்டு நேர்காணல் மூலம் அறிமுகமானார் பத்மா சோமகாந்தன். அதுவும் தொலைபேசி மூலம். அந்த வருட பெண்கள் தினத்தினை முன்னிட்டு 'தாய்வீட்டுக்காக' அவரிடம் சிறப்பு நேர்காணல் ஒன்றினை பதிவு செய்தேன். அது முதல் எமக்குள் தாய் - சேய் உறவு போல ஒரு ஆத்மார்த்தமான உறவு மலர்ந்து, மனதை நிறைத்தது.

அடிக்கடி என்னுடன் தொலைபேசி வாயிலாக உறவினை வளர்த்துக்கொண்ட அவர், நேரில் என்னைப் பார்க்கப் பேராவலுற்றார். அதே ஆவல் எனக்குள்ளும்தான். அவர் கொழும்பிலும் நான் யாழ்ப்பாணத்திலும் இருந்தாலும், தொலைபேசி உரையாடலில் அருகிருந்து உரையாடுவது போன்றதோர் உணர்வு.

புத்தகங்கள் மீது அவரைப் போலவே எனக்கும் தீராக்காதல். எனக்காக நிறையப் புத்தகங்கள் எடுத்து வைத்துக் காத்திருந்த அந்த அன்னை, தொலைபேசி எடுக்கும் போதெல்லாம் 'எப்போது கொழும்புக்கு வாறிங்க' என்ற வார்த்தையே முதல் வார்த்தையாக உதிர்ப்பார். 'விரைவில் வருவேன்' என்று கூறுவேன் நானும். கொழும்புக்கு அலுவல்கள் நிமித்தம் சென்றாலும் அந்தப் புனித அன்னையைத் தரிசிக்கும் ஆவலையும் சுமந்து செல்வேன். முதுமையுற்ற போதும், இளமைத் துடிப்புடன் செயற்படும் அவரது திறனை எண்ணி வியந்து நிற்பேன்.

கல்வித் துறையிலும் முற்போக்குப் பெண்ணியச் சிந்தனையிலும் தன் காலத்தை அதிகளவு செலவிட்ட பத்மா சோமகாந்தன்- இலக்கியத் தளங்களில் முனைப்புடன் செயற்பட்டு எழுத்து, மேடைப்பேச்சு என வீச்சுடன் வாழ்ந்தவர். எழுத்துக்கள் வாயிலாகப் புரட்சிகள் செய்தவர். இவரது எழுத்துப் பணியைப் பாராட்டி - லில்லி தேவசிகாமணி பரிசு, சார்க் மகளிர் சங்கப் பரிசு, வடக்கு- கிழக்கு மாகாண அமைச்சின் சாஹித்திய பரிசு என்பனவும், ஆளுமையைக் கௌரவித்து - இலக்கியக் கலாவித்தகி, செஞ்சொற்செல்வி முதலான பட்டங்களும், தங்கம்மா அப்பாக்குட்டியின் சிவத்தமிழ் விருது என்பனவும் வழங்கப்பட்டன.

தொடர்புசாதனங்களுக்குள் தொலைந்து போவோர் வாழும் இன்றைய காலத்தில், அவற்றுக்கு அடிமையாகாது இறுதிவரை அமைதியாக எழுதிக்கொண்டிருந்தவர். நோயின் பிடிக்குள் அகப்பட்ட போதும், இலக்கிய மேடைகளில் பேசிக்கொண்டிருந்தவர். இவரைப் பற்றி எழுதிக்கொண்டே போகும் அளவுக்கு சாதனைப் பக்கங்களை நிறைத்து வைத்திருக்கிறார். உறவுகளுக்கு மட்டுமன்றி எழுத்துலகிற்கும் இவரது மரணம் பேரிழப்பு.

இலக்கியத் தோட்டத்தின் பூவொன்று உதிர்ந்தது. அலுப்பற்று எழுதிக்கொண்டிருந்த பேனாவொன்று ஓய்ந்தது. அன்னையின் பொன்னுயிர் அமைதியுறட்டும்! மரணமற்ற எழுத்துக்கள் இனி அவரை பேசட்டும்!



mallika@thaiveedu.com


Call Me First and Say "YES" to Get Your Dream Home at a Dream Rate!
For all your Mortgage needs
சகல Mortgage தேவைகளுக்கும்
தமிழில் உரையாட என்னை அழையுங்கள்
Peter Sober
Manager, Mobile Mortgage Specialist
Paragon Sales Award
Dir: 416-275-3571
Pager: 1-866-767-5446 | Fax: 905-240-3882
Email: peter.sober@td.com
Your Smile Is My Best Return!
Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch, Builder Purchase, Home Line Of Credit, Self Employed, New Immigrants, Multi Rental Properties.
2019 Platinum Sales Award "Top 70 in the country"
2018 Gold Sales Award "Top 100 in the country"
2017 Paragon Sales Award "top 35 in the country"
2016 Gold Sales Award
2015 Platinum Sales Award
2014 Gold Sales Award
TD
Banking can be this comfortable.
Five Branch Locations to serve you better
Scarborough, Markham, Ajax, Brampton & Mississauga


கலை வழியில் மனிதம் ஒளிர
கலாஷேத்ரா பாணியில்
பரதநாட்டிய வகுப்புகள்
அபிநயஷேத்ரா நுண்கலைக்கூடம் கனடா
Scarborough | Markham | Ajax | Bayview Village
Kids | Intermediate | Adult Classes
Stage Performances
Dance Workshops
Credit Courses
Grade Exams
Call for a FREE trial class
(416) 930 4750
திருமதி. கார்த்திகா பார்த்திபன் M.F.A
Alumni of Kalakshetra, India
Abhinayakshetra Canada

# அறிவார்ந்தோர் ஏன் சர்வாதிகாரிகளை ஆதரிக்கிறார்கள்?

- பில் கெலர் -
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

உருண்டை நச்சொட்டி (corona virus) எமது சமூக ஒழுங் கமைப்பில் கூர்பார்க்கத் துவங்க முன்னரே எதேச்சாதிகாரம் என்னும் வேறோர் உலகளாவிய கொள்ளைநோய் உலகத் தைப் பீடித்துவிட்டது. கடந்த பத்தாண்டு களுக்கு மேலாக அமெரிக்கா உட்பட குடி யாட்சி நாடுகளில் அது தொற்றி வந்துள்ளது.

அதற்கு முதன்முதல் பதில்வினை ஆற்றி யோருள் சில எழுத்தாளர்கள் அடங்கியி ருக்கிறார்கள். எதேச்சாதிகாரத்தின் கீழ் நெரிபடும் குடியாட்சி எவ்வளவு காலம் தாக் குப்பிடிக்கும் என்று சில எழுத்தாளர்கள் வினவியுள்ளார்கள். உலகம் நரகக்குழியி னுள் விழப்போவதாக அவர்கள் கதை புனைந் துள்ளார்கள். உலகம் ஊழியிறுதியை எட்டி விட்டதாக வேறு எழுத்தாளர்கள் ஆய்விட் டுக் கூறியிருக்கிறார்கள்.

பெஞ்சமின் (Benjamin Carter Hett) ஜேர் மானியக் குடியரசை (1919-1933) மீளாய் வுசெய்து வெளியிட்ட 'குடியாட்சியின் மாள்வு' (The Death of Democracy) என்ற நூலில், அரசியற் கட்சிகளின் விட்டுக்கொடாமை யால் ஹிட்லர் எழுச்சி அடைந்த விதம் ஆராயப்பட்டுள்ளது. காலத்துக்கேற்ற ஓர் எச்சரிக்கையை விடுக்கும் பாடமாக இதைக் கொள்ளவேண்டும் என்ற அவர் உள்ளக் கிடக்கை இங்கு தெளிவாகத் தெரிகிறது.

ஹார்வார்ட் பல்கலைக்கழக அரசியல் அறி வியலாளர்களாகிய லெவிற்ஸ்கி (Steven Levitsky), சிப்லட் (Daniel Ziblatt) இரு வரும் 'குடியாட்சிகள் மாளும் விதம்' (The Death of Democracy) என்றொரு நூலை எழுதியிருக்கிறார்கள். அண்மையில் தோல் வியடைந்த குடியாட்சி நாடுகளின் பட்டியல் ஒன்றை அவர்கள் முன்வைத்துள்ளார்கள். எதேச்சாதிகாரிகளாக மாறக்கூடியோரின் அறிகுறிகளைச் சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

திரம்பை (Donald Trump) பொறுத்தவரை இந்த எச்சரிக்கை எல்லா விதங்களிலும் பொருந்தும். மசா (Masha Gessen) என்னும் ஊடகர் 'எதேச்சாதிகாரத்திலிருந்து தப்பிப் பிழைத்தல்' (Surviving Autocracy) என்ற நூலை எழுதியுள்ளார். பூட்டின் (Vladimir Putin) மீது தீட்டிய தனது கத்தியைக் கொண்டு திரம்பின் வாதத்தை கீறிப்பிளந்து ஆய்விட்டு, அதைக் குணப்படுத்துவதற்கு ஒரு தேர்தலை விடவும் அதிகம் தேவைப் படும் என்ற முடிவுக்கு அவர் வந்துள்ளார்.

ஆன் அப்பிள்போம் (Anne Applebaum) எழுதிய 'மங்கிமறையும் குடியாட்சி: எதேச் சாதிகாரத்தின் வசியம்' (Twilight of Dem ocracy: The Seductive Lure of Authorita rianism) என்ற நூல் மேற்படி விவாதத்துக்கு துணைநிற்கிறது. 'எதேச்சாதிகாரத்தின் வசியம்' என்பது எதேச்சாதிகாரியாய் ஓங்க விழை வோரையும், அவர்களுக்கு அமைந்தொ ழுகும் கும்பல்களையும் விட, கொடுங்கோ லர்களை மேலோங்க வைக்கும் ஆட்சிய திகாரிகளையே பெரிதும் கருத்தில் கொண் டுள்ளது. கொடுங்கோலரின் படிமத்தை மக்களிடம் கொண்டுசேர்க்கவல்ல எழுத் தாளர், அறிவார்ந்தோர், சிற்றேட்டாளர், வலைப்பூவலர், சரடு திரிப்போர், தொலைக் காட்சி நிகழ்ச்சியாளர், இணையத் துணுக் கர் ஆகியோரையே அது பெரிதும் கருத் தில் கொண்டுள்ளது.

மேற்படி இயலாளர்கள் மெய்யான விசுவா சிகளா, வெறும் நயவஞ்சக சந்தர்ப்பவா திகளா? தாங்கள் கூறும் பொய்களையும், கண்டுபிடிக்கும் சதிகளையும் அவர்கள் நம்பு கிறார்களா? அல்லது செல்வமும் அதிகா ரமும் ஈட்டப் பேராசை கொண்டவர்களா? இருமுனைப்போர் நிகழும் இவ்வுலகில் இவ்வினாக்களுக்கு அப்பிள்போம் விடைய ளிக்க முயன்றமை பாராட்டத்தக்கது. எனி னும் அவர் தெட்டத்தெளிவான விடைகளை முன்வைக்காமை வாசகரின் உள்ளத்தை



சற்று உலைய வைக்கிறது.

அமெரிக்க ஊடகர் அப்பிள்போம் பெரிதும் போலாந்தில் வசிப்பவர். வல்லரசுப் பகைமை, ஸ்டாலின் காலத்து வதை முகாம்கள், உக்கிரேனில் உண்டாக்கப்பட்ட பஞ்சம் பற்றி எல்லாம் வியக்கத்தக்க முறையில் ஆராய்ந்து, வரலாற்று நூல்களை எழுதி, வாசகர்களை ஈர்த்து, பாராட்டுகளும் புலிற்சர் பரிசும் பெற்றவர். 'குடியாட்சியின் மாள்வு' என்பது அவர் எழுதிய ஒரு சிறிய நூல். ஏற்கெனவே ஒரு சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரையின் விரிவாக்கம். பாதி சிந்தனை, பாதி நினைவுத்திரட்டு.

அக்கட்டுரை போலவே இந்நூலும் ஒரு விருந்துடன் துவங்குகிறது. அது 1999 புத் தாண்டு பிறக்குந் தறுவாயில் அவரும், (வலதுசாரி அரசில் பிரதி வெளியுறவு அமைச்சராய் விளங்கிய) அவரது கணவ ரும் தமது போலாந்து நாட்டுப்புற இல்லத் தில் வைத்து அளித்த விருந்து. விருந்தா ளிகள் வெவ்வேறு நாட்டவர்கள், வெவ்வேறு அரசியல் நிலைப்பாடு கொண்டவர்கள், வல்லரசுப் பகைமையில் பொதுவுடைமை வாதத்தை வெற்றிகொண்ட பெருமிதத்துடன் ஒருங்கிணைந்த தரப்புகள் குடியாட்சி, குடி யாட்சிக் கட்டுப்பாடுகள் - மட்டுப்பாடுகள், சட்ட ஆட்சி, தற்கால ஐரோப்பாவுடன் ஒருங் கிணைந்த போலாந்து; என்பவற்றில் ஒரு சேர நம்பிக்கை கொண்டவர்கள்.

'இப்பொழுது, ஏறத்தாழ இருபது ஆண்டு கள் கழிந்த பிறகு, எனது புத்தாண்டு விருந் தில் கலந்துகொண்டோருள் சிலரைக் கண் டால், அவர்கள் கண்ணில் படாமல் நான் தெருவைக் கடந்து நழுவிச் சென்றுவிடு வேன். அவர்களும் எனது வீட்டுக்குள் நுழைய மறுப்பார்கள். எப்போதாவது அங்கு வந் ததை ஒப்புக்கொள்ளவும் அவர்கள் சங்க டப்படுவார்கள்' என்று அப்பிள்போம் எழு துகிறார்.

அவரது பழைய நண்பர்கள், வகுப்புத் தோழர்கள், கூட்டாளிகள் பலரும் குடியாட் சியில் நம்பிக்கை இழந்துள்ளார்கள். வலது சாரி தேசிய அரசுகளாலும், இயக்கங்களா லும் அவர்கள் ஈர்க்கப்பட்டுள்ளார்கள். அவர் களை 'குரவர்கள்' என்று அவர் குறிப்பிடு கிறார். இது ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் யூலியன் பெந்தா (Julien Benda) என்ற பிரஞ்சு மெய்யியலாளரிடம் இவர் இரவல் பெற்ற சொல். எழுதுநரும் (clerks), குரு மாரும் (clerics) இரண்டறக் கலந்த தரப் பினரை - அலுவலர்களும் பரப்புரையாள ரும் இரண்டறக் கலந்த தரப்பினரை - அவர் வஞ்சப்புகழ்ச்சியாக குரவர்கள் (clercs) என்று குறிப்பிட்டிருந்தார்.

எதேச்சாதிகாரிகள் ஆட்சியதிகாரம் ஈட்டு வதற்கு வழமையாக முன்வைக்கப்படும் காரணங்கள் - பொருளாதார நெருக்கடி, பயங்கரவாதம் பற்றிய அச்சம், குடிவரவா ளரால் விளையும் நெருக்குதல்கள் - முக் கியமானவையே என்பதை அப்பிள்போம் ஒப்புக்கொள்கிறார். அதேவேளை எதேச்சா திகாரிகளை குரவர்கள் ஆதரிப்பதற்கு அவை மாத்திரம் காரணங்கள் ஆகா என்கிறார்.

2015ல் போலாந்து வளம்கொழித்த நாடாக இருந்தது. அங்கு குடிவரவாளர்கள் வந்து குவியவில்லை. பயங்கரவாத ஆபத்தை அந்த நாடு எதிர்நோக்கவில்லை. எனினும், வலதுசாரி தேசியவாத சட்டம் - நீதிக் கட்சி அங்கு ஆட்சியதிகாரத்தை ஈட்டிக்கொண்டது!

'உலகம் முழுவதும் வேறு ஏதோ ஒன்று தற் பொழுது நிகழ்ந்து வருகிறது. வெவ்வேறு குடியாட்சி நாடுகள், வெவ்வேறு பொரு ளாதார அமைப்புகள், வெவ்வேறு மக்கள் குழுமங்கள் மீது வேறு ஏதோ ஒன்று தற் பொழுது தாக்கம் நிகழ்த்தி வருகிறது' என்று எழுதுகிறார் அப்பிள்போம்.

1980-களில் மாற்றுக்கருத்துடன் கூடிய போலாந்து நாட்டு தோழமை (Solidarity) தொழிற்சங்கத்துடன் அணிவகுத்துச் சென்ற சகோதரர்களாகிய ஜேசெக், ஜாரோசிலா இருவரையும் அவர் அறிமுகப்படுத்துகிறார். சோவியத் பேரரசு குலைந்த பிறகு ஜாரோ சிலா தனது தாராண்மைவாத நம்பிக்கையை முன்னெடுக்கும் வண்ணம் பெரியதோர் எதிர்த்தரப்புச் செய்தித்தாளை பதிப்பித்து வருகிறார். ஜேசெக் சட்டம் - நீதிக் கட்சியில் இணைந்து போலந்து அரச தொலைக் காட்சி சேவையின் பணிப்பாளராகவும், ஒரு

தொடர்தல் 37ம் பக்கம்

இணையத்தில் ஒரு நூல் உலகம்
நூலகம்
www.noolaham.org

# அறிவார்ந்தோர் ஏன்...

36ம் பக்கத் தொடர்ச்சி...

கட்சி ஆட்சி அமைய வேண்டும் என்று வாதிக்கும் தரப்பின் தலையாய கருத்தியலாளராகவும் மாறியுள்ளார். பொதுவுடைமை வாதத்தை எதிர்த்து நின்ற தனக்கு தகுந்த கைமாறு செய்யப்படவில்லை என்று ஜேசெக் எண்ணியிருந்ததை அப்பிள்போம் சுட்டிக்காட்டுகிறார் இவ்வாறு கைமாறு பெறுவதற்கு உரித்துக்கோருவதில் ஒரு நச்சுத்தனம் பொதிந்திருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

‘விசனம் பொறாமை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆட்சிமுறை அநியாயம் புரிகிறது - நாட்டுக்கு மட்டுமல்ல, எனக்கும் அநியாயம் புரிகிறது என்ற எண்ணம்;’ இவையே போலாந்து தேசிய வலதுசாரித்துவக் கருத்தியல்களில் ஓங்கிய முக்கிய உணர்வுகள். ஆதலால் அவர்களது சொந்த நோக்கங்களையும், அரசியல் நோக்கங்களையும் பிரித்துப் பார்ப்பது எளிதல்ல.

குரவர்கள் பலரும் தன்னுடன் கதைக்க மறுத்ததை அப்பிள்போம் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆதலால் ஏற்கெனவே வெளியிடப்பட்ட தரவுகளையும், நேரடி அறிமுகங்கள் மூலம் தேர்ந்து தெளிந்த சங்கதிகளையும் வைத்தே தனது நூலை அவர் எழுதியுள்ளார். அதேவேளை தனக்கு கிடைத்த தரவுகளை அவர் செவ்வனே பயன்படுத்தியுள்ளார். சோவியத் வலயத்துள் வாழ்ந்து, தப்பிய அறிவார்ந்தவர்களை அவர் உறுதிபடக் கணிப்பிட்டுள்ளார். போலாந்து, அங்கேரி, பிரித்தானியா, திரம்பின் அமெரிக்கா, இஸ்பெயின், கிரேக்கம் ஆகிய நாடுகளில் வீழ்ச்சியடைந்த அறிவார்ந்தவர்களை அவர் தேடி அலைந்திருக்கிறார்.

அறிவார்ந்தவர்களுக்கு ஏற்பட்ட அதிருப்திகளை அவர் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டுகிறார்: அமெரிக்க - சோவியத் வல்லரசுப் பகைமையில் பொதிந்திருந்த அறநோக்கத்துக்கு மீளும் வேட்கை திறமைசாலிகள் ஆதிக்கம் செலுத்துவதால் இவர்கள் அடைந்த ஏமாற்றம் (பெரிதும் அங்கேரிய - அமெரிக்க யூத கோடாதிபதி ஜோர்ஜ் சொரோஸ் சம்பந்தப்பட்ட) சதிக்கோட்பாடுகள் மீது கொண்ட ஈர்ப்பு... என்பவற்றை எல்லாம் அவர் எடுத்துக் காட்டுகிறார்.

தற்காலத்தில் இடக்குமுடக்கான முறையில் நிகழ்த்தப்படும் வாதங்களையும், இணையத்தின் சாதக பாதகங்களையும் அவர் எடுத்துக் காட்டுகிறார். ஒரு வாதத்தை சேர்ந்து பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினை இணையம் எமக்கு அளிக்க மறுத்துள்ளதாகவும் அவர் தெரிவிக்கிறார். சதிக்கோட்பாடுகளைச் சல்லடையிட்டு, உணர்ச்சிவசப்படும் தரப்புகளைக் கட்டுப்படுத்துவதில் பொறுப்புணர்ச்சியுடன் ஈடுபட்டுவந்த சிறப்புவாய்ந்த ஊடகங்களை இணையம் விஞ்சிவிட்டதாகவும் அவர் தெரிவிக்கிறார். இது ஏற்கெனவே முன்வைக்கப்பட்ட முறைப்பாடுதான் எனினும் இதில் பொதிந்துள்ள உண்மையைக் குறைத்து மதிப்பிட முடியாது.

‘இருமுனைப்படும் போக்கு மேலோங்கவே அரச பணியாளர்களை தமது எதிராளிகள் ‘கைப்பற்றிவிட்டார்கள்’ என்னும் வாதம் தவறாது முன்வைக்கப்படுகிறது. சட்டம் - நீதிக் கட்சி போலாந்திலும், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று வாதாடுவோர் பிரித்தானியாவிலும், திரம்பு தலைமையிலான அரசு அமெரிக்காவிலும் தத்தம் அரச அதிகாரிகளையும், சூழ்வியல் துறைஞர்களையும் அவ்வாறு சாடுவது ஒன்றும் தற்செயலாக நிகழும் சங்கதி அல்ல.

அமெரிக்காவில் தீவிர மக்களீர்வாத இயக்கங்கள் என்றென்றும் நிலைபெற்று வந்துள்ளன. கே.கே.கே. எனப்படும் வலதுசார்பு வெள்ளையின மேலாதிக்க இயக்கமும், டபிள்யு.யூ.ஓ. எனப்படும் இடதுசார்பு இயக்கமும் அதற்கு எடுத்துக்காட்டுகள். தீவிர மக்களீர்வாதம் அமெரிக்க குடியரசுக் கட்சியில்தற் பொழுது மறுபிறவி எடுத்திருப்பது குறித்து அப்பிள்போம் வியப்புத் தெரிவித்துள்ளார்.

‘ரேகனின் கட்சி, திரம்பின் கட்சியாக மாறுவதற்கு, குடியரசுக் கட்சியினர் அமெரிக்க இலட்சியத்தைக் கைவிட்டு, அதற்குப் பதிலாக விரக்தியுடன் கூடிய சொற்சிலம்பத்தைக் கைக்கொள்வதற்கு, அக்கட்சியின் வாக்காளர்களிடையே மட்டுமல்ல, அதன் குரவர்களிடையேயும் ஒரு முற்றுமுழுதான மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்’ என்கிறார் அப்பிள்போம். 2008ல் திரம்பின் அச்சு மூலமாகிய சேரா பலின் (Sarah Palin) வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து குடியரசுக் கட்சியிலிருந்து அப்பிள்போம் விலகியதை இங்கு குறிப்பிடல் தகும்.

புச்சானன் (Pat Buchanan), பிராங்லின், (Franklin Graham), ஸ்டீவ் (Steve Bannon) லோரா (Laura Ingraham) ஆகியோரை அப்பிள்போம் தலையாய அமெரிக்க குரவர்களாக இனங்காட்டியுள்ளார். அவர்கள் இவருடன் கதைக்கவில்லை. ஆனால் அவர்களது உரைகளும் எழுத்துகளும் பெருவாரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அமெரிக்கா நிலைகெட்டு அழியப்போகிறது என்னும் துன்னம்பிக்கை உணர்வு குடிகொள்வதற்கு ஏதுவாய் ரேகன் காலத்து நன்னம்பிக்கை உணர்வு இடங்கொடுத்து அகன்ற விதம் குறித்து அப்பிள்போம் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

‘தாய்நாட்டை வெறுக்கும்படி பல்கலைக் கழகங்கள் மக்களுக்குப் போதிக்கின்றன. வீரர்களைவிட பாதிக்கப்பட்டோர் பெரிதும் கொண்டாடப்படுகிறார்கள். பழம்பெரும் விழுமியங்கள் உதறித்தள்ளப்பட்டுள்ளன. மெய்யான அமெரிக்காவை, பழைய அமெரிக்காவை மீட்பதற்கு என்ன விலையும் செலுத்தப்பட வேண்டும், எந்தக் குற்றமும் மன்னிக்கப்பட வேண்டும், எந்த வன்மமும் புறக்கணிக்கப்பட வேண்டும்’ என்னும் நிலைப்பாடு ஓங்கியுள்ளது.

கெட்டித்தனமும் திடசித்தமும் கொண்ட இங்கிராம் (Ingraham) போன்ற ஒருவர் திரம்பின் கைக்கூலியாக மாறிய விதத்தை விளக்குவதற்கு அப்பிள்போம் பல பக்கங்களை ஒதுக்கியுள்ளார். அதற்கு காரணம் பதவி ஆசையா? பாதி வாழ்வில் கத்தோலிக்க சமயத்தை பற்றுறுதியுடன் தழுவிக்கொண்டமையா? அல்லது தனது சொந்த ஐயுறவுகளை அமுக்கி முழக்கமிடவா? ‘சொந்த அவாவையும், அரசியல் அவாவையும் பிரித்துப் பார்ப்பது பேதைமை’ என்பதை திரும்பவும் அப்பிள்போம் ஒப்புக்கொள்கிறார்.

தமது பிள்ளைகளின் தலைமுறைக்கு நம்பிக்கையூட்டும் கணிப்புடன் ‘குடியாட்சியின் மாள்வு’ என்ற தமது நூலுக்கு அவர் முடிவுரை எழுத எண்ணியிருந்தமை தெரிகிறது. ஆனால் உருண்டை நச்சொட்டி இடையில் வந்து குறுக்கிட்டுவிட்டது. ஆனபடியால் எங்கள் எல்லோரையும் போலவே அவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. மக்களீர்வாத தலைவர்கள் இந்த நச்சொட்டியை சிக்கெனப் பற்றிக்கொண்டு, தமது அவசரகால ஆட்சியதிகாரங்களுக்கு நியாயம் கற்பிக்கும் விதத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

‘நோய் மீதான அச்சம் சுதந்திரத்தின் மீது அச்சத்தை தோற்றுவிக்கக் கூடும். அல்லது உருண்டை நச்சொட்டி புதியதோர் உலகளாவிய தோழமையை ஊக்குவிக்கக் கூடும்; இரண்டுக்கும் எதிர்காலத்தில் வாய்ப்புண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. உள்ளத்தை அது உலைய வைக்கிறது’ என்று கூறி விடைபெறுகிறார் அப்பிள்போம்.

***நன்றி:***

*Bill Keller, Why Intellectuals Support Dictators, The New York Times (2020-07-19).*

■ ■ ■

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

**Delta Academy Inc.**

## Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| Grade 10 | |
|---|---|
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAF3M |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCV4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

ART COURSES

| Grade 10 | |
|---|---|
| Tamil | LITBD1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Tamil | LITCU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Tamil | LITDU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

**Classes begins on**
**February, July, September**
**Register with us early as the space is limited.**
**All courses are 110 hours.**
**Course fee is $500 (Including registration )**

**KINDERGARTEN TO GRADE 12**
**TUTORING & HOMEWORK HELP**

Special Classes For:

- Functions
- Physics
- Advanced Function
- English
- Chemistry
- Calculus & Vectors

Evening and weekend classes available
Qualified and experienced teachers to help your children to do better

**416.751.2011**
**deltaacademyinc@hotmail.com**
**1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8**



# மாற்று வடிவங்களைத் தேடும் கல்வி

- பொன்னையா விவேகானந்தன் -

உலக வரலாற்றில் நடைபெற்ற பல நிகழ்வுகள் உலகின் இயல்பான இயங்கு நிலையை மாற்றியமைத்து விடுகின்றன. கடந்த நூறு ஆண்டுகளில் உலகத்தின் போக்கை மாற்றியமைத்ததில் உலக மகாயுத்தங்களுக்குப் பெரும்பங்கு உண்டு. பேரழிவையும் பெரு மாற்றங்களையும் ஏற்படுத்திய இந்த போர்களுக்குப் பின்னர் ஆயுதங்கள் ஏதுமின்றி உலக நடத்தைகளைப் புரட்டிப்போட்டிருக்கின்றது கோவிட் 19 என்ற பேரழிவுத் தொற்று நோய்.

கோவிட் 19 ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகளில் முதன்மையாகக் கருதப்படுவது உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி. பொருளாதாரத்தில் கடும் வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் நாடுகள் அதை ஈடுகட்டப் போராடி வருகின்றன.

பொருளாதாரத்தைத் தொடர்ந்து கோவிட் 19 தொற்றால் பெருமாற்றங்களுக்கு உட்பட்டிருக்கும் துறை உலகளாவிய கல்வித்துறையே. கோவிட் தொற்றுக்கு முன் - தொற்றுக்குப் பின் என்ற இரு மாறுபட்ட கல்வித்தளங்களை இத்தொற்றுநோய் உருவாக்கியிருக்கின்றது. இதன் வழியே கல்வித்துறையில் ஏற்படப் போகும் மாற்றங்களையும் தாய்மொழிக் கல்வி தொடர்பில் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் எவ்வாறான மாற்றங்களுக்கு உட்பட வேண்டும் என்பதையும் இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

கடந்த நான்கு மாத காலத்தில் 186 நாடுகளைச் சேர்ந்த 1.38 பில்லியன் மாணவர்கள் கல்வியை இழந்திருக்கின்றார்கள் அல்லது கற்றல் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என Statista என்ற கருத்துக் கணிப்பு நிறுவனம் தெரிவித்திருக்கின்றது.

கல்வித்துறை மட்டுமல்ல, அனைத்துத்துறைகளுமே காலத்துக்கும் தேவைகளுக்கும் ஏற்ப மாற்றங்களை உள்வாங்கியே வளர்ந்திருக்கின்றன. போதிய கால இடைவெளிகளுக்கும் பயிற்சிகளுக்கும் பின்னரே மாற்றங்கள் உள்வாங்கப்படுவது வழமை.

ஆனால், கோவிட் 19 அனைவரையும் ஒரு சடுதியான மாற்றத்துக்குள் தள்ளிவிட்டிருக்கின்றது. இதில் அதிகம் பாதிக்கப்பட்ட துறையாகக் கல்வித்துறையைக் கருதலாம். எவ்வகையான முன்னேற்பாடுகளும் போதிய பயிற்சிகளுமற்ற நிலையில் புதிய மாற்றங்களை உள்வாங்க வேண்டிய நிலைக்கு உலகளாவிய கல்வித்துறையினர் சடுதியாகத் தள்ளப்பட்டனர். பொருளாதார மேம்பாட்டிலும் கணினித் தொழில்நுட்பத்திலும் வளர்ச்சி பெற்ற நாடுகள் உடனடியாகவே மெய்நிகர்க் கல்வி (virtual learning), இணையவழிக் கல்வி (remote learning) என்பவற்றை அறிமுகப்படுத்தி கற்றல் செயற்பாடுகளைத் தொடரச் செய்தன. இக்கற்றல் முறைக்கு அடிப்படைத் தேவையாக இருந்தவை கணினி, இணையவலைத் தொடர்பு (internet). இவை இரண்டுமே இல்லாத வீடுகள் இந்நாடுகளில் கணிசமாக இருந்தன. ரொறன்ரோ கல்விச் சபை கணினி வசதியற்ற ஏறக்குறைய 25,000 மாணவர்களுக்கு கணினிகளை வழங்கியிருந்தது. இணையவலைத் தொடர்பு அற்ற அல்லது வலுக்குறைந்த வலைத் தொடர்பு கொண்டிருந்தவர்களுக்கு கனடாவில் Rogers, Bell போன்ற தொடர்பாடல் துறை நிறுவனங்கள் துரித மற்றும் கட்டணம் குறைந்த சேவைகளை வழங்கின.

கணினி வசதிகள் இருந்த வீடுகளில் கற்றல் தொடர்பில் அவற்றைப் பயன்படுத்தத் தெரியாத பெற்றோர் பல்லாயிரம் பேர் இருந்தனர். கணினி நுட்பங்களைப் பயன்படுத்தி மாணவருக்குக் கற்பிக்க முடியாத நிலையில் பல ஆசிரியர்களும் இருந்தனர்.

மேம்பட்ட நாடுகளிலேயே நிலைமை இதுவெனில் ஏனைய நாடுகளின் நிலைமைகளைக் கூறத் தேவையில்லை.

ஆனால், பெரும்பாலான நாடுகள் தவிர்த்துச் செல்ல முடியாத காலச் சூழ்நிலைகளையும் எதிர்கால தலைமுறையின் கல்வி மேம்பாட்டையும் கருத்திற் கொண்டு கல்விச் செயற்பாடு தொடர்பான புதிய நுட்பங்களை உள்வாங்கத் தலைப்பட்டுவிட்டன.

மேம்பாடடைந்த நாடுகள் பல கோவிட் 19 தாக்கத்துக்கு முன்பாகவே கணினியோடிணைந்த கல்விச் சேவைகளைப் பல நிலைகளில் ஆரம்பித்திருந்தன. சுவிற்சர்லாந்து, நோர்வே, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் 93 சதவீத மாணவர்கள் கற்றல் தொடர்பில் கணினியைப் பயன்படுத்தி வருகின்றனர் என Organization for Economic Co-operation Development (OECD) என்ற நிறுவனம் தெரிவித்திருக்கின்றது.

எதிர்வரும் காலங்களில் கல்வியைப் பெரிதும் கணினி மயப்படுத்தும் திட்டங்களையும் பல நாடுகள் கொண்டிருந்தன. எனினும் கல்வி தொடர்பிலான கணினிப் பயன்பாடு, கடந்தகாலங்களில் தொடக்கநிலைப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளுக்கே பயன்படுத்தப்பட்டன. எடுத்துக்காட்டாக வீட்டு வேலைகளை உரிய நேரத்துக்கு Google classroom வழியாக அனுப்பி வைத்தலைக் குறிப்பிடலாம்.

வகுப்பறைக் கல்வியானது நாட்டின் பொருளாதாரத்துடன் தொடர்புபட்ட தவிர்த்து விட்டுச் செல்ல முடியாத நிறுவனமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பாகும். வகுப்பறைக் கல்வியை வழங்கும் நிறுவனங்கள் பிள்ளைகளைப் பராமரிக்கும் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே நாடுகளின் பொருளாதார உற்பத்திக் கட்டமைப்பும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

கோவிட் 19 பெரிதும் குறைவடையாத காலங்களில் டென்மார்க், நோர்வே, பிரான்ஸ் போன்ற நாடுகளும் கனடாவில் கியூபெக் மாகாணமும் அவசர அவசரமாகப் பள்ளிகளைத் திறந்தமைக்குக் காரணம் பெற்றோரை வேலைகளுக்கு அனுப்பி, நாட்டின் பொருளாதாரத்தைப் பேணுவதே. எனினும் அனைத்து மாணவர்களும் பள்ளிகளுக்குத் திரும்பியிருக்கவில்லை.

ஆனாலும், கணிசமான நாடுகள் சில கட்டுப்பாடுகளுடன் வழமையான வகுப்பறைச் சூழலுக்குச் செல்லவே எத்தனிக்கின்றன. இதற்குப் பொருளாதார நெருக்கடியின் வற்புறுத்தல்களும் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. வெளியாகிக் கொண்டிருக்கும் புள்ளிவிபரங்கள் கூறும் தகவல்களின் அடிப்படையில் மாணவர்கள் வகுப்பறைக்குத் திரும்ப வேண்டும் என 44 சதவீத பெற்றோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். மருத்துவப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை பிள்ளைகள் வகுப்பறைகளுக்கு அனுப்ப மாட்டோம் என 12 சதவீதப் பெற்றோர் தெரிவித்திருக்கின்றனர். 34சதவீதப் பெற்றோர் கருத்துகளை உடனடியாகத் தெரிவிக்கவில்லை. இக்கருத்துக் கணிப்பு Nanos Research என்ற அமைப்பால் ஒன்ராறியோ பெற்றோரை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வேளை அதிர்ச்சியளிக்கக்கூடிய மற்றுமொரு தகவலையும் பகிர்ந்தாக வேண்டும். மாணவர்கள் பள்ளிகளுக்குத் திரும்புவது ஒருபுறம் இருக்க, ஆசிரியர்களும் பள்ளிப் பணியாளர்களும் மீண்டும் பணிக்குத் திரும்ப ஒப்புக்கொண்டுள்ளார்களா? என்பது மிக முதன்மையான வினா.

ஒன்ராறியோவில் ஒரு கல்விச்சபையில் 40 வீதத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ளிட்ட பள்ளிப் பணியாளர்கள் எதிர்வரும் செம்ரெம்பரில் பணிகளுக்குத் திரும்புவதற்கு மறுத்துள்ளார்கள் என்பதே அந்த அதிர்ச்சியான செய்தி. வகுப்பறைச் செயற்பாடுகளை மீளத் தொடங்க வேண்டுமானால் இதுவொரு சிறிய சவாலாக இருக்கப் போவதில்லை.

உயர்நிலைப் பள்ளிகளும் பல்கலைக்கழகங்களும் இணையவழிக் கல்வி முறைமைகளைத் தொடர்வதில் பெரும் சவால்கள் தோன்ற வாய்ப்பில்லை. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாகவே கணினி வழிக் கல்வியுடன் இவை இணைக்கப்பட்டுவிட்டிருந்தன. ஆனால் ஆரம்பநிலைக் கல்வி வகுப்பறைச் சூழலுக்குள்ளேயே வடிவமைக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தொடர்பில் இத்தரப்பினரே அதிக சவால்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஒன்ராறியோ அரசு மருத்துவக் கட்டுப்பாடுகளுடன் கூடிய - 15 மாணவர்களை மட்டுமே கொண்ட வகுப்புகளை செப்ரெம்பரில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டு வருகின்றது. இதனால் ஏற்படும் ஆசிரியர் பற்றாக்குறை, போதிய இடவசதி, மேலதிகத் துப்பரவுப் பணிகளை மேற்கொள்வதற்கென ஆண்

தொடர்தல் 39ம் பக்கம்

# மாற்று வடிவங்களை...

38ம் பக்கத் தொடர்ச்சி...

டொன்றுக்கு 249 மில்லியன் டொலர் மேலதிகமாகச் செலவாகும் என ஒன்றாரியோ கல்விச் சபை தெரிவித்துள்ளது. இப்போதுள்ள அரசு இச்செலவுக்கு ஒப்புக்கொள்ளாது என்பதே என் கருத்து.

இந்தப் புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது வகுப்பறைகளுக்கு மாணவரை அனுப்புவது குறித்த தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு இன்னும் காத்திருக்க வேண்டும் என்றே தோன்றுகின்றது.

கோவிட் 19 தொற்றுநோய்க்கான வெற்றிகரமான தடுப்பு மருந்து எளிதாகக் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை தோன்றாதவிடத்து வகுப்பறைக் கல்வி முழுமையாக மீளத் திரும்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதே உண்மை.

எனினும் மெய்நிகர் மற்றும் இணையவழி கல்வி முறைமைகளை மேம்படுத்துவது குறித்தும் அவற்றைப் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்புகளையும் பயிற்சிகளையும் அதிகரிப்பது குறித்தும் கல்விசார் அமைப்புகள் அதிகமாவே சிந்திக்கத் தொடங்கியுள்ளன. பல நாடுகள் இவ்வகைக் கல்வி முறைமைகளை மேம்படுத்துவதற்காக கணிசமான நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய ஆரம்பித்துள்ளன.

ஒன்ராறியோ கல்வி அமைச்சர், கற்றல் மேம்பாட்டுக்காக ஒன்ராறியோவின் வலைத் தொடர்பு அலைவரிசையின் வலுவை அதிகரிக்க வேண்டுமென மத்திய அரசைக் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் காலச்சூழல் கல்வித்துறையைப் புரட்டிப் போட்டிருக்கின்றது. மாணவரின் நலன் கருதி பெற்றோர்களும் அரசுகளும் மாணவர் நலன் சார்ந்த முடிவுகளை ஏற்றுக்கொள்ள வற்புறுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் பகுதிநேரமாவது இணையவழிக் கல்வியோடு இணைந்திருக்க வேண்டும் என்று வலுக்கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

பள்ளிகளின் நிலை இவ்வாறிருக்க, தனியார் கல்வி நிறுவனங்கள், மற்றும் வீடுகளில் நடத்தப்படும் (கலை வகுப்புகள் உட்பட) தனித்துவ வகுப்புகள் என்பன இப்போது நடைமுறையில் உள்ள மருத்துவ விதிகளுக்கு மதிப்பளிக்கும் நிலையில் நடத்தப்பட முடியாத நிலையே தோன்றியுள்ளது. இவ்வாறான தனியார் கல்வி நிறுவனங்களும் மெய்நிகர், இணையவழிக் கல்வியோடு இணைய வேண்டிய வற்புறுத்தலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

உலகநாடுகளில் சில இணையவழிக் கல்வித் துறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இந்தியாவைத் தளமாகக் கொண்ட BYJU'S என்ற நிறுவனம் கோவிட் 19 காலத்தில் கட்டணமற்ற இலவச வகுப்புகளை அறிவித்து, இணையக் கல்வி தொடர்பில் பெரும் செல்வாக்குப் பெற்று நிற்கின்றது. சீனா, கால் பில்லியனுக்கு மேற்பட்ட மாணவர்களை இணைத்து மிகப் பெரிய இணைய வகுப்புகளை (Tencent online classroom) நடத்தத் தொடங்கிவிட்டது. தென்கொரிய பெரும்பாலான பள்ளிகளில் இணைய வகுப்புகளை முதன்மைப்படுத்திவிட்டது. கோவிட் 19 தொற்றை வெற்றி கொண்ட நாடுகள், வெற்றி கொள்ளாத நாடுகள் என்ற கணிப்புகளுக்கு அப்பால், அனைத்து நாடுகளுமே மாணவர் கல்வியில் அதிக அக்கறை கொள்ள வேண்டிய காலம் இது. வேறு சில பின்தங்கிய நாடுகளில் சில மாதங்களாகவே மாணவர் கல்வியை முற்றிலுமாக இழந்து நிற்கின்றனர்.

மாற்றங்கள் தவிர்க்கமுடியாத நிலையில் எல்லோரையும் தகவல் தொழில்நுட்பங்களை நோக்கி நகர்த்தியிருக்கின்றன. புதிய வழிமுறைகளை ஏற்றுச் செல்வதை விட வேறு தெரிவுகள் யாருக்கும் இல்லை.

இணையவழிக் கல்வி முறைமைகள் ஏற்படுத்தும் சவால்களையும் விளைவுகளையும் சற்றே நோக்குவோம்:

- மாணவர் நட்புகளுடன் கூடிக் கற்கும் வாய்ப்புகளையும் குழுநிலை செயற்பாடுகளையும் இழக்கின்றனர்.
- முற்றிலும் மாறுபட்ட கல்வித்தளத்தை ஒப்புக்கொண்டு இயைந்து செல்வதில் மாணவர் பல இடர்களை எதிர்கொள்கின்றனர்.
- இணையக்கல்வி வளங்களைப் பெறுவதிலும் பயன்படுத்துவதிலும் பெற்றோர் தொழில்நுட்ப அறிவு உட்பட பல சவால்களை எதிர்கொள்கின்றனர்.
- பெற்றோர் தமது அன்றாட செயற்பாடுகளை மாற்றியமைக்க வற்புறுத்தப்படுகின்றனர்.
- இணையவழி வகுப்புகளில் பிள்ளைகளை இணைப்பதற்காக வருவாய்க்குரிய தொழிலோடு பல உடன்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டியிருக்கின்றது.
- ஆசிரியருடன் மாணவர் முன்னேற்றம் குறித்துப் பேசுவதற்கான போதிய சான்றுகளைப் பெற வழியில்லாதிருக்கின்றது.
- ஆசிரியருடன் நெருக்கமாக உரையாடும் வாய்ப்பு குறைவடைகின்றது. இது இடைவெளியை அதிகரிக்கின்றது.
- ஆசிரியர்கள் தொழில்நுட்பம் தொடர்பில் புதிய அறிவைப் பெற வேண்டியிருக்கின்றது. பயிற்சிகளுக்காக மேலதிக நேரத்தை ஆசிரியர்கள் ஒதுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான பல விளைவுகள் இணையவழிக் கல்வியால் ஏற்பட்டிருக்கின்றன. ஆனாலும் இவை தொடக்ககாலத்தில் எதிர்கொள்ளும் சவால்களே. இவையே நிரந்தரமான கல்விமுறையாக்கப்பட்டால் இச்சாவால்களுக்குப் பலரும் இசைவாக்கம் அடைந்து விடுவர்.

அரசுகளின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் பள்ளிகளின் கல்விச் சூழ்நிலை பற்றியதாகவே இக்கருத்துரைகள் அமைகின்றன. இதேவேளை கணிசமான தனியார் கல்வி நிறுவனங்கள் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு எங்கும் இயங்கி வருகின்றன. இந்த நிறுவனங்கள் அரசு விதிக்கக் கூடிய கட்டுப்பாடுகளை ஏற்று வகுப்பறைக் கல்வியை மீளத் தொடங்குவது மிகச் சிக்கலாகவே இருக்கப் போகின்றது. இடைவெளி பேணுதல், ஒவ்வொரு தடவையும் வகுப்பறையைத் தூய்மைப்படுத்துதல் என்பன எளிதாக இருக்கப் போவதில்லை. சொற்ப எண்ணிக்கையில் மாணவர்களைக் கொண்டிருந்தால் இலாபகரமாக இயங்க முடியாது.




வேறு பலர் வீடுகளில் வகுப்புகளை நடத்தி வந்திருக்கின்றனர். பெரும்பாலும் இவ்வகுப்புகளுக்கு இனி வாய்ப்பிருக்காது. காரணம் பல இடங்களில் இருந்து வரும் மாணவர்கள் ஒன்றாக ஒரு வீட்டில் கூடுவதைப் பெற்றோர் விரும்ப வாய்ப்பில்லை. இங்கும் இடைவெளிகளைப் பேணுதல் கடினமானது.

இவ்வாறான சூழ்நிலைகளில் கல்வி இணையத் தொழில்நுட்பத்தை நோக்கி நகர்வது தவிர்க்க முடியாததாகவே உள்ளது.

தமிழ் சமூகத்தில் நடைபெற்று வரும் ஆடற்கலை, இசைக்கலை வகுப்புகள் என்பனவும் புதிய கற்பித்தல் பொறிமுறைகளை நோக்கித் தள்ளப்பட்டுள்ளன. பல ஆசிரியர்கள் இணையவழிகளைப் பயன்படுத்திக் கற்பிக்க ஆரம்பித்து விட்டனர்.

இனிவரும் காலங்களில் இணையத் தொழில்நுட்பம் கல்வித் துறையில் பெரும் செல்வாக்குச் செலுத்தும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை.

இனி தாய்மொழிக்கல்வியின் எதிர்காலம் குறித்து நோக்குவோம்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தாய்மொழிக் கல்வியின் கற்பித்தல் தரம் நாளாந்தப் பள்ளிகளின் கற்பித்தில் முறைமைகளைப் பெரிதும் எட்டாத நிலைமைகளே காணப்பட்டன. அதாவது மாணவர் மையக்கல்வி, மாறுபாடுடைக்கல்வி போன்ற புதிய கற்பித்தல் உத்திகள் பெரிதும் இன்றி, பாடநூல்களை மையப்படுத்திய கற்பித்தல் முறையே பெரும்பாலும் நடைமுறையில் இருந்தது. குறிப்பாகத் தாய்மொழிக்கல்வியில் கணினியின் பயன்பாடு மிகக் குறைவாகவே இருந்தது எனலாம்.

எதிர்வரும் செப்ரெம்பரில் ஒன்ராறியோ அரசு பல கட்டுப்பாடுகளுடன் பள்ளிகளைத் திறக்கவிருக்கும் நிலையில் அரசு நடத்தும் மொழிக்கல்வி வகுப்புகள் எவ்வாறு நடக்கும் என்ற வினாக்கள் எழும்புகின்றன. மொழிக்கல்வியின் போது பல வகுப்புகளில் இருந்தும் வரும் மாணவர்கள் ஒரு வகுப்பில் ஒன்றாகக் கூட வேண்டும். வேறு பள்ளிகளில் இருந்தும் மாணவர் மொழிக் கல்வி வகுப்புகளுக்குச் செல்வர். வகுப்பறைகளை வேறொரு ஆசிரியர் பயன்படுத்த வேண்டும். இவை யாவும் அரசு விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு உடன்பட முடியாதவை. இந்நிலையில் அரச கல்விச் சபைகளில் மொழிக்கல்வி இணையத் தொழில்நுட்பக் கற்பித்தல் முறைமையை நோக்கிச் செல்வது தவிர்க்க முடியதாகி விட்டது. பெரும்பாலான கல்விச்சபைகள் மொழி வகுப்புகளை இணையவழி மூலமே நடத்துவது என முடிவெடுத்து விட்டன.

அரச கல்விச்சபைகள் பெரும் செலவில் ஆசிரியர்களுக்கு இணையவழிக் கற்பித்தல் தொடர்பான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தமிழ்மொழியைக் கற்பிக்கும் பிற நிறுவனங்களும் வகுப்பறைக் கற்பித்தலை முன்னெடுப்பதற்குரிய அனுகூலமான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. ஒன்ராறியோ அரசு கட்டுப்பாடுகளுடன் கூடிய கல்வி என்ற விடயத்தில் கடுமையாகவே இருக்கப் போகின்றது. இந்நிலையில் முறைப்படுத்தப்பட்ட இணையவழி நுட்பங்களுடன் கூடிய கற்பித்தல் முறைகளைத் தாய்மொழிக் கல்வி நிறுவனங்கள் யாவும் கண்டறிய வேண்டியனவாக உள்ளன.

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் சமூகத்தவரிடையே தாய்மொழிக்கல்வி இணையத் தொழில்நுட்ப உத்திகள் சார்ந்து பெருமளவில் கட்டமைக்கப்பட்டிருக்கவில்லை. வகுப்பறைப் பயன்பாட்டுக்குரிய வளங்களே தாய்மொழிக்கல்வியின் மூல வளங்களாக இருந்தன. எனினும் இந்தக் காலமாற்றம் அனைவரையுமே கணினிவழிக் கல்வி குறித்துச் சிந்திக்கக் தூண்டியுள்ளன.

முன்பும் பல கட்டுரைகளில் குறிப்பிட்டிருப்பதைப் போல புலம்பெயர்ந்தோர் வாழும் நாடுகளில் தாய்மொழிக்கல்வியின் அவசியம் மிகப் பெரியது. இக்கல்வியின் வழியேதான் பண்பாடு, வரலாறு, மரபுகள் போன்றவற்றைக் கற்பிக்க முடியும். எதிர்காலத் தலைமுறைகளை தமிழ்வழிப்படுத்த முடியும். இந்த இலக்குகள் சமூகத்தின் தேவைகளில் முதன்மை பெறுவதால் தாய் மொழிக்கல்வியைத் தளர விடாது தொடர்ந்து மேற்கொள்ளும் பொறுப்பு சமூகத்துக்கு உண்டு.

எனவேதான் தமிழ்மொழிக்கல்வியானது நீண்டகால நோக்கில் கணினி மயப்படுத்தப்பட்ட கல்வியாக மாற வேண்டும். சிறு வகுப்பு முதல் பெரியவர்களுக்கான தமிழ்க்கல்வி என்பது வரை அனைத்துப் பரப்புகளிலும் கல்வி கணினி மயப்படுத்தப்பட வேண்டும். வகுப்பறைக் கல்விக்கான வாய்ப்புகள் எதிர்காலத்தில் மீண்டும் தொடங்கும் நிலை ஏற்பட்டாலும் குறிப்பிடத்தக்க கற்பித்தல்கள் கணினி வழிப்பட்டே தொடர வேண்டும்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, கணினிவழிக் கல்வி தொடக்ககாலத்தில் எளிதானதாக இருக்கப் போவதில்லை. எனினும் இதுவே கல்வியின் எதிர்காலம் என்பதைக் கருத்திற் கொண்டு அனைவரும் அதை ஏற்றுக் கொள்ளுதல் அவசியமாகின்றது.

ஆங்கிலம் பிரஞ்சு மொழிகளைத் தவிர, சீனமொழி, ஸ்பானிய மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கு மிகச் சிறப்பான இணையத் தளங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே வடிவமைக்கப்பட்டுவிட்டன. அவற்றை மாதிரியாகக் கொண்டு மொழிக்கல்விக்கான தளங்களை வடிவமைப்பதுடன் அதற்குரித்தான மூலவளங்களையும் நாம் கணிசமாக உருவாக்க வேண்டியவர்களாக உள்ளோம். கணினிவழித் தாய்மொழிக்கல்வியானது பரந்துபட்டு வாழும் பெரும்பாலான தமிழர்களை ஒருங்கிணைப்பதற்கும் வழி செய்யும்.

தமிழ்மொழி கற்றல் தொடர்பில் பல இணையத்தளங்கள் காணப்படுகின்றது. அவை பெரும்பாலும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மாணவர்களின் தேவைகளை மையப்படுத்தியவையல்ல. கணிசமான வடமொழிச் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் கலந்தே அவை உருவாக்கப்பட்டுள்ளன. அத்தோடு முறைப்படுத்தப்பட்ட கற்பித்தல் ஒழுங்கு இல்லாதவை.

கணினிவழிப்படுத்தவல்ல தாய்மொழிக் கல்வி குறித்து விரிவான பல விடயங்களை எழுத வேண்டிய தேவை உண்டு. மற்றுமொரு கட்டுரையில் அவற்றைத் தொடர்வோம்.

*vivekanandan.p@thaiveedu.com*



# முறைமைக் கல்வியும் முறைசாராக் கல்வியும்

- த. சிவபாலு -

*மனிதன் வாழ்க்கை முழுமையும்*
*- கற்கவேண்டும்,*
*கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்*
- ஸ்ரீபரமஹம்சர்

உள்ளார்ந்த ஆற்றலைக் கல்வி எடுப்பது கல்வி என்று பொருள் படும். அக்கல்வியை பெறுவதற்குப் பல்வேறு வழிகள் உள. பாடசாலை சென்று கற்றல் என்பது கல்வி கற்பதற்கான நியமமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் இப்படித்தான் கற்க வேண்டும், அல்லது இங்கேதான் கற்க வேண்டும் என்னும் நிபந்தனை கற்பவருக்கு இல்லை. எம்முன்னோர்கள் பெற்றோரிடமும் சமூகப்பெரியவர்களிடமும் கற்று அறிவை விருத்தி செய்து கொண்டனர். பார்த்தல், தொட்டுணர்தல், கேட்டல் என்னும் புலன்களினால் கல்வி கிடைக்கப் பெற்று, அறிவு விருத்தி செய்யப்படுகின்றது. நாம் அறிவைக் கல்வியினால் பெற்றுக் கொள்கின்றோம். நாம் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டியது கல்வி. *'கல்வி கரையில் கற்பவர் நாட்சில'*. கற்கக் கற்க கற்றுக்கொண்டே இருக்கலாம், முடிவே இல்லாதது கல்வி. கல்வி என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் காலத்திற்குக் காலம் அறிஞர்களால் தரப்பட்டுள்ளன. தரப்பட்டும் வருகின்றன.

கற்றல் என்பது முறைசார் கல்வி, முறைசாராக் கல்வி என இருவகைப் பட்டதாக அமைந்துள்ளது, முறைசார் கல்வி ஒரு திட்டமிடப்பட்ட வகையில் கற்றல் - கற்பித்தல் இடம்பெறுகிறது. பாடசாலைகள் போன்ற கல்வி நிறுவனங்கள் முறைசார் கல்வி முறையினைக் கொண்டு திட்டமிட்ட அடிப்படையில் கல்விச் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றன. கற்றல் நிலைப்பாட்டில் முறைசார் கல்வி முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது.

## முறைசார் கல்வி:

வரைமுறைப்பட்ட பயிற்சி, தொடர்ந்து ஒழுங்கு முறையில் ஆரம்பக் கல்வியில் இருந்து இடைநிலைக் கல்விக்கும் அதன் பின் உயர்நிலைக் கல்விக்கும் இட்டுச் செல்வது முறைசார் கல்வியின்பாற்படும். அதாவது, முறைப்படி வகுக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் கற்றல் இடம்பெறுவதனை முறைசார் கல்வி என வரையறை செய்யலாம். கல்வி நிறுவனங்களிடையே பல்வேறு பாடத்திட்டங்கள், பாட அலகுகள் இருக்கும். அது மட்டுமன்றி ஒரு நிறுவனத்தின் பாடத்திட்டத்திலும் பல்வேறுபட்ட அல்லது மாறுபட்ட கற்றல் விதிகள் அவர்களால் தயாரிக்கப் பட்டுள்ள கல்வித் திட்டச் செயற்பாட்டில் காணப்படலாம். அவை அனைத்தும் பிள்ளைக்குக் கல்வியளிப்பதன் வழியாக அவர்களது அறிவை விருத்தி செய்வதாக அமைகின்றது என்பது எல்லா மட்டங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனவே பாடத்திட்டம், கல்வி நிறுவனம், ஆசிரியர், கல்வித் திட்டவியலாளர்கள் எனப் பல்வேறு கல்வியியலாளர்களின் கூட்டு முயற்சி முறைசார் கல்வியின் அடிப்படையாக அமைகின்றது. முறைசார் கல்வியின் அடிப்படை எண்ணக்கரு திட்டமிடப்பட்டதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான கல்வி முறையாகும். கல்வி அளித்தல் கட்டாயமானதாகக் கருதப்படும் நிலை முறைசார் கல்வியின் முக்கியமான ஒன்றாக உள்ளது. எனவே முறைசார் கல்வி என்பது நிறுவனமயப் படுத்தப்பட்ட ஒன்றாக பொதுவாக பாடசாலைகளால் வழங்கப்படுவதாகக் காணப்படுகின்றது.

கற்றல் செயற்பாட்டிற்கு கற்பித்தல் செயற்பாடு முக்கியமானது. குழந்தைகள் பிறக்கும்போது மூளையோடுதான் பிறக்கின்றார்கள். எனவே, ஆசியர் மூளையைக் கொடுப்பவர் அல்ல. பிள்ளைகளிடம் உள்ள அறிவாற்றலை அகழ்ந்தெடுத்து அவர்கள் தங்களிடம் உள்ள திறன்களை வளர்த்தெடுத்துக் கொள்ள வழிவகுப்பதே ஆசிரியர். 'குருவில்லா வித்தை பாழ்' என்பது தமிழில் தொன்று தொட்டு வரும் முதுமொழி.

பண்டைக்காலத்தில் திண்ணைப்பாடசாலைகள் எனக் கற்றறிந்தோரிடம் சென்று அவர்கள் வீட்டிலே தங்கியிருந்து அவர்கள் கற்றுத்தரப் பெற்றுக்கொள்ளும் நிலை இருந்து வந்துள்ளது. வாய்மொழியாகக் கேட்டும் நிலத்தில் எழுத்துக்களை எழுதியும் கற்றுக்கொள்ளும் முறை திண்ணைப் பாடசாலைலகளில் இடம்பெற்றுள்ளன. ஆனால் நாகரிக வளர்ச்சியின் பேறாக கல்வி கற்பதில் விருத்தி ஏற்பட்டுள்ளது. பெற்றோர் செய்து வந்த தொழில் கல்வியைத் தங்கள் வாழ்வாதாரத்திற்கானதாகக் கற்றுக்கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் நம்முன்னோர். இன்று உலகம் மாறுபட்டு வளர்ச்சி கண்டுள்ளது. அந்த மாற்றம் கல்வியிலும் பாரிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. அதன்வழி முறைசார் கல்வியினை அனைவரும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் தேவையும் ஏற்பட்டுள்ளது. கல்வி ஒருவரின் அடிப்படைத்தேவை, அதனைப் பெற்றுக் கொள்ளாதவர் சமூகத்தில் வாழத் தகுதியற்றவர் என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

## முறைசாராக் கல்வி:

முறையாக நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி ஒழுங்கமைப்புக்கு வெளியே இடம் பெறும் எந்தவொரு கல்விமுறையும் முறைசாராக் கல்வி என்னும் பதத்தில் அடக்கப் படும். ஒரு வரையறைக்கு அப்பாற்பட்ட கல்விமுறை என்பது 1960 க்குப் பின்னர் முக்கியமான ஒரு பேசுபொருளாக உலகில் இடம்பெற்று வருகின்றது. கூம்ஸ் மற்றும் அகமட் (Coombs and Ahmed) என்போர்தான் முறைசாராக் கல்வி பற்றி முதன் முதல் வரையறை தந்துள்ளனர் என Alana Rogers குறிப்பிடுகின்றார். அவர்கள் நிறுவனமயமாக்கப்பட்ட கல்வி அமைப்பிற்கு வெளியே இடம்பெறும் எந்தவொரு ஒழுங்கமைக்கபட்ட அல்லது ஒழுங்கமைக்கப்படாத பிரத்தியேகமான அல்லது பரந்த செயற்பாடான கற்றல் நடவடிக்கையை வாடிக்கையாளர்களுக்கு அல்லது பயில்வோருக்குத் தருமாயின் அதனை முறைசாராக் கல்வி எனலாம் எனக்குறிப்பிட்டுள்ளனர்.

இதிலிருந்து முறைசாராக் கல்வி என்பது நிறுவனரீதியற்ற ஏதோ ஒருவகையில் ஒழுங்கமைப்பிற்கு உட்பட்ட கல்விச் செயற்பாட்டினைக் கொண்டதாக இடம் பெறுவதனைக் காண்கின்றோம். நிறுவன அலகுகளுக்கு வெளியே எந்த வடிவத்திலாயினும் கல்வியைப் பெறுகின்றோருக்குக் தரும் கல்விமுறை முறைசாராக் கல்வி எனக் கொள்ளப்படுகின்றது. பாடசாலை வகுப்பறைகளிலோ, பல்கலைக்கழக அல்லது கல்லூரி வகுப்பறைகளிலோ, கற்றலைத் தவிர்ந்த அதற்கு அப்பால் இடம்பெறும் கல்வி நடத்தைகள் முறைசாராக் கல்வி எனப்படுகின்றது.

இன்று நிறுவனமயப் படுத்தப்பட்ட கல்வி நிலையங்களால் மேற்கொள்ளப்படும் தொலைத் தொடர்புக்கல்வி முறைசாராக் கல்வியா என்னும் கேள்வி எம்முன்னே எழுகின்றது.

ஆசிரியர், மாணவர் என்ற நிலைமாறி கல்வி - தருநர், வாடிக்கையாளர் என்னும் வடிவத்தில் வர்த்தகமயப்படுத்தப்பட்ட கல்வி முறையினை ஒழுங்கமைக்கப்படாத, நிறுவனமயப் படுத்தப்படாத கல்வி முறை எனக் கொள்ள முடிகின்றது. இன்று மாணவர்கள் பாடசாலைக்கு வெளியே பாடசாலை இல்லாத நேரங்களில் பிரத்தியேகக் கல்வி நிலையங்களில் கற்கின்றார்கள். நிறுவனங்கள் தொழிற்பயிற்சி, நிர்வாகப்பயிற்சி என்பனவற்றை தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவகைக் காண்கின்றோம். இவற்றை நாம் முறைசாராக் கல்வி என்னும் பதத்தினுள் அடக்க முடியும்.

முறைசாராக் கல்வி என்பது...

- பல்வேறு அமைப்புக்கள் நியமமற்ற முறையில் கல்வி அல்லது பயிற்சி அளித்தல்.
- ஒரு செயல்முறையான கல்வி - செய்கைமுறைகளைக் காட்டி அவற்றை செயற்படவைக்கும் முறைமை.
- ஒரு கருத்துநிலை, ஆய்வுமுறைக் கல்வி - தனித்துவமாகவோ அல்லது கூட்டாகவோ ஆய்வுகளை மேற்கொளளுதல். இப்படித்தான் ஆய்வு செய்தல் வேண்டும் அல்லது இதனைத்தான் ஆய்வு செய்தல் வேண்டும் என்னும் பரப்பினுக்குள்ளோ அன்றி, வரையறைகளுக்குள் கட்டுப்படாது ஆய்வுகளை மேற்கொள்ளுதல் - ஆய்வுகளை மேற்கொள்ள உதவுதல் போன்றன.
- முறைமை சாராத கல்விமுறையிலிந்து கற்றுக்கொள்ளுதல் - பல்வேறு வழிகளில் வெவ்வேறு நேரங்களில் தெரிந்தவர்களிடம் இருந்து தெரியாதவற்றை அறிந்து கொண்டு அறிவை விருத்தி செய்தல் இந்த வகையைச் சார்ந்தது.
- ஒரு தொகுதிச் செயல்முறைகள் அடங்கிய கற்றலைக் குறிக்கின்றது. இது முறைமைக் கல்வியில் இருந்து வேறுபட்ட கல்வி முறையைக் கொண்டதாக இடம்பெறுகின்றது.

என வகைப்படுத்துப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் இன்றைய நவீன யுகத்தில் கல்வி பல்வேறு வடிவங்களில் கிடைப்பதனைக் காணலாம் என்பதனை Alan Rogers எடுத்துக் காட்டுகின்றார்.

முறைசாராக் கல்வி என்பது ஒரு நியமமான முறையான கல்வியாக இருந்தாலும் பாடசாலை, நிறுவனங்கள் போன்ற கட்டுக்கோப்பையும் நிறுவனரீதியான திட்டச் செயற்பாடுகளையும் உள்ளடக்கி இருந்தாலும், இவை அவற்றின் அடிப்படையில்தான் இடம்பெற வேண்டிய நியமக் கட்டுப்பாடுகளற்ற கல்விமுறையைக் குறிக்கும். கல்வி என்பது அறிவை விருத்தி செய்தல் என்னும் பொருளைக் கொண்டது எனின், எந்த வடிவத்திலாவது அல்லது நியமமான முறையற்ற வகையில் கற்றுக் கொள்ளுதல் முறை சாராக் கல்வி எனக் கொள்ளலாம். இப்படித்தான் முறைசாராக் கல்வி முறை இருக்கவேண்டும் என்பதல்ல.

தொலைத் தொடர்புச் சாதனங்களின் வழியாகக் கல்வி இடம்பெறுகின்றது. இது முறைசார் கல்வி முறையிலும் முறைசாராக் கல்வி முறையிலும் இடம்பெறுவதனைக் காணலாம். எனவே முறைசாராக் கல்வி என்பது, வரையறைக்குள் கட்டுப் படுத்தப்பட அல்லது மட்டுப்படுத்தப்பட அல்லது வரையறைப்படுத்த முடியாத நிலைமையைக் கொண்டுள்ளது.

வளர்முக நாடுகள் பலவற்றில் எழுத்தறிவை ஏற்படுத்தும் வகையில் சிற்சில முறைகளைக் கையாண்டு முதியோர் கல்வி ஒரு நியமமற்ற முறையில் கற்பிக்கப்படுவதனையும் முறைசாராக் கல்வி என்னும் பகுப்பிற்குள் குறிப்பிடலாம்.

முன்தொழிற் பயிற்சி, வேலைக்காலத்தில் மேற்கொள்ளப்படும் தொழிற்பயிற்சி, அரசியல் மற்றும் கலாசார முன்னேற்றப் பயிற்சி, விவசாய விரிவாக்கம், தொழில் நுட்பப் பயிற்சி, ஊக்குவித்தல், உணர்வூட்டல், வர்த்தகப் பயிற்சி மையங்கள், மேலாண்மைக்கான பயிற்சி, எழுத்தறிவுத் திட்டங்கள், அருங்காட்சியகங்கள், மீன் வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு, கோழி வளர்ப்புக்கான வழிகாட்டல்கள் என்பன முறைசாராக் கல்வியாக இடம்பெறுவதனைக் காணலாம்.

கனடாவில் பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் தாம் விற்பனை செய்யும் பொருட்களைப் பாவனைப்படுத்தல் அல்லது கையாளுதல் போன்ற பயிற்சிகளை வழங்குவதும் இந்த முறைசாராக் கல்விமுறையில் சாரும். உதாரணமாக வீட்டு வேலைகள், நிலக்கீழ் அறை அல்லது விஸ்தரிப்பு வேலைகள், தரைக்கு மரப்பலகை மாற்றுதல் போன்ற பயிற்சியை Home Depot போன்ற வர்த்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இவ்வித முறைசாராக் கல்வியாக உள்ளது.

கனடிய மண்ணில் வாழும் பழங்குடியினர் தாம் செய்யும் மீன்பிடி, வேட்டையாடுதல் என்பனவற்றை முறைசாராக் கல்வியின் மூலமே இளையோருக்குக் கடத்துகின்றனர். பெற்றோரிடமிருந்த அல்லது சமூகத்தில் உள்ள முதியவர்களிடமிருந்து பல்வேறு பயிற்சிகளை இளையோர் பெற்றுக் கொள்ளுகின்றனர். திமிங்கில வேட்டை என்பது கனடாவின் முதல் குடியினரிடையே தொன்று தொட்டுக் காணப்படும் ஒரு தொழிலாகக் காணப்படுகின்றது. இவற்றை இளையோர் பெரியவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுகின்றனர்.

இலங்கையிலும் விவசாயம், மீன்பிடி, வேட்டையாடுதல் போன்றன பெற்றோரிடமிருந்து, பெரியவர்களிடமிருந்து, முன்னனுபவமுள்ளவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் முறை இன்றுவரை பின்பற்றப்படுகின்றது. இத்தொழில்கள் ஒரு நியமமான முறையில் கற்றுத் தரப்படுவதில்லை. கற்றல் - கற்பித்தற் செயல்முறை என்ற வரையறைக்குள் கட்டுப்பாடாமல் அல்லது தெரியாமல் கற்றுக்கொள்ளும் முறைகளாக இவை உள்ளன.



sivapalu@thaiveedu.com

www.inayam.net
த மி ழ் நி க ழ் வு க ளி ன் ச ங் க ம ம்



Buy or Sell
Your Home
call me 24-7
HOMELIFE HIGHER STANDARDS
Cell: 416 856 6900
Kathir Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com

With best compliments from
ஞானம்ஸ் ஸ்ரூடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony

New Location

Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2 (BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


# புதிதாகச் சொத்து வாங்குகின்றீர்களா?

நீங்கள் புதிதாகச் சொத்து வாங்குபவர்களா? அவதானமாக இருங்கள்.
நீங்கள் புதிதாக ஒரு வீட்டையோ,
தொடர்மாடிக் குடியிருப்பையோ வாங்குவதானால்,
'Leaseback' எனப்படும்
குத்தகை உடன்படிக்கையில் கையெழுத்து இடாதீர்கள்.

கனடா வருமானவரித் திணைக்களத்தின் (Canada Revenue Agency) புதிய நடைமுறைகளுக்கு அமைய, இந்த உடன்படிக்கையில் கையெழுத்து இட்டுவிட்டால், வரிக்கழிவுகள் உங்களுக்குக் கிடைக்காது. அத்துடன், நீங்கள் கனடா வருமானவரித் திணைக்களத்துக்கு மேலதிகமாக 3,400 டொலர் செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:

**Peter Justin**

B.Comm., CGA, CPA
**Chartered Professional Accountant**
11-1415 Kennedy Road,
Toronto ON M1P2L6

**416-321-3100**


வீடு வாங்க... விற்க...
உங்கள் பிரதிநிதி
Residential • Commercial • Investment

Rave P. Raveenthiran
Sales Representative
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
2057 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
Dir: 416-567-2462
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
ravehomes@gmail.com
The spring market started early this year.
Are you thinking of selling?
Opportunity is knocking!
Call me today to get free home evaluation.
GET STAGED
GET SOLD
GET MORE $$$

ATTIC INSULATION
We also do Insulation Removal
Spray Foam Insulation
Attic Walls
Ceiling Garage
Crawl Space
SAVE Heating & Cooling Costs
PREVENT Roof Rot & Mold
Do Your Attic Insulation!!
Stay Warm in Winter. Be Cool in Summer.
ENERecon Insulation
சுப. இரவீந்திரன் 416-939-9353
416-847-7171
info@enerecon.com / www.enerecon.com

# தொல்காப்பியம் - செய்யுளியல் - செய்யுள் உறுப்புகள்

- சி. சண்முகராஜா -

கடந்த மூன்று மாதங்களில் வெளிவந்த தாய்வீடு இதழ்களில் தொல்காப்பியம் - செய்யுளியல் - செய்யுள் உறுப்புகள் என்ற தலைப்பின் கீழே தொல்காப்பியர் கூறி வைத்துள்ள செய்யுள் உறுப்புகள் பற்றி ஒரு தொடர் கட்டுரையை எழுதி வருகின்றேன். பொருளதிகாரம் செய்யுளியலில், செய்யுள் உறுப்புகளை இரண்டு கூறுகளாகத் தொல்காப்பியர் கூறிவைத்துள்ளார். மாத்திரை முதல் வண்ணம் ஈறாகவுள்ள இருபத்தாறு உறுப்புகளை முதற்கூறிலும், அம்மை முதல் இழைபு வரையுள்ள எட்டு உறுப்புகளை பிற்கூறிலும் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். முற்கூறிலேயுள்ள 26 உறுப்புகளைப் பற்றி இக்கட்டுரையின் முதல் மூன்று பகுதிகளிலும் விரிவாக எழுதியிருந்தேன். பிற்கூறிலேயுள்ள அம்மை முதல் இழைபு வரையான வனப்புகள் எனப்படும் எண்வகை உறுப்புகள் பற்றி இந்தப் பகுதியிலே விவரிக்கின்றேன்.

### வனப்பு:

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்று தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகைச் செய்யுள் உறுப்புகளையும் அவர் வனப்பு என்ற சொல்லால் குறிப்பிட வில்லையாயினும், பிற்கால உரையாசிரியர்கள் அவற்றை எண்வகை வனப்புகள் என்று பெயரிட்டு உரை எழுதியுள்ளார்கள். வனப்பு என்ற சொல்லுக்குப் பொதுவாக அழகு, அலங்காரம் என்பது பொருள். தொல்காப்பியத்துக்குப் பின்னர் எழுந்த அவிநயம், காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம், நற்றத்தம், பல்காயம், மகேச்சுவரம் முதலான மறைந்து போன யாப்பிலக்கண நூல்களில் கிடைக்கப் பெற்ற நூற்பாக்களில் வனப்புப் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. கி.பி 10ம் நூற்றாண்டளவில் தொல்காப்பியத்தை

**பகுதி: 3**

அடியொற்றி அமிதசாகரரால் இயற்றப்பெற்ற யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய இரு நூல்களிலும் வனப்பு என்னும் சொல் ஆளப்பெறவில்லை. யாப்பருங்கலக் காரிகை நூற்பாக்களில் வரும் தொல்காப்பியம் கூறும் எட்டுச் செய்யுளுறுப்புகளையும் குறித்து அவற்றை எண்வகை வனப்புகளாக அதன் விருத்தியுரையிலே உரையாசிரியர் குணசாகரர் முதன் முதலாக எடுத்தாள்கின்றார். யாப்பருங்கலக் காரிகை விருத்தியுரையில் செய்யுள்களின் வகைகளைக் குறிப்பிடும் 'செய்யுட்டாமே மெய்பெற விரிப்பின் பாவே பாவினம் எனவிரண்டாகும்' என்னும் நூற்பாவுக்கான உரையில், அம்மை முதலான வனப்பு அலங்காரம் செய்யுள்களைச் சிறப்பிக்க வருவன என்று அவர் பொருளுரைத்துள்ளார். பின்னர் ஒழிபியலில் 'அம்மை முதலிய ஆயிரு நான்மையும்' என்னும் நூற்பா வரிகளுக்கு விளக்கம் தரும்போது அம்மை முதலிய எட்டு வனப்புகளையும் யாப்பு அலங்காரமாகக் கொண்டு விளக்கம் எழுதிச் செல்வார்.

தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவர்களில் முதல் உரையாசிரியரான இளம்பூரணர் அம்மை முதலான எட்டு உறுப்புகளையும் செய்யுள் உறுப்பென்றே குறிப்பிட்டுள்ளார். பின்னர் வந்த உரையாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர் வனப்பு என்ற சொல்லை முதலில் எடுத்தாளுகின்றார். அவர் குணசாகரரின் உரையைப் பின்பற்றி அம்மை முதலான எட்டு உறுப்புகளையும் வனப்பு என்னும் சொல்லால் அழைப்பார். அவரது உரையில் 'வனப்பியல் தானே வகுக்குங்காலை' என்னும் அடிகளை அம்மையை விளக்கும் நூற்பாவுடன் இணைத்துப் பொருள் கூறுவார். அவரைப் பின்பற்றி நச்சினார்க்கினியரும் வனப்பு என்ற பொருளில் உரையெழுதினார்.

வனப்பு என்னும் சொல்லுக்குப் பொதுவாக அழகு என்பது பொருள். வனப்பென்பது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்ட வழிப்படுவதோர் அழகு என்பதாக, சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரின் கருத்தினைத் தழுவிப் பேராசிரியர் விளக்கம் தருவார். பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் எண்வகை வனப்பும் பெரும்பான்மையும் தொடர்நிலைச் செய்யுள்களுக்கு உரியன என்று கருதுவர். இளம்பூரணர் அவை தனிநிலைச் செய்யுளுக்கே உரியன எனக் கருதியுள்ளார் என்பது அவர் காட்டும் எடுத்துக்காட்டுகளால் தெரிகின்றது. வனப்புகளிற் சில தனிச் செய்யுள்களில் காணக்கூடியனவாகவும், சில காப்பியங்களில் பொருந்திக் காணத்தக்கனவாகவும் உள்ளன என்பது உண்மையே. தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே பிற்காலக் காப்பியத்துக்கு முன்னோடியான காப்பிய மூல வடிவங்கள் இருந்திருக்கக் கூடுமென்றும், வனப்புகளிற் சில, காப்பிய முழுமை தழுவியன என்றும் கொள்வதற்கு இடமுண்டு என்பார் டாக்டர் தமிழண்ணல். தொடர்ந்து எண்வகை வனப்புகள் ஒவ்வொன்றைப் பற்றியும் சிறிது விரிவாகப் பார்க்கலாம்.



### அம்மை:

*சின்மென் மொழியால் சீர்புனைந் தியாப்பின்*
*அம்மை தானே அடிநிமிர் வின்றே.*

- தொல். செய்யுளியல் நூற்பா: 227

மென்மையான சில சொற்களைக் கொண்டு அடியெண்ணிக்கை மிகுதியில்லாமல் உயர்ந்த பொருள்களைக் கூறுவதாக வரும் செய்யுள்களைக் கொண்டது அம்மையாகும் என்கிறார் தொல்காப்பியர். அம்மை என்பது குணப்பெயர். அமைதிப்பட்டு நிற்றலில் அம்மையாயிற்று என்பார் பேராசிரியர். அம்மையென்னும் வனப்புக்குப் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களை எடுத்துக் காட்டாகக் கூறுவர் உரையாசிரியர்கள்.

*அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்*
*தன்நோய்போல் போற்றாக் கடை.*

- திருக்குறள் 315

பிறர் துன்பத்தைத் தன்துன்பம்போல் கருதி நீக்கவேண்டும் என்ற உயர்ந்த கருத்தைச் சிலவான எளிதான சொற்களால் இப்பாடலில் சொல்லப்பட்டிருப்பதால் இதை அம்மை வனப்பு என்பர். இதுவே தொல்காப்பிய அடிப்படையில் நீதி நூல்களுக்கான இலக்கணமானது. எனவே நீதி நூல்கள் அடியளவில் மிகுதிப்படாமல் இருக்கவேண்டும் என்ற வடிவ வரையறை தொல்காப்பிய அடிப்படையில் அமைந்ததனால் திருக்குறள், நாலடியார் போன்ற நீதி நூல்கள் இரண்டடி அல்லது நாலடியிலான அடி வரையறையுள் அமைந்திருப்பதைக் காணலாம்.

### அழகு:

*செய்யுள் மொழியால் சீர்புனைந்தி யாப்பின்*
*அவ்வகை தானே அழகெனப்படுமே.*

- தொல். செய்யுளியல் நூற்பா 228

செய்யுளுக்குரிய சிறந்த சொற்களால் ஓசை இனிதாகச் சீர்பெற யாக்கப்படும் செய்யுள் அழகெனப்படும். செய்யுள் மொழி என்பதற்கு திரிசொற் பயிலாது செய்யுளில் பயின்று வரும் மொழிகள் எனப் பேராசிரியரும், வழக்குச் சொல் பயிலாமல் செய்யுளில் பயின்று வரும் மொழிகள் என நச்சினார்க்கினியரும் பொருள் கொள்கின்றனர். கற்றவர்க்கன்றி மற்றவர்க்கு விளங்காத சொற்கள் என்று இவற்றைக் கொள்ளலாம். இருவரும் அழகு வனப்புக்கு எட்டுத் தொகைப் பாடல்களைச் சான்று காட்டுகின்றனர்.

*துணியிரும் பௌவம் குறைய வாங்கி*
*அணிகிளர் அடுக்கல் முற்றிய எழிலி*
*காலொடு மயங்கிய கனையிருள் நடுநாள்*
*யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப*
*நெடுவரை மருங்கின் பாம்பென இழிதரும்*
*கடுவரல் கலுழி நீந்தி*
*வல்லியம் வழங்கும் கல்லதர் நெறியே.*

(யாப்பருங்கலக் காரிகையுரை, மேற்கோள்)

இப்பாடலில் பௌவம், அடுக்கல், கால், கனை, ஓங்கல் கடுவரல், கலுழி, வல்லியம் எனச் செய்யுட் சொற்கள் பல வந்து அழகான ஒரு வனப்பைத் தருவதைக் காணலாம்.

### தொன்மை:

*தொன்மை தானே சொல்லுங் காலை*
*உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.*

- தொல். செய்யுளியல் நூற்பா 229

இது செய்யுளும் உரைநடையும் கலந்து வந்த பழைய கதை போன்றவற்றைக் குறிப்பது. 'உரையொடு புணர்ந்த' என்பதற்கு நெடுங்காலமாகப் பலராலும் சொல்லப்பட்டு வழங்கி வருவது என்பார் இளம்பூரணர். உரையொடு பொருந்திப் பழமையுடைய இராம சரிதம், பாண்டவ சரிதம் முதலாகியவற்றின் மேல் வரும் செய்யுள் என்பார் அவர். ஆனால் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உரை விரவி வருவன எனப் பொருள் கொள்கின்றனர். பெருந்தேவனார் பாரதம், சிலப்பதிகாரம் ஆகிய வற்றை எடுத்துக்காட்டுகளாகக் கூறுவர். சிலப்பதிகாரம் உரை நடைப் பகுதிகளை இடையே கொண்டுள்ள உரையிடைப்பட்ட பாட்டுடைச் செய்யுள். ஆகவே அது தொன்மை என்னும் வனப்புடையது என்பது நச்சினார்க்கினியாரின் கருத்து. இக்காலத்திலும் தொன்மம் என்பது புதுக்கவிதை யுத்திகளுள் ஒன்றாகக் கையாளப்படுகின்றது.

### தோல்:

*இழுமெனும் மொழியால் விழுமியது நுவலினும்*
*பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினும்*
*தோலென மொழிப தொன்னெறி புலவர்.*

- தொல். செய்யுளியல் நூற்பா 230

இழும் எனும் சிறந்த ஓசை இனிமையுடைய மென்மையான சொற்களால் உயர்வான பொருளைச் சொல்வதும், எல்லாச் சொற்களும் கலந்து பல அடிகள் பொருந்தி வருவதும் தோல் வனப்புவகைச் செய்யுளாகும். ஆற்றொழுக்கான நடையை இழுமென் மொழி என்பர் இளம்பூரணர்.

*பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்*
*ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்*
*துளிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்*
*ஒளியோன் காஞ்சி எளிதெனக் கூறின்*
*இம்மையில்லை மறுமை யில்லை*
*நன்மை யில்லை தீமை யில்லைச்*
*செய்வோரில்லைச் செய்பொரு ளில்லை*
*அறிவோர் யாரிஃது இறுவழி இறுகென.*

- மார்க்கண்டேயனார் காஞ்சி

இந்தப் பாடலை எடுத்துக்காட்டாகக் கூறுவார் இளம்பூரணர். பரந்த மொழியால் அடிநிமிர்ந்து வந்த செய்யுளுக்கு எடுத்துக் காட்டாக மலைபடு கடாம் என்னும் கூத்தராற்றுப்படை நூலிலிருந்து 'திருமழை தலைஇய இருள்நிற விசும்பு' என்ற யாப்பருங்கல விருத்தியுரை எடுத்துக்காட்டையே இவரும் எடுத்தாள்வார்.

### விருந்து:

*விருந்தே தானும்*
*புதுவது புனைந்த யாப்பின் மேற்றே.*

- தொல். செய்யுளியல் நூற்பா 231

விருந்து என்ற சொல்லுக்குப் புதுமை என்று பொருள். புதியவராக வீட்டுக்கு வருபவரை விருந்து என்போம். அதுபோல மரபுவழிமேல் புதிதாக வரும் இலக்கியத்தை விருந்து என்று குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறிபோய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது என்றும் புதிதாகப் புனைதலாவது, ஒருவன் சொன்ன நிழல் வழியின்றித் தானே தோற்றுவித்தல் என்றும் இது பெரும்பாலும் ஆசிரியப் பாவைக் குறித்தது என்றும் இளம்பூரணர் குறிப்பிடுவார்.

சிலப்பதிகாரம் தோன்றிய காலத்தில் அது விருந்தாகக் கொள்ளப்பட்டிருக்கலாம். இக்காலத்து நாவல்களும் இதற்கு எடுத்துக்காட்டாகலாம் என்பார் டாக்டர் மு.வ. விருந்து என்பது கருத்தோ, யாப்போ புதிதாய் இடம்பெறுவதைக் குறிக்கும். இக்

தொடர்தல் 43ம் பக்கம்

# தொல்காப்பியம்...

42ம் பக்கத் தொடர்ச்சி...

காலப் புதினங்கள், சிறுகதைகள் ஆகியவற்றை விருந்திலக்கியம் எனலாம் என்கிறார் டாக்டர் தமிழண்ணல். பேராசிரியர் முத்தொள்ளாயிரம், அந்தாதிச் செய்யுள்கள், கலம்பகம் ஆகியவற்றை விருந்து வனப்பு நூல்கள் எனக் குறிப்பிடுவார். பல்வகையாக அமைந்த நாட்டுப்பாடல்கள், கூத்துப் பாக்கள், உரைக்கவிதைகள் ஆகியவற்றை விருந்து வனப்புக்கு எடுத்துக்காட்டாகத் தருவார் ச. பாலசுந்தரம். பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களும், இக்காலத்து உரைநடை இலக்கியங்களான புதினம். சிறுகதை ஆகியவற்றையும் நாடகம், புதுக்கவிதை ஆகியவற்றையும் விருந்து வனப்பு எனக் கருதுவதற்கு இடமுண்டு.

## இயைபு:

*ஞகார முதலா னகார ஈற்றுப்*
*புள்ளி இறுதி இயைபெனப் படுமே*

- தொல். செய்யுளியல் நூற்பா 232

ஞ,ண,ந,ம,ன, ய,ர,ல,வ,ழ,ள என்னும் 11 மெய்களும் ஈறாக வரும் செய்யுள் இயைபு எனப்படும். பதினொரு புள்ளியீற்றினுள் ஒன்றினை இறுதியாகச் செய்யும் செய்யுள் பொருட் தொடராகவும் சொற்றெடராகவும் செய்வது இயைபெனப்படும் என்றும், இயைபென்றதனால் பொருளும் இயைந்து வரும் என்பது கருத்து என்றும் கூறி மணிமேகலை, பெருங்கதை ஆகியவற்றை எடுத்துக்காட்டாகத் தருவார் பேராசிரியர்.

தோல், இயைபு இரண்டுமே பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகுபவை, ஆனால் தோல் பெரும்பான்மை உயிரெழுத்தை ஈற்றில் கொண்டு முடியும். இயைபு இங்கே கூறப்பட்ட பதினொரு மெய்யையும் ஈற்றில் கொண்டு முடியும் என்று வேறுபடுத்திக் காட்டுவார் பேராசிரியர்.

## புலன்:

*தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து*
*தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்*
*புலனென மொழிப புலனுணர்ந்தோரே.*

- தொல். செய்யுளியல் நூற்பா 233

வழக்குச் சொற்களினால் தொடுக்கப்பட்டு, முயன்று ஆராய வேண்டாமற் பெருள் எளிமையாகப் புலப்படுவது புலனெனும் செய்யுளாம்.

*அம்மையே அப்பா ஒப்பிலா மணியே*
*அன்பினில் விளைந்த ஆரமுதே*
*பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்*
*புழுத்தலைப் புலையனேன் தனக்குச்*
*செம்மையே யாய சிவபதம் அளித்த*
*செல்வமே சிவபெரு மானே*
*இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவ தினியே.*

- திருவாசகம், பிடித்த பத்து

இவை போன்ற பாடல்கள் மக்கள் வழக்கில் பயின்று வரும் சொற்களால் அமைந்து படித்த அளவில் பொருள் விளங்கக் கூடியதாகப் புலன் வனப்புள்ளதாக இருப்பதைக் காணலாம். ‘சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து’ என்று இந்நூற்பாவைப் பாடங் கொள்ளும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் ஊர்மக்கள் பேசும் மொழிகள் கொண்ட ‘விளக்கத்தார் கூத்து’ ஆகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள்களை புலன் வனப்புக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர். சேரி மொழிகள் கலந்து வரும் குறவஞ்சி, பள்ளு, ஏற்றப்பாட்டு ஆகிய வற்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுவார் உ.வே.சா அவர்கள். அறிவுரைப் பாக்கள், குழந்தைப் பாடல்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கூறுவார் ச. பாலசுந்தரம்.

## இழைபு:

*ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது*
*குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து*
*ஓங்கிய மொழியான் ஆங்கவண் மொழியின்*
*இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்*

- தொல். செய்யுளியல் நூற்பா 234

வல்லெழுத்து மெய்கள் வராமல் எழுத்தெண்ணிக்கை அடிப்படையில் வகுத்த குறளடி முதலாக ஐந்தடியும் உடையதாக ஓங்கிய சொற்களால் வருவது இழைபு என்னும் வனப்பு. செய்யுள்களில் எழுத்துகளை எண்ணும்போது ஒற்று, ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியவற்றைக் கணக்கில் கொள்ளக் கூடாது.

*போந்து போந்து சார்ந்து சார்ந்து*
*தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து*
*வண்டு சூழ விண்டு நீங்கி*
*நீர்வாய்க் கொண்ட நீலம் ஊர்வாய்*
*ஊதை வீச ஊர வாய*
*மணியேர் நுண்தோள் ஒல்கி மாலை*
*நன்மணம் கமழும் பன்னல் ஊர*

----- ---- ------ -----

*பெருமணம் புணர்ந்தனை யெனாவஃது*
*ஒருநீ மறைப்ப ஒழிகுவ தன்றே.*

- யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள்.

17 அடிகள் கொண்ட இப்பாடலில் வல்லின மெய்கள் பயின்று வரவில்லை மிகுதியாக இடையின மெய்கள் பயின்று வந்துள்ளன. மெய்யெழுத்துகளையும், குற்றியலுகரத்தையும் நீக்கிக் கணக்கிட்டால் முதலடியில் நான்கெழுத்தும், இரண்டாமடியில் ஐந்தெழுத்தும், மூன்றாமடியில் ஆறெழுத்தும், நான்காமடியில் ஏழெழுத்தும் என்றவாறு பதினேழாம் அடியில் 20 எழுத்தும் என வந்து ஐவகை அடிகளும் முறைப்பட வந்துள்ளதை இழைபு வனப்புச் செய்யுளாக எடுத்துக் காட்டுவார் இளம்பூரணர். ஓங்கிய மொழியால் என்பதற்கு நெட்டெழுத்தும் அந்நெட்டெழுத்துப்போல் ஓசையெழும் மெல்லெழுத்தும் லகர னகரங்களும் உடைய சொல்லாலாவன எனப் பொருள் கொள்வார் பேராசிரியர்.

இவ்வாறாக எழுத்து, சொல், அடி, பொருள், புனைவுமுறை, வடிவம் என்பவற்றால் இலக்கியம் பெறும் அழகை எண்வகை வனப்புகள் மூலம் தொல்காப்பியர் உணர்த்தியுள்ளார். இந்த வனப்பு வகைகளை நோக்கும் போது பலவாறு வகுக்கப்பட்ட இலக்கிய வகைகள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே இருந்திருக்கின்றன என்று கருதுவதற்கு இடமிருக்கின்றது. தொல்காப்பியச் செய்யுளியல் காலந்தோறும் புதியனவாகத் தோன்றும் செய்யுள்வகை அனைத்திற்கும் அடிப்படையாக அமையும் வண்ணம் வகுக்கப்பட்டுள்ளது என்பது வியப்புக்குரியதாகும். பல்லாயிரம் ஆண்டுகாலமாக அறிவியல் அடிப்படையுடன், அழகிய கட்டமைப்புடன் இலக்கிய, இலக்கண வளங்களில் பல்வேறு பரிணாம வளர்ச்சி கண்டது செம்மொழியான நம் தமிழ்மொழி என்பதைத் தொல்காப்பியம் பறைசாற்றுகின்றது. இன்னும் ஒருசில நூற்றாண்டுகளில் உலகில் பேசப்படும் மொழி என்கின்ற நிலையிலிருந்து பலமொழிகள் அழிந்து போகக்கூடிய ஆபத்தை நாம் எதிர்நோக்கியுள்ளோம். அந்த ஆபத்தில் வீழ்ந்து விடாமல் ஒப்பற்ற பெருமை கொண்ட எம் தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டியது தமிழராகிய எங்கள் எல்லோரதும் கடமையுமாகும். எப்போதும் தமிழருடன் தமிழில் பேசுவோம். வீசினால்தானே காற்று. பேசினால்தானே மொழி. எந்த மொழியையும் கற்றுக் கொள்வோம் - எந்தாய் மொழி மேல் பற்றுக் கொள்வோம்!

தொல்காப்பியம் - செய்யுளியல் - செய்யுள் உறுப்புகள் பற்றிய தொடர் கட்டுரை பகுதி நான்குடன் நிறைவு பெறுகின்றது.



shanmugarajah@thaiveedu.com




# இலெமூறியா அல்லது குமரிக்கண்டம்

- அ. கணபதிப்பிள்ளை -

இலங்கையின் புவிச்சரிதவியல் ஆய்வின் முடிவுகள் குமரிக்கண்டத்தின் எஞ்சிய பாகமாகவே இலங்கை உள்ளது என்பதனைத் தெளிவுபட நிருபிப்பதாகவே காணப்படுகிறது என்ற துணிவுக்கு எளிதில் வந்துவிடமுடியும். அறிஞர்களுக்கு மேலும் நம்பிக்கைத்தன்மையினை உறுதிசெய்வதற்குக் கடலடித்தள நிலவுருவங்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதற்கு இன்றைய உள்நாட்டரசுகளின் ஆதரவு இல்லாத நிலையில் பன்னாட்டரசுகளின் ஆய்வு முன்னெடுப்பின் தேவையினை வலியுறுத்தவேண்டிய கடமை தமிழர்களுக்குள்ளது.

இலங்கையில் காணப்படும் பல்வேறு பாறைகளையும் அவற்றின் பரம்பற் பாங்கினையும் ஆராய்ந்த அறிஞர்கள் நில அரிப்பும் நிலஉயர்த்துகையும் கலந்து தொழிற்பட்டதன் விளைவாக இன்றைய உருவத்தினை இலங்கை பெற்றிருப்பதாக உறுதியாக நம்புகிறார்கள் அதற்கேற்றவிதமாக அவர்களது ஆய்வுகளும் வழிநடத்திச் செல்லப்பட்டிருப்பதனைக் காணமுடிகிறது.

இலங்கையின் புவிச்சரிதவியலாய்வின் தந்தை எனக்கூறப்படும் கலாநிதி ஆனந்த குமாரசுவாமி (1877-1947) அவர்கள் 1906ல்

## பகுதி: 3

இலங்கையின் கனிவளம் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு லண்டன் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்தைப் பெற்றிருந்தார். 1903ல் பிரித்தானியாவில் இலங்கையின் முதல் மேற்குலக சிந்தனை வழி வந்த புவிச்சரிதவியல் ஆய்வுக்கட்டுரையினை வெளியிட்டிருந்தார். இவர் 1903 தொடக்கம் 1907 வரையில் இலங்கையின் கனிமவளத்துறையின் தலைவராகவுமிருந்தார்.

இலங்கையின் கனிமவளத்துறை ஆய்வாளராகவிருந்து தலைவர் வரை உயர்ந்த மற்றுமொரு தமிழர் பேராசிரியர் குலரத்தினம் ஆகும். 1938 முதல் 1943 வரை கனிம வளத்துறைத் தலைவராக இருந்தவர். இவர் புவிச்சரிதவியலுக்கு வழங்கிய பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. 1923ல் ஈ.ஜே. வேலன்ட் (E.J. Wayland) இலங்கையின் மயோசின் சுண்ணக்கற் பாறைப் படிவுகள் பற்றியும் யுராசிக் காலப் படிவுகள் பற்றியும் ஆய்வு நடத்தியிருந்தார்.

பிராங் டீ அடம்ஸ் (Frank D. Adams) இலங்கையின் புவிச்சரிதவியல் பற்றிய முழு விபரணக் கட்டுரையினைக் கனடாவின் ஆய்வுச் சஞ்சிகையில் 1929ல் வெளியிட்டிருந்தார். இலங்கையானது இந்தியப் பாறைத் தொடரின் ஒரு பாகமாகவே இருந்தது என்று இவரும் சொல்கிறார். மிகப் பழமையான உறுதியான புவியோடாக இப்பாறையினைக் குறிப்பிடுவதால் இத் தொல்பாறையானது பஞ்சியா என்ற முதுகண்டத்தின் பாகமாக இருந்தது என்ற உண்மை உறுதியாகிறது.

அவர்களைத் தொடர்ந்து ஜெ.எஸ். கோட்ஸ் (J.S. Coates. 1935) டீ.என். வாடியாவும் (D.N. Wadia 1945) பங்களிப்பாற்றினர். வாடியா 1943ல் வட்டத்திணிவு நிலஉயர்த்துகை பற்றிய கருத்தை வெளியிட்டார். மத்திய மலைநாட்டின் இருபடித்தான உயர்ச்சிக்கும் நிலவுருவங்களுக்கும் இவரது கருதுகோள் உதவினாலும் அடம்ஸ்சும் குலரத்தினமும் இவரது கருத்திலிருந்து வேறுபடுகின்றனர். பி.ஜி கூரே (P.G. Cooray) இலங்கையின் பாறை வகை தொடர்பில் ஆய்வினை மேற்கொண்டு இலங்கைப் புவிச்சரிதவியல் என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

கூரேயின் கருத்தின்படி இலங்கையில் 80 சதவீதமான நிலப்பரப்பு கேம்பிரியாவுக்கு முந்திய தொல்காலப் பாறைகளைக் கொண்டது என்கிறார்.

பாறைகளை மூன்று விதமாகப் பாகுபடுத்தலாம். குறிப்பாக தீப்பாறைகள் உயிர்ப்பு எரிமலைகள் வெளியேற்றிய லாவா குளம்பு இறுகியதால் உருவானவைகளாகும். இலங்கையில் எரிமலைச் செயற்பாடுகள் இல்லாத காரணத்தால் அங்கு தொல்காலத்துக்குரிய உருமாறிய பாறைகளும், அடையற் பாறைகளும் காணப்படுகின்றன. பேராசிரியர் குலரத்தினம் பழைய புவிக்கீழ்மடிப்புள் மடிப்பில் படியவிடப்பட்ட படிவுகள் உருமாற்றத்துக்குட்பட்டதால் கொண்டலைட் போன்ற பாறைத் தொகுதி உருவாகியிருக்கிறது என்கிறார். இக்கருத்தோட்டத்தின் மூலமாக இலங்கையில் மடிப்புமலைகள் உருவாகியிருந்ததென்பதனைத் தெளிவுபடுத்துகிறார்.

மலையாக்கத்தினை விளக்கவெனப் பல வகைக் கோட்பாடுகள் துணைநிற்பனவாயிருப்பினும் புவியோட்டு நகர்வும் புவியுட்பாகம் வெளியிடும் மேற்காவுகையுடன் கூடிய இழுவிசையாலும் தள்ளுவிசையினாலும் உருவாகும் மடிப்புகளும், பாறை வெடிப்புத் திணிவுப் புடைப்புகளும், எரிமலைகளும் மலையாக்கத்தின் செயற்பாட்டுக்கு விடைதருவனவாகவுள்ளன. இலங்கையின் மலையாக்கத்தில் புவிமேலோட்டு நகர்வுக்கு முக்கியம் தரப்படவில்லையாதலால், குமரிக்கண்ட மலைகளுக்கும் புவிமேலோட்டுத் தகட்டுக்கும் தொடர்பை ஏற்படுத்தமுடியாது எனக் குறிப்பிடமுடிகிறது.

புவிச்சரிதவியல் ஆய்வினை மேற்கொள்ளுபவர்கள் யுகங்களையும் அவற்றின் கால அளவுகளையும் கணித்து அக்காலங்களுக்கு இனமான பாறைவகைகளைப் பாகுபாடு செய்துள்ளனர். கேப்பிரியன் காலமானது (Cambrian Period) தொல்காலப் பாறைகளுடன் காலஎல்லை நிர்ணயம் செய்யப்படுகிறது. கேம்பிரியா என்பது ரோமானிய (லத்தீன்) மொழியில் திமிங்கிலத்தினைக் குறிப்பிடும் சொல்லாகும். பிரித்தானியாவிலுள்ள தென் வேலஸ் பகுதியில் 1835ல் ஆய்வு நடத்திய அடம் செட்ஜ்விக் (Adam Sedgwick) அங்குள்ள பாறைகளைக் கால நிர்ணயம் செய்த பொழுது அச்சொல்லைப் பயன்படுத்தினார்.

பழைய உயிரினக் காலமான பலியோசோயிக் யுகமானது (palaeozoic) கேம்பிரியன் காலத்துடன் தொடங்குகிறது. பூமி தோன்றியதாகச் சொல்லப்படும் 4,540 மில்லியன் ஆண்டுகளில் கேம்பிரியன் காலமானது 541 மில்லியன் ஆண்டில் தான் தொடங்குகிறது. இதுவரை கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் சுமார் 3,500 மில்லியன் ஆண்டுகளில் ஒருகலத்தைக் கொண்ட உயிரினம் தோன்றியதாகச் சொல்லப்படுகிறது. பழைய உயிரினக் காலப்பகுதிக்கு முந்திய யுகம் ஆரம்ப உயிர் யுகமாக - புறோரிரோசோயிக் (ProteroZoic) கொள்ளப்பட்டது. அது, 2,500 மில்லியனில் தொடங்கியது.

கேம்பிரியனுக்குப் பிந்தியகாலப் பாறைகள் பெரும்பாலும் அடையற் பாறைகளாகவே காணப்படுகின்றன. இவை புதையுயிர்த் தடங்களுடன் (Fossiles) கலந்தும், கலவாமற் தனித்தும் காணப்படுகின்றன. இடையுயிர்க்கால யுகத்தில் (Mesozoic Era) யுராசிக் காலப் (Jurassic Period) பாறைகள் இலங்கையிலும் புதையுயிர்த்தடம் கலக்கப்படாமல் அவதானிக்கப்பட்டன. இப்பாறைவகைகள் 2016 சர்வதேசகால அட்டவணைப்படி 201 முதல் 145 மில்லியன் பழமையானவை. அக்காலத்தில் டைனசோர்கள், பறவைகள், பூக்கும் தாவரங்கள், பாலூட்டிகள் காணப்பட்டன. இலங்கையில் உள்ள யுராசிக் பாறைகள் அரிப்புக்குட்படாதவாறு பிளவுச்சுவர்கள் தூணாகச் செயற்படுவதாக வேலன்ட் குறிப்பிடுகிறார். சுண்ணக்கல்லுக்குக் கீழாகக் காணப்படும் இப்பாறைகளில் மாக்கல்லும் மட்கல்லும் காணப்படுகிறது. தப்போவ வடிநிலத்திலும் ஆண்டிகம பல்லேகமவிலும் இவ்வகைப் பாறைகளை அவதானிக்கலாம்.

புதிய உயிரின யுகத்தில் (Cenozoic era) நடுக்காலமான மயோசின் காலத்துக்குரிய சுண்ணக்கற் பாறைகள் புத்தளத்திலிருந்து முல்லைத்தீவு வரையிலாக வில் வடிவத்தில் அண்மைக்காலப் பாறைகளால் மூடப்பட்டும் குடாநாட்டிலும் தீவுகளிலும் வெளியரும்பியும் காணப்படுகின்றன. 23 முதல் 5 மில்லியன் ஆண்டுகளுக்கிடையில் இப்பாறைகள் உருவாகியதாகச் சொல்லப்படுகிறது. இக்காலப்பகுதியை மேய்ச்சல் பாலூட்டிகள் பரவலாகக் காணப்பட்ட காலமாகக் குறிப்பிடுவர்.

கொண்டுவானா நிலத்திணிவுக்கு வடக்காகவிருந்த ரெதிஸ் கடலிலிருந்து உருவான படிவுகளே இங்கு காணப்படும் சுண்ணக்கற் பாறைப் படிவுகளாகும். அவற்றை ஒத்த படிவுகள் தென்னிந்தியாவின் கிழக்குக் கரையிலமைந்த காரைக்கால் சென்னை ஆகிய பகுதிகளிலும் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குமரிக்கண்டம் அழிந்த காலத்தில் தக்கணத்தின் ஒரு பாகம் உருவானது என்ற கருத்து பொய்ப்பிக்கப்படுகிறது. தக்கண பீடபூமியுடன் தொடர்பு கொண்டதாகவே குமரிக்கண்டம் இருந்திருக்கிறது என்ற முடிவுக்கும் வர முடிகிறது.

ஆரம்பத்தில் இலங்கையின் வடக்கே ஏழு தீவுகளும் வடமராச்சி வலிகாமம் என்ற இரு பெருந் தீவுகளும் சுண்ணக்கல் வெளியரும்புப் பாறைகளாக உயர்ந்து காணப்பட்டன. முனைவர் ஆர். மதனாகரன் தனது ஆய்வில் இவ்வாறு யாழ்பாணக் குடாநாட்டின் உருவாக்கித்தினை விளக்கியிருந்தார். இரு பெருந் தீவுகளைச் சுற்றியிருக்கும் அண்மைக்காலப் படிவுகள் கடல் நீரோட்டத்தாலும் கடல் அலைகளாலும் கொண்டுவரப்பட்ட மணற்படிவுகளாகும். குடாநாட்டின் வடக்கே கடல் அரிப்பும் தெற்கிலும் தென்கிழக்கிலும் படிவுகளும் அவதானிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருபெருந் தீவுகள் காலப்போக்கில் இணைந்திருக்க ஏழுதீவுகள் மட்டும் இணையாமல் தனித்து இருக்கின்றன. இது எவ்வாறு சாத்தியமாகியிருக்கும் என்பது பலரது கேள்வியாகவும் இருத்தல் கூடும். அதேபோல இந்தியாவுடன் கடற் படிவுகளால் குடாநாடு இணையமுடியாமல் இருந்துவருவது ஏன் என்ற கேள்வியும் முக்கியமானது. கடலுக்கடியில் நீரோட்டங்கள் ஆறுகள் போல ஓடிக்கொண்டிருக்கின்றன. வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் நீரோட்டம் தாழமுக்க சக்தியினால் பலப்படுத்தப்படுகின்றன.

நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய தீவுகளின் நடுவில் ஏழாற்றுப்பிரிவு காணப்படுகிறது. இப்பகுதியூடாகக் கடற்பிரயாணஞ் செய்தவர்கள் அவ்வாறுகளின் ஓட்டத்தினை நன்கு அனுபவித்திருப்பார்கள். இவ்வாறுகளில் ஒன்று குடாநாட்டின் வடகரையோரமாகச் சென்று வடக்கில் நில அரிப்பையும் கிழக்கு மற்றும் தென்கிழக்கில் படிவையும் ஏற்படுத்தியிருக்கிறது. மற்றைய ஆறுகள் தீவுகளைச் சுற்றி ஓடுவதனால் தீவுகளின் வடபகுதிகள் அரிக்கப்பட்டும் தென்பகுதிகளில் படிவுகளும் அவதானிக்கப்படுகின்றன. அதுவே ஏழு தீவுகளும் தனித்து விடப்படுவதற்கான காரண முமாகிவிடுகிறது.

குமரிக்கண்டத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் 49 நாடுகளில் ஏழு குறும்பனை நாடும் ஒன்றாகும். இந்த ஏழு தீவுகளிலும் பனைவளமே சிறந்து காணப்படுகிறது. வரலாற்றுக் காலம் முதல் இங்கிருந்தே பனைபடுதிரவியங்கள் வெளியுலகுக்குக் கொண்டு செல்லப்பட்டு வந்ததனைக் காணமுடிகிறது. நெடுந்தீவு பற்றிய எனது கேள்விக்கொத்து மற்றும் செவ்வியூடான ஆய்வில் வடமராட்சிப் பகுதியிலிருந்து மக்கள் பனம்பழம் பிசைந்து பனாட்டெடுக்க அங்கு வந்து தங்குவதாக முதியவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இதனையொட்டிப் *'பங்குனி மாதம் பனைமரமெங்கும் பாளைகள் வருகின்றன. ஆவணி மாதம் பெண்டுகளெல்லாம் தாவணி போடுவார்கள்'* என்று பனைவளம் தரும் நாட்டுச் செழிப்பை, அந்த நாட்டார் பாடல் விளக்குகிறது.

பிளைஸ்தோசின் காலப்பகுதி (Pleistocene period) இரண்டு தசம் ஐந்து எட்டு (2.58) மில்லியன் முதல் 11,700 வருடங்கள் வரையான காலப்பகுதியை உள்ளடக்கியது. இக்காலத்தில் பூமி பல பனியுகங்களைக் கண்டிருக்கிறது. இக்காலத்தின் முடிவில் கடைசிப் பனியுகம் காணப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்காலத்தில்த் தான் பலவகையான பனிக்கால உயிரினங்கள் காணப்பட்டன. பெரிய மிருகங்கள் பல இக்காலத்திலிருந்து அழிந்துவிட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மனிதரும் இக்காலத்தில் தோன்றியதாகச் சொல்லப்படுவதால், முக்கியமான காலப்பகுதியாக இதனைக் குறிப்பிடுதல் அவசியம். இக்காலத்தில் மனிதரும் பெரிய மனிதர்களாக இருந்ததாகப் பலர் நம்புகிறார்கள்.

இலங்கையில் பிளைஸ்தோசின் காலச் செம்பரற்பாறைப்படிவுகள் கொழும்பிலிருந்து முல்லைத்தீவுக்குத் தெற்காக சுமார் 20 மைல் அகலத்தில் காணப்படுகிறது. பிளைஸ்தோசின் பரல் படிவுகளின் உருவாக்கத்தின் பின்னர் கடல் இப்பகுதியில் உட்புகுந்ததால் அவை செம்பரல் (கிரவல்) களாக மாற்றம் பெற்றதாக வாடியா குறிப்பிடுகின்றார். இப்பரல்கள் ஆறுகளால் கொண்டுவந்து படியவிடப்பட்டதாகவும் அல்லது பனிப்படல நகர்வால் படிவுக்கு உள்ளாக்கப்பட்டவைகளாகவுமிருக்கலாம். இலங்கையில் பனிப்படலச் செயற்பாடுகளுக்கான ஆதாரம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும், தென்னிந்தியாவில் பனிப்படலச் செயற்பாடுகளிருந்ததனை ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தெற்கிலிருந்த பெரிய மலைகளிருந்து ஆறுகளால் கொண்டுவரப்பட்ட படிவுகளாக அவையிருப்பின், குமரிக்கண்ட மலையடுக்கு இருந்தமை சாத்தியமே. பனிப்படல நகர்வுடன் கொண்டுவரப்பட்ட படிவுகளாக அவை இருப்பதற்குமான வாய்ப்புகளையும் அவதானிக்கலாம். இக்காலம் பெரிய பனியுகக் காலமாயிருப்பதனால், மலைகளிலிருந்த பனிக்கோட்டின் உயரம் மிகத் தாழ்வாகவே இருந்திருக்கவேண்டும். பனிக்கட்டியின் பாரம் அதிகரிக்க, பனிப்படல நகர்வானது சாத்தியமாகவேயிருக்கும். அவ்விதமாயின் இக்காலமே குமரிக்கண்டத்தின் அழிவுக் காலமுமாக இருந்திருத்தல் வேண்டும்.

குமரிக்கண்டம் இருந்ததற்கான சான்றுகளும் இலங்கை குமரிக்கண்டத்தின் பிரிக்கமுடியாத பாகமாக இருந்தமையும் உறுதிப்படுத்தப்பட்டாலும், அதனை ஏற்றுக்கொள்ளாத பலர் நம்மைச் சுற்றிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். குமரிக்கண்டத்தின் தென்பாகம் மேற்குப்பாகம் ஆகியவை கடலாக மாறிய காரணத்தினைத் தொடர்ந்து ஆய்வுக்குட்படுத்துவது அவசியமாகிறது.

(தொடரும்)



kanapathipillai.a@thaiveedu.com

# சித்தர் இலக்கியம்

இலக்கியத்திற்குச் சித்தர்களின் பங்களிப்பு மிகுதியானது. சித்தர்கள் பாடிய ஆயிரக் கணக்கான பாடல்கள் பன்னெடுங்கால மாகத் தமிழ்மொழியில் வழங்கி வருகின் றன. அப்பாடல்களின் தொகுப்பு பெரிய ஞானக்கோவை என்ற பெயரில் தனி இலக்கியமாகத் திகழ்கிறது.

சித்தர்களின் பாடல்கள் பரவிய அள விற்கு, அவர்கள் பற்றிய வரலாறு பரவ வில்லை. பல்வேறு காலகட்டங்களிலே சித்தர்கள் தோன்றியுள்ளனர். தாம் விரும் பும் காலம் வரை உடலை அழியா நிலை யில் வைத்திருந்தனர். அண்ட வெளியில் நடமாடினர். உலகின் எந்த மூலையில் என்ன நடந்தபோதிலும் தாம் இருந்த இடத்திலிருந்தே அறியவும் செயல்படவும் ஆற்றல் பெற்றிருந்தனர். அத்தகு ஆற் றலை மாந்தகுலம் முழுவதுமே அடைய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் பல் வேறுபட்ட பாடல்களைப் பாடியுள்ளனர். சித்தர்களையும் இறையடியார்களையும் ஒப்பிட்டு நோக்கையில்;

- காலத்திற்குட்பட்டவர்கள் அடியார்கள்; காலத்தை வென்றவர்கள் சித்தர்கள்.
- வேளை வரும்போது இறப்பவர்கள் அடியார்கள்; விரும்பும்வரை சாவைத் தள்ளிப் போடுபவர்கள் சித்தர்கள்.

இவர்கள் சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்தவர்கள்; சடங்குகளையும் சடங்குக ளோடு ஒட்டிய வழிபாடுகளையும் போற்ற வில்லை. கடவுளைப் பற்றியும் ஞான நெறி பற்றியும் பாடிய சித்தர்கள் உண்டு; மனத்தைப் பேயாகக் கருதிப் பாடிய சித்தர்களும் உண்டு.

சித்தர் பாடல்கள் பொதுவாகத் தெளிவான மொழிநடையைக் கொண்டவை. நாட்டுப் புறப் பாடல்களில் உள்ள செய்யுள் வடி வம் சித்தர் பாடல்களில் காணப்படுகிறது. எளிமையான பேச்சுவழக்குச் சொற்கள், தெருக்களில் இரப்போரின் வயிற்றுப் பிழைப்புக்கும் பெரும் பணக்காரருக்கான விழிப்புணர்வுக்கும் உரமளிப்பவை. இப் பாடல்கள் குழந்தைகளும் பாடி மகிழத் தக்க எளிமையும் பெரியவர்கள் சிந்தித்துப் பயிலத்தக்க பொருள் வலிமையும் கொண் டவை.

சித்தர்களின் எண்ணிக்கையைப் பொது வாகக் குறிக்குமிடத்து பதினெண் சித்தர் எனக் குறிப்பிடுவர். இவர்கள்:

- திருமூலர்
- இராமதேவர்
- கும்பமுனி
- இடைக்காடர்
- தன்வந்திரி
- வான்மீகி
- கமலமுனி
- போகநாதர்
- மச்சமுனி
- கொங்கணர்
- பதஞ்சலி
- நந்திதேவர்
- போதகுரு
- பாம்பாட்டி
- சட்டைமுனி
- சுந்தானந்தர்தேவர்
- குதம்பைச்சித்தர்
- கோரக்கர்

ஆகியோராவர்.

இவர்கள் போன்று வேறு பல சித்தர்களும் உளர். பெரிய ஞானக் கோவை, சித்தர் கள் நாற்பத்தெண்மர் என்றும் மாறுபட்ட ஒரு பட்டியலையும் தருகிறது. இந்த வகை யில் சித்தர்கள் பட்டியல் கணக்கில்லாமல் பெருகிக்கொண்டே செல்கிறது. ஆயினும், பதினெட்டுத் தொன்மங்கள் (புராணங்கள்), பதினெட்டுப் படிகள், பதினெண் குடிமை, பதினெண் பேசுமொழி என்று வரையறை செய்தது போல, சித்தர்களையும் பதினெண் சித்தர்களாக வரையறை செய்தனர். கழ கப்புலவர்கள் இயற்றிய நூல்கள் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என்பனவும் அற நூல்களான பதினெண்கீழ்க்கணக்கு ஆகி யனவும் போலவே, இப்பதினெண் சித்தர் பாடல்களையும் பெரிய ஞானக்கோவை என்ற நூலாகத் தொகுத்தனர். ஏனைய சித்தர் பாடல்கள் அவரவர் பெயராலேயே தொகுக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் சில பாடல்களைப் பார்ப்போம்.

## சிவவாக்கியர் பாடல்கள்:

14ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்களுள் சிவவாக்கியரும் ஒருவர். சித் தர் இலக்கியத்தில் சிவவாக்கியர் பாடல்க ளுக்குத் தனிமதிப்புண்டு. காரணம், இவர் பாடல்களில் வழக்கமான சித்தர் கருத்து களான ஓகம், மாமாயை (குண்டலினி), நிலையாமை ஆகிய கருத்துகளுடன் புரட்சிக் கருத்துகளையும் கூறுவதால் இவர் புரட்சிச்சித்தர் என்றும் அழைக்கப் படுகிறார். குமுகாயப் புரட்சி செய்த இந் தச் சித்தர் தொடக்க காலங்களில் இறை நம்பிக்கையில்லாதிருந்து, இறைப்பற்றா ளனாக மாறினார் என்பதை இவரின் பாடல கள் புலப்படுத்துகின்றன.

*நட்டகல்லைத் தெய்வமென்று*
*நாலுபுட்பம் சாத்தியே*
*சுற்றிவந்து முணமுணென்று*
*சொல்லு மந்திரம் ஏதடா*
*நட்ட கல்லும் பேசுமோ!*
*நாதனுள் ளிருக்கையில்*
*சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ!*

நட்டு வைத்த கல்லைத் தெய்வமென்று நினைத்து, அக்கல்லின்மேல் மலர்களைச் சார்த்தி, அதைச் சுற்றிச் சுற்றி வருகின் றீர்கள்; மொணமொணவென்று ஏதோ மந் திரங்களையும் சொல்லுகின்றீர்கள்; அந்த மந்திரத்தால் என்ன பயன்? நட்ட கல் பேசுமோ? கடவுள் என்பவன் தனியாக வெளியில் இல்லை; உள்ளத்திலேதான் இருக்கிறான்.

சுவைமிக்க உணவினைச் சமைத்த சட்டியும் அகப்பையும் அந்த உணவின் சுவையை அறியாதது போலவே மனக்கோவிலினுள் இறைவன் இருப்பதை அறியாமல், வெறும் கல்லை நட்டு வைத்துத் தெய்வமென்று பெயரிட்டுப் பூக்களாலும் மந்திரங்களா லும் வழிபாடு செய்வது அறியாமையாகும் என்கிறார் சிவவாக்கியர்.

சிவவாக்கியர் பாடல்களில் 'குலாமர்' என்ற சொல் காணப்படுகிறது. 'குலாம்' என்பது உருதுமொழிச் சொல். குலாம் இடுபவர் குலாமர். (குலாம் இடுதல் - அடிமைத் தொழில் புரிதல்) இங்கு அடிமைத்தொழில் என்று கூறப்படுவது, போலிச் சடங்குக ளுக்கு அடிமையாயிருத்தலையே குறிக் கிறது. தமிழ்நாட்டில் முகமதியரின் மேலாண்மை ஏற்பட்ட காலத்தில் அவர்கள் பேசும் சொற்கள் பல தமிழில் புகுந்தன. அவ்வாறு புகுந்த சொற்களில் இதுவும் ஒன்று. குலாமர் என்ற சொல் வரும் பாடல்:

*கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா*
*கோயிலும் குளங்களும் கும்பிடும்*
*குலாமரே!*
*கோயிலும் மனத்துள்ளே குளங்களும்*
*மனத்துள்ளே*
*ஆவதும் அழிவதும் இல்லை இல்லை*
*இல்லையே*

- பாடல்: 35

எனப் பாடுகிறார்.

சிவவாக்கியர் தம் பாடல்களில் சாதி வேற்றுமைகளையும் மிகவும் உறுதியாக ஆணி அடித்தாற் போன்று கண்டிக்கிறார்.

*சாதியாவது ஏதடா சலந்திரண்ட நீரெலோ!*
*பூதவாசல் ஒன்றலோ பூதமைந்தும் ஒன்*
*றலோ!*
*காதில்வாளி காரைக்கம்பி பாடகம் பொன்*
*ஒன்றலோ!*
*சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன*
*தன்மையே!*

என்று சாதி வேறுபாடு பார்க்கிறவர்களைப் பார்த்துக் கேட்கிறார். அதுமட்டுமல்ல, மணமுடிக்க மணமக்களைக் குணம் பார்த் துத்தான் தேர்வு செய்ய வேண்டுமே தவிர குலம் பார்த்தல்ல என்று இளைஞர், இளைஞிகளைக் கேட்டுக் கொள்கின்றார்.

படிப்பறிவில்லாத மக்களும் அறிந்த சித் தர் பாடல்கள் பலவுண்டு. அவற்றின் பொருளைப் பட்டறிவு வழியேதான் உணர முடியும். எடுத்துக்காட்டாக ஒரு பாடல்:

*நந்தவனத்திலே ஓர் ஆண்டி - அவன்*
*நாலாறு மாதமாய்க் குயவனை*
*வேண்டிக்*
*கொண்டு வந்தான் ஒரு தோண்டி*
*- மெத்தக்*
*கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!*

- கடுவெளிச் சித்தர் - பாடல்: 4)

பத்து மாதங்களாகத் தவம் செய்து இந்த உடலைப் பெற்று வந்தாயே! மாந்தா! கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைப்ப தற்குத் தானா? இந்த உடல் உள்ளபோதே ஆதன்(ஆன்மா) கடைத்தேற வழி காண வேண்டாமா? எனச் சொல்லாமல் சொல்லி இடித்துக் காட்டுகின்றார். இவ்வாறான பெரும்பாலான பாடல்கள் மறைபொருள் கொண்டு மறைந்துள்ளமை சித்தர் பாடல் களில் பொதுவான கூறுகளில் ஒன்றாகும்.

15ம் நூற்றாண்டில் தோன்றிய சித்தர்களாக இடைக்காட்டுச் சித்தர், குதம்பைச் சித் தர், பாம்பாட்டிச் சித்தர் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களின் பாடல்களைப் பார்ப்போம்.

## இடைக்காட்டுச் சித்தர்:

இவர் நூறுக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்கள் வெவ்வேறு ஓசைநயங்களில் உள்ளன. இவரது பாட்டோடு ஆட்டமும் கலந்துள் ளது. நாட்டுப்புறங்களில் திருவிழாக்கா லங்களில் இன்றும் பாடப்படும் ஒரு பாடலைக் கேட்போம். இதுபோன்று பாடல் களைப் பாடிக்கொண்டு ஒயிலாட்டம் முத லிய கூத்துகளை ஆடுபவர்களை இன்றும் காணலாம்.

*தாம் திமிதிமி தந்தக் கோனாரே!*
*திம் திமிதிமி திந்தக் கோனாரே!*
*ஆனந்தக் கோனாரே - அருள்*
*ஆனந்தக் கோனாரே!*

- இடைக்காட்டுச் சித்தர் - பாடல்: 24

இடைக்காட்டுச் சித்தரின் இதுபோன்ற பாடல்கள் சித்தர் நெறியையும் சமய உணர்வையும் ஆழப் பதிப்பன. இவர் கோனாரையும் (இடையர் பட்டப் பெயர்) ஆட்டையும், மாட்டையும், சோற்றையும், புல்லாங்குழலையும், அறிவையும் உள் ளத்தையும், மயிலையும், குயிலையும் தம்முன் நிறுத்தி பல உலகியல்புகளை யும் உண்மைகளையும் உணர்த்திப் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

## குதம்பைச் சித்தர்:

இவர் 200 க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். குதம்பைச் சித்தரின் பாடற் கண்ணிகளில் குதம்பாய் என்ற சொன் மாயை வருகிறது. குதம்பை(காதணி) அணிந்த பெண்ணை விளித்துப் பாடிய மையால் குதம்பைச் சித்தர் எனப் பெயர் பெற்றார். உண்மையறிவு பெற்று இறை வனை நாடும் மெய்ஞ்ஞானிக்கு உலகப் பொருட்களும் சடங்குகளும் தேவையில்லை என்பது இவரது கருத்தாகும். சித்தநெறி யினர் ஆயுள் ஒலியல் (காயகற்பம் - உட லினை உறுதியாக்கி முதுமை வராமல் தடுக்கும் சித்த மருத்துவ மருந்து) தேடி அலைய வேண்டியதில்லை என்று பாடு கின்றார்.

*மெய்ப்பொருள் கண்டு விளங்கும் மெய்ஞ்*
*ஞானிக்கு*
*கற்பங்கள் ஏதுக்கடி - குதம்பாய்*
*கற்பங்கள் ஏதுக்கடி!*

- குதம்பைச் சித்தர் - பாடல்: 2

## பாம்பாட்டிச் சித்தர்:

நூற்றுக்கும் மேற்பட்ட இவரது பாடல்கள் அனைத்தும் புன்னாகவராளி இராகத்தில் அமைந்தவை. இவர் பாடிய ஆடு பாம்பே' எனத் தொடங்கும் பாடல் தமிழ் நாடு முழுவதும் பாடப் பெறுகிறது. இவர் பாடல்களைப் பின்பற்றிப் பலரது பாடல் களில் நடன நளிநயங்களைக் காணமுடி கிறது.

*நாதர்முடி மேலிருக்கும் நாகபாம்பே*
*நச்சுப் பையை வைத்திருக்கும்*
*நல்ல பாம்பே*
*பாலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே*
*பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே!*

- பாடல்: 20

பெரும்பாலான பாடல்களில் இவர் பாம்பு என்று கூறுவது பாம்பு உருவில் மண்டல மிட்டுக் கிடக்கும் மாமாயை(குண்டலினி) வலிமையே ஆகும். அந்த வலிமையை எழுப்பல், முனிவர்களுக்கு இன்றியமை யாதது. ஆகவே, பாம்பாட்டிச் சித்தர் அதனை எழுப்பும் முயற்சியில் இறங்குகி றார். மேற்கண்ட பாடல் அடிகளுடன் கீழ்க்காணும் வரிகளைப் பல்லவியாகக் கொண்ட சில பாடல்களும் அமைந்துள் ளன.

*தெளிந்து தெளிந்துதெளிந்து ஆடுபாம்பே*
*- சிவன்*
*சீர்பாதங் கண்டு தெளிந்து ஆடுபாம்பே*
*ஆடுபாம்பே, தெளிந்து ஆடுபாம்பே*
*- சிவன்*
*அடியினைக் கண்டோமென்று ஆடுபாம்பே!*

- பாடல்: 1

இவ்வாறாக, சித்தர் பாடல்கள் என்றால் பெரிய இலக்கியக் கடல். இக்கடலில் கிடைத்திருப்பவை கையளவே! இங்கு குறிப்பிடப்பட்டவை சிறுதுணிக்கைகளே! இவற்றுக்கே இத்துணைச் சிறப்பாயின் பெரிய ஞானக்கோவை முழுமையையும் சுவைக்கும் அமையம் ஏற்படுமானால், எத்துணை இன்பமாக இருக்கும் என்பதை எண்ண மலைப்பாக உள்ளதல்லவா?

- சர்வேசுவரி சோமசுந்தரம் -



sarveswary.s@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# Commercial Mortgages
# Business Loans
# Business Line of Credit

*for*

Buying new business

Improve your business

Operating capital

Commercial real estate investments

Residential Mortgages | Commercial Business Loans

1st and 2nd Mortgages | Private Funds Available

Debt Consolidation - Refinance | No Income Confirmation

Call us more details...



KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623



**Rambo Tharmalingam**

Mortgage Agent Licence # M08008479

**647-290-3416**

**Kethes Sivasubramaniyam**

Licence # M08006105 Mortgage Agent

**416-873-5780**

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000

# பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமேலழகர் - திருமலையர்
மல்லன் பரிப்பெருமான் காலிங்கர்
வள்ளுவர் நூற்(கு)
எல்லையுரை செய்தார் இவர்.

திருக்குறளுக்கு உரைகண்ட பழைய உரையாசிரியர்களுள் முதலாவதாகக் கூறப்படுபவர் தருமர். இவரது உரை ஜைனமதச் சார்புடையது என்பதைத் தமக்குக் கிடைத்த ஓரிரு சுவடிகளை ஆராய்ந்து அறியத்தந்தார் பேராசிரியர் அ. சக்கரவர்த்தி அவர்கள். கவிராஜபண்டிதர் என்பவரின் ஜைனச் சார்புத் திருக்குறள் உரையை ஆங்கில



சமணரின் தருமசக்கரம்

முன்னுரையுடன் 1949ம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டவர் இவர். தருமரின் திருக்குறள் உரை இன்று முற்றாக மறைந்துவிட்டது. சைவ நாயன்மார்களுள் ஒருவரான அப்பரடிகள் சமணமதத்தைத் தழுவிப் பின்னர் சைவத்துக்குத் திரும்பியவர். இவர் சமணராக இருந்த காலத்தில் தருமசேனர் என்னும் பெயரைச் சூடியிருந்தார். திருக்குறளுக்கு உரை எழுதிய தருமர் இவராயிருத்தல் கூடுமோ என்னும் ஓர் ஐயத்தை ஒருசில ஆதாரங்களின் அடிப்படையில் எழுப்புகின்றார் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அரிய கையெழுத்துச் சுவடித்துறையின் முன்னாள் பேராசிரியர் கே.எம். வேங்கடராமையா அவர்கள்.

ஒன்றிரண்டு குறள்களை மாத்திரம் எடுத்துக்காட்டி வள்ளுவரின் மதம் எம்மதமே என்று சொந்தங்கொண்டாட வருவோர் சிலர். வள்ளுவருக்கு எம்மதமும் சம்மதமே என்று தம்மையும் ஏமாற்றிப் பிறரையும் ஏமாற்ற நினைப்போர் பலர். தமது மத நம்பிக்கைகளுக்கு மாறான கருத்துக்களை வெளிப்படுத்தும் குறள்களுக்கு வேறொரு விளக்கத்தை கண்டுபிடிக்கப் பெருமுயற்சி எடுப்போர் மற்றும் பலர்.

*அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு*
*அல்லால்*
*பிறவாழி நீந்தல் அரிது.*
- திருக்குறள் 8

வள்ளுவர் எந்த சமயத்துக்குச் சார்பானவர் என்பதை ஊகிப்பதற்கு இந்த ஒரு குறளே போதுமானது. ஆழி என்பது கடல் அல்லது சக்கரம் என்பதைக் குறிப்பதாகலாம் என்று தமிழ் நிகண்டுகள் தெரிவிக்கின்றன. இங்கே அறம் என்பது தர்மத்தையும் ஆழி என்பது சக்கரத்தையும் குறிக்கின்றது. தர்மசக்கரம் என்பதின் தூயதமிழ்ப்பெயரே அறவாழி. பிறவாழி என்பதற்கு முடிவில்லாது சுழன்றுவரும் 'பிறவிச்சக்கரம்' என்றும் பொருள் காணமுடியும். தர்மசக்கரத்தைச் சின்னமாகக் கொண்ட சான்றோனின் அடிபணிந்தவர்க்கு மட்டுமே பிறப்பும் இறப்புமாக மாறி மாறி வரும் பிறவிச்சுழற்சியைக் கடந்து செல்லமுடியும் என்று இக்குறளுக்கு விளக்கம் தரமுடியும்.

சமணம் (ஜைன மதம்), பௌத்தம் ஆகிய இருபெரும் சமயங்களுக்கும் தர்மசக்கரம் பொதுவான சின்னமாக உள்ளது. இந்தியாவின் முதலாவது பௌத்தப் பேரரசரான அசோகச்சக்கரவர்த்தியின் அடையாளச் சின்னமாகவும் தர்மசக்கரம் (அறவாழி) விளங்குவதைக் காணலாம்.

தமிழில் தோன்றிய முதலாவது நிகண்டான திவாகரம் (9ம் நூற்றாண்டு) முதற்கொண்டு பிங்கலநிகண்டு, சூடாமணிநிகண்டு (16ம் நூற்றாண்டு) வரையிலான பழம்பெரும் நிகண்டுகள் அனைத்துமே 'அறவாழி அந்தணன்' என்னும் பெயர் சமணரின் அருகக் கடவுளையே குறிக்கும் என்கின்றன.

அறவாழியந்தணன், அரியணைச்செல்வன், அருளாளிவேந்தன், ஆதியங்கடவுள், பண்ணவன், பகவன், எண்குணன், மாசேனன் உட்பட அருகனைக் குறிக்கும் நாற்பத்து மூன்று பெயர்களைத் திவாகரம் எடுத்துரைக்கின்றது.

*'அறவாழி அந்தணன் அரியணைச்செல்வன்*
*பூமிசை நடந்தோன்*
*வரதன் சினேந்திரன்ஆன பிறவும் அருகன்*
*பெயரே'*

என்கிறது பிங்கல நிகண்டு.

அருகன் அசலன் அறவாழியந்தணன் ஆதியண்ணல் என்கிறது பாரதி தீயம் என்னும் நிகண்டு.

அறவாழி வேந்தன், எண்குணன், பகவன், பூமிசை நடந்தோன் உள்ளிட்ட தொண்ணூறு பெயர்கள் அருகனுக்கு உரியனவாக சமணரான மண்டலபுருடர் ஆக்கிய சூடாமணி நிகண்டு கூறுகின்றது.

*'கோதில் அருகன் திகம்பரன் எண்குணன் முக்குடையோன் ஆதிபகவன் அசோக மர்ந்தோன் அறவாழி அண்ணல்'* என்று கயாதர நிகண்டு (16ம் நூற்றாண்டு) அருகனின் பிற பெயர்களைக் கூறுகின்றது.

பதினேழாம் நூற்றாண்டில் ஆக்கப்பெற்றதாகக் கருதப்படும் கைலாச நிகண்டு சூளாமணி என்னும் நூலானது அருகனின் பெயர்களைப் பின்வருமாறு பட்டியலிடுகின்றது.

*பண்ணவன் எண்குணன், பகவன், மாசெனன்,*
*அரியணை யிறைவன், அறவாழி யந்தணன்*
*தத்துவன், தரும சக்கர வேந்தன்*
*பூமிசை நடந்தோன் புனிதன் முதல்வன்*

'அறவாழி அந்தணன்' என்னும் பெயருடன் கூடவே அதே பொருளைத்தரும் 'தருமசக்கர வேந்தன்' என்னும் பெயரும் இங்கே இடம்பெற்றிருப்பதைக் காணமுடியும்.

கௌதமபுத்தரை 'அறவாழியாள்வோன்' என்று போற்றும் மணிமேகலை அவரைத் தருமசக்கரத்தை உருட்டுவோனாக விளக்கம் தருகின்றது.

*'ஆதிமுதல்வன் அறவாழியாள்வோன்'*
- மணிமேகலை 10:61

*'அறக்கதிர் ஆழி திறப்பட உருட்டி'*
- மணிமேகலை 5 :75

*'அறவரசாளவும் அறவாழி உருட்டவும்*
*பிறவி தோறும் பெற்றியலன்றே'*
- மணிமேகலை 348: 27-28

*'தெருமர லொழித்தாங் கிரத்தின தீவத்துத்*
*தரும சக்கரம் உருட்டினன் வருவோன்'*
- மணிமேகலை 10: 25-26)

என்னும் மணிமேகலை வரிகளுக்குத் 'தருமம் முதலும் முடிவுமில்லாத நித்தியப்பொருளென்பார். தருமசக்கரம் என்றும் அதனைத் தடையின்றிச் செலுத்துகின்றான் என்பார். உருட்டினன் வருவோன் என்றும் கூறினார்' என்று உரைகண்டுள்ளார் உ.வே. சாமிநாதையர்.

வண்டிற்சில்லு வடிவிலான தர்மசக்கரம் சமணர்களுக்கும் பௌத்தர்களுக்கும் பொதுவான புனிதச்சின்னம். வைதீகசமயங்களைச் சேர்ந்த சிலர் கூறுவதுபோல் 'அறவாழி' என்பது கிருஷ்ணபகவான் கையில் ஏந்திய சுதர்சன சக்கரத்தைக் குறிக்கும் எனக் கொள்வதற்கு எந்த ஆதாரமும் கிடையாது.



பௌத்தரின் தருமசக்கரம்

கிருஷ்ணனின் சக்கரம் உருட்டப்படுவதில்லை. அது கொடியவர்களை அழிப்பதற்காகக் கையில் ஏந்தப்படும் ஓர் ஆயுதம் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

வள்ளுவரைத் தமது நம்பிக்கைகளுக்கு இசைவானவராகக் காட்டிக்கொள்ள ஆசைப்படும் பலர் இந்தக்குறளுக்குத் தரமுற்படும் விளக்கங்கள் வலிந்து பெறப்படுவனவாகவே உள்ளன. 'அறவாழி' என்பதற்கு அறக்கடல் என்றும் 'பிறவாழி' என்பதற்குப் பிறகடல்கள் என்றும் பொருள் காண முற்படுகின்றனர் சிலர். அறக்கடலான இறைவனின் பாதங்களைப் பற்றிக்கொள்பவர் மாத்திரமே அறத்துக்குப் புறம்பான பிறகடல்களைக் கடக்க முடியும். ஏனையோரால் அது முடியாது என்பது இக்குறளுக்கு

**- பால. சிவகடாட்சம் -**

இவர்கள் தரும் விளக்கம். அடுத்து வரும் குறளுக்கும் இது போன்றதொரு விளக்கமே தரப்படுகின்றது.

*பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடி சேராதார்*
- திருக்குறள் 10

என்னும் குறளில் கூறப்படும் 'பிறவிப் பெருங் கடல்' என்பதற்கு இவ்வுலக வாழ்க்கை என்னும் பெருங்கடல் என்று மதச்சார்பற்ற விளக்கம் காண விரும்புவோர் பலர். அது அவர்களது விருப்பமாய் இருக்கலாம். ஆனால் வள்ளுவர் கூறுவதும் அதுதான் என்று நம்புவது தவறு. வள்ளுவர் மறுபிறவி பற்றிப் பேசவே இல்லை என்பதை வலியுறுத்துவதுதான் இவர்களது நோக்கம். 'பிறவிப்பெருங்கடல்' என்பது எதனைக்குறிக்கின்றது என்பதை மணிமேகலை ஐயத்துக்கு இடமின்றி விளக்குகின்றது.

*'பல்பிறப் பியாங்கணும் இருவினை*
*யுய்த்துமைப் போல*
*நீங்கரும் பிறவிக்கடலிடை நீந்திப்*
*பிறந்தும் இறந்தும் உழல்வோம்'*
- மணிமேகலை 26: 38-41

இப்பாடலில் பல்வேறு பிறப்புக்களிலும் தொடர்ந்துவரும் நல்வினை தீவினை பற்றியும் அவற்றின் காரணமாகத் தொடரும் பிறப்பும் இறப்புமான முடிவில்லாத பிறவிக் கடலில் உழல்வது பற்றியும் மணிமேகலை பேசுவதை உணரமுடியும்.

ஆசை என்பதே அனைத்து உயிர்களுக்கும் மீண்டும் மீண்டும் பிறப்புக்களைக் கொடுக்கும் வித்தாக அமைகின்றது என்னும் சமணம் மற்றும் பௌத்த மதக்கொள்கைகள் பற்றி வள்ளுவர் பேசுகின்றார்.

*தொடர்தல் 47ம் பக்கம்*

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

# பிறப்பொக்கும்...

48ம் பக்கத் தொடர்ச்சி...

*அவாவென்ப எல்லா உயிர்க்கும்*
*எஞ்ஞான்றுந்*
*தவா அப் பிறப்பீனும் வித்து*

- திருக்குறள் 361

ஆசையை அறுத்தவனுக்கு அடுத்த பிறவிக் கான வித்து இல்லாது போகின்றது என்பதே மேற்காணும் குறள்தரும் விளக்கம். ஒரு பிறப்பு மட்டுமே ஒருவருக்கு உள்ளது என்று கருதுவோருக்கு மீண்டும் ஒரு பிறப் பைக் குறித்த அச்சம் கிடையாது. இத்த கையோருக்கு எப்போதும் தவறாமல் பிறப் பைத் தோற்றுவிக்கும் வித்து பற்றிப்பேசு வது அர்த்தமற்றது. ஆனால் வள்ளு வர் பேசுகின்றார். ஏனென்றால் அவர் மறு பிறப்பில் நம்பிக்கை உடையவர்.

மறுபிறப்பு பற்றிய நம்பிக்கைகளைப் பிர தானமாகக்கொண்ட சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய கீழைத்தேய மதங்களுள் ஒன்றைச்சார்ந்த ஒருவராகவே வள்ளுவரை அடையாளப்படுத்தமுடியும்.

*பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று*
*நிலையாமை காணப்படும்*

- திருக்குறள்: 349

'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல் கள் போற்றி' என்று சிவனைப் போற்று கின்றார் மாணிக்கவாசகர். பிறப்பில்லாத முத்தி நிலை அடைவதே சைவர்களினதும் இலக்கு. எனினும், அந்தப் பிறப்பில்லாத பூரண நிலையை அடையும் நெறியிலே பக்திமார்க்கமான சைவம், சமண பௌத்த மதங்களுடன் மாறுபடுகின்றது.

*முத்திநெறி அறியாத மூர்க்கரொடு*
*முயல்வேனைப்*
*பத்திநெறி அறிவித்துப் பழவினைகள்*
*பாறும்வண்ணஞ்*
*சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை*
*ஆண்ட*
*அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார்*
*அச்சோவே*

என்று பாடுவார் மாணிக்கவாசகர். அவர் பக்தி நெறியில் நின்று சிவனை வழிபட்டவர்.

உரையாசிரியர்கள் குழப்பமான விளக்கம் தர முற்படும் மற்றும் ஒரு குறள்:

*மலர்மிசை ஏகினானான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடு வாழ்வார்*

- திருக்குறள் 3

இவ்வுலக வாழ்க்கை பற்றிப்பேசும் இக் குறள் மிக எளிமையானது. 'பூவின்மீது நடந் தவனுடைய மாண்புமிகு பாதங்களைப் பணிவோர் இவ்வுலகில் நீண்டகாலம் வாழ் வார்கள்' என்பதே இக்குறளின் பொருள்.

அருகக்கடவுளின் பாதங்களுக்குக் கீழ் தாமரை மலர் காணப்படும். அதுமட்டுமல் லாது 'அருகதேவர் சமவசரணத்தின் மிசைச் செல்லும்போது முன்னே ஏழு தாமரை மலர்களும் பின்னே ஏழு மலர்களும் தெய் வீக அதிசயத்தில் தோன்றும், அவற்றின் மீது அவர் நடப்பார்' என்பது சமணர்க ளின் நம்பிக்கைகளுள் ஒன்று. சமணரின் ஐதீகத்தின்படி சமண தீர்த்தங்கரர் வீற்றி ருந்து உபதேசிப்பதற்கெனத் தேவர்களால் கட்டப்பெற்ற மணிமண்டபமே சமவசரணம்.

*மலர்மிசை நடந்தோன் மலரடியல்லது*
*தலைமிசை யுச்சி தானணிப் பொறாஅது*

- சிலப்பதிகாரம் 10: 204-205

எனச் சிலப்பதிகாரத்தில்வரும் வரிகளுக்கு...

'எனது தலையின் உச்சியும் பூவின்மீதே நடந் தோனுடைய மலரடியாகிய அணியை அணி யப் பொறுப்பனல்லது பிறிதொன்றையும் அணியப் பொறாதென்றார் என்க' என்று உரை தந்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

'*விரி பூந்தாமரை மேற்சென்ற திருவாரடி*' என்கிறது சீவக சிந்தாமணி. (சீவக சிந் தாமணி 2814).

'*தண் தாமரை மேல் நடந்தான்*' என்கிறது நீலகேசி.

'பூமிசை நடந்தோன்' என்பது சமணரின் அருகக்கடவுளைக் குறிக்கும் என்பது நிகண் டுகள் அனைத்திலும் கூறப்பட்டுள்ள விட யம். திவாகரம் பிங்கலம் ஆகிய நிகண் டுகள் இப்பெயர் அருகனுக்கும் புத்தனுக் கும் பொதுவானதாகக் கூறுகின்றன. பிறந் தவுடனேயே நடக்கும் ஆற்றல் பெற்றிருந்த கௌமதபுத்தர் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் அவ்விடத்தில் ஒரு தாமரை மலர் தோன்றியதாகப் பௌத்தர் கள் மத்தியிலும் பேசப்படுவதுண்டு. இருப் பினும்கூட,



மலர்மிசை ஏகிய அருகன் பூமிசை நடந்த புத்தன்

*மலர்மிசை ஏகினானான் மாணடி*
*சேர்ந்தார்*
*நிலமிசை நீடு வாழ்வார்.*

என்னும் குறளுக்கு

'அடியார்களின் உள்ளக்கமலத்தில் வீற்றி ருக்கும் இறைவனை வழிபடுவோர் நீண்ட காலம் உயிர்வாழ்வர்' என்று உரைகண் டுள்ளார் பரிமேலழகர். 'பூமிசை நடந்தோன்' என்பதற்கு நேரடியான விளக்கம் ஒன்று இருக்கும்போது உள்ளக்கமலத்தை ஏன் தேடிப்போகவேண்டும். திருக்குறளைச் சமயச் சார்பற்ற பொதுமறையாகக் காட்டப் பரி மேலழகர் விரும்பியிருக்கலாம் என்று ஒரு பேச்சுக்கு வாதிடலாம்.

*தாம்வீழ்வார் மென்றோள் துயிலின்*
*இனிதுகொல்*
*தாமரைக் கண்ணான் உலகு.*

- திருக்குறள் 1103

'தன் காதலியின் தோளின் மீது சாய்ந்து கொள்ளும் நித்திரையின் இனிமையிலும் தாமரைக்கண்ணானின் உலகம் இனியதோ சொல்' என்பதே இக்குறளுக்கான உரை யாக முடியும். இந்தக் தாமரைக்கண்ணான் உலகை 'இந்திரன் உலகம்' என்று கூறு வார் மணக்குடவர் என்னும் உரையாசிரி யர். காதலியின் தோளிலும் இந்திரனின் சொர்க்கம் இனியதாகுமோ என்று கேட்ப தில் அபத்தம் எதுவும் இல்லை. ஆனால் காதலியின் தோளிலும் மகாவிஷ்ணுவின் வைகுண்டம் மேலானதோ என்று கேட்பது முறையாகுமா? பரிமேலழகரோ தாமரைக் கண்ணான் உலகு என்பதற்கு 'செங்கண் மால் உலகு' என்று விளக்கம் தந்ததோடு 'இந்திரன் உலகு என்று உரைப்பாரும் உளர். தாமரைக்கண்ணான் என்பது அவ ருக்குப் பெயரின்மையின் அது உரை யன்மை அறிக' என்கிறார்.

நிகண்டுகள் அனைத்தும் கூறும் 'மலர்மி சையேகினான்' என்பது அருகனையோ புத்தனையோ குறிக்கவில்லை எனக்கரு தும் வைணவரான பரிமேலழகர் தாமரைக் கண்ணன் என்பது திருமாலின் பெயர்க ளுள் ஒன்று எனத் திவாகரநிகண்டு மட் டுமே கூறுவதைப் பற்றிக்கொள்கின்றார்.

ஒருவரது பிறப்பை அல்லது அவர் செய் யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் மதம் எதுவானா லும் அது வள்ளுவருக்கு உரியதல்ல. 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் செய் யும் தொழில் வேறாக இருக்கலாம்' என்று அடித்துக்கூறியவர் வள்ளுவர்.

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்*
*சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்*

- திருக்குறள் 972

சாதி வேறுபாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த பௌத்தர்களும் சமணர்களும் வள்ளுவர் நம்மவரே என்று துணிந்து கூறிக் கொள்ளமுடியும்.

கடவுளின் பெயரால் ஆடு, மாடு, கோழி என்பவற்றைக் கொன்று பலி கொடுப்பது, படையல் வைப்பது, பகிர்ந்துண்பது போன்ற வழக்கங்கள் பண்டுதொட்டுப் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களாலும் பின்பற் றப்பட்டு வந்துள்ளன என்பதை மறுக்க முடியாது. சங்ககாலத் தமிழர் வாழ்விலும் கூட வேலன் என்னும் தெய்வத்துக்கு ஆடு வெட்டிப் பலி கொடுக்கும் வழக்கம் இருந் தது. கிராமப்புறங்களில் சிறுதெய்வ வழி பாட்டு நிகழ்வுகளில் கடாவெட்டிப் படை யலிடும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. யூதமதம், கிறீத்தவம், இஸ்லாம் ஆகிய மதங்கள் உயிர்ப்பலி கொடுப்பதைத் தடை செய்ததில்லை. இன்றும் விலங்குகளைக் கொன்று உண்பதைத் தடைசெய்வதில்லை. சமணமும் பௌத்தமும் கொல்லாமையைப் பெரிதும் வற்புறுத்தி நிற்பவை.

யாகம் அல்லது வேள்வி செய்வது வைதீக சமயத்தவரின் மிகமுக்கியமான சடங்கா கக் கருதப்படுவது. ஆயிரம் வேள்விகளைச் செய்துமுடிக்கும் அரசன் ஒருவன் இந்திர னுக்கு ஒப்பான பதவியை அடைகின் றான் என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஆயிரம் வேள்விகள் செய்வதிலும் ஓர் உயிரைக் கொன்று உண்ணாமல் இருத்தல் மேலானது என்கிறார் வள்ளுவர்.

*அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத்து உண்ணாமை நன்று*

- திருக்குறள் 259

விருந்தோம்புவதே பெரிய வேள்வி என்கி றார் திருவள்ளுவர். இல்லற வாழ்க்கை யின் இன்றியமையாத கடமை இதுதான் என்றும் வலியுறுத்துகின்றார்.

*இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்*
*விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு*

- திருக்குறள் 81

கொல்லாமையே மிகச்சிறந்த அறம் என்று கூறும் வள்ளுவர் கொல்லாமைக்கு அடுத்த சிறந்த அறமாகப் பொய்யாமையைக் கூறு கின்றார்.

*ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று*

- திருக்குறள் 323

'*கொல்லாமையே உயர்நெறி*' என்னும் சமணக் கோட்பாடு வள்ளுவர் குறள்களில் வெளிப்படுவதை நோக்கலாம்.

*தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது*
*ஊன்உண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்*

- திருக்குறள் 251

தன்னுடைய சதையை வளர்ப்பதற்காகப் பிற உயிர்களின் சதையை உண்பவனிடம் கருணையை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? என்று மாமிசம் உண்பவர்களைக் கடுமை யாகச் சாடுகின்றார் வள்ளுவர்.

கொல்லாமையை வலியுறுத்திய அளவுக் குப் பௌத்தம் புலால்மறுப்பை வலியு றுத்தியதாகத் தெரியவில்லை. மாமிசத்தை மட்டுமல்லாது விலங்குகளிடம் இருந்து பெறப்படும் பால், தயிர், மோர், நெய் என்பவற்றுடன் வண்டுகளின் சேமிப்பான தேனையும்கூட மருந்துக்கும் அனுமதிக் காதவர்கள் சமணர்கள்.

புலால் உண்பது குறித்துப் பௌத்தனா கிய மொக்கலன் என்பவனுக்கும் சமணப் பெண்ணான நீலகேசிக்கும் இடையிலான நீண்டதொரு விவாதம் சிறுபஞ்ச காவியங் களுள் ஒன்றான நீலகேசியில் இடம்பெறு கின்றது.

'கொல்லுதல் பாவச்செயல் என்பதை நாங் கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், மாமி சம் உண்பதைப் பாவம் என்று சமணர் எப்படிக்கூறமுடியும்? தான் கொல்லாத ஒன்றைத் தின்பவனுக்குப் பாவம் ஏது?' என்று மொக்கலன் கேட்கின்றான். 'தீமையை நேரடியாகச் செய்வது மட்டுமன்று, தீமை யைச் செய்யத் தூண்டுவதும் பாவமே' என்கிறாள் நீலகேசி. இவளது வாதம் வள் ளுவரின் மற்றுமொரு குறளை நினைவூட் டுகின்றது.

உண்பதற்காக உலகிலே எவரும் மாமிசம் வாங்காவிடின் அதனை விற்றுப் பணம் சம்பாதிக்கும் நோக்கில் கொலைத்தொழில் செய்வோரும் இருக்கமாட்டார்கள் என்கி றார் வள்ளுவர்.

*தினற்பொருட்டாற் கொள்ளாது*
*உலகெனின் யாரும்*
*விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்*

- திருக்குறள் 256

சமகாலச் சூழலை வைத்துக்கொண்டு வள்ளு வரின் குறள்களுக்குப் புதுப்புது விளக்கம் காண முற்படுகின்றார்கள் இன்று சிலர்.

*பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்*
*திண்மை உண்டாகப் பெறின்*

- திருக்குறள் 54

இக்குறளில் வரும் கற்பு என்பதற்குக் கல்வி என்று பொருள் கண்டு 'கல்வி என்னும் வலிமை சேர்ந்தால் பெண்ணிலும் பெருமை வாய்ந்ததாக வேறெதுவும் இல்லை' என்று சிலர் பொருள்காண முனைகின்றார்கள்.

சங்க இலக்கியத்தில் வேதநூல்களை 'எழுதாக் கற்பு' என்று குறிப்பிட்டிருப்பதை வைத்துக்கொண்டு இவ்வாறு கூறுகின்றனர். சங்க காலத் தமிழன் பெண்கல்விக்குத் தடைவிதித்ததில்லை. ஔவை என்னும் பெண்புலவர் மேல் அதிகமான் என்னும்

தொடர்தல் 50ம் பக்கம்

# பிறப்பொக்கும்...

49ம் பக்கத் தொடர்ச்சி...

சிற்றரசன் வைத்திருந்த அன்பும் பெருமதிப்பும் சங்க இலக்கியங்களிலேயே பேசப்படுகின்றன. தேவாரம் பாடிய திருநாவுக்கரசருக்கு முன்னரேயே சிவபிரானின்மேல் பதிகம் பாடிய காரைக்காலம்மையாரும் படித்தவரேயாவர். பெண்களுக்குக் கல்வி அவசியமில்லை என்னும் எண்ணம் தமிழர் அன்னியரால் ஆளப்பட்ட காலப்பகுதியிலேயே தோன்றிற்று. கல்விதான் மனிதரை விலங்குகளிடமிருந்து பிரித்துக் காட்டுவது என்று கூறும் வள்ளுவர் பெண்களுக்குக் கல்வி அவசியம் என்று தனியாகக் கூற வேண்டிய அவசியம் இல்லை. கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் கல்லாமையின் கேடு பற்றியும் தனித்தனி அத்தியாயங்களில் வள்ளுவர் கூறிவிட்டார். அவர் பெண்ணின் 'கற்பு' பற்றிப் பேசுவது வாழ்க்கைத் துணைநலம் பற்றிப்பேசும்போதே என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஒருவனது இல்வாழ்க்கைத் துணையாக வரும் பெண்ணுக்கு இருக்கவேண்டிய குணநலன்களைப் பற்றியே வள்ளுவர் பேசுகின்றார்.

பெண்கள் கடமை உணர்வோடும் கற்போடும் வாழவேண்டும் என்பதை எதிர்பார்ப்பது பிற்போக்குவாதம் அல்ல. பெண்கள் கற்போடு இருந்தால் ஆண்களும் அவ்வாறு இருக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று எம்முன்னோர்கள் நம்பினார்கள். ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றுடன் கூடிய நற்பண்பே என்பதே 'கற்பு' என்று அறியப்பட்டது.

இல்வாழ்வில் ஈடுபடும் பெண்களிடம் ஒழுக்கத்தைப் பெரிதாக சமணம் எதிர்பார்த்தது. இல்லறத்தில் ஈடுபடும் ஒருவனுக்கு அனைத்து விடயங்களிலும் துணையாக இருக்கப்போகும் பெண் தன் கணவனுக்குக் களங்கம் ஏற்படாமல் நடந்துகொள்ளவேண்டும், எதிர்பார்க்கும் போது தவறாமல் வரும் பருவமழை போல் கணவன் தேவைகளை அறிந்து நிறைவேற்ற வேண்டும் என்றெல்லாம் கூறும்போது வள்ளுவர் தாம் சார்ந்திருந்த சமயத்தின் எதிர்பார்ப்புக்களையே பிரதிபலிக்கின்றார் எனக் கருதலாம்.

சமணரின் இல்லற வாழ்க்கைமுறை பற்றிக் கூறுவது சமந்தபுத்திரரின் (இரண்டாம் நூற்றாண்டு) இரத்தினகண்டகம் என்னும் நூலாகும். இந்நூலின் உரையில் இல்லறத்துக்குரிய கற்புநெறி காத்துப் புகழ் பெற்ற நீலி என்னும் சமணப்பெண்ணின் கதை கூறப்படுகின்றது. சமணனாக நடித்த பௌத்தன் ஒருவனாலும் அவனது பெற்றோராலும் ஏமாற்றப்பட்டுத் திருமணம் செய்துகொண்ட நீலி பின்னர் உண்மையை அறிந்து வருந்துகின்றாள். கணவனும் அவனது பெற்றோரும் அவளைப் புத்தநெறிக்கு மாறும்படி தொடர்ந்து வற்புறுத்திவந்துள்ளனர். எனினும் தன் சமணசமயத்தை விட்டு விலகாமல், கடமை தவறாத மனைவியாக கணவன் மனம் கோணாமல் வாழ்க்கை நடத்தி வந்த நீலி, கணவனாலும் அவனது பெற்றோராலும் ஒழுக்கம் கெட்டவள் என்று குற்றம் சாட்டப்படுகின்றாள். பின்னர் தன் கற்பின் வலிமையால் எதிர்ப்புக்களை முறியடித்து உலகம் போற்றும் உத்தமியாகப் போற்றப்பெறுகின்றாள். இதுவே நீலியின் கதையாகும். நீலியின் கதையும் கண்ணகியின் கதையும்

*பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மை யுண்டாகப் பெறின்*

என்னும் திருக்குறளை நினைவூட்டுகின்றன.

நீலகேசி என்னும் சமணக் காவியத்தில் தொல்காப்பியம், நாலடியார், திருக்குறள் என்னும் மூன்று தமிழ்நூல்கள் மட்டுமே எடுத்தாளப்படுகின்றன. நாலடியார் சமண முனிவர்கள் ஆக்கிய அறநூல் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வாறே தொல்காப்பியமும் திருக்குறளும் சமணரால் இயற்றப்பட்டவை என்று கொள்ள இடமுண்டு என்கிறார் நீலகேசியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட பேராசிரியர் ஆ. சக்கரவர்த்தி அவர்கள். நீலகேசிக்கு உரை எழுதிய வாமனமுனிவர் (14ம் நூற்றாண்டு) வள்ளுவரை எம்மவர் ('எம் ஒத்து') என்கிறார்.

வள்ளுவரைச் சமணர்கள் தமக்கு ஒத்த கருத்தை உடையவர் என்று கூறும்போது அதற்கு அவர்கள் முன்வைக்கும் வாதங்கள் மிகப்பலம் வாய்ந்தனவாக உள்ளன என்பதனை அவதானிக்கமுடியும். அதற்கும் ஒருபடி மேலே சென்று வள்ளுவரை ஒரு சமண ஆச்சாரியராக அடையாளப்படுத்துகின்றனர் சமணமதப் பெரியோர்கள்.

வள்ளுவர் பற்றிய அவர்களின் வரலாற்றுப்பதிவு தமிழ்ப்பாரம்பரியம் எடுத்துரைக்கும் செய்திகளுக்கு முற்றிலும் வேறுபட்டது. திருக்குறளை இயற்றியவர் ஸ்ரீ குந்த குந்த ஆச்சாரியார் என்று சமண சமயத்தவர் கூறுகின்றனர். இவர் கி.மு. 52 முதல் கி.பி. 44 வரை வாழ்ந்தவராக அறியப்படுகின்றார். இவருக்குப் பத்மநந்தி, ஏலாசாரியர் என்னும் பெயர்களும் உண்டு என்று கூறும் சமணர், இவர் பிராகிருத மொழியில் பலநூல்களை எழுதியுள்ள போதிலும் தமிழில் திருக்குறள் என்னும் ஒரு நூலை மட்டுமே எழுதியுள்ளார் என்றும் கூறுகின்றார்கள்.

திருக்குறளுக்கான ஜைன உரையுடன் கூடிய திருக்குறள் ஓலைச் சுவடியொன்றில் 'ஏலாசிரியரால் சிருஷ்டிக்கப்பட்ட திருக்குறள்' என்று காணப்படுவதாக அறியமுடிகின்றது. இந்த ஏலாசிரியர் என்னும் பெயரை நோக்குமிடத்து மரபுக்கதைகள் சிலவற்றில் வள்ளுவரின் நண்பராகக் கூறப்படும் எலேலசிங்கன் பெயர் நினைவுக்கு வருவதை தவிர்க்கமுடியவில்லை.

குந்த குந்த ஆச்சாரியாரின் முதன்மைச் சீடரான திருவுள்ளம் நயினார் என்பார் தமது குரு கேட்டுக்கொண்டதற்கு இணங்கத் திருக்குறளை அப்போதிருந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றுவித்தார் என்று கூறப்படுகின்றது. திருவுள்ளம் நயினாரே காலப்போக்கில் திருவள்ளுவர் என்றும் திருவள்ளுவ நாயனார் என்றும் அறியப்பட்டார் என்கிறார்கள் சமணர்கள்.

திருவுள்ளம் நயினார் வானப்பிரஸ்த ஆசிரமத்தை மேற்கொண்ட ஒருவராக அறியப்படுகின்றார். வானப்பிரஸ்தம் என்பது மணம் முடித்து மனைவி மக்களுடன் வாழ்ந்த பின்னர் இல்லறத்தினின்றும் விலகிக் காடு சென்று முற்றும் துறந்த முனிவர் ஒருவருக்குப் பணிவிடை செய்து அவரிடமிருந்து தத்துவங்களைக் கற்றுக்கொள்ளும் துறவு வாழ்க்கையாகும். இல்வாழ்க்கை, நன்மக்கட்பேறு, காதலின்பம் பற்றியெல்லாம் அழகுற எடுத்துரைக்கும் திருக்குறளின் ஆக்கத்தில் திருவுள்ளம் நயினாரின் பங்கு அதிகம் இருத்தல் கூடுமோ என்னும் ஓர் ஐயம் எழுகின்றது.

வள்ளுவரின் முதற் பத்துப்பாடல்களில் இறைவனைக் குறிப்பனவாக அமைந்துள்ள அறவாழியந்தணன், ஆதிபகவன், எண்குணத்தான், ஐந்தவித்தான், மலர்மிசை ஏகினான், வாலறிவன், ஆகிய அனைத்துப் பெயர்களுமே சிலப்பதிகாரம், முதலான காப்பியங்களிலும் திவாகரம் முதலான நிகண்டுகளிலும் சமணர் தாள் பணியும் அருகதேவரைக் குறிக்கும் பெயர்களாகத் தரப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றையெல்லாம் இணைத்துப் பார்க்கும்போது வள்ளுவர் 'எம் ஒத்து' என்று சமணர்கள் கூறுவதை நிராகரிப்பது கடினமாகும்.

***உசாத்துணை:***


- திருக்குறள் (ஜைன உரை) கே.எம். வேங்கடராமையா, சரசுவதி மகால் நிலையம், தஞ்சாவூர் 1991
- Neelakesi (The original text and the commentary of Samaya Divakara Vaamana Muni) edited and published by Prof. A. Chakravarti, 1936 (archive.org/details/in.ernet.dli.2015.528854)




*Sivakadadcham@thaiveedu.com*




1ST MORTGAGE SPECIALS
5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details
2ND MORTGAGE SPECIALS
Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
TD Canada Trust
Scotiabank
STREET CAPITAL
FIRST NATIONAL FINANCIAL LP
MCAP
ICICI Bank
MERIX
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
-digi Media Creations-


FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
WILSON RD N / TAUN RD EAST
OSHAWA
FOR LEASE
Bedrooms:3 Washrooms:2
BRIMLEY/ELLESMERE
TORONTO
FOR LEASE
Bedrooms:6+3 Washrooms:3
HIGHWAY 7/BAYVIEW
RICHMOND HILL
FOR LEASE
Bedrooms:1+1 Washrooms:1
YONGE/SHEPPARD
TORONTO
FOR LEASE
Bedrooms:1 Washrooms:1
BAY/HARBOUR
MARKHAM
FOR LEASE
Bedrooms:1 Washrooms:1
MCCOWAN RD/HWY 401
TORONTO
FOR LEASE
Bedrooms:2+1 Washrooms:2
HURONTARIO/EGLINTON
MISSISSAUGA
FOR LEASE
Bedrooms:2 Washrooms:2
N OF KINGSTON/S OF FINCH
PICKERING
FOR LEASE
Bedrooms:2 Washrooms:2
BAYVIEW/ELGIN MILLS
TORONTO
FOR LEASE
Bedrooms:3 Washrooms:1
HWY 7/ 9TH LINE
MARKHAM
FOR LEASE
Bedrooms:3 Washrooms:3
ELLESMERE/KENNEDY
TORONTO
FOR LEASE
Bedrooms:3 Washrooms:3
YONGE / CRIMSON KING
EAST GWILLIMBURY
FOR LEASE
Bedrooms:4 Washrooms:4
FINCH/ALAMOSA
TORONTO
FOR SALE
Bedrooms:4+1 Washrooms:6
LESLIE/16 TH
RICHMOND HILL
FOR SALE
Bedrooms:5+2 Washrooms:5
KENNEDY/BUR OAK
MARKHAM
FOR SALE
Bedrooms:4+2 Washrooms:4
#1
RE/MAX
Outstanding Agent for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

- மல்லியப்புசந்தி திலகர் -

1850 கள் முதல் 1920கள் வரை மக்கள் இலக்கியமாக மக்கள் கைகளிலேயே இருந்துவந்த நாட்டார் பாடல்கள் எனும் வாய்மொழி பாடல்கள் வழியே இக்காலத்தில் மலையக மக்கள் தாம் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரநேர்ந்தமைக்கான காரணங்கள் மற்றும் இங்கு வரும் போது அடைந்த துன்பங்கள் துயர்ங்களைப் பதிவு செய்வனவாகவும் தமது வேலைத்தளங்களில் தாம் அனுபவித்த ஒடுக்குமுறைகளைப் பாடுவனவாகவும் அமையப்பெற்றுள்ளன.

மக்கள் பாடல்கள் என்ற பொது நிலையில் இருந்த தனிப்பட்டவர்களின் படைப்பிலக்கியமாக பார்க்கின்றபோது நம்முன் நிற்பவர் அருள்வாக்கி அப்துல் காதருப் புலவர். இவ்வாறு இவர் அடையாளப்படுத்தப்படுவது அவரது பெற்றோரது வருகை மற்றும் அவரது பிறப்பு மலையகத்தோடு தொடர்பு பெற்ற வகையில் அமைவதனாலாகும். இவர் ஜுன் 30, 1866ல் கண்டி போப்பிட்டிய எனும் இடத்தில் பிறந்தார் என்பதுவும், இவரது தந்தையார் இந்தியாவின் திருப்பெருந்துறையினை பிறப்பிடமாகக்கொண்டவர் என்றும் இவர் சிறு கோப்பித்தோட்டச் செய்கைக்காக இலங்கை வந்தார் என்றும் சொல்லப்படுகிறது. இவரது பிறப்பு தொடர்பான பின்னணி மலையக சமூக உருவாக்கத்தின்

## பாகம்: 1

ஆரம்ப கட்டமான கோப்பி பயிர்ச்செய்கை, மற்றும் தென்னிந்திய வருகையோடு தொடர்புபடுவதனால் இவர் மலையக இலக்கிய கவிதைப் பாரம்பரியத்தக்குள் வைத்து பேசப்படும் கவிஞராக பார்க்கப்படுகின்றாரே அன்றி அக்கால நாட்டார் பாடல்கள் போன்று மலையக மக்களின் வாழ்வியலை இவரது படைப்புகளில் தரிசிக்க கிடைத்தாக எந்தக்குறிப்புகளும் இல்லை.

இவரைப் போன்றே ஆபிரஹாம் ஜோசப் என்பவரும் இந்த கட்டத்தில் கவனம் செலுத்தப்படவேண்டிய ஒருவர். இவர் எழுதிய பாடல்கள் 'கோப்பிக் கிருஷிக் கும்மி' எனும் நூலாக வெளிவந்துள்ளது. கோப்பித் தோட்டங்களில் தொழிலாளர்கள் சலுகைகளை அனுபவிப்பவர்களாகவும் மகிழ்ச்சியுடன் வாழ்பவர்களாகவும் இங்கு வருமுன் தாய் நாட்டில் மோசமான வாழ்க்கையை அனுபவித்தவர்கள் தற்போது சந்தோஷமாக வாழ்வதாக கோப்பித் தோட்ட எசமானர்களுக்கு விசுவாசமாகவே இந்த பாடல்கள் படைக்கப்பட்டுள்ளன. காரணம் ஆபிரஹாம் ஜோசப் ஒரு காப்பித்தோட்ட கண்டக்டர். ஆகவே, அவருடைய பணி எசமானர்களுக்காக பாடல் இயற்றுவதாக இருந்துள்ளது. எனினும். 'தோட்டத்தொழிலாளர்கள் பாடித் திரியும் ஆட்சேபகரமான நாட்டார் பாடல்களுக்கு மாற்றீடாக இந்தப்பாடல்களை எழுதியுள்ளதாக தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் என சொல்லப்படுகிறது. இதனால் இந்த 'கோப்பிக் கிருஷிக் கும்மி' பாடல்கள் நாட்டார் பாடல்களிடம் மண்டியிட்டு மறைந்து போகிறது. ஆனாலும் '1869ல் மலையகத்தில் இருந்து வந்த முதல் நூல் என்ற பெருமையை இந்த 'கோப்பிக் கிருஷிக் கும்மி' பெறுகின்றது. 145 ஆண்டுகளுக்கு முன் எழுந்த மலையகத்தின் முதல் நூல் கோப்பிக் கிருஷிக் கும்மி என தனது தொடர்கட்டுரையில் ஒரு விரிவான ஆய்வினைத்தந்துள்ளார் ஆய்வறிஞர் மு. நித்தியானந்தன் அவர்கள். இந்நூலின் தலைப்பு 'Coffee Krishi kummi என ஆங்கிலத்திலேயே அச்சிடப்பட்டுள்ள'தாகவும் குறித்துச்சொல்கின்றார் நித்தியானந்தன் (மூலம்: மலையகம் எனும் அடையாளம்: மலையக இலக்கியத்தின் வகிபங்கு - தெளிவத்தை ஜோசப் - அமரர் இர. சிவலிங்கம் நினைவுப்பேருரை 2011). மலையக இலக்கியத்தின் முதல் நூலாக மலையகத்தில் அச்சு கூடங்கள் ஏதும் இல்லாத நிலையில் யாழ்ப்பாணம் ஸ்ட்ரோங் அன்ட ஆஷ்பரி பிரிண்டர்ஸ் எனும் அச்சகத்தில் இந்த நூல் நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் அந்த முதல் நூல் ஒரு கவிதை நூலாக அமைந்திருப்பது மலையக கவிதை இலக்கிய வரலாற்றில் பதிவு பெறவேண்டிய அம்சமாகிறது.

1916ல் அச்சேற்றம் பெற்ற தங்கப்பாட்டமாலை தந்தவர் கோட்டாற பாவா புலவர். இவரது 17 கவிதை நூல்கள் வெளிவந்துள்ளதாக அந்தனிஜீவா அவர்கள் தனது 'மலையக இலக்கியத்துக்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு' எனும் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளார். அதுபோலவே இந்தியாவில் பிறந்து இங்கு வந்த வாழ்ந்த சதகத்தம்பி புலவரையும் நாம் இந்த பட்டியலில் பார்க்கலாம்.

### நடேசய்யர் தம்பதிகளின் வருகை:

1920களில் பின்னரே மலையகக் கவிதை முயற்சிகள் மலையக பிரதேசங்களிலே பரவலாக வரத்தொடங்கின. அதுவும் இந்தியாவில் இருந்து வருகைதரும் இந்த மக்களின் பிரபலத்திற்கு காரணமாகியது. இத்தம்பதியருள் திரு. நடேசய்யர் தொழிற்சங்க பணிகளிலும், திருமதி மீனாட்சியம்மாள் நடேசய்யர் மக்கள் பாடல்களைப் பாடி அவற்றை துண்டு பிரசுரங்களையும் வெளியிடுவதிலும் அதிகம் ஈடுபட்டுள்ளதாகவே ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் திருமதி மீனாட்சியம்மாள் எழுதிய வரிகள் பின்வருமாறு அமைகின்றன.

*சிங்கள மந்திரிகள் செய்திடும் சூழ்ச்சி*
*சேதியில்லாமல் வேறில்லை காட்சி*
*போங்கவே தொழிலாளர் ஒற்றுமைக் மாட்சி*
*பொலிவு கொண்டாடுவர் அடைகுவர் தாட்சி*

*சிங்கள மந்திரிகள் கூற்று - மிக*
*சீருகெட்டதென்று சாற்று*
*சங்கடமே நேருமென தோற்று - சிந்திய*
*சமூகம் நெருப்பாய் வரும் காற்று*

*நன்றி கெட்டுப் பேசும் மந்திரிமாரே*
*- உங்கள்*
*நியாயமென்ன சொல்வீரே*

ஞரை அடையாளம் காட்டியிருப்பது மலையகக் கவிதை இலக்கியத்தின் ஒரு சிறப்பம்சமாகக் கொள்ளலாம். இதன் மூலம் மலையக நாட்டார் பாடல் வடிவங்கள் தாம் மலையக கவிதை இலக்கியத்தின் தோற்றுவாய் என்பதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

நடேசய்யர் தம்பதிகள் தொடங்கி வைத்த துண்டுப்பிரசுர இலக்கிய இயக்கம் பின்னர் பெரும்பாலான மலையகக்கவிஞர்களால் தொடரப்பட்டு வந்துள்ளது.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த பிறவிக் கவிஞர் பெரியாம்பிள்ளை, எட்டியாந்தோட்டை எஸ். கோவிந்தசாமி தேவர், பி.ஆர் பெரியசாமி. கா.சி. ரெங்கநாதன், சீனிவாசகம், 'தொண்டன்' ஆசிரியர் எஸ்.எஸ். நாதன், ஜில் ஜில் சுல்தான், சிட்டுக்குருவியார், பதுளை ஞானப் பண்டிதன், பாவலர் வேல்சாமி தாசன் முதலானோர் இவ்வாறு துண்டுப்பிரசுரமாக



நடேசய்யர்



மீனாட்சியம்மை



அப்துல் காதிருப் புலவர்

கள் சார்ந்த இன்னுமொரு செயற்பாட்டாளர்களோடு ஆரம்பிக்கிறது எனலாம். அவர்கள் நடேசய்யர் தம்பதிகள். பத்திரிகையாளரும் இந்திய சுதந்திர போராட்ட ஆர்வலருமான நடேசய்யர் அவர்கள் ஒரு பத்திரிகையாளராக இலங்கை வந்து பின்னர் மலையக மக்களோடு தொழிற்சங்கம், இலக்கியம், அரசியல் என இரண்டரக் கலந்தவர். அன்றைய மலையக மக்களின் நிலை கண்டு இந்த தம்பதியர் பல சமூக விழிப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அதில் பிரதானமானது துண்டு பிரசுரங்கள் மற்றும் வாய்மொழி பாடல்கள். பெரிதும் தொழிலாளர்களாகவும் பாமரர்களாகவும் இருந்த இந்த மக்களிடையே சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த இவர்கள் இலக்கியத்தை கருவியாகக் கையாண்டுள்ளனர்.

*'இந்து மக்கள்*
*சிந்தும் வேர்வை*
*ரெத்தக்காசு தானே - அடா*
*இரவு பகல் உறக்கமின்றி*
*ஏய்த்துப்பறிக்கலாமா..?*

என மக்களது வாழ்நிலை குறித்த பாடியுள்ளனர்.

இவர்களது பாடல்கள் 'இந்தியர்களது, இலங்கை வாழ்க்கை நிலைமை' (1940 கணேஸ் பிரஸ் - ஹட்டன்), என்ற தலைப்பில் தொகுதியாக வந்துள்ளது. இவர்களது எழுத்துநடை ஏற்கனவே இந்த மக்களிடத்தில் பழக்கப்பட்டிருந்த நாட்டுப்புற பாடல்களுடன் ஒத்துப்போனமை அவற்

*இன்றியமையாதவொரு பேரே செய்ய*
*இடமுன் மாக்கின்றீர் நீரே*

அந்த வகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் பேரினவாதத்திற்கு எதிரான பார்வையை அரசியல் தளத்தில் முதன் முதலில் முன்னெடுத்தவர்கள் நடேசய்யர் மீனாட்சிம்மாள் தம்பதிகளாவர் என்கிறார் திறனாய்வாளர் லெனின் மதிவானம். (*'ஊற்றுக்களும் ஓட்டங்களும்' - பாக்யா பதிப்பக வெளியீடு 2012) திறனாய்வு நூல் - பக்38*).

மலையக ஆய்வு எழுத்தாளர் சாரல் நாடன், இலக்கிய செயற்பாட்டாளர் அந்தனிஜீவா முதலானோர் திருமதி மீனாட்சியம்மாள் குறித்து பல கட்டுரைகளை எழுதியுள்ளனர். திருமதி சித்திரலேகா மௌனகுரு தனது பெண் ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளில் மீனாட்சியம்மாள் நடேசய்யரைப் பற்றி எழுதியுள்ளார். புலம் பெயர்ந்து வாழும் பேராசிரியர் மு. நித்தியானந்தன் 'மீனாட்சிம்மாளும் மேடைப்பாடல்களும்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

பேராசிரியர் செ. யோகராசா திருமதி மீனாட்சியம்மையை 'ஈழத்த முதல் பெண் கவிஞர்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினை எழுதியுள்ளதாக திறனாய்வாளர் லெனின் மதிவானம் அவர்கள் தனது 'ஊற்றுக்களும் ஓட்டங்களும்' திறனாய்வு நூலில் (பக்31) குறிப்பிட்டுள்ளார். பேராசியரியர் செ. யோகராசாவின் கூற்றுப்படி ஈழத்தின் முதல் பெண் கவிஞராகவே ஒரு மலையகக் கவி

அச்சிட்டு தோட்டம் தோட்டமாக பாடி விற்றுள்ளனர் என அந்தனிஜீவா அவர்கள் தனது 'மலையகம் வளர்த்த கவிதை' (மலையக கலை இலக்கிய ஒன்றியம் வெளியீடு 2002) நூலில் ஒரு பட்டியலைத் தருகின்றார்.

பாவலர் வேல்சாமிதாசன் அவர்கள் எழுதி தனது கணீரென்ற குரலில் பாடும் வல்லமை யையும் பெற்றிருந்தார் என சொல்லப்படுகின்றது. அவரது பாடல் ஒன்று பின்வருமாறு அமைகிறது.

*'காலைமணி ஐந்துக்கெல்லாம் தப்படிப்*
*பாங்கோ*
*கணக்கு புள்ளை ஆறுக்கெல்லாம்*
*பெரட்டெடுப்பாங்கோ*
*வேளையிலே ஏழுக்கெல்லாம்*
*இல்லாவிட்டாங்கோ*
*வேலை இல்லை என்று சொல்லி*
*விரட்டிடுவாங்கோ'*

இதில் வரும் சொல்லாட்சியும் சந்தமும் மக்களை கவர்வனவாக உள்ளதுடன் மக்களின் வாழ்வியலையும் காட்டி நிற்கின்றன.

திருமதி மீனாட்சிம்மாள் 'இந்தியத் தொழிலாளர் துயரச்சிந்து' - 1931 சகோதரி அச்சகம் ஹட்டன்). என்று பாடியதன் தாக்கம் பின்னாளில் வேல்சாமிதாசன் அவர்களை 'இலங்கை தொழிலாளர் இம்சைக்குரல்' என்ற பாடற் தொகுப்பை எழுதத் தூண்டியுள்ளது.

தொடர்தல் 54ம் பக்கம்

# மலையகக் கவிதை...

53ம் பக்கத் தொடர்ச்சி...

1930களில் கண்டியில் வாழ்ந்து பின்னர் தமிழகம் சென்றுவிட்ட கவிஞர் சிதம்பரநாத பாவலரை மலையகக் கவிதை ஆளுமைகளில் முக்கியமானவராக பேராசிரியர் கா. சிவத்தம்பி அடையாளம் காட்டுகிறார். 'மலையகத்திலே இன்றும் வாய்மொழிப் பாடல்களுக்கு இடமுண்டு. இந்த பாரம்பரியத்திலேயே இதுவரை வந்த பல மலையகத்து கவிஞர்களை இனம்கண்டு சொல்லவேண்டும் போல தெரிகிறது. சக்தீ பால அய்யா, குறிஞ்சித்தென்னவன், சிதம்பரநாத பாவலர் போன்றோரின் ஊடே ஒரு வாய்மொழிப்பாரம்பரியம் உணர்த்தப்படுகின்றது என்றே கூறவேண்டும்' *(திலகரின் 'மல்லியப்பு சந்தி' பின்னுரை பேராசிரியர் கா.சிவத்தம்பி(பக: xxiv - பாக்யா வெளியீடு 2007).*

மலையகக் காந்தி என போற்றப்படும் மறைந்த தொழிற்சங்கவாதியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத்தலைவருமான ஆர். ராஜலிங்கம் பற்றி பாவலர் சிதம்பரநாதன் எழுதியிருக்கும் கவிதையின் ஒரு பகுதி இவ்வாறு அமைகிறது.

*மலையாத உள்ளத்திற் கெடுத்துக் காட்டாம்*
*மனிதர்களின் பண்பாட்டிற் கவனே சான்று*
*நிலையான கொள்கையிலே வழுவல் இன்றி*
*நிற்பதிலே இமயம் என்றால் மிகையே அல்ல*
*பலநாடும் சென்றாயந்தான் மக்கள் வாழ்வும்*
*பரிணமிக்க சேவை செய்யும் விரதம்*
*பூண்டான்*
*விலையடங்கா நலமுத்தாம் ராஜலிங்க*
*வித்தகனின் திரு நாமம் என்றும் வாழும்*

*('மாவலி' - தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு - 1973 ஆகஸ்ட்)*

மலையக மக்களை நாடற்றவராக்கிய இலங்கை சட்டவாக்க ஏற்பாடுகள் பற்றி தனது கவிதையில் குறிப்பிடும் பாவலர் சிதம்பரநாதன் அதனை இவ்வாறு எழுதுகின்றார்.

*பிறந்ததும் இங்கே வளர்ந்ததும் இங்கே*
*போவது மெங்கே வெளியேறி*
*இறந்தவர் போலே நடைபிணமாகி*
*இழிவு செய்வதும் முறைதானோ*
*புத்தகச்சட்டம் எதைப்பகர்ந்தாலும்*
*பிறந்த பொன்னாடே தாய்நாடு*
*எத்தனை ஆட்சி இயற்றிய போதும்*
*எழும்பதற்கில்லை குடிநீங்கி;*
*- சங்கு 1962*

என இலங்கை நாட்டை விட்டு மலையக மக்கள் வெளியேற வேண்டிய அவசியமல்லை என பாடிவைத்துள்ளார்.

நாட்டார் பாடல் வடிவத்தில் இருந்து தமக்கேயுரிய சுயபாடல்களை எழுதத் தொடங்கிய மலையக கவிதை இலக்கிய வரலாற்றில் அவை கவிதைகளா? பாடல்களா? என்ற கருத்து மயக்கம் இருந்தே வந்துள்ளது. பாடல் மரபில் இருந்து ஊற்றெடுத்த மலையகக் கவிதை இலக்கிய பாரம்பரியம் அந்த பாடல் மரபில் இருந்து முழுமையான கவிதை வடிவத்துக்குள் வருவதற்கு மூன்று தலைமுறைகளை கடக்கவேண்டியிருந்தது உண்மையே.

அந்த வகையில் பாடல்களாக தமது படைப்புகளை எழுதி அச்சிட்டு விநியோகம் செய்த எட்டியாந்தொட்டை கோவிந்தசாமி தேவர், கா.சி. ரெங்கநாதன். ஜில் ஜில், கே.கே. ஜபார் முதலானோரின் பாடல் படைப்புகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

இதே போல 1954ம் ஆண்டு 'இசைத்தேன்' எனும் கவிதைத் தொகுதியை கி.மு. நல்லதம்பி பாவலர் வெளியிட்டுள்ளார். கம்பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இவரது 'இசைத்தேன்' 2000ம் ஆண்டு அவரது மகன் ஹைதர் அலியினால் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளதாக அந்தனிஜீவா அவர்களின் மலையகம் வளர்த்த கவிதையில் (பக்.20) குறிப்பிடப்பட்டுள்ளது. அ.செ. வெள்ளசாமி அவர்களால் எழுதப்பட்ட 'பலவர்ண ஒப்பாரியும் பாரத நாட்டுப் பயணச்சிந்தும்', மற்றும் 'பாட்டாளியின் பாடலும் ராசுவின் கணவன் பழநியின் மரண தண்டனையும்' போன்ற படைப்புகளும் இந்த வகையினைச் சார்ந்தன.

பதுளை யூரி பகுதியைச் சேர்ந்த பெண் தொழிலாளியான எம்.எஸ். கிருஸ்ணம்மாள் (1960களில்) மலையகமெங்கும் தொழிலாளர் உரிமை மற்றும் பெண்விடுதலையை வலியுறுத்தும் பாடல்களை எழுதி பாடியுள்ளார். இவர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க தலைவியாகவும் இருந்துள்ளார். இவரது பாடல் ஒன்று இவ்வாறு அமைகிறது.

*நாம் வசிக்கும் இலங்கையிலே*
*நாடு போகும் வேகத்திலே*
*நாலு பேர்க்கும் நடுவினிலே*
*நசிங்கிடுறோம் ஈழத்திலே*
*.....*
*கருணையற்ற முதலாளிமார்*
*காட்டுகிறார் குறோதமதை*
*கங்காணிமாருக்கு அடங்கி...*
*கணக்குப்பிள்ளைக்கு நடுங்கி.*
*கண்டிப்பாக வேலைசெய்தும்*
*கருணையில்லை முதலாளிக்கு...*

*(அவரது சிந்தையை கவரும் சீர்திருத்த பாடல் தொகுப்பிலிருந்து - (மூலம்: 'சபதம்' (சன - மார்ச் 2013) உழைக்கும் பெண்களின் முன்னணியின் செய்தி ஏடு)*

இந்தப் பாடல் மூலம் ஒரு தொழிலாளி தனக்கெதிராக முன்னெடுக்கப்படும் அனைத்துவித அடக்குமுறைகளையும் வெளிக்காட்டுகின்றார்.

நுவரெலிய வட்டகொடை பிரதேசத்தில் வாழ்ந்த கபாலி செல்லன் என்பவரும் தொட்டப்புற பாடல்களில் அதிக நாட்டம் கொண்டவர். மலையகத் தோட்டங்களுக்கு திருவிழா காலங்களில் பிரதம பாடகராக அழைத்து வரப்படும் அவர் அந்த தோட்டத்தின் இயல்புகளை வைத்து பாடல்களை உடனடியாக இயற்றிப்பாடும் வல்லமை பெற்றவர் (கட்டுரையாளர் இவரது பாடல்களை நேரடியாக கேட்டிருக்கிறார்). மட்டக்களப்பில் இருந்து திரு.மைக்கல் கொலின் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'மகுடம்' சிற்றிதழின் மலையகச் சிறப்பிதழில் (2012 ஒக் - டிசம்)பேராசிரியர் செ.யோகராசா 'கவிஞர் கபாலி செல்லன் கவிதைகள் - சில குறிப்புகள்' எனும் பதிவினைச் செய்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. கவிஞர் கபாலி செல்லனது 'நம்ப படும் பாடு... சொல்லவே வெக்க கேடு...' எனும் பாடல் 1980 களில் தோட்டத் திருவிழாக்களில் கொடிகட்டிப்பறந்த பாடல்.

*எந்த நாடு நம்ப நாடு*
*நம்பி வாழ சொந்த நாடு*
*அந்தரத்திலே வாழச்சொல்லி*
*அனுப்பியிருக்கான் சிட்டிசன் காடு...*

எனும் பாடல் இன்றும் கூட மலையக தேசியம் குறித்த முன்வைக்கப்டும் 'வாக்குரிமை' - 'பிரஜாவுரிமை' வேறுபாட்டை நான்கே வரிகளில் சொல்லிக் காட்டிய வலிமை கொண்டது. 'ஓட்டுரிமை ஒன்று மட்டும் கிடைச்சிருக்கு; ஓட்டு பொட்ட மறு கிழமை பம்பரமாட்டம்... நம்ம கதி பம்பரமாட்டம்...' சட்டம் போட்டு நசுக்கிறாங்க திட்டம் போட்டு வதைக்கிறாங்க... என ஆளும் வர்க்கத்தினர் மலையக மக்களுக்கு தமது நலனுக்காக வாக்குரிமையை மாத்திரம் வழங்கியிருப்பதையும் மக்கள் நலனுக்கான பிரஜாவுரிமை வழங்கப்படாததையும் எளிய பாடல் மூலம் பாடி வைத்தவர் கபாலி செல்லன். இவரது பாடல்கள் முழுமையாக நூலுருப் பெறவேண்டியதன் தேவையை பேராசிரியர் செ.யோகராசா தனது குறிப்பிலே வலியுறுத்தியுள்ளார்.

(தொடரும்)



thilagar@thaiveedu.com



# இந்தியக் குடியுரிமைச் சட்டமும் இலங்கைத் தமிழ் அகதிகளும்

- நெல்லை ஜெயசிங் -

1955ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய குடியுரிமைச் சட்டத்தின் தொடர்ச்சியாக பல்வேறு ஆண்டுகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ள நிலையில் கடைசியாக 2019ம் ஆண்டு குறுகிய கண்ணோட்டத்தில் பாகிஸ்தான் பங்களாதேஷ், ஆப்கனிஸ்தான் நாடுகளிலிருந்து மத துன்புறுத்தலுக்கு உள்ளாகி இந்தியாவிற்குள் குடிவந்த இந்துக்கள், சீக்கியர்கள், பார்சியினர், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சமணர்கள் ஆகிய ஆறு மதத்தினருக்கு அவர்கள் வந்து ஐந்து வருடமேயானாலும் அவர்களுக்கு குடியுரிமை வழங்கும் திருத்த சட்டத்தை ப.ஜ.க. அரசு நிறைவேற்றியுள்ளது. அதே நேரம் சட்ட விரோதமாக இந்தியாவிற்குள் வந்துள்ள இஸ்லாமியர்களுக்கு இது பொருந்தாது எனவும் கூறப்படுகிறது.

சாதி சமய பாலின வேறுபாடுகள் இன்றி அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் எனக் கூறும் இந்திய அரசியல் அமைப்பு சட்டம் 14க்கு மாறாக அதனை மீறும் வகையில் இத்திருத்தம் உள்ளது.

அண்டை நாடுகள் என்ற வகையில் பூட்டான், மியான்மர், இலங்கை போன்ற நாடுகளையும் அங்கு பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளானவர்களையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி செய்யவில்லை. சிலருக்கு மட்டுமே சலுகை அளிக்கும் இச்சட்டத் திருத்தம் மிகவும் பாரபட்சமானதும், 'மதசார்பற்ற நாடு' என்ற அரசியல் அமைப்பின் உள்ளடக்கத்திற்கே முரணானதும், களங்கம் ஏற்படுத்துவதுமாக காணப்படுகிறது.

மதம் உட்பட பல்வேறு துன்புறுத்தலுக்கு உள்ளாகி அடைக்கலம் தேடி இந்தியாவிற்குள் வந்துள்ள பூட்டானிய கிறிஸ்தவர்கள், மியான்மரின் ரோகிங்கியாக்கள், பாகிஸ்தானின் அகமதியர், இலங்கையின் தமிழர் என மற்ற எவரும் இவ்வரம்புக்குள் - குடியுரிமைக்குள் இவ்வரசு கொண்டுவர விரும்பவில்லை. முழுமையாக மதத்தை மட்டுமே அளவு கோலாக கொண்டு பாரபட்சமாக குடியுரிமை பிரச்சினையை தீர்க்க முயல்வதென்பது முன்யோசனையற்ற ஆபத்தான வழி முறையாகும்.

1955ம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச்சட்டத்தில் குடியுரிமைக்கு மதம் தேவைப்படும் அம்சமாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் பஜகவினர் எல்லாவற்றிற்கும் மதத்தை முன்நிறுத்துவது மத ரீதியாக மக்களைப்பிளவுபடுத்தி ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சியையும் பாதிப்படையச் செய்வதாகும்.

இந்திய தேசத்தை இந்து ராட்சியமாக்குவதற்கான முதல் முயற்சி இது என கருதலாம்.

## இலங்கைத்தமிழ் அகதிகள்:

2019ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய குடியுரிமை திருத்த சட்டத்தில் இந்தியாவில் வாழும் இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு இடமளிக்கப்படாதது கடுமையான கண்டனத்துக்குரியது.

1983 முதல் 37 வருடங்களாக அகதி முகாம்களிலும் வெளியிலும் எந்தவித அடிப்படை உரிமைகளும் இல்லாமல் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இலங்கை சிங்கள பௌத்த பேரினவாத நாடாகும். அதன் 1978ம் ஆண்டு அரசியல் அமைப்பின் படி பௌத்தம் மட்டுமே முதன்மை மதம் எனக் குறிப்பிடப்படுகிறது. எனவே, 1983 முதல் 2010 வரை தமிழர் மீதான இன தாக்குதல் என்பது பெரும்பான்மையின பௌத்தர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டதாகும். எல்லா சந்தர்ப்பங்களிலும் பெரிய பாதிப்புக்கு உள்ளானவர்கள் பெரும்பாலும் இந்துக்களாவர். இதில் மிகப்பெரிய தாக்குதல் என்பது 1983ல் நடத்தப்பட்டதாகும். அக்கலவரத்தில் 3000 பேருக்குமேல் கொல்லப்பட்டதுடன் 25,000 க்கு மேற்பட்டவர்கள் காயமுற்றனர். வீடுகள், வணிக நிறுவனங்கள் தீக்கிரையாக்கப்பட்டு பல நூறு கோடி ரூபாய் சொத்துக்களும் அழிவுக்கு உள்ளாயின.

எனவே, இவ்வாறான கலவரங்களும் உள்நாட்டு யுத்தங்களும் ஏற்படுத்திய கொடிய பாதிப்புகளில் இருந்து தங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ள கட்டிய துணியோடு முகாமில் உள்ளவர்கள் பொது வெளியில் வந்து போராட முடியாத நிலையில், திருச்சி கொட்டப்பட்டு அகதி முகாமைச் சேர்ந்த 64 இந்திய வம்சாவழி அகதிகள் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் 17.06.19ல் குடியுரிமை கேட்டு விண்ணப்பித்ததை அரசு கவனத்தில் கொள்ளவில்லை.

பஜக தலைவர்கள், அமைச்சர்கள் இலங்கை தமிழ் அகதிகளின் வருகையை, வரலாற்றை சரிவர புரிந்து கொள்ளாமல் பேசி வருகின்றனர்.

இந்தியாவிற்குள் வந்துள்ள இலங்கை தமிழ் அகதிகளை இரு பிரிவினராக அடையாளப்படுத்தலாம்.



குழந்தை குட்டிகளுடன் உயிரை பணயம் வைத்து படகுகளில் இந்திய அரசை நம்பி தமிழக கரைகளை அடைந்தவர்களில் மிகப் பெரும்பான்மையினர் இந்துக்களாவர். இன்றும் அவர்கள் அகதிகளாகவே வாழ்கின்றனர்.

இவ்வாறு இந்தியாவை நோக்கி வந்தவர்களை இந்திய தேசம் வரவேற்று அகதி என்ற அந்தஸ்துடன் தமிழகம், கேரளா, ஒரிசா என பல்வேறு முகாம்களில் குடியமர்த்தியது. இன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் இலங்கை தமிழ் அகதிகள் 106 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பூர்வீக இலங்கை தமிழர்கள், இந்திய வம்சாவழி தமிழர்கள் என சுமார் 1,05,043 பேர் அகதிகளாக உள்ளனர். இவர்களில் முகாம்களில் 73,241 பேரும், வெளிப்பதிவில் 31,802 பேரும் உள்ளனர். 1983 தொடங்கி 37 வருடங்களாக எந்தவித அடிப்படை உரிமைகளும் இல்லாமல் கடுமையான சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தி, மிகக் குறைந்த வசதிகளை மட்டுமே வழங்கி அவர்களை முகாம்களில் இந்த அரசுகள் வைத்திருக்கின்றன.

இந்தியா சுதந்திரமடைந்து 72 ஆண்டுகளான நிலையில், இவர்கள் 37 வருடங்கள் சுதந்திரமற்று திறந்த வெளிச் சிறையில் அடைபட்டுக்கிடக்கின்றனர்.

இரண்டாம் தலைமுறையினராக இன்னும் அகதிமுகாம்களில் அடைபட்டுக்கிடக்கும் இவர்கள், தங்களையும் குடியுரிமைக்கு தகுதி உள்ளவர்களாக சேர்த்துக்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கைகளை பல வருடங்களாக விடுத்து வந்த போதும், இந்திய ஆட்சியாளர்கள் அதற்கு செவிமடுக்கவில்லை.

இந்தியாவெங்கும் இடதுசாரி கட்சிகள் உட்பட பல்வேறு அமைப்புகள் அம்மக்களின் குடியுரிமைக்கான ஆதரவை தெரிவித்து வருகின்றன.

இலங்கையின் பூர்வீக குடிகளான வடக்கு மற்றும் கிழக்கு பகுதியைச்சேர்ந்தவர்கள் ஒரு பிரிவினர். இன்னொரு பிரிவினர், ஆங்கிலேய ஆட்சியில் - 1815 அளவில் தமிழ் நாட்டிலிருந்து இலங்கையின் பெருந்தோட்டச் செய்கைக்காக கொண்டு செல்லப்பட்டவர்களின் வாரிசுகள். இவர்கள் இந்திய வம்சாவழி தமிழ் அகதிகளாவர்.

1977 இலங்கை கலவரத்தின் போது மலையக இந்திய வம்சாவழியினர் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், கொழும்பு என பல பகுதிகளுக்கு உயிர் வாழ்வதற்காக இடம்பெயர்ந்து வாழ்க்கையை தொடங்கினர். தொடர்ந்து வாழ வழியற்ற நிலையில் 1983ல் நடந்த பெரும் கலவரம் காரணமாக தமிழகத்தில் தஞ்சமடைந்தனர்.

இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கு உழைத்த இந்திய வம்சாவழி மலையக தமிழர்களின் கடந்தகால வரலாறு என்பது சோகமானதாகவே இருந்துள்ளது.

இலங்கை 1948ல் சுதந்திரமடைந்த உடனேயே, 10 லட்சம் இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களின் இலங்கை குடி உரிமையும் வாக்குரிமையும் ஒரே நாளில் பறிக்கப்பட்டு, நாடற்றவர்களாக்கப்பட்டனர். இந்நிலையில் இந்திய - இலங்கை அரசுகள் 1964ல் சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையையும் 1974ல் சிறிமா - இந்திராகாந்தி உடன்படிக்கையையும் மக்கள் உணர்வுக்கு மாறாக செய்து கொண்டன. இதன்படி இந்தியா 6 இலட்சம் பேரை ஏற்றுக் கொள்வதெனவும் இலங்கை 3,75,000 பேரை ஏற்றுக்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது. உடன்படிக்கை அமுலாக்கத்தின் முடிவில் இந்திய வம்சாவழி மக்களில் 5,25,000 பேர் மட்டுமே அங்கேயே இந்திய பிரஜா உரிமை பெற்று இந்தியாவுக்கு வந்தனர் என்பதனால், நாம் இன்னும் 75,000 பேருக்கு குடியுரிமை வழங்கலாம் என்பதனையும் இன்றைய குடியுரிமையின் போது கவனத்தில் கொள்ளவேண்டும். அதேவேளை ஆய்வாளர் இளம்பரிதி போன்றவர்கள் 1983 வரை 4,61,631 பேர் மட்டுமே இந்தியாவிற்கு அனுப்பப்பட்டதாகவும், இன்னும் 1,40,000 தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டிய தார்மீகக் கடமை இந்திய தேசத்திற்கு இருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர். மேலும் பல்வேறு இன மத கலவரங்களின் தொடர்ச்சியாக 1983 ஜூலையில் நடந்த கொடூர தமிழ் - சிங்கள கலவரத்தால் உயிருக்குப் பயந்து, உடைமைகளையெல்லாம் இழந்து, இந்தியாவிற்கு தஞ்சமென வந்த இலங்கை தமிழர்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில் இருந்து இலங்கை சென்று அங்கு குடியுரிமை இழந்த தொழிலாளர்களின் வாரிசுகள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, இங்குள்ள அகதிமுகாம்களிலும் வெளியிலும் வாழும் அகதிகளில் சுமார் 30,000 பேர் இந்திய வம்சாவழியினர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது தங்களின் தாயகத்திலேயே இந்தியர் என்ற அடையாளத்துடன் 37 வருடமாக அகதிகளாக இருக்கிறார்கள் என்பது கொடுமையான நிகழ்வாகும். உண்மையான தொப்புள்கொடி உறவுகளை திறந்தவெளி சிறைச்சாலையில் அடைத்து துன்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

ஐந்து வருடம் என்ற குறைந்த தகுதியை கொண்டவர்களுக்கு குடியுரிமை அளித்து, 37 வருடங்களை கொண்டவர்களை மறுக்கும் இச்சட்ட திருத்தம் மிகவும் பாரபட்சமானதாகும்.

இந்திய வம்சாவழி மலையக சமூகம், எந்தகாலத்திலும் தமிழ் ஈழத்திற்காக அரசை எதிர்த்து போராடவில்லை. தமது இருப்பை உறுதிப்படுத்துவதற்காகவே போராடி வந்துள்ளனர்.

இந்திய அரசாங்கம் கூறும் மூன்று நாடுகளில் இருந்து வந்தோர்க்கு இலங்கை தமிழர் போன்று பெரியதொரு வரலாற்றுப்பின்னணி கிடையாது. இந்நிலையில் அகதி முகாம் தமிழர்களின் குடியுரிமைக்கான கோரிக்கைகளை பல்வேறு தளங்களில் இருந்து பரிசீலிக்க வேண்டும்.

## இந்திய குடியுரிமைச் சட்டங்கள்:

1955ம் ஆண்டு குடியுரிமைச்சட்டத்தில் இந்திய குடியுரிமைப் பெற ஐந்து பிரதான வழி முறைகள் கூறப்பட்டுள்ளன. அதன்படி... இந்தியாவில் பிறந்தவர்கள், பெற்றோர் இந்தியர்களாக இருந்தால் குடியுரிமை பெறலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனை மட்டும் மேற்கோள் காட்டி இலங்கை அகதிகள் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம் என தமிழக பஜக தலைவர்களும் அமைச்சர்களும் சில வலதுசாரிகளும் பொதுவெளியில் கூறிவருகின்றனர்.

1986ல் இச்சட்டம் திருத்தப்பட்டு 1987க்கு முன் இந்திய மண்ணில் பிறந்தவர்களுக்கு மட்டுமே குடியுரிமை எனக் கூறுகிறது. எனவே இலங்கை அகதிகள் அதன்படி பெற முடியாது. அவ்வாறு பெற, 1987க்குப் பின் பிறந்தவரது பெற்றோரில் ஒருவராவது இந்தியராயிருந்தால் மட்டுமே அவர் குடியுரிமைக்கு தகுதியானவராவார். மேலும்

தொடர்தல் 56ம் பக்கம்

# இந்தியக் குடியுரிமை...

55ம் பக்கத் தொடர்ச்சி...

இச்சட்டம். 2003ல் திருத்தப்பட்டபோது குடியுரிமை கிடைக்க பெற்றோரில் ஒருவர் மட்டும் இந்தியராக இருக்கும் பட்சத்தில் இன்னொருவர் சட்ட விரோதமாக இந்தியாவில் குடியேறியவராக இருக்கக்கூடாது என்கிறது. எனவே இவ் அனைத்து திருத்த சட்டங்களும் இலங்கை தமிழ் அகதிகளுக்கு எதிராக இருக்கினறன. இலங்கை அகதிகளை சட்ட விரோத குடிகள் என அரசு குறிப்பிடுவதால் இந்திய குடிமகனை திருமணம் செய்து பிறக்கும் குழந்தைக்கும் குடியுரிமை இல்லை என்றாகி விடுகிறது. எனவே கடந்தகால குடியுரிமை சட்டங்கள் அவர்களுக்கு பாதகமாக இருப்பதால் 2019ல் கொண்டுவரப்பட்ட குடியுரிமை சட்டத்தில் மற்ற மூன்று நாடுகளுடன் இலங்கையையும் இணைத்து தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க முன்வரவேண்டும்.

## இரட்டைக் குடியுரிமை:

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அதிமுகவினராலும் இன்னும் சிலராலும் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலவையில் இலங்கை அகதிகளுக்கான குடியுரிமையை பெற்றுத்தர முயலாத அதிமுக தற்போது இரட்டைக்குடியுரிமை பற்றி பேசுவது வெறும் அரசியல் நாடகமாகும். ஒரு குடியுரிமை இருந்தால் மட்டுமே மற்றொன்றை பெற முடியும் என்ற அடிப்படை விபரம் தெரியாமல் சிலர் பேசுகின்றனர். இந்தியாவில் இரட்டைக் குடியுரிமை இருப்பதாக தெரியவில்லை. அத்துடன் அது இலங்கை அரசுடன் தொடர்புடையதாகும். மேலும் எந்த நாட்டு குடியுரிமையும் இல்லாமல் 30,000 இந்தியவம்சாவழி அகதிகள் தமிழகத்தில் இருப்பதை மறந்துவிடக் கூடாது. எனவே சாத்தியமற்றதை விடுத்து நடைமுறையில் சாத்தியமானதை செய்திட முயல வேண்டும்.

## OCI
## (overseas citizenship of india):

வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கான குடியுரிமையை இலங்கை அகதிகளுக்கு கொடுக்க வேண்டுமெனவும் சிலர் கோருகின்றனர். இது இரட்டைக்குடியுரிமை போன்றதல்ல. இதுவும் ஒருநாட்டின் குடியுரிமை உள்ளவர்களுக்கே வழங்க முடியும். இது இந்திய குடிமையுரிமைக்கு சமமானது அல்ல. அதன்படி ஆயுட்காலம்வரை இங்கு இருக்கலாம். ஆனால், வாக்குரிமை, அரசு வேலை, விவசாய நிலம் வாங்கும் உரிமை என்பன கிடையாது. அரசு பதவிகள் பெற முடியாது என பல கட்டுப்பாடுகள் உண்டு. நாடற்ற இந்திய வம்சாவழி அகதிகள் இதனையும் பெற முடியாத நிலையில் பூரண குடியுரிமை வழங்குவதே பொருத்தமாக இருக்கும்.

## இரண்டு கட்ட குடியுரிமை:

இலங்கை தமிழ் அகதிகளை அரசு இரு பிரிவினராக பிரித்து பார்க்க வேண்டும்.

- இலங்கை தமிழர்கள். இவர்கள் இலங்கை குடியுரிமை உள்ளவர்கள்.
- இந்திய வம்சாவழி மலையகத் தமிழர்கள். இவர்கள் இலங்கை குடியுரிமை அற்றவர்கள்.

இவர்களில், இந்திய தொப்புள் கொடி தொடர்பான உறவுள்ள இந்திய வம்சாவழி தமிழ் அகதிகளுக்கு இலங்கையில் எந்தவிதமான நில புலன்களும் முகவரியும் இல்லாதிருப்பதால் அவர்களுக்கு முழுமையாக இந்திய குடியுரிமை வழங்க வேண்டும். இலங்கை தமிழர்கள் எனப்படுபவர்களைப் பொறுத்தவரையில் இலங்கை அரசுடன் கலந்து விருப்பத்தின் அடிப்படையில் குடியுரிமை வழங்க வேண்டும்.

குடியுரிமை மட்டுமே ஒருவரின் அனைத்து உரிமைகளுக்கும் அடித்தளமாக இருக்கும். எனவே, இன்றைய குடியுரிமைச்சட்ட திருத்தத்தில் இலங்கை சேர்க்கப்படவில்லை என்பதால் இலங்கை அகதிகள் மேற்படி சட்டத் திருத்தத்தின் ஊடாக இந்திய குடி உரிமைக்கு விண்ணப்பிக்க எந்த வகையிலும் வாய்ப்பு இல்லை. ஆனால், இதன் மூலம் தேசமெங்கும் இலங்கை தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்குவதன் அவசியம் என்பது பேசுபொருளாகி இருப்பதால் எதிர்காலத்தில் அதனைப் பெறுவதற்கான ஒரு சூழல் உருவாகி இருக்கிறது என்று கூறலாம். எனவே, இலங்கை மலையக தமிழ் முற்போக்கு கூட்டணியின் முன்னாள் நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திலகராஜ் கூறுவதைப் போன்று இலங்கை தமிழ் அகதிகளுக்கு இந்திய குடியுரிமை பெறுவதற்கு மாநில, மத்திய அரசுகள் தனி மசோதா கொண்டு வருவது பயனுள்ளதாக இருக்கும்.

கோவிட் 19 எனப்படும் கொரோனா வைரஸ் உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், இந்திய தேசமும் தமிழ்நாடும் மிகப்பெரும் பொருளாதார பாதிப்பை சந்தித்து வரும் நிலையில், இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழ் அகதிகளும் மிகவும் சிரமத்துடன் வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசின் உதவித்தொகை போதுமானதாக இல்லாத நிலையில், அதனை ஈடுசெய்யும் வகையில் சாதாரண நாட்களில் வெளியில் தற்காலிகமாக பல்வேறு தினக்கூலி வேலைகளுக்குச் செல்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமது மேலதிக தேவைகளை நிறைவேற்றிவந்தனர். ஆனால் தற்போதைய கொரோனா, அதற்கு முன்னதான சுனாமி, சூறாவளி, மழை வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் அவர்களின் நிலையோ மிகவும் பரிதாபகரமானது. இவர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டிருப்பின் இவர்களும் ஏனைய பிரஜைகளைப்போன்று சுதந்திரமானதொரு வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டிருப்பர்.

கொரோனாவின் கோரத்தாண்டவம் முடிவிற்கு வந்தபின் இந்திய அரசு குடியுரிமை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள் ளத்தொடங்கும் என எதிர்பார்க்கலாம். சட்டவிரோத குடியேறிகள் என இன்றைய அரசாங்கம் இலங்கை அகதிகள் மீது புதிய முத்திரை குத்திய நிலையில் இலங்கை அகதிகள் தமக்கான போராட்டத்தை எந்த வடிவத்திலும் மேற்கொள்ள முடியாது.

இலங்கை தமிழ் அகதிகள் வாழ்நாள் எல்லாம் அகதி முகாம்களிலேயே ஒருவித அடிமை வாழ்க்கை வாழ்ந்து மடிவதை உலக நாடுகள் அனுமதிக்ககூடாது. எனவே இப்பரிதாப நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்திய அரசின் மீது பல்வேறு வகையில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும்.

இலங்கை அகதிகளை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக, இலங்கையைப் பற்றி எதுவுமே அறியாத புதிய சந்ததியினரை இலங்கைக்குச் சென்றிடவென வற்புறுத்துவது மனிதாபிமானமற்ற செயலாகும். பல தலைமுறையாக இங்கு வாழும் அவர்களை அகதி முகாம்களிலிருந்து விடுவித்து இந்திய குடியுரிமை வழங்க தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல் இலங்கையின் ஆட்சியாளர்களும் மலையகத் தொழிற்சங்க தலைவர்களும் சர்வதேச தமிழ் சமூகமும் அரசியல் இலாபக் கணக்கு பாராது முன் முயற்சி எடுப்பது காலத்தின் கட்டாயமாகும்.

இந்திய தேசம் ஐக்கிய நாட்டு அமைப்பில் இருந்து கொண்டு சர்வதேச அகதிகளுக்கான உடன்படிக்கையில் கையெழுத்திடாத போதும் இலங்கை தமிழ் அகதிகள் விடயத்தில் மனிதாபிமான அடிப்படையில் குடியுரிமை வழங்கிட முன்வரவேண்டும்.

jeyasingh@thaiveedu.com

■ ■ ■



# மலையகக் கூத்துகள்

- ஞானம் லெம்பட் -

இலங்கையும் இந்தியாவும் பிரித்தானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து தமிழ் மக்கள் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காகக் கொண்டுவரப்பட்டனர்.

1505ஆம் ஆண்டு இலங்கையின் காலி என்ற இடத்தில் போர்த்துக்கேயர் முதலில் காலடி வைத்தனர். 1658இல் இலங்கையின் பெரும்பாலான காரையோரப் பகுதிகளைப் போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றினர். ஆனால் 1796 ஆம் ஆண்டு இலங்கையை ஒல்லாந்தர் ஆங்கிலேயரிடம் பறிகொடுத்தனர். ஆங்கிலேயர் ஒல்லாந்தரிடம் இருந்து இலங்கையைக் கைப்பற்றியபோது கறுவா, மிளகுச் செய்கையில் ஒல்லாந்தர் ஈடுபட்டிருந்தனர். 1815ஆம் ஆண்டு கண்டியைப் பிரித்தானியர் கைப்பற்றி, இலங்கை முழுவதையும் தம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர். இதன்போது இலங்கையில் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன.

இலங்கையில் கறுவா வியாபாரம் வீழ்ச்சியடையவே, இதற்கு மாற்றீடாக ஆங்கிலேயர் கோப்பிச் செய்கையில் ஈடுபடலாயினர். இக்காலங்களில் உள்நாட்டுச் சிங்கள மக்கள் நெற் செய்கையிலும் வீடுகளில் கோப்பிச் செய்கையிலும் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியருக்கும் பிரியமான கோப்பி, அக்காலங்களில் மேற்கிந்திய தீவுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. பிரித்தானிய மக்களின் கோப்பி நுகர்வு அதிகரித்தபோது மேற்கிந்திய தீவுகளில் கோப்பி உற்பத்தி வீழ்ச்சி கண்டது. அதே வேளை அங்கு உற்பத்தி செய்யப்பட்ட கோப்பியின் வரிச்சலுகை இரத்துச் செய்யப்பட்டது. இதன் காரணமாக, ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்ததும், கோப்பிச் செய்கைக்கு உகந்த காலநிலையைக் கொண்டதுமான இலங்கையில், கடல் மட்டத்திலிருந்து 1700 அடி உயரமானதும், செழிப்பான வண்டல் மண்ணையும், நீர் நிறைந்த நதிகளையும் கொண்ட மலைநாட்டில் வியாபாரத்திற்காக கோப்பிச் செய்கை ஆங்கிலேயரால் ஆரம்பிக்கப்பட்டது.

1824இல் ஜோர்ஜ் பேட் (George Bird) என்ற ஆங்கிலேயர், கம்பளைக்கு அருகிலுள்ள சிங்கபிட்டிய என்ற இடத்தில் கோப்பிச் செய்கையை ஆரம்பித்ததாக ஜே. பேர்குசன் (J. Furguson) கூறுகிறார். 1825இல் ஆளுநர் பான்ஸ் (Governer Barns) என்பவர் பேராதனையில் கோப்பித் தோட்டம் ஒன்றை ஆரம்பித்ததாக கே.எம்.டி. சில்வா கூறுகிறார். நாளடைவில் நோய் காரணமாகக் கோப்பிச் செய்கை வீழ்ச்சி கானவே, 1867இல் ஜேம்ஸ் ரெய்லர் என்ற ஆங்கிலேயரால் தேயிலைச் செய்கை ஆரம்பமானது என்று டி. வெசும்பெருமா (D. Wesumperuma) தனது பதிவில் கூறுகிறார்.

ஆங்கிலேயர், சிங்களக் கிராமங்களில் அல்லது அதை அண்டிய இடங்களில் காணிகளைச் சுவீகரித்துக் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டதன் காரணமாகப் பொரும்பாலான சிங்களத் தொழிலாளர்கள் ஆங்கியோரின் தோட்டங்களில் வேலை செய்ய மறுத்தமையினால், தமக்குத் தேவையான தொழிலாளர்களை அவர்கள் தென் இந்தியாவிலிருந்து கொண்டுவந்தனர்.

தென் இந்தியாவிலிருந்து முதன் முதலில் எப்போது தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டனர் என்பதில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. 1798-1805இற்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் பிரித்தானிய ஆளுநர் நோத் (Governer North) என்பவரின் காலத்தில் தென் இந்தியத் தொழிலாளர்கள் கூட்டிவரப்பட்டதாக எச்.ஏ.கே. குலுகல்ல (H.A.S. Hulugallo) கூறுகிறார். (British Governers of Ceylon).

அதன் பின்னர் 1821 இல் 'வழிகான்மார்





படை' (Pioneer Force) எனப்படும் படைகளுக்கு முன் சென்று வழிகளைச் செப்பனிடுவோர் கூட்டிவரப்பட்டதாக சேர். எட்வேட் ஜெக்சன் (Sir. Edward Jacksan) நமது Report of commssion on Immigration என்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், 19ஆம் நூற்றாண்டிலேயே அதிகமான தொழிலாளர்கள் தேயிலை, றப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக திருச்சி, மதுரை, சேலம், வேலூர் பகுதிகளிலிருந்தும் வேறு சில பகுதிகளிலிருந்தும் கொண்டுவரப்பட்டனர். பெரும்பாலானவர் தமிழர்களாயினும், தெலுங்கு, மலையாள மொழி பேசுவோரும் இவர்களுள் அடங்குவர்.

தென் இந்தியாவிலிருந்து வந்த இம்மக்கள் தலைமன்னாரிலிருந்து கால்நடையாக... உண்ண உணவின்றி, தங்க இடமின்றி வரும் வழியில் பட்டினியால், நோய் நொடிகளினால், தரகர்களினால் (கங்காணிமார்) நரபலி கொடுக்கப்பட்டும் உயிர் இழந்தும் உள்ளனர் என்பது மிகக் கவனிக்கப்பட வேண்டியது.

இவ்வளவு துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்து வந்த மக்கள், தங்களுடன் தமது பண்பாடு, கலை, கலாச்சாரம், நம்பிக்கைகள், சமயம் என்பவற்றையும் காவி வந்து, இன்றுவரை அவற்றைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாகக் கற்றுணர்ந்த செயல்முறையாகும். மனித குலத்தின் வாழ்க்கை முறைகள் பண்பாடாகின்றன. ஒரு சமூகத்தின் வாழ்க்கை விழுமியங்களையும், அதன் அர்த்தங்களையும் அவர்களின் பண்பாட்டின் மூலம் அறியலாம். பண்பாடு அறிவு சார்ந்த ஒன்று. இது தலைமுறை தலைமுறையாகக் கண்டு, கேட்டு அறிந்த பழக்கவழக்கங்கள், நடத்தைகள் என்பனவற்றின் கூட்டுச் சேர்க்கையாகும்.

இது, அச்சமூகத்தின் அறிவு, நம்பிக்கை, கட்டுப்பாடு, ஒழுக்கநெறிகள் சார்ந்து இருக்கும். பல்வேறு காரணங்களால் மக்களின் இடப்பெயர்வு ஏற்படும்போது இப் பண்பாடும் இவர்களோடு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வாறு தமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டு வந்த மலையகத் தமிழ் மக்கள் பல இன்னல்களைச் சந்தித்த போது தம், சமய நம்பிக்கைகளில் இறுகிய பற்றுக்கொள்ள நேரிட்டது. தோட்ட நிருவாகிகள் தொழிலாளரின் மதச் சுதந்திரத்தில் தலையிடாது விட்டமையால், அவர்கள் சமயச்சடங்குகள், விழாக்கள், கலைநிகழ்ச்சிகள், கூத்துக்கள் என்பவற்றைப் பேணிப் பாதுகாக்க வாய்ப்பு கிட்டியது.

இவ்வாறு மலையக மக்கள் சுமந்து வந்த பண்பாடுகள் பலவற்றை அவர்களது கலை நிகழ்வுகள், மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அவை, வாய்மொழியாக வருபவை. இதனுள்...

**வாய்மொழியாக வருபவை:**

- **பாடல்கள்:** நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள், குரவைப் பாடல்கள், கதைகள், தாலாட்டு, ஒப்பாரி என்பன அடங்கும்.
- **சடங்குகள்:** பிறப்பு, பூர்ப்பு நீராட்டு, திருமணம், இறப்பு சடங்குகள் ஆகியனவாகும்.
- **மரபு வழிக்கலை:** நடனங்கள், கோலாட்டம், காவடி, கும்மி, கரகம், சிலம்பம் ஆகியவை இதனுள் அடங்கும்.
- **நாடகங்கள்:** பழமையான கூத்துகள், நவீனப்படுத்தப்பட்ட கூத்துகள், நவீன நாடகங்கள் என்பன இதனுள் அடங்கும்.
- **இசை:** தப்பு, முரசு என்பன முக்கியமானவை.
- **சிற்பம்.**
- **ஓவியம்.**
- **வழிபாட்டு முறைகள்:** குடும்பவழிபாடு, குலவழிபாடு, குறுவழிபாடு என்பனவாகும்.

இவர்களது கலைநிகழ்வுகளில் முக்கியமானவை மரபுவழிக் கூத்துகளாகும். இக் கூத்துகள் அவர்களது வாழ்வுடன் மிக இணைந்ததாக இருக்கக் காணலாம்.

'காமன் கூத்து', 'அர்ச்சுனன் தபசு', 'பொன்னர் சங்கர்' ஆகியன மரவு வழிக் கூத்துகளில் முக்கியமானவை.

*தொடரும்...*

***உசாத்துணை:***

- *A History of Ceylon*
- *Pioneers of the planting Enterprises in Ceylon.*
- *British Governors of Ceylon.*



ganam.lambert@thaiveedu.com



# அமைச்சர் குணவர்த்தனா - தூதர் அலைனா உரையாடல்

- காமினி கோபல்லவா
தமிழாக்கம்: எம்.எல்.எச். மொகிதீன்

## காட்சி 3

(சூம் துவக்கப்படுகிறது)

**அலைனா:** கதையோடை கதை, அமைச்சர் குணவர்த்தனா, நான் கேள்விப்பட்டன் உங்கடை அப்பாதான் இஞ்சை இடதுசாரித்துவத்தின் பிதாமகர் எண்டு!

**குணவர்த்தனா:** ஓம், அலைனா, என்.எம். பெரறா, கொல்வின் மாமா; எல்லாரும் அப்பாவின் வழிவந்தவர்கள்தான்!

**அலைனா:** குடியரசு யாப்பை வரைஞ்சது கொல்வின் மாமாதானே!

**குணவர்த்தனா:** ஓம், அலைனா, 72லை.

**அலைனா:** இனம், சமயம், மொழி வாரியாக எவருக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது என்டு சோல்பரி யாப்பில் இருந்த 29ம் பிரிவை நீக்கியவர் ஆனானப்பட்ட கொல்வின் மாமா தானே!

**குணவர்த்தனா:** கொல்வின் மாமா எவ்வளவு பெரிய முற்போக்குவாதி தெரியுமோ?

**அலைனா:** ஓம், ஓம், மதம் மனிதருக்கு அபின் எண்டு சொல்லிப்போட்டு...

**குணவர்த்தனா:** மார்க்ஸ் சொன்னதை மாமா சொன்னார். அதிலென்ன தப்பு?

**அலைனா:** அதிலை தப்பில்லை. ஆனால் மதம் மனிதருக்கு அபின் எண்டு சொல்லிப்போட்டு, உங்கடை நாட்டின் அரசமதம் பௌத்தமே எண்டு வரைஞ்சிருக்கிறாரே!

**குணவர்த்தனா:** ?

**அலைனா:** ஒரு மொழி எண்டால் இரண்டு நாடுகள், இரண்டு மொழிகள் எண்டால் ஒரு நாடு எண்டு சொன்னதும் மாமாதானே!

**குணவர்த்தனா:** ஓம்!

**அலைனா:** பேந்து உங்கடை மொழிதான் ஆட்சிமொழி எண்டதை உறுதிப்படுத்தினதும் மாமாதானே!

**குணவர்த்தனா:** இல்லை, அலைனா! அதை 56லையே பண்டா மாமா;

**அலைனா:** ஓமோம், அவர் 56லை அடியெடுத்தவர், இவர் 72லை முன்னெடுத்தவர்!

**குணவர்த்தனா:** குறைவிளங்க வேண்டாம், அலைனா! உங்கடை அமெரிக்காவிலை ஆங்கிலம் மட்டும்தானே ஆட்சிமொழி?

**அலைனா:** அமெரிக்காவிலை ஆட்சிமொழி எண்ட பேச்சுக்கே இடமில்லையே! அங்கை ஆங்கிலம் இயல்பாகவே நிருவாகமொழி ஆகியதே!

**குணவர்த்தனா:** போகட்டும்! எங்கடை நாட்டிலை நாங்கள் எங்கடை மொழியை மாத்திரம்தான் 56லை ஆட்சிமொழி ஆக்கினோம்!

**அலைனா:** அதாவது மற்ற மொழியினர் வாய் திறக்கக் கூடாது!

**குணவர்த்தனா:** பேந்து 87லை இந்தியா தலையிட்டு;

**அலைனா:** மற்ற மொழியையும் ஆட்சிமொழி எண்டு;

**குணவர்த்தனா:** சேர்த்தனாங்கள்.

**அலைனா:** அதிலையும் நீங்கள் விட்டுக்குடுக்கேல்லை.

**குணவர்த்தனா:** எதிலை?

**அலைனா:** அதிலை ஒரு வேடிக்கை என்னெண்டால், இலங்கையின் ஆட்சிமொழி உங்கடை மொழி மட்டுமே. அத்துடன் மற்ற மொழியும் ஆட்சிமொழியே எண்டு உங்கடை யாப்பிலை கிடக்குது!

**குணவர்த்தனா:** அதிலென்ன வேடிக்கை, அம்மணி?

**அலைனா:** ‘மட்டுமே’ எண்டது ‘அத்துடன்’ எண்டு தொடருமோ?

**குணவர்த்தனா:** யாப்பிலை அப்பிடிப் போட்டிருக்கே!

தொடர்தல் 59ம் பக்கம்

# அமைச்சர் குணவர்த்...

58ம் பக்கத் தொடர்ச்சி...

**அலைனா:** ஓம், உங்கடை மொழியும் மற்ற மொழியும் ஆட்சிமொழிகள் எண்டு ஒரே வசனத்தில் போட, சரிநிகராகப் போட உங்களுக்கு மனம் ஒப்பவில்லை. அதாலை இலக்கண விதியை மீறி 'மட்டுமே' எண்டும் 'அத்துடன்' எண்டும் சொல்லி பாரபட்சத்தை நிலைநாட்டியிருக்கிறீங்கள்!

**குணவர்த்தனா:** வெளியாட்களுக்கு எங்கடை யாப்பு இலேசிலை விளங்காது!

**அலைனா:** வடிவா விளங்குது, அமைச்சரே! யாப்பு படிச்சுப் பாட்டுப் பாடேலாது எண்டுதான் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் பாட்டுப் படிச்சு யாப்பு வரைஞ்சிருக்கிறியள்!

**குணவர்த்தனா:** எங்கடை யாப்பின்படி இஞ்சை எந்த மாகாணத்திலையும் எந்த மொழி பேசப்பட்டாலும் எங்கடை ஆட்களையே, எங்கடை மொழி பேசும் ஆட்களையே அதிகாரிகளாக நியமிப்போம். ஆனபடியால்தான் வேறை மொழியாட்களை நாங்கள் படைகளில் சேர்ப்பதில்லை.

**அலைனா:** அதாவது மற்ற மொழி பேசும் மாகாணங்களுக்கு உங்கடை மொழியாட்களை, ஏதோ ஒரு திமிரிலை, ஆளுநராகவும், படையதிகாரிகளாகவும், காவலதிபர்களாகவும் அமத்துவது ஏன் எண்டு இப்ப நல்லாய் விளங்குது, அமைச்சரே!

**குணவர்த்தனா:** இது திமிரில்லை, அலைனா!

**அலைனா:** திமிரில்லை எண்டால், உங்கடை சமயத்துக்கு அல்லது மொழிக்கு மற்றச் சமயத்தவரை அல்லது மொழியினரை அமைச்சராய் அமத்துவியளோ?

**குணவர்த்தனா:** ?

**அலைனா:** உங்கடை காவல்துறைக்கு அல்லது படைமுகாக்கு மற்ற மொழியினரை தலைமை அதிகாரியாய் அமத்துவியளோ?

**குணவர்த்தனா:** ?

**அலைனா:** தெற்கு மாகாண அகழ்வாராய்ச்சிக்கு வடக்கு மாகாணத்தவரை பொறுப்பாளராக அமத்துவியளோ? மேற்கு மாகாண அகழ்வாராய்ச்சிக்கு கிழக்கு மாகாணத்தவரை பொறுப்பாளராக அமத்துவியளோ?

**குணவர்த்தனா:** அதை விடுவம், அலைனா;

**அலைனா:** கிழக்கு மாகாண அகழ்வாராய்ச்சிக்குப் பொறுப்பாக 100 விழுக்காடு உங்கடை இனத்துப் படையதிகாரிகளைக் கொண்ட ஓர் அணியை அமைத்திருக்கிறீர்கள். உங்கடை இனத்தவர் இரண்டொருவர் கூட அதைக் கண்டித்திருக்கின்றனர். ஆனால், மற்ற இனத்தைச் சேர்ந்த அறிவார்ந்த முனிவர் ஒருவர்; மன்னிக்கவும் முனைவர் ஒருவர் அதைக் கண்டிக்காமல், 'அந்த அணி தற்பொழுது ஒரே இனத்து, சமயத்து ஆட்களைக் கொண்டுள்ளது' எண்டு பட்டும் படாமலும் பூசி மெழுகியிருக்கிறார். இனிமேல் அதில் மற்ற இனத்தவர்கள் சேர்க்கப்படப் போகிறார்கள் எண்ட தொனிப்பட! அவர்கள் முழுப்பேரும் படையதிகரிகள் எண்டதை வேண்டுமென்றே அவர் மழுப்பி எழுதியிருக்கிறார்...

**குணவர்த்தனா:** அலைனா!

**அலைனா:** நீங்கள் அடையாளப் பதவியில் அமத்தும் மற்ற இனத்தவர்கள் தமது இனத்தின் அல்லது மொழியின் அல்லது சமயத்தின் உரிமைகளை, மனித உரிமைகளை விலைபேசி விற்பார்கள்.

**குணவர்த்தனா:** அலைனா!

**அலைனா:** உங்களைத் தட்டிக்கேட்கும் தமது இனத்து தலைவர்களையும், ஊடகர்களையும், தொண்டர்களையும்; பட்டப்பகலிலும், நடுத்தெருவிலும், தேவாலயங்களிலும், திருவிழாக்களிலும் வைச்சு சுட்டுத்தள்ளுவார்கள்.

**குணவர்த்தனா:** அலைனா!

**அலைனா:** அமைச்சரே, மற்ற மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படாதது பற்றியோ, அகழ்வாய்வுக் குழுவில் மற்ற இனத்தவர்கள் சேர்க்கப்படாதது பற்றியோ, உங்கடை இனத்தவரும் படையினரும் மற்ற ஊர்களில் மேற்கொள்ளும் காணி-அபகரிப்பு பற்றியோ மற்ற இனத்து அடையாள அமைச்சர்கள் அல்லது அடையாளப் பதவியாளர்கள் இதுவரை உங்களைத் தட்டிக் கேட்டிருக்கிறார்களா?

**குணவர்த்தனா:** ?

**அலைனா:** அவர்கள் வாய் திறந்தால், அவற்றை எல்லாம் நியாயப்படுத்துவதற்கான வாய்திறப்பாகவே இருக்கும் உங்கடை அரசும், ஊடகங்களும் அவர்களை முன்னிலைப்படுத்தும் அவர்களை நாட்டுப்பற்றாளர்கள் எண்டு ஏற்றிப்போற்றும் அவர்களை மாகாண, மாவட்ட இணைப்புக் குழுக்களுக்கு தலைவர்களாக அமத்துவீர்கள் வெளிநாட்டு உதவிகளை அரசாங்க உதவிகள் எண்டு சொல்லி நீங்கள் அனுப்ப, அவர்கள் தமது உதவிகள் எண்டு சொல்லி தத்தம் ஊர்வழியே குடுப்பார்கள் உங்கள் விழாக்களில் அவர்களுக்கு தனியிடம் ஒதுக்கப்படும். உங்கள் அரச ஊடகங்களும், நீங்கள் விலைக்கு வாங்கின மற்ற மொழி ஊடகங்களும் போட்டிபோட்டு அவர்களைப் பேட்டிகாணும். அவர்களை மற்றத்தரப்பின் தலைவர்கள் எண்டு இனங்காட்டும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர்களோடு ஊடாடுகிறீர்களே! ஏன் அவர்களோடு பேசிப்பறைஞ்சு நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைச்சிருக்கலாமே! ஏன் தீர்த்து வைக்கவில்லை? முழுநாட்டையும் விழுங்குவதற்கு காலம் கனியும்வரை நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்தடிப்பதற்காகவே அவர்களுக்குப் பட்டங்கள், பதவிகள், பவிசுகள் குடுத்து நாடகம் ஆடப்படுகிறது! 70 ஆண்டுகளுக்கு மேலாக ஆடப்படும் நாடகம் அது!

**குணவர்த்தனா:** அலைனா, இது ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு இனம்!

**அலைனா:** அதாவது கொல்வின் மாமா சொன்ன மாதிரி, உங்கடை நாடு இரண்டு படும் எண்டிறியள்!

**குணவர்த்தனா:** இல்லை, இரண்டுபடாது. இது ஒரு நாடு எண்டதை சம்பந்தரே ஏற்றுக்கொண்டுள்ளாரே, அலைனா!

**அலைனா:** ஓம், சிங்கக்கொடியையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால் ஒரு மொழி, ஒரு இனம் எண்டதை அவர் ஏற்றுக்கொண்டவரோ?

**குணவர்த்தனா:** அதையும் அவர் ஏற்றுக்கொள்ளவேண்டிய காலத்தை நோக்கித்தான் நாங்கள் நடைபோட்டு வருகிறோம்.

**அலைனா:** அதாவது ஒரு மொழி, ஒரு சமயம் எண்ட கனவை நோக்கி நீங்கள் நடைபோட்டு வருகிறீர்கள்.

**குணவர்த்தனா:** ?

**அலைனா:** ஏன், சம்பந்தரும் மற்றத் தரப்பினரும் உங்கடை இனம், மொழி, சமயம் எல்லாத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளார்களே! நீங்கள்தானே மற்ற இனம், மொழி, சமயம் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை! நீங்கள் மட்டும்தானே ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மொழி, ஒரு சமயம் எண்ட கனவை நோக்கி நடைபோட்டு வருகிறீர்கள்.

**குணவர்த்தனா:** எங்கள் கனவை நாங்கள் நனவாக்க வல்லவர்கள், அலைனா!

**அலைனா:** ஓம், ஓம், ஒண்டில் உங்கடை பகற்கனவு அல்லது கொல்வின் மாமாவின்ரை அமுக்கிப்பேய்க்கனவு நனவாகும் போலை! அதற்காகத்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு நீங்கள் ஆப்பு வைச்சனீங்கள். அந்த ஒப்பந்தப்படி ஒண்டுசேர்த்த வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிரிச்சிருக்கிறியள். மாகாணங்களுக்கு காவல்துறை, காணி அதிகாரம், நேரடி வெளிநாட்டு உதவி பெறும் அதிகாரம் குடுக்க மறுத்திருக்கிறியள்.

**குணவர்த்தனா:** அது பிரிவினையைத் தடுக்க, அலைனா!

**அலைனா:** ஓம், பிரிவினையைத் தடுக்க எண்ட கதைதானே இஞ்சையும் எங்கையும் எடுபடும். உண்மையான காரணம் அதுவல்ல! உண்மையான காரணம் இதுதான் அமைச்சரே! வடக்கிலும் கிழக்கிலும் இரண்டொருவரை அடையாளப் பதவிகளில் அமத்தி, அவர்களைப் பயன்படுத்தி வடக்கையும் கிழக்கையும் பிரித்தாளுதல் காவல்துறை அதிகாரத்தைக் குடுக்காமல் வைச்சிருந்து அந்த மக்களை தொடர்ந்தும் அடக்கியாளுல் காணி அதிகாரத்தைக் குடுக்காமல் வைச்சிருந்து உங்கடை படைகளை மற்றவர்களின் புலங்களில் நிலைநிறுத்தி, உங்கடை ஆட்களை அங்கு குடியேற்றி, விகாரைகளை அமைச்சு மற்றவர்களின் தாயகத்துக்கு ஆப்பு வைத்தல், வெளிநாட்டு நிதியுதவியோ புலம்பெயர்ந்தோரின் நிதியுதவியோ நேரடியாகக் கிடைக்காமல் செய்வதன் மூலம் அவர்களின் பொருள்வளத்தை முடக்கி, அவர்களை உங்களிடம் தெண்டிப்பிழைக்கவும், உங்களை அண்டிப்பிழைக்கவும் நிர்ப்பந்தித்தல்; உண்மையான காரணம் இதுதான், அமைச்சரே! ஓ, ஆரியசிங்கா!

**ஆரியசிங்கா:** ஓம், தூதர் அலைனா, ஐஞ்சு நிமிசம் இடைவேளை எடுப்பமோ?

**அலைனா:** ஓம், அதுக்கென்ன, ஆரியசிங்கா!

(சூம் ஓய்கிறது)

## காட்சி 4
### (சூம் துவக்கப்படுகிறது)

**குணவர்த்தனா:** என்னதான் சொன்னாலும் உங்கடை அதிபர் துரும்பு பரவாயில்லை, அலைனா!

**அலைனா:** நைச்சன்!

**குணவர்த்தனா:** என்னெண்டு?

**அலைனா:** ஒண்டுமில்லை, நீங்கள் சொல்லுங்கோ!

**குணவர்த்தனா:** கொறனா விசயத்திலை குறுக்கிட்ட முழுப்பேரின் சீட்டையும் அவர் கிழிச்சு வீட்டுக்கு அனுப்பி வைச்சது மெத்த நேர்த்தியான நடவடிக்கை. மற்றும்படி கொறனா விசயத்திலை அமெரிக்கா உலகத்தை விஞ்சியிருக்க முடியுமா?

**அலைனா:** ம்; மேலை சொல்லுங்கோ, குணவர்த்தனா!

**குணவர்த்தனா:** உலக சுகாதார அமைப்பு, மனித உரிமை மன்றம், காலநிலை உடன்பாடு, அமெரிக்க - ரஷிய அணுவாயுத உடன்பாடு, அமெரிக்க - ஈரான் உடன்பாடு; எல்லாத்திலுமிருந்து அமெரிக்கா வெளியேறினது தலைசிறந்த சாணக்கியம் எண்டு வெளிப்படையாகவே தெரியுதே!

தொடர்தல் 60ம் பக்கம்

# அமைச்சர் குணவர்த்...

59ம் பக்கத் தொடர்ச்சி...

**அலைனா:** நீங்களும் உலக அமைப்புகளிலிருந்து வெளியேறப் போவதாகக் கேள்வி!

**குணவர்த்தனா:** அம்மணி, அலைனா, உண்மையிலை நான் உங்களிடம் காதோடு காதாகச் சொல்ல விரும்பிய சங்கதி;

**அலைனா:** என்ன சங்கதி?

**குணவர்த்தனா:** நீங்கள் செய்ததை, செய்வதை, செய்யப் போவதை எல்லாம் நாங்களும் செய்தோம். செய்கிறோம், செய்யப் போகிறோம்.

**அலைனா:** விளங்கேல்லை.

**குணவர்த்தனா:** நீங்கள் மற்ற நிறத்தவர்களுக்கு செய்துவந்துள்ளதையே நாங்களும் மற்ற இனத்தவர்களுக்கு செய்துவந்துள்ளோம்.

**அலைனா:** அச்சா!

**குணவர்த்தனா:** நீங்கள் நெல்சன் மன்டேலாவுக்கே பயங்கரவாதி எண்டு முத்திரை குத்தின ஆட்கள். அப்ப மாட்டின் லூதர் கிங்கை உங்கை விட்டுவைக்க நியாயம் இல்லைத்தானே! முந்தி உங்கை அதிபர் லிங்கன் விட்ட பிழையை இஞ்சை பண்டா மாமாவும், டட்லி மாமாவும் விடப் பாத்தவை. அதுக்கு எங்கடை ஆட்கள், எங்கடை குருமார் விட்டதுமில்லை, இப்ப விடவுமில்லை, இனிமேல் விடப் போவதுமில்லை!

**அலைனா:** அப்படியா?

**குணவர்த்தனா:** ஆகவே 'கருப்பினத்தவரின் உயிர் முக்கியமே' எண்டு முழங்கும் ஆட்களை அதிபர் துரும்பு பயங்கரவாதிகள் எண்டு சாடுவது சாலவும் பொருந்தும்! மிகவும் மெச்சத்தக்கது!

**அலைனா:** இது எங்கள் செயலாளர் பாம்பியோவின் காதில் இனிக்கும் சேதி!

**குணவர்த்தனா:** இழவு விழ, அலைனா? அவர் கேட்டுக் கொண்டிருப்பாரோ?

**அலைனா:** ம்; எனக்குத் தெரியாது, அமைச்சரே! அதை விட்டுட்டு நீங்கள் தொடர்ந்து சொல்லுங்கோ!

**குணவர்த்தனா:** அதிபர் துரும்புக்கு பிரதமர் மோடியைப் பிடிக்கும். எங்களுக்கு அவை இரண்டு பேரையும் பிடிக்கும்.

**அலைனா:** அப்படியா?

**குணவர்த்தனா:** ஓம், அப்படித்தான், அலைனா! அதிபர் துரும்புக்கு ஒபாமாவையும் கிலாரியையும் பிடிக்காது. எங்களுக்கும் அந்த இரண்டு பேரையும் பிடிக்காது!

**அலைனா:** செயலாளர் பாம்பியோவுக்கு இது இன்னும் சுவையான சேதியாய் இருக்கும்!

**குணவர்த்தனா:** குறையாக எடுக்கவேண்டாம், அலைனா! எனக்கொரு கரவு; இப்ப அவர் இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார் போலை கிடக்கு!

**அலைனா:** ம்; இப்ப எண்டு சொல்லேலாது;

**குணவர்த்தனா:** அப்ப பேந்து கேப்பரோ?

**அலைனா:** நான் பேந்து சொல்லுறன், நீங்கள் உங்கடை பாட்டிலை சொல்லிக் கொண்டு போங்கோ! பிரதமர் மோடி;

**குணவர்த்தனா:** பிரதமர் மோடி நல்ல மனுசன். நாங்கள் பயந்த மாதிரி அவர் மற்றப் பக்கம் சாயேல்லை.

**அலைனா:** எந்தப் பக்கம்?

**குணவர்த்தனா:** நீங்கள் தெரிஞ்சுகொண்டு கேக்கிறியள்.

**அலைனா:** இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எழுத்துப் பிசகாமல் நடைமுறைப்படுத்த வேணும் எண்டு அவர் உங்களுக்குச் சொன்னவர்தானே!

**குணவர்த்தனா:** ஓம், வாயாலை சொன்னவர், ஊடகங்களுக்காக! எண்டுமே அவர் உளமாரச் சொன்னதில்லை. அவர் இஞ்சை வந்தால், அல்லது நாங்கள் அங்கை போனால் சொல்லுவர். அவ்வளவுதான்! மற்றும்படி ஏன் நாயே எண்டும் கேட்கமாட்டார். அது எங்களுக்கு நல்ல வடிவாகத் தெரியும். ஏன், உங்களுக்கும் தெரியும் தானே?

**அலைனா:** ம்; எங்களுக்குத் தெரிஞ்சது இருக்கட்டும். நீங்கள் சொல்லுங்கோ!

**குணவர்த்தனா:** 'எதிரி எதிர்ப்பவனை நீ ஆதரி, எதிரி ஆதரிப்பவனை நீ எதிர்' எண்டது மாவோவின் சிந்தனை மட்டுமல்ல, மகிந்த சிந்தனையும் கூட!

**அலைனா:** அப்படியா?

**குணவர்த்தனா:** எங்கடை மற்றப் பக்கத்துக்கு இந்தியாவிலை பரம வைரிகள் இருக்கிறார்கள். அவை எல்லாரும் எங்கடை ஆருயிர் நண்பர்கள். நான் ஆட்களுடைய முழுப்பெருகளைச் சொல்லமாட்டன். அவர்களுடைய செல்லப் பேர்களை மட்டும் சொல்லுறன்: சோ, சாமி, சோனி, ராமு, மணி, காந்தன், மோகன்;

**அலைனா:** மேனன், நாராயண், நம்பியார்;

**குணவர்த்தனா:** நாங்கள் குடுத்து வைச்சவர்கள்! அதாவது மேற்படி ஆட்களுக்கு நாங்கள் குடுத்து வைச்சவர்கள்! அவங்கடை படிப்பு, பட்டம், பதவி, பணம்; மற்றது எங்கடை; சீ... அதை வெளியாலை சொல்லக் கூடாது; இந்த ஒருசில ஆட்கள் அந்த முழு மாநிலத்தையே, முழு நாட்டையே செல்லாக் காசாக்கி விட்டார்களே! நாவூறுபட, மிச்சம் முழுக்க மற்றப் பக்கம்! அதை விடுவம், அலைனா! உங்கடை வெள்ளை ஆட்கள் வெறும் வெருளிகள் மாதிரி, வெகுளிகள் மாதிரி நடக்கிறதோ?

**அலைனா:** என்ன?

**குணவர்த்தனா:** மற்ற நிறத்தவை ஆர்ப்பாட்டம் செய்தால், ஏன் வெள்ளை நிறத்தவை போய் அவையோடை சேருகினம்? அதுவும் ஒரேயொரு ஆள் செத்ததுக்கு உலகம் முழுவதும்... கோடிக்கணக்கிலை... அந்த நிறத்து ஆட்களோடை மற்ற நிறத்து ஆட்கள், முக்கியமா வெள்ளையாட்கள் என்ன பனிக்கட்டிக்கு போய்ச்சேருகினம்? மற்ற நிறத்தவை நடத்துற ஆர்ப்பாடங்களிலை உங்கடை நிறத்தவைதானே பெரும்பான்மையா நிக்கினம்; என்ன வெட்கக்கேடு!

**அலைனா:** ம்; எனக்குத் தெரியாது, அமைச்சரே, நீங்கள் சொல்லுங்கோ!

**குணவர்த்தனா:** அலைனா, இஞ்சை எங்கடை நாட்டிலை மற்ற இனத்து ஆட்கள் ஆயிரக் கணக்கிலை செத்தவை!

**அலைனா:** ஆயிரக் கணக்கிலையோ, இலட்சக் கணக்கிலையோ?

**குணவர்த்தனா:** ஆயிரக் கணக்கிலை!

**அலைனா:** செத்தவையோ அல்லது;

**குணவர்த்தனா:** சாகேல்லையோ?

**அலைனா:** செத்தவையோ அல்லது;

**குணவர்த்தனா:** சரி, சாக்காட்டினாலும், செத்தவைதானே! அதை விடுவம், அலைனா! ஆயிரக் கணக்கிலை செத்தும் கூட, மற்றவை செய்த ஆர்ப்பாட்டத்திலை எங்கடை ஆட்கள் ஒருத்தரும் பங்குபற்றேல்லையே!

**அலைனா:** ஓம், ஓம், உங்கடை ஆட்கள் நாங்கள் வியற்நாமில் அட்டூழியம் செய்ததாக முழக்கமிட்டு எங்கடை தூதரகத்துக்கு முன்னாலை தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டம் செய்தவை. 1987ல் இந்தியாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவை. ஆனால் 1958 முதல் 2009 வரை பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்ட உங்கள் நாட்டு மக்களுக்கு, சகோதர இனத்தவர்களுக்கு ஆதரவாக உங்கடை ஆட்கள் ஆர்ப்பாட்டம் செய்தது கிடையாது. போகட்டும், அனுதாபமாவது தெரிவித்திருக்கிறார்களா?

**குணவர்த்தனா:** இல்லை. அப்பிடி ஒரு வேடிக்கை இஞ்சை எங்கடை நாட்டிலை நடக்காது, அலைனா! உங்கடை நிறத்தவர்களும், இனத்தவர்களும், சமயத்தவர்களும் மற்றவையோடை சேர்ந்து, மற்றவைக்காக ஆர்ப்பாட்டம் செய்யுதுகள்! உப்பிடி ஒரு வேடிக்கை இஞ்சை நடக்காது!

**அலைனா:** ஓம், அப்பிடி எல்லாம் உங்கடை நாட்டிலை நடக்காது எண்டு எனக்கு முன்னமே தெரியும். இஞ்சை நடந்த சண்டையிலை மற்றச் சனம் சாகேக்கை உங்கடை சனம் உங்கடை படையளுக்கு உடுப்பும் சாப்பாடும் குருதியும் குடுக்கிற வேடிக்கை தொடர்ந்து நடக்கும்!

**அலைனா:** ஓ, ஆரியசிங்கா!

**ஆரியசிங்கா:** நன்றி, தூதர் அலைனா! பத்து நிமிசம் கழிச்சு தொடருவோமா?

**அலைனா:** ஓம், ஓம், நல்லது. அப்படியே செய்வோம், ஆரியசிங்கா!

(சூம் ஓய்கிறது)

## காட்சி 5
### (சூம் துவக்கப்படுகிறது)

**குணவர்த்தனா:** மற்றது, அலைனா, எங்களுக்கு கனடாவையோ பிரதமர் ஜஸ்டினையோ துப்பரவாப் பிடிக்கேல்லை.

**அலைனா:** அப்படியா?

**குணவர்த்தனா:** அவர் தன்ரை அமைச்சரவையிலை ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிநிகர் இடம் குடுத்தது எங்களுக்கு அபத்தமாயும் விசித்திரமாயும் கிடக்கு.

**அலைனா:** நீங்கள் விதிவிலக்காக, சாணக்கியமாக, அடையாளத்துக்கு இரண்டொரு பெண்மணிகளை அமைச்சரவையிலை வைச்சிருக்கிறியள் போலை!

**குணவர்த்தனா:** ஓம், சரியாச் சொன்னியள், அலைனா! நாடாளுமன்றம், அமைச்சரவை, அமைச்சு, திணைக்களம், மாகாண செயலகம், படைமுகாம்; எங்கை எண்டாலும் இரண்டொரு பெண்மணிகளை மட்டும்தான் பதவியிலை அமத்துவம்... பிரதமர் ஜஸ்டின் பெண்களுக்கு சரிநிகர் இடம் குடுக்கிறது

தொடர்தல் 61ம் பக்கம்

# அமைச்சர் குணவர்த்...

60ம் பக்கத் தொடர்ச்சி...

வெறும் மடைத்தனம்!

**அலைனா:** நான் ஓர் ஆம்பிளையோ, அமைச்சரே!

**குணவர்த்தனா:** இல்லை, அலைனா, நான் அமெரிக்காவைச் சொல்லேல்லை, கனடாவைச் சொல்லுறன். இந்திய அமைச்சரவையைவிட கனடிய அமைச்சரவையில் அதிக சீக்கிய அமைச்சர்கள் இருந்தால், கனடா எப்பிடி உருப்படும்?

**அலைனா:** ஏன் பிரித்தானியாவிலும் பல இந்தியர்கள் அமைச்சர்களாய் இருக்கிறார்களே! அப்ப பிரித்தனியாவும் உருப்பட்ட மாதிரித்தான்!

**குணவர்த்தனா:** இன்னும் கொஞ்சக் காலத்திலை எங்கடை மற்ற இனத்து ஆட்கள் பலரும் கனடாவிலும் மற்ற நாடுகளிலும் அமைச்சர்களாகி விடுவார்களே என்ற அச்சம் என்னைப் பிடிச்சு ஆட்டுது, அலைனா!

**அலைனா:** ஓம், ஓம், உங்கடை மற்ற இனத்தில் இரண்டொருவர் உங்கடை நாட்டிலையும், நூற்றுக்கணக்கானோர் வெளிநாடுகளிலும் அமைச்சர்களாய் இருப்பார்கள்!

**குணவர்த்தனா:** அப்பிடி எல்லாம் வரக்கூடாது, அலைனா! வர விடக்கூடாது. அதுதான் எனது கோரிக்கை. அதற்காகத்தான் உங்களோடு கதைக்க விரும்பினேன்.

**அலைனா:** அமைச்சர் குணவர்த்தனா, நான் அமெரிக்க தூதர் மட்டும்தான். உந்தக் கோரிக்கையை நீங்கள் ஐ.நா.வில் அல்லது பொதுநலவாயத்தில் அல்லது ஜெனீவாவில் சமர்ப்பிப்பது நல்லது.

**குணவர்த்தனா:** அதற்கு முன்னோடியாகத்தான் உங்களோடை கதைக்க எண்ணினேன். அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து; எண்டு எல்லா நாடுகளிலும் மற்ற நிறத்தவர்கள், இனத்தவர்கள், சமயத்தவர்களின் கை ஓங்கி வருகுது. அதுக்கு இடங்கொடுக்கக் கூடாது.

**அலைனா:** எங்களை எச்சரிக்கையாய் இருக்கச் சொல்லுறியள்!

**குணவர்த்தனா:** அலைனா, பிரதமர் ஜஸ்டின் ஒட்டாவாவிலையும், வெளியிலையும் பேசுற விதத்தை இஞ்சை எனக்கும் ஆரியசிங்காவுக்கும் போட்டுக் காட்டினாங்கள்.

**அலைனா:** எப்பிடி இருந்துது அமைச்சரே?

**குணவர்த்தனா:** அவர் சரிக்குச்சரி ஆங்கிலமும், பிரஞ்சும் கதைக்கிறார். நாங்கள் எங்கட மொழியிலை மட்டும்தான் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவம். மற்ற மொழி பேசும் மாகாணங்களில் எங்கடை அமைச்சர்மார், ஆளுநர்மார், படையதிபதிகள், காவல்துறை அதிபர்கள்; எல்லாரும் எங்கடை மொழியிலைதான் பேசுவார்கள், எழுதுவார்கள், வாசிப்பார்கள், உத்தரவு பிறப்பிப்பார்கள், மடல் அனுப்புவார்கள். காவல்துறையினர் வாக்குமூலம் பதிவார்கள்...

**அலைனா:** ஏன்?

**குணவர்த்தனா:** ஏனெண்டால் எங்கடை அதிகாரிகளுக்கு மற்றமொழி தெரியாது.

**அலைனா:** அப்படியே மற்ற மொழியினரை உங்கடை மாகாணங்களில் அமத்தி மற்ற மொழியிலையே அலுவல் பார்க்கச் சொல்லலாமே!

**குணவர்த்தனா:** இது எங்கடை இனத்துக்கும், மொழிக்கும், சமயத்துக்கும் உரிய நாடு, அலைனா!. மற்ற இனத்துக்கும், மொழிக்கும், சமயத்துக்கும் உரிய நாடல்ல. அதேபோல கனடா ஓர் ஆங்கில நாடு. ஆகவே பிரதமர் ஜஸ்டின் தனி ஆங்கிலத்திலை எல்லோ கதைக்கவேணும்! அவரும், அமைச்சர்களும், அதிகாரிகளும் என்ன பனிக்கட்டிக்கு சரிக்குச்சரி ஆங்கிலத்திலும் பிரஞ்சிலும் கதைக்க வேணும்?

**அலைனா:** மாண்புமிகு அமைச்சர் குணவர்த்தனா அவர்களே, கனடியப் பிரதமர் ஒரு பிரஞ்சுக்காரர்!

**குணவர்த்தனா:** அப்படியா?

**அலைனா:** கனடிய யாப்பில் ஆங்கிலம், பிரஞ்சு இரண்டும் சரிநிகர் ஆட்சிமொழிகள் எண்டு ஒரே வசனத்தில் எழுதிக்கிடக்குது!

**குணவர்த்தனா:** ?

**அலைனா:** இஞ்சை உங்கடை நாட்டிலை மற்ற இனத்தவர் அதிபராகவோ, பிரதமராகவோ வரமுடியுமா? பிரதமர் மோடியை உங்களுக்குப் பிடிக்கும் எண்டீர்களே?

**குணவர்த்தனா:** ஓம், பிடிக்கும். அவர் இந்தி மொழியிலை மட்டும்தான் உரையாற்றுவார்.

**அலைனா:** ஓம், அவற்றை தாய்மொழி என்னெண்டு தெரியுமோ?

**குணவர்த்தனா:** ஏன், இந்திதானே!

**அலைனா:** இல்லை, அமைச்சரே, குசராத்தி! இந்தியாவிலை வெவ்வேறு தாய்மொழி, சமயம் கொண்டவர்கள் அதிபராகவும், பிரதமராகவும் வந்திருக்கிறார்கள்! அதற்காக அங்கை எவரும் மதம் மாறியது கிடையாது. இஞ்சை உங்கடை நாட்டிலை பிரதமர் ஆகுவதற்காகத்தான் உங்கடை பண்டா மாமா மதம்மாறினவர்! மற்றும்படி அவர் பிரதமர் ஆகியிருக்க முடியாது.

**குணவர்த்தனா:** ?

**அலைனா:** மற்றது, மேல்நாடுகளில் எல்லாம் காவல்துறை அதிகாரம் யார் கையில் இருக்குது எண்டு உங்களுக்குத் தெரியுமோ, அமைச்சரே?

**குணவர்த்தனா:** மத்திய அரசின் கையில்.

**அலைனா:** அது இஞ்சை உங்கடை நாட்டிலை.

**குணவர்த்தனா:** மத்திய, மாகாண அரசுகள் இரண்டின் கையிலும்.

**அலைனா:** அது இந்தியாவிலை.

**குணவர்த்தனா:** மாநகரங்களின் கையில்.

**அலைனா:** ஓம், மாநகரங்களின் கையில்தான்!

**குணவர்த்தனா:** எண்டாலும்...

**அலைனா:** எண்டாலும் அமெரிக்காவிலை சி.ஐ.ஏ.யும் எவ்.பி.ஐ.யும் இருக்கு. கனடாவிலை ஆர்.சி.எம்.பி. இருக்கு, பிரித்தானியாவிலை ஸ்கொட்லன்ட் யார்ட் இருக்கு, உங்கடை நாட்டிலை சி.ஐ.டி. இருக்கு. அதுகளை நான் சொல்லேல்லை. அவை மத்திய அரசின் கீழ் இருக்கவேண்டிய சிறப்புக் காவல்துறைகள். நான் சொல்லுவது அன்றாட காவல்துறை அலுவலை. அது கொழும்பு, கண்டி, காலி, யாழ், மட்டக்களப்பு, திருகோணமலை மாநகரங்களின் கையில் இருக்கவேண்டியது. அதை மாகாணங்களுக்காவது குடுத்து பிரச்சினையைத் தணிக்கலாமே!

**குணவர்த்தனா:** ?

**அலைனா:** அமைச்சர் அவர்களே!

**குணவர்த்தனா:** அலைனா, இஞ்சை எங்கடை நாட்டிலை அரசியல் பிரச்சினை எண்டு ஒண்டுமில்லை. 2009லை சண்டையை வெண்டு அரசியல் பிரச்சினையை நாங்கள் தீர்த்துப்போட்டம். மாகாணங்களுக்கு காவல்துறை அதிகாரத்தைக் குடுக்காமலேயே அரசியல் பிரச்சினையை நாங்கள் தீர்த்துப்போட்டம்;

**அலைனா:** அமைச்சர் குணவர்த்தனா!

**குணவர்த்தனா:** ஓம், அலைனா!

**அலைனா:** நான் சொல்லிறன் எண்டு குறைவிளங்க வேண்டாம்; நீங்கள் முழுப்பூசணிக்காயை சோத்துக்கை மறைக்கப் பாக்கிறியள். அமெரிக்காவிலை கருப்பினவிரோதத்துக்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டம் பற்றி கனடியப் பிரதமர் ஜஸ்டினிடம் ஓர் ஊடகர் எழுப்பிய கேள்விக்கு அவர் மறுமொழி குடுத்த விதத்தைப் பார்த்தீர்களா?

**குணவர்த்தனா:** இல்லை. அதை நான் ஏன் பாத்தன்?

**அலைனா:** ஒரு நிமிசம் தாமதித்து அவர் மறுமொழி குடுத்த காணொலி உலக ஊடகங்கள் பெரும்பாலானவற்றில் இடம்பெற்றுள்ளதே!

**குணவர்த்தனா:** என்ரை கண்ணிலை படேல்லை, அலைனா!

**அலைனா:** ஓம், உங்கடை நாட்டு ஊடகங்களில் அது வெளிவரவில்லை, வெளிவரப்போவதில்லை. அதுக்கு வெளியுலக ஊடகங்களைத்தான் பாக்கவேணும்.

**குணவர்த்தனா:** அப்பிடி அவர் என்னத்தைச் சொல்லித் துலைச்சார், அலைனா?

**அலைனா:** 'கனடாவில் கூட கருப்பின மக்களுக்கும், மற்றும் பிற சிறுபான்மை மக்களுக்கும், பழம்பெரும் குடிமக்களுக்கும் எதிரான இனவாதம் நிலையூன்றியுள்ளது. சமூகத்திலும், அரசதுறையிலும், தனியார்துறையிலும், காவல்துறையிலும், படைத்துறையிலும் அது வேரூன்றியுள்ளது. கட்டமைப்புவாரியான அந்த இனவாதத்தை முறியடிக்க நாங்கள் அனைவரும் முன்னின்று பாடுபட வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் கனடிய அரசு மேற்கொள்ளும். இனவாதத்தை ஒழிப்பதில் அரசுடன் ஒத்துழைக்கும்படி கனடிய மக்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.'

**குணவர்த்தனா:** அது கனடியப் பிரச்சினை, அலைனா! அப்பிடி ஒரு பிரச்சினை இஞ்சை இல்லை.

**அலைனா:** உங்களால் அப்பிடி மனந்திறந்து உண்மையை ஒப்புக்கொள்ள முடியாது, அமைச்சரே! அதுக்கெல்லாம் ஒரு பக்குவம் வேணும். மனிதாபிமானம் வேணும். பேரினவாத மமதையில் 'பிரச்சினை இருந்தால் எல்லோ தீர்ப்பதற்கு' எண்டு கேட்பவர்களிடம் இதுகளை நான் சொல்லி என்ன பயன்?

**குணவர்த்தனா:** நாங்கள் உலகின் மாபெரும் பயங்கரவாதிகளை வெண்டனாங்கள், அலைனா! உலகத்தில் பயங்கரவாதிகளை வெண்ட ஒரே ஆட்கள் நாங்கள்தான். அதனால்தான் உங்களுக்கு எங்கள்மீது பொறாமையும் எரிச்சலும்...

தொடர்தல் 62ம் பக்கம்

# அமைச்சர் குணவர்த்...

61ம் பக்கத் தொடர்ச்சி...

**அலைனா:** அமைச்சர் குணவர்த்தனா, நீங்கள் என்னென்ன ஆயுதங்களைப் பாவிச்சு சண்டையை வெண்டனீங்கள்?

**குணவர்த்தனா:** போர்விமானங்கள், போர்க்கப்பல்கள், பீரங்கிப்படகுகள், விசைப்படகுகள், தாங்கிகள், பீரங்கிகள், உந்துகணைகள், எறிகணைகள், கொத்துக் குண்டுகள், கொட்டுக்குண்டுகள், நச்சுக்குண்டுகள், ஏ.கே. 47...

**அலைனா:** உங்கடை நாட்டு மக்களுக்கு எதிராக நீங்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் எல்லாம் உள்நாட்டு உற்பத்திகளே அல்லது;

**குணவர்த்தனா:** என்ன?

**அலைனா:** அமைச்சர் குணவர்த்தனா, உதுகள் எல்லாம் உள்நாட்டு உற்பத்திகளே அல்லது...

**குணவர்த்தனா:** இறக்குமதிகள்.

**அலைனா:** விலைக்கு வாங்கினதோ, கடன்பட்டு வாங்கினதோ, நன்கொடையோ, போட்டுக்கிடந்து எடுத்ததோ?

**குணவர்த்தனா:** ?

**அலைனா:** அரைக்கரைவாசி கடன்பட்டும் அன்பளிப்பாகவும் வந்து சேர்ந்தவை. ஆயுதக் கொள்வனவிலை நடந்த மோசடிகள் வேறு கதை. உலக நாடுகள் போட்டிபோட்டு உங்களுக்கு பொருளுதவி, நிதியுதவி, ஆயுத உதவி, படையுதவி, பயிற்சியுதவி, சாணக்கிய உதவி... செய்திருக்கின்றன. சீனாவும் இந்தியாவும், பாகிஸ்தானும் இந்தியாவும், ரஷியாவும் அமெரிக்காவும் போட்டிபோட்டு உங்களுக்கு உதவியிருக்கின்றன.

**குணவர்த்தனா:** ஓம், அது எங்கள் சாணக்கியம்!

**அலைனா:** எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவின் உதவியுடன்தான் நீங்கள் சண்டையை வெண்டனீங்கள். அப்படியிருக்க, நீங்கள் மட்டும் தனியே நிண்டு சண்டையை வெண்டதாக கொட்டம் அடிக்கிறியளே! கர்ணனை வெண்டதாக அருச்சுனன் கொட்டமடிச்சது போல! உங்களுக்குப் பாரதம் தெரியுமோ, அமைச்சரே?

**குணவர்த்தனா:** போயிருக்கிறன்!

**அலைனா:** என்ன?

**குணவர்த்தனா:** நான் அங்கை போயிருக்கிறன், அலைனா!

**அலைனா:** சரி, அதை விடுவம்! குறிப்பாக இந்தியாவின் உதவியுடன் நீங்கள் சண்டையை வெண்ட விதம் உங்களுக்கும் தெரியும், மற்றத் தரப்புக்கும் தெரியும், இந்தியாவுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும், எல்லாருக்கும் தெரியும்... அதற்கு ஆதாரமாக செய்மதிப்படங்கள் பெருவாரி இருக்கு.

**குணவர்த்தனா:** அலைனா;

**அலைனா:** நீங்கள் வெற்றிச்செருக்கில் கொக்கரிக்க, உங்களுக்குத் துணைநின்ற இந்தியாவும் நாங்களும் மற்ற நாடுகளும் வாயைப் பொத்திக்கொண்டிருக்க என்ன காரணம் எண்டு தெரியும்தானே!

**குணவர்த்தனா:** என்ன காரணம்?

**அலைனா:** ஏற்கெனவே உங்களுக்கு தெரிஞ்ச காரணத்தை நான் என்ரை வாயாலை சொல்லவேணுமோ?

**குணவர்த்தனா:** எங்கடை சாணக்கியத்தை உங்கடை வாயாலை சொல்லுங்களேன், அலைனா!

**அலைனா:** ஒரு குடிமகனுக்கும் உயிராபத்து ஏற்படாமல் சண்டைப்படுவோம் எண்டு நீங்கள் சொன்னதை நம்பி உலக நாடுகள் எல்லாம் வாயைப் பொத்திக்கொண்டிருக்க, நீங்கல் இலட்சக் கணக்கிலை;

**குணவர்த்தனா:** இலட்சக் கணக்கிலை இல்லை, அலைனா;

**அலைனா:** சரி, ஆயிரக்கணக்கிலை குடிமக்களுக்கு உயிராபத்து ஏற்படுவதையும் பொருட்படுத்தாமல் தாக்குதல் நடத்தியிருக்கிறீர்கள்!

**குணவர்த்தனா:** அது முடிஞ்ச கதை, அலைனா.

**அலைனா:** ஓம், அது முடிஞ்ச கதைதான், அமைச்சரே! நான் சொல்ல வருவது, அது எப்படி முடிஞ்ச கதையானது எண்டதைப் பற்றி! ஒரு குடிமகனுக்கும் உயிராபத்து ஏற்படாமல் சண்டைப்படுவோம் எண்ட உங்கள் வாக்குறுதியை நம்பி மோசம்போன உலக நாடுகள், ஆயிரக்கணக்கான குடிமக்களைப் பறிகொடுத்த மறுதரப்பின் முன்னிலையில் 'இலங்கை அரசு தனித்து நிண்டு சண்டையிட்டு வெல்லேல்லை, எங்கள் உடந்தையுடனும் ஒத்தாசையுடனும்தான் வெண்டது' எண்டு எப்படி வெட்கமின்றிச் சொல்ல முடியும்? ஒரு கையில் துவக்கும், மறு கையில் மனித உரிமைப் பட்டயமும் கொண்டு சண்டையிடுவோம் எண்ட உங்கள் வாக்குறுதியை நம்பி மோசம்போனதை, சோரம்போனதை மறுதரப்பின் முன்னிலையில் மனந்திறந்து ஒப்புக்கொள்ள முடியாமல் வெளியுலகம் திண்டாடுவது புரியவில்லையா உங்களுக்கு? நாங்கள் ஓர் இனத்தின்மீது போர் தொடுக்கவில்லை. ஓர் இனத்தை பயங்கரவாதிகளிடமிருந்து விடுவிக்கும் மனிதாபிமான நடவடிக்கையைத்தான் மேற்கொண்டோம் எண்டு பறைதட்டும் ஓர் அரசாங்கத்துக்கு மிண்டுகொடுத்தை, அந்த இனத்தின் முன்னிலையில் ஒப்புக்கொள்ளுவதற்கு வெளியுலகம் மனங்கூசுவது புரியவில்லையா உங்களுக்கு?

**குணவர்த்தனா:** அது வெளியுலகத்தின் திண்டாட்டம், அலைனா! நாங்கள் திண்டாடவில்லையே!

**அலைனா:** நீங்கள் ஏமாற்றுவீர்கள், உலகம் ஏமாறும் எண்டு மறுதரப்பு திரும்பத் திரும்ப வெளியுலகை எச்சரித்திருந்தும் கூட, உங்களை விடுத்து அவர்களை மட்டுமே பயங்கரவாதிகள் எண்டு வெளியுலகம் ஒட்டுமொத்தமாகப் பறைசாற்றியது. ஆனபடியால்தான் நீங்கள் ஏமாற்றியதை, உங்களிடம் ஏமாந்ததை மறுதரப்பின் முன்னிலையில் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வெளியுலகம் வெட்கப்படுகிறது. வெளியுலகம் விளக்கைப் பிடிச்சுக்கொண்டு கிணத்துக்குள் விழுந்திருக்கிறது. ஆனபடியால்தான் உங்களால் இடைவிடாது வெற்றிவீம்பில் கொக்கரிக்க முடிகிறது.

**குணவர்த்தனா:** சரி, அதை விடுவம், அலைனா! அது நம்மடை பிரச்சினை அல்லவே!

**அலைனா:** எஞ்சிய குடிமக்களுக்காவது நீதியும் நியாயமும் கிடைக்கட்டும் என்பதற்காகத்தான் உங்கடை முந்திய அரசின் இணக்கத்துடன் ஜெனீவா தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கு மாறாக நீங்கள் ஜெனீவாவுக்கு நேரிலை போய் அதை நிராகரித்திருக்கிறீர்கள். அதை உங்கள் தலையாய சாதனை எண்டு உங்கள் இணையத்தளத்தில் வேறு பெருமையடித்திருக்கிறீர்கள். அசல் இடதுசாரித்துவம்! ஓ, ஆரியசிங்கா!

**ஆரியசிங்கா:** அலைனா!

**குணவர்த்தனா:** நன்றி, வணக்கம், தூதர் அலைனா!

**அலைனா:** இன்னொரு சங்கதி அமைச்சரே!

**குணவர்த்தனா:** என்ன,அலைனா? எனக்கு கண்ணைச் சுழட்டுது.

**அலைனா:** நீங்கள் அம்பேத்கரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறியளோ?

**குணவர்த்தனா:** இல்லை.

**அலைனா:** ஆரியசிங்கா?

**ஆரியசிங்கா:** எனக்கும் தெரியாது, அலைனா!

**அலைனா:** இந்திய யாப்புக்குழுத் தலைவர் அம்பேத்கர்.

**குணவர்த்தனா:** ஆ! ஆ!

**ஆரியசிங்கா:** ஆ! ஆ!

**அலைனா:** அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த டானியல்-ஓ-கொனேல் எண்டவரை அம்பேத்கர் மேற்கோள்காட்டியிருக்கிறார்.

**குணவர்த்தனா:** என்னத்தை?

**ஆரியசிங்கா:** என்னத்தை?

**அலைனா:** 'ஒருவன் தனது மானத்தை இழந்து நன்றிசெலுத்த முடியாது. ஒரு பெண் தனது கற்பை இழந்து நன்றிசெலுத்த முடியாது. ஒரு நாடு அதன் சுதந்திரத்தை இழந்து நன்றிசெலுத்த முடியாது;'

**குணவர்த்தனா:** அசல்! எங்கடை நாடும் அதன் சுதந்திரத்தை இழந்து நன்றிசெலுத்த முடியாது.

**அலைனா:** ஓம், அமைச்சரே, ஓர் இனம் அதன் சுதந்திரத்தை இழந்து நன்றிசெலுத்த முடியாது. ஒரு மொழியினர் தமது சுதந்திரத்தை இழந்து நன்றிசெலுத்த முடியாது. ஒரு சமயத்தவர் தமது சுதந்திரத்தை இழந்து நன்றிசெலுத்த முடியாது; நன்றி, வணக்கம், மாண்புமிகு அமைச்சர் அவர்களே!

**குணவர்த்தனா:** நன்றி, வணக்கம், தூதர் அலைனா!

**அலைனா:** நன்றி, வணக்கம், அமைச்சர் குணவர்த்தனா!

**அலைனா:** ஆரியசிங்கா, நீங்கள் நோம் சொம்ஸ்கியை பற்றி கேள்விப் பட்டிருக்கிறியளோ? அவர் எங்கடை நாட்டவர். எங்கடை எதிரிகளை விட எங்களைத்தான் அவர் அதிகம் வசைபாடியிருக்கிறார். எண்டாலும் அவர் சொன்ன சங்கதி ஒண்டு எங்களுக்கும், எதிரிகளுக்கும், உங்களுக்கும், எல்லாருக்கும் பொருந்தும்.

**ஆரியசிங்கா:** அது என்ன சங்கதி, அலைனா?

**அலைனா:** 'அறிவார்ந்தவர்கள் ஆட்சியாளருக்கு பணிவிடை புரிவது வழக்கம். அவர்களை நான் அம்பலப்படுத்தாவிட்டால், என்னை எண்ணியே நான் வெட்கப்படுவேன்' என்று சொன்னார்.

(இரவு 11:00 - சூம் ஓய்கிறது)

(முற்றும்)

# Move on with REON

RE/ON

**Homes Realty Inc.**
**Brokerage**

*Living in your Own Home.*
*It's a gift.™*

- FREE MARKET EVALUATION
- 24 HRS MLS LISTING
- PROFESSIONAL PHOTOGRAPHY & VIRTUAL TOUR
- HIGHEST VALUE FOR YOUR PROPERTY
- COMPETITIVE COMMISSION STRUCTURE
- OPEN HOUSES
- PROFESSIONAL HOME STAGING

## FOR SALE







## FOR SALE







Commercial/Retail
5215 Finch Ave E263

## COVID-19 MORTGAGE PAYMENT TOOLS

$$$-Short-term mortgage payment deferral: Your lender may agree to pause or suspend your mortgage payments for a certain amount of time.

$$$-Extending the original repayment period (amortization): An extension to your original amortization period can lower your monthly mortgage payments.

$$$-Adding any missed payments (arrears) to the mortgage balance:Your lender may be able to add missed payments to your mortgage balance and spread them over the remaining mortgage repayment period.

$$$-Moving from a variable to a fixed interest rate mortgage: Converting a variable interest rate mortgage to a fixed interest rate mortgage in order to protect you from a sudden interest rate increase, should one occur.
Special payment arrangement:

$$$-There may be a special payment arrangement unique to your particular financial situation.



**Uthayan Aiyadurai**
Sales Representative
**416.999.3555**



**Jeyanthe Sritharan**
Broker
**416.918.5872**



**Seelan Siva Aiyadurai**
Broker
**416.451.0271**

**வீடு விற்க வாங்க**

**BUY. SELL. INVEST**

25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 **905.209.8080** **www.reon.ca**

# குட்டக்குட்ட குனிபவர்

- குமார் புனிதவேல் -

ஐக்கிய அமெரிக்காவின் ஐக்கியம் குறைந்து உள்நாட்டுக் கலவரம் வெடிக்குமளவிற்கு வளர்ந்துள்ளதை கவனித்திருப்பீர்கள். கலவரத்துக்கான காரணம் 'கறுப்பின மக்கள் தங்கள் உரிமைக்காக குரல் எழுப்பவதே'. நான் பள்ளியில் படிக்கையில் சரித்திரப் பாட ஆசிரியர் பானுதேவன் மாஸ்டர், கறுப்பின மக்கள் 1865ம் ஆண்டில் சுதந்திரத்தை பெற்றுக்கொண்டதாக கற்பித்தது ஞாபகம். அப்படியானால் இந்த கறுப்பின மக்கள் என்ன சுதந்திரத்திற்காக கோஷம் எழுப்புகின்றார்கள்? என்று சற்று ஆழமாகக் கற்றதை உங்களுடன் பகிரலாம் என எண்ணுகிறேன்.

அடிமைத்தனம் நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னமே அகற்றப்பட்டு, பின் அறுபது வருடங்களுக்கு முன் நடந்த சமூக உரிமைப் போராட்டத்தின் பின் சட்டப்படி 'இனத்துவேசம் ஒரு குற்றமாக' வும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இன்னும் சுவையான தகவல் கடைசி ஜனாதிபதியாக கறுப்பினத்தவரான பராக் ஒபாமா இருந்ததை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். அப்படியானால் எப்படி அமெரிக்காவில் இனத்துவேசம் உள்ளது எனக் கூறமுடியும்?

இன்றைய பிரச்சினையை ஆராய்வதற்கு இதற்குப் பின்புலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை கவனிக்க வேண்டும். பழைய காலம் தொட்டு இன்று வரை வெள்ளையினத்தவரால் அழைக்கப்படும் புது உலகத்தில் பல பண்பட்ட மூத்த குடிகள் வசித்து வந்துள்ளார்கள். ஐரோப்பாவிலிருந்து வந்து குடியேறிய வெள்ளையின மக்கள் அவர்களைக் கொன்றும் அடிமைப்படுத்தியும் ஆட்சி செய்தார்கள். இங்கு இருந்த மக்கள் போர்முனையில் இறந்ததிலும் மேலாக ஐரோப்பியர்கள் கொண்டு வந்த நோய்களாலும் அழிந்தனர். இந்நிலையில் ஆபிரிக்காவிலிருந்து கறுப்பின மக்களை அடிமைகளாக கொண்டு வந்து பெரும் தோட்டங்களை உண்டு பண்ணினார்கள். தங்கள் செல்வத்தைப் பெருக்க அடிமைகளைக்கொண்டு வந்து ஊதியம் இல்லாது வேலை செய்வித்தார்கள்.

இவர்களின் அடிமைச் சங்கிலியை அறுத்துப் போட்ட பெருமை ஆபிரகாம் லிங்கனைச் சாரும். கடைசியாக ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமா செய்த மாற்றங்களை, அடுத்து வந்த வெள்ளையினத்தவரான டொனால்ட் டிரம்ப் இரத்துச் செய்தார்.

இன்று சராசரியாக ஒரு வெள்ளையினத்தவரின் வீட்டு வருமானத்தின் அறுபது விழுக்காடுதான் கறுப்பினத்தவருடைய வீட்டு வருமானம். வருமானம் சற்று குறைந்தாலும் கறுப்பினத்தவரின் சராசரி குடும்பச் சொத்து (household wealth) வெள்ளை இனத்தவரின் குடும்பச் சொத்தின் பத்தில் ஒரு பங்காக இருக்கிறது. ஒரு குடும்பத்துக்கு குடும்பச் சொத்து மிக முக்கியமானதாகும். இது பிள்ளைகளின் கல்வி, குடும்பத்தவரின் நோய்க்குரிய செலவுகள் முதலானவற்றுக்கு உதவுகிறது. குறிப்பாக அமெரிக்காவில் தனியார் வைத்தியமே உள்ளது.

இதனால் கறுப்பின மக்கள் அனைவருமே வறியவர் என்று கொள்ளுவதும் தவறு. சரியாக ஓடாத மணிக்கூடும் நாள் ஒன்றிற்கு இரண்டொரு முறை சரியான நேரத்தைக் காட்டுவது போல், ஒரு சிலர் எதிர்நீச்சலடித்து பெரும் பணக்காரர்களாய் வந்துள்ளார்கள்தான். ஆனால், அவை அனைத்தும் மிகச் சிறுவிழுக்காடே! அத்துடன் வெள்ளை இனத்தவரில் வறுமையில் உள்ள குடும்பங்களும் உண்டு. அதுவும் மிகச் சிறு எண்ணிக்கையே. இவை அனைத்தும் விதிவிலக்குகள்.

கறுப்பு இனத்தவரின் குடும்பச் சொத்து வெள்ளை இனத்தவரின் குடும்பச் சொத்தில் பத்தில் ஒரு பங்காய் இருப்பதன் காரணம் என்ன என்று அறிய முயற்சித்த வேளை பெரும் அதிர்ச்சி எனக்கு காத்திருந்தது.

கறுப்பின மக்களை அடிமையாக வைத்திருப்பதன் தவறை உணர்ந்து சட்டரீதியாக அடிமைகளை வைத்திருத்தல் குற்றமாக்கப்பட்டபோது, அடிமைகளை வைத்து பெருந்தோட்டங்கள் வைத்திருந்த வெள்ளையர்களுக்கு குறைந்த செலவில் கூலி ஆள் கிடைக்கவில்லை. அவர்கள் இலவச கூலி ஆள் பெறுவதற்கு ஒரு சாணக்கியம்



செய்தார்கள். தென் பகுதியில் உள்ள 9 மாநிலங்களில் ஊர் சுற்றி சட்டம் (vagrancy law) என்று ஒன்றை உண்டு பண்ணினார்கள். இச்சட்டப்படி வேலை இன்றி வீதியில் அலைபவர்களை சிறையில் அடைக்க முடிந்தது. இச்சட்டம் கறுப்பின மக்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட கறுப்பின மக்கள் வேலை தேடி அலையும் வேளை அவர்களைப் பிடித்து சிறையில் அடைத்தார்கள்.

இந்த வெள்ளை இனத்தவர் மூளையை யாரும் குறைத்து எடைபோட வேண்டாம். சிறையில் அடைத்தவருக்கு உணவு வேண்டுமல்லவா? முன்பு கறுப்பினத்தவர் 'அடிமையாக' வேலை செய்த பெருந் தோட்டங்களில், இப்போது சம்பளம் இல்லாக் கைதிகளாக கறுப்பினத்தவர்கள் கூலி வேலை செய்தார்கள். முன்பெல்லாம் வெள்ளை முதலாளிக்கு அடிமையின் நலத்தில் சிறிது கவனமிருந்தது. ஆனால், சிறையில் அடைக்கப்பட்ட கைதியின் நலத்தில் சற்றேனும் அக்கறை இல்லை. ஒரு கைதி போனால் இன்னொரு கைதி உண்டுதானே.

உலகின் கண்களுக்கு அடிமைத்தனம் நீக்கப்பட்டு விட்டது.

மேற்கூறிய சட்டத்துடன் விஷமம் (mischief) மற்றும் இழிவுபடுத்தும் சேஷ்டைகள் (insulting gestures) போன்றவையும் குற்றமாகக் கருதப்பட்டன. இத்தகைய சட்டங்களால் பெரும் தோட்ட முதலாளிகளுக்கு குறைவில்லாமல் இலவச கூலி ஆட்கள் கிடைத்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பங்களில் Jim Crow சட்டம் இயற்றப்பட்டது. இதுவும் ஒரு சுவையான பின்னணியைக் கொண்டுள்ளது அதை சற்று கவனிப்போம்.

1828ல் Thomas D. Rice என்பவரால் எழுதப்பட்ட பாடல்களை, வெள்ளையர்கள் முகம், உடம்பு முழுவதும் கறுப்பாக கரியை பூசிக்கொண்டு கொண்டாட்டங்களில் பாடி ஆடினார்கள். Jump Jim Crow எனும் பாட்டை பொழுதுபோக்கு இடங்களில் பாடி ஆடி மகிழ்ந்தார்கள். இதன் பின்னணியில் 'Jim Crow' சட்டம் அமைக்கப்பட்டது.

வெள்ளையர் வதியும் பகுதியில் கறுப்பு இனத்தவர் குடியேறினால் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். இந்தச் சட்டத்தின் படி பாடசாலைகள், கிறிஸ்தவ ஆலயங்கள், வீடுகள், வேலைத்தலங்கள், ஒட்டல்கள் சாப்பாட்டுக்கடைகள், வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள், இழவு வீடுகள், மயானங்கள்... ஏன் மலசல கூடங்கள் கூட 'ஜிம் குரோ சட்டப்படி' தனித்தனியாகப் பிரித்து வைக்கப்பட்டன.

பொதுவாக அரசியல்வாதிகள் தமது சுய நலத்துக்காக இனத்துவேசத்தையும் வெறுப்பையும் கக்கத் தயங்க மாட்டார்கள். இலங்கையிலும் 'சிங்களம் வாழ்க' என்று தமது வாழ்வை உயர்த்தும் சிங்கள அரசியல்வாதிகளும், 'தமிழ் வாழ்க' எனக் கோஷம் போட்டு தம் வாழ்வை உயர்த்தும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் குறைவு இல்லை. அமெரிக்காவிலும் வெள்ளை அரசியல்வாதிகள் இனவாதத்தை போட்டி போட்டு வளர்த்து தமது வாழ்வை வளப்படுத்தினார்கள். இச்சட்டத்தின்படி, ஒரு கறுப்பினத்தவரும் வெள்ளை இனத்தவரும் சதுரங்கம் (chess game) விளையாடக்கூடத் தடை இருந்தது. 1896ல் அப்பிரியர் கோட்டில் ஜிம் குரோ சட்டமானது. பாரம்பரிய பழக்கவழக்கங்கள், சமூக அமைதி, நிலைப்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்துவதனால் அது செல்லுபடியாகும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதற்கு மேலாக வழக்கு தொடுப்பதற்கு சந்தர்ப்பமில்லை.

இதனைத் தொடர்ந்து 1956ல் தென் பிராந்திய தீர்மானம் (The Southern Manifesto) பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தத் தீர்மானம் நூற்றி இருபத்தெட்டு அங்கத்தவர்களில் நூற்றி ஒரு அங்கத்தவர்களின் சாதகமான வாக்குகளின்படி நிறைவேற்றப்பட்டது. இதில் புதிய ஐம்பது 'ஜிம் குரோ' சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இச்சட்டத்தின் பிரகாரம் தெற்குப் பிராந்தியங்களில் வெள்ளை நிற மக்களுக்கு மட்டும் என மதசார் பாடசாலைகளை ஆரம்பிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பரவலாக மனித உரிமைப் போராட்டங்களும் யுத்த மறுப்புப் போராட்டங்களும் வெடித்தன. இக்காலத்தில்தான் உலக குத்துச்சண்டை வீரரான கசியஸ் கிளே யுத்தத்திற்கு செல்ல மறுத்ததுடன் தனது பெயரை முகமட் அலி என மாற்றி சிறைக்குக்கூட செல்ல வேண்டி வந்தது.

அத்துடன் இக்காலகட்டத்தில் தான் ரிச்சர்ட் நிக்சன் 'சட்டமும் ஒழுங்கு முறையும்' என்ற கோஷத்துடன் முதல் முறையாக போட்டியிட்டார். 1968ல் நடந்த கணக்கெடுப்பின்படி வாக்களித்த அமெரிக்கர்களில் 81 விகிதமானோர் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் இடம்பெறவில்லை என தீர்ப்புக்கூறினர். இக்கணக்கெடுப்பிலும் பெரும்பான்மையான வெள்ளையின மக்கள், கறுப்பின மக்களும் கம்யூனிஸ்ட்களுமே கலவரத்திற்குக் காரணம் எனக் குறிப்பிட்டனர்.

கறுப்பினத்தவரின் குடும்பச்சொத்து வெள்ளையினத்தவரின் சராசரியில் பத்தில் ஒரு பகுதி மட்டுமே. இதற்கு முக்கிய காரணங்களிலொன்று, 1930ல் இருந்து அறுபதுகள் வரை அரசாங்கங்கள் வெள்ளையின மக்கள் சொத்து வாங்குவதை ஊக்குவித்ததுடன், கறுப்பின மக்கள் அடமானக் கடன் பெறுவதைத் தடுத்து வைத்தார்கள்.

அரசாங்கம் 1934ம் ஆண்டில் இடர் மதிப்பீடு (risk Assessment) திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இந்த இடர் மதிப்பீட்டின்படி வெள்ளை மக்கள் வதியும் பிரதேசங்கள் அரசாங்க அடமானக் கடன்

தொடர்தல் 65ம் பக்கம்

# குட்டக்குட்ட...

64ம் பக்கத் தொடர்ச்சி...

பெற உகந்த இடங்களாகவும், கறுப்பின மக்கள் வாழ்வதற்கு ஒதுக்கிய பகுதி அரசாங்க அடமானக் கடன் கொடுப்ப தற்கு உகந்ததல்லாத பிரதேசமாகவும் வரையறுத்தார்கள். கறுப்பு இன மக்கள் வெள்ளையர் வாழும் பகுதியில் வீடு கட்ட முடியாது.

1950ம் ஆண்டு வரை, ஒரு வீட்டு முகவர் வெள்ளையினத்தவர்கள் வசிக்கும் பகுதியில் கறுப்பு இனத்தவருக்கு வீடு விற்றால் அவரது வீடு விற்கும் உரிமைப்பத்திரம் உடனே இரத்துச் செய்யப்படும்.

1933ம் வருடம் தேசிய வீட்டமைப்பு கோட்பாடு (Federal Housing Administration) மாறுபட்ட இனக்குழுக்கள் ஒரே இடத்தில் வசிப்பது தவிர்க்கப்பட வேண்டும் (Incompatible racial groups should not be permitted to live in the same communities) என ஒரு விதி வைத்திருந்தது. அத்துடன் பெரும்பான்மையினரான வெள்ளையர்கள் இரு இனக்குழுவுக்கிடையே பெரும் தெருக்களை அமைத்து இனங்களைப் பிரித்து வைத்தார்கள்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் இரு இன மக்களும் இணைந்தே போரிட்டார்கள். யுத்தம் முடிந்து திரும்பிய வீரர்களுக்கு உதவும் நோக்கத்துடன் 'Gl Bill' மூலம் வாழ்வை மீள ஆரம்பிக்க அவர்களுக்கு பல மில்லியன்கள் உதவித்தொகை வழங்கப்பட்டது. வெள்ளை இனத்தவர்களுக்கு மட்டுமே வழங்கி, கறுப்பு இனத்தவர் ஓரம் தள்ளப்பட்டனர். உதாரணத்திற்கு நியூ யோர்க், நியூஜேர்சி மாநிலங்களில் 67,000 கடன்கள் வழங்கப்பட்டன. அதில் நூற்றிற்கும் குறைவாகவே கறுப்பு இன மக்கள் பயன் அடைந்தனர். 1947ல் மிசிசிப்பி மாநிலத்தில் 32,000 அடமானக் கடன்கள் வழங்கப்பட்டன. அதில் இரண்டு கறுப்பினத்தவர் மட்டுமே பயனடைந்தனர். இத்தகைய பாரபட்ச செயற்பாடுகளால் வெள்ளை இனத்தவர் மட்டும் அடமானங்களைப் பெற்று வீடுகளை வாங்கி தமது குடும்பச் செல்வத்தைப் பெருக்கியதுடன் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் உதவ முடிந்தது. மேலும் அவர்களுடைய ஓய்வூதியம், அவசர மருந்துத்தேவை முதலான அனைத்துத் தேவைகளும் பூர்த்தியானது.

வெள்ளை இனத்தவரின் செல்வத்திற்கும் கறுப்பு இனத்தவரின் செல்வத்திற்கும் பெரும் இடைவெளி வருவதற்கு முக்கிய காரணியாக GI Billனைக் குறிப்பிடலாம்.

இவற்றைத் தொடர்ந்து போதைவஸ்துக்கெதரான போராட்டம் ஆரம்பமாகியது.

அக்காலகட்டத்தில் பெரும்பான்மையான கறுப்பு இனமக்கள் இத்தடைகளால் மேற்படிப்பில்லாது இருந்தார்கள். மேலும் ஆரம்பப் படிப்புகூட பகுக்கப்பட்ட கறுப்பு இனத்தவர் பள்ளிகளில்தான் இடம் பெற்றது.

'பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது' போல், இவ்வேளையில் நகர்ப்புறங்களில் இருந்த தொழிற்சாலைகளை புறநகர் புறத்திற்கு மாற்றினார்கள். வறியவர்களான கறுப்பின மக்கள் தொழில் செய்வதற்காக புறநகர்ப் பிரதேசத்துக்கு செல்வதில் பெரும் இடர்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வந்தது. 1970களில் கறுப்பினத்தவர்களில் 28 விகிதமானவர்களிடம் மட்டுமே சொந்த மோட்டர் வண்டி இருந்தது.

மேற்படிச் சூழலில் இலனொயி எனும் மாகாணத்தில் வெள்ளை இன மக்கள் வதியும் பிரதேசத்தில் ஒரு தொடர்மாடிக் கட்டடத்தைக் கறுப்பினத்தவருக்குத் கொடுத்ததனால் ஊரே பொங்கி எழுந்து. பெரும் கலவரம் ஏற்பட்டு, அந்த முழுக் கட்டடமே எரிக்கப்பட்டது. இக்கலவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தேசிய யுத்தப்படை அழைக்கப்பட வேண்டி வந்தது.

1970 ஆண்டுகளில் சராசரியாக எழுபது விகிதமான கறுப்பின மக்கள் நல்ல கூலி வேலையில் இருந்தார்கள். ஆலைகள் அனைத்தும் வெள்ளையர் வாழும் புறநகர்புறத்திற்கு மாற்றியதன் விளைவாக 1987ம் ஆண்டில் இருபத்தெட்டு விகித கறுப்பின மக்கள் மட்டுமே வேலையில் இருந்தார்கள். இக்காலத்தில்தான் வேலையில்லாத் திண்டாட்டத்துடன் போதைப் பொருள் பாவனையும் கூடியது. வெள்ளை



இளைஞர்கள் கறுப்பின இளைஞர்களின் இச்செயல்பாட்டை கண்டு கவலையும் அச்சமும் கொள்ளத் தொடங்கினார்கள். வறுமையின் விரக்தியே கறுப்பு இளைஞர்களை போதைப்பொருள் பாவிப்பதற்கு தள்ளியது என்பதே யதார்த்தம். அரசாங்கம் போதைப்பொருள் பாவனையை சமூகவியல், ஆரோக்கிய பிரச்சனையாக அணுகாமல் அதை பெரும் குற்றவியல் பிரச்சனையாக அணுகத் தொடங்கியது. போதைப்பொருள் சம்பந்தப்பட்ட வன்முறைகளை வன்முறைகளால் அடக்குவதே நோக்கமாக கொண்டு செயற்பட்டார்கள்.

1981 முதல் 1991 வரை குடியரசுக் கட்சி (Republican Party) அரசாங்க ஜனாதிபதிகள் ரீகன், நிக்சன் ஆகியோர் போதைப் பொருள் பாவிப்பதை தடுப்பதற்கு பணத்தை முதலீடு செய்தார்கள்.

போதைப்பொருள் பாவனைத் தடைக்காக செய்யும் செலவினத்தை $33 மில்லியனிலிருந்து $1.04 பில்லியனாக உயர்த்தினார்கள். அதே காலகட்டத்தில் போதைப் பொருள் தடை நிறைவேற்றுச் சபையின் நிதி ஒதுக்கீடாக இருந்த $86 மில்லியனை $1.03 பில்லியனாகவும் உயர்த்தினர்கள். அக்காலகட்டத்தில் போதைப்பொருள் தவறான பாவனைச்சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி தவறான பாவனைக்கு தண்டனையாக crack cocaineக்கு கூடிய தண்டனையும் powdered cocaine பாவனைக்கு குறைந்த தண்டனையும் வழங்கினார்கள். கறுப்பின மக்கள் பொதுவாக crack cocaine ஐ பாவித்தமையும், வெள்ளையின மக்கள் powdered cocaine ஐ பாவித்தமையே இதற்குக் காரணம் ஆகும். இத்துடன் போதைப்பொருள் பாவித்தவர்களுக்கான அரச மான்யம் உடன் நிறுத்தப்பட்டது.

மேலும் 1986ம் ஆண்டில் நிறைவேற்றிய போதைப்பொருள் பாவனைத் தடைச்சட்டத்தின்படி பாவித்தாலும் பாவிக்காவிட்டாலும், அதை வைத்திருந்து அகப்பட்டால் சிறைவாசம். குறைந்தபட்சம் ஒரு வருடத்திலிருந்து ஐந்து வருடமாக உயர்த்தப்பட்டது.

அடுத்ததாக ஜனநாயக கட்சியின் 1993ல் இருந்து 2001ம் ஆண்டுவரை கிளின்டன் ஆட்சிக்காலத்தில் பொதுமக்கள் வாசஸ்தல நிதி $17 பில்லியனால் குறைக்கப்பட்டது. அதே காலத்தில் சிறைச்சாலைக்கான நிதி $19 பில்லியனால் கூட்டப்பட்டது. 1980ல் போதைவஸ்துக் குற்றத்துக்காக 41,000 பேர் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்கள். இன்று அத்தொகை அரை மில்லியனுக்கு அதிகமாக வளர்ந்துள்ளது.

'ஜனநாயகத்தின் காவல'னாக தன்னை உலகிற்கு காட்டிக்கொள்ளும் அமெரிக்கச் சிறையில் 2.12 மில்லியன் சிறைக்கைதிகள் உள்ளனர். அமெரிக்கால் 'சர்வாதிகார ஆட்சி'யாக படம் பிடித்துக் காட்டப்படும் சீனாவின் சனத்தொகை நான்கு மடங்கு. என்றாலும், சிறையில் 1.71 மில்லியன் கைதிகளே உள்ளனர்.

அமெரிக்காவில் கறுப்பின கலவரத்துக்குக் காரணமாயிருந்த காவற்றுறைக்கு கூடிய அதிகாரத்தையும் ஆயுதங்களையும் கொடுத்தார்கள், ஆனால் அவர்களுக்கு தேர்வுமுறை, பயிற்சிமுறை ஆகியவற்றில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

அண்மைக்காலத்தில் கதவு தட்டாமல் வீட்டிற்குள் செல்லும் உரிமை (no knock policy) என ஒன்றை உண்டு பண்ணியுள்ளார்கள். அமெரிக்க காவற்றுறை கதவை உடைத்துக்கொண்டு உட்செல்லும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

உதாரணத்திற்கு 1986ல் ஒரு வருடத்தில் 35 'no knock entry' மினியாபொலிஸ் மாகாணத்தில் இடம்பெற்றது. அதே இடத்தில் பத்து வருடங்களுக்குப்பின் 1996ல் எழுநூறு 'no knock entry' இடம் பெற்றுள்ளது. அதாவது நாள் ஒன்றிற்கு இரண்டு வீடுகளின் கதவுகளை உடைத்து பொலிசார் உட்செல்கிறார்கள். மேலும் தேசிய அரசாங்கத்தால் நகர்காவலர்களுக்கு வழங்கப்படும் மான்யம் போதைவஸ்து பாவனை காரணமாகச் செய்த கைதுகளுக்கு கூடுதலாக வழங்கப்பட்டது. இது போன்ற ஊக்குவிப்பால் 1980ல் போதை வஸ்து சம்பந்தப்பட்ட கைது 350,000 ஆக இருந்து 2005ல் 23 மில்லியனாக அதிகரித்துள்ளது. அமெரிக்காவில் சிறையில் அடைத்துள்ள கறுப்பினத்தவர்களின் எண்ணிக்கை, ஆங்கில ஏகாதிபத்தியத்தினால் தென் ஆபிரிக்காவில் அடைத்து வைத்திருந்த கறுப்பினத்தவர் தொகையிலும் அதிகமாகும்.

ஒருவர் போதைவஸ்து குற்றம் புரிந்தால் வாழ்நாள் முழுவதும் அந்த வடு அவர் வாழ்க்கையில் தாக்கம் விளைவிக்கும். அவருக்கு அரசவீடு மறுக்கப்படும். வேலை தேடுகையில் தான் சிறை சென்று வந்தவன் என்பதை வாழ்நாள் முழுவதும் தெரியப்படுத்த கடமைப்பட்டவராய் இருப்பார்.

அமெரிக்காவில் 2000ம் ஆண்டில் வேலை செய்யக்கூடிய வயதுள்ள வெள்ளையர்களை கவனித்தால் நூற்றியாறில் ஒருவர் சிறையில் இருந்தார். அதே காலத்தில் செய்யக்கூடிய வயதுள்ள கறுப்பு இனத்தவர் பதினாலுக்கு ஒருவர் சிறையில் இருந்தார். அதுவும் குடும்பத்தவர்களில் ஒன்பதில் ஒரு கறுப்பினத்தவர் சிறையில் இருந்தார். ஆனால், இரு இனத்தவரிடமும் போதை வஸ்துப்பாவனை ஒரே விழுக்காடாய் இருந்தது. சிறையடைப்பு மட்டும் கறுப்பினத்தவர்க்கு அதிகம்.

மேலோட்டமாக பார்க்கையில் இனத்துவேஷம் இல்லாத சட்டமாக தோன்றினாலும், செயற்பாட்டு முறையில் இனத்துவேஷம் நிறையவே தெரிகிறது.

ஜோர்ஜியா மாகாண போதைவஸ்து சட்டம் (Georgia Drug Law) இரண்டாம் முறை பிடிபட்டால் வாழ்நாள் சிறை வழங்கப்படலாம் எனக் குறிப்பிட்டுள்ளது. இச்சட்டத்தை செயற்படுத்திய விதத்தை கவனித்தால் வெள்ளையர்கள் அகப்படும் வேளைகளில் ஒரு விகிதமானவர்களுக்கு வாழ்நாள் சிறைத்தண்டனையும் கறுப்பினத்தவர்களில் 16 விகிதமானோருக்கு வாழ்நாள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. இதன் விளைவு இச்சட்டத்தின்படி வாழ்நாள் சிறையில் உள்ளவர்களில் 98 விழுக்காடு கைதிகள் கறுப்பு இன மக்கள்.

கறுப்பின இளைஞர்கள் அமெரிக்காவின் இளைஞர்களில் 16% ஆவர். ஆனால் இளைஞர்களில் 28 விகிதக் கைது கறுப்பு இளையவர்கள். இவர்களில் 35 விகிதமானவர்கள் வளர்ந்தவர்கள் சட்டமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதுடன் அவர்களில் 68 விகிதமானோர் வளர்ந்தவர்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

ஒக்லன்ட், கலிபோர்னியாவில் நடந்த ஒரு ஆய்வின்படி கறுப்பினச் சாரதி வெள்ளையினச் சாரதியிலும் இரண்டு மடங்கு அதிகம் நிறுத்தப்படுவதுடன் வெள்ளைச் சாரதியிலும் விட மூன்று மடங்கு சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்.

மினியாபொலிஸ் மாநிலத்தில் ஒலான்டோ கசிடி என்பவரை சிறு குற்றங்களுக்காக 13 வருடங்களில் 49 தடவை தடுத்துள்ளார்கள் கடைசியாக அவரது வாகனத்தின் மின்குமிழ் விளக்கு எரியவில்லை என நிறுத்தியுள்ளதுடன் அத்தருணத்தில் அவர் காரில் இருந்தபோதே சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவில் வெள்ளை நிற ஆசிரியர்கள் கணிப்பில் கறுப்பு மாணவர்கள் கெட்டித்தனம் குறைவானவர்கள் எனும் கருத்து உலவுகிறது. அதனால் ஆசிரியர் வெள்ளையினத்தவராயின் நல்ல மாணவர் தேர்வில் (gifted child) கறுப்பு மாணவர்கள் பாதிப்பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதே வேளை கறுப்பின ஆசிரியர்களின் கணிப்பில் கறுப்பு, வெள்ளை இனத்தவர்கள் ஒரே அளவாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இதனால் கறுப்பினத்தவர்கள் தொடர்ந்து பாதிப்படைகிறார்கள்.

ஒரு கறுப்பினத்தவர் வீட்டு குடும்பச்சொத்து வெள்ளை இனத்தவர் வீட்டு குடும்பச் சொத்தின் பத்தில் ஒரு பங்கே. பெரும்பான்மைச் சமூகம், கறுப்பினத்தவர்கள் என்ன செய்யலாம் என்ன செய்யக் கூடாது என்பதை நிர்ணயிக்கிறது. கறுப்பினத்த வாழக்கூடாது என்ற பிரதேசத்தில் ஆலைகளை அமைக்கிறார்கள். வறுமை கூடக் கூட வன்முறையும் போதைப்பொருட் பாவனையும் அதிகரிக்கிறது.

நகர்காவலருக்குப் பயிற்சி கொடுக்கும் போது அதிகாரமும் ஆயுதமும் கொடுக்கப்படுகிறது.

இவற்றின் விளைவுகளால் இன்று அமெரிக்காவின் பிறக்கும் வெள்ளையினக் குழந்தைகளில் இருபத்து மூன்றில் ஒன்று சிறை செல்கிறது. அதேவேளை கறுப்பினக் குழந்தைகளில் நாலில் ஒன்று சிறை செல்கிறது.

'குட்டக்குட்ட குனிபவனும் மடையன், குனியக்குனியக் குட்டிகிறவனும் மடையன்' என்று எழுந்து விட்டார்கள் கறுப்பு இன மக்கள்.



kumar.punithavel@thaiveedu.com

# ஈழத்தவர் மீது நிகழும் பண்பாட்டுப் படையெடுப்பு

- அருண்மொழிவர்மன் -

பண்பாட்டுப் படையெடுப்பு என்பது பற்றிப் பலதடவைகள் வெவ்வேறு இடங்களில் பேசியிருக்கின்றோம். என்றாலும், இப்போதைய சூழலில் இந்தப் பண்பாட்டுப் படையெடுப்பு என்றால் என்னவென்பதைப் பற்றி நாங்கள் சற்று ஆழமாக யோசிக்க வேண்டி இருக்கின்றது. நாங்கள் ஒருபோதும் நினைத்துப் பார்த்திராத அளவுக்கு அந்தப் பண்பாட்டுப் படையெடுப்பின் தாக்கங்களும் அதன் விளைவுகளும் புலம்பெயர் நாடுகளிலும் ஈழத்திலும் தீவிரடைந்து இருப்பதை அண்மைக் காலங்களில் நிகழும் சம்பவங்கள் ஊடாக நம்மால் உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

பொதுவாக படையெடுப்பு என்கிறபோது அதை போர் சம்பந்தமாகவும் ராணுவத்துடன் சேர்ந்து அடையாளப்படுத்தக் கூடிய ஒன்றாகவுமே நாம் இயல்பாகப் புரிந்துகொள்வோம். ஆனால், இந்தப் பண்பாட்டுப் படையெடுப்பு என்பது சற்று வேறுபட்டது. தமிழகச் சூழலில் நிகழ்ந்துகொண்டிருந்த ஆரிய அல்லது பார்ப்பனியப் பண்பாட்டு தாக்கத்தை முன்வைத்து தந்தை பெரியார் அவர்களின் பேச்சுக்கள், எழுத்துக்கள், செயற்பாடுகள் என்பவற்றினை உள்வாங்கி அதன் அடிப்படையிலேயே இந்தப் பண்பாட்டுப் படையெடுப்பு என்கிற கருத்தாக்கத்தை நான் புரிந்துகொள்கின்றேன். பெரியார் பொதுவாக எதையும் கோட்பாடுகளையும் மேற்கோள்களையும் சுட்டிக்காட்டி தனது வேலைத்திட்டங்களை வகுத்துக்கொண்டவர் அல்லர். சமூகம் பற்றிய அக்கறை, சமூக விடுதலை நோக்கியதான பயணம் என்பதனை அவர் தொடர்ச்சியான நடவடிக்கைகள், எதிர்வினைகள், தர்க்கபூர்வமான கேள்விகள், மக்களுடன் தொடர்ச்சியான உரையாடல்கள் என்பவற்றோடு மேற்கொண்டவர் அவர். அவற்றின் அடிப்படையில் பண்பாட்டுப் படையெடுப்பு என்பது பற்றி அவருக்குப் பிரக்ஞைபூர்வமான அறிதல் இருந்திருக்கின்றது. பண்பாட்டுப் படையெடுப்பு என்பதை, ஒரு சமூகம் (சமூகம் அ) இன்னொரு சமூகம் (சமூகம் ஆ) மீது அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் (சமூகம் ஆ) தாங்கள் அவர்களுக்குப் (சமூகம் அ) பண்பாட்டின் அடிப்படையில் கீழ்ப்பட்டவர்கள், தாழ்ந்தவர்கள் என்றும் நினைக்கும்படி அவர்களது சிந்தனையைக் கட்டமைத்துக் கொள்ளும் நிலைக்கான காரணி பண்பாட்டுப் படையெடுப்பு என்று கருதலாம். பண்பாட்டுப் படையெடுப்பு ஒன்று நிகழ்வதற்கு இரண்டு காரணிகள் முக்கியமாக அமைகின்றன, முதலாவது காரணியாக இந்தப் பண்பாட்டுத் திணிப்பை நிகழ்த்துகின்ற தரப்பும், இரண்டாவது தரப்பாக இந்தப் பண்பாட்டுத் திணிப்பு நிகழ்வதை அனுமதித்துவிடுகின்ற தரப்பும் அமைந்துவிடுகின்றன.

இந்த பண்பாட்டு படையெடுப்பு என்பது பற்றி நாங்கள் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் பேச வேண்டி இருக்கின்றது. அதன் முதற்கட்டமாக இந்த உரையாடலை தொடக்கும் பொருட்டு இந்தக் கட்டுரையில் நாங்கள் ஈழத்தவர்கள் மீது நிகழ்த்தப்படும் பண்பாட்டுப் படையெடுப்புடன் தொடர்பான மூன்று விடயங்களைப் பார்ப்போம்.

- பண்பாட்டுப் படையெடுப்பு என்ற விடயத்தில் ஊடகங்களின் வகிபாகம்.
- பண்பாட்டுப் படையெடுப்பின் மூலம் சடங்குகளில் நிகழ்கின்ற மாற்றங்களும் கலை, இலக்கியத் துறைகளில் செலுத்தப்படும் தாக்கங்களும்.
- பண்பாட்டுப் படையெடுப்பினால் நிகழுகின்ற பொருளாதார ரீதியிலான தாக்கங்கள்

பண்பாடு என்பது எப்பொழுதும் நிலையானதாக இருப்பதில்லை. அது தொடர்ச்சியாக மாறிக்கொண்டே இருப்பது என்பது எல்லோரும் அறிந்ததே. அதேநேரம், இயல்பாக கால ஓட்டத்தில் நிகழும் மாற்றங்களிற்கும் புறக் காரணிகளின் நேரடியான பாதிப்பினால் அல்லது தூண்டலினால் நிகழும் சடுதியான மாற்றங்களிற்கும் வேறுபாடு இருக்கின்றது. பண்பாடு பற்றியும் மரபுரிமை பற்றியும் பேசுகின்றபோது ஒரு விடயத்தில் கூடுதல் அக்கறையாக இருக்க வேண்டும். பண்பாட்டையும் மரபுரிமையையும் காப்பதாகச் சொல்லுகின்றபோது அவற்றில் இருக்கக் கூடிய பிற்போக்குத்தனங்களும், ஒடுக்குமுறைகளைச் செய்வதற்கான தளங்களை வழங்கக் கூடியதாக அவற்றில் இருக்கின்ற அம்சங்களையும் நாம் சரியாகவும் கவனமாகவும் இனங்கண்டு அவற்றைப் பற்றிய உரையாடல்களை நிகழ்த்துவதன் மூலமாக விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவேண்டும். எனவே பண்பாட்டுப் படையெடுப்பு என்று பேசும்போதும் அந்தப் பண்பாட்டுப் படையெடுப்பால் நிகழ்த்தப்படுகின்ற அடிமைப்படுத்தும் சிந்தனைமுறையையும் அதற்குப் பின்னால் இருக்கின்ற பண்பாட்டு ஆதிக்கம், பொருளாதாரச் சுரண்டல் என்பனபற்றிய உரையாடல்களையும் பிரக்ஞையையும் ஏற்படுத்தவேண்டும் என்பது முக்கியமானது.



தொடர்ச்சியாக பண்பாடு சார்ந்த அம்சங்கள் மாறிச் செல்லும்போது உணவுப் பழக்கவழக்கம் மாறாது நீண்டகாலம் இருக்கக்கூடியது என்பதாக ஒரு கருத்து இருக்கின்றது. ஆனால் நாளாந்த வாழ்வின் உதாரணங்களின் அடிப்படையில் குறுகியகாலத்தில் ஈழத்தவர்களின் உணவுப் பழக்கங்களில் இடம்பெற்ற மாற்றங்களைப் பார்ப்போம். ஈழத்திலும் சரி, கனடாவிலும் சரி திருமண விழாக்கள் உள்ளிட்ட நிகழ்வுகளில் பரிமாறப்படும் உணவுகள், சிற்றுண்டிகள் என்பவற்றில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்கொண்டால், வழமையாக இருந்த உணவுகள் மாறி சடுதியாக பனீர் மசாலா, பட்டர் சிக்கன், நாண் உள்ளிட்ட உணவுப்பொருட்களும் சிற்றுண்டிகளுமே பிரதானமாகப் பரிமாறப்படுகின்றன. உணவகங்களில் பரிமாறப்படும் உணவுகள், சிற்றுண்டிகளிலும் அவற்றின் தயாரிப்பு முறையிலும் தென்னிந்திய, வட இந்திய முறைகளே திடீரென்று பரவலடைந்துள்ளன. கனடாவில் இந்தப் போக்கினை தெளிவாக இனங்காணக் கூடியதாக இருக்கின்றது. நீண்டகாலமாக மக்கள் மத்தியில் நிலைத்த பெயரைக் கொண்ட கனடிய உணவகம் ஒன்று சில ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்திய சமையல் கலைஞர் ஒருவரிடம் பயிற்சிபெற்ற சமையல் கலைஞர்களை வைத்து அந்தத் தென்னிந்திய சமையல் கலைஞர் வழங்கிய உணவு தயாரிப்பு முறைகளின்படி (Recipe) தமது உணவுகள் தயாரிக்கப்படுவதாக விளம்பரம் செய்தது நல்லதோர் உதாரணம். நாம் சிலவிடயங்களை ஆராயலாம்.

குறித்த சமையல் கலைஞர் தமிழகத்தில் இருந்து வெளிவருகின்ற இதழ்களில் கடந்த சில ஆண்டுகளாக உணவு தயாரிப்பு முறைகள் குறித்துத் தொடர்ச்சியாக எழுதிவந்தவர். பின்னர் தொலைக்காட்சி நிகழ்வுகளிலும் தொடர்ச்சியாகப் பங்கெடுத்து சமையல் குறிப்புகள் வழங்கிவந்தவர். தென்னிந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஆர்வமுடன் பார்க்கின்ற வழக்கம் ஈழத்தவர்களிடம் நீண்டகாலமாக இருந்தது என்றாலும், கடந்த சில ஆண்டுகளாக அது வேகமாக அதிகரித்தது, ஒவ்வொரு வீடுகளிலும் முழுநேரமும் ஏதாவது ஒரு தென்னிந்திய தொலைக்காட்சி இயங்குகின்ற வழக்கம் இப்போது பொதுவானதாகிவிட்டது. குறித்த சமையல் கலைஞரும், அவர் வழங்குகின்ற சமையல் குறிப்புகளும், உணவு தயாரிப்பு முறைகளும் இந்த ஊடகங்களூடாக மக்கள் மத்தியில் பிரபலமாகின்றன. அந்தப் பிரபலத்தை வைத்துத் தமக்கு விளம்பரமாக்க குறித்த உணவகம் நினைக்கின்றது. இந்தச் செயற்பாடுகளினூடக சமகாலத்தில் உணவுப் பண்பாடு மாற்றமடைகின்றது. இதனை ஒரு வியாபார, விளம்பர உத்தியாக எடுத்துக்கொண்டு ஏனைய உணவகங்களும் தாம் பரிமாறும் உணவுகளையும் உணவுத் தயாரிப்பு முறைகளையும் மாற்றுவார்கள், புதிது புதிதாக சமையல் கலைஞர்களை ‘விம்ப உருக்களாக’ இறக்குமதி செய்வார்கள். இப்படியாக உணவுப் பண்பாடு மாற்றமடைவதுடன்சேர்த்து அவற்றுக்கான மசாலாப் பொருட்கள், உணவு மூலப் பொருட்கள் என்று பெரியதோர் சந்தையும் நுகர்வுக் கலாசாரமும் இந்தியாவை நோக்கிச் செல்லும்.

தென்னிந்தியத் தொலைக்காட்சிகளில் அண்மைக்காலங்களில் மொழிமாற்றம் செய்யப்பட்ட வட இந்திய நாடகங்களும் பெருமளவில் ஒளிபரப்பாகின்றன. தவிர, அவற்றில் ஒளிபரப்பப்படுகின்ற இதர நிகழ்வுகளிலும்கூட வட இந்தியப் பாணியிலான ஆடைகளும் அணிகலன்களும் அதிகம் பாவிக்கப்படுகின்றன. புலம்பெயர் நாடுகளைப் பொறுத்தவரை குழந்தைகளும் சிறுவர்களும் தென்னிந்தியத் தொலைக்காட்சி, திரைப்படங்கள் என்பவற்றின் ஊடாகவே தமிழ்மொழியுடன் பரிச்சயம் அடைகின்றார்கள் என்றபோதும், அவற்றையே தமது பண்பாட்டு வாழ்வியல் அம்சங்களாகக் கருதிக்கொள்கின்றார்கள் என்பது கசப்பான உண்மை. அதேநேரம் அவர்கள் அவற்றிலிருந்தே சடங்குகளையும், ஆடைகளையும், அணிகலங்களையும் தமிழர் பண்பாடு என்ற புரிதலுடன் செய்யத் தொடங்கிவிடுகின்றார்கள். அதன் தொடர்ச்சியாக தாமும் அந்தச் சடங்குகளைக் கடைப்பிடிக்கவும், சடங்குகளிலும் விசேட நிகழ்வுகளிலும் அதே ஆடைகளையும் அணிகலங்களையும் அணியவும் பழகிக்கொள்ளுகின்றார்கள். பெற்றோர்களுக்கும் இதுபற்றிய பிரக்ஞை இருப்பதாகத் தெரியவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் ரொரன்றோவில் இடம்பெற்ற Tamil Street Festival ஒன்றில் தமிழ்ப் பண்பாட்டில் ஆடை அணிந்தவர்கள் நடைபவனி வருகின்றனர் என்ற அறிவிப்பு ஒலிபெருக்கியில் தொடர்ந்துகொண்டிருக்க குர்தாவும் சஃபாரியும் அணிந்த சில இளைஞர்கள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்துகொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், இந்தப் புரிதலின்மையின் காரணமாக திருமண விழாவிற்கு முன்னர் பஜன் பாடல், மெஹந்தி அணிதல் ஆகியன இப்போது புலம்பெயர் நாடுகளில் ‘புதிய தமிழ்ப் பண்பாடுகள்’ ஆகிவிட்டன.

அதன் தொடர்ச்சியாக மீண்டும் இன்னொரு விதமான நுகர்வுக் கலாச்சாரத்திற்கும்

*தொடர்தல் 67ம் பக்கம்*

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

# ஈழத்தவர் மீது...

66ம் பக்கத் தொடர்ச்சி...

பொருளாதாரச் சுரண்டலிற்கும் அவர்கள் ஆளாகிவிடுகின்றார்கள். உதாரணமாக அரங்கேற்றம் ஒன்று நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதற்குத் தேவையான ஆடைகள், அணிகலங்களை வாங்குவதற்கு இந்தியாவிற்குச் செல்கின்ற ஒரு வழக்கம் இப்போது வந்திருக்கின்றது. அதற்காகவே மாணவர்களுடன் மாணவர்களது பெற்றோரும் ஆசிரியரும் இந்தியா செல்கின்ற வழமையும் இருக்கின்றது. இதனூடாக குறித்த அந்த மாணவி அல்லது மாணவருக்கான ஆடைகள் அவர்களது ஆசிரியர்களுக்கான ஆடைகள் மற்றும் போய்வருவதற்கான விமானச் சீட்டுகள் என்றும் பெருந்தொகை பணம் செலவாகின்றது. இதுபோலவே திருமண வீடுகள், பூப்புநீராட்டு விழா போன்றவற்றில் நெருங்கிய உறவினர்களுக்கு சேர்த்தே உடைகளும் அணிகலங்களும் வாங்குகின்ற வழமையும் இருக்கின்றது. இவற்றுக்கு என்று செலவழியும் பணம் பல்லாயிரக் கணக்காக டொலர்கள் என்பதுடன் இவ்வளவு தொகை கொடுத்து வாங்கப்படும் ஆடைகளும் அணிகலங்களும் ஒரு தடவைக்கு மேல் அணியப்படுவது இல்லை. ஊடகங்களினூடாக இவ்விதமாக திணிக்கப்படும் பண்பாட்டுப் படையெடுப்பின் மூலம் ஒரே நேரத்தில் இரண்டு வழிமுறைகள் ஊடாக பண்பாட்டு அழிப்பு நடக்கின்றது. ஒன்று இருக்கின்ற ஒன்றை இல்லாமல் ஆக்குவது, அதே சமயத்தில் அதற்கு மாற்றாக இல்லாத ஒரு விடயத்தை புதிதாகப் புகுத்துவது.

அடுத்ததாக கலை இலக்கியம் போன்ற துறைகளில் இருக்கும் இந்திய மோகம் என்பது இந்திய / தென்னிந்திய கலை, இலக்கியம் குறித்த அடிப்படையில்லாத கற்பிதங்களால் வருகின்ற ஒருவிதமான அடிமை மோகம் என்று குறிப்பிடலாம். துரதிஸ்டவசமாக எமது நண்பர்கள் பலர் கூட இந்த மோகத்தால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதைச் சொல்லிக்கொண்டுதான் இதைப்பற்றிப் பேசவேண்டி இருக்கின்றது. சாதாரணமாக நண்பர்களுடன் நடைபெறும் சில உரையாடல்களில் இந்த விடயம் பற்றிப் பேசும்பொழுது 'என்ன இருந்தாலும் இந்தியர்கள் எழுதுவதுதான் எழுத்து. அவர்கள், பெரிய ஆட்கள்' என்ற சொல்லாடல்களை அடிக்கடி கேட்கக்கூடியதாக இருக்கின்றது. இதற்குப் பின்னால் இருக்கக்கூடிய அம்சம் அடிமைத்தனமாக சிந்தனைமுறையால் கட்டமைக்கப்பட்ட பண்பாட்டு அடிமைத்தனம் என்றே சொல்லவேண்டி இருக்கின்றது. சமகாலத்தில் ஈழத்தவர்கள் தமது நிலம்சார்ந்த உணவு சார்ந்த பண்பாட்டு பழக்க வழக்கங்கள் சார்ந்த விடயங்களை உள்வாங்கி எழுதும்போது / பேசும்போது அதற்கான வழக்காறுகளை பேச்சுவழக்கிலும் மொழி நடையிலும் பயன்படுத்தும்போது இந்திய வாசகர்களுக்கு அவை தடங்கலாக இருக்கிறது என்பதற்காகவே ஒரு செயற்கையான மொழிநடை பேச்சுவழக்கிலும் எழுத்து வழக்கிலும் பயன்படுத்தப்படுகின்ற வழக்கம் ஓர் உத்தியாகக் கையாளப்படுகின்றது. ஈழத்தில் இதழியலும் பதிப்பு முயற்சிகளும் இன்னமும் தொழில்முறையாக மாறாத சூழலில் அங்கு எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் மற்றும் ஏனைய கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுபவர்களும் எதிர்கொள்ளும் சவால்கள் நிறைய இருக்கின்றன. இதற்குமேலாக இன்னொரு சவாலாக ஈழத்துப் படைப்புகள் பலவற்றை இந்தியாவில் சந்தைப்படுத்த முடியாத நிலை ஓர் இந்திய சட்டமாகவோ அல்லது வழிமுறையாகவோ இருக்கின்றது என்பதையும் நாங்கள் நினைவிற்கொள்ள வேண்டும். இன்றுவரை தமிழகத்தில் இருக்கும் எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் இது குறித்து ஓர் இடத்திலும் பேசியதாகவோ அல்லது எதிர்க்குரல் எழுப்பியதாகவோ நாம் அறியவில்லை. அவர்கள் அதற்குச் சொல்கின்ற தீர்வு எல்லாம் நீங்கள் ஏன் வீணாக ஈழத்து இதழ்களில் எழுதிவருகின்றீர்கள், தமிழகத்தில் எத்தனையோ இதழ்கள் வருகின்றனதானே, தமிழகத்துப் பதிப்பகங்களில் உங்கள் புத்தகங்களைப் பதிப்பிக்கலாம் தானே? என்பதாகவே இருக்கின்றது. தற்போதைய நிலையில் இப்படியாக அவர்கள் கூறுவது கூட பண்பாட்டு ரீதியில் அடக்குகின்ற ஓர் அம்சமாகவே கருதப்படவேண்டும். தற்போதைய நிலை மாற்றமடைந்து இந்திய நூல்கள் எப்படி ஈழத்துக் கடைகளில் விற்கப்படுகின்றனவோ அதுபோல ஈழத்து நூல்கள் இந்தியாவில் உள்ள கடைகளில் நேரடியாகவே விற்கலாம் என்கிற நிலைவரவேண்டும், அதுவரை ஈழத்தவர் இதழ்களையும் நூல்களையும் தமக்குக் கிடைப்பதில்லை என்பதுவும், அவர்களை தமிழகத்து இதழ்களில் எழுதவேண்டும் என்பதைப் பரிகாரமாக முன்வைப்பதும் அறம் சார்ந்ததாகமாட்டா.

பொதுவாக கலை இலக்கியம் என்று சொல்கின்ற பொழுது, எழுத்து சார்ந்த விடயங்களை மட்டும் நாங்கள் கவனத்தில் கொள்ளக்கூடாது. அதற்கு மேலாகவும் ஏனைய கலை வடிவங்கள் குறித்தும் பேசவேண்டும். தமிழகத்தில் திரைப்படம் என்ற பெயரில் எடுக்கப்படுகின்ற அனைத்து விதமான குப்பைகளும் கூட உடனடியாக ஈழத்திற்கும் புலம்பெயர் நாடுகளிற்கும் சென்றடைந்துவிடுகின்றது. தமிழக திரைப் படத்துறையில் வணிக ரீதியான வளர்ச்சிக்கு புலம்பெயர் நாடுகளில் வளரும் ஈழத்தமிழர்களே முக்கிய காரணிகள். அப்படி இருக்கின்றபோதும், ஈழத்தில் அல்லது புலம்பெயர் நாடுகளில் எடுக்கப்பட்ட நல்ல / கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய திரைப்படங்கள் கூட இந்தியாவில் திரையிடப்படுவதில்லை. அப்படித் திரையிட முயற்சி எடுக்கப்பட்ட கனடாவில் வெளியான ஒரு படத்திற்கு படத்தில் இருக்கின்ற பேச்சு வழக்கினை 'இந்தியத் தமிழிற்கு' டப் பண்ணவேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாகச் சொன்னதாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. மேலும் I Scream என்ற கனடாவில் வெளியான ஒரு திரைப்படத்தின் இறுவட்டில் திரைப்படம் தொடங்குவதற்கு முன்னர் பின்வரும் அறிவிப்பு விடப்பட்டிருக்கின்றது, 'இந்தத் திரைப்படத்தில் உள்ள உரையாடல்கள் தமிழ்நாட்டு திரைப்பட பேச்சு வழக்கில் இடம்பெற்றுள்ளது. வியாபாரமாக்கவேண்டிய தேவை இருப்பதால் இதை மாற்றியமைத்துள்ளோம்'. இங்கு கவனிக்க வேண்டியது நாம் முன்னரே சொன்னது போல ஒரு பண்பாட்டுப் படையெடுப்பு என்பது நடப்பதற்கு அந்தப் பண்பாட்டை திணிக்கின்ற தரப்பு ஒன்றும் அந்தத் திணிப்பை ஏற்றுக் கொள்ளும்படியாகக் கட்டமைக்கப்பட்ட அடிமைத்தனமாக சிந்தனைமுறையைக் கொண்ட இன்னொரு தரப்பும் தேவையாக இருக்கின்றது என்பதை மீளவும் நினைவில் கூறவேண்டியிருக்கின்றது.

கனடாவின் கிட்டத்தட்ட 100க்கு மேற்பட்ட ஊர்ச்சங்கங்களும் பாடசாலைச் சங்கங்களும் இருக்கின்றன என்று ஒரு கணக்குச் சொல்லப்படுகின்றது. இவை ஒருங்கிணைக்கின்ற ஆண்டு விழாக்களிலும் கொண்டாட்ட நிகழ்வுகளிலும் தென்னிந்தியக் கலைஞர்கள், தென்னிந்தியத் திரைப்படக் கலைஞர்கள், சுப்பர் சிங்கர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்ற கலைஞர்கள் வந்தால்தான் அந்த நிகழ்விற்கு மக்கள் வருவார்கள் என்றும் அவைதான் கொண்டாட்டமானவை, இவர்கள் வந்தால்தான் விளம்பரதாரர்கள் விளம்பர அனுசரனை வழங்குவார்கள் என்றும் ஒரு நம்பிக்கை அல்லது ஒரு சமாளிப்பு அடிக்கடி சொல்லப்படுகின்றது. சரி அப்படியே விளம்பரதாரர்கள் இதற்காகத் தான் பணம் தருவார்கள் என்று வைத்துக்கொள்வோம் ஆனால் மேலே சொன்ன கலைஞர்களைக் கொண்டு வருவதற்கு இங்கு கொடுக்கப்படுகின்ற டிக்கெட் செலவு, அவர்கள் இங்கு வந்து நிற்பதற்கான தங்குமிடச் செலவு, அதைத் தவிர அவர்கள் இங்கு இருக்கின்ற காலங்களுக்கு செலவழிக்கப்படுகிற செலவுகள் உட்பட எல்லாவற்றையும் கணக்குப் போட்டுப் பார்த்தால் இந்த விளம்பரதாரர்கள் தருகின்ற பணத்தை விடக் கூடுதலாக மேலே சொன்ன கலைஞர்களைக் கூப்பிடுவதால் வருகின்ற செலவு அமைந்துவிடுகின்றது. தவிர, இப்படியானவர்கள் வந்து செய்கின்ற நிகழ்ச்சிகள் கூட மிகப் பிற்போக்குத்தனமாகவையாக, கருத்தியல் ரீதியில் கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாக, வெறுமே திரைப்பட ஆபாசங்களாகவோ அமைந்துவிடுகின்றன. ஊர்ச்சங்கங்களும் பாடசாலைச் சங்கங்களும் பண்பாட்டைக் காப்பாற்றுகின்றோம் என்று சொல்லிக்கொண்டு இதுதான் பண்பாடு என்று சொல்லி இளைய தலைமுறைக்கும் இந்தச் சீரழிவுகளை சொல்லிக்கொடுப்பதைவிட பண்பாடு என்பது பற்றிய எந்த அறிவும் இல்லாமல் அடுத்த தலைமுறை வளர்வதே ஆரோக்கியமாக இருக்கும்.

இப்படியாக பிற்போக்குத்தனமான சமூகத்திற்கு எந்தவிதத்திலும் பிரயோசனம் இல்லாத கருத்துக்களைப் பரப்புவதை விட அரசியல் நுண்ணுணர்வுடனும் கலைத்துவமும் நிறைந்த நிகழ்வுகளைப் படைக்கக் கூடிய ஈழத்துக் கலைஞர்களும் கலைவடிவங்களும் இருக்கின்றன. அவர்களை வைத்து சரியான ஒருங்கிணைப்பில் புலத்திலும் ஈழத்திலுமாக நாங்கள் வாழ்கின்ற நிலங்களது பேசவேண்டிய பிரச்சினைகளை சமூகநீதியையும் மானுட விடுதலையையும் நோக்கியதாக, அனைத்துவிதமான அடக்குமுறைளுக்கும் எதிரானதான நிகழ்சிகளை எம்மால் தயாரிக்க முடியும். அப்படியாக நிகழ்வுகளை நடத்துவதுதான் சமூகத்திற்கும் மக்களுக்கும் இளைய தலைமுறைக்கும் நாம் செய்கின்ற பொறுப்பான செயலாக அமையும்.

இந்தக்கட்டுரையை வாசிப்பவர்கள் பலரும் ஏதோ ஒரு விதத்தில் வாசிப்புடன் தொடர்புடையவர்கள். உங்களிடம் பகிர வேண்டிய இன்னொரு கசப்பான உண்மை என்னவென்றால், புலம்பெயர் நாடுகளில் இருந்தும் ஈழத்திலிருந்தும் வெளிவருகின்ற பத்திரிகைகள், இதழ்கள் என்பன இலவசமாகக் கொடுக்கப்படவேண்டியன அல்லது இலவசமாக கொடுப்பதற்கான தகுதியையே உள்ளடக்கத்தில் கொண்டிருப்பன என்கின்ற ஒரு விதமான சிந்தனை எம்மில் பலருக்கு இருக்கின்றது. இது மிக மோசமான சிந்தனை என்றுதான் சொல்ல வேண்டும். கனடாவை எடுத்துக் கொண்டால் பலசரக்குக் கடைகள் பலவற்றில் கூட ஆனந்த விகடன், குமுதம், குங்குமம் முதல் ஆவிகள் உலகம் வரை பல இதழ்கள் விற்கப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் தரத்திலும் உள்ளடக்கத்திலும் இவற்றை விட சிறந்ததாக இருக்கக் கூடிய பல ஈழத்துப் பத்திரிகைகளையும் இதழ்களையும் வாங்குவதற்கு அவர்கள் தயாராக இருப்பதில்லை. இந்த மனநிலைக்கான காரணம் அவர்களது சிந்தனைமுறையைக் கட்டமைக்கும் படியாக நிகழ்ந்துவருகின்ற பண்பாட்டுப் படையெடுப்பு என்பதைத்தான் மீளவும் வலியுறுத்தவேண்டியுள்ளது. பெரியார், ஆரியரின் ஆதிக்கம் அல்லது அந்தப் பண்பாட்டுப் படையெடுப்பு பற்றிப் பேசுகின்ற பொழுது அந்த ஆரியர்களை விட அல்லது பார்ப்பனர்களை விடத் தாம் கீழானவர்கள், தாழ்வானவர்கள் என்பதை ஒவ்வொரு விடயத்திலும் நம்பிவிடும்படியான மனநிலை எப்படி திராவிடர் அல்லது தமிழர் மனதில் கட்டமைக்கப்பட்டது என்பது பற்றிப் பேசுகின்றார். அதன் தொடர்ச்சியாக புராணங்களும் சடங்குகளும் மதமும் இவற்றில் ஆற்றிய பங்கினைப் பற்றிக்கூறியதுடன் அந்த அடிப்படையில் சுயமரியாதைக்கும் சமத்துவத்துக்கும் எதிராகவும், சுயமரியாதையும் சமத்துவமும் இல்லாத அடிமைத்தனமான சிந்தனை முறையுடன் மனிதர்களை உருவாக்குவதற்கும் இந்த பண்பாட்டு படையெடுப்பே காரணமாக இருக்கின்றது என்ற அடிப்படையில்தான் அவர் தனது செயற்பாடுகளைத் தொடர்ந்தார். அந்த விதத்தில் பண்பாட்டுப் படையெடுப்பு என்ற விடயம் இன்று ஈழத்தவர்களுக்கும் பொருத்தமானதாகத்தான் இருக்கின்றது. நாங்கள் இந்தியர்களுக்கும் தென்னிந்தியர்களுக்கும் பண்பாட்டு ரீதியில், அல்லது இந்தியக் கலை வடிவங்களுக்கு அடிமைப்பட்டவர்கள், அவையே உன்னதங்களாக இருக்கின்றன, நம்மிடம் ஒன்றும் இல்லை, நாம் அவர்களில் தங்கியிருக்க வேண்டியவர்கள், அவர்களது தயவுடன் இருக்கவேண்டியவர்கள் என்கின்ற மனப்பான்மை இந்தப் பண்பாட்டுப் படையெடுப்பினாலும் அதன் தாக்கத்தினாலும் எமது மூளையில் பதிக்கப்பட்டுவிட்டது. அன்று கதாகாலட்சேபமும் சடங்குகளும் புராணங்களும் செய்தவற்றை இன்று ஊடகங்களும் திரைப்படங்களும் சில கலை இலக்கியக்காரர்களும் சேர்ந்தே செய்கின்றனர். இவர்கள் குறித்து நாம் விழிப்பாக இருக்கவேண்டும்.



arunmozhivarman@thaiveedu.com




# ஆஸ்திரேலியாவில் அழித்தொழிக்கப்படும் தொல்குடிமக்கள்

- பொன். பாலராஜன் -

உலகிலேயே மிகவும் பாதுகாப்பான, பொருள்வளம் படைத்த, மக்களாட்சி நாடுகளில் ஒன்றாக ஆஸ்திரேலியா விளங்குகிறது.

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26ம் திகதி 'ஆஸ்திரேலிய தினம்' கொண்டாடப்படுகிறது. ஆஸ்திரேலிய மக்கள் பெரும் எண்ணிக்கையில், உண்டு களித்து அதை கொண்டாடி, மகிழ்வார்கள்.




ஆனால், ஆஸ்திரேலிய தொல்குடி மக்களோ தமது சொந்த நாட்டிலேயே அந்நியர்களாக, ஓரங்கட்டப்பட்டு, கவனிப்பாரற்று, வேறு நாடொன்றில் வாழ்வது போல் உணர்கிறார்கள். அடிப்படை வாழ்க்கை வசதிகள் - சுகாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு வசதிகள்- குன்றியவர்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

'ஒரு செல்வந்த நாடு என்ற வகையில் இது எங்கள் அவமானமாகவே தொடர்கிறது,' என்று ஆஸ்திரேலிய லோவிட்ஜா நிறுவகத்தின் தலைமை நிர்வாகியான ரோம்லி மொக் (Romlie Mokak, Chief Executive, Lowitja Institute) கூறியுள்ளார். இது தொல்குடி மக்களின் நலவாழ்வு, நல்வாழ்வு பற்றி ஆராய்ந்து வரும் நிறுவகம்.

தொல்குடி மக்களின் வாழ்புலத்தினுள் ஆஸ்திரேலியாவும், அதைச் சூழ்ந்த தீவுகளும் அடங்கும்: டொரெசு நீரிணை தீவுகள் (Torres Strait Islands, தஸ்மேனியா (Tasmania), தென்னந்த்தீவு (Coconut Island); முதலியன அவற்றுள் இடம்பெறும்.

தொல்குடி மக்களுக்கு சமத்துவம் அளிக்க பற்பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை முன்னாள் ஆஸ்திரேலிய பிரதமர் மால்கம் டர்ன்புல் (Malcolm Turnbull) ஒப்புக்கொண்டார். இனங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகளை நிரவுதல் என்ற அறிக்கை வெளியிட்டபோது 'நாங்கள் போதுமான தூரம் நெருங்கி வரவில்லை' என்று குறிப்பிட்டார்.

தொல்குடி மக்களுக்கும் நாட்டின் ஏனைய மக்களுக்கும் இடையே உள்ள வெளியைக் குறைப்பதற்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் பெரிதும் உதட்டளவிலேயே கரிசனை செலுத்தி வருகிறது. இலக்குகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை அவர் ஒப்புக் கொண்டார்.

## உலக தொல்குடிமக்கள் யார்?




உலகம் முழுவதும் 90 நாடுகளில் கோடிக் கணக்கான மக்கள் தொல்குடி மக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் 5,000க்கும் மேற்பட்ட குழுமங்களைச் சேர்ந்தவர்கள் 7,000க்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசுகிறார்கள். அந்த மொழிகளில் 2,680 அழிந்தொழியும் ஆபத்தில் உள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை 2019ம் ஆண்டை உலக தொல்குடி மொழிகளின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியது. தொல்குடி மக்கள் திரள் ஒன்றை ஒரு குழுமமாகக் கொள்வதற்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறை உண்டு. இது பிரித்தானியர், கனடியர், ஆஸ்திரேலியர் என்பதற்கான அதே வரையறைக்கு நிகரானது.

ஒருவரின் முதாதையர் குறிப்பிட்ட நிலத்தில் வாழ்ந்திருந்தால், அவர் தொல்குடியினர் என்பதை சர்வதேச சட்டம் ஒப்புக் கொள்கிறது - மற்றவர்கள் வந்து ஆதிக்கம் செலுத்துவதற்கு முன்பே அவர்கள் தொல்குடி மக்களாக தமது சொந்த, தனித்துவமான பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர்.

அத்தகைய தொல்குடி மக்களின் நிலம் ஆக்கிரமிக்கப்படுவதும், அவர்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதும் அடிக்கடி நிகழ்பவை. தொல்குடி மக்கள் எதிர்கொண்டுவரும் ஆபத்துகள் அவை.

ஆஸ்திரேலிய தொல்குடி மற்றும் டோரெஸ் நீரிணை தீவு மக்கள் உலகின் மிகப்பழைய, தொடர்ச்சியான பண்பாட்டுப்பெருமையின் காப்பாளராக உள்ளனர். அவர்களது பாரம்பரியம் ஒவ்வொன்றும் அதன் சொந்த, தனித்துவமான பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், மொழிகளின் கலவையைக் கொண்டுள்ளது. 1788ல் ஐரோப்பியர் படையெடுத்து நுழைய முன்னர் 250 க்கும்மேற்பட்ட தொல்குடி நாடுகள் இருந்தன - ஒவ்வொன்றும் பல குலங்களைக் கொண்டிருந்தன.

டோரெசு நீரிணை தீவுகள் (Torres Strait Islands), வடகிழக்கு குயின்ஸ்லாந்து மற்றும் பப்புவா நியூ கினியா ஆகியவற்றுக்கு இடைப்பட்ட தீவுகளிலிருந்தும், மேற்கு பசிபிக்கில் உள்ள மெலனேசியா (Melanesia) விலிருந்தும் தோன்றியவை. அவை தனித்துவமான பண்பாடுகள் கொண்டவை.

## ஆஸ்திரேலிய தொல்குடி மக்களை Aborigines என்பது சரியா?

Aborigine என்பது ஒருவரைப் புண்படுத்தும் சொல்லாகவே புலப்படுகிறது. பிரித்தானியர் ஆஸ்திரேலியாவை கட்டியாண்ட காலத்து இனவாதப் பேச்சுகளையும் சிந்தனைகளையும் அது கொண்டிருக்கிறது. மேலும் பல்வேறு பின்னணிகளைக்கொண்ட மக்களை ஒரே குழுமமாகச் சுட்டி நிற்கிறது. அவர்கள் முதற்குடி (First Nation) அல்லது தொல்குடி, அல்லது 'டோரெசு நீரிணை குடிமக்கள்' என்று கூறி நண்பர்களாக இருக்க அதிக வாய்ப்புள்ளது. (கனடாவில் முதற்குடியினர் - First Nation, அமெரிக்கவில் 'இந்தியர்').

குடி (clan) அல்லது குலம் (tribe) என்ற சொல்லை இயன்றவரை இங்கு நாம் பயன்படுத்தலாம். மேற்கு ஆஸ்திரேலிய கிம்பர்லி (Kimberley) பகுதியில் Nigena என்ற தொல்குடி மக்கள் வாழ்கின்றனர். அவர்களை Nyikinia என்று உச்சரிக்கலாம். அதில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துப்பிழைகள் இருந்தாலும், மோசமான எழுத்துப்பிழைகள் இல்லை. பழங்குடி மற்றும் டோரெஸ் நீரிணை தீவு மக்கள் ஆகிய இரு தரப்பினரையும் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள் என்றால், அவர்களை 'தொல்குடி மக்கள்' அல்லது தொல்குடி மற்றும் டோரெஸ் நீரிணை தீவு மக்கள் என்று சொல்வது சிறந்தது.

Without a capital 'a', 'aboriginal' can refer to an Indigenous person from anywhere in the world.

ஆங்கிலத்தில் Aboriginal என்று எழுதாமல் aboriginal என்று எழுதினால், உலகின் எந்த தொல்குடியினரையும் அது குறிக்கும். இலத்தீன் மொழியில் ab + original = aboriginal 'அசல் குடி' என்ற பொருள்.

## ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்னர் தொல்குடி மற்றும் டோரெசு நீரிணை தீவு மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர்?

அம்மக்கள் மிகச் சிறந்த கலை நுணுக்கத்துடன் கூடிய கதைசொல்லிகளாக இருந்தனர். பாடல் வரிகள் மூலம் தங்கள் பண்பாடுகளை பரம்பரை பரம்பரையாகச் சொல்லிவந்தார்கள் - வாய்வழி மரபுகள், பாடல்கள், கதைகள், ஓவியங்கள், நடனங்கள் மூலம் அவற்றை வெளிப்படுத்தி வந்தார்கள். அவர்கள் வேட்டையாடி, காய்கனி சேர்த்து, நிலத்தைப் பேணி வந்தார்கள். அக்காலத்துக்கேற்ற அதிநவீன வசதிகள் அவர்களிடம் இருந்தன.

அவர்கள் அரை நாடோடிகளாக (semi-nomads)பருவங்களுடன் சுற்றி நகர்ந்தார்கள். ஒவ்வொரு பருவத்திலும் உரிய பயிர்களை வளர்த்து அறுவடை செய்து சொந்த வீடுகளுக்குத் திரும்பினார்கள். 'டார்க் ஈமு' என்ற தமது தலைசிறந்த நூலில் பழங்குடி எழுத்தாளர் புரூஸ் பாஸ்கோ இந்த வாழ்க்கை முறையை

தொடர்தல் 69ம் பக்கம்

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2010 - 2019)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

# ஆஸ்திரேலியாவில்...

68ம் பக்கத் தொடர்ச்சி...

விவரிக்கிறார். பிரித்தானியர் கட்டியாண்ட காலத்துக்கு முன்னர் 'வேட்டையாடி, காய்கனி சேர்த்து' வாழ்ந்த விதத்தை ஏற்றிப்போற்றினார். பாஸ்கோ, தொல்குடி ஆஸ்திரேலியர்கள் ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கு முன்னரே தங்கள் நிலத்தில்




விவசாயம் செய்தனர், கிராமங்களில் வாழ்ந்தனர், வீடுகளைக்கட்டினார்கள், தானியங்களை அறுவடை செய்தனர், சிக்கலான நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளைக் கட்டியுள்ளனர் என தனது 'டார்க் ஈமு' என்ற ஆராட்சி நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நூல் ஆதிக்க சக்திகளின் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளானது.

### ஐரோப்பியர்கள் வருகையும் இனவழிப்பும்:

1788 முதல் பிரித்தானியர் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஆஸ்திரேலியாவைக் கட்

| | | |
|---|---|---|
| 20.8% | Unemployment rate 2014-2015 | 5.8% |
| 36% | Households in lowest income quintile 2014-2015 | 17% |
| 6% | Households in highest income quartile 2014-2015 | 22% |

டியாண்ட காலத்தில் நாடு முழுவதும் இருந்த தொல்குடி சமூகங்கள் பேரழிவுக்கு உள்ளாகின. 1900 மட்டில் முதத குடிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 9,80,000லிருந்து 63,000 ஆகக் குறைந்தது.

பிரித்தானிய குடியேறிகள் கொண்டுவந்த அம்மை, பெரியம்மை, காசநோய், தொற்றுநோய்களால் ஆயிரக்கணக்கான தொல்குடியினர் மாண்டனர். தொல்குடி மற்றும் டோரெஸ் நீரினை தீவு மக்கள் தமது சமூகத்தின் மற்றத் தரப்புகளிலிருந்து பிரிந்து, சொந்தப் பண்பாட்டைக் கைவிட்டு, பிரித்தானிய பழக்கவழக்கங்களை கைக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். பலர் தங்கள் குழந்தைகளை பறி கொடுத்தனர். பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து பலவந்தமாகப் பறித்தெடுக்கப்பட்டனர்.

நாட்டின் மக்கள் தொகையில் தொல்குடி மக்கள் சுமார் 2.8 சதவீதம். இப்போதைய நிலைமை.

1976ல் இனப்பாகுபாடு சட்டவிரோதமானது என ஆஸ்திரேலியா சட்டமியற்றியது. ஆனாலும் சுகாதாரம், செல்வம், கல்வி, வேலையின்மை போன்ற சமூகக் குறியீடுகளில் தொல்குடிமக்கள் தொடர்ந்து பின்னடைந்து செல்கிறார்கள். பலர் ஏழ்மையிலும், அநீதியிலும் மாட்டிக் கொண்டு சீரழிகிறார்கள். இன்று ஆஸ்திரேலியாவில் உள்ள தொல்குடி குழந்தைகள் தங்கள் வகுப்புத் தோழர்களை விட 24 மடங்கு அதிகமாக சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

புதிய தலைமுறைகள் தங்கள் மூதாதையரிடமிருந்து ஆழ்ந்த அதிர்ச்சி, சோகம், விரக்தி ஆகியவற்றையே பெற்றுக்கொள்கிறார்கள். தங்கள் நிலங்கள், பண்பாடுகள், குடும்பங்களை இழந்த கோபம் மரபுவழியாகத் தொடர்கிறது. நிலைமையை மோசமாக்கும் வகையில், ஆஸ்திரேலிய அரசாங்கம் தொல்குடி மக்களின் அடிப்படை உரிமைகளை அறவே மறுப்பதற்கான வடக்கு ஆள்புலத் தலையீடு (Northern Territory Intervention) போன்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. மேலும் பூர்வீக மக்கள் தங்கள் வீடுகளையும், சமூக அமைப்புகளையும் கைவிட வேண்டும் என்று கட்டாயப்படுத்தி வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் ஆஸ்திரேலிய தினம் கொண்டாடப்படும் வேளையில் தொல்குடி மக்கள் அதையும், அசியல் பாகுபாட்டையும் எதிர்த்துப் போராட்டம் நடத்துகிறார்கள்.

பிரித்தானியர் கட்டியாளத் துவங்கி 150 ஆண்டுகளுக்குப் பின்னர், 1938 ஜனவரி 26ம் திகதி ஆஸ்திரேலியர்கள் 'ஆஸ்திரேலியா தினம்' கொண்டாடிக் கொண்டிருந்தபோது, நியூ சவுத் வேல்சை சேர்ந்த தொல்குடி மக்கள் அதை துக்க தினமாக அறிவித்தனர்.

1972ம் ஆண்டு அதேநாளில், 'எங்களுக்கு நில உரிமைகள் வேண்டும், கைப்பிரதி அல்ல' என்று அறைகூவியபடி, கான்பெராவில் உள்ள ஆஸ்திரேலிய நாடாளு




மன்றத்துக்கு வெளியே அவர்கள் தொல்குடி கூடார தூதரகத்தை (Aboriginal Tent Embassy) அமைத்தனர். இது முன்னொருபோதும் இல்லாத வகையில் தேசிய ஆதரவை ஈட்டிக்கொண்டது. அது இன்றும் கூட நிலைத்துள்ளது.

2000ல் 3 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அனைத்து வகையான பின்னணிகளிலும் இருந்து தேசிய நல்லிணக்கத்திற்கு அழைப்பு விடுத்தபடி சிட்னி துறைமுகப் பாலத்தை கடந்து சென்றனர். 2015ல், தொலைதூர தொல்குடி சமூகங்கள் தங்கள் பாரம்பரிய நிலங்களில் வாழும் உரிமையைக் கோரி ஆஸ்திரேலியா முழுவதும் பெரிய பேரணிகள் நடத்தினார்கள்.

அவுஸ்திரேலியாவில் தொல்குடிகளின் உரிமைகளுக்கான பொதுமன்னிப்பு இயக்கம் தொடர்கிறது. 'எங்கள் சமூகம்தான் எங்களுக்கு எல்லாம்' என்ற இயக்கத்தின் (Community is Everything campaign) மூலம் ஆஸ்திரேலிய தொல்குடிக் குழந்தைகளை பாரபட்சமாக தண்டிப்பதை குறைக்க முயலுகின்றனர்.

சிறார் தமது திறன் ஓங்கக்கூடிய சூழலில் வளர வேண்டும். தங்கள் குழந்தைகளுக்கு எது சிறந்தது என்பது தொல்குடி மற்றும் டோரெஸ் நீரினை தீவு மக்களுக்குத் தெரியும். அதை அவர்கள் செய்ய ஏனைய மக்களின் ஆதரவு தேவை.

ஆஸ்திரேலியாவைக் கட்டியாண்டவர்கள் 1788 முதல் 1992 வரை, தொல்குடி மக்களின் நிலங்களை திருடிக் கொண்டனர்.

யாருக்கும் 'உரித்தற்ற தரை' (terra nullius) என்றொரு விதி உண்டு. அதன்படி பிரித்தானியர் வருவதற்கு முன் காலியாக இருந்த காணியை யாரும் சட்டபூர்வமாக தமது உடைமையாக்க முடியும்.

பெரும்பாலான காணிகள் இன்றும் மீட்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மூத்த குடிகளின் நிலம் பறிபோனதும், அவர்கள் மீதான ஒடுக்கு முறையும், அவர்களின் உடலும் உள்ளமும் தாக்குண்டமையும் அநீதிக்கு மேல் அநீதிகளாகும்.

ஆரம்பகாலப் படையெடுப்புகளும், கொள்ளைநோய்களும் இலட்சக்கணக்கான மக்களைப் பலிகொண்டன. பல்லாயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். முதல் படையெடுப்பு தொடங்கி நூறு ஆண்டுகளில், அவர்களின் எண்ணிக்கை ஒரு 10 இலட்சத்திலிருந்து 60,000 ஆகக் குறைந்தது.

இன்று தொல்குடிகளில் பாதிக்கு மேற்பட்டவர்கள் நகரங்களில் வாழ்கின்றனர். பெரும்பாலும் பயங்கரமான நிலைமைகளில் புறநகர்ப் பகுதிகளில் வாழ்கின்றனர். இன்னும் பலர் தங்கள் நிலத்தைக் கைப்பற்றிக்கொண்டவர்களின் கால்நடை பண்ணைகளில் கூலிவேலை செய்து வருகின்றனர்.

குறிப்பாக, வடக்கு ஆஸ்திரேலியாவில் பலர் தங்கள் நிலங்களில் ஒட்டிக்கொண்டு, இன்னமும் காய்கனிகளை உண்டு காலம் தள்ளுகின்றனர்.



pon.balarajan@thaiveedu.com




# சாதி ஒழிப்புச் சாத்தியமற்றது

- ந. இரவீந்திரன் -

யாழ் நூலகத் திறப்பு விழா 2003ம் ஆண்டில் இடம் பெறுவதனை விடுதலைப் புலிகள் தடுத்ததற்கான காரணம்யாது எனும் விவாதம் ஒரு மாதத்துக்கு மேலாக இடம் பெற்றிருந்தது. மழை வெள்ளத்துத் தவளைச் சத்தம் போல தேர்தல் கூச்சல் மேலெழுந்ததில் இப்போது அந்த விவாதம் சற்று அடங்கியுள்ளது. பேரின வெறியர்களால் 1981ல் எரிக்கப்பட்ட நூலகம் சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் புனரமைக்கப்பட்டு 2003ல் திறக்கப்பட இருந்த பொழுது யாழ் மாநகர சபை மேயராக செல்லன் கந்தையா பதவிவகித்தார். அவர் ஒடுக்கப்பட்ட சமூகத்தவர் என்பதால் திறப்பு விழா தடுக்கப்பட்டது என்பதனை ஏற்க மறுத்த ஒரு தரப்பினர் வேறு அரசியல் காரணங்களுக்காகவே விடுதலைப் புலிகள் அவ்வாறு நடந்து கொண்டனர் என நிருபிக்க முற்பட்டனர்.

இது சார்ந்து, இப்போதும் சாதி வேறுபாடுகள் பேசு பொருளாக உள்ளதா, புலிகள் சாதி பேதத்தைப் பேண முற்பட்டார்களா எனும் விவாதம் மேலெழுந்திருந்தது. அது தொடர்பில் முடிந்த முடிவான தீர்ப்புக் கண்டடையப்படாமலே தான் அதன் தொடர்ச்சி இடம்பெறாமலாகி உள்ளது. சாதி வேறுபாடுகள் எந்தளவுக்கு எவரெவரால் அனுசரிக்கப்படுகிறது என்பதில் விவாதத்துக்கு இடமிருக்கிறதே அல்லாமல், சாதிகளின் இருப்பு இப்போது கேள்விக்கு இடமற்றதாகிவிட்டது. 'இப்போதெல்லாம் யாரும் சாதி பார்ப்பதில்லை' என்ற மாய்மாலக் கதையை இனி மேலும் சொல்லிக் கொண்டிருக்க இயலாது என்பது வெளிப்படை!

## பேசாப் பொருளாக இருந்தாலும் மேலெழும்:

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை கூர்மைப்பட்டு யுத்த முன்னெடுப்பு பிரதானமானபோது சாதி ரீதியிலான அணுகுமுறைகள் 'துப்பாக்கி முனையில் மௌனிக்கப்பட்டிருந்தது'. விடுதலைப்புலிகளை பேரினவாத இராணுவம் முறியடித்து 'துப்பாக்கிகள் மௌனித்த' பின்னர் சாதிப்பூசல்கள் மேலெழத் தொடங்கிவிட்டன. ஆக, சாதி பேதம் பேச அவசியமற்ற அளவில் வேறு பூதாகரமான பிரச்சினையால் அடக்கி வாசிக்க வைக்கப்படுவதாக ஆகுமேயல்லாமல் அது முற்றாகவே கவனம் பெறாமல் போய்விடுவதில்லை. உண்மையில் பல்வேறு பிரச்சினைகளில் ஒன்றாகச் சாதியும் இருப்பதாக நாம் கருதுவதைப் போல அல்லாமல் எமது சமூகத்தைப் பொறுத்த வரை அதுவே அடிப்படையானது என்பதை இன்றைய நிதர்சனம் எமக்கு இடித்துரைத்தபடி உள்ளது. அதனைப் பேசாதிருந்து தப்பிவிட முயலுவது தீக்கோழி மண்ணுக்குள்ளே தலையைப் புதைக்கும் முயற்சிக்கு ஒப்பானது.

இப்போது தமிழகத்திலும் வேறொரு வடிவில் சாதிப் பிரச்சினை மேலெழுந்து வருகிறது. அங்கு இந்துத்துவம் ஆதிக்க சக்தியாக விசுவரூபம் பெற்று விரிவடைந்து வருகிற சூழலில் அதன் சாதிப்பிரச்சினை மறைக்கப்பட்டு இந்துத்துவமும் எதிர் நிலையில் பெரியாரியமும் என்பதாக பேசப்படுவதான இருப்பு. பெரியாரியம் தழைத்தோங்கி உள்ள தமிழக மண்ணில் இந்துத்துவம் கால்பதிக்க இயலாது எனச் சொல்லப்பட்டு வந்த வாய்ப்பான சூழல் தொடர்வதாகக் கூறமுடியாத நிலை ஏற்பட்டு வருகிறது. இதற்கான பின்னணியை கந்தசஷ்டி கவசம் மீது வைக்கப்பட்ட 'ஆபாசக் குற்றச்சாட்டு' ஏற்படுத்தித் தந்துள்ளது. தமிழ் கடவுளான முருகன் மீது நம்பிக்கையுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் புண்படுத்திவிட்டதான பிரசாரத்தை இந்துத்துவ சக்திகள் கையில் எடுத்துள்ளன.

இதனை வாய்ப்பாக்கிப் பெரியார் சிலைகளைச் சேதப்படுத்தும் முனைப்பில் இந்துத்துவவாதிகள். இன்றைய பிரதான பிரச்சினையே கந்தசஷ்டி கவசத்தையா பெரியார் சிலைகளையா பாதுகாக்க வேண்டும் என்பதாகப் பலரும் இரண்டுபட்டுள்ளனர். பெரியார் முப்பதாம் ஆண்டுகளில் இருந்து 1974ல் மறையும் வரை இந்து சமய இலக்கியங்களில் வெளிப்பட்டுள்ள 'ஆபாசங்களை' தோலுரித்துக் காட்டி வந்தவர்தான். அதே தொனியில் தானே கறுப்பர் கூட்டமும் கந்தசஷ்டி கவசத்தைக் கட்டுடைத்துக் காட்டியிருந்தது, அதனைத் தப்பென்று எப்படிச் சொல்ல இயலும் என்று கேட்கிறவர்களும் உள்ளனர். பெரும்பாலான பெரியாரியர்கள் இன்றைய சூழலில் இவ்வாறு செய்வது தவறு, பெரியார் இந்துப் புராணங்களின் ஆபாசங்களை வெளிப்படுத்திய காலம் போன்று இப்போது இல்லை என்பதனைக் கவனிப்பது அவசியம் என்பதையே வலியுறுத்துகின்றனர்.



பெரியார், சமூக - பொருளாதார அடித்தளத்தில் பிராமணர்கள் பாரிய அளவில் ஆதிக்கத்தை வலுப்படுத்தி வருவதனை முறியடித்துப் பிராமணரல்லாதார் நலன்களை வென்றெடுப்பதற்கான சமூக நீதிப் போராட்டங்களையே முதன்மைப் பணியாகக் கொண்டு இயங்கியவர். சமூகத் தளத்துக்கு உரிய பிராமணர்களது அதிகாரத்தை இந்து மத ஆன்மீகப் புனித இடம் போது காக்க முனைகிறது எனக் காணும் போது இந்து மதத்துக்கு எதிரான போர்க்குரலை முன்வைத்தார். அதன் தொடர்ச்சியாக மதத்தைக் காப்பதற்குக் காலாக உள்ள கடவுளை நிராகரிக்கும் நாத்திகராக பரிணமிக்கிறார். அவரது இறுதிக்காலங்களில் நாத்திகவாதப் பரப்புரை முதன்மை பெற்றதனால் அடித்தளமாக இருந்த சமூக - பொருளாதார விடுதலைக் கூறுகள் பின்வந்தவர்களால் அதிகம் கவனம் பெறாத அம்சமாகி விட்டது. தவிர, பெரியார் பாசறையில் வளர்ந்த திராவிடரியக்க ஆட்சி 1967 இலிருந்து தமிழக அரசியலை வெற்றி கொண்டு சமூக - பொருளாதார - அரசியல் தளங்களில் பெரியாரின் அந்த அடிப்படைகளைச் சாதித்து வந்தமையால் மிச்சமுள்ள நாத்திகத்தைப் பரப்புவதே பிரதான பணி எனும் நிலை பெரியாரியர்களுக்கு!

பெரியார் நாத்திகப் பிரச்சாரங்களை முன்னெடுத்த சமகாலத்தில், சமூக - அரசியல் காரணங்களுக்காக அவரை மதித்துப் போற்றிய பொதுமக்கள் தளம் மதப்பற்றைக் கைவிடாதிருக்கும் வகையில் ஆன்மீகத் தளத்துக்குரியவர்களது 'இயக்கமயப்பட்ட' செயற்பாடுகளும் தொடர்ந்தன. கிருபானந்தவாரியார் - பிரசங்கம், பித்துக்குளி முருகதாஸ் - பக்திப் பாடல்கள், சினிமாத்துறையின் பக்திப்படங்கள் என நவீன சமூக இயைபாக்கங் கொண்ட இந்து மதப் பக்தி இயக்கமும் நாத்தீக எழுச்சிக் கட்டத்தின் சமாந்தரப் போக்கு வீச்சினைக் கொண்டிருந்தது. அன்றைய திராவிடரியக்க அரசியல் எழுச்சி வீறுபெற்று அதிகாரத்தைக் கைப்பற்றிய போது அதனை எதிர்க்காத பாங்கில் மக்கள் தளத்தில் இந்துப்பக்தி எழுச்சியைப் பேணும் வகையிலானதாக அந்தச் செல்நெறி அமைந்து இருந்தது.

இன்று, திராவிடர் இயக்க அரசியலின் சாதனைகளை மூழ்கடிக்கிற வகையில் அதன் வாரிசுகள் தவறுகளை மேற்கொண்டு பலவீனப்பட்டு வருகிற நிலை. மறுபக்கத்தில் தற்காப்பு உணர்வுடன் நவீன இந்துப் பக்தி இயக்கம் மக்களுடைய மத உணர்வைப் பாதுகாத்து வளர்க்க முற்பட்ட நிலை போல அன்றி இந்துத்துவத்தை மேலாதிக்கம் கொள்ளச் செய்ய முனைப்புக் காட்டுகிற காலமாற்றம் ஏற்பட்டுள்ளது. அன்று மத வெறுப்பைப் பெரியார் முனைப்பாக்கிய போதிலும் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற சமரசத்துடன் திராவிட முன்னேற்றக் கழகம் அதிகாரம் பெற முடிந்தது. மதத்தை வெளியே நாங்கள் பாதுகாப்போம் என்ற உணர்வுடன் இந்தச் சமரசத்தை விடவும் சமூக நீதி வெல்லப்படும் அரசியல் பொருளாதார மாற்றத்துக்காகவே திமுகவை மக்கள் வெற்றி பெற வைத்தனர்.

இன்றுங்கூட திராவிடக் கட்சிகளை முறியடித்து இந்துத்துவ பாஜகவோ மென்போக்கு இந்துத்துவ கொங்கிரஸ் கட்சியோ தமிழகத்தில் ஆட்சியதிகாரத்தை வெற்றி கொள்ள இயலாத நிலையே உள்ளது. அதேவேளை சமூக - பண்பாட்டுத் தளத்தில் இந்துத்துவமும் பிராமணியமும் அச்சுறுத்தும் அளவில் வளர்ந்து வருவதனைக் கவனங்கொள்ளாதிருக்க இயலாது. இப்போதுகூட அதிமுக ஆட்சி மத்திய அரசின் இந்துத்துவச் செயற்திட்டங்களின் நிழலாக இயங்கி வருவதனைக் காணும்போது 'திராவிடர் இயக்க மண்' என்ற பாதுகாப்பு உணர்வு எத்தனை காலத்துக்குச் செல்லுபடியாகும் என்ற கேள்வியே எழுகிறது.

## அரசியல் - பொருளாதார விடுதலைக்கு முன் சமூக நீதி:

திராவிடர் இயக்க எழுச்சியின் பேறாக ஏற்பட்ட விழிப்புணர்வின் விளைவாகத் தமிழகம் இந்தியாவின் முன்னேறிய முதல் நிலை மாநிலங்களில் ஒன்றாக வளர்ந்துள்ளது. அதனைச் சாதித்தது திராவிட கட்சிகள் என்பதனாலேயே தேசியக் கட்சிகளால் தமிழகத்தில் கால்பதிக்க இயலாதுள்ளது. ஆயினும் இந்தியா முழுமையிலும் இந்துத்துவம் பெற்றுவரும் வெற்றிகள் தமிழகத்தையும் தாக்க ஆரம்பிக்கும் என்பதை நிராகரிக்க இயலாது என்ற நிலை வளர்வதனை மறுக்க இயலாது. கொங்கிரஸ் கட்சி போல தனியே அரசியல் களத்தில் திராவிட கட்சிகளின் அதிகாரத்தை வீழ்த்தும் முனைப்பைக் கொள்ளாமல் திராவிட இயக்க உயிர் நாடியைத் தாக்கிப் பலவீனப்படுத்திய கையோடு ஆதிக்கங்களைக் கையகப்படுத்தும் முயற்சியில் பாஜக இறங்கி உள்ளது. நாத்திகவாதத்துக்கு எதிரான இந்துத்துவவாதத் தாக்குதல்கள் இதன் பின்னணிக்கு உரியன.

நாத்திகவாதம் ஏற்புடையது அல்ல என்ற வாதத்தைப் பெரியார் இயங்கிய காலத்திலேயே கொம்யூனிஸ்ட் கட்சிகள் முன்வைத்தன. அன்றைய காலத்தில் கொம்யூனிஸ்ட்டுகள் தேசியவிடுதலை - தொழிலாளர் போராட்டங்கள் என்பவற்றின் முன்னணிப் படையாகத் திகழ்ந்த காரணத்தால் திராவிடர் இயக்கத்தை விடவும் பலமான சக்தியாகத் திகழ்ந்தனர். அப்படி இருந்தும் அதிகாரத்தை திராவிடக் கட்சி பெறமுடிந்தது எப்படி? அன்றைய அடிப்படைத் தேவையாக இருந்த சமூக நீதி வென்றெடுக்கப்பட வேண்டும் என்பதனைக் கொம்யூனிஸ்ட்டுகள் கையேற்கத் தவறிய பொழுது, அதனை முன்னிறுத்திய திமுக வெற்றிபெற இயலுமாகியது.

தேசிய விடுதலைப் போராட்ட காலத்திலே சாதி ஒழிப்பா - ஏகாதிபத்தியத் தகர்ப்பா முன்னுரிமை உடையது என்ற விவாதம் இருந்தது. பிராமண ஆதிக்கத்தைத் தகர்த்து விடுதலை எட்டப்படாத வரை தேசவிடுதலை அவசியமற்றது, பிரித்தானியர்கள் வெளியேறுவதாயின் தென்னிந்தியாவை திராவிட நாடு எனும் தனிநாடாகப் பிரித்து விட்டு செல்லவேண்டும் எனப் பெரியார் வலியுறுத்தி வந்தார். பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கைக்கு முந்தியது இந்தத் திராவிட நாட்டு அபிலாசை. சுதந்திரத்தின்

தொடர்தல் 71ம் பக்கம்

# சாதி ஒழிப்புச்...

70ம் பக்கத் தொடர்ச்சி...

பின்னரும் சாதியொழிப்புக்கு முன்னதாக பொருளாதார விடுதலையைத் தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரம் பெற்று வென்றெடுப்பதே அவசியமானது என்பதே கொம்யூனிஸ்ட்டுகளின் கருத்தாக விளங்கியது.

இன்று தொழிலாளர் புரட்சி தொலைதூரப் பிரச்சினையாகிவிட்டுள்ள சூழலில், மார்க்சியர்களில் பலரேகூட சாதியொழிப்புக்குப் பின்னரே சமூக - பொருளாதார விடுதலை சாத்தியம் என்ற நிலைக்கு வந்துவிட்டுள்ளனர். 'பெரியாரியமும் அம்பேத்கரியமுமே இந்திய மார்க்சியம்' எனச் சொல்கிற கொம்யூனிஸ்ட்டுகளைக் காணமுடிகிறது. இவ்வாறு சொல்வதனால் அனைத்து மார்க்சியரும் சாதிப்பிரச்சினை முதன்மை ஆனது தான் என முடிவுக்கு வந்துவிட்டதாகப் பொருள்கொள்ள வேண்டியதில்லை. இன்னமும் வர்க்கவாத மார்க்சியம் கட்சித்தளத்தில் அதிகாரத்துடன் உள்ளது.

ஒரு எடுத்துக்காட்டு: 'மார்க்சிஸ்ட்' எனும் இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இன் தத்துவார்த்த மாத இதழில் ஒரு நூலுக்கு எழுதப்பட்ட விமரிசனத்துக்கு ஆசிரியர் குழுவின் எதிர்வினை. 'சமூக நீதிக்கான அறப்போர் (நலிந்தோர் நலனுக்காக ஓர் வாழ்வின் அர்ப்பணம்)' எனும் நூல், முன்னாள் இந்திய அரச செயலாளரான ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.எஸ். கிருஷ்ணனுடன் முனைவர் வே. வசந்தி தேவி உரையாடல் வாயிலாக வடிவமைத்த அனுபவ வெளிப்பாடு. தலித் - பிற்படுத்தப்பட்டோர் - பழங்குடி மக்கள் பிரிவினர்களது சமூக - பொருளாதார மேம்பாட்டுக்கு அவசியமான சட்டங்களை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் மேற்கொண்ட முயற்சிகளைப் பேசுகின்ற 553 பக்கங்களிலான நூல் அது. சாதிப் பிரச்சினையை வர்க்க விடுதலைக்கு மேலாக முதன்மையாக்கி அந்த நூல் பேசுவதாகக் கூறி ஆசிரியர் குழு நூல் விமரிசனத்தை வெளியிட இயலாது திணறி வருகிறது.

தேசிய விடுதலை, தொழிலாளர் புரட்சி என்ற எத்தகைய அரசியல் முன்னெடுப்புகளிலும் சமூக நீதிப் போராட்டம் இணைந்திருக்க வேண்டும் என்பதனை ஏற்க இயலாதிருப்பது ஏன்? முன்னர் சாதி ஒழிப்பே முதன்மைப் பணி எனப் பெரியாரும் அம்பேத்கரும் விவாதித்த போது அன்றைய மார்க்சியர்கள் அரசியல் - பொருளாதார விடுதலையே பிரதானமானது என விவாதித்ததைப் போலத் தமது நிலைப்பாட்டை இவர்கள் கருதுகின்றனர். அன்றும், சாதி ஒழிப்பு என்ற விவகாரத்துக்கு அப்பால் சமூக நீதிப் போராட்டத்தை அரசியல் - பொருளாதார விடுதலைப் போராட்டங்களில் பகுதியாக்கி முன்னெடுத்திருக்க வேண்டும். இரண்டுக்குமான வேறுபாட்டைக் காணத் தவறியது மார்க்சியர்களது பின்னடைவுக்குக் காரணமாயிருந்தது என்பதைக் கவனங்கொள்வது அவசியமானது.

அவ்வாறெனில் சாதி ஒழிப்பு முதன்மைப் பணி இல்லையா? என்ற கேள்வி இப்போது மேலெழுகிறது. சமூக - பொருளாதார விடுதலை வெற்றிகொள்ளப்பட்டுச் சமத்துவ நியதிகள் வளரும்போது சாதிகளற்றுப் போவது தானாகவே நடந்தேற இயலுமே அல்லாது ஒழிப்பதற்கு முற்படும்போது மென்மேலும் சாதியம் வலுப்பெறவே செய்யும்!

## வாலிவதம்:

கம்பராமாயணத்தில் வாலி வதம் செய்யப்பட்ட விதம் இவ்விடயத்தில் கவனிப்புக்கு உரியது. வாலியை வீழ்த்த எவராவது முற்படும் பட்சத்தில் அவரது பலமும் வாலியைச் சென்றடையும் என்பது வாலி பெற்றிருந்த வரம். அதன் காரணமாக வாலியைக் கொல்வதற்கு இராமர் மறைந்து நின்று வஞ்சகமாக அம்பெய்தும் அவப் பெயரைப் பெற நேர்ந்தது. சாதியை நேரடியாக அழிப்பதற்கு முனையும் பொழுது தாக்குகிறவர் பலத்தையும் அது பெற்றுச் சாதியம் மென்மேலும் வலுப்பெறுமே அன்றி சாதிப் பிடிப்புகள் வலுக்குன்றிப் போகாது.

சமூக நீதிப் போராட்டங்களில் பெரியாரியர்களுடன் ஒன்றுபட்டுப் போராடுவது அவசியமானது. அதே வேளை பெரியாரியத்தின் அடிப்படைக் கோட்பாட்டுத் தளத்தை விமர்சிக்கத் தவறுவோமாயின் சாதிவாதம் வலுப்பெற்று இந்துத்துவம் ஊடுருவ இடமளித்தவர்களாவோம். சாதிப் பிரச்சினையை முன்னர் கவனம் கொள்ளத் தவறிய காரணத்தால், பெரியாரியம் மேவிவிட்டதான தோற்றம் உள்ளது. அதன் மீதான விமரிசனத்தை முன்வைக்கும் பட்சத்தில் சாதியத்தைத் தகர்க்கும் நாட்டம் மார்க்சியர்களுக்கு இல்லை எனும் குற்றச்சாட்டை அவர்கள் முன்வைப்பார்களோ என்ற அச்சம் இந்திய மார்க்சியர்களிடம் உள்ளது.

பெரியார் பிராமணிய எதிர்ப்பு இயக்கத்தைத் தமிழகத்தில் தொடங்கிய சமகாலத்தில் (முப்பதாம் ஆண்டுகளிலிருந்தே) இலங்கையில் மார்க்சியர்கள் சாதி முறைமைக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். பெரியார் முன்வைத்த சாதியொழிப்பு, நாத்திகவாதம் என்பவற்றுக்கு எதிரான கோட்பாட்டு ரீதியிலான விட்டுக்கொடுப்பற்ற போராட்டங்களை முன்னெடுத்த அதேவேளை, சாதிபேதங்களைத் தகர்க்கும் காத்திரமான போராட்டங்களையும் முன்னெடுக்க இயலுமாக இருந்தது. சாதியொழிப்பு என்பதாக அன்றி 'சாதி முறை தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற கோசமே அறுபதாம் ஆண்டுகளில் உச்ச கட்டப் போராட்ட காலத்தின் முழக்கமாகவும் இருந்தது. பொது இடங்களில் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுவதனைத் தகர்த்துச் சாதிகளில் இழிவானவை - புனிதமானவை என்ற பேதம் களையப்பட வேண்டும் என்ற தீர்மானிக்கப்பட்ட இலக்கை அன்று எட்டக்கூடியதாக இருந்தது.

'வைத்தால் கூந்தல் - அடித்தால் மொட்டை' என்ற பழக்கத்தை மாற்றியாக வேண்டும். பெரியாரியத்துடன் எதிர்ப்பு அல்லது இணக்கம் என்ற இருமுனைவாதத் தவறை மேற்கொள்ள வேண்டியதில்லை. ஐக்கியப்பட்டால் விமர்சிக்க கூடாது என்பதுமில்லை. விமர்சிப்பதாயின் ஐக்கியப்பட இயலாது என்றுமில்லை. 'ஐக்கியமும் போராட்டமும்' என்ற வழிமுறையுடன் இயங்கும்போது மட்டுமே சாதிப் பிரச்சினையை இரு தரப்பினரும் சரியாக அணுகி மக்கள் விடுதலையை வெற்றிகொள்ள இயலும்.

பி.எஸ். கிருஷ்ணன் நூல் பற்றி மேலே கூறப்பட்டிருந்தது. அந்த நூல் பற்றித் தனியே எழுத வேண்டும். சமூக நீதிவெல்லப்பட எடுக்க வேண்டிய எத்தனங்களின் கனதி சார்ந்தது அந்த நூல். இன்று, வெல்லப்பட்ட அவற்றைப் பாதுகாப்பதே பெரும்பாடாக மாறும் சூழல். நாத்திகவாதத்தை முறியடிப்பதாக கூறியபடி இந்துத்துவம் பெரும்பாலான தமிழ் மக்களை அணிதிரட்ட வாய்ப்புப் பெறுகிற ஒவ்வொரு தருணமும் மத்திய அரசு தேசிய இனங்களை ஒடுக்குவதையும் இட ஒதுக்கீடுகளை இல்லாதொழிப்பதையும் சாத்தியமாக்கிக் கொண்டவாறுள்ளது.

இதனை முறியடிப்பதற்கு வலுவான ஐக்கியப்படல் அவசியம். அது சந்தர்ப்பவாத நிலைப்பாட்டில் அமையுமாயின் எதிரிக்கே பலன்கிட்டும். சரியான கோட்பாட்டுத் தெளிவுடன் ஒன்றுபடுதலே இன்று மிக அவசிய மானதாயுள்ளது!



raveendran.n@thaiveedu.com




BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# தமிழ்நாட்டில் தொல்லியல் அருங்காட்சியகம்

- செல்வநாயகி ஸ்ரீதாஸ் -



தமிழ் நாட்டில் தொல்லியல் அருங்காட்சியகம்!

வியப்பாக இருக்கிறதா? வியப்பு. ஆனால் உண்மை.

### கீழடியில் உலகத்தரம் வாய்ந்த கள அருங்காட்சியகம்:

தமிழக அரசு, கீழடியில் உலகத்தரம் வாய்ந்த கள அருங்காட்சியகம் ரூ.12.25 கோடி செலவில் அமைக்கப்படும் என அறிவித்திருந்தது.

கீழடியில் நான்காம், ஐந்தாம் கட்ட அகழாய்வில் கிடைத்த பொருட்களைக்கொண்டு மதுரை உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் தற்காலிக அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த அருங்காட்சியகத்தை நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் பார்வையிட்டு வந்தனர். இந்நிலையில் இந்த அருங்காட்சியகம் கீழடி அரசு மேல்நிலைப் பள்ளி கூடுதல் கட்டடம் அருகில் அமைப்பது என்று முடிவாகியது.

சென்னை தலைமைச்செயலகத்தில் இருந்து காணொலிக்காட்சி மூலமாகத் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அருங்காட்சியகத்திற்கு, 21/ 07/ 2020 அன்று அடிக்கல் நாட்டினார்.

இந்த விழாவில் தமிழ் மொழி வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் பாண்டியராஜன், தொல்லியல்துறை ஆணையர் உதயச்சந்திரன், சென்னையிலும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஜெ. ஜெயகாந்தன், தமிழகத் தொல்லியல்துறையின் இணை இயக்குநர் சிவானந்தம், கீழடி ஊராட்சி மன்றத் தலைவர், கொந்தகை ஊராட்சி மன்றத் தலைவர் வருவாய் கோட்டாட்சியர் உள்ளிட்ட முக்கியத்தர்கள் கலந்து கொண்டனர். இந்த அருங்காட்சியகப் பணிகள் ஒரு வருடத்துக்குள் முடியும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### ஆதிச்சநல்லூரில் அருங்காட்சியகம்:

தற்போது, இந்திய அளவில், தமிழகத்தின் ஆதிச்சநல்லூர் உட்பட 5 தொல்லியல் பகுதிகளில் அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தனது மத்திய பொது பட்ஜெட் உரையில் வெளியிட்டார்.

இவை, ஹரியானாவின் ராக்கிகர், உத்திர பிரதேசத்தின் அஸ்தினாபூர், அசாமின் ஷிவ்சாகர், குஜராத்தின் தோலாவிரா மற்றும் தமிழகத்தின் ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் அமைய உள்ளன எனத் தெரிவித்தார்.

இத்துடன் அறிவிக்கப்பட்டுள்ள ஹரியானாவின் ராக்கிகர், குஜராத்தின் தோலாவிரா ஆகியவை சிந்து சமவெளி நாகரிகத்தின் ஹரப்பா பகுதிகள். இதுவும் ஒரு வழியில் சிறந்ததே. சிந்து வெளி தொடர்பான தமிழ் ஆய்வுகள் தொடர்வதற்கு உந்துகோலாக அமையும்.

அசாமின் ஷிவ்சாகரில் பழங்காலக் கோயில்களும் உத்தரபிரதேசத்தின் அஸ்தினாபுரத்தில் மகாபாரதம் தொடர்பான தொல்லியல் ஆய்வுகளும் நடைபெற்று அவை தொடர்பான பல தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இனி இந்த ஐந்து இடங்களிலும் அப்பகுதிகளின் கண்டுபிடிப்புகள் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு வரப்படவுள்ளன. மத்திய கலாச் சாரத் துறைக்கு ரூபா 3,150 கோடி ஒதுக்கீடு செய்த நிதி அமைச்சர், 'நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரங்களைப் பாதுகாப்பதற்காக ஒரு மத்திய நிறுவனம் அமைக்கப்படும்' என்றும் அறிவித்தார். அத்துடன் 'தொல்லியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளதால் சுற்றுலாத்துறை பாதிக்கப்படுகிறது என்றும் அமைக்கப்படவுள்ள இப்புதிய நிறுவனம் முதல் கட்டமாகத் தன்னாட்சி நிறுவனமாகச் செயல்படும்' என்றும் அறிவித்தார். தமிழ்நாட்டிற்கு என்று ஒரு அருங்காட்சியகம் அமைக்கும் ஏற்பாடு மிகவும் வரவேற்கத்தக்கது.

உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகம், லண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகம். அதுபோல இந்தியாவில் மிகப்பெரிய அருங்காட்சியகம் கொல்கத்தாவில் உள்ளது. சென்னை எழும்பூரில் உள்ள அருங்காட்சியகம், இரண்டாவது மிகப்பழமையான அருங்காட்சியகமாகக் கூறப்படுகிறது. 1851-ல் நிறுவப்பட்ட இந்த அருங்காட்சியகம், சுமார் 6.25 ஏக்கர் (66,000 சதுர மீட்டர்) பரப்பளவில், ஆறு கட்டடங்களுடனும் 46 காட்சிக் கூடங்களுடனும் விளங்குகிறது. இதில் தொல்லியல், நாணயவியல், விலங்கியல், இயற்கை அறிவியல், சிற்பம் என ஆறு துறைகள் உள்ளன.

ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு தொய்வுற்ற நிலையில் ஆதிச்சநல்லூர், சிவகளை போன்ற இடங்களில் தமிழக அரசு சனவரி 31ம் திகதி மீண்டும் அகழ்வாய்வைத் தொடங்கியது மக்கள் மத்தியில் ஒரு புதிய எழுச்சியை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

எத்தனை பேரின் அயராத உழைப்பின் பலன் இது.

கனிமொழி மதி என்னும் இளம் வழக்கறிஞர், கீழடியில் நடந்த அகழாய்வில் மிக்க ஈடுபாடு கொண்டார். நகரங்களில் காணக் கூடியதான உறைகிணறு, குழாய் மூலம் தண்ணீர் கொண்டு செல்லுதல் வசதி, வடிகால்கள் முதலியவற்றைத் தானே நேரில் சென்றுபார்வையிட்டார். தொல்லியல் ஆய்வுகள் மூலம், தமிழகத்தின் தொன்மையை உறுதிப்படுத்தத்தக்க மேலதிக சான்றுகளை எதிர்பார்த்திருந்த நிலையில்

- அகழாய்வு தொடரப்படாமல் நின்று போனதும்,
- கீழடியில், இந்தியத் தொல்லியல் துறையால் செய்யப்பட்ட ஆய்வுகளின் அறிக்கைகள் எதுவும் வெளியிடப்படாமல் இருந்ததும்,
- கீழடியில் கிடைத்த பொருட்களைக் வெளியே எடுத்துச் செல்ல முற்பட்டதும்,

அந்த இளம் வழக்கறிஞர் மனத்தில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டால் அவற்றை மீண்டும் கொண்டு வருவது என்பது 'பிரம்மப் பிரயத்தனம்' என்பதையும் நன்கு உணர்ந்து கொண்ட கனிமொழி இம் முயற்சியை எப்படியாவது தடுக்கவேண்டும் என்று தீர்மானித்தார்.

- கீழடி ஆய்வு அறிக்கையை வெளியிடவும்,
- இந்தியத் தொல்லியல் துறை நடத்தி வந்த கீழடி அகழ்வாய்வை, தமிழக அரசே நடத்தவும்,
- கீழடியில் கிடைத்த பொருட்களை அங்கேயே அருங்காட்சியகம் அமைத்துப் பாதுகாக்க இடம் ஒதுக்கப்படவும்

வேண்டி, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் பொதுநல வழக்குத் தொடுத்தார். தமிழ் நாட்டு அகழ்வாய்வு வரலாற்றில் இவ்வழக்கு மிக முக்கியமான மைல் கல்லாக அமைந்தது.

கீழடி ஆய்வு அறிக்கை வெளியிடவும் அங்கு தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளவும் அங்குள்ள தொல்பொருட்களை அங்கேயே வைத்துப் பாதுகாக்கவும் நீதிமன்ற வழிகாட்டுதல்கள் கிடைக்க வழி செய்தவர் வழக்கறிஞர் கனிமொழி மதி என்பவரே.

'உலக நாகரிகத்தின் தொட்டில்' என்று அழைக்கப்படும் ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு 1876ம் ஆண்டு முதலாகப் பல கட்டங்களாகப் பலரால் முன்னெடுத்து நடத்தப்பட்டு வந்திருக்கிறது.

- 1876ம் ஆண்டு ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஜாகோர் என்னும் மானிடவியலாளர் ஆதிச்சநல்லூர் பறம்பில் அகழாய்வு செய்து கிடைத்த பொருட்களை பெர்லின் நகருக்கு எடுத்துச் சென்றார்.
- 1906ம் ஆண்டில் ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு மேற்கொண்ட அலெக்சாண்டர் ரீ என்பவர், எமக்குப் பயனுள்ளதான ஒரு அறிக்கையை விட்டுச் சென்றிருக்கிறார். இவரது அகழ்வாய்வில் கிடைத்த பொருட்களில் பெரும்பாலானவை சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டன.
- 1903-1904ல் பிரெஞ்சுத் தொல்லியலாளர் லூயி லூப்பெக்யூ, அகழாய்வில் கிடைத்த பொருட்களைப் பாரிஸ் நகர அருங்காட்சியகத்திற்குக் கொண்டு சென்றார்.
- 2003-2004ம் ஆண்டுகளில் தொல்லியலாளர் சத்தியமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் உலோகவியல், மானிடவியல் வல்லுனரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு சில குறிப்பிடத்தக்க முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அவற்றுள், உலோகங்களின் அறிமுகம், குறிப்பாக இரும்பு கி.மு. 1000 ஆவது ஆண்டிற்கு முன்னரே அறிமுகமாகி இருக்கிறது. அது, கி.மு. 1500 அளவிலாக இருக்கலாம்.

இவ்வாறு ஆதிச்சநல்லூரில் அகழாய்வு பல கட்டங்களாக நடைபெற்றிருந்தபோதும் முறையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. கனிமொழி போன்றே இத்துறையில் ஆர்வமாக ஈடுபட்டிருந்த எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராஜ் என்பவர், ஆதிச்சநல்லூரில் நடந்த அகழாய்வின்

தொடர்தல் 74ம் பக்கம்

# தமிழ் நாட்டில்...

73ம் பக்கத் தொடர்ச்சி...

முழு அறிக்கையையும் வெளியிட வலியுறுத்தி உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் பொதுநல மனு ஒன்று தாக்கல் செய்தார். மனு வருமாறு,

- கடந்த 13 வருடத்திற்கு முன்பு நடந்த அகழாய்வு குறித்த ஆய்வறிக்கையை வெளியிட வேண்டும்.
- இதுவரை நடந்த அகழாய்வுப் பொருள்களை ஆதிச்சநல்லூரிலேயே அருங்காட்சியகம் அமைத்து வைத்திட வேண்டும்.
- 13 வருடத்திற்கு முன்பு நிறுத்தி வைக்கப்பட்ட அகழாய்வுப் பணிகளைத் தொடர நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

இம்மனுவின் அடிப்படையில் ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட மாதிரிப்பொருட்கள் கார்பன் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

ஏப்ரல் 04, 2019 இவ்வழக்கு நீதிபதிகள் கிருபாகரன், எஸ்.எஸ். சுந்தர் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, கார்பன் சோதனைக்காக புளோரிடாவிற்கு அனுப்பப்பட்ட இரண்டு பொருட்களின் முடிவுகள் வெளிவந்துள்ளதாகவும் ஒரு பொருளின் வயது கி.மு. 905 என்றும், மற்றொன்றின் வயது கி.மு. 791 என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்செய்தி தமிழர் இருப்பை கி.மு. 905ம் ஆண்டிற்கு (ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக்கு) இட்டுச் செல்கிறது.

1906ம் ஆண்டில் ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வு நடத்திய பிரித்தானியத் தொல்லியலாளர், அலெக்சாண்டர் ரீ (Alexander Rea) என்பவர், தென்னிந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் மிகவும் பரந்த தொல்லியல்களம் இது என்று குறிப்பிட்டுள்ளார். அப்போது ஆயிரக்கணக்கான தொல்பொருட்களை இவர் கண்டெடுத்து பதிவு செய்துள்ளார். இவற்றுள், மட்பாண்டங்கள், இரும்புக்கருவிகள், ஆயுதங்கள், நகையணிகள் என்பனவும், பொன், வெண்கலம், அரியகல் முதலியவற்றாலான மணிகளும் (beads), எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பண்டைத்தமிழர் நாகரிகத்தின் தொல்பழங்காலத் தொட்டில் ஆதிச்சநல்லூரில் இருந்தது என்று தொல்லியலாளர்கள் கருதுகின்றனர்.

114 ஏக்கர் பரப்புள்ள கொண்ட இப்பறம்பு, சீனிக் கல் பாறைகள் (Quartzite) நிரம்பிய மேட்டுநிலமாகும். இங்கு முதுமக்கள் தாழிகள் பெருமளவில் புதைக்கப்பட்டுக் காணப்பட்டமையால் இது 'தாழிக்காடு' என்றும் அழைக்கப்பட்டது. இந்த தாழிக்காட்டிற்கு அண்மையில் ஆதிச்சநல்லூர் என்ற சிற்றூர் அமைந்திருப்பதால் இது ஆதிச்சநல்லூர்ப் பறம்பு என்று வழங்கப்படுவதாக அறியப்படுகிறது.

## தமிழகத்தில் பெருங்கற்படை எச்சங்கள் உள்ள இடங்கள்:

இணைக்கப்பட்டுள்ள இப்படத்தில் நூற்றுக் கணக்கான மயானங்களை வரலாற்றுப் பேரா. க. ராஜன் அவர்கள் அடையாளம் காட்டுகிறார்.

இத்தனை மயானங்களும் மக்கள் வாழ்ந்த ஊர்களுக்கு வெளியே ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்டிருக்கவேண்டும். இன்று எமக்கு மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளமாக அவர்களது எச்சங்களே கிடைக்கின்றன.

ஆதிச்சநல்லூர் பறம்பில் தாழிகளில் அடக்கம் செய்யப்பட்ட மனிதர்களின் வாழ்விடமாக இருந்த பேரூர் எது என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது.

இவர்கள், கி.பி. 9ம் நூற்றாண்டுக்குரிய சுசீந்திரம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள மிகப் பழமையான ஊரான வெள்ளூரில் வாழ்ந்தவர்களாக இருக்கலாம் என்று சில ஆய்வாளர்கள் நம்புகிறார்கள். இந்த, வெள்ளூர் பெருமாள் கோயில் திடலில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கருப்பு - சிவப்புப் பானையோடுகள் சேகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

1906ம் ஆண்டில் ஆதிச்சநல்லூரில் அகழாய்வு மேற்கொண்டு அறிக்கை வெளியிட்ட அலெக்சாண்டர் ரீ, தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள கொங்கராயக் குறிச்சி என்ற ஊரே, இத்தாழிக்காட்டு முன்னாள் மனிதர்கள் வாழ்ந்த இடமாக இருந்திருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். அத்துடன் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட செங்கற் கட்டுமானம் ஒன்றைத் தாம் கண்டதாகவும் ரீ குறிப்பிட்டிருக்கிறார். தற்போது ஆதிச்சநல்லூர்ப் பறம்புக்கும் கொங்கராயக் குறிச்சிகுமிடையே மேற்கு - கிழக்காக ஓடுகிற தாமிரபரணி ஆறு, 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இப்போதிருப்பதைவிட வடக்கில் 2 கி.மீ. தொலைவில் கொங்கராயக் குறிச்சிக்கு வடக்கே ஓடியிருக்கலாம் என்று அலெக்சாண்டர் ரீ கருதியுள்ளார். ஆதிச்சநல்லூர் தொடர்பில் அலெக்சான்டர் ரீ நிறையவே சொல்லியிருக்கிறார். சங்கப் பாடல்களில் ஊருக்குப் புறத்தேயுள்ள ஈமக்காடுகள் பற்றிய அரிய செய்திகள் கிடைக்கின்றன. இவற்றை நாம் இணைத்துப் பார்க்கவேண்டும்.

ஆதிச்சநல்லூர் தொடர்பாக விடுவிக்கப்பட வேண்டிய புதிர்கள் ஏராளம் இருக்கின்றன. அனைத்தையும் அறிவியல் முறையில் அணுகித் தீர்வு காணவேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. இப்போது தானே நாம் ஆதிச்சநல்லூர் தொடர்பாகத் தீவிரமாகச் சிந்திக்கவே தொடங்கியிருக்கிறோம்.

- அலெக்சான்டர் ரீயின் அறிக்கை மிக நுணுக்கமாகப் படிக்கப்படவேண்டும்.
- வெளி நாடுகளிலுள்ள அகழாய்வுப் பொருட்கள் கொண்டுவரப்பட்டு நுண்ணிய ஆய்வுக்கும் கரிமப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படவேண்டும்.
- அகழ்வாய்வு வெளிப்படைத் தன்மையுள்ளதாக நடைபெறவேண்டும்.

என்று எமது ஆவலை இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இளம் சந்ததியினர் கையில் தான் வெற்றி பெருமளவுக்குத் தங்கியுள்ளது. இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறுவதால் எமது திட்டத்திலுள்ள பல இடர்ப்பாடுகளை இலகுவாகக் கடந்து செல்லலாம் என்று எதிர்பார்க்கலாம்.




## கீழடி அருங்காட்சியகம் பற்றி:

கீழடிக்கு அருகிலுள்ள கொந்தகை கிராமத்தில் சுமார் இரண்டு ஏக்கர் பரப்பளவில் உலகத்தரம் வாய்ந்த அகழ்வாய்வு வைப்பகம் (Keezhadi Site Museum, Government of Tamil Nadu) அமையவுள்ளது.

இந்த அருங்காட்சியகம் பற்றியதொரு அழகிய வரைவு வெளியிடப்பட்டது. அதன்படி, முதலாவதாக 'கீழடி ஓர் அறிமுகம்' என்னும் காட்சிக்கூடம், சுமார் 6,735 சதுர அடியில் அமையவுள்ளது. இக்காட்சிக் கூடத்தின் முற்றத்தில் அகழாய்வுக் குழிகளின் மாதிரிகளும் தொல்பொருட்களுக் கான இருப்பறை ஒன்றும் இடம்பெற உள்ளன. அத்துடன் கீழடி மற்றும் அதன் அருகிலுள்ள அகழாய்வுக் களங்களின் வரலாற்றுத் தரவுகள் விளக்கங்களுடன் காண்பிக்கப்படவுள்ளன.

இக்காட்சிக்கூடத்தில் கீழடி ஆய்வு குறித்து ஒலி, ஒளி அரங்குகளும் அமையவுள்ளன. இப் பகுதிக்கே உரிய மேன்மை வாய்ந்த கட்டடக்கலைப் பாணியில் இக்கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. 1094 சதுர அடியில் இரண்டாவதாக அமைந்த காட்சிக் கூடம் கல்லால் ஆன தொல்பொருட்களுக்கான காட்சிக் கூடமாகும். இதன் முற்றத்தில் கீழடி அகழாய்வில் வெளிக் கொணரப்பட்ட மண்ணடுக்கின் மாதிரி வடிவங்கள் பார்வையாளர் கவனத்தை ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளன. மணி வகைகள், தங்கத்தில் செய்யப்பட்ட பொருட்களுக்கான காட்சிக்கூடம், அகழ்வாய்வுகளின் மாதிரிகள், திறந்த வெளிக் காட்சிக்கூடம், உலோகப்பொருட்களுக்கான காட்சிக்கூடம் ஆகியவை அடுத்தடுத்து அமையவுள்ளன.

சங்க காலச் சமூகம் வேளாண்மையையும் கால் நடை வளர்ப்பையும் முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்ததை, விலங்குகள் குறித்தான தொல் பொருட்களுக்கான காட்சிக்கூடம் பிரதிபலிக்கும். கீழடி அகழ்வாய்வில் அண்மைக் கண்டுபிடிப்பான திமில் உள்ள காளையின் எலும்புத்துண்டுகள் மற்றும் பிற விலங்கினங்களின் எலும்புகள், கொம்புகள் ஆகியவை பார்வையாளரை ஈர்க்கும் வண்ணம் காட்சிப் படுத்தப்பட உள்ளன. இதன் அருகில் மரபுசால் விளையாட்டுக்களுக்கான இடம் அமையவுள்ளது. சுடுமண்ணாலான பானைகளுக்கான காட்சிக்கூடம் 13,433 சதுர அடியில் அமையவுள்ளது. இப்படியான வருணனையைக் கேட்கும் போது எப்போது காட்சியகம் நம் பார்வைக்குக் கிட்டும் என்னும் ஆவல் எல்லோர் மனத்திலும் எழுவது இயல்பே.

தொல்லியல் சார்ந்த ஆர்வம் தமிழ் நாட்டிலும் புலம் பெயர் நாடுகளிலும் புத்தொளி பெற்றிருக்கிறது. எமது வரலாற்றை அறியவும் அக்கறை கொள்ளவும் எமது கலை பண்பாட்டு வளங்களை ஊக்குவித்து வளர்த்தெடுக்கவும் உலக அரங்கில் எமக்கென ஒரு இடத்தை அமைத்துக் கொள்ளவும் முயல்வோம் என்று உறுதி எடுத்துக் கொள்ளுவோம்.

தமிழ் நாட்டு அரசு முன்னெடுக்கும் இப்பாரிய முயற்சியில் இணைந்து நாமும் எம் பங்கிற்கு அம் முயற்சிகள் அனைத்தையும் காவல்காரர்களாக இருந்து நெருங்கிப் பார்வையிட்டு பயனுள்ள ஆலோசனைகள் வழங்கிப் பயணிப்போம்.



*selvanayaki.s@thaiveedu.com*

'கற்க கணிதம் கசடற'

மாணவர்களின்
வீட்டுக்கு வருகைதந்து
தனித்தனி வகுப்புகள் எடுக்கப்படும்.

**CALCULUS, VECTORS, ADVANCED FUNCTION, TRIGONOMETRY Etc. Etc.**

Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.

Specializing in tutoring Math from Gr. 10 - 12.
Available for home visits and one-on-one sessions.

C: 416-819-7923

1629 Winville Rd.,
Pickering, ON L1X 0C8

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# மனதோடு பேசிய மலைகள்

- என். கிருஷ்ணகுமார் -

## அறிமுகம்:

மல்லியப்புசந்தி திலகர் எழுதி 2019 ஆண்டு இறுதியில் வெளியிட்டுள்ள நூல் 'மலைகளைப் பேசவிடுங்கள்'. இந்நூலை கொவிட்-19 இனால் வீட்டுக்குள் முடங்கியிருந்த காலத்தில் வாசித்தேன். மலைகள் என்னோடு பேசிய விடயங்களிலிருந்து சில வற்றை இங்கே உங்களோடும் பகிர்ந்துக் கொள்ள விழைகிறேன்.

பாக்யா பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள இந்நூல் 15 அத்தியாயங்களைக் கொண்டது. தேயிலை மலைகளை அட்டைப்படமாகக் கொண்டுள்ளதுடன் இந்நூலாசிரியரின் ஆசிரியரான முன்னைநாள் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி திரு. வ. செல்வராஜா எழுதி இயக்கிய நாடகத்தின் பெயரையே நூலாசிரியர் இந்நூலுக்கான தலைப்பாக்கியுள்ளார். அதற்காக தனது ஆசிரியருக்கு நன்றியும் கூறியுள்ளார்.

எல்லா மாணவர்களுக்கும் தனது ஆசிரியர் தொடர்பில் ஒரு தற்றுணிபும் தைரியமும் உண்டு. அது இந்நூலாசிரியரிடத்திலும் இருக்கிறது.

இந்நூல் மலையக மக்களின் உரிமைகள், உரிமைப் போராட்டங்கள், இனத்துவ அடையாளம், அரசியல் கட்டமைப்பின் எழுச்சி, மலையக மக்களின் வாக்குரிமை, வாக்குரிமைப் பறிப்பு, அதனால் ஏற்பட்ட பாதிப்புகள், இலங்கை இந்திய ஒப்பந்தத்தால் ஏற்பட்ட பின்விளைவுகள், மீண்டும் வாக்குரிமை கிடைக்கப்பெற்றமை, பிரதேச சபைகள் திருத்தச் சட்டம் மற்றும் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை, 20ம் நூற்றாண்டில் மலையக மக்களிற்கான முன்னின்று போராடிய பெரியோர்கள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் என்னுடன் பேசிய விடயங்கள் ஏராளம். அதனை முழுமையாக ஆராய்வது இன்னொரு புத்தகம் எழுதுவதாகிவிடும் என்ற காரணத்திற்காகவும், எனது பகிர்வை இலகுபடுத்திக்கொள்வதற்காகவும் இலங்கை பிரஜையாவதற்கான தடைகளில் இனத்துவ அடையாளம், பிரஜாவுரிமை, பிரதேச சபை சட்டத் திருத்தம், பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை போன்ற விடயங்கள் பற்றியே வாசகர்களோடு கலந்துரையாட இருக்கின்றேன்.

## இனத்துவ அடையாளம்:

'இலங்கை மலையகத் தமிழ் மக்கள்' என அழைக்கப்படுவோர் இன்னும் 'இந்தியத் தமிழர்' என்றே சட்ட ரீதியாகப் பதிவு செய்யப்படுகின்றனர். அதாவது சனத்தொகை கணக்கெடுப்பின்போது, இலங்கையில் வாழும் சனத்தொகையை இன அடிப்படையில், மத அடிப்படையில் கணக்கெடுப்பு செய்கிறார்கள்...' என நூலாசிரியர் மிக நுணுக்கமான ஓர் ஆய்வினை குறிப்பிடுகிறார். மலையகத் தமிழர் இலங்கைப் பிரஜையாவதற்கான தடைகளில் இந்த இனத்துவ அடையாளம் ஒரு தடை என்பதை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

அதேபோல, இலங்கைத் தமிழர்கள் தங்களை 'ஈழத் தமிழர்கள்' என்றும், இந்தியத் தமிழர்கள் தங்களை 'மலையகத் தமிழர்கள்' என்றும் அழைத்துக்கொள்வது அரசியல், பண்பாட்டு நிலையிலானது, சட்ட பதிவுகளுடனானது அல்ல என ஆசிரியர் மிக நுணுக்கமாகக் கூறியுள்ளார்.

இலங்கையில் கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டு வாழ்கின்ற ஒரு இனம்தான் இந்திய வம்சாவளி தமிழர்கள் (Indian origin Tamils). மொழியால் இலங்கைத் தமிழர்களும் மலையகத் தமிழர்களும் ஒன்றெனினும் அரசியல் அபிலாஷைகளால் வேறுபட்டவர்கள் என்று ஆசிரியர் கூறுகிறார்.

'இலங்கை மக்கள் தாங்கள் இலங்கையிலிருந்து பிரிந்து செல்ல எந்தளவு தடை இருக்கிறதோ அதேயளவு தடை மலையகத் தமிழர்கள் தங்களை இலங்கையர்களாக ஆக்கிக் கொள்வதிலும் உள்ளது...' எனக் குறிப்பிடுகின்றமையானது இன்னும் மலை




யகத் தமிழர்கள் இந்நாட்டின் உரிமையைப் பெற்றுக்கொள்ள போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை வலியுறுத்துகின்றது.

## மலையகமும் இலவச கல்வியும்:

நூலாசிரியர் குறிப்பிடுவதுபோல மலையகத் தமிழர்கள் தங்களை இலங்கையர் ஆக்கிக்கொள்வதில் உள்ள இன்னொரு பிரதானப் பிரச்சினைதான் இலவசக் கல்வி. காரணம் கல்வியின் தந்தை என போற்றப்படும் C.W.W. கன்னங்கரா உருவாக்கிய இலவசக் கல்வி (Free Education) இன்னும் முழுமையாக மலையக மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெறாத இந்நிலைமையில் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படாத ஒரு பாடசாலை இன்னும் சுயாதீனமாக இயங்கி வருகின்றது.

1944ற்கும் 2020ற்குமான இடைவெளி 86 வருடங்கள். இந்த 86 வருடங்களில் இலங்கையின் இலவசக் கல்வியை மலையக மக்கள் இன்னும் முழுமையாக அடையவில்லை. இது மட்டுமல்ல, அரசாங்க, சுகாதார சேவைகள், போக்குவரத்து, அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் என அரசினால் வழங்கப்படும் சேவைகள் இன்னும் முறையாகக் கிடைத்தபாடில்லை. இவ்விடயங்களை நூலாசிரியர் மிகக் கச்சிதமாக 'இலங்கைப் பிரஜையாவதற்கான தடை' எனக் குறிப்பிடுகின்றார்.

## மலையக தேச பிதா நடேசய்யர்:

1815ற்குப் பிறகு 1920 வரை மலையகத் தமிழர்கள் தேயிலைத் தோட்டங்களில் பிரித்தானியர்களால் அடிமைகளாகவே வைக்கப்பட்டு உள்ளனர். இந்த இடத்தில் தான் ஆசிரியர் ஒரு முக்கிய விடயத்தை தெளிவுபடுத்துகிறார். அதாவது 1920களில் இந்த மக்களிடம் தொழிற்சங்க கட்டமைப்பை உருவாக்கிய கோ. நடேசையர் தான் மலையக தொழிற்சங்க முன்னோடி.

'1920களில் இந்திய சுதந்திர போராட்டத்திற்கு நிதி சேர்க்கவென இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரிடம் வந்த பத்திரிகையாளரான கோ. நடேசையரின் பார்வை இந்த மக்கள் கூட்டத்தினர் மீது விழவே, முதலாவது தொழிற்சங்கத்தை அவர் உருவாக்கினார். 'இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் சம்மேளனம் 1920களின் பிற்கூறுகளில் உருவாக்கப்பட்டது. கோ. நடேசையரும் அவரது துணைவியாரான மீனாட்சியம்மையும் உருவாக்கிய அந்த தொழிற்சங்கமே அவர்களின் அரசியல் அமைப்பாகவும் மாறியது எனக் குறிப்பிடுகிறார். கோ. நடேசையரின் எண்ணத்தில் நேர்மையும் தூரநோக்குச் சிந்தனையும் இருந்தது. பிரஜாவுரிமைக்கான விதை நடேசையாரால் போடப்பட்டது. அந்த விதையால் அவிழ்ந்த முடிச்சை இந்நூலாசிரியர் பின்வரும் வரிகளில் குறிப்பிடுகிறார்.

'1931ம் ஆண்டு சர்வஜன வாக்குரிமையை வழங்குவதற்கு பிரித்தானிய அரசு முன் வந்தபோது நடேசையர் உருவாக்கி வைத்த அரசியல் அடையாளம் மலையகத் தமிழ் மக்களையும் வாக்குரிமை உள்ளவர்களாக மாற்றியது' என குறிப்பிட்டு மலையகத் தமிழர்களின் வாக்குரிமைக்கு வித்திட்ட முதல் நபர் கோ. நடேசையர் என்று இக் குழப்பத்தை தீர்த்து வைத்துள்ளார். அதே போல தொழிலாளர் உரிமை சாரந்த அரசியலை முதன்முதலில் ஆரம்பித்து நடத்தியவர் என்ற பெருமையும் இவருக்கே உண்டு.

இந்தியாவிலிருந்து இலங்கை வந்த யாவரும் இலங்கை பிரஜைகளாக்கப்படல் வேண்டும் என்ற உறுதியான எண்ணம் காரணமாக பூத்த 1920 - 1930 வரையான பத்தாண்டு முயற்சியின் பயனாக பிரித்தானியரால் வழங்கப்பட்ட சர்வஜன வாக்குரிமை மலையக மக்களுக்கும் கிடைத்தது. இவ்விடத்தில் 1977ம் ஆண்டுதான் வாக்குரிமை வழங்கப்பட்டது என்பதை அடியோடு மறுக்கிறார் நூலாசிரியர். இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் முன்னதாகவே 1936 - 1947 ஆண்டுவரையில் நடேசையர், பெரி. சுந்தரம், வைத்தியலிங்கம் என்போர் சட்டசபை உறுப்பினர்களாக இருந்தமையை அதற்குரிய சான்றாதாரமாக முன்வைத்து தர்க்க ரீதியாக வாதிடுகிறார்.

1948ம் ஆண்டு பிரஜாவுரிமையை பறித்த சம்பவமானது சி.வி. வேலுப்பிள்ளை, சௌமியமூர்த்தி தொண்டமான் (பிற்காலத்தில் ஏ. அஸீஸ்) உள்ளிட்ட எட்டு மலையகத் தமிழ் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தபோதே இடம்பெற்றது என்பதனை நூலாசிரியர் கோடிட்டுக் காட்டியுள்ளார். இவ்விடத்தில் இலங்கைத் தமிழர்கள் வாக்குரிமையை பறித்த சட்டமூலத்திற்கு ஆதரவளித்திருந்தனர் என்பது பற்றிய விவாதங்கள் நடத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளமையானது அது பற்றிய தகவல்களை நாம் எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கை இந்திய காங்கிரஸானது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டப்போது பாராளுமன்றத்திற்குள் ஏதும் செய்ய முடியாத நிலையில் 1952ல் பிரதமர் அலுவலகத்தின் முன்னால் சத்தியாகிரகம் நடத்தியுள்ளார்கள்.

## இலங்கை - இந்திய காங்கிரஸ்:

இ.தொ.கா தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்பதற்காய் உருவான தொழிற் சங்கமல்ல. அது முதலாளிகளின் நலன் பேணும் நிறுவனம். இதனை 'மலையகம்: பல்பக்கப் பார்வை' எனும் இரா. சிவலிங்கம் அவர்களின் ஞாபகார்ந்த நினைவுப் பேருரை நூலில் (கட்டுரைத் தொகுப்பு) திரு. சுகுமாறன் விஜயகுமார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'இலங்கை இந்திய தொழிலாளர் காங்கிரசில் இருந்த இந்தியாவை வாழ்விடமாகக் கொண்ட இந்திய வர்த்தகர்கள் தமது மேட்டுக்குடி அரசியலை நிலைநிறுத்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களிடத்தில் அரசியலை முன்னெடுத்தார்கள். மறுபுறம் இந்தியாவுடன் உறவைப் பேணி இலங்கையில் நிலச் சொந்தக்காரர்களாகவும் தோட்ட உரிமையாளர்களாகவும் வணிகர்களாகவும் இருந்தவர்கள் மலையக மக்களிடத்தில் அரசியலை முன்னெடுத்தார்கள்.'

அதாவது தொழிலாளர்களை பயன்படுத்தி இலங்கை இந்திய காங்கிரஸ் தனது சுய நல அரசியலை நடத்தியது. இதன் விளைவாகதான் அஸீஸ், சி.வி. வேலுப்பிள்ளை போன்றோர் நாளடைவில் விலகிச் சென்றனர் என்பது புலனாகிறது. இந்நூலாசிரியரான மல்லியப்புச்சந்தி திலகரும் இக்கருத்தினை ஏற்றுக்கொண்டுள்ளதாகவே இந்த நூலின் மூலம் உணரப்படுகிறது.

தொடர்தல் 77ம் பக்கம்

# மனதோடு பேசிய...

76ம் பக்கத் தொடர்ச்சி...

## சிறிமா- சாஸ்த்திரி ஒப்பந்தம்:

1964ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கைக்கும் இந்தியாவுக்குமான சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்படுத்திய விளைவுகளை நூலாசிரியர் மிக ஆழமாக ஆராய்ந்துள்ளார். ஓரிடத்தில் மலையகத் தமிழர்கள் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரண்டு அரசாங்கங்களினாலும் எவ்வாறு வஞ்சிக் கப்பட்னுள்ளனர் எனும் தனது ஆதங்கத்தை கடுந்தொனியில் குறிப் பிடுகிறார்.

1953ம் ஆண்டு செய்யப்பட்ட கணக்கெடுப் பின்படி இலங்கையின் இரண்டாவது பெரும் பான்மை இனமாகக் காணப்பட்ட நாட்டு ரிமையற்றிருந்த இந்தியத் தமிழர்கள் (மலை யகத் தமிழர்கள்) இன்று நான்காம் இடத் திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதனை ஆசிரியர் பல ஆதாரங்களுடன் குறிப்பி டுகிறார்.
1977ற்குப் பின்னர் படிப்படியாக பிரஜாவு ரிமை கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எவ்வாறெனினும் மலையக மக்களின் பிரதிநிதிகள் பிரஜாவுரிமைப் பிரச் சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தவறி யமை கவலைக்குரியதே. எனினும் அந்தனி என்ற தனிநபரின் முன்னெடுப்பு காரணமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா மலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான தெரிவுக்குழு பணியாற்றலின் அடிப்படை யில் பிரஜாவுரிமை சட்டம் திருத்தப்பட்டு 2009ம் ஆண்டு சகலரும் இலங்கைப் பிர ஜைகளாக்கப்படுகிறார்கள். யாரும் அறியா அந்தனி ஐயா அவர்களை இந்த நூலில் விரிவாக அறிமுகம் செய்வதுடன் அவ ருக்கே இந்த நூலையும் சமர்ப்பணம் செய் துள்ளார் நூலாசிரியர்.

2005-2010 வரையான காலப்பகுதியில் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத் திய பதினோரு பாராளுமன்ற உறுப்பினர் களில் (சில நாட்களிற்கு முன் மறைந்த ஆறுமுகன் இராமநாதன் தொண்டமான் உட் பட) 9 அமைச்சர்கள் இருந்துள்ளனர். எனினும் 2009 பிரஜாவுரிமை சட்டத்திருத் தத்திற்கு முன்னின்ற முன்னாள் பா.உ இராமலிங்கம் சந்திரசேகரன் (JVP) எம்மால் பாராட்டப்பட வேண்டியவர்.

## பிரதேச சபை சட்டத் திருத்தம்:

மலையக மக்களின் உட்கட்டமைப்பு வச திகள் நடைபெறுவதில் பெரும் தடையாக இருந்தது பிரதேச சபைச் சட்டம். இந்த சட்டம் உருவாக்கப்பட்டபோது கிராமங் களிற்கு நிகராக அபிவிருத்தியில் பார பட்சம் நடந்துள்ளமையினை மல்லியப்புச் சந்தி திலகர் கச்சிதமாக வெளிக்கொ ணர்ந்துள்ளார். அதே நேரம் கிட்டத்தட்ட 70 வருடகால அரசியலில் இத்திருத்தம் செய்யப்படாமை ஒரு கவலைக்குரிய விட யமே. அதேநேரம் அதற்குரிய இயலுமை களைக் கொண்ட மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யாமை மலையக மக்களின் பெருந்தவறு என்றே குறிப்பிட விரும்புகி றேன். எனினும் 2018ம் ஆண்டு மலையக மக்களின் பிரதிநிதிகள் (த.மு.கூ) ஒரு மகத் தான சாதனையினைச் செய்திருந்தனர். இச்சாதனையைச் செய்ய மல்லியப்புச் சந்தி திலகரே பாராளுமன்றம் போக வேண் டியிருந்தது (2015-2020). சென்றான் வென் றான் என்பது போல 2018ம் ஆண்டு பிர தேச சபைச் சட்டம் திருத்தப்பட்டது.

உடபலாத்த பிரதேச சபை தோட்டங்களை அபிவிருத்தி செய்ய தனது நிதியைப் பயன் படுத்தியது என்பதற்காக அந்தச் சபையே கலைக்கப்பட்டது ஒரு கசப்பான அனுபவம்.

பிரதேச சபை சட்ட திருத்தங்களில் முக் கிய பகுதியான 'தோட்ட நிர்வாக அதிகா ரிகளுடனான கலந்தாலோசனையுடன், உட் கட்டமைப்பு வேலைகளை தோட்டப்பகு திகளில் செய்வதற்கு பிரதேச சபைகள் தமது நிதியினைப் பயன்படுத்த முடியும்' என்பவற்றை வாசித்தேன். உடனேயே எனக் கொரு சந்தேகம் வந்தது. ஏன் தோட்ட நிர் வாகிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என எனது மனதில் தோன்றியது. வாசகரின் உளவியலை கச்சிதமாக புரிந்து அடுத்த பந்தியில் விடை தந்திருந்தார். ஒரு எழுத் தாளர் வாசகரின் உளவியலை அறிந்து எழுதி னால் அது வாசகரின் உள்ளத்தை மகிழ்ச் சியூட்டும். என் மனதில் தோன்றிய வினா வுக்கு மல்லியப்புச்சந்தி திலகர் பதில் தந்திருந்தார். அவர் ஒரு சிறந்த நூலாசிரி யர் என்பதற்கு இதுவுமொரு சான்று.

'உட்கட்டமைப்பு வேலைகளை தோட்டப் பகுதிகளில் செய்வதற்கு பிரதேச சபைகள் தனது நிதியினை பயன்படுத்த முடியும்' என்ற திருத்தம்தான் நாம் உழைத்த உழைப்பு, நாம் செலுத்திய வரிப்பணம் எமது அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப் படப்போகிறது. தற்போது அபிவிருத்திக் கான பாதைத் திறந்துவிடப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் எமக்கான அபிவி ருத்திப் பணிகள் வேகமாக நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம்.

அதேநேரம் அரச பொறிமுறைக்குள் இம்மக் களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் நடை பெறும். எனினும் இதுவரை காலமும் அபிவி ருத்தியில் பின்னிற்கும் பெருந்தோட்டங்கள் எவ்வாறு கிராமங்களையும் நகரங்களையும் அபிவிருத்தியில் எட்டிப்பிடிக்கப் போகி றது என்றொரு வினா எனக்கு எழுகிறது. இதற்கு தீர்வாக இலங்கை அரசாங்கத்தி னால் விசேட செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இல்லையெனின், அபிவிருத்தியில் தோட்டங்கள் காலங்கால மாக பின்னிற்க வேண்டிய நிலையே ஏற் படும்.

## அதிகார சபை:

14ம் அத்தியாயத்தில் பெருந்தோட்ட பிராந் தியங்களுக்கான புதிய கிராமங்கள் அபிவி ருத்தி அதிகாரசபையின் அதிகாரங்கள், பணிகள், முகாமை, நிர்வாகக் கட்டமைப்பு, தவிசாளர், நிதி, சபை உறுப்பினர்கள், உறுப் பினர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக் கள், பதவிகாலம் மற்றும் அதன் செயற் பாடுகள் பற்றி நூலாசிரியர் முழுமையாக விளக்கியுள்ளார்.

பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

மலையக மக்களின் அடுத்த சாதனைதான் பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை யினை உருவாக்கியமை. 2015 - 2020 கால மலையக அரசியல் சாதனைகள் என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

இதிலே பெருந்தோட்ட பிராந்தியங்களுக் கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதி காரசபை தொடர்பில் பெரும்பாலான மக் கள் போதிய தெளிவின்றி இருக்கலாம். எனி னும் இதுவரையில் பத்திரிகைகள் தவிர, இவ்விடயம் ஒரு நூலில் விடயப் பரப்பாக இடம்பிடித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவே. அதேநேரம் இந்த அதிகாரசபையின் உரு வாக்க செயற்பாடுகளில் முன்னின்றவர் என்ற அடிப்படையில் இது பற்றி முதன்முதலில் எழுதத் தகுதியானவரும் மல்லியப்புச்சந்தி திலகர்தான் என்றால் மிகையாகாது. இப்புத் தகத்தினை வாசிப்போருக்கு இதன் 14ம் அத்தியாயம் முற்றிலும் புதிய அறிவைப் பெற்றுக்கொடுக்கும்.

தற்போது கொவிட் 19 வைரஸ் தொற்று காரணமாக பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்ட தேயிலைத் தோட்ட தொழிலா ளர்களுக்கு (இவர்கள் விவசாயிகள் என்று அழைக்கப்படல் வேண்டும்) இந்நிறுவனத் தின் மூலமாக நிதி சேகரித்து அரச பொறி முறைக்குக் கீழே நிவாரணம் வழங்க முடி யும். எனினும் அரசியல் காரணங்களுக்காக பயன்படுத்தாமல் தவிர்த்திருப்பது கவலைக் குரியதே.

## நிறைவாக:

இந்நூலின் இறுதி அத்தியாயத்தில் (15) நூலாசிரியர் எதிர்கால இடைவெளியைத் தொகுத்துத் தருகிறார். பிரதேச சபைகளின் செயற்பாடுகளில் இருக்கும் பலவீனங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், அரச இலவசக் கல்வியில் காணப்படும் பாரபட்சம் மற்றும் குறைபாடுகள், அரச நிர்வாகப் பொறிமு றைக்குள் சேவைகளைப் பெற்றுக்கொள் வதில் காணப்படும் தடைகள், இனத்துவ அடையாளம், அபிவிருத்திக்காக புதிதாக உருவாக்கப்பட வேண்டிய நிறுவனங்கள், கூட்டு ஒப்பந்தத்தில் காணப்படும் குறை பாடுகள், இனத்துவ அடையாளத்திற்கான சட்ட ஏற்பாடுகள், காணியுரிமை என ஒரு நீண்ட பட்டியலைத் தந்துள்ளார்.

மலையகத்திற்கான வரலாற்றுக் குறிப்புக- ளிலே பல்வேறு புதிய விடயங்களை தேடித் தந்திருக்கிறார் மல்லியப்புச்சந்தி திலகர். எமக்குத் தெரிந்த வரலாற்றை மறுவாசிப் புச் செய்யவும் மக்களின் உரிமைப் பேராட் டங்களை புதிய கோணத்தில் பார்க்கவும் போதிய ஆதாரங்களை இந்நூலாசிரியர் திரட்டி நூலாக்கியுள்ளார்.

மலையக மக்களின் உரிமைகளை வழங் காமல் பாராமுகமாக இருக்கும் அரசாங் கங்கள், அவர்கள் செய்தத் திட்டமிட்ட சதி கள் என வாசகர்களுக்கு இந்நூல் ஒரு புதிய பார்வையை நிச்சயம் வழங்கும்.

இந்நூலை வாசிக்கும்போது இலகுவான மொழிநடையில் விறுவிறுப்புடன் பேசும் மலையகத்தை சூழ்ந்துள்ள மலைகளே என்னோடு பேசுவதாக உணர்ந்தேன். அவை என் மனதோடு இப்போதும் பேசிக்கொண்டே இருக்கின்றன. ஆங்காங்கு அமைந்திருக் கும் மலையிடைவெளிகளின் ஒலிக்கும் இத் தகைய குரல்களை வெளியே கொண்டு செல்ல வேண்டும்.
அதற்கு மீண்டும் திலகர்...



krishnakumar.n@thaiveedu.com


**SP Electronics**

**TV, VCR, DVD, Players, Telephone-Computers**

அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும்,

திருத்த வேலைகளுக்கும்...

**416 264 6400**

**2641 Eglinton Avenue East**

**( Brimley & Eglinton)**




Special Training Program

K.C. Driving School

Chasi

647-718-4363, 416-514-0925

drivecar3200@yahoo.ca


YOUR INTEREST IS
MY CAPITAL
உங்கள் விருப்பமே
என் முதலீடு !
Call SRI
For your Real estate Chat.
SRI SIVASUBRAMANIUM
SALES REPRESENTATIVE
DIR : 416.884.3991
ssriskand@gmail.com
www.sriveedu.com
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE*
7 EASTVALE DR, UNIT 205 MARKHAM, ON L3S 4N8
Off : 905.201.9977 Fax : 905.201.9229
www.homelifefuture.ca


OUR FREE SERVICES
WHY? REALTOR KATHIR
For Home Owners
✓ Home Staging
✓ Newspaper & Flyer Advertisement
✓ High Resolution Picture & Virtual Tour
✓ Four Page Colour Feature Sheets
✓ Weekends Open House
✓ Guaranteed Weekly Feedback
✓ Social Media Marketing
✓ Full MLS Listing Service
✓ Sale Sign & Direction Signs
✓ Market Evaluation
✓ Radio & Web Tool Advertisement
✓ Professional & Friendly Service
LOW
Commission
Over 10 yrs Experience Realtor
Multi Award Winner Since 2006
Excellent Negotiation Skill
Quick Sale with Low Commission
Professional & Friendly Services
Home Sellers' Programme
Home Buyers' Programme
Mortgage Brokers, Lawyers, Inspector Team.
Getting Low Rate Mortgage
SELL WITH KATHIR
& GET MAX. PRICE
Buy with Kathir & Get Dream Home
HomeLife/Future Realty Inc.,
Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8
HOMELIFE
Kathir Kathirgamanathan B.A,
Real Estate Broker
Dir: 416-230-6462

# ‘மனோகர’ மதுரை

‘உலகம் ஒருநிறையாத் தானோர்
நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க
- உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே
தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்’

என்பது பரிபாடல்.

*மழைகொளக் குறையாது,*
*புனல்புக மிகாது*
*கரைபொருது இரங்கும் முந்நீர் போல,*
*கொளக்கொளக் குறையாது.*
*தரத்தர மிகாது.*

*... மதுரைக் காஞ்சியில் மாங்குடி*
*மருதனார்*
*கடை கழி மகளிரின் பொழுதுபோக்கு*
*காலைப்பொழுதைக் கழித்தல்*

*குட காற்று எறிந்து, கொடி நுடங்கு*
*மறுகின்*
*கடை கழி மகளிர் காதல் அம்*
*செல்வரோடு*
*வரு புனல் வையை மருது ஓங்கு*
*முன்துறை*
*விரி பூந் துருத்தி வெண் மணல்*
*அடைகரை*
*ஓங்கு நீர்மாடமொடு நாவாய் இயக்கி*
*பூம் புனை தழீஇ,*
*புனல் ஆட்டு அமர்ந்து*

*(‘குடகாற்று’ - கோடைக் காற்று, ‘கடை கழி மகளிர்’ - பொது மகளிர், ‘நீர்மாடம்’ - பள்ளி ஓடம், ‘நாவாய்’ - தோணி.)*

(கோவலன் நகரில் நுழைந்த முதற்பகுதி பரத்தையர் வாழுமிடமாகும். ஆங்கு இளங்காலைப் பொழுதில்) குடதிசையி லிருந்து வீசும் கோடைக் காற்று வேக மாக வீசுவதால் அசைந்தாடும் கொடிக ளையுடைய தெருவில் வாழ்கின்ற பொது மகளிர், தாம் விரும்புகின்ற செல்வத்தோடு அழகும் மிக்கவராகிய காமுகரோடு கூடி வற்றாத வைகை ஆற்றின் கரையிலுள்ள மருத மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கும் முன் துறைக்குச் சென்றனர். அங்கிருந்து பரந்து மலர்சூழ்ந்த ஆற்றிடைக் குறையில் குன்று போல் உயர்ந்து நிற்கும் வெண் மணற்பரப்பிற்கு உயர்ந்த பள்ளியோடத் திலும் தோணியிலும் ஏறிச் சென்றனர். போகும் போது அங்கிருந்த பொலிவு பெற்ற தெப்பங்களைத் தழுவியவாறே புனலாடி மகிழ்ந்தனர்.

*- மதுரை காண்டம் - சிலப்பதிகாரம்*
(ப. சரவணன் உரையிலிருந்து. - சந்தியா பதிப்பகம்)

பாண்டியன் கண்ணை மூடினான். போர் முடிந்தது, முதல் கப்பலில் ஊர். இந்த தடவை சென்னை வேண்டாம், நாகப்பட் டினம். சுங்க அலுவலகத்தில் ஆடை மடிப்புகளை கலைத்தும் தலையணைக ளைக் கசக்கியும் பார்ப்பார்கள். நேரே திருச்சி. அங்கிருந்தே ஊர் போய் விட லாம். இல்லை, மதுரை வழியாகப் போக வேண்டும். மதுரை ரெயிலடியிலிருந்து கிளம்பினால் எதிரே மங்கம்மாள் சத்திரம். அங்கேயே தங்கலாம், ஒரு நாள் இருந்து நண்பர்களைப் பார்க்கவேண்டும். மாலை யில் ஒரு சுற்று. டவுன் ஹால் ரோடு, பீம விலாஸ், மதுரையில் முதன்முதலாக மேசையில் வைத்துப் பலகாரம் தின்னும் பழக்கத்தைப் புகுத்திய கிளப்புக் கடை. மெஜுரா காலேஜ் ஹைஸ்கூல். பெருமாள் கோயில் தெப்பக்குளம் ஒரே நாற்றம். எச்சிலை-குப்பை கூளம்-பாசி. மாசி வீதி யைக் கடந்ததும் மேலக் கோபுரத்தெரு. விக்டோரியா லாட்ஜ், மில்ட்டேரி ஹோட்டல், முன் திண்ணை சுவரோரம் பாய்விரித்து, வட்டக்குடுமி-சந்தனப் பொட்டு - சிவப்புக் கல் கடுக்கன் - சாய வேட்டியராய் முத லாளி சாமிநாத பிள்ளை உட்கார்ந்திருக் கிறார். சிவந்த சிறு கண்கள். ஓயாத வெறுப்புப் புன்னகை, உண்டு வெளியே றுவோர் இடைக்கையால் கொடுக்கும் பணத்தை ஏதோ முனகியவாறே வலக்கை யில் வாங்கி, பாயை தூக்கி அதன் கீழே வீசுகிறார். இப்பால் உடுப்பி ரெஸ்டாரண்ட், அஜீஸ் அத்தர்க் கடை, அனுமந்தராயன் கோவில் தெருக்கள் பிரிகின்றன. டாப்பர் மாமாக்கள் மறுகுவர்: ஏப்பை சாப்பை களை எதிர்பார்த்துச் சண்டியர்கள் வட்ட மிடுவர். மூணு சீட்டுக்காரர்கள். பித்த ளைச் சங்கிலிகளைத் தங்க நகையாக்கி அவசரத் தேவைக்காக குறைந்த விலைக்கு விற்கும் எத்தர்கள். பண்டாபீஸ். கோபுர வாசல், மார்வாடியின் வியாபார முழக்கம்.

‘எத்தெடுத்தாலும் ஓர்ரணா! எத்தெடுத்தா லும் ஓர்ரணா!’

சித்திரை வீதிகள், பெட்ரோமாக்ஸ் வெளிச் சத்தில், பெரிய பயில்வான் படத்தைச் சுவரோரம் சாத்தி வைத்துக் கொண்டு சாலாமிசிரி ஹல்வா விற்பவர்கள் ‘பொம் பளை சீக்கு’ மாத்திரை விற்பவர்கள், நோய்க்கும் பேய்க்கும் மந்திரித்த தாயத்து விற்பவர்கள், 64 லீலைப் படங்கள் அடங் கிய அசல் சொக்கோக சாஸ்திரம் விற்ப வர்கள், தோள்கடி மருந்து விற்பவர்கள்... கோயில் கூட்டம், பனியாவின் கூக்குரல்:

‘ஏக் பனியன் தோ அணா! ஏக் பனியன் தோ அணா!’ புதுமண்டபம் வாசல் அருகே ஆத்தூர் சாயபு பல்பொடி விற்கிறார். முன்னே, நகைச்சுவைப் பரவசமாய் வாய் பிளந்து நிற்கும் கூட்டம், சாயபு பேசுகி றார்:

பா.சிங்காரம், ‘புயலிலே ஒரு தோனி’ (பக்: 88-89)

போன நூற்றாண்டு சித்திரத்தில் பா. சிங் காரம் உருவாக்கும் சித்திரம் மிக துல்லி யமானது. அபாரமானது, நுணுக்கமானது பிரமிப்பூட்டக்கூடியது.

ஜீ. நாகராஜனின் நாளை மற்றுமொரு நாளே வழியாக நமக்கொரு மதுரை சித் திரம் கிட்டும்.

பாண்டியர்களின் இரண்டாம் தலைநகரம் மதுரை. பண்டைய தேசப் படங்களில் மட்ரா என்று காணப்படுவதும் ஆங்கிலத் தில் மதுரா என்று சொல்லப்படுவதும் கிரேக்கர்களால் மெதோரா என்று குறிக் கப்படுவதும் இத்தமிழ் மதுரையேயாம்’.

*- கால்டுவேல் ஒப்பிலக்கணம்*

சுவர்களில் ஓரடி உயர எழுத்துக்களில் விளம்பரங்கள் விதவிதமாக ஒன்றி வாழ்ந் தன. நிஜாம் லேடி புகையிலை, ஆ.கே. காட்பாடிகள், எச்சரிக்கை! புரட்சி தீ! சுவிசேஷக் கூட்டங்கள், ஹாஜி மூசா ஜவுளிக் கடை (ஜவுளிக்கடல்) 30.09.73 அன்று கடவுளை நம்பாதவர்கள் சுமக்கப் போகும் தீச்சட்டிகள்.




மதுரையின் ஒரு சாதாரண தினம். எப் போது போல் பைப் அருகே குடங்கள் மனிதர்களுக்காக வரிசைக் தவம் இருந் தன. சின்னப் பையன்கள் டெட்டானஸ் கவலை இன்றி மண்ணில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பாண்டியன் போக் குவரத்துக் கழகப் பஸ்கள் தேசியம் கலந்த டீசல் புகை பரப்பிக் கொண்டிருந்தன. விறைப்பான கால்சராய் சட்டை அணிந்த, ப்ரோடீன் போதா போலீஸ்காரர்கள் இங்கிட்டும் அங்கிட்டும் செல்லும் வாகன - மானிடப் போக்குவரத்தைக் கட்டுப்படுத் திக் கொண்டிருந்தார்கள். நகரின் மனித இயக்கம் ஒரு வித ப்ரௌனியன் இயக்கம் போல் இருந்தது (பௌதிகம் தெரிந்தவர் களைக் கேட்கவும்).

கதர்ச் சட்டை அணிந்த மெல்லிய அதிகம் நீளமில்லாத ஊர்வலம் ஒன்று, சாலை யின் இடப்புறத்தில் அரசாங்கத்தை விலை வாசி உயர்வுக்காக திட்டிக் கொண்டே ஊர்ந்தது. செருப்பில்லாத டப்பாக் கட்டு ஜனங்கள், மீனாட்சிக் கோயிலின் ஸ்தம்

- சாம்ராஜ் -

பித்த கோபுரங்கள், வற்றிய வைகைப்பா லம்; மதுரை!

*- சுஜாதாவின் நகரம் சிறுகதையிலிருந்து*

ட்ராட்ஸ்கி மருதுவின் காலச்சுவடுக்கான நெடிய நேர்காணல் வைகை வடகரை சார்ந்த மிக நுணுக்கமான அவதானிப்பு களை கொண்டது. கோரிப்பாளையம் என் பது மருதுவின் குழந்தை பருவத்தில், அவரது தந்தையின் தோழர்களான இலங் கையில் இருந்து வந்து தலைமறைவாயி ருக்கும் ட்ராட்ஸ்கிஸ்ட் தோழர்கள் ஒளிந்து கொள்வதற்கு தோதுவான இடமாய் இருக் கிறது.

மனோகர் தேவதாஸின் இந்த மதுரை நினைவுகள் என்னும் நூல் முதலில் 1998 ஆங்கிலத்தில் கீரின் வெல் இயர்ஸ் என்ற பெயரில் வெளிவருகிறது.

2008-ல் தமிழில் வருகிறது.

மனோகர் தேவதாஸ் அடிப்படையில் ஒரு பொறியாளர். தொழில்முறை அல்லாத ஓவியரும் கூட. பள்ளிக்காலங்களிலே அவ ரது ஓவியங்கள் புகழ்பெற்றவை. 1963ல் மகிமா என்பவரை திருமணம் செய்கிறார். 1972-ல் நடந்த சாலை விபத்தில் அவரது மனைவிக்கு கழுத்துக்கு கீழ் முற்றிலும் செயல்பட முடியாமல் ஆகிறது. அதனி லிருந்து நான்கு வருடம் கழித்து மனோ- கருக்கு லட்சத்தில் ஒருவருக்கு ஏற்படும் ‘ரெட்டினைட்டிஸ் பிக்மன்டோஸா’ என்ற குறைபாட்டினால் வலது கண்ணின் மையப்பார்வை பறிபோகிறது. இடது கண்ணிலும் பார்வை போய்விடும் என்று அச்சப்படுகிறார். தனது காரியதரிசி மாலினி உதவியுடன் தட்டச்சில் கீரின் வெல் இயர்ஸ் எழுத தொடங்குகிறார். ஆனால் இடது கண்ணின் மையப்பார்வை பறிபோகவில்லை. புத்தகத்திற்கான ஓவி யங்களை அவரே வரைகிறார். இது சுய சரிதை அல்ல. நடந்த பல நிகழ்வுகளை நெருக்கமாக தழுவிய நாவல் என்றே சொல்கிறார் மனோகர் தேவதாஸ்

இந்த பின்னணியில் இந்த நாவலை வாசிக்கையில் நாம் வேறொரு புரிதலோடு வாசிக்க தொடங்குகிறோம்.

பின்னாளில் மனோகர் தேவதாஸ் தன் வாழ்வை தொகுத்து எழுதும் பொழுது துயரத்தின் சாயல் படாமல் எழுதுகிறார். ‘மேரி கஹானி பாடலை உணர்ச்சியுடன் பாடினான். அவன் மனசு மிகவும் நெகிழ்ந்து போயிருந்ததால் பாட்டை முடிக்க முடி யாமல் பாதியிலேயே நிறுத்த வேண்டிய- தாயிற்று அப்போது ஜானகியும் அவன் பாடுவதை கேட்டு நெகிழ்ந்து போனாள். அவனுக்கு எம்.கே. தியாகராஜ பாகவதர் குருடனாகப் பாடிய பாடலும் நினைவுக்கு வந்தது. இப்போது அவன் ஜானகிக்கு இன்னொரு குருட்டுப் பாடகனின் பாட்டைப் பாடினான். அந்தச் சமயத்தில் தனக்கே பார்வை மெல்ல மெல்ல மங்கிப் போய் தானும் குருடாகி விடுவோம் என்பதை மனோகர் அப்போது அறிந்திருக்கவில்லை’. என்று துயரத்தைக் கடந்து போகிறார்.

நீண்ட நெடிய வரலாறு கொண்ட ஒரு நகரை பலவிதமாக அறிந்து கொள்ள முயலலாம். வரலாறாக, புவியியலாக, மானுடவியலாக, மொழி வழியாக, திருவி ழாக்கள் வழியாக அறிய முயலலாம்.

மதுரை மிக தொன்மையான நகரம். கிபி 2-ம் நூற்றாண்டிலேயே வெளிநாட்டின் யாத்திரிகர்களின் குறிப்பில் மதுரை குறிப் பிடப்படுகிறது.

தொடர்தல் 80ம் பக்கம்

# 'மனோகர' மதுரை...

79ம் பக்கத் தொடர்ச்சி...

மதுரை நகரம் பத்தாம் நூற்றாண்டில் எப்படி இருந்தது என்பதற்கான தகவுகள் நம்மிடம் குறைவாக இருக்கலாம். ஆனால் அண்மையில் அறுபது எழுபது வருடங்களுக்கு முன்னால் மதுரை எப்படி இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் மிக சொற்பமாக இருப்பது நமது வரலாற்று உணர்வின் வறுமையே காரணம்.

இந்த புத்தகம் 1947-லிலிருந்து 1958 அல்லது 1960 வரைக்குமான மதுரையை நமக்கு வரைந்து காட்டுகிறது. பா. சிங்காரம், மனோகர் தேவதாஸ் வழியாகத்தான் நாம் அன்றைய மதுரையை கற்பனையில் விரித்துக் கொள்கிறோம்.
எழுபதுகளில் பிறந்த நான் பார்த்த மதுரையின் வரலாற்றுமிக்க பழைய கட்டடங்கள் இன்று இல்லை. இன்றைக்கு போத்தீஸ் இருக்குமிடத்தில் ஒரு பழைய வேலைப்பாடு மிகுந்த கட்டடம் இருந்தது. வெள்ளைக்காரர்கள் அதன் எதிரே அமர்ந்து வரைந்து கொண்டிருப்பார்கள்.

புது மண்டபத்திற்கும், எழுகடல் தெருவிற்கும் நடுவில் பைரவசாமி கோவில் வாசலில் ஒரு பெரிய வட்டமான பள்ளம் இருந்தது. திடமான சுற்றுசுவர்களோடு கீழே பட்டியக்கல் பாவிய தரை. உள்ளே இரண்டு ஆள் நின்றாலும் வெளியே இருந்து பார்த்தால் தெரியாது. பழைய காலத்தில் ஏதோ ஒரு தேவைக்காக கட்டப்பட்ட ஒன்றாய் இருக்க வேண்டும். அந்த வட்டக்குழியில் சென்சார் அதிகாரிகள் தடை செய்ய முடியா கொக்கோக புத்தகங்களும், மருந்துகளும் விற்கப்படும். சிறுவர்களுக்கு உள்ளே அனுமதி இல்லை. சரளமாக மயக்குகின்ற மொழியில் ஒருவர் பேசிக் கொண்டே விற்பார். 'இரும்பு கம்பியை அப்படியே தண்ணில விட்டா என்னாகும்...? விரிசல் விட்டிரும். அது மாதிரி' எழுகடல் தெரு நுழைவில் இருக்கும் கற்தூண்கள் இருக்கும் யாழிகள் வாய்பிளந்து அதைக் கேட்டுக் கொண்டிருக்கும். இப்படியான ஓர் இடத்தை இதற்காக தேர்ந்தெடுத்தவன் ஞானவான். எத்தனை பேரை காப்பாற்றியிருக்கும் அந்த வட்டகுழி. இன்றைக்கு அதை கான்கிரிட் போட்டு மூடி மார்பில் இழைத்து குதிரை சிலை ஒன்றை உட்கார வைத்துவிட்டார்கள். குதிரை சிலைக்கு கீழே கிடக்கின்றன புராதன கொக்கோக புத்தகங்கள். வரலாற்றின் மீது டிஸ்டெம்பர் அடிப்பது நமக்கு அத்தனை பெருமிதம்.

எண்பதுகளின் தொடக்கத்தில் மதுரை கலெக்டர் பங்களாவை ஒட்டி எனது அத்தை வீடு கட்டினார்கள். நான் தல்லாக்குளத்திலிருந்து அதற்கு போக முயன்று வழி தவறி போய் கண்ட கன்மாய்கள் கனவு போல் மனதில் நிற்கின்றன. சொக்கிகுளம் தாண்டினால் கன்மாயும், கேணியும் தான். எல்லா கன்மாயும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவை. எல்லாம் கன்மாயிலும் சேர்ந்து உபரியான தண்ணீர் தல்லாக்குளம் கன்மாய்க்குள் வர அங்கிருந்து வண்டியூர் கன்மாய்க்கு போய் மேலமடை வழியாக வைகை ஆற்றில் போய் சேரும். துல்லியமான நீர் போக்குவரத்து பாதை. இது என்னுடைய எண்பதுகளின் சித்திரம்.

மனோகர தேவதாஸ் 1946-ல் கோட்டையூரில் இருந்து மதுரைக்குள் நுழைகையில் 'மனோகருக்கு முதல் வரிசையில் சன்னல் ஓர் இருக்கையில் அமர இடம் கிடைத்தது. அவன் சகோதரன் அடுத்த இருக்கையில் அமர்ந்து வந்தான். பஸ் பெரும் இரைச்சலுடன் மதுரையை நோக்கிச் செல்லும் போது தூரத்தில் தெரிந்த யானை மலையையும், சாலையோடு ஒட்டி வந்த நீரோடையும், எதிர்கரையில் தாழம் பூப் புதர்களையும் கண்டு ரசித்து மகிழ்ந்தான் மனோகர். பகலும், இரவும் சேரும் அந்தி மாலை நேரம். பஸ் மெதுவாக வளைந்த போது கம்பீரமான மீனாட்சி அம்மன் கோயில் கோபுரங்களை மனோகர் பார்க்க நேர்ந்தது. தூரத்து வானத்தை ஆலமரங்களின் பந்தல்கள் வழியாகப் பார்த்து பரவசத்துடன் 'மதுரை' என்று கூவினான் மனோகர்'.

1950-ல் மதுரையின் ஒரு காலை எப்படி இருக்கும்.

'வடக்கு மாசி வீதியில் விடியத் தொடங்கியது. தூசி ஒரு மெல்லிய திரைபோலிருக்க, அதன் வழியே சூரியக் கதிர்கள் விழத்தொடங்கின. இன்னும் ஆறு வாரங்களில் மதுரையும், குறிப்பாக நான்கு மாசி வீதிகளும், சித்திரைத் திருவிழாவுக்காகப் கலகலப்பாக ஆகிவிடும். காலையின் மந்தமான தொடக்கம் தெரிந்தது. வீடுகளின் முன்னே பெண்கள் கோலம் போடத் தொடங்கினர். பிடி அரிசிக்காக, ஏழைக் கீரைக்காரியான விதவைப் பெண்மணி கறிவேப்பிலை, கொத்தமல்லி, கீரை வகைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஜட்கா வண்டிகளின் மணி ஓசை அடிக்கடி கேட்டது. வெராந்தாவின் முன் பகுதியில் உட்கார்ந்து கொண்டு ஆண்கள் தினத்தந்தி பார்த்துக் கொண்டிருந்தனர். வேப்பிலைத் தோரணம் சில வீடுகளில் வாசற் கதவில் தொங்கியது.'

சின்னசின்ன நுட்பமான ஆர்வமூட்ட கூடிய தகவல்கள்.

'காந்தி இறந்த மறுநாள் மதுரையில் ஒரு அமைதி ஊர்வலம் நடக்கிறது. இஸ்லாமியர்களும் அதில் கலந்துக் கொள்கிறார்கள்.

காந்தி மியூசியம் என்று அறியப்படுவது இராணி மங்கம்மாவின் அரண்மனையாக இருந்திருக்கிறது.

செல்லூர் திருவாப்புடையார் கோவில் தாண்டினால் முழுக்க வயல் வெளிகள், கிணறுகள். மதுரை வைகையாற்றில் வந்து சேரும் நல்ல தண்ணீர் ஓடை.

மதுரைக்காரர்களிடமிருந்து விலகியே இருக்கும் ஆங்கிலோ இந்தியர்கள் வசிக்கும் ரயில்வே காலணி அவர்களின் தனித்த கலாச்சாரம் பாடல், இசை, நடனம்.

வைகையாற்று ரயில்வே பாலத்தில் ரயில் இன்ஜினை துரத்தி ஓடும் சிறுவர்கள். அவர்களை ஆங்கிலத்தில் திட்டும் ஆங்கிலோ இந்தியன் டிரைவர்கள்.

வைகையாற்றில் பழைய கால நாணயங்களை சேகரித்த மனோகர் தேவதாஸின் ஆசிரியர். இவர்களும் நாணயம் தேடி வைகையாற்று படுகையில் நடக்க ஒன்றும் கிடைக்காமல் இருட்டி போக இரண்டு பக்கமும் மின்மினி பூச்சிகள் மினுங்க மதுரை கோச்சடைப் பகுதியை கடக்கிறார்கள் தூரத்தே நகரம் வெளிச்சமாய் இருக்கிறது.

குதிரை வண்டிகளால் நிறைந்த மதுரை. அதன் சாணத்தின் வாடை நிரம்பிய மதுரை.

பியூ சின்னப்பா, கண்ணாம்பாள் நடித்த கண்ணகி திரைப்படம் ஐம்பதில் மதுரையில் வெளியாகிறது. அப்பொழுது மதுரையில் ஒரு தீ விபத்து நடக்க. அந்த படம் வெளிவந்ததுதான் அதற்கு காரணம் என பேசிக் கொள்கிறார்கள்.

பூட்டியே கிடக்கும் ஆயிரம் கால் மண்டபம்.

இந்த நுணுக்கமான தகவல்களின் ஊடாக ஒரு நான்கைந்து நண்பர்கள் குழந்தை பருவத்திலிருந்து பதின்ம பருவத்திற்கு மாறும் பொழுது எதிர்கொள்ளும் இனிய சிக்கல்கள். நண்பர்களின் தங்கைகள் அவர்கள் வீட்டிற்குள் போவதற்கான கட்டுப்பாடுகள். சேதுபதி பள்ளி, ரீகல் தியேட்டர், வைகையாற்றுக்குள் இருக்கும் மைய மண்டபம். தேவதாஸூம் அவரது நண்பர்களும் இளைஞர்களாய் செய்யும் சேட்டைகள், நண்பர்களின் பிரிவு, கால மாற்றம், கல்லூரி என அக்கபக்கமாக விரிகிறது இந்நூல்.

ஆலப்புழை பயணம் போகும் அத்தியாயம் துயர்மிகு சித்திரம். நேர்த்தியான சிறுகதை.

தமிழில் புகார்களற்ற குழந்தை பருவ சுயசரிதை அல்லது நாவல்கள் மிக குறைவு. பாரத தேவியின் 'நிலாக்கள் தூர தூரமாக', 'மேகங்களே நிலாக்களை நகர்த்துகின்றன' இவையிரண்டும் முன்பின் சொல்ல முடியாத கொண்டாட்டமான குழந்தை பருவ சுயசரிதைகள். அதற்கு பின் நான் மனோகர் தேவதாஸின் மதுரை நினைவுகளையே கொண்டாட்டமான, வசிகரமான, நுட்பமான சுயசரிதை தன்மை கொண்ட நாவலை வாசிக்கிறேன்.
இந்த புத்தகத்தில் இருக்கும் ஓவியங்கள் புத்தகத்தை வேறொரு உயரத்திற்கு கொண்டு செல்கிறது.

மனோகர் தேவதாஸ் தன் எழுத்தின் வழியும், ஓவியங்களின் வழியும் ஒரு மதுரையை நம் கண்முன் விரிக்கிறார். அதன் ஊடுபாவாக நுட்பமாக கலாச்சார தகவல்கள். வெறுமனே குடும்பம் சார்ந்த ஒரு தகவல் குவியலாக அல்லாது அதை அன்றைய வரலாற்றோடும், கலாச்சாரத் தோடும் சேர்த்து சொல்கையில் நாம் மனோகர் தேவதாஸின் வீட்டையும், அவரது நண்பர்கள் குழுவையும் மாத்திரம் அறியவில்லை. அவர் எழுத்தின் ஊடாக அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும், அன்றைய மதுரையும் ஒரு முப்பரிமான சித்திரம் போல் எழுந்து வருகிறது. அதுவே இந்த நூலின் தனித்துவம்.

மனோகரும் ஜெயராஜும் பள்ளி பருவத்தில் யானை மலைக்கு போக முடிவு செய்கிறார்கள். யானை மலையை நெருங்குகையில் மலை வந்து விடுகிறது. ஏற்றம் இறைக்கும் கிணற்றின் பின்னணியில் யானை மலையை பார்த்த வண்ணம் மலையேறாமல் திரும்புகிறார்கள். அதற்கு பின் யானை மலை போக முடியாமல் போய்விட்டது என்கிறார்.

நமக்கும் இந்த நூலை வாசித்து முடிக்கையில் ஞாபகங்கள் சுமையென மலையாய் அழுத்துகின்றன. லிபியின் ஒரு கவிதை இந்த கட்டுரையை முடிப்பதற்கு தோதாய் இருக்கும் என்று கருதுகிறேன்.

உள்ளே வைத்து உடைப்பவர்கள்

*தலைக்கு மேலே தண்ணீர்த் தொட்டிகள்*
*முளைவிடத் துவங்கிய பின்புதான்*
*நமது நிலத்தில்*
*கூரைகளின் கீழ் வசிப்பவர்கள்*
*ஒரு சோடிக் கூழாங்கற்களைச்*
*சுமக்கும் படியாயிற்று*
*கூரையின் ஆகாச கங்கையிலிருந்து*
*இறங்கும்*
*உப்படைத்த பி.வி.சி சர்ப்பங்களின்*
*தீண்டலுக்கு*
*நமது நீர்ப்பாதையின் போக்குவரத்து*
*சிக்கலாகிறது*

*வலிதாளாது*
*குப்புறப்படுத்துக் கொண்டவர்களை*
*அவர்கள் தான் மலர்த்தி*
*ஆறுதல் சொன்னார்கள்*
*அவர்கள் வார்த்தைகளுக்கு*
*கண்கள் செருகிய கணத்தில் தான்*
*சகலமும் நிகழ்ந்திருக்க வேண்டும்*

*முற்பகல் செய்த ஹார்லிக்ஸ்கள்*
*திரும்பி வந்து மேசையில் புன்னகைக்க*
*முடிச்சிட்ட பாலிதீன் புழுக்கத்திற்கு*
*இழுப்பறையில் பழங்கள் திணற*
*ஒரு பகலில்*
*ஒருக்களித்துப் படுக்கும் நமக்கு*
*தூக்கிவாரிப் போடுகிறது.*
*அம்மருத்துவமனை*
*அறையின் சன்னலூடே*
*விரல்களை நீட்டி*
*அத்திசையிலிருந்த*
*மலைகளைப் பற்றி விசாரிக்கிறோம்*
*வெள்ளுடை தரித்த அவர்களோ*
*உள்ளே வைத்து உடைத்த*
*நமது கற்களை*
*ஒரு கிண்ணியில் காட்டிச் சிரிக்கிறார்கள்.*

- லிபி ஆரண்யா

(உபரி வடைகளின் நகரம் தொகுப்பிலிருந்து)

யானை மலையை பற்றி பேசும் பொழுது இந்த கவிதை நினைவுக்கு வரவில்லையெனில் நான் என்ன மதுரைக்காரன். சுற்றுச்சூழல்வாதிகள் யானையை ஒரு அழியும் பேருயிர் என்கிறார்கள்.

யானை மலையையேனும் அழியாமல் மதுரை காக்குமா? அதை யானை மலையே அறியும்.



samraj@thaiveedu.com

MENAKA CARD
திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்
மேனகா அழைப்பிதழ்
Invitations for all occasions
80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155


FOR ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
RESIDETIAL & COMMERCIAL INVESTMENT
Nobody in the world sells more real estate than RE/MAX
FOR SELLERS
Free Home Market Evaluation
Professional Home Staging
Professional Photos & Virtual Tour
Best Value for Your Property
Weekly Open House Until Sold
Social Media Marketing
Newspaper & Flyer Advertisement
Competitive Commission Structure
FOR BUYERS
Top Negotiator
Desired Property For Less Price
Professional Advice
Assist with Mortgage, Inspection & Lawyers
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
ArunDavidBala@gmail.com
416.270.1111
416.270.7000
3-1286 KENNEDY ROAD, TORONTO, ON M1P 2L5
For All Your Real Estate & Mortgage Needs
MORTGAGE ALLIANCE
Access Inc.
www.mortgagealliance.com/arunbala
209-8130 Sheppard Ave E, Toronto ON, M1B 3W3
Arun David Bala
M.Sc, B.Sc (Hons) Sales Representative & Mortgage Agent
416 834 2854


Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
E-mail: suba_ay@hotmail.com
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
Fax: 416-282-4488
Each Office Independently Owned and Operated.
RE/MAX
COMMUNITY REALTY INC., Brokerage
-digi Media-

# நாகம்மாளும் நிலக்கிளியும்

- மைதிலி தயாநிதி -

காந்தியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட தமிழ்நாட்டு எழுத்தாளர் ஆர். ஷண்முகசுந்தரத்தின் நாகம்மாள் எனும் நாவலும், இலங்கை எழுத்தாளர் பாலமனோகரனின் நிலக்கிளி எனும் நாவலும் ஒரே காலப் பகுதியில் எழுதப்பட்டவை அல்ல. 1942ல் நாகம்மாள் வெளியிடப்பட்டு மூன்று தசாப்த நிறைவின் பின்னரேயே நிலக்கிளி வீரகேசரிப் பிரசுரமாக 1973ல் வெளிவந்தது. எனினும் நாகம்மாளும், நிலக்கிளியும் முறையே தமிழகத்திலும், இலங்கையிலும் முதன்முதலாகத் தோன்றிய வட்டார நாவல் அல்லது பிரதேச நாவல் எனும் சிறப்புப் பெறுபவை. கதாநாயகியை மையமாகக் கொண்டவை பிரதானமாக, கிராம வாழ்வினைச் சித்திரிப்பவை. 'கிராமம்' குறித்த ஒரேவகையான சிந்தனைகளையோ அல்லது கற்பனைகளையோ இவை பிரதிபலிக்கவில்லை எனினும் சமகாலக் கொங்கு, வன்னிக் கிராமங்களின் நிலை குறித்த விமர்சனங்களாக அமைவதில் இவற்றுள் ஒற்றுமை உண்டு. வெவ்வேறு அரசியல், சமூக பொருளாதார நிலைகளினால் உந்தப்பட்டெழுந்த இந்நாவல்கள் இவ்விமர்சனத்தை நேரடியாகவோ அன்றி மறைமுகமாவோ செய்கின்றன. காலனிய நவீனத்துவத்தின் தாக்கம் காரணமாக இந்திய நிலமானிய சமுதாய அமைப்பின் அடிப்படையாக விளங்கும் தந்தைவழிக் கூட்டுக்குடும்பம் சொத்துப்பிரிவினையால் எவ்வாறு சிதையக்கூடும் என்பதைக் காட்ட எழுந்ததே இயற்பண்பியல் நாவலான நாகம்மாள். நிலக்கிளியோ வன்னிப்பிரதேசக் காட்டுக் கிராமமொன்றில் வாழும் கள்ளங்கபடமற்ற இளம் பெண் தனக்கு நேரும் கசப்பான அனுபவம் மூலமாக தன்னைச் சுற்றியுள்ள உலகைப் பற்றிய புதிய புரிதல் பெறுதலை மையமாகக் கொண்டு புனையப்பட்டது அவ்வகையில் இந்நாவல் ஆங்கிலத்தில் Coming of age genre எனும் புனைவின் சாயலைக் கொண்டது. எனினும், நிலக்கிளியை வன்னிக்கிராமங்களையும், அவற்றின் இயற்கையோடியைந்த வாழ்க்கை முறைகளையும் மாற்றத்திற்குள்ளாக்கும் நவீனமயமாக்கலுக்கு எதிரான நாவலாகவும் வாசிக்க முடியும். அவ்வகையில் இரு நாவல்களுமே நவீனத்துவத்தின், நவீனமயவாக்கலின் எதிர்மறை விளைவுகளால் கிராமங்கள் அடையும் பாதிப்பை உணர்த்துகின்றன.

பகுத்தறிவு (reason), உலகளாவியவாதம் (universalism) முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட நவீனத்துவம் என்பது இந்தியா, இலங்கை நாடுகளில் ஏகாதிபத்திய காலனித்துவ ஆட்சி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுதந்திரம் பெற்ற பின்னரும் 'அபிவிருத்தி' என்ற பெயரில் தொடர்வது. 'பாரம்பரிய' அல்லது 'பழமையான' சமூகம் நவீனத்துவம் நோக்கி நகர்த்தப்படும் வழிமுறை நவீனமயமாக்கல் எனப்படும். நவீனத்துவமானது தனிமனித சுதந்திரம், தனிமனிதச் சொத்துரிமை முதலானவற்றின் அடிப்படையில் புதிய அரசியல், பொருளாதார, கல்வி, சட்ட முறைகளை அறிமுகம் செய்வதன் மூலம் பழமையான சமூகத்தில் நிரந்தரமான, ஆழமான மாற்றங்களை ஏற்படுத்துவது. பழைய சமூக விழுமியங்களை கேள்விக்குள்ளாக்குவது. 1920 களில் இந்தியாவில் தொடங்கிய காந்திய யுகத்தில் தோன்றிய நாகம்மாள் நாவல் காலனிய நவீனத்துவத்திற்கெதிரான எதிர்ப்பை மறைமுகமாகக் காட்டுகிறது. ஆனால், சுதந்திர இலங்கையில், சிங்கள-தமிழ் இனப் பிரச்சினை கனன்று கொண்டிருந்த கால கட்டத்தில் தோன்றிய நிலக்கிளி, இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறை கொண்ட வன்னிப் பிரதேசக் கிராமத்தில் நவீனமயமாக்கலின் விளைவாக எழும் பிரச்சினைகள் பற்றி வெளிப்படையாகவே பேசுகிறது.

**நாகம்மாள்:**

கோபாலுக்கே 'இறைவனுக்கே' சொந்தம் எல்லா நிலமும்.

அப்படியாயின் எல்லைக் கோடுதான் எங்கே?

மனிதனே அவ்வெல்லைக் கோட்டை வரைபவன்.

ஆகவே, அவனால் அதனை அழிக்கவும் முடியும்.

- காந்தி, 'ஹரிஜன்', 20.02.1937

காந்தியத்தைப் பற்றியோ அல்லது சமகால காலனிய ஆட்சி பற்றியோ வெளிப்படையான குறிப்புகள் ஏதும் நாகம்மாளில் இல்லை. எனினும், 1937ல் வெளிவந்த பத்திரிகையில் காந்தி 'நம் முன்னோர்களின் கூற்று' என எடுத்துக்காட்டும் மேற்படி பாடலின் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாவிடின் ஏற்படக்கூடிய தீங்குகளை விளக்கு முகமாக எழுந்த, இந்தியா முழுமைக்கும் பொதுவானதொரு நாவல் என்று நாகம்மாளைக் கொள்ளலாம். நாகம்மாள் நாவலை எழுதியமைக்கு அக்காரணத்தையே நாவலாசிரியர் சண்முகசுந்தரமும் முன் வைக்கின்றார். 'அப்போது பாகிஸ்தான் பிரிவினையைப் பற்றிய பேச்சு அடிபட்ட நேரம். மகாத்மா போன்ற தலைவர்கள் ஒற்றுமையை வற்புறுத்திக் கொண்டிருந்தனர். இந்தியக் கிராமங்களிலும் நாட்டுப் பிரிவினையைப் போல குடும்பங்களில் பாகப் பிரிவினைகள் அதிகமாயின. இதனால் பிரிவினையைப் பற்றிய எண்ணத்தை மக்களின் மனத்தினின்றும் அகற்ற கிராமசமூகத்தில் நடக்கும் ஒரு வீட்டு வாழ்க்கையை மையமாக வைத்து நாகம்மாளை எழுதினேன்' என்று ஆசிரியர் கூறுகின்றார். ஆயினும், பாகப்பிரிவினைகள் ஏன் குடும்பங்களில் நிகழுகின்றன? தந்தைவழிக் கூட்டுக் குடும்பச் சொத்துரிமை பற்றிய நாவலில் அச்சொத்திற்குத் துளியும் உரிமையற்ற வளாகக் கருதப்பட்ட விதவைப் பெண் ஏன் கதாநாயகி ஆகிறாள் என்பவற்றுக்கான புறச்சூழற் காரணிகளை ஆராயும்போது, இந்நாவலை, அடிப்படையில் காலனிய அரசு அறிமுகம் செய்த தனியார் சொத்து, தனியாள் சுதந்திரம், தனிக்குடும்பம் என்பவற்றுக்கு எதிரான நாவலாகவும் பார்க்கலாம் என்பது புலனாகும்.




நாகம்மாள் நாவலின் கதைக்களமாக விளங்கும் சிவியார் பாளையம் எனும் கிராமம் கொங்குப் பிரதேசத்தைச் சார்ந்தது. பங்காளிப்பிரச்சினைகள் கொங்குப் பிரதேச சமூகத்தில் ஆழமாகப் புரையோடியிருப்பதை அங்கு நீண்டகாலமாக வழங்கி வரும் அண்ணன்மார் கதை எனும் நாட்டார் கதைப் பாடல் மூலம் அறியலாம்., 'கொங்கு வேளாளர் வரலாறு' எனும் தனது முனைவர் பட்ட ஆய்வேட்டின் ஆறாம் அத்தியாயத்தில் எஸ்.பி. கந்தசுவாமி 'அண்ணன்மார் கதை நிலப்பூசலின் விளைவாக சகோதர பங்காளிகளிடையே நிகழும் கொலைகள் பற்றிப் பேசுகின்றது... பாகப்பிரிவினை தொடர்பான குடும்பப் பகைமைகள் கொலையில் முடிந்தன. இந்நூற்றாண்டின் 'இருபதாம் நூற்றாண்டு' தொடக்கத்தில் இது தினசரி நடக்கும் நிகழ்வாகும். நிலத்தைத் தவிர வாழ்வாதாரத்திற்கு வேறெதுவும் இல்லாமையால் இத்தகைய கொடிய செயல்கள் தனியார் சொத்துரிமைக் கருத்தாக்கத்தின் செல்வாக்கினால் தினமும் நடைபெறும் விடயமாகிவிட்டன.' என்று கூறுகிறார். இங்கு கந்தசுவாமி தனியார் சொத்துரிமைக் கருத்தாக்கம் பரவியமை, கொங்குப் பிரதேசத்தில் நிலப்பூசல்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதிகமானதற்குக் காரணம் என்று கூறுவது கவனிக்கத்தக்கது. எனினும் நாவலானது தந்தைவழிப் பங்காளிகளிடையே ஏற்படும் சொத்துப் பிரச்சினை குறித்துப் பேசவில்லை என்பதை நாம் கருத்தில் எடுக்கவேண்டும். இளம் விதவை ஒருத்தி இறந்த கணவனின் கூட்டுக்குடும்பச்சொத்தில் கணவனின் பங்கு தனக்கே உரியது என்று உரிமைப்போர் தொடுப்பதே நாகம்மாள் நாவலின் கருவாகும். பெண்களுக்குச் சொத்துரிமை என்பது விவாதத்திற்குரிய பொருளாகவே இருபதாம் நூற்றாண்டுத் தொடக்க காலங்களில் இருந்து வந்தது. பெண்களுக்குச் சொத்துரிமை அளிக்கும் சட்டமூலத்திற்கு எதிராக 1935ம் ஆண்டில் சித்தூர் நீதிமன்ற நீதிபதி P.C. தியாகராஜ ஐயர் 'கூட்டுக்குடும்பத்தின் அடிப்படைத் தத்துவமானது பெண்களுக்குச் சம உரிமைகள் அளிப்பதற்கு எதிரானது' (The very principle of joint family is against giving equal rights to females) என்று மதராஸ் அரசிற்கு எழுதியமை அக்காலத்தில் பெண் சொத்துரிமைக்கு இருந்த எதிர்ப்புக்கு ஓர் உதாரணமாகும். எனவே, அத்தகைய சூழலில் ஒரு விதவை தன் கணவனின் கூட்டுக் குடும்பச்சொத்தில் பங்கு கேட்பது அசாதாரணமான விடய மாகும். இத்தகையதொரு அசாதாரண விடயத்தை அடிப்படையாக வைத்து நாவலைப் புனைவதற்கு எத்தகைய புறக் காரணிகள் உந்துதலாக இருந்திருக்கலாம் என்பது நோக்குவதற்குரியவை.

நாகம்மாள் நாவல் காலனிய ஆட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட தனியார் சொத்துரிமைக் கொள்கை தொடர்பாக எதிர்மறையான கருத்தையே முன் வைக்கின்றது. தனியார் சொத்துரிமை எனும் கருத்தாக்கம் பழமையான நிலமானிய சமூகம் கேள்விப்படாததொன்று. இக்கருத்தாக்கமே இந்தியாவின் பாரம்பரிய தந்தைவழிக் கூட்டுக்குடும்ப அமைப்பின் சிதைவிற்கு வழி கோலியது. 1890களில் இந்தியாவில் தொடங்கிய தனியார் சொத்துரிமை தொடர்பான சட்ட விவாதங்கள் சமூகத்தின் மிகச் சிறிய அலகான குடும்பத்தினை மீள்வரையறை செய்தது. ஆங்கிலக் கல்வி, காலனிய உத்தியோகம் என்பன மூலம் புதிதாக உருவான, நகரை மையமாகக் கொண்டு வாழ்ந்த மத்தியதரவர்க்கம், கிராமங்களில் வழக்கிலிருந்த தந்தை வழி ஆண் சகோதரப்பங்காளிகளுடனான கூட்டுக் குடும்ப முறையை விடுத்து, கணவன், மனைவி, பிள்ளைகள் என்பவர்களை மட்டும் கொண்ட தனிக்குடும்ப அமைப்பு முறையைப் (nuclear family) பின்பற்றுவதில் ஆர்வம் காட்டியது. இதன் முதற்படியாக மத்தியதரவர்க்கத்தினர் தாம் ஆங்கிலக் கல்வி மூலம் உழைக்கும் வருமானம் கூட்டுக்குடும்ப வருமானமாக அல்லாது அவர்களின் தனிப்பட்ட வருமானமாகக் கருதப்பட காலனிய சட்டமூலம் வழி செய்யப்பட்டது. அத்துடன் 1930களில் பெண்ணின் சொத்துரிமை தொடர்பான கருத்துகளும் விவாதங்களைத் தோற்றுவித்தன. அக்காலத்திலிருந்த இந்திய பெண்ணுரிமைச் சங்கங்களான Women's Indian Association (ஸ்தாபிதம்:-1917), All India Women's Conference (ஸ்தாபிதம்:-1927) என்பவை இவற்றில் தீவிர ஈடுபாடு காட்டின. 1937ல் நிறைவேற்றப்பட்ட இந்துப் பெண் சொத்துரிமைச் சட்டம் என்பது கணவனின் தனிப்பட்ட சொத்தில் மட்டுமன்றி, அவனின் கூட்டுக்குடும்பச்சொத்திலும் பங்கு கோரும் உரிமையை விதவைப் பெண்களுக்கு அளித்தது என்ற வகையில் இது ஒரு முக்கியமான சட்டமாகும். (Mytheli Sreenivas, 'Conjugality and Capital: Gender, Families and property under colonial law in India' 2004).

தொடர்தல் 83ம் பக்கம்

# நாகம்மாளும்...

82ம் பக்கத் தொடர்ச்சி...

பெண் சொத்துரிமை குறித்த காரசாரமான விவாதங்கள் மதராஸ் பிரசிடென்சியில் 1930 களில் நிகழ்ந்தன. இப்பின்புலத்தில் எழுதப்பட்ட நாகம்மாள் நாவலில் நாகம்மாள் எனும் விதவை தனது கணவனின் குடும்பச் சொத்தில் பங்கு கோருவது சமுகத்தில் அதிர்வினை ஏற்படுத்தக் கூடிய விடயமாகும். ஆயினும், காலனிய சட்டங்கள், பெண் சொத்துரிமைப் போராட்டங்கள் என்பன குறித்த எத்தகையதொரு வெளிப்படையான குறிப்பையும் நாகம்மாள் நாவலில் காணமுடியாது. கணவனை இழந்த பின்னர், கணவனின் சகோதரன் சின்னப்பனுடனும், அவன் மனைவி இராமாயியுடனும் வாழும் ஒரு பெண் குழந்தைக்குத் தாயான நாகம்மாள், தன் கணவனுக்குரிய பங்கினைத் தான் பெற்றுக்கொள்ளத் திட்டமிடுகிறாள். நாகம்மாள் இயல்பாகவே மிகச் சுதந்திரமாக இயங்கக் கூடியவளாகவும், தன் நோக்கத்தை எவ்வகையிலேனும் நிறைவேற்றக்கூடிய நெஞ்சுரம் படைத்தவளாகவும், ஊரார் பழிக்குப் பெரிதும் அஞ்சாதவளாகவும் சித்திரிக்கப்படுகின்றாள். அவ்வகையில் நாகம்மாள் பாத்திரம் தமிழில் கற்பனை செய்யப்படும் வலுவான பெண்பாத்திரங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. 'கணவன் இறப்பதற்குப் பத்து வருஷத்திற்கு முன்பிருந்தே ஒரு ராணி போலவே நடந்து வந்திருக்கிறாள்' என்றும், 'பிறருக்கு அடங்கி நடக்கும் பணிவும், பயமும் என்னவென்றே அவள் அறியமாட்டாள்' என்றும் அவளைக் கதைசொல்லி, நாவலின் முதலாம் அத்தியாயத்தில் அறிமுகப்படுத்துகிறார். கணவன் இறந்த பின்னர் அவள் அவன் தம்பி குடும்பத்துடன் வாழ்ந்தாலும், விதவை என்ற காரணத்தால் தன் அதிகாரத்தை நாகம்மாள் ஒருபோதும் கைவிடவில்லை. அவளுடைய அரசே வீட்டில் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

எனினும் நாகம்மாள் தன் கணவனின் சொத்தைப் பாகப்பிரிவினை செய்யுமாறு கேட்பதற்கு வலுவான காரணத்தை நாவல் முன் வைக்கின்றது. சின்னப்பனின் மாமியார் குடும்பச்சொத்துகளை விற்று விட்டுத் தன்னூருக்கு வந்திருக்குமாறு மருமகனைக் கேட்பதும் அதற்குச் சின்னப்பன் இணங்குவதும் நாகம்மாளுக்குத் தெரியவரவே அவள் மனதில் பாகப்பிரினை எண்ணம் முளைவிடுகிறது. தனது மருமகன் சின்னப்பனின் கூட்டுக்குடும்பச் சொத்தினை விற்பதற்கு, அவனின் தயக்கமான இணக்கத்துடன் அவன் மாமியார் எடுக்கும் இரகசிய நடவடிக்கைகளை முறியடிக்குமுகமாகவே நாகம்மாள் ஊர் உலகம் அறிய கெட்டியப்பனுடன் நட்புப் பூண்டு அவன் மூலமாக கிராம மணியகாரரின் ஆதரவுடன் கூட்டுக் குடும்பச் சொத்தைப் பாகப்பிரிவினை செய்ய எண்ணுகிறாள். மணியகாரர் என்பவர் பிரிட்டிஷ் இந்தியாவில் கிராமட்டத்தில் மக்களுக்கும், தாசில்தார் போன்ற காலனிய அரசு அதிகாரிகளுக்கு மிடையே பாலமாக விளங்கியவர்.

நாகம்மாளை பெண் சொத்துரிமைச் சட்டங்கள் பற்றி அறிந்தவளாக நாவல் காட்டாதபோதும், அவளின் எண்ணங்கள் தனியார் சொத்துரிமை, பெண்களின் சொத்துரிமை, தனிமனித சுதந்திரம் எனும் கருத்தாக்கங்களிலிருந்தே ஊற்றெடுக்கின்றன. எடுத்துக்காட்டாக, '... கட்டறுத்துக் கொண்டு பத்து நாள் இருந்தாலும் அதுவே அடிமையாகப் பத்தாயிரம் வருஷம் இருப்பதை விட மேல் அல்லவா? எனக்கென்று தனியாக எல்லாம் இருக்க வேண்டும். நான் நினைத்தால் எதையும் செய்ய வேண்டும். என் மகளுக்கு நகை நகையாகப் பூட்டிப் பார்க்க வேண்டும்... யார் சம்பாதித்த சொத்து? என் புருஷன் சொத்து எனக்குச் சேராதா?' (பக்கம் 86-87) என்றும், 'இந்த மாதிரி கானலிலும், காற்றிலும் உழைத்து என்ன பயன்? ஏன் இப்படி அவர்களுடன் ஒட்டுக் குடித்தனமாக வாழ வேண்டும்? இந்தப் பரந்து கிடக்கும் காட்டிலும், தோட்டத்திலும் என் கணவனுக்குச் சேரவேண்டிய பாகம் பாதி இல்லையா?' (பக்கம் 23) என்றும் அவள் தனக்குள் யோசிப்பதைக் குறிப்பிடலாம்.

கூட்டுக்குடும்பச் சொத்தினைப் பாகப்பிரிவினை செய்வதில் நாகம்மாள் காட்டிய தீவிரமும், அவள் தன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நாடிய கட்சியினரின் முன் யோசனையற்ற செயற்பாடும் சின்னப்பனின் உயிரிழப்புக்குக் காரணமாகின்றன. இவ் விடத்தில் நாவலின் கதாநாயகியின் பெயராக நாகம்மாள் என்பதைத் தெரிவு செய்தமையின் பொருத்தப்பாட்டினை நோக்க வேண்டும். நாகம்மாளுக்கு ஒப்புமையாக நாவலில் பாம்புக்குட்டியே குறிப்பிடப்படுகின்றது. 'பாம்புக்குட்டி புரண்டு விளையாட வந்தாலும் கொத்துவதைத் தவிர வேறு எதற்காக இருக்க முடியும்?' என்று நாகம்மாளைக் குறித்த வாக்கியமொன்று நாவலின் பதினொராம் அத்தியாயத்தில் இடம்




பெறுகிறது (பக்கம் 41). இரு கட்சிகளாகப் பிளவுண்டு கிடக்கும் ஊரை ஒற்றுமைப் படுத்தும் பெண் தெய்வ வழிபாட்டுடன் தொடங்கும் நாவல் பெண்ணின் பாகப் பிரிவினைக் கோரிக்கையின் விளைவான உயிரிழப்புடன் முற்றுப்பெறுகிறது. இந்நாவலை நாட்டுப் பிரிவினை குறித்தும், தனியார் சொத்துரிமை, தனிக்குடும்பம் குறித்தும் சமூகத்திற்கு எச்சரிக்கை விடுக்கும் நாவலாகப் பார்க்கலாம்.

## நிலக்கிளி:

*பணம்மட்டும் நாடுலகின் சிறைவாசி யானோம்*
*ஈட்டலிலும் செலவிலும் எமதாற்றல்கள் வீணாகும்*
*இயற்கைநமதே ஆனாலதில் எதையும் கண்டிலோம்*
*எம் மனங்களைத் தொலைத்தோம்.*
*இது மோசமான வரம்!*

(இது Wordsworth எனும் கவிஞரின் 'The world is too much with us' எனும் கவிதையின் முதல் நான்கு வரிகளின் அண்ணளவான மொழிபெயர்ப்பு)

கைத்தொழில் மயமாக்கத்தினால் இங்கிலாந்தில் மக்கள் மனதில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டு மனம் வெதும்பிப் பாடிய ஆங்கிலக் கவிஞரின் மேற்கண்ட கவிதை வரிகளுக்கு உதாரண புனைவாக விளங்குவது நிலக்கிளி. இது இலங்கை சுதந்திரமடைந்து ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்கட்குப் பின்னர் வன்னிப்பிரதேச வாழ்க்கையை மையமாகக் கொண்டெழுந்த முதல் பிரதேச நாவல் ஆகும். நாகம்மாள் கொங்குப் பிரதேசத்தின் பெரும் பிரச்சினையான பாகப்பிரிவினையை மையமாகக் கொண்டதெனில், நிலக்கிளி இருண்ட காடுகள் அடர்ந்த வன்னிப் பிரதேசக் கிராமங்களில் நவீனமயவாக்கலினால் எழும் பிரச்சினைகளை விவரிப்பது. நாகம்மாள் நாவலில் கதாநாயகி பாம்புக்குட்டிக்கு ஒப்பிடப்படுகின்றாள் எனில், நிலக்கிளி நாவலின் கதாநாயகி பதஞ்சலிக்கு 'நிலக்கிளி' எனும் பறவை குறியீடாகின்றது. 'நிலத்தில் பொந்துகள் அமைத்து அவற்றினுள் கூடுகட்டி வாழும் நிலக்கிளிகள் மிகவும் அழகானவை! உற்சாகம் மிகுந்தவை! தண்ணிமுறிப்புப் பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படும் இந்த நிலக்கிளிகள் தாமிருக்கும் வளைகளைவிட்டு அதிக உயரத்துக்கெல்லாம் பறப்பதில்லை. இவை தம் பொந்துகளைவிட்டு அதிக தூரம் செல்வதில்லை. அண்மையிலே கிடைக்கும் பூச்சி புழுக்களையும், தானியங்களையும் உண்டு வாழும் இந்தப் பறவைகள் தொடர்ந்தாற்போல் ஓரிடத்தில் தரித்திருக்காமல் அடிக்கடி நிலத்தை ஒட்டியவாறே பறக்கும் காட்சி, அவற்றின் அழகையும், குதூகலத்தையும் மேலும் மிகைப்படுத்திக் காட்டும். பதஞ்சலியும் ஒரு நிலக்கிளியைப் போலவே தான் வாழ்ந்த சின்னஞ்சிறு குடிசையையும், கதிராமனையுமே தனது உலகமாகக் கொண்டிருந்தாள்' என்று நாவல் பதஞ்சலியின் புயலுக்கு முன்னதான இனிய மணவாழ்க்கை பற்றிக் கூறுகிறது. மேலும், நாகம்மாள் நாவலில் சிவியார்பாளையம் கிராமம் பாத்திரங்களின் செயற்பாட்டுத் தளமாக மட்டுமே இருக்கிறதாகையால் அது அக்கிராமத்தை வாழிடமாகக் கொண்ட மாந்தரின் கதை. சிவியார் பாளையத்தின் கதை அன்று. ஆனால் நிலக்கிளியோ தண்ணிமுறிப்புக் கிராமத்தில் காலத்துக் காலம் ஏற்படும் மாற்றங்கள் மட்டுமன்றி, அம்மாற்றங்கள் அக்கிராம வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்கள் குறித்தும் பேசுவதால், அது கிராமத்தைப் பற்றியதும், அக்கிராமத்தில் வாழும் மாந்தர் பற்றியதுமாகும், நாகம்மாள் நாவலில் களத்திற்கும் கதைக்கும் இடையில் அடிப்படைத் தொடர்புண்டு எனினும், களப்பின்னணி கதையைப் பாதித்தது என்று சொல்ல முடியாது. ஆனால், நிலக்கிளியில் களமும், களப்பின்னணியும், களவர்ணனைகளும் முக்கியமானவை. ஏனெனில் அவை கதையின் போக்கினை நிர்ணயிக்கின்றன. நாகம்மாளில் களம் வெறும் சமூக பகைப்புலமாக அமைந்திருக்க, நிலக்கிளியில் களத்துடன் பாத்திரங்கள் ஒட்டி உறவாடுகின்றன. எனவே, நிலக்கிளி நாவலைப் பதஞ்சலி என்ற பெண்ணின் கதையாகவும் வாசிக்கும் அதே சமயம் பதஞ்சலியை தண்ணிமுறிப்புக் கிராமத்தின் குறியீடாகக்கொண்டு, அக்கிராமத்தின் கதையாகவும் பார்க்கலாம். அந்த அளவிற்கு நாகம்மாளினும் பார்க்கக் களத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்ட நாவல் நிலக்கிளி.

ஒருபோதும் மீளச் செல்ல முடியாத பழைமையான கிராம வாழ்வினை உயிர்த்துடிப்புடன் சித்திரிக்கும் ஏக்கமிக்க நாவலாக (nostalgic novel) நிலக்கிளி விளங்குகிறது. 'தமிழ் வன்னிப்பிரதேசம் அதன் நில அமைப்புக் காரணமாகவும், தொடர்புக் குறைவுகள் காரணமாகவும் தனித்தனிக் கிராமங்களாக, குடியிருப்புத் தொகுதிகளாக இயங்கும் ஒரு நிலைமையிலிருந்தது' என்று சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். ஆனால் இந் நிலை ஏறத்தாழ 1960கள் முதல் மாற்றமுறத் தொடங்கியது. இக்கால கட்டத்தில் வன்னியில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள், விவசாயத்திட்டங்கள் காரணமாக வன்னிப்பகுதியின் சனத்தொகை அதிகரித்ததுடன், அதன் இயற்கையோடு இணைந்த பாரம்பரிய வாழ்க்கை முறையானது நவீன விவசாய முறைகள், புதிய விவசாய சாதனங்கள் என்பன அறிமுகம் செய்யப்பட்டமை, நவீன கல்வி முறையின் பரவலாக்கம் முதலியவற்றால் மாற்றமடையலாயிற்று. இந்த நவீனமயமாக்கல் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் சிக்கல்கள்ளே நிலக்கிளியின் கருவாகும்.

நிலக்கிளி நாவலில் பழைமையும், புதுமையும் இரு துருவங்களாகச் சித்திரிக்கப்படுகின்றன. வன்னியிலே காடுகளை அண்டிக் காணப்படும் பழைமையான கிராமங்களில் இயற்கையோடு இணைந்த வாழ்வு நடத்தும் மக்களின் பிரதிநிதியாகக் கதிராமனும், அக்கிராமங்களில் நவீனத்துவத்தை வரவேற்பவர்களின் பிரதிநிதியாக அவன் தந்தை கோணாமலையரும் விளங்குகின்றனர். காட்டு வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட கதிராமன் புதிய விவசாய முறைகள் குறித்து அலட்டிக்கொள்ளாதவன். அவனை நாவல் இவ்வாறு வர்ணிக்கும்: 'தண்ணிமுறிப்புக் காடுகளில் காணப்படும் மரைகள் நீலங்கலந்த கருநிறம் படைத்தவை. அழகிய கொம்புகளைத் தலையில் ஏந்தி, அவை கம்பீரமாக நடக்கையில் காண்பவர் நெஞ்சு ஒருதடவை நின்றுதான் பின் அடித்துக்கொள்ளும்! அத்தனை கம்பீரம்! கதிராமனுடைய நடையிலும் அதே கம்பீரம் காணப்பட்டது. சிறு வயதுமுதல் பாலுந் தேனும், காட்டு இறைச்சிகளும் ஊட்டி வளர்க்கப்பட்ட உடல், கடுமையான உழைப்பினால் உறுதிகொண்ட தசைகள், தகப்பன் வழிவந்த உயர்ந்த, நெடிய தோற்றம், கரியமேனி, சுருண்டகேசம் - இவையத் தனையும் ஒன்றாகத் திரண்டு கதிராமன் என்ற உருவில் நடமாடின! காடு அவனுக்குச் சொந்தம். அவன் காட்டுக்கே சொந்தம். காடோடு அவன் கொண்டிருந்த உறவு அவனுடைய தோற்றத்தில் நன்கு தெரிந்தது... அவன் பாடசாலையில் எழுதப் படிக்கக் கற்றதில்லை. ஆனால் காட்டில் காணப்படும் ஒவ்வொரு காலடிச் சுவடும், தடயங்களும் அவனுக்கு அட்சரங்கள், சொற்கள் போன்றவைதான். அவற்றைப் பார்த்ததுமே அவற்றின் பொருள் அவனுக்குப் புரிந்துவிடும்' என்று இயற்கை உபாசியாகக் கதிராமன் சித்திரிக்கப்படுகிறான்.

ஆனால், ஒரு காலத்தில் கதிராமனைப்

தொடர்தல் 84ம் பக்கம்

# நாகம்மாளும்...

83ம் பக்கத் தொடர்ச்சி...

போன்றிருந்த அவன் தந்தை கோணாமலையர் தண்ணிமுறிப்புக் கிராமத்தில் ஏற்பட்ட மாற்றங்களினாலும் வெளியார் சகவாசங்களினாலும் முற்றாக மாறிவிடுகின்றார். தண்ணிமுறிப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் கோணாமலையரை எவ்வாறு பாதித்தன என்பதை நாவல் பின்வருமாறு கூறும்:

'தண்ணிமுறிப்பு காடாகக் கிடந்த காலத்தில் அங்குவந்து முதலில் குடியேறிய கோணாமலையர் தனக்கும், தன் குடும்பத்துக்கும் வேண்டியவற்றைத் தாமே விளைவித்துக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்திருந்தார். அப்போதெல்லாம் அவருக்கு அதிகமாக ஆசைப்படத் தெரியவில்லை. ஆனால் கதிராமனும் மணியனும் வளர்ந்து ஆளாகி அவருடைய வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டபோது, அவர் வீட்டில் மாடுகன்று பெருகியது. வயல்வரப்பு விளைந்தது. தேவைக்கு அதிகமாக இச்செல்வங்கள் பெருகியிருந்த காலத்திற்றான் குளம் திருத்தப்பட்டு, அதன் கீழ் கிடந்த காணிகள் கழனிகளாக மாறின. அதன் காரணமாக அயற்கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் அங்கு தம் வயல்களுக்கு அடிக்கடி வந்து போகத் தொடங்கினர். ஒரு கணிசமான தொகையினர் ஆங்காங்கு தங்கள் வயல்களை அண்டிய இடங்களில் குடியேறவும் செய்தனர்.

கதிராமன், பாலியார் இவர்களை இந்த மாற்றங்கள் அதிகம் பாதிக்கவில்லை. ஆனால் மலையரோ காலக்கிரமத்தில் குறிப்பிடக்கூடிய அளவுக்கு மாறிப்போயிருந்தார். உத்தியோகம் நிமித்தமாக அங்கு வந்து குடியேறிய காடியரும், அடிக்கடி வந்துபோகும் மம்மதுக் காக்காவும் இந்த மாற்றத்திற்குப் பெரிதும் காரணமாயிருந்தார்கள். 'என்ன மலையர், நெடுக எருமையளை வைச்சுக்கொண்டு மாரடிக்கிறியள்? ஒரு உழவு மிசின் எடுத்தாலென்ன?' என்று அடிக்கடி காடியர் சொல்வதும், 'கதிராமனுக்கு உழவு மிசினோடை பொம்பிளை தரக் குமுளமுனைச் சிதம்பரியர் காத்திருக்கிறார்' என்று மம்ம துக்காக்கா கூறுவதையும் கேட்ட கோணாமலையர் மனதில், தன்னிடமும் ஒரு உழவு இயந்திரம் இருந்தால் இன்னும் அதிக அளவில் கமஞ்செய்யலாம், பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆசைகள் தளிர் விட்டிருந்தன.'

இவ்வாறு தண்ணிமுறிப்புக் கிராமம் நவீனமயமாக்கலினால் அபிவிருத்தி அடைந்து கொண்டு செல்லச் செல்ல மனிதப் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. தண்ணி-முறிப்பு காட்டுக்கிராமமாக இருந்த காலத்தில் அமைதியாகச்சென்று கொண்டிருந்த கோணாமலையரின் வாழ்க்கை, அது மெல்ல வளரும் குடியேற்றமானபோது வெளியார் தொடர்பு அவருக்குக் கிட்டுகிறது. அதனால் அவர் மனதில் சலனங்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. தண்ணிமுறிப்புக் குளக் கட்டு உயர்த்தப்பட்டுத் திருத்தி அமைக்கப்பட்டு, அதன் கீழ்க்கிடந்த காடுகள், அந்தக் காரியாதிகாரி பிரிவிலுள்ள கிராமத்தவர்கட்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பலர் குடியேறி எந்திரங்களுடன் விவசாயம் செய்யத் தொடங்கியபோது, கோணாமலையரின் மனதிலும் ஆசை பிறக்கின்றது. அது அவரைக் கடனில் தள்ளி இறுதியில் அவரை அழித்து விடுகிறது. சுந்தரலிங்கம் அக்கிராமத்தில் முதன்முதலில் பாடசாலை அமைப்பது கோணாமலையர் மகிழ்வது போன்று தண்ணிமுறிப்பு பெரிய இடமாக மாறுவதற்கான அத்திவாரமாகும். ஆனால் அது பதஞ்சலியின் வாழ்வில் குழப்பத்தைத் தோற்றுவிக்கின்றது.

மேலும், நாவலில் நவீனமயமாக்கலின் பிரதான கருவியான 'நவீன' கல்விமுறை கதிராமன், சுந்தரலிங்கம் பாத்திரப்பண்புகளுக்கூடாக விமர்சிக்கப்படுகின்றது. நவீன கல்வியின் அடிப்படையான எழுத்தறிவு (literacy) சிறிதுமில்லாத கதிராமன், இயற்கையினை மாத்திரம் அனுபவம் மூலமாக அறிந்து கொண்டவன். நேர்மையும், நிதானமும், உடையவன். கழிவிரக்கம் கொள்ளத்தக்க எச்செயலையும் செய்யும் தன்மை இலாதவன். அதே சமயம், தந்தையால் வேறு வேலைகள் எதுவும் செய்ய அனுமதிக்கப்படாது வெறும் எழுத்தறிவை மட்டும் பாடசாலையில் பெற்ற சுந்தரலிங்கம் மனதை அடக்கும் திறனில்லாதவனாகவும், கரவுள்ளவனாகவும் காட்டப்படுகிறான். காட்டுடன் நெருக்கம் பூண்ட கதிராமன் - பதஞ்சலி இணையரின் வாழ்க்கை முறையையும், கள்ளங்கபடமற்ற பதஞ்சலி தன்னுடன் பழகும் விதத்தையும் புரிந்து கொள்ளும் ஆற்றலை அவனுக்கு நவீன கல்வி அளிக்கவில்லை. இறுதியில் பதஞ்சலியுடன் தான் நடந்து கொண்ட முறை குறித்து வெட்கமுற்று கிராமத்தை விட்டகல்கிறான். சுருங்கச் சொல்லின், நிலக்கிளி நாவல் இயற்கையுடன், அழகு, அறிவு, எளிமை, கரவின்மை, அமைதி, நிதானம் எனும் நேர்மறைப் பண்புகளை இணைக்கின்றது. கதிராமன் போன்றோரின் வாழ்க்கை குறித்து நாவல் இவ்வாறு கூறும்: 'எளிமை நிறைந்த வாழ்விலே ஆசைகள் மிகக் குறைவு. மிகச் சிலவான அந்த ஆசைகளும் எளிமையாகவே இருப்பதனால் அவை இலகுவில் நிறைவேறி விடுகின்றன! அவை நிறைவேறிய ஆத்மதிருப்தியுடன் வாழும் எளிமையான மக்களின் மனங்களில் நிராசைகளோ, ஏமாற்றங்களோ நிரந்தரமாகத் தங்கியிருந்து சினம், பொறாமை, கவலை முதலியவற்றைப் பெரிய அளவிலே பிறப்பித்து அவர்களை அலைக்கழிப்பதில்லை.' இதற்கு மாறாக எந்திரமயமாக்கலும், நவீனகல்வியும் மக்கள் வாழ்விலே எதிர்மறையான எண்ணங்களின் தோற்றுவாயாக விளங்குகின்றன என்பதை நாவல் உணர்த்துகின்றது.

இயற்கையின் மடியில் மான்குட்டி போன்று துள்ளிக் குதித்து விளையாடும் பதஞ்சலியும் கோணாமலையர் போன்றே நவீனமயமாக்கலினால் பாதிக்கப்பட்டவள். ஆனால் அவரைப் போலன்றி, அவளுக்குத் தனக்கு எதனால் பாதிப்பு நேர்ந்தது என்பதற்கான காரணத்தை அறியும் புத்தித் திறனுடையவளாக இருக்கின்றாள். அதனால் சுந்தரலிங்கம் கொடுத்த புத்தகங்களை அவள் இறுதியில் தீயிட்டுக் கொளுத்துகிறாள். இவ்வாறு எந்திரமயமாக்கலுக்கும், நவீன கல்விக்கும் எதிரான நாவலின் நிலைப்பாடு காந்தியக் கொள்கைகளை நினைவுபடுத்துகின்றன. எந்திரமயமாக்கலை மனித இனத்தின் சாபக்கேடெனக் கருதியவர் காந்தி. அத்துடன், உடல் உழைப்பிற்குப் பிள்ளைகளைத் தயார் செய்யாத நவீன கல்வி முறையைத் தீவிரமாக எதிர்த்தவர். (காந்தியத்துக்கும் வன்னிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அகில இலங்கைக் காந்தி சேவாசங்கம் வன்னியில் தனது சேவைகளை 1949ல் ஆரம்பித்ததாகத் தெரிகிறது. பின்னர் 1973ல் தொடங்கிய காந்திய இயக்கமும் வன்னியையே மையமாக் கொண்டியங்கியது.)

நிறைவாக, தமிழில் எழுதப்பட்ட மிகச் சிறந்த நாவல்களுள் வைத்தெண்ணத்தக்க நாகம்மாள், நிலக்கிளி இரண்டுமே முக்கியமான அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அந்தந்தப் பிரதேச சமூகங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை மையமாகக் கொண்டு புனையப்பட்டவை. அப்பிரச்சினைகளில் தாம் வரித்துக் கொண்ட அறத்திற்கேற்ப ஒரு நிலைப்பாட்டை எடுப்பவை. அவ்வகையில் இவை விமர்சனத்திற்குள்ளாக்கப்பட வேண்டியவை. அதே சமயம் தாம் எழுந்த சூழல்களுடன் இணைத்துப் பார்க்கையில் வெவ்வேறுவிதமாக அர்த்தப்படுத்தக்கூடியவையாக இருப்பது இவற்றின் பலம். எங்கள் தெரிவுகளில் நாம் கவனமும் அக்கறையும் செலுத்துவதன் அவசியம் இவை புகட்டும் பாடம்.



maithilithayanithy@thaiveedu.com


# JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.

*"We provide reliable year around Tax and Accounting services."*

**Our Services included:**

* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency's Audit assistance

Starting from $24.90 Plus tax

Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com

# AJAX CREMATORIUM & VISITATION CENTRE

THE SYMBOL OF PEACE

உங்கள் உறவுகளின் இழப்பில்
உங்களுடன் இணைந்து உங்களுடன் ஒருவராக
உங்களுக்காக சேவைபுரிய



Easy Access to all Major Highways
250முதல் 500 பேர் வரை அமரக்கூடிய 5 மண்டபங்கள்
தாராளமான வாகன தரிப்பிடங்கள்
அனுபவம் மிக்க தமிழர்களின் சேவை
இறுதிச்சடங்கு முதல் அந்தியேட்டி வரையான ஒழுங்குகள்
இறுதிச் சடங்கை நேரடியாகப் பார்க்கும் வசதிகள்
இறுதிச்சடங்கு முதல் ஈமைக்கிரியை வரை ஒரே இடத்தில்
இந்து, கிறிஸ்தவ அந்திமச் சடங்குகளுக்கான ஒழுங்குகள்
Funeral Church arrangements with choir

Scarborough, Markham, Stouffville பகுதியில்
உள்ளோருக்கு வசதியாக 10-20 நிமிட தூரத்தில்
Ajax, Pickering, Whitby, Oshawa பகுதியில்
உள்ளோருக்கு வசதியாக சில நிமிட தூரத்தில்

**AJAX CREMATORIUM & VISITATION CENTRE**
384 Finley Avenue
Ajax, ON

**BRAMPTON CREMATORIUM & VISITATION CENTRE INC**
30 Bramwin Ct,
Brampton, ON L6T 5G2



**Tharma Stanislaus**.BCom
Funeral Counselor
**416-655-6164**

"Saying Goodbye is so hard
Let us make it easy for you"

# பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் 'யாழ்ப்பாண இராச்சியம் - ஒரு சுருக்க வரலாறு'

- க. சண்முகலிங்கம் -

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகிய இரு பல்கலைக்கழகங்களிலும் வரலாற்றுப் பேராசிரியராகக் கடமையாற்றியவரும், பல நூல்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதிப் பிரசுரித்த வருமான பேராசிரியர் சி. பத்மநாதன் 2011ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்கமான வரலாறு என்னும் அரிய நூலை எழுதி வெளியிட்டார்.

யாழ்ப்பாண வரலாற்றைப் பற்றி எழுதிய வரலாற்றாசிரியர்களை இருவகையினராகப் பிரித்து நோக்கலாம்.

- புலமைத்துவ வரலாற்றாசிரியர்கள் (Academic Historians).

பல்கலைக்கழகங்களில் வரலாற்றைச் சிறப்புப் பாடமாகக் கற்று அத்துறையில் முதுகலைமானி, தத்துவமானி பட்டங்களைப் பெற்றவர்கள் புலமைத்துவ வரலாற்றாசிரியர்களாவர்.

- ஆர்வமும், விருப்பும் காரணமாக சுயமாகவே கற்று, வரலாறு பற்றி எழுதிய வர்கள். முதலியார் செ. இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர், ஆசுகவி க. வேலுப்பிள்ளை போன்றவர்களும், தற்காலத்தில் வரலாற்று நூல்களை எழுதி வரும் பிறரும் இரண்டாம் வகையினர் ஆவர்.

'யாழ்ப்பாண இராச்சியம்' என்ற தலைப்பில் 1978 ஆம் ஆண்டில் ஆங்கில நூல் ஒன்றை எழுதி வெளியிட்டதன் மூலம் இத்துறை பற்றி எழுதிய முதலாவது புலமைத்துவ வரலாற்றாசிரியர் என்ற சிறப்பை இவர் பெற்றார். 2011ஆம் ஆண்டில் இவர் வெளியிட்டிருக்கும் 'யாழ்ப்பாண இராச்சியம் - ஒரு சுருக்க வரலாறு' என்னும் நூல் 1980 தொடக்கம் நூல் எழுதப்பட்ட காலம் வரையான 30 ஆண்டுகால வளர்ச்சிகளை தொகுத்துக்கூறும் வகையிலும் பேராசிரியர் அவர்களது புத்தொளி பாய்ச்சும் கருத்துக்களைக் கொண்டதுமாக அமைந்துள்ளது. இந்நூலின் முக்கியமான கருத்துக்களை சுட்டிக்காட்டுவதாக இவ்வறிமுகம் எழுதப்பட்டுள்ளது.

### மகாவம்ச ஆசிரியரின் பார்வைபடாத தூர வடக்கின் நிலப்பகுதி:

வடக்கு நிலப்பகுதி பற்றி மகாவம்சத்தில் அரிதாகவே குறிப்புகள் உள்ளன. அந்த நிலப்பகுதி அனுராதபுர இராச்சியத்தின் மையப்பகுதியில் இருந்தும் தொலைவில் இருந்த ஏனையவற்றில் இருந்தும் வேறுபட்டிருந்தமை நன்கு புலனாகிறது என பேராசிரியர் கூறுகிறார். இக்கருத்தை விளக்கும் வகையில் பேராசிரியர் கா. இந்திரபால கூறியிருப்பதை அவர் மேற்கோள் காட்டுகிறார்.

இலங்கையின் தூர வடக்கில் உள்ள நிலப்பகுதியில், யாழ்ப்பாண மாவட்டம் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சிகளைப் பற்றி இப்பொழுது கிடைக்கும் (இலக்கிய) மூலங்களில் இருந்து எதனையும் அறிய முடியவில்லை. பாளி மொழியில் அமைந்த மகாவம்சம் பிரதானமாக அனுராதபுர மன்னர்களின் வரலாற்றைப் பதிவு செய்வதால், அனுராதபுர மன்னனின் ஆட்சிப்புலத்திற்கு வெளியே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி சொற்பமான விடயங்களையே கொண்டுள்ளது. தங்கள் இராசதானிகளில் சில சமயங்களில் பிரச்சினைகள் ஏற்பட்ட பொழுது அனுராதபுர அரசர்கள் மலைநாட்டிற்கோ (மலய), தெற்கில் உள்ள இராச்சியத்திற்கோ ஓடினார்கள், அப்பிரதேசங்கள் பற்றி மகாவம்சத்திலே சில குறிப்புகள் உள்ளன. ஆனால், ஏழாம் நூற்றாண்டு வரை இலங்கையின் தூர வடக்குப் பகுதி பற்றி மகாவம்சத்திலே எதுவிதமான பெறுமதி வாய்ந்த குறிப்புகளும் காணப் படவில்லை (பக்: 7இல் தரப்பட்ட மேற்கோள்).

மகாவம்ச ஆசிரியரின் பார்வை படாத தூர வடக்கின் நிலப்பகுதியின் வரலாற்றை இலக்கிய மூலங்களில் இருந்து அல்லாமல்,




- தொல்லியல் சான்றுகள்,
- நாணயவியல் சான்றுகள்,
- கல்வெட்டுச் சான்றுகள்

ஆகிய சான்றுகளில் இருந்து கட்டமைக்க வேண்டிய தேவையை நூலாசிரியர் அழுத்திக் கூறுகிறார். கா. இந்திரபால, பொ. இரகுபதி, ப. புஷ்பரத்தினம், செ. கிருஷ்ணராஜா ஆகியோர் கருத்துக்களை மிக விரிவாக எடுத்துக்கூறுவதன் மூலம் தம் கருத்தை நிறுவுகிறார். மேற்குறித்த ஏனைய புலமையாளர்களின் முன்னோடியான கண்டுபிடிப்புக்களையும் அவர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகள் பற்றியும் வாசகர் மனதில் கவனக்குறிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

### பெருங்கற்காலக் குடியிருப்புகள்:

மகாவம்சத்தின் பார்வைக்கு அப்பால் இருந்த தூர வடக்கின் நிலப்பகுதி பற்றிய புதிய கண்டு பிடிப்புகள் கடந்த 50 ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றன. இக்கண்டுபிடிப்புகளோடு தொடர்புடைய மூன்று அகழாய்வுகள் பற்றி நூலின் இரண்டாவது அத்தியாயமான 'தொல்லியலும் பூர்வீக வரலாறும்' என்ற பகுதியில் எடுத்துக் கூறுகிறார் (பக்: 18-44). இம் மூன்று அகழாய்வுகளாவன:

- விமலா பெக்லியின் அகழாய்வுகள் - 1979.
- இரகுபதியின் பூர்வாங்க ஆய்வுகள் - 1987.
- மீண்டும் கந்தரோடையிலும், யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியிலும் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் - 2011.

விமலா பெக்லியின் ஆய்வுகள் பெருங்கற்காலக் குடியிருப்புகள் பற்றிய உறுதியான ஊகத்தை வெளியிட்டன. இரகுபதியின் தொல்லியல் ஆய்வு மூலம் பெருங்கற்காலக் குடியிருப்புகள் அடையாளம் காணப்பட்டன. இறுதியில் 2011இல் சிரான் தெரணியகலவின் ஆய்வு பெருங்கற்கால யாழ்ப்பாணம் பற்றிய விடயத்தை அங்கீகரிக்கப்பட்ட உண்மையாக வெளியுலகுக்குத் தெரிவித்தது. இது பற்றிப் பேராசிரியர் பத்மநாதன் நூலின் பக்: 20-24இல் தெளிவாக விளக்கியுள்ளார்.

### சிரான் தெரணியகலவின் கூற்று:

2011 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளை ஆதாரமாகக் கொண்டு சிரான் தெரணியகல பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்தார். 2011 யூன் 21ஆம் திகதி உதயன் பத்திரிகையில் இது பற்றிய செய்தி வெளியாயிற்று. அச்செய்திக் குறிப்பின் ஒரு பகுதியை பக்கம் 24இல் மேற்கோளாகப் பேராசிரியர் தந்துள்ளார். சிரான் தெரணியகல தெரிவித்த செய்தி வருமாறு:

'இந்த ஆதாரங்கள் மூலம் கந்தரோடையில் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. ஆய்வின்போது காலத்தைத் திட்டமாகக் கணிப்பிடக் கூடிய தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. அவற்றை மேலும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்கு உட்படுத்துவதன் மூலம் உறுதியான முடிவுகள் கிடைக்கும். அதற்காக அவற்றை அமெரிக்காவிலுள்ள சர்வதேசத் தொல்லியல் ஆய்வு கூடத்துக்கு அனுப்பியுள்ளோம். ஆறுமாத காலத்திற்குள் அம் முடிவுகள் கிடைக்கப்பெறும் (பக்: 24).

### வட இலங்கையில் தமிழ்மொழி:

மகாவம்சத்தின் பார்வைக்கு எட்டாத வடபகுதியில் தோன்றிய பெருங்கற் பண்பாட்டை பேராசிரியர் கா. இந்திரபால ஆதி இரும்புக்காலப் பண்பாடு (ஆ.இ.கா. பண்பாடு) என அழைக்கிறார். இப்பண்பாடு தென்னிந்தியவில் இருந்து இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்திற்குப் பரவியபோது, அப்பண்பாட்டோடு தமிழ் மொழியும் இலங்கையில் பரவியது. யாழ்ப்பாணக் குடாநாடு அதனை அடுத்த தீவுகள், பூநகரி ஆகிய இடங்களில் தமிழர் வாழ்ந்தனர் என்பதற்கான தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இற்றைக்குப் 14 ஆண்டுகளுக்கு முன்னரே கா. இந்திரபால அவர்கள் தமது 'இலங்கையில் தமிழர்' ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு (கி.மு. 300 - கி.பி. 1200) எனும் நூலில் தொல்லியல் ஆய்வின் பயனான முடிவுகளை பதிவு செய்கிறார். அந்நூலில் இருந்து மேற்கோள் ஒன்றை பேராசிரியர் சி. பத்மநாதன் மேற்கோளாகத் தந்துள்ளார். அம்மேற்கோள் வருமாறு:

'இலங்கைத் தீவை இரு பகுதிகளாகப் பிரித்து நமக்குக் கிடைக்கும் ஆதி இரும்புக் காலத்து தொல்லியல் சான்றுகளை ஆய்வு செய்தால் வடபாதிக்கும் தென்பாதிக்கும் இடையில் சில வேறுபாடுகளைக் காணலாம். தமிழ் நாட்டில் இருந்து பரவிய பண்பாட்டின் முக்கிய கூறுகளாகிய தாழி அடக்கங்கள், கரும் - செம் மட்பாண்டம், இரும்புக் கருவிகள், நெற்செய்கை மற்றும் நீர்ப்பாசன வசதி ஆகியவற்றின் தொல்லியல் சான்றுகள் வடபகுதியில் கூடுதலாகக் கிடைக்கின்றன.

தென்பகுதியில் ஒருசில இடங்களில் மட்டுமே இச்சான்றுகளைக் காண முடிகிறது. இப்பண்பாட்டுக் கூறுகள் இலங்கையில் வாழ்ந்த இடைக்கற்கால மக்கள் மத்தியில் பரவியபோது, புலம்பெயர்ந்து வந்தோருடன் இனக்கலப்பும் ஏற்பட்டது எனலாம்.' (பக். 28).

### யாழ்ப்பாணத்தின் குறுநிலத் தலைவர்கள்:

கந்தரோடைக்கு அடுத்த சிறப்புடையதான ஆனைக்கோட்டை என்னும் இடத்தில் 1980 ஆம் ஆண்டு சவஅடக்கத் தாழியும், பிராமி எழுத்துப் பொறித்த முத்திரையும் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட முத்திரையில் 'கோவேத' என்ற மூன்று எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. 'கோவேத' என்பது ஒரு குறுநிலத் தலைவனைக் குறித்ததாகக் கொள்ளலாம். பெருங்கற்காலப் பண்பாட்டின் வளர்ச்சியாக அரசின் தோற்றம் இடம்பெற்றதைக் காண முடிகிறது. இதுபற்றி கா. இந்திரபாலா அவர்கள் தெரிவிக்கும் கருத்தைப் பார்ப்

தொடர்தல் 87ம் பக்கம்

# பேராசிரியர்...

86ம் பக்கத் தொடர்ச்சி...

போம்.

'ஆதி இரும்புக்காலத் தலங்களில் அடுத்ததாக முக்கியத்துவம் பெற்றுள்ள இடம் ஆனைக்கோட்டை எனலாம். இவ்விடத்தில் 1980 இல் முக்கியமான சவ அடக்கமும் பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு அடக்கம் பெற்றுள்ளவர் ஒரு குறுநிலத் தலைவராக அதிகாரம் செலுத்தியதுடன் வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டி-ருந்தமைக்கு அவரது முத்திரை சான்றாக உள்ளது. இதன் அடிப்படையில், இவர் அடக்கம் செய்யப்பட்டுள்ள ஆனைக்-கோட்டைப்பகுதி ஒரு குறுநிலத் தலைவ-னின் அதிகார பீடமாக இருந்திருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. அல்லது கந்தரோடையை அதிகாரபீடமாகக் கொண்ட குறுநிலத்தலைவன் ஆனைக்கோட்டைப் பகுதியில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான துறையொன்றை தன் ஆணைக்கு உட்படுத்தியிருக்கலாம்.' (பக்கம். 31).

கா. இந்திரபாலவின் மேற்குறித்த கூற்று சி. பத்மநாதன் அவர்களின் நூலின் பக். 31இல் தரப்பட்டுள்ளது. மகாவம்சத்தின் பார்வைக்கு அப்பால் இருந்த வடபகுதியில் சுயத்துவமுடைய தமிழ் சிற்றரசுகள் தோன்றியிருந்தன என்பது ஆனைக்கோட்டை முத்திரையின் கண்டுபிடிப்பின் மூலம் உறுதியானது.

'... யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதனை அடுத்துள்ள தீவுப்பற்றிலும் ஆதி இரும்புக் காலத்துக்குரியதென்று கொள்ளப்படும் பெருங்கற் பண்பாட்டு மக்கள் ஏற்படுத்திய குடியிருப்புகள், காலப்போக்கிலே, சிற்றரசுகளாக உருவாகத் தொடங்கிவிட்டன என்பதற்கு ஆனைக்கோட்டையிற் கிடைத்துள்ள எழுத்துப் பொறித்த முத்திரையும் வேறு சின்னங்களும் தகுந்த ஆதாரங்களாகும்.' (பக்.35).

ஆனைக்கோட்டை முத்திரையினையும், வேறு பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளையும் ஆதாரமாகக் கொண்டு மேற்குறித்த கருத்தை சி. பத்மநாதன் அவர்கள் நூலின் பக். 35இல் குறிப்பிட்டுள்ளார்.

## பூநகரியின் தொல்பொருள் ஆய்வு:

பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் அவர்கள் பூநகரியின் பரமன்கிராய் என்ற இடத்தில் கண்டெடுத்த கலவோடு ஒன்றில் 'வேளான்' என்ற சொல் பொறிக்கப்பட்டிருப்பதை காணமுடிந்தது. இது பற்றி அவர் தெரிவிக்கும் கருத்தை மேற்கோளாக பக்.35-36இல் சி.பத்மநாதன் அவர்கள் தந்துள்ளார். பரமன்கிராயில் கிடைத்த கலவோட்டில் 'வேளான்' என்ற சொல் காணப்படுவதைக் கொண்டு தமிழகத்தின் பெருங்கற் பண்பாட்டுடன் தொடர்புடைய 'வேளிர்' ஆட்சியுடன் இலங்கையின் வடபகுதியின் வளர்ச்சிகளை தொடர்புபடுத்திக் காண முடியும் என ப. புஸ்பரட்ணம் கருத்து-ரைக்கிறார்.

'தமிழ் நாட்டிலுள்ள கொடுமணல் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய இரு மட்பாண்ட ஓடுகளில் வேள் என்ற சொல் பெறப்பட்டுள்ளது. இவை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் வேளிர் ஆட்சியின் தோற்றத்தைத் தொடர்புபடுத்தக் காரணமாக அமைகிறது. அண்மையில், இக்கட்டுரை ஆசிரியரால் வடஇலங்கையில் பூநகரி வட்டாரத்தில் உள்ள பரமன்கிராய் என்ற இடத்தில் மேற்கொண்ட கள ஆய்வின் போது பெருங்கற்கால மட்பாண்ட ஓடு ஒன்றில் வேள் என்ற சொல் பெறப்பட்டது. இம்மட்பாண்ட ஓடு உடைந்த நிலையில் காணப்படுவதால் இதை ஒரு முழுமையான சாசனமாகக் கொள்ள முடியவில்லை. ஆனால் இதில் எஞ்சியுள்ள எழுத்துக்களைக் கொண்டு இச்சாசனத்தை வேள் அல்லது வேளா என வாசிக்க முடிகிறது. தமிழ்நாட்டின் முதன்மைச் சாசன-வியலாளர்களில் ஒருவரான ஐராவதம் மகாதேவன் இதை வேளான் என வாசித்து, சங்ககாலத்தை ஒத்த வேளிர் அல்லது வேளார் கி.மு. 3-2ஆம் நூற்றாண்டில் பூநகரியில் வாழ்ந்ததை இச்சாசனம் உறுதிப்படுத்துவதாகக் கூறியுள்ளார்.' (பக். 36).

பக்கம் 36இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ள ப. புஸ்பரட்ணம் அவர்களின் கூற்று வட-பகுதியில் பல இடங்களில் குறுநிலத் தலைவர்கள் அரச அதிகாரம் செலுத்தியவர்களாக இருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

## நாகர்கள்:

நாகநாடு கற்பனையில் இருந்து எழுந்த சிந்தனையன்று என்று குறிப்பிடும் பத்ம-நாதன், பௌத்த சமயம் பரவுவதற்கு முன்னர் இலங்கையில் கி.மு. 250ற்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய பெருங்கற் காலப் பண்பாட்டிற்கும் நாகர்களுக்கும் தொடர்பு உள்ளது எனக் கூறுகிறார். 'இலங்கையில் முற்காலத்தில் பல இடங்களில் பரவி வாழ்ந்த நாகர், பெருங்கற் பண்பாட்டுடன் தம்மை இணைத்துக் கொண்டனர். நாகர்களின் குடியிருப்புகள் காலப்போக்கில் சிற்றரசுகளாக வளர்ச்சி பெற்றன. அவை நாகநாடு என்னும் அரசில் காலப்போக்கில் இணைந்து கொண்டன. முதன்மை நகரமாக வளர்ச்சிபெற்ற கந்த-ரோடை நாகநாட்டின் தலைநகரம் என்ற நிலையினை அடைந்தது' (பக். 83) என பத்மநாதன் கூறுகிறார். 'நாகநாடும் அதன் சமய நெறிகளும்' என்ற தலைப்பிலான 3ஆம் அத்தியாயமும் 'யாழ்ப்பாணத்தில் அரச பாரம்பரியம்' என்ற தலைப்புடைய 4ஆம் அத்தியாயமும் பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக வளர்ச்சி-யுற்ற சிற்றரசுகள் நாகநாடு என்ற பெயரிலான அரசாக நிலை பெற்றன என்பதை விளக்குவனவாக உள்ளன.

## முடிவுரை:

பொலநறுவை நகரைத் தலைமையிடமாகக் கொண்ட மத்திய அரசின் ஆட்சிக்கு உட்பட்ட எல்லை நிலப்பகுதியாக யாழ்ப்-பாணம் அமைந்திருந்தது. கலிங்க மாகனின் படையெடுப்பால் அழிவுற்றுச் சிதறுண்ட இம்மைய அரசில் இருந்து விலகிய ஆட்சிமுறை பாண்டியர் மேலாதிக்கம் பரவிய காலத்தில் ஆரியச்சக்கரவர்த்திக-ளால் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட்டது என்று யாழ்ப்பாணத்தின் வரலாற்றை கூறும் மரபு இன்றுவரை நிலைபெற்றுள்ளது. இதனை முற்றாக மறுத்து யாழ்ப்பாணத்திற்கும் அதனைச் சார்ந்த வன்னிப்பெரு நிலப் பகுதிக்கும் தனித்துவமான நீண்ட வரலாறு உள்ளதென்பதை 'யாழ்ப்பாண இராச்சியம் - ஒரு சுருக்க வரலாறு' எனும் இந்த நூல் எடுத்துக் கூறுகிறது. இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன் கருதுகோள்களாகவும், ஊகங்களாகவும் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பலவற்றை அண்மைக் காலத்து தொல்லியல், நாணயவியல் கண்டுபிடிப்புகள் ஊடாகப் பெற்ற சான்-றாதாரங்களைக் கொண்டு இந்நூல் வாயிலாக நூலாசிரியர் நிறுவுகிறார். இந்நூல் வடஇலங்கையின் வரலாறு பற்றிய முக்கியம் வாய்ந்த நூலாக விளங்குகிறது.

குமரன் புத்தக இல்லம் கொழும்பு - சென்னை வெளியிட்ட இந்நூலின் (2011) விலை இலங்கை ரூபா 490ஆகும். பக்கங்கள் 202. இந்நூலில் ஆறு கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.



shanmugalingam@thaiveedu.com




Mega Financial Group
WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION
SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET
OUR PRODUCTS AND SERVICES
Life Insurance products
Critical Illness Insurance
Disability Insurance
Dental & Drug Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Mortgage Insurance
RRSP's Investments
RESP-Education Saving Plan
Final Expense Products
(Through Funeral Homes)
INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
La Capitale
Assumption Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial
www.megafinancial.ca
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca
Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

# வென்றிலன் என்ற போதும்

- மு. புஷ்பராஜன் -



ஓர் உறுதிமொழியை தோல்வியாகுமென அறிந்தும், அதைத் திரும்பத் திரும்ப எடுப்பவருக்கு வெகுமதி உண்டென்றால் அது நிச்சயமாக எனக்குத்தான். 'இருக்கும் புத்தகங்கள் போதும், புதிதாக இனியெதுவும் வாங்குவதில்லை' என்ற மூளையின் தீர்மான வலுவெல்லையை மனம் எப்படியோ மீறிவிடுகிறது. இந்தகைய உறுதிக்கும் - மீறலுக்குமான எண்ணிக்கைகூட மறந்து போய்விட்டது. ஒவ்வொரு தடவையும் மீள் உறுதி நிச்சயமானதே என்று கூறிக்கொண்டாலும், தோல்விதான் நிச்சயமாகிவிடுது. ஆயினும், வீழ்வேன் என்று நினைத்தாயோ என மீண்டும் எழுத்தாலும் அடைந்த தோல்விக்காக 'என் பாவமே! என் பாவமே! என் பெரும் பாவமே!!' என நெஞ்சில் குத்திக் கொள்கிறேன். மூன்று பெரிய ஷெல்பினுள் அடங்க மறுத்துத் திமிறிய புத்தகங்கள், மேசையிலும் ரீப்போவிலும் இன்னும் கிடைத்த சிறு சிறு வெளிகொண்ட இடங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன. இதில் வாசிக்காத புத்தகங்களின் எண்ணிக்கைதான் அதிகம். சூழ்நிலை கருதி, புதிய புத்தகங்கள் வாங்குவதைத் தவிர்த்தலும் வாசிக்காத புத்தகங்களை வாசித்து முடித்தலும் என்ற முடிவு தீர்மானமானது. அதுவே தொடர் தோல்வியாகிக்கொண்டிருக்கிறது.

காலை நடைப் பயிற்சிக்காக நாளொன்றிற்கு ஒரு திசையென மூன்று திசைகளில் நடப்பது வழக்கம். புத்தகக் கடைகள் அத்திசையில் இருப்பதுதான் காரணம். நேர்த்திசையில் ஐந்தும். வலது திசையில் இரண்டும். இடது திசையில் ஐந்தும். பெரும்பாலும் இடது திசையைத் தேர்ந்து கொள்வதுதான் வழக்கம். அத்திசையில் தான் 'சொப்பிங் சென்ரரும்' இருக்கிறது. தேவையான உணவையும் சமையல் பொருட்களையும் வாங்கியும் வரலாம். 'ஷூட்கிறீன்' வரை நடந்து, திரும்பி வரும் போது புத்தகங்களுடன் வீடு வருதல் மகிழ்சியை அளிக்கும். வீட்டில் 'விடுதலை அறியா விருப்போடு' ஏற்கனவே வாங்கிய புத்தகங்களுக்கு இடையில் புதிய வரவை எங்கு நெருக்கி வைப்பது என்பது தொடர் போராட்டமாகவே இருக்கிறது. இதுவும் மேற்கொண்ட தீர்மானத்திற்கான உப விதி தான்.

தீர்மானத்தின் பின்னர், புத்தகக் கடைகளைக் தாண்டிச் செல்கையில் கடைக் கண்களால் பார்த்துக்கொள்கிறேன். கண்ணாடிகளின்பின் கட்சிப்படுத்தப்பட்டிருக்கும் புத்தகங்கள் 'இரையை நெருங்கி, வாலை அசைக்கும் மீனாக' என்னை மாற்றிவிடுகிறது. சிலுக்கு சுமிதாவின் மாய விழிகள் புத்தக அட்டைகள்மீது அசைந்து கொண்டிருக்கும். என் மனம் என்ன கல்லா உருகாமல் போவதற்கு! 'சரி சும்மா தட்டிப் பார்த்துவிட்டு வரலாம்' சுய தேற்றலுடன் கடையினுள் நுழைகையில் சிரிப்பொலி கேட்கும். ஒலி உள்ளிருந்தா அன்றி வெளியிருந்தா? புத்தகங்களின் பக்கங்களைத் தட்டிக்கொள்கையில், பின் அட்டையின் குறிப்புக்களில் மேய்கையில், மனதுள் சுருண்டு கிடந்த ஒன்று சுருள் நீக்கி விரியும். எழுதவிருக்கும் கட்டுரைக்கு இந்நூல் துணையாகும். ஆழமான பார்வையை அளிக்கும் என்ற கருத்துடன் புத்தகம் எனதாகிவிடும். இப்படி வாங்கப்பட்ட புத்தகங்கள் எந்தக் கட்டுரைக்கும் பயன்படாமல் போனதும் உண்டு.

தேவைப்படும் புத்தகம் புத்தக நெரிசலிடை உடனே கைவசம் ஆவதில்லை. தேடி அலுத்து 'Fuck off' எனத் திட்டிக் கொள்ள நேர்கிறது. இயலாமை, கோபம் ஆகியவற்றின் எல்லைகளுக்கு இடையில் அல்லாட நேர்கிறது. ஞாபகசக்தியும் தேய்ந்துகொண்டு போகிறதா? வாங்கிய புத்தகங்களை திரும்பவும் வாங்க நேர்ந்து விடுகிறது. சல்மான் ருஸ்ரியையும் அனிதா தேசாயையும் கனீவ் குருசியையும் திட்டித் தான் ஆறுதலடைய முடிகிறது. காவ்காவின் 'அமெரிக்கா' நாவல் அதரப் பழசானவை. நல்ல பதிப்புபை மீண்டும் வாங்க நேர்ந்தது. ரொல்ஸ்டாயின் 'அன்னா கரினினா'வை ஒரு அரிய பிரதிக்காக மீண்டும் வாங்க நேர்ந்தது. அப் பிரதியில் அந்நாவல் பற்றி ரொஸ்ரோவெஸ்கியுடன் இன்னும் பலரது அபிப்பிராயங்களும் விமர்சனங்களும் இணைப்பாக உள்ளன. மேலதிக பிரதிகளால் நான் பழைய புத்தகக் கடைகளுக்கான நன்கொடையாளர் ஆகி விடவேண்டியதுதான். மேலதிக பிரதியை விரும்பி வாங்கியதும் உண்டு. காமூவின் 'அன்னியன், ரொஸ்ரொவெஸ்கியின் 'குற்றமும் தண்டனையும்' அவ்வகையின. விரிவாக அவைகளில் உள்ள சிறந்த முன்னுரைகளே காரணம். இவ்வகை நிகழ்வுகளின்போது மின்னல் ஒன்று பிடரியில் மின்னி மறைவதுண்டு. நான் ஒரு 'அடிக்ராக' இருப்பபேனோ? உடனே அழுக்கடைந்த உடையுடனும், கலைந்து சிதறிய தலையுடனும் ஒழுங்கற்ற தாடி, மீசையுடன் 'பியர்' கான்களை ஏந்தியபடி பஸ் நிலையங்களில் பூங்காக்களில் அலை பவர்கள் கண் முன்னால் தோன்றிப் பயமுறுத்தினர்.

புத்தக ஆர்வத்தின் ஆரம்பப் புள்ளி எது? 'உள்மன யாத்திரை', ஊரின் புனித யாகப்பர் ஆலயத்தின் 'திரு இருதய வாசிகசாலையில்' தரித்து நின்றது. அந்த வாசிகசாலை சிறுவர்களுக்கும் இளைஞர் களுக்கும் பொருத்தமானவை. அதில் அங்கத்தவனாகி புத்தகங்களை இரவல் எடுத்துச் செல்வதற்குத் தகுதியானேன். அதற்குப் பொறுப்பானவர் அரசியல் கட்சித் தலைவர்கள் போல் என்றும் மாறாமல் நீண்ட காலம் இருந்தார். வாசிப்பை ஊக்கப் படுத்துவார். சில புத்தகங்களைச் சிபார்சும் செய்வார். அவை பெரும்பாலும் மதம் சார்ந்தவைகளாகவே இருக்கும். எனது ஆவல் சித்திரக் கதைப் புத்தகங்கள் மீதுதான் படர்ந்திருந்தன. புத்தகங்களை எடுத்துச் செல்கையிலும் திருப்பிக் கொடுக்க நேர்கையிலும், கோவில் அருகில் உள்ள உறவுக்கார அம்மா ஒருவர் அழைத்தார். அன்போடு எனது தலையைத் தடவியபடி 'தம்பி நெடுகப் புத்தகமும் கையுமாய் திரியிறாய். கவனமாகப் படிக்கவேணும். தெரியும்தானே உங்கட அம்மா சரியா கஸ்ரப்பட்டவ, நீதான் படிச்சு முன்னேறி அம்மாவ காப்பாத்த வேணும்' என்றார். நான் மண்டையைச் சொறிந்தபடி 'பெருவிரல் பெருமாள்' சித்திரக் கதைப் புத்தகத்துக்கும் அந்தோனிப்பிள்ளை மாஸ்டர் பிரம்புக்கும் என்ன சம்பந்தம் என யோசித்தேன். ஆயினும் பொறுப்பு உள்ளவன் போல் தலையை ஆட்டினேன்.

'குருநகர் சனசமூக நிலையம்' என்ற இன்னொரு வாசிகசாலையும் உண்டு. இதில் தினசரிப் பத்திரிகைகள், தமிழகத்தின் அனேக மாத, வார பத்திரிகைகள், இதழ்கள் என இருக்கும். பெரும்பான்மையானவை திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிகைகளே. என் மனமோ அதிகமாக விரும்பியவை ஆனந்த விகடனில் வெளிவந்த 'துப்பறியும் சாம்பு,' கல்கியில் வெளிவந்த 'வீர விஜயன்' சித்திரத் தொடர்கதைகள் தான். அதிலும் நீண்டு நெடிதுயர்ந்த வீர விஜயனின் சாகசங்கள் பிரமிப்பூட்டுபவை. ஒரு இதழில், கதையில் விஜயன் ஆற்றில் விழுந்தவுடன் தொடரும் என இருந்தது. விஜயன் என்ன ஆனான்? அந்த வாரம் முழுவதும் மனம் அலைந்துகொண்டிருந்தது. அடுத்த இதழில் அவன் ஆற்றில் இருந்து உயரம் குறைந்து, இறுகித் திரண்ட தசைகளுடன் எழுந்தபோது ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. அவனைப் போலவே பல சாகசங்கள் புரியவேண்டும் என நினைத்ததுண்டு. ஆனால், மெலிந்த என் உடலை நோய் தனதாக்கிக் கொண்டதனால் அது முடியாமலே போய்விட்டது. நோய் தனதாக்கிக் கொள்ளாவிட்டாலும் முடியாமல்தான் போயிருக்கும். என் இயல்பு அப்படி. அம்புலிமாமாவின் வர்ணப் படங்களைப் படிக்காமலே கண்ணில் ஒற்றிக் கொள்ளவேண்டும் போலிருக்கும். 'தினத்தந்தி'இன் 'சிந்துபாத்தின் பயணங்கள்' தொடர்கதையில் இடையில் நுழைந்தேன். வெகு காலத்தின் பினனர் நானாகவே விலகிக்கொண்டேன். இப்போதும் சிந்துபாத் பயணத்தில்தான் இருக்கிறானா? சில வேளை இருப்பான்.

அடுத்த படிநிலை வாசிப்பில் மர்மங்கள் சூழ்ந்த ஒரு உலகு என்னை அக்கிரமித்துக் கொண்டது. கோரக் கொலைகளும் இருளில் எழும் காலடி ஓசைகளும் நாய்களின் குரைப்புக்களும் 'சதக் சதக்' குத்துகளும் முள்ளந்தண்டு சில்லிடும் அலறல்களும் நிறைந்திருந்தன. துப்பறிவாளனிடமிருந்து கொலைகாரர்கள் எவ்விதத்திலும் தப்பவே முடியாது. மர்மங்கள் விலகும் விதம் திகைப்பையே அளித்தபடி இருக்கும். மர்ம நாவல்களின் உலகை என்னுடன்

தொடர்தல் 90ம் பக்கம்

# வென்றிலன் என்ற...

89ம் பக்கத் தொடர்ச்சி...

பகிர்ந்துகொள்ள பாடசாலை நண்பர்களும் சில அக்காக்களும் இருந்தனர். எனது ஆவலாலும் அவர்களது கருணையாலும் நானடைந்த சம்பாத்தியம், வீட்டில் தனியே இருக்கப் பயந்ததுதான். கடற்கரைக் காற்றிற்கு தென்னோலைகள் எழுப்பும் சத்தத்துக்கும் அஞ்சினேன். என்னைக் கொலைசெய்ய யார் யாரோ இருளில் பதுங்கி இருக்கிறார்கள் என்ற பிரமை ஆட்டுவித்தது. இரவில் அம்மா சொல்லும் சிறிய வேலைகளையும் செய்ய மறுத்தேன். தவிர்க்க முடியாவிட்டால் தம்பியையும் துணைக்கு அழைத்தேன். அவன் சமயங் களில் ஏமாற்றிவிடுவான். எவ்வளவே புத்தகங்கள் வாசித்தபோதும் 'பேய் வீடு,' 'சங்கர்லால் துப்பறிகிறார்' ஆகிய தலைப் புக்களைத்தான் அந்த இருண்ட குகைகளி லிருந்து மீட்க முடிந்திருக்கிறது.

பாடசாலையில் எட்டாம் வகுப்பில் நுழை யும் போது அங்கு ஓரிருவர் பழைய மாணவர்களாக இருந்தார்கள். வயதிலும் தோற்றத்திலும் பெரியவர்களாயிருந்தனர். கடைசி மேசைகளை தமதாக்கிக்கொண் டார்கள். மாறன் என்பவர் இவர்களில் முக்கியமானவர். இந்தப் பெயர் அவருடைய தாய் மாமனுடையது. ஊரில் இவ்வாறு சிலரை உறவினர் பெயர் சொல்லி அழைப் பதுண்டு. நானும் எனது தம்பியும் எங்கள் அப்புவின் (தாத்தா) பெயரால் அழைக் கப்படுவதுண்டு. இந்த மாறன்தான் எனக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கதைக ளைக் கூறியவர். அண்ணாத்துரை, நெடுஞ் செழியன், மு. கருணாநிதி, சி.பி. சிற்றரசு போன்ற பெயர்கள் விழுந்துகொண்டே இருக்கும். அண்ணாத்துரையின் 'தீ பர வட்டும்', பாரதிதாசனின் 'பாண்டியன் பரிசு' போன்ற புத்தகங்களை இரவல் தந்தார். அண்ணாத்துரையின் மொழி ஒருவித கிறக்கத்தையே தந்தது. 'சட்டம் என்பது ஒரு இருட்டறை அங்கு வக்கீலின் விவாதம் ஒரு விளக்கு' போன்ற உரைகள் இங்கு தான் அறிமுகமாயின. மு. கருணாநிதி யின் 'பராசக்தி' திரைப்பட வசனங்கள் மனப்பாடமாகவே இருந்தது. மாறனே மு. வரதராசன் நாவல்களை அறிமுகப்படுத் தினார். மு. வரதராசனின் உலகில் அதி கமும் தூய நெறிகொண்டவர்களே நடமா டினார்கள். 'நெஞ்சில் ஒரு முள்', 'கள்ளோ காவியமோ' நாவல்களின் கிறக்கம் நெடு நாட்கள் என்னில் வாசமாக இருந்தது. இவரே தமிழில் மிகச் சிறந்த நாவலாசிரி யர் எனக் கருதியிருந்தேன். இவரது பெரும்பாலான நாவல்களை மாத்திரமல்ல, அவரது திருக்குறளுக்கான உரை, பண் டைய இலக்கிய நூல்களின் விளக்கவுரை நூல்கள் எனப் பலவற்றையும் வாசித்தி ருந்தேன்.

அடுத்த நிலை, வண்ண வண்ணக் கனவு களாலும் கற்பனைகளாலும் நிறைவேற முடியாத இலட்சியங்களாலும் மனம் பூத்திருந்தது. தேவதைகள் சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தனர். நா. பார்த்தசாரதி, அகிலன், சாண்டில்யன், ஜெகசிற்பியன், கல்கி, காண்டேகர் எனப் பலரில் பிணைக் கப்பட்டிருந்தேன். நா. பார்த்தசாரதியின் 'குறிஞ்சிமலர்,' 'பொன்விலங்கு' நாவல்கள் இலட்சியங்களாலும் காதலாலும் கரைத்து எழுதப்பட்டவை. குறிஞ்சிமலரை பல தடவைகள் வாசித்து உருகியிருக்கிறேன். அரவிந்தன் பாத்திரம் நான் சென்றடைய வேண்டிய இலக்காக அப்போது உருக் கொண்டது. அரவிந்தன் பூரணியை முதன் முதலாக கண்ட கணத்தை கவிதையாக குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருப்பார். அதன் முதலிரு அடிகள் இவ்வாறு அமை யும். 'நிலவைப் பிடித்து சிறு கறைகள் திருத்திக் குறு முறுவல் பதித்த முகம்' அரவிந்தனான கற்பிதத்தில் எனக்கான பூரணியை மனம் தேடி அலைந்தது. இரண்டும் சாத்தியமாகவில்லை. பூரணி- யைப் போலவே பொன் விலங்கின் நாட்டியத் தேவதை மோகினியும் மனதை



**ஒவ்வொரு புத்தகங்களும் ஒவ்வொரு புதிய உலகின் வாசல்களைத் திறந்துகொண்டே இருக்கின்றன. அதன் பயணிப்பில் இயற்கைக்கும் மனிதருக்குமான, மனிதருக்கும் மனிதருக்குமான, மனிதருக்கும் அவர்தம் உள்மனத் துக்குமான போராட்டங்கள், உணர்வுகள் நம்முன்னால் விரிந்துகோண்டே இருக்கின்றன.**

உருக்கினாள். பூரணியை அண்ணன் மகளுக்கு பெயராக தெரிவுசெய்தேன். இக்காலங்களில் மு. வரதராசனுக்காக நான் உருவாக்கிய சிம்மாசனத்தில் நா. பார்த்தசாரதி போட்டியின்றி அமர்ந்து கொண்டார். இந்திய சுதந்திர போராட்ட நாவல்களை வாசித்தபோது, எம் மண்ணில் ஒரு சுதந்திரப் போராட்டம் நடக்கவில் லையே என்று கவலை வாட்டியதுண்டு. ஆனால், ஆயுதம் தாங்கிய ஒரு விடுத லைப் போராட்டம் எம் காலடி முன்னால் நெருப்பாறாய் ஓடியபோது வெறும் பார் வையாளனாகவே இருந்துவிட்டேன்.

அகிலனது 'வேங்கையின் மைந்தன்', 'பாவை விளக்கு', 'நெஞ்சின் அலைகள்' அப் போதைய மனதைக் கொள்ளை கொண்ட புத்தகங்கள். வேங்கையின் மைந்தன் நாவல் சோழர் கால வீர வரலாற்றைக் கொண்டது. முன் அட்டையில் இராஜேந் திர சோழன் குதிரையில் பாயும் ஓவியம் இன்றும் கண்ணில் தெரிகிறது. 'பாவை விளக்கின்' தணிகாசலம் நான்கு பெண்க ளின் காதலுக்கு உள்ளாகின்றான். அந்த வயதில் அது ஒரு போதையாகவே இருந் தது. சாண்டில்யனின் 'கடல் புறா', கல்கி யின் 'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்', 'பொன்னியின் செல்வன்' (ஐந்து பாகம்) இவையெல்லாம் தமிழனின் வீர வரலாறை நெஞ்சில் முரசொலித்தன. சங்க காலப் பொற்தேரை இழுத்து முற்றத்தில் கொண்டுவர விரும்பினேன். மாமல்லச் சக்கரவர்த்தி ஒன்பது வருடங்கள் தாமத மாக சிவகாமியை சிறைமீட்டது எனக்கு துக்கமாக இருந்தது. ஏன் இவ்வளவு தாம தம் என்பதுதான் எனக்கான வருத்தம். சாண்டிலியனின் 'கடற்புறா' வாசிக்கையில் மறுநாள் பரீட்சை இருந்தது. இரவு வெகு நேரமாக வாசித்துக் கொண்டிருந்தேன். பெரியம்மா பரீட்சைக்குப் படிக்கிறான் என நினைத்து தேனீர் தயாரித்துத் தந்தார். அப்போது எனக்கு உள்ளூர சிரிப்பாக இருந்தது. இப்போது நெஞ்சு வலிக்கிறது.

மேகங்களின் மீது சிறகடித்ததையும், வெண் புரவியின்மீது அமர்ந்து பாய்ந்துகொண்டு திரிந்த கனவுகளின் பிறடியில் பிடித்து இழுத்து, புழுதி மணலில் அடித்து வீழ்த் தியது த. ஜெயகாந்தன்தான். ஆனந்த விடகனில் வெளிவந்த அவரது சிறுகதைக ளும் குறிப்பாக 'உன்னைப்போல் ஒருவன்' நாவலும் வேறொரு பாதையால் அழைத் துச் சென்றது. அந்தத் தெருக்களில் தூய் ஜிப்பா அணிந்தவர்கள், முகிலைப் பிடித்து கறைகள் திருத்த முயன்றவர்கள் எவரும் இல்லை. அச்சகத்தில் அச்சுக் கோர்த்தபடி மடிந்து போன தொழிலா ளியும் நடு றோட்டில் தன் ஆடைகளை அவிழ்து எறியும் மனநிலை பிறந்தவர்க ளும் குருவி ஜோசியக்காரனும் தெரு வோரத்தில் படுத்துறங்கும் கூலித் தொழி லாளர்களுமாய் ஒட்டிய வயிற்றுடன் நட மாடித் திரிந்தார்கள். திருமணம் செய்- வார்கள், முதலிரவுக்கு அவர்களுக்கு இடமிருப்பதில்லை. இவ்வாறு முதலிர- வுக்காக பூட்டப்பட்டிருந்த பூங்காவின் செடிகளின் மறைவில் சென்றவர்கள் பொலிசாரால் கைது செய்யப்படுகிறார் கள். அவர்கள் எவ்வளவோ கெஞ்சியம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். எத்தனை சோகம். இந்தச் சோகத்தை இதற்குமுன் எப்போதும் உணர்ந்ததில்லை. ரோமியோ யூலியற் றின் துயரத்தைவிட இவர்களது துயரம் எந்த விதத்தில் குறைந்தது? இது அதனி லும் அதிக துயரமல்லவா? ஆம்! எங்கள் கனவுகளின் மீது ஒரு இடிமுழக்கமாய் ஜெயகாந்தன் விழுந்தார். அவரது 'ஜெய ஜெய சங்கரா' வரும்வரை அவரை வாசித் துக்கொண்டிருந்தேன். பிற்காலத்தில் விலகல் நேர்ந்தது. அவரது நாவல்களில் 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' ஆகி- யவை பிடித்தமானவை.

இதே காலகட்டத்தில்தான் ஈழ இலக்கியத் தின்மீதும் கவனம் திரும்பியது. அப்போது டொமினிக் ஜீவா என்ற பெயர் அவரது புத்தகங்களை வாசிக்காமலே அறிமுகமாய் இருந்தது. சாகித்திய அகடமி பரிசுபெற்ற செய்திதான் காரணம். பின்னர், பல்கலைக் கழக வெளியீடான 'காலத்தின் குரல்கள்' என்ற மெலிந்த இரு சிறுகதைத் கொகுதி கள் கைகளில் வந்து சேர்ந்தன. காணாத களத்தின் தொலைதூர மாந்தர்களுக்குப் பதிலாக, அறிந்த மனிதர்கள் அறிந்த இடங்களில் எங்கள் பேச்சோசையுடன் முன்வந்தார்கள் செம்பியன் செல்வன், செங்கை ஆழியான். பெயர்கள் பரிச்சய மாயின. செம்பியன் செல்வனின் 'அமை- தியின் இறகுகள்' சிறுகதைத் தொகுதி அப் போது நன்கு பிடித்திருந்தது. தொடர்ந்து டொமினிக் ஜீவா, கே. டானியல், எஸ். பொன்னுத்துரை செ. கனேசலிங்கம், வ.அ. இராசரத்தினம் ஆகியோர்களுடன் ஈழத்தின் மும்மூர்த்திகள் என்று சொல்லப்பட்ட சம்- பந்தர், சி. வைத்திலிங்கம், இலங்கையர்- கோன் ஆகியோர்கள் பற்றிய தேடல் தொடர்ந்தது. இந்த வாசக வேட்கைக்கு யாழ்ப்பாணம் பொதுசன நூலகம்தான் அட்சய பாத்திரமாக அமைந்திருந்தது.

ஈழத்து இலக்கியம் அப்போது இரு முகாம் களாக இயங்கின. க. கைலாசபதி, கா. சிவத்தம்பியை தலைமையாகக் கொண்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கமாகவும், கனக. செந்திநாதனை தலைமையாகக் கொண்ட யாழ் இலக்கிய வட்டமாகவும் செயற்பட்டன. முற்போக்கு எழுத்தாளர்க- ளது படைப்புகளில் சாதிய முரண்பாடு களையும் அதன் ஏற்றத்தாழ்வுகளையும் அதற்கு எதிரான போராட்டங்களைக் கொண்டிருந்தன. க. கைலாசபதி பெயரில் அப்போது பெரு மதிப்பிருந்தது. அவரது 'தமிழ் நாவல் இலக்கியம்' பெரிதும் விதந் தோதப்பட்டது. பிற்காலத்தில் அவரது விமர்சன மதிப்பீட்டில் அதிருப்தி ஏற்பட் டது. முக்கிய படைப்பாளிகளான எஸ். பொன்னுத்துரை, மு. தளையசிங்கம், மகாகவி, நிலாவணன் போன்றவர்கள் பற் றிய அவரது மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. எஸ். பொன்னுத்துரை அப்போதேயே மார்க்சிய அணியில் இருந்து பிரிந்து தனியாக இயங்கிக் கொண்டிருந்தார். அப்போது இவரது 'தீ' நாவலை இரகசியமாக ஒளித்துவைத்துப் படிக்க நேர்ந்தது. மு. தளையசிங்கம், மு. பொன்னம்பலம் ஆகியோர் இக்கா லங்களில் ஆன்மீகத் தளத்தில் செயற் பட்டுக்கொண்டும் இருந்தனர். 'ஒரு தனி வீடு', 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி', 'போர்ப்பறை', 'மெய்யுள்' ஆகிய புத்தகங் கள் அவரை இலக்கிய உலகில் தவிர்க்க முடியாத ஆளுமையாக, நிரந்தரமாக தக்கவைத்துக் கொள்பவை.

முன்னர் குறிப்பிட்ட வண்ணக் கனவுகளா லும் கற்பனைகளாலும் நிறைவேறமுடியாத இலட்சியங்களாலும் பூத்திருந்த காலங்க ளில் எனது இளம் பருவத்துத் தோழன் அ. யேசுராசாவும் நானும் இலக்கியத்தில் ஒத்த இரசனைகொண்ட நண்பர்களாக இருந்துவந்தோம். எமக்கிடையே புத்தகங் களைப் பரிமாறிக் கொள்தல் ஒரு நிரந்தர பணியாய் இருந்தது. 'பாவை விளக்கு', 'குறிஞ்சி மலர்', 'பொன் விலங்கு' ஆகிய புத்தகங்கள் அவரிடமிருந்து பெற்றவைக ளில் சிலவாகும். நா. பார்த்தசாரதியின் 'தீபம்' இதழை அவர் தொடர்ச்சியாக வாங்கிவந்தார். நானும் அவ்விதழை வாசித்து வந்தேன். அதில் 'தமிழ் சிறுகதை வளர்ச்சி' பற்றிய விவாதம் ஒன்று இடம் பெற்றது. அதுவே என் இன்றைய இலக்கிய நிலைக்கு அடித்தளமாக ஆமைந்தது. அந்த விவாதத்தில்தான் ஜெயகாந்தன் உட்பட புதுமைப்பித்தன், தொ.மு.சி, ரகுநாதன், மௌனி, நா. பிச்சமூர்த்தி, கு.பா. ராஜகோபாலன், க.நா.சு. சுந்தர ராமசாமி, கு. அழகிரிசாமி, தி.ஜா.ரா. ஆகிய நவீன இலக்கிய சாம்சன்களை அறிய நோர்ந்தது. கூடவே அதற்கான தேடல் ஆரம்பமாகியது.

புதுமைப்பித்தனின் 'காஞ்சனை' தொகு தியை வாங்கி அதன் முன்னுரையைப் படித்தபோது, அதுவரை தங்கக் கோபுர உச்சியில் அமர்ந்திருந்த இலட்சிய ஆசி ரியர்களும் வெண்புரவிகளின் காலடி ஓசைகளில் கிறங்கடித்தவர்களும் மெல்ல

தொடர்தல் 91ம் பக்கம்



# வென்றிலன் என்ற...

90ம் பக்கத் தொடர்ச்சி...

மெல்லச் சரியத் தொடங்கினார்கள். அவ்வகை முன்னுரையை அதற்குமுன் வாசித்திருக்கவும் இல்லை. ‘காஞ்சனை முதலிய பதினான்கு கதைகளுக்குள் துணிந்து பிரவேசிக்க விரும்பும் வாசகர்களுக்கு, தலையெழுத்து அப்படியாகிவிட்ட விமர்சகர்களுக்கு, நம்முடைய கோஷ்டி இது என்று நினைத்துக்கொண்டு கும்மாளம் போட்டுவரும் நண்பர்களுக்கு முதலிலேயே எச்சரிக்கை செய்துவிடுகிறேன். இவை யாவும் கலை உத்தாரணத்துக்கென்று கங்கணம் கட்டிக்கொண்டு செய்த சேவை அல்ல. இவை யாவும் கதைகள். உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எரு விட்டு செழிக்கச் செய்யும் நோக்கமோ எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது.’ ஜெயகாந்தனது முன்னுரைகளும் காரமானவைதான். அவர் முன்னரையில் அவர் கட்சி சார்ந்த இலக்கு (அக்கினிப் பிரவேசம் தொகுதியின் முன்னுரை வரும்வரை) இருந்தது. அதன் பிறகே ‘நான் எந்தத் தத்துவத்துக்கும் தாலி கட்டிக்கொண்டவன் இல்லை’ எனப் பிரகடனப்படுத்தினார். புதுமைப்பித்தனின் இம்முன்னுரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதியபோதும் இன்றும் அதன் வீரியம் குறையவில்லை. இத்தொகுதியில் உள்ள சிறுகதைகள் அட்டகாசமானவை. இத்தொகுதி இனிப் பயணிக்க வேண்டிய திசையை தெளிவாக இனம் காட்டியது.

மௌனி, கு.பா.ரா என்கின்ற பெயர்களை அறிந்து வைத்திருத்தல் என்பதே நவீன இலக்கியத் தகுதிக்குச் சான்றாக எங்கள் காலத்தில் இருந்தது. மௌனி எழுதிய மொத்தக் கதைகளே 24 தான். இச்சிறு எண்ணிக்கையை வைத்தே வாசக மனங்களை வசீகரித்தார். இவரது ‘அழியாச் சுடர்’, ‘பிரபஞ்ச கானம்’, ‘எங்கிருந்தோ வந்தான்’ ஆகியவைகள்தான் ஒரு தேய்ந்த நிலையில் இன்றும் நினைவிலிருப்பவை. இவருடைய புகழ்பெற்ற பிரபஞ்ச கானத்தை விட அக்காலத்தில் எனக்குப் பிடித்தது எங்கிருந்தோ வந்தான்தான். அதன் சாரம் காதல் என்பதனாலோ தெரியவில்லை. இது புறநிலை யதார்த்தத்துடன் அதிகமும் தொடர்புடையது. பிரபஞ்ச கானம் ஆழமான அக உணர்வுகளை அடர்த்தியான மொழியில் வெளிப்படுத்துபவை. இவருடைய அழியாச் சுடர் கதையில் வரும் விபரிப்புகள் மலைக்க வைப்பவை. ‘எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்’ என்ற வாக்கியம் மிகவும் பிரபலம் பெற்றவை. இந்த வரிகளில் அன்றைய இளம் மனம் கிறங்கிக் கிடந்தது. இன்று அப்படி இல்லை. காரணம் இந்த வரிகள் சேக்ஸ்பியரின் ‘மக்பெத்’ நாடகத்தில் இருந்து பெற்றவை என்பதுதான். மௌனியை எழுத்தாளர்களின் எழுத்தாளர் என்றும் சொல்வதுண்டு. இவரை ‘தமிழ் சிறுகதையின் திருமூலர்’ என்று புதுமைப்பித்தன் குறிப்பிட்டுள்ளார். ஜெயகாந்தன், தான் சிறுகதைகள் எழுதத் தொடங்குமுன் மௌனியின் ‘மாற்றம்’ சிறுகதையை வாசிப்பதுண்டு எனக் குறிப்பிட்டுள்ளார்.

கு.பா.ரா. மன உணர்வுகளின் கொந்தளிப்புக்களை, குறிப்பாக பெண்கள் துயரங்களை தேர்ந்த சொற்களால் செதுக்கியவர். இவரின் கதைகளின் ஒற்றை வாக்கியங்கள் வாசிப்பின் பின்பும் மனதில் ‘நீர் வளையங்களாய்’ விரிந்துகொண்டு இருக்கும். ‘சிறிது வெளிச்சம்’ கதையின் இறுதியில் ‘விளக்கை அணைத்துவிட்டு படுத்துக்கொள்ளுங்கள், சற்று நேரம் இந்த வெளிச்சம் போதும்’ என்ற சாவித்திரியின் வரிகள் ஒரு மின்னலைப்போல் வாசக மனதைத் தாக்கக்கூடியதே. இவ்வகை மின்னல் வாக்கியங்கள் தி. ஜானகிராமனின் ‘அம்மா வந்தாள்’, ‘மோக முள்’, ‘மரப்பசு’ நாவல்களிலும் மின்னிக்கொண்டிருக்கும். புதுமைப்பித்தன் நண்பர்தான் தொ.மு.சி. ரகுநாதன். இவரது ‘பஞ்சும் பசியும்’ அக்காலத்தில் மிகுந்த புகழ் பெற்ற நாவல். நெசவாளர்கள் வாழ்க்கையும் போராட்டமும் பற்றியவை. இந்த நாவலுடன்தான் தமிழில் சேசலிச யதார்த்த இலக்கியம் ஆரம்பமாகியது என்றும் கூறுவதுண்டு. இவரது ‘இலக்கிய விமர்சனம்’ குறிப்பிடத்தக்கதாகக் கருதப்பட்டது. மார்க்சிம் கார்க்கியின் ‘தாய்’ நாவலை தமிழாக்கினார், புதுமைப்பித்தனின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதினார். பிற்காலத்தில் ரகுநாதன் வழியில் டி. செல்வராஜின் மலரும் சருகும் நாவலும் மார்க்சிய நாவல்களுள் முக்கியமானதாகக் குறிப்பிடுவார்கள்.

சுந்தர ராமசாமியின் அக்கரைச் சீமையில் ஆகியவை ஜெயகாந்தனின் உலகாக இருந்தபோதிலும் அவருக்கு அப்பாலான சத்தங்களற்ற வலிமையான நுண்ணுணர்வை வெளிப்படுத்தின. இவரது படைப்புகள் மனித ஆழ்மனத்தின் மடிப்புக்களில் உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தின. ‘அக்கரைச் சீமையிலே’ சிறுகதை இன்று புலம்பெயர்ந்த எம்மைப் போல் அன்றைய இந்திய தொழிலாளிகள் தென்னாபிரிக்காவில் படும் மன அவஸ்தையையும் தாயகம் பற்றிய உணர்வுகளையும் வெளிப்படுத்துபவை. ‘கோவில் காளையும் உழவு மாடும்,’ ‘தண்ணீர்’ அவரது ஆரம்ப முற்போக்கு காலக் கதைகள். அவர் மார்க்சிய ஈடுபாட்டில் இருந்து விலகியபின்னர் இவரது படைப்புக்கள் வேறு தளத்தில் இயங்கின. அவை முன்தெரியும் தளத்தைத் தாண்டி வேறு தளங்களையும் கொண்டுள்ளவை என்பதை தேர்ந்த வாசகன் கண்டு கொள்ளலாம். ‘ஒரு புளிய மரத்தின் கதை,’ ‘ஜே.ஜே. சில குறிப்புகள்’, ‘குழந்தைகள் பெண்கள் ஆண்கள்’ நாவல்கள் நுண்மைகளால் இழைக்கப்பட்டவை. இவரது ஜே.ஜே.சில குறிப்புகள் தமிழ் சூழலில் முன்னுதாரணம் அற்ற நவீன செவ்வியல் படைப்பு. அசோகமித்திரனின் சிறுகதைகளும் நாவல்களும் நுண்மைகளால் செதுக்கப்பட்டவையே. கவனம் சிதறாத வாசிப்பை கோருபவை.

புதுமைப்பித்தன் காலத்தவர்களாலும் அவர்களைப் பின்தொடர்ந்து இன்றுவரையிலுமான பல தலைமுறைப் படைப்பாளிகள் உருவாக்கிய நவீன இலக்கியக் களமும் அதன் படைப்புக்கள் மீதான விருப்பாலும் தமிழகம், ஈழம் என எல்லைகளற்று மனம் விரிந்து பயணிக்கின்றது. ஒவ்வொரு புத்தகங்களும் ஒவ்வொரு புதிய உலகின் வாசல்களைத் திறந்துகொண்டே இருக்கின்றன. அதன் பயணிப்பில் இயற்கைக்கும் மனிதருக்குமான, மனிதருக்கும் மனிதருக்குமான, மனிதருக்கும் அவர்தம் உள்மனத்துக்குமான போராட்டங்கள், உணர்வுகள் நம்முன்னால் விரிந்துகோண்டே இருக்கின்றன. இவற்றின் மீதான பயணம் என் வாசக மனம், உணரும் கருத்துக்கள், படைப்பாளிகளைத் தவிர்த்து படைப்பிற்கும் எனக்குமான உறவை அதிகம் வலுப்படுத்தியிருக்கிறது. பிறத்தியான் மனநிலையில் பயணிக்கக் கற்றுத் தந்திருக்கிறது.

நீண்ட உள்மன யாத்திரையின் மீள்வில் என்னைச் சுற்றிக் குவிந்து இருக்கும் புத்தகங்களை மீண்டும் நோக்குகிறேன். அவைகள் மீது இப்போது ஆற்றாமை இல்லை. அவைகள் போலியாக நோக்குவதாயும் உணரவில்லை. புத்தகங்களின் இருப்பில் இருந்து விலகுதல் என்பது, நானே என் காலடியில் வெறுமையையும் எல்லைகளற்று விரிந்து செல்லும் சூனியத்தையும் வரவழைப்பதுதான். வென்றிலன் என்ற போதும் புத்தகங்களின் உலகை இழந்திலேன்.



pushparajan.m@thaiveedu.com



# சலனங்களும் கனவுகளும்

- முல்லைஅமுதன் -



ஓவியம்: Pirunthajini Theepana

அப்பாவின் முகத்தில் எப்படி முழிப்பது?

பயத்தினால் கண்கள் இருண்டது.

'இண்டைக்கும் அடிவிழப்போகுது.'

மாமி முந்தி அடிவிழாமல் தடுத்தவ. அவவும் உயிரோட இல்லை. அம்மா பாவம்... அப்பாவின் கோபத்திற்கு முன்னால் அவளால் ஒன்றும் செய்யமுடியாது.

அப்பாவும் கோபம் வந்தால் சப்பாத்துக் காலால்..., தன் இடுப்பு பெல்ட்டைக் கழற்றி... அதுவும் இல்லாட்டி கிடைக்கிற பொருளால் ஓங்கி விளாசுவார். கோபம் வரும் போது என்ன செய்வதென்று அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

முன்பொரு முறைகூட வின்ஸரில் படம் பார்த்துவிட்டு வெளியே வரவும், சந்தியில் திரும்பிய பஸ்ஸுக்குள்ளிருந்த அப்பா காணவும் சரியாக இருந்தது. வீட்டுக்குப் போக 'ஒரே சமா தான்'.

அடியில் முதுகு வலித்தது. அவரின் கோபம் நியாயமானதுதான் என்று அப்போது தெரிந்திருக்கவில்லை. பாடசாலைக்குப் போய் முதலாம் பாடம் முடிய ரிஜிஸ்தரில் பெயர் 'வந்தேன் மிஸ்' சொன்னாப்பிறகு, மெது வாய் கன்ரீனுக்குப் போறமாதிரிப் போய், தயார்நிலையில் இருந்த சைக்கிளில் காலைக் காட்சிக்குப் போய்விடுவோம். தெரிந்தால்... வீட்டில் அடிவிழும், ஹெட்மாஸ்டரிடம் வாங்கிக்கட்டவேண்டிவரும், பெற்றோரைக் கூட்டிவரச் சொல்வதில்லை. என்னைக் கொண்டு போய் பாடசாலையில் சேர்த்த மாமாவும் அங்குதான் உலோகவேலை கற்பித்துக் கொண்டிருந்ததால்... அவர் குற்றச்சாட்டைக் கையிலெடுத்தபடி வீட்டை வந்துவிடுவார்.

'உந்தாள் எப்ப மண்டையைப் போடும்' என்று நினைக்காத நாளே இல்லை. மறு நாள் மறுபடியும் படம்தான்... மறுபடியும் மாமா வருவார்... அடிவாங்கித்தருவார்...

ஒருநாள் ரீகலில் படம் பார்த்துக்கொண்டிருக்கும்போது வேறொரு பாடசாலை அதிபர் தன் மாணவர்களைத் தேடி தியேட்டருக்குள் வந்துவிட்டார் என்ற செய்தி கிசுகிசுக்க... மாணவர்கள் தப்பிக்கமுயற்சிக்க... நாமும் வெளியேறிவிட்டோம். வெளியில் கனநேரம் காத்திருந்துவிட்டு படம் முடிய வந்து சைக்கிளை எடுக்கவேண்டிவந்துவிட்டது.

படங்களை முதல்நாள் பார்த்துவிட்டால் தான் மகிழ்ச்சி. அதுவும் முதல் டிக்கட் கிடைத்துவிட்டால் உலகமே கையில் கிடைத்துவிட்டது மாதிரி மனது குதூகலிக்கும்.

அப்பாவுக்கு ஏனோ நம்பிக்கை இல்லாமல் போய்விட்டதான சூழல்... 'தண்டச்சோறு' என்று சொல்லாவிட்டாலும் அவரின் நடவடிக்கைகள் என் மனதுள் அப்படியொரு உணர்வை ஏற்படுத்தியிருந்தது.

அப்பாவிடம் கிட்டப்போய் 'அப்பா எனிமேல் குளப்படி செய்யமாட்டன்' என்றுசொல்லும் தைரியமும் இருந்திருக்கவில்லை.

இரவு அல்லது காலை என சிப்ட் வேலை யாதலாலும், வீட்டுக்கு வந்ததும் ஆடு, மாடு பார்க்கவும், வேலியைச் சரிசெய்யவும்... இப்படியாக தூக்கமும் குறைந்துபோக கோபம் தானாக அதிகமாக வரும் என்ற அறிவு கூட எனக்கு இல்லாமல்... பொடியளோட சைக்கிளில சுற்றவேண்டும்... படம், நாடகம், கீரிமலை இப்படிக் கனக்க... இதுக்குள்ள சைட் அடிக்கிற நேரமும் உண்டு. வாசிகசாலை மதிலில குந்தியிருந்தா நாங்கள் தான் மன்னர்கள்' என்கிற கம்பீரம் வந்துவிடும். படம் பார்க்கிறதில அதிகமாக நாட்டமாக இருந்தது... பைத்தியம் எண்டும் சொல்லலாம்.

நீளமான தடியை அளவுக்கு வெட்டிச் சீவி பால்மாவிற்குள் வரும் வட்டமான அலுமினியத் தகட்டை பொருத்தி மடித்து கொஞ்சம் வெள்ளிப் பெயின்றை அடுச்சுவிட்டால் வாள்தான்.

விஜயபுரிவீரன் ஆனந்தன் மாதிரி, நீரும் நெருப்பும் எம்.ஜி.ஆர் மாதிரி, ரஞ்சன் மாதிரி வாள் கையிற் பிடிக்கிற மாதிரி அபிநயிப்பதே ஒரு சுகானுபவம்தான்.

உடைஞ்ச கிளாசை கைவிளக்கில் பிடிக்க கறுப்பாயிடும். அதில ஏதாவது எழுதி இருட்டான பகுதியில் உள்ல சுவரில் டோர்ச் லையிற்றால் பிடிக்க எழுதியது சுவரில் தெரியும். நாலைஞ்சு கண்ணாடித் துண்டுகளில் தொடர்ச்சியாக செய்ய சினிமா மாதிரித் தெரியும் எண்டு தங்கச் சிமாரை பேய்க்காட்டினதும் உண்டு. தியேட்டரில விளம்பரங்கள் இப்படித்தான் போடுகினம் எண்ட நினைப்பு. வேட்டிய படச்சுருள் துண்டுகளைக் கண்டாலும் இப்படித்தான்.

ஒரு நாள் தமயந்தியோட நாதன் பிரச்சினைப்பட்டிட்டான்... காதல் கடிதம் கொடுத்திட்டான்... ஏப்ரல் பூலுக்கு சட்டையில் மை அடிச்சுட்டான் எண்ட கோபம். ஒளிச்சுவைச்சிருந்த சைக்கிள் கேபிளுடன் போய் சண்டை பிடித்ததும். யாரோ 'உவனுக்கு எம்.ஜி. ஆர் எண்ட நினைப்பு' என்று புறுபுறுத்துச் சென்றதும் ஞாபகம்.

அப்பாவின் கண்டிப்பு என்னை ஒண்டும் செய்யேல்லை.

படம் பார்க்கிற ஆர்வம் குறையாமல் அதிகரித்தே வந்தது. இப்படியொரு நாளில வாசிகசாலை ஆண்டுவிழாவும் வந்தது. கதாநாயகனாகவே நடிப்பேன் என்று அடம் பிடித்து மனக்கோயில் நாடகத்தில் நடித்தேன். ஆடல், பாடல் அன்றை சினிமா மாதிரியே காதல் காட்சிகள்... சனம் சொல்லாட்டிக்கும் எனக்குள் நானே கதாநாயகன் என்ற நினைப்பும் வளர... படத்துக்கு ஆக்கள் எடுக்கினமெண்டு நண்பனும் சொல்ல... வீட்டில் 'இன்ரவியூ' எண்டு பொய்சொல்லிவிட்டு சென்றுவிட்டேன். ஆனாலும் ஒரு பயம். அந்த பயம் அப்பா சார்ந்ததாகவே இருந்தது. 'உவன் நல்லா வரமாட்டான்... கெட்டுக் குட்டிச்சுவராகத்தான் போறான்'.

பயணம் சுகமாக இருந்தது... படத்தில நடிச்சிட்டாப் போதும்... எம்.ஜி.ஆர் மாதிரி வந்துவிடலாம்... வாள் சண்டை போடலாம்... காதல் காட்சிகளில் நடிக்கலாம்... கனவுலகில் மிதக்கவைத்தது.

உற்சாகமும் அதிகரித்தது.

முதலில பேசுவினம்... பிறகு அமைதியாகிவிடுவினம். நடிச்சுப்போட்டு வந்து வாசிகசாலை மதிலில் குந்தியிருந்து ஒருதடவை புகையை இழுத்து வெளியில ஹீரோமாதிரி விடலாம். கள்ளடிக்கப் போகாமல் ஹோட்டலில வெளிநாட்டுச்சரக்கடிக்கலாம்... 555 சிகரட் பிடிக்கலாம். சனம் வரும்... உவள்

தொடர்தல் 93ம் பக்கம்

# சலனங்களும்...

92ம் பக்கத் தொடர்ச்சி...

தமயந்தியும் ஓட்டோகிராப் வாங்க வருவாள்... காதலையும் சொல்லுவாள்.

கனவைக் கலைத்தது டிக்கட் செக்கரின் குரல்.

அந்த இயக்குனரின் படங்கள் எல்லாம் சுப்பர் ஹிட்டாம்... யாரோ பேசிக்கொண்டனர்.

ஹீரோவும், ஹீரோயினியும் பந்தாக்களுடன் வந்திறங்க மனது சப்பென்றது.

ஹீரோவாக நடிக்கமுடியாதா?

ஹீரோவுடன் ஓரிரு காட்சியில் நடிக்கலாம் என்று சொன்னார்கள். சரி... பரவாயில்லை... பல நடிகர்கள் துணை நடிகர்களாக இருந்தே உயர்ந்தார்கள். அப்படி நானும்... மனது ஆறுதல் அடைந்தது.

எட்டாப்பழமாகிவிடுமோ? பயமும் எழாமலில்லை... பலரும் தெரியாத முகங்களாகவே இருந்தமையும் பயத்திற்கான காரணமாக இருந்ததுவோ தெரியவில்லை.

அமைதியாகவே இருந்துகொள் என்றது மனம். எனினும் பரபரப்பாகவே இருந்தது சூழல்.
மறுநாள் ஓரிரு காட்சிகளில் நடிக்கவைத்தார்கள்.

ஆகா நடித்துவிட்டேன்...

திரையில் முகம் தெரியும்... ஆயிரம் பட்டாம்பூச்சிகளுடனும் கூடவே பயணிப்பதான உணர்வு.

ஊருக்கு வந்துவிட்டேன்...

வீட்டில் யாரும் பேசிக்கொள்ளவில்லை. கோபத்தில் இருப்பது புரிந்தது...

மாட்டிற்குத் தவிடு பிண்ணாக்கு கரைத்து வைத்தபோது அம்மா அதிசயமாய் குசினிக்குள் இருந்தபடியே பார்த்தாள்.

வேலிக்கறையானைத் தட்டியபோது தங்கைகள் யன்னலுக்கால பார்ப்பது தெரிந்தது. வழமைக்கு மாறாக நாயும் வந்து காலை நக்கியது. அதுக்கும் அதிசயமனிதனாய் தெரிந்தேனோ?

அப்பா சந்தைக்குப் போயிருந்தார்.

அப்பாவிடமிருந்து தப்பவேண்டும். கொஞ்சமாவது அடிவிழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் அதுக்குத்தான் இந்த நடிப்பெல்லாம். அம்மாவுக்கு இது நடிப்பென்று தெரிந்திருக்காது. ஆனால் தங்கச்சிகளுக்கு இது நடிப்பு எனத்தெரிந்துவிடும்... எனது நடிப்பை முதலில் கண்டுபிடித்து அம்மாவிடம் போட்டுக்கொடுப்பதே அவர்கள் தானே... பாவிகள்...

'நாடகம் போடவேண்டும்' வாசிகசாலை ஆண்டுவிழா பற்றி நண்பர்கள் சொன்னபோது நினைவுக்கு வந்தது. நாடகம் போட்ட கையோடு நடிச்ச படமும் வந்திட்டால் போதும்... பிறகு அப்பா எதுவும் சொல்ல மாட்டார். அம்மா திட்டமாட்டாள். ஊர்சுற்றித் திரிபவனை 'காவாலி' என்று சொல்லும் சனம் ஒண்டும் சொல்லமாட்டினம். படத்தில பிஸி ஆகிவிட்டால் நாடகம் நடிக்கவேண்டியதில்லை. நாடகம் பழகுகிற காலத்தில திருட்டுக்கோழி அடிச்சு சாப்பிடவேண்டி வராது... பிரஸ்டீஜ் வந்துவிடும்... புதுக் கார்... ஒழுங்கைக்குள்ள வாராது... ஒழுங்கையை பெருப்பிக்கவேண்டும். ஒரு படம் நடிச்சவனே பங்களா மாதிரி வீட்டில் வாழேக்க நான் எப்படி? வானிக்கு, ரீவீக்கென சந்திப்பு என பத்திரிகைக்காரர்கூட வலிய வருவினம்... கனவு காணும் சுகம்... அதற்கும் சுதந்திரமான சூழல் வேண்டுமல்லவா. அம்மாவின் சத்தம் கனவுடன், நித்திரையும் குழம்பிட்டுது.

அம்மா பத்திரகாளிமாதிரித் தெரிந்தாள்.

அம்மா அதிகாலையில எழும்பி அடுப்புச் சாம்பல் அள்ளி, தேத்தண்ணி போட்டு எல்லாரையும் எழுப்பிக் கொடுத்துவிட்டு முற்றம் கூட்டப் போவாள். அம்மாவின் தேநீர் சுவையானது. அவளின் கைப்பக்குவம் அப்படி. யாரிடம் சமையல் கலைகளைக் கற்றுக் கொண்டாளோ? தங்கைகளுக்குச் சமைக்கத்தெரியாததினால் தப்பித்துக் கொண்டேன். அம்மாவின் கைகள் மிருதுவானவைகள். அப்பாவின் கைகள் அப்படியில்லை. அம்மா முதுகில் மொத்தும் போது வலிக்காவிட்டாலும் ஆ, ஊ என்று அழுவது மாதிரி பாசாங்கு பண்ண 'அம்மா... நடிக்குது' தங்கை சொல்லுவாள்.

அப்பா கன்னத்தில் ஒன்றுவிட்டால் சுருண்டு விழுந்துவிவேன்... வலிக்கும். அழுகை தானாவே வந்துவிடும். இரத்தம் வராத குறையாக இருக்கும்... அப்படி நோகும். கன்னத்தில் அறைந்ததின் அடையாளம் மறைய இரண்டு மூன்று நாட்களாகும்.

அன்று சனிக்கிழமை.

வயிரவருக்குப் பொங்கிவிட்டுவந்தார் அப்பா.

'என்ன சொல்லிவிட்டுப் போகலாம்?'

அப்பாவைப் பார்க்கும்போதெல்லாம் பயமும் கூடவருகிறது. பொய் சொல்லிவிட்டுத்தான் போகமுடியும். அப்பா பொய்யெனக் கண்டு பிடித்துவிடுவார்.

'முந்தியும் பதிபக்தி படம்... மெட்னி சோவிற்குப் போக அது கொஞ்சம் பெரிய படம்... நேரமாகிவிட்டது. வீட்டுக்கு வர அப்பா கிடுகு பின்னிக்கொண்டிருந்தார். பின் பக்கமாகப் போய் அம்மாவிற்கு மட்டும் கேட்கக்கூடிய மாதிரி 'இண்டைக்கு ஸ்பெஷல் கிளாஸ். அதுதான் பள்ளிக்கூடம் விட்டவுடனே அதால போட்டுவந்தனான்'.

நம்பியிருக்க வாய்ப்பில்லை. முகம் சொல்லியது. அம்மா திட்டியது அப்பாவிற்குக் கேட்டிருக்கும். எதுவும் பேசவில்லை. எல்லாத்தையும் சேர்த்து ஒருநாள் சாத்துவார் எண்டுமட்டும் புரிந்தது.

பயமாக இருந்தது.

எப்படிக் கேட்பது?

தங்கை ரியூசனுக்கு ஆயத்தமானாள்.

ஒருநாளுமில்லாமல் 'நான் கொண்டுபோய் விடட்டே'

தங்கையின் பார்வை சரியில்லை...

'ஏதோ பிளான் பண்ணிவிட்டான்' என்று நினைத்திருப்பாள்.

சைக்கிளில் டபிள் போகும்போதே சூசகமாக சொல்லிவிட்டேன். ஒரு மாதிரி தோழியுடன் வீடு திரும்பிவிடுவாள்... அப்பாடாவென்றிருந்தது.

லாவகமாக தந்திக் கம்பிகளில் கால்களை அழுத்தியபடி உட்கார்ந்திருக்கும் பறவைகளின் துணிச்சல் ஏன் மனிதர்களுக்கு இல்லாமல் போனது. எதிலும் பயம்... பயம்... அப்பாவிற்கான பயம்... அப்பாவின் மீதான பயம்... சாணேறச் சறுக்குகிற வாழ்க்கையை அனுபவித்தவனிடம் நம்பிக்கையாக எதுவும் வந்துவிடப்போவதில்லை. உயரே பறக்க நினைக்கின்ற நினைப்பு மட்டுமே உள்ளது. பறவைக்கான நம்பிக்கை எதனிடமிருந்து கிடைத்தது... அப்பாவின் பயம் அவரின் அப்பாவிடமிருந்து ஆரம்பித்திருக்கலாம். அதனால் அந்தப் பயம் 'மூத்த பெடியன்' என் மீதும் இருந்தது. அந்தப் பயம் எல்லார்மீதும் எனக்கிருக்கிறது. இதனால் நம்பிக்கையற்றிருக்கிறது பாதைகள்.

கைக்கிளை நிறுத்திவிட்டு பூட்டியது சரிதானா என்று மீளவும் பார்த்துவிட்டு நுழைந்தேன்... அசட்டையாக நிறுத்திவிட்டு வந்த சைக்கிள் காணாமல் போயிருந்த அனுபவம். அப்பா தன் சைக்கிளை தொட விடுவதில்லை. இன்று தந்துவிட்டார்.

இருக்கையில் அமர்ந்தேன். பரபரத்தது. வியர்த்துக் கொட்டியது.

விளக்குகள் அணைய படம் தொடங்கியது. கதிரையில் சாவகாசமாய் உட்காரமுடியாமல் தவிப்பு மேலோங்கியது. காட்சிகள் மாற மாற கதாநாயகன் காட்சியில் தோன்ற விசிலடித்து ஆரவாரித்தனர் ரசிகர்கள். அடுத்த காட்சி, அடுத்த காட்சி நட்சத்திரங்கள் கண்சிமிட்டியமாதிரி மனதுள் ஒரு உணர்வு... சண்டைக்காட்சியில் கதாநாயகன் தூள் கிளப்பியிருந்தார். புதுமுக நடிகையுடனான காதல் பாடலிலும் பரவசப்படுத்தினார்... அடுத்தது... அடுத்தது... என்ற நினைப்புடனே படம் முடிந்தது.

மனம் இறந்து வீழ்ந்தது போலிருந்தது. கனவுகள் காலுக்கடியில் பொலபொலவென உதிர்வதுபோலிருந்தது. அத்திவாரமே பெரும் பூகம்பம் வந்து நொருங்கியது போலிருந்தது. 'நாலைந்து காட்சியிலாவது தோன்றுவீர்கள்' என்றார்களே...

கூட்டத்துள் ஒருவனாகக் கூட நான் இல்லையே.

முகம் இருண்டது...

சோர்ந்து போய் வெளியேறினேன். உள்ளே விசில் சத்தங்கள் ஓயாமல் ஒலித்துக்கொண்டிருந்தன. காலுக்கடியில் கச்சான் கோதுகள்.., குறை சிகரட்டுக்கள்.., விளம்பர நோட்டீஸுகள்.., கைதுடைத்த பேப்பர்கள்... மிதித்தபடி சைக்கிளை நோக்கியபடி நடந்தேன்.

சினிமாக் கனவு?

ஆயிரம் அடிகளாவது எடுத்திருப்பார்கள் என்ற மகிழ்வில் தன் பெயரில் சங்கம் அமைத்து.., பின் ஒரு காட்சியில் கூட்டத்தில் ஒருவனாக வந்து போன நடிகர் ஞாபகத்திற்கு வந்தார். பலகோடிக்கனவுகளுடன் வந்து ஏமாந்து போன கலைஞர்கள் தற்கொலை செய்துகொண்டதாய் பத்திரிகைச் செய்திகளை வாசித்த ஞாபகம் வந்தன... ஏன் இதுவெல்லாம் இப்போது வரவேண்டும்.

வேண்டாம்... நம்பிக்கையை விதைத்து ஏமாற்றிவிட்டார்கள்...

சைக்கிளை உருட்டினேன்.

பாலத்திற்கடியில் யாரோ தற்கொலை செய்து கொண்டதாக சனக்கூட்டம் நிறைந்திருந்தது.

அம்புலன்ஸ்... பொலிஸ் என்பன கண்ணில் தெரிந்தது. சனங்களை விலக்கி இறந்த உடலைப் பார்க்கும் தைரியம் வரவில்லை. வெக்கையாக இருந்தது.

நடந்தேன்... அப்பாவின் முகமே பெரிதாய் தெரிந்தது.

mullaiamuthan@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.

விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான

பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com

Fax: 416-849-0594 Tel: 416-646-3422

www.inayam.net

தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

முற்றிலும் இலவசம்

inayam

# Proud to be serving you through these two Funeral Homes!

**GTA EAST**

OGDEN
FUNERAL HOMES
4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

**GTA WEST**

LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage

**Patricia Peter** BBM
*Licenced Funeral Preplanning Director*
*Licenced Insurance & Investment Advisor*

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com



*"Serving With Dignity, Compassion and Excellence"*

# இப்படிக்கு ஜன்னல்கள்!

- போல் யோசேப் -

‘என் வீட்டுத் தோட்டத்தில் பூவெல்லாம் கேட்டுப் பார், என் வீட்டு ஜன்னல் கம்பி எல்லாமே கேட்டுப்பார்’ என்ற அந்தப்பாடல் அழகான குரல்களில் என் காருக்குள்ளே ஒலித்துக் கொண்டிருந்தது. அந்தப் பின்னணி இசை, அதையும் தாண்டி காதல் கொஞ்சும் கெஞ்சும் வரிகள். வண்டுகள் சத்தம் போட்டால் பூஞ்சோல தாங்காது. மொட்டுகள் சத்தம் போட்டால் வண்டுக்கே கேட்காது. சொல்லுக்கும் அர்த்தத்துக்கும் தூரங்கள் கிடையாது இப்படி அந்தப் பாடல் என் காதுகள் வழியே முளையின் ஹிப்போகம்பசில் உள்ள நினைவாற்றலுக்கான நியூரோன்களுக்குள்ளே சென்று பதிவுகளை மீளவும் அசைபோட்டுக் கொண்டிருந்தது.

பாடலுக்கிடையே என் தொலைபேசியின் அழைப்பொலி ஒலித்துக் கொண்டிருந்தது. பாடல் முடிய தொலைபேசி அழைப்புக்குத் தொடர்பு கொண்டேன். மறுமுனையில், ‘வணக்கம் டொக்டர். மன்னிக்கவும்...’ என்று பாதிரியாரிடம் பாவமன்னிப்புக் கேட்பது போன்ற தொனியில் பேசத் தொடங்கினார்.

‘உங்களிடம் புதன் கிழமை மதியம் 12 மணிக்கு அப்பொயின்ற்மென்ற் வைத்திருந்தேன் வரமுடியாது. அன்றுதான் அம்மாவைச் சந்திக்க அனுமதி கிடைத்துள்ளது’ என்று கூறியவர்... அதோடு இன்னொன்றையும் சொன்னார். ஒரு கணம் நானே அதிர்ந்து உறைந்து போனேன்.

சில மில்லியன்கள் மதிப்புள்ள, வீட்டைச் சுற்றி பசுந்தரை, பூந்தோட்டம், கடந்து செல்லும் அனைவரையும் ஒரு கணம் திரும்பிப் பார்க்கச் செய்யும் அழகான அரண்மனை போன்ற வீடு. கணவன், மனைவி இரண்டு பிள்ளைகள், மூன்று அறைகள் போக மீதியுள்ள பல அறைகளின் நான்கு சுவர்களும் தனிமனித இடைவெளியைப் பேணி நிற்பது போல ஒன்றையொன்று பார்த்துக் கொண்டிருக்கும். தாயார் மட்டும் சீனியர் ஹோமில் தனியறையில் தனிமைச் சிறையில். படுத்தபடுக்கையாகி குறைபாடுகளோடு நடமாடமுடியாமல் இருப்பவர் அல்ல. எழுபத்தைந்திலும் ஓரளவு ஆரோக்கியமாக இருப்பவர்தான்.

யாரைக் குறை சொல்லுவது, ஒரு ஐந்து உறவுகள், அத்தனையும் மறந்து ஒரு கூட்டுக்குள்ளே மகிழ்வாக வாழ என்ன தடை, எத்தனை காரணங்கள்? திருமணமாகி சில ஆண்டுகளில் குழந்தை பிறக்கிறது. அது அழகான பெண் குழந்தை யாரையும் வீட்டுக்குள்ள கூப்பிடாதையுங்கோ, ஒருத்தரும் பிள்ளையைப் பார்க்க வரக்கூடாது வருகிற ஆட்களால் பிள்ளைக்கு ஏதாவது வருத்தங்கள் வந்திடப் போகுது என்றாள் மனைவி. இப்ப மாதிரி கொரோனாக் காலமென்றாலும் பரவாயில்லை. இது நடந்து இருபது வருஷத்திற்கு முன்பு. நான் எங்கட வெள்ளைக்கார பீடியாற்றிசியன் சொல்லுறதைத்தான் கேட்பன். அவ சொன்னவ தாய்ப்பால் மட்டும் காணாது அந்த Formula வும் குடுக்க வேணுமாம். எனப்பா உமக்குத் தான் தாய்ப்பால் நல்லா வருகுது பிறகு ஏன் உந்த கெமிக்கலை குடுக்கிறிங்க. உங்களுக்கு ஒண்டும் தெரியாது. ஏன் தெரியாது அந்தப் பெட்டியில் எழுதியிருக்கிற இன்கிறிடியன்ஸ் என்னவென்று படிச்சுத்தான் பார்த்தனான் தலையை சுத்துது அதில் பசுப்பால் கூட இல்லை. எல்லாம் கெமிக்கல் கலவை தான் என்றான் கணவன். எங்கட பிள்ளை மட்டுமே குடிக்குது எல்லாப்பிள்ளைகளும் அதைத் தானே குடிக்குதுகள். இது மனைவியின் மறுமொழி. நான் என்னர ஆறு பிள்ளைகளுக்கும் ஒரு வயதுவரை தாய்ப்பால் தான் குடுத்து எல்லாப் பிள்ளையளும் நல்ல ஆரோக்கியமாத்தான் இருக்கினம் என்று குழந்தையின் பாட்டியும் கொஞ்சம் எண்ணையை ஊத்திவிட, மாமி தப்பா நினைக்காதையுங்கோ நீங்களும் பிள்ளையை தூக்கக்கூடாது ஏனெண்டா உங்களுக்கு முந்தி அஸ்மா வருத்தம் இருந்து சில்லாலை அத்தனாசியார் வைத்தியரிட்டை மருந்து எடுத்து சுகமானதென்று முந்தி ஒருக்காச் சொன்ன ஞாபகம். அது சிலவேளை பிள்ளைக்கு தொத்தினாலும் என்றுதான் சொல்லுறன்.

இப்படி... ஆண்டு கடந்தது. அன்று தான் முதல் பிறந்த நாள் விழா. கொண்டாட்டம் களைகட்டிக் கொண்டிருந்தது. ஆட்டம், பாட்டம் அத்தனையும் மேற்கத்தைய



பாணியில் அரங்கேறிக் கொண்டிருந்தது. அம்மா போட்டோ எடுக்கணும் வாங்கோ, மாமி இந்தாங்கோ பிள்ளையைப் பிடியுங்கோ. முதன் முறையாக தன் முதல் பேரப்பிள்ளையின் அரவணைப்பை உணரப் போகிறேன் என்ற அளவில்லா ஆனந்தம். நீண்டநாளாக எனக்குப் பிடித்த அல்வா மட்டும் சாப்பிடாதையுங்கோ என்ற குடும்ப மருத்துவரே, ஒரு கிலோ நெல்லை அல்வாவை தன் நோயாளியிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னபோது, ஒரு டயபிற்றிக் நோயாளி வாயில் எச்சில் ஊற மகிழ்வது போல இரட்டிப்பு மகிழ்ச்சிக்கு அந்த தாய்க்கு. ஆனாலும், ஓராண்டாய் அருகிலிருந்து அழுவதை, சிரிப்பதை, தவழ்வதை, தத்தித்தத்தி தன் வாரிசுவின் அத்தனை உணர்வுகள், உணர்ச்சிகள், அசைவுகளை கண்களால் மட்டும் உணர்ந்து Optic நரம்பு வழியாக கண்ணுக்கும் மூளைக்கும் மட்டுமே அந்தப் பாசப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இப்போது உடலில் உணர்வு மற்றும் இயக்க நரம்புகளிலுள்ள அத்தனை பில்லியன் கணக்கான நியூரோன்களும் திடீரென அதிர்ந்து போக அவற்றிற்குள்ளேயுள்ள நியூரோ கெமிக்கல் அத்தனையும் ஒன்று சேர்ந்து செயற்படத்தொடங்கியது. இதனால் மூளை ஒரு கணம் செய்வதறியாது திகைத்துப் போயிருக்க அதைச் சமாளிக்க கண்களுக்கு மட்டும் தான் வழி தெரியும்.

வலிகள் அத்தனையும் விழிகளுக்குள்ளே உள்ள அந்த மாண்புமிகு லாக்றிமல் கிளான்ட் - ஆம், கண்ணீர்ச்சுரப்பி. அவர்தான் நமக்குள்ளே எப்போதும் இருக்கும், மருத்துவக் கல்லூரிக்குச் சென்று பட்டங்கள் பெறாத நல்ல மனநல மருத்துவர். அவரின் ஆலோசனைப்படி கண்கள் எனும் ஜன்னல்கள் கலங்கி ஒரு மைக்ரோ நயாகரா உருவாகிக் கொண்டிருந்தது.

இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளும் அளவிற்கு அந்த மண்டபத்தில் யாருமில்லை. அத்தனை பேரும் படுபிஸி. ‘பார் ஓப்பன்’ என்றதும் குடலுக்கும், ஈரலுக்கும் பூச்சி மருந்து தெளிக்கும் கூட்டம் ஒருபுறம், கனநாள் சாப்பிடாமல் பசி பட்டினியாய் கிடந்து இப்பதான் எழும்பி வந்தவர்கள் போல என்ன கிடக்குது என்று அவ்வப்போது எட்டிப் பார்த்துக் கொண்டே தட்டுகளோடு வரிசையில் ஒரு கூட்டம் நிற்கிறது.

‘ஜன்னல் வைச்ச ஜாக்கெட் போடவா தென்றல் அடிக்க...’ அப்போ பிரபலமான அந்தப் பாடலின் பின்விளைவுகள் பலரின் பின்புறம். வங்கி லொக்கரில் சிறையிருந்த அத்தனை நகைகளும் பரோலில் தற்காலிக விடுதலையில் வந்து உடல் எடையை கூட்டிக் கொண்டிருக்க.., மேக்

தொடர்தல் 96ம் பக்கம்

# இப்படிக்கு ஜன்னல்...

95ம் பக்கத் தொடர்ச்சி...

கப் என்ற வார்த்தை நிச்சயம் தமிழிலிருந்து தான் வந்திருக்க வேண்டும் என்பதை நிரூபிக்க 'மேனிமேலே அப்பிக் கொண்டு' இருக்கும் தங்கள் மனைவிமார்களை அடையாளம் தெரியாமல் கணவர்கள் பலர் தேடிக் கொண்டிருந்தனர்.

ஆனால் மூன்று கண்களோடு இருந்த கமராக்காரர், அவரின் தாரக மந்திரமான 'ஒருக்கா சிரியுங்கோ' என்பதைக் கூடச் சொல்ல மறந்து... அவருக்கு மட்டுமே அந்தக் கண்ணீரின் உணர்வு புரிந்து கொண்டவர் போல... எண்ணங்களை தன் வண்ணக் கண்களுக்குள்ளே படம் பிடித்துக் கொண்டிருந்தார். அப்படியொரு முத்த மழையை கமராக்காரர் இதுவரை பார்த்திராதவர் போல வியந்துபோக... அருகிலிருந்த எவருமே அதை உணரவில்லை. ஆம், உணரவும் வாய்ப்புகளில்லை. உணர்வுகளும் உணர்ச்சிகளும் உள்ளத்திலிருந்து மட்டும் தான் வருகிறது என்று நீங்கள் எண்ணினால் ஏமாற்றம் தான்.

●

நமது எண்ணங்கள், செயல்கள், அனுபவங்கள், கடந்த கால நினைவுகள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், நன்மை தீமைகள், பரம்பரை இயல்புகள், நம்மோடு தொடர்புடைய எல்லாமும் அது மட்டுமல்ல பலகோடி ஆண்டுகளாக மாறி மாறி பல மாற்றங்களுக்குட்பட்டு வந்து... இப்போது நம் உடலுக்குள்ளே உள்ள மரபணுக்களில் பதிவுகளாகப் பேணப்பட்டுள்ளது. பாட்டியின் மரபணுக்களில் உருவான அந்த பேத்திக்குள்ளேயும் அதே பதிவுகள் தான். அவற்றின் ஞாபக அதிர்வுகளால் தான் உணர்வுகள் உருவாகின்றன.

அடுத்த வீட்டு ஜன்னல்களையே எப்போதும் பார்த்துப் பழகிப் போன நமக்கு, நம்முள்ளே இருக்கும் அக ஜன்னலுக்குள்ளே சென்று பார்க்க நேரமேது. 'கொரோனா லொக் டவுண்' காலத்தில் என்னவெல்லாம் செய்தீர்கள் என்று சிலரிடம் விசாரித்தேன், ஒருவர் சொன்னார் இதுவரை வெளியான அத்தனை நயன்தாராவின் படங்களையும் பார்த்து முடித்து விட்டேன். அப்ப உங்கள் துணைவியார் என்ன செய்தார் என்றதும், அவ கொஞ்சம் ஸ்லோ... இப்பதான் அஜித்தின் 2017 விவேகம் பார்த்துக் கொண்டிருக்கிறா. அப்ப பிள்ளைகள்... அவைக்கு தமிழ் தெரியாது. ஆனா...வடிவேலுவின்ர பகிடியைப் பார்த்து சிரிப்பினம். பிள்ளைகளே பரவாயில்லை என்று எண்ணத் தேன்றியது. இப்படிப் பலர் ஒரு நல்ல சந்தர்ப்பங்களை கோட்டைவிட்டு மீண்டும் அதே பழைய மனநிலையோடு, பல மாதங்களுக்கு முன்பு செத்துப் போன கோழிக்கு வீட்டுக்குப் பின்னால் போஸ்ட்மோட்டம் மற்றும் அரைவாசிக் கிறிமேசன் செய்து, (BBQ) வெளில இருக்கிற கொரோனா வைரசைக் கொல்லும் அல்ஹகோல் (Alcohol) உள்ளே இருக்கிற வைரசையும் கொல்லும் தானே என்று வைரஸ் ஆராய்ச்சியாளர்கள் போல விளக்கவுரைகள் சொல்லி, அது வயது போன ஆட்களைத் தான் குறிவைத்து அடிக்குது, எங்களையெல்லாம் ஒன்றும் செய்யாது என்று கூறும் ஒரு கூட்டம்.

அப்பவும் இந்த மரபணுக்களைப் பற்றி சொல்லுறதை விடமுடியாது. ஏனென்றால் பல ஆயிரம் வருஷத்திற்கு முந்தி குகைகளில் ஆடைகளின்றி அம்மண மனிதர்களாய் வாழ்ந்த நம்ம பெரியப்பாவும் பெரியம்மாவும் இப்படித்தானே நெருப்பில் வாட்டி சாப்பிட்டிருப்பார்கள். அந்த மரபணுக்களின் பதிவு இன்னும் எங்களில் தொடர்வதில் என்ன தவறு.

சரி, இந்த மரபணுக்களை அக ஜன்னல் வழியாக கொஞ்சம் எட்டிப்பார்க்கலாம். நம்ம உடலில் சுமார் முப்பது ரில்லியனுக்கும் அதிகமான கலங்கள் (Cells) இருக்கிறது. முப்பதுக்குப் பின்னால் பன்னிரண்டு சைபர் போட்டுப் பாருங்கள். இந்த செல்களுக்குள்ளே DNA, RNA என்று பல ஆயிரம் பொருட்கள் உள்ளே இருக்க அவை ஒவ்வொன்றும் உலகின் சுறுசுறுப்பான நகரங்களில் ஒன்றான ஜப்பானின் டோக்கியோ நகரத்திற்குள்ளே நாளாந்தம் என்ன செயற்பாடுகள் நடக்குமோ அது போல பல மடங்கு செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது என்பது தான் உண்மை.

ஒவ்வொரு கலங்களின் கருவுக்குள்ளேயும் 23 சோடி 46 குரோமோசோம்கள் குடியிருக்கின்றன. ஒவ்வொரு குரோமோமிலும் இரண்டு DNA கள். இரண்டு பாம்புகள் ஒன்றோடொன்று பிணைந்து காதல் கொள்வது போல. ஆம், பல சைவ ஆலயங்களில் இதுபோல சிற்பங்களை சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் செதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதும் ஆச்சரியமானது தான். இனிச் சொல்லப் போவதைக் கேட்டு கொஞ்சம் அதிர்ச்சியும் வரலாம். ஆம், இந்த ஒவ்வொரு DNA வும் 0.6nm (0.00000000006 Meter) அவ்வளவு நுண்ணியது மட்டுமல்ல, இவ்வளவு நுண்ணிய இந்த DNA க்குள்ளே 3 பில்லியன் நியூக்கிளியோரைட் என்ற புரதங்கள் உள்ளனவாம்.

0.6 nm அளவுள்ள DNA பல தகவல்களை தன்னகத்தே தேக்கி சுருக்கி வைத்துள்ளது. இதை வெளியில் எடுத்து சுருங்கியுள்ள அதாவது அடுக்கடுக்காக திருவள்ளுவர் கையிலுள்ள ஓலைச் சுவடி போல விரித்து அதை ஸ்பிரிங்கை இழுப்பதைப் போல இழுத்து விட்டால் உண்மையில் 2 மீற்றர் நீளம் கொண்டதாகும்.

இன்னும் அதிசயம் வேண்டுமா! இதைப் படிக்கின்ற உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிற DNAல் கடந்த 40 லட்சம் ஆண்டுகளுக்கான பரம்பரை அலகுகள் அத்தனையும் உள்ளது. கோடி ஆண்டுகளானாலும் இப்படி ஒரு அற்புத மியூசியத்தை உருவாக்க முடியாது.

இதுக்கும் அம்மாவுக்கும் என்ன சம்பந்தம், உணர்வுகள், உணர்ச்சிகள், எண்ணங்கள் செயல்கள் என்று எல்லாமே நமக்குள்ளே இருக்கிற DNA ல் பதிவாக்கம் (Imprint) செய்யப்படுகின்றன. எப்படி நாம் இன்று பயன்படுத்துகின்ற தொழில்நுட்ப சாதனங்களில் உள்ள சிப்(Chip)ல் அலைக்கற்றை வடிவில் மென்பொருளாய் உள்ளதோ அதோ போலத்தான் DNAக்களின் பதிவு(Memory) களும் உள்ளன. இவை மூளையோடு இணைந்து நியூரோ கெமிக்கல்ஸ் மற்றும் நியூரோ ரான்ஸ்மிற்றர்ஸ் ஊடாக எப்படி 'மனம்' என்ற நிலையில் செயற்படுகிறது என்பது இன்னொரு தனிக்கதை.

●

புகைப்படம் எடுத்ததும் மீண்டும் பேத்தியை மருமகளிடம் கொடுத்துவிட்டு.., 'பிள்ளைக்கு இப்ப மட்டும் அஸ்மா தொற்றாதோ!' என்று மாமியார் சொல்ல, 'மாமி மகளுக்கு தடுப்பூசி யெல்லாம் ஓரளவு போட்டாச்சு, அதனால் இனி தொற்றாது'. அஸ்மாவுக்கு முதல் முதலில் தடுப்பூசி கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்றவர் போல பதிலளித்தாள் மருமகள், அஸ்மா ஒரு தொற்று நோயல்ல என்பதைக் கூடத் தெரியாமல்.

மருமகளின் பெற்றோருக்கு இலங்கையில் பெரிய பிஸ்னஸ். அதைவிட்டுட்டு கனடா வர அவர்களுக்கு விருப்பமில்லை. 2009க்குப் பிறகு வெள்ளைவான் பிரச்சினையில் மாட்டுப்பட்டு தப்பித்து வெளியவர கோடிக்கணக்கில் செலவு பண்ணி.., பிறகென்ன... பிஸ்னஸ் எல்லாத்தையும் வித்துப்போட்டு கனடாவுக்கு வந்திட்டினம்.

இந்தியா - பாகிஸ்த்தான் பிரச்சினை போல...அவ்வப்போது இராணுவமில்லை, உயிர்ப்பலிகள் இல்லை...ஆனாலும் சில தீவிரவாதிகள்... மன்னிக்கவும் உறவுவாதிகளின் ஊடுருவலும் சேர அவ்வப்போது துப்பாக்கிகளின்றி வெடிச்சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

பல பேச்சுவார்த்தைகள் தோற்றுப்போக, அம்மா மட்டும் கட்டாய வெளிநடப்புச் செய்யப்பட்டு கொஞ்சம் வசதியான சீனியர் ஹோமில் தஞ்சமானாள். தம்பி நீ ஒன்றுக்கும் கவலைப்படாதேயும், எனக்கென்ன இது புதுசா. நான் எட்டாம் வகுப்பில் இருந்து எஸ்.எஸ்.சி. வரைக்கும் கொழும்பில... கொன்வென்ற் கொஸ்ரல்ல தான் இருந்தனான்.

அம்மா, சீனிய ஹோம் போனபின்பு சில வாரங்கள் மௌனவிரதம் இருந்துவிட்டு, திடீரென ஞானம் வந்தவர்போல 'ஏனப்பா எங்கட அந்த, யூனிவர்சிற்றிக்கு கிட்ட இருக்கிற கொண்டோவில அம்மாவைக் கொண்டுபோய் விடலாம் தானே. அவ அங்க தனியா இருப்பா' என்டு சொல்ல, 'உங்களுக்கென்ன விசரே, அங்க இப்ப இருக்கிற ஸ்ருடன்ஸ்சை உடனே வெளியேத்தேலாது. அதுமட்டுமல்ல, அடுத்த வருஷம் மூத்தவள் அங்க போய் இருந்து தான் படிக்கப்போறா...' என்றதும், வழக்கம் போல பலூனுக்குள்ளிருந்து மீண்டும் காத்து வெளியேறியது.

அந்த சீனியர் ஹோமில தமிழ் ஆட்களே இல்லை. பெரும்பாலும் மாற்று இனத்தவர்கள்தான், ஆனால்... அங்கு சில தமிழ்ப் பணியாளர்கள் இருக்கிறார்கள். என்றாலும், 'உரையாடல் ஆங்கிலத்தில்'. அம்மாவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. காரணம் கன்னியர் மடத்தின் கல்வி மட்டுமல்ல அப்பா சில காலம் நைஜீரியாவில் பணியாற்றியபோது கூடவே இருந்து ஆங்கிலம் மட்டுமல்ல அந்த நாட்டின் இரண்டாவது மொழியான Hausa (ஹவ்சா)வையும் வீட்டுக்கு பணிகள் செய்வதற்காக வரும் கறுப்பினப் பெண்களிடமிருந்து கற்றுக்கொண்டார். எதையும் புதிதாக கற்றுக்கொள்ளும் ஆற்றல் இன்னும் அவருக்குள்ளே தொடர்கிறது. கனடாவிற்கு புலம் பெயர்ந்து வந்த பின்பும், வயது போட்டுது என்று வீட்டுக்குள்ளே முடங்கியிருக்காமல் அடிக்கடி அருகிலுள்ள நூல் நிலையம் சென்று படிக்கும் பழக்கம். யோகாவையும் சில ஆண்டுகள் முறையாகக் கற்றுக்கொண்டார். அதோடு தையல் கலையிலும், இசையிலும் மிகவும் நாட்டம் கொண்டு தன்னை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருப்பதின் காரணமாக உடல் உள நலனை கொஞ்சம் சீராக வைத்திருக்கிறார்.

வயது முதிர்ச்சியின் போது மூளைக்கு வேலையின்றி, உழைப்பின்றி, 'மேல போற வயதில இனியென்ன' வென்று பல முதியோர் சும்மா இருப்பதால்தான் டிமென்சியா, அல்சைமர்ஸ், போன்ற மறதி நோய்களுக்கு ஆளாகி அவதிப்படுகிறார்கள். அப்படியில்லாமல் அம்மா எப்போதும் தன்னை பிஸியாகவே வைத்துக்கொள்ளும் பழக்கம் ஆரோக்கியத்திற்கும் கைகொடுக்கிறது.

இப்ப சீனியர் ஹோமிலும் நான்கு சுவர்களுக்குள்ளே தனிமையில் தன்னைச் சிறைப்படுத்தாமல் எண்ணச்சிறகுகளை விரித்து ஹோமிலுள்ள உறவுகளுக்கு யோகா, இலக்கியப்பணி, வானொலி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கருத்துப் பகிர்வுகள் மட்டுமல்ல, அறையில் படுக்கும் இடத்தைத்தவிர மற்ற இடங்கள் முழுதும் படிக்கும் நூல்களால் பரவிக் கிடக்கும்.

*நூல்கள் தான் என் தாய் என்பாள்,*
*அந்த காகிதத்தாயின் உடைகள்*
*கிழியும் போதெல்லாம்*
*எங்கள் மூளையின் கிழிசல்கள்*
*தைக்கப்படுகின்றன.*
*காகிதத்தாயே உன்னை*
*விரித்து விரித்து படிக்கிறோம்*
*எங்கள் மடமையினை மூட*
*படித்ததும் மூடி வைக்கிறோம்*
*எண்ணச் சிறகுகளை விரிக்க,*
*நீ பழசாகும் போது*
*எங்கள் வாழ்க்கை புதிதாகும்.*

இது அவளின் கவிதை வரிகள், இப்படி அவளின் படைப்புகள் பல அறையினை அலங்கரித்துக் கொண்டிருக்கும். அவரின் முற்போக்கு எண்ணங்கள் வெறும் வெற்று வார்த்தைகளில் மட்டுமல்ல. ஆம், தன் உறுப்புகளை இறப்பிற்குப்பின் மண்ணுக்குத் தராமல் தானமாய் தரப்போகும் மானமுள்ள மனுசி.

*மரணத்தைக் கண்டு இதுவரை*
*மனிதம் இப்படிப் பயந்து போனதில்லை*
*தன்கையே தனக்கு உதவியாம்*
*யார் சொன்னது?*
*என்முகத்தை நானே சொறிய*
*தடைச்சட்டம்!*
*அடுத்த அரசாங்க உத்தரவை*
*எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.*
*என்கையும் முகமும்.*
*மரணத்தையே தள்ளிப் போடுகிறோம்*
*என்ற மமதையிலிருந்த மருத்துவ ஞானம்*
*மருந்துகளில்லை தடுப்பூசியில்லை*
*கைநாடி பார்த்த கைகள் கைவிரிக்கிறது.*
*அரசியல் தலைக்கன வரலாறுகளை*
*- மாற்றி*
*வல்லரசுகளையே தலைகுனியச்*
*- செய்துள்ள*
*ஒரே வல்லரசு நம்ம கொரோனா.*

ஆம் எத்தனை உயிரிழப்புகள், அதுவும் குறிப்பாக சீனியர் ஹோம்களிலிருந்த மூத்ததலைமுறை எண்ணிப்பார்க்கு முன்பே எண்பது வீதம் பேர், நமக்கு உயிர்மூச்சு தந்தவர்கள் நுண்ணிய வைரசால் மூச்சின்றி மாள்கின்ற காட்சிகள் உலகெங்கும்.

சிறுவயதில் நம் கைகளைக் கழுவி விட்டவர்களின் கைகளைக் கழுவிவிடக்கூட முடியால், 'கை கழுவி விட்டு' விலகியிருக்கிறோம். அறுபது சென்ரிமீற்றர் இடைவெளி கருவறையில் நம் தாய்க்கும் நமக்குமான தொப்புள்கொடி இடைவெளி, அதே தாய் ஆறுமீற்றர் இடைவெளியில்.

அம்மாவிடமிருந்து அவனுக்குத் தொலைபேசி அழைப்பு வருகிறது. 'தம்பி இங்க என்னோட இருந்தவை ஒவ்வொருத்தரா போய்க்கொண்டிருக்கினம், பக்கத்து அறையிலிருந்த என்னோட நல்லா கதைக்கிற அந்த ஐரிஸ் லேடியும், அவவை உனக்கும் தெரியும்தானே. அவ நேற்று!' என்று குரல் தழும்ப கண்ணீரோடு தொலைபேசியில் மகனுடன் சொல்லிக் கொண்டிருக்க, 'அம்மா ஒன்றுக்கும் கவலைப்படாதேங்கோ, புதன்கிழமை வரச்சொல்லி இப்பதான் போனுக்கு மெசேஜ் போட்டிருக்கினம் அம்மா. நானும் என்னுடைய டொக்டர் அப்பொயின்ற்மென்ரை கான்சல் பண்ணிப் போட்டு வருவேன். அழாதையுங்கோ அம்மா. அங்க, மூடியிருக்கிற கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டு... போன்லதான் கதைக்கவிடப்போயினமாம். அதுவும், கொஞ்ச நேரம் தான் விடுவினம். எனக்கும் என்ன செய்யிறதென்று தெரியேல அம்மா...' இப்படி கண்ணீரிலுள்ள சோடியம் மற்றும் குளோரின் உப்பு அயன்கள் மட்டும் தொலைபேசியூடாக பயணித்துக் கொண்டிருந்தன.

அங்கு சென்ற போது... பல ஜன்னல்களிலும் கைகள் அசைந்து கொண்டிருக்க... மரபணுக்களின் பதிவுகளிலிருந்து ஏற்படும் நுண்ணிய அசைவுகள் அசைவது புரியாமல் உள்ளத்தின் உணர்வுகளும் உணர்ச்சிகளும் உடலால் வெளிப்பட.., பாசத்தைப் பரிமாறிக் கொண்டிருந்தன.

பல ஜன்னல்களில் எந்த மனித அசைவுமின்றி திரைச்சீலைகள் மட்டுமே மெல்லிய அசைவோடு இருந்தன.



paul.joseph@thaiveedu.com


For Lease
For Lease
For Lease
$864,500
723 Ashprior Ave.
Mississauga
3 Bedroom town house
2 Bedroom Bsmt Apt.
2 Close to All Amenities
$1,899,000
1748 Spruce Hill Rd.
Pickering
4 BR 5 WR Custom Built
4100 Sqft In 60 Ft Lot
Great Location
$1900.00
275 Village Green Sq.
Scarborough
1+Den Condo Apartment
2 Washroom & 1 Parking
Close to all amenities
$2200.00
275 Village Green Sq.
Scarborough
2 Br Condo Apartment
2 Washroom & 1 Parking
Close to all amenities
$2250.00
852 Audley Rd N.
Ajax
3 Bedroom Semi Detached
3 Washroom3 Storey
Great Location
For Lease
For Lease
For Lease
For Lease
$2500.00
48 Saratoga Rd.
Scarborough
3 Bedroom Main Floor
1 Washroom 2 Parking
Close to all amenities
$3600.00
3 Lord Roberts Dr
Scarborough
3 Bedroom Semi Detached
4 Washroom 3 Level Home
Great Location
$2500.00
2466 Eglinton Ave # 919.
Toronto
2 + Den Condo Apartment
2 Washroom & 1 Parking
Close to GO and all amenities
$2,499,000
122 Euclid Ave.
Scarborough
4 BR & 5 WR Custom Built
2 BR Bsmt Apt w/ 2 Full WR
4100 Sqft. Great Location
$1700.00
2 Adam Sellers St.
Markham
1+Den Condo Apartment
1 Washroom & 1 Parking
Close to all amenities
Gnani Narasingham
Owner / Sales Representative
416-937-8090
Judy Gnanendran B.Com (Hons)
Owner / Sales Representative
416-629-9797
Move On With Re/On
www.reongtacondos.com
www.reongtahomes.com
RE/ON
Homes Realty Inc.
Brokerage
25 Karachi Dr # 15
Markham On. L3S 0B5
905-209-8080


YOGA CLASSES SCHEDULES
AS FOLLOWS
யோக அமிர்தம்
FOR ADULT
RICHMOND HILL
MONDAY
AND
WEDNESDAY
6:30 PM TO 8:00 PM
10865 bay view ave.
Richmond hill , Hindu Temple
OSHAWA
SUNDAY
AND
WEDNESDAY
8:00 AM TO 9:30 AM .
1211 Harlstone cresent
FOR CHILDREN
RICHMON HILL
MONDAY
AND
WEDNESDAY
5:00 PM TO 6:00 PM
10865 bay view ave.
Richmond hill , Hindu Temple
FOR ADULT
AJAX
THURSDAY
AND
FRIDAY
6:00 PM TO 7:30
FOR ADULT
NORTH YORK
SATURDAY
8:00 AM TO 9:30
1290 finch ave, west
unit 22 . keele and finch
Please Contact at
416 729 3419
further more information.



# வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

★ Cash incentive for referrals




**For Sellers**

Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Cosultation!

**www.vela4homes.com**










**Estate Home**

App 9,000 sft
5+ Bedrooms, 1.34 Acres
6 WR + 6 Fire Places
Fully Renovated
Nanny Suite

**Detached.**

3 Bedrooms,
4 WR
Fully Upgraded
Finished Bsmt

Chairman's Club Award Winner 2015

Chairman's Club Award Winner 2016

Chairman's Club Award Winner 2017

HOMELIFE HIGHER STANDARDS

## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



# உயிரோடு உறவாடும் மனசு!

- க. ரவீந்திரநாதன் -

மரணத்தின் வாசலில் நிற்பதை காலை வரை நான் உணரவில்லை. கண் விழிக்கும்போது சோர்வு இருந்தாலும், உற்சாகம் இருந்தது மனதில். மனம் மலர்ந்த காலை விடியலுக்கு இரவில் கண்ட கனவு தான் காரணமோ என நினைக்கத் தோன்றியது. கல்லூரிக் காலத்து மதிமுகம் வந்து நடு இரவில் என்னை வருடியதாய் ஞாபகம். போர்வையை விலக்கிய போதும், எழுந்திருக்க மனமில்லாமலே அலைகிறது மனம். அறுபதை எட்டிய பின்னும் அவள் ஞாபகமோ...? என்று என்னை நானே திட்ட நினைத்தாலும், கனவிலும் வந்து ஒட்டி நிற்கிறாளே! எப்படித்தான் மறப்பேன்...? வயதான அவளது இன்றைய முகம் தெரியாமலே, முன்பு பார்த்த அவள் நினைவைத்தான் மனதில் சுமக்கிறேன் என்பதை உணராமலே கனவுகளில் மிதக்கிறேன் என்பதை எப்போ நான் உணரப் போகிறேன்...?

இனிய நினைவுகளில் மூழ்கிக் கிடந்த என்னைத் தட்டியெழுப்பித் தேனீர் தந்தாள் என் மனைவி. நிமிர்ந்து பார்த்தேன் அவள் முகத்தை. என்னையே ஊடுருவும் பார்வை அவளிடத்தில். ஏதும் வாட்டம் தெரிகிறதா என்ற ஏக்கப் பார்வைதான் அன்றும். என் உடல் நலிவைப் பற்றிய கவலைதான் அவளுக்கு...! டாக்டரிடம் காட்டச் சொன்னாள். அலட்சியமாய் தட்டிக் கழித்தேன். என் உடல் உறுதியில் அவ்வளவு நம்பிக்கை எனக்கு. என்னைப் பற்றிய கவலையில் என்னவள் இருக்கையில், என்றோ கண்டவளை மனம் நினைக்கிறதே...! இது குரங்கு மனம்தானே...? என்று என்னை நானே சபித்துக்கொண்டேன்.

கடந்த சில நாட்களாகவே இனம்புரியாத சோர்வு என்னிடத்தில். வேலையால் அலுப்போடு வந்தாலும் சுறுசுறுப்பாய் இருப்பவன் நான். கோடை காலத்தில், பின் வீட்டோரம் தோட்டம் போடுவேன். காய்கறிக் குப் பஞ்சம் இருக்காது. கை நிறையப் பறித்து அக்கம்பக்கம் கொடுப்பதில் ஆனந்தம் எனக்கு! இம்முறை முடியவில்லை. குனிந்து நிமிரும்போது மூச்சு வாங்கியது. ஒருவித சோர்வை நான் உணர்ந்தேன். மனைவி பிள்ளைகளிடம் வெளிக்காட்டவில்லை. ஆனாலும், கூடவே இருக்கும் மனைவியால் உணரக்கூடிய பலயீனத்தின் வெளிப்பாடுதான் இது.

அருகில் படுக்கும்போது அவள் தடுத்தாலும் வயதை மீறி அவ்வப்போது தாவ நினைக்கும் குரங்கினமாய் இருந்தவன் நான். இப்போது நெருங்காமல் தவிர்க்கிறேன் என்பதை உணர முடியாத ஜடமல்ல என் மனைவி. என்றுமே என்னிடம் காணாத சோர்வுதான் பயத்தைக் கொடுத்தது அவளிடத்தில். முதிர்வை எட்டி நிற்கும் என் வயதும் ஒரு காரணம் என்றாலும், திடமானவன் என்ற எண்ணம் மாறியதில்லை என்னிடத்தில். ஆனாலும், அதைச் சாதிப்பதில் நிஜமாகவே தோற்றேன் என் மனைவியிடத்தில்.

வளர்ந்துவிட்ட பிள்ளைகளுக்கு பெற்றவர் முகம் பார்க்க நேரம் இருப்பதில்லை. பாசம் இருப்பதில்லை என்பதல்ல அதன் அர்த்தம். தலைமுறை இடைவெளியால் மனங்களைப் பகிர்ந்துகொள்வது குறைகிறது என்பதால், நடுவில் உருவாகும் சிறியதொரு இடைவெளிதான் அது. பருவம் வந்துவிட்டால் நண்பர்களோடு கழிந்துவிடும் பிள்ளைகளின் பொழுதுகள். சாமம் வரை காத்திருந்தே கழிந்துவிடும் பெற்றோரின் இரவுகள். காலம் செல்லச் செல்ல அதுவே பழகிவிடும் எங்களுக்கு.

பெண் பிள்ளைகளாய் இரு செல்வங்கள் எங்களுக்கு. பல்கலாச்சாரத்தை பார்த்து வளர்ந்திருந்தாலும், எங்களை விட்டு விலக விட்டதில்லை. அன்பால் அரவணைத்தோம். பட்டப் படிப்புவரை வழிகாட்டினோம். வசதியாய் வாழவைக்க வல்லமை இருந்தது எங்களுக்கு. ஒருத்தியையாவது கரைசேர்க்க துணை தேடி அலைகின்றோம், சாதகத்தோடு பிள்ளைகளுக்காய் அலைகின்ற சோகம் பெற்றவருக்கென்றே இடப்பட்ட ஒரு சாபம். எதிர்காலம் சிறப்பென்று பிள்ளைகளின் பிறப்பைச் சொல்லும் ஜாதகம், அவர்களது கலியாண வயதில் தருவதில்லை திருமண யோகம். பிள்ளைகளின் கைகளில்தான் அவர்களது எதிர்காலம் என்பதே நாகரீக உலகின் புதுவேதம். காலம் கடந்து பிள்ளைகள் எடுக்கும் முடிவுக்காக காத்திருக்கும் பெற்றவர்கள் நாங்கள், கடந்து செல்லும் நாட்களை எண்ணுவதே எங்கள் காலத்தின் கோலம்.

அன்று சனிக்கிழமை என்றாலும் அதிகாலையில் எழுந்துவிட்டேன். நான் கண்ட இனிய கனவும் அதற்கொரு காரணம். விடுமுறை நாட்களில் நேரம் கடந்தும் தூங்கிக்கிடப்பவன் நான். என்னைப் புரிந்தவள் என் மனைவி, என் ஆவல் தெரிந்த நல்லாள். உலகக் கால் பந்தாட்டப் போட்டி இடம் பெற இருப்பதை ஏற்கனவே சொல்லி வைத்திருந்தேன். அதற்காகவே என்னை எழுப்பிவிட்டாள். கால் பந்தாட்டம் என்றாலே குதிபோடும் என் கால்கள். சிறு வயதில் வயல் வெளியில், படித்த பள்ளியில், பந்தாட்டம் ஆடியதுண்டு. வெளிநாடு வந்தபின் விளையாட முடியவில்லை, வாய்ப்பும் கிடைக்கவில்லை, வயதும் இடம் தரவில்லை.



ஆனாலும், ரிவியில் விளையாட்டைப் பார்த்தாலே அதில் மூழ்கிவிடும் அளவுக்கு வெறிபிடித்த ஒரு ரசிகன் நான்.

சோம்பலாக இருந்தாலும், மனைவி எழுப்பியதும் எழுந்துவிட்டேன். தொலைக்காட்சியைப் போட்டேன். போட்டி ஆரம்பமாக நேரம் இருந்தது. ஆர்வக் கோளாறால் நேரத்தோடு எழுந்துவிட்டது புரிந்தது. சலிப்போடு எழுந்து கதவைத் திறந்து வெளியே வந்தேன். இதமான காலைக் காற்று உடலைத் தழுவிச் சென்றது. வீட்டின் முன்புறம் புல்லு வளர்ந்திருந்தது. விளையாட்டு ஆரம்பமாகும்வரை பொழுதைப் போக்க நினைத்து, புல்வெட்டும் மெசினை வெளியே எடுத்தேன். பெற்றோலை நிரப்பிவிட்டு வலிந்து இழுத்தேன், இயங்க மறுத்தது. மீண்டும் இழுத்தேன். நெஞ்சில் சுள் என்று வலித்தது. பொருட்படுத்தாமல் மீண்டும் இழுத்தேன், புகையை கக்கியபடி இயங்க ஆரம்பித்தது. புல்லை வெட்ட ஆரம்பித்தேன். வீட்டைச் சுற்றி பரந்த புற்தரை. வலிந்து வெட்டியதில் உடல் சோர்ந்தது. சமாளித்து வெட்டி முடித்தேன்.

உள்ளே வந்தபோது உடல் வியர்த்திருந்தது. சோர்வோடு சோபாவில் அமர்ந்தேன். ரிவி சனலை மாற்றியிருந்தாள் என் மனைவி. நாடகப் பைத்தியம் அவள். மனதுக்குள் திட்டியபடி, றிமோட்டை எடுக்க எழுந்தேன். சனலை மாற்றியபடி பின்புறம் அடியெடுத்து வைக்கையில், தலை சுற்றியது. உடல் சரிவதை உணர்ந்தேன். நான் குடித்து

தொடர்தல் 100ம் பக்கம்

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

# உயிரோடு உறவாடும்...

99ம் பக்கத் தொடர்ச்சி...

வைத்த தேனீர் கோப்பையில் என்கைபட்டு தெறித்துச் சிதறும் சத்தம்.

'ஐயோ...!' என்றேன்,

ஓடிவந்தாள் என் மூத்த மகள். நினைவுகள் மங்கி வருவதை உணர்ந்தேன். வேறொரு உலகு நோக்கிச் செல்வதுபோன்ற உணர்வு! மரண பயம் தொற்றிக்கொண்டது.

'அப்பா... அப்பா...' மகள் அலறுவது காதருகில் கேட்டது.

'என்னடி நடந்தது...!' என்றபடி என் மனைவி ஓடி வருவதும் கேட்டது.

நினைவு தப்பாதபடி, கண்களை இறுக மூடித் திறக்க முயன்றேன். இதயம் ஒத்துழைக்க மறுத்தது. மனைவி, மகள் ஓலத்தைத் தவிர வேறு எதையும் என்னால் உள்வாங்க முடியவில்லை. கை கால்களை அசைக்கவோ, வாய்விட்டுப் பேசவோ முடியவில்லை. என் உள்ளுணர்வு மங்கி-வருவதை உணர்ந்தேன்.

911க்கு மகள் அழைப்பது கேட்டது. அவர்கள் அங்கிருந்து சொன்னபடியே நெஞ்சை அமுக்கி விட்டாள் என் மகள். கை கால்களை உருவிச் சூடேற்றி என்னை விழிக்க வைக்க முயற்சித்தாள். என் வாய்மேல் தன் உதட்டைப் பதித்தவள், பலமாக ஊதி சுவாசம் தர முயன்றாள்.

நினைவுகளை நான் இழந்துகொண்டிருக்கையில், ஏக்கத்தில் தவித்தது என் மனம். 'பிள்ளைகளைக் கரைசேர்க்காமலே போய் விடுவேனோ...!' என்று ஓலமிட்டது மனம்.

'நானே உலகமென வாழ்ந்தவள், தனியாகத் தவிப்பாளே என் மனைவி...!' என்று தவித்தது ஆழ்மனம். அவசரப் பிரிவு வருவதை உணர முடிகிறது. நான் சுய நினைவை இழக்கையில் ஒருசில வார்த்தைகள் மட்டும் என் காதுகளுக்கு எட்டியது.

'சர்வதேச உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பமாகிறது...!' என்ற தொலைக்காட்சி ஒளிபரப்பாளரின் குரல்தான் அது.

அப்பாவின் மூத்த மகள் நான். அப்பா நினைவிழந்து விழுந்தபோது சத்தம் கேட்டு ஓடி வந்தவள். அப்பா தரையில் விழுந்து கிடப்பதைக் கண்டு பதறிப்போனேன். தூக்கி நிமிர்த்த முயன்றேன். அசைவு இருக்கவில்லை. தரையில் மீண்டும் படுக்க வைத்து, அவசரப் பிரிவை அழைத்தேன். அவர்கள் சொன்னபடி அனைத்தையும் செய்தேன். நெஞ்சை பலமாக அமுக்கி விட்டு காதை வைத்துக்கேட்டேன். இதயத்தின் துடிப்பில் சிறிய இயக்கம் தெரிந்தது. ஆழமான சுவாசத்துக்கு அப்பாவின் இதயம் ஏங்குவது தெரிந்தது. அப்பாவின் முறுக்கு மீசையை மேலே ஒதுக்கிவிட்டு அவர் வாய் மேல் வாய் வைத்து பலமாக ஊதினேன். ஆனாலும், என் மூச்சுக் காற்று அப்பாவின் சுவாசத்துக்கு போதுமானதாக இருக்கவில்லை. அசைவின்றிக் கிடந்தார் அப்பா.

அம்புலன்ஸ் வருவது தாமதமானது. கொதிப்போடு மீண்டும் அழைத்தேன். அவசரமாகவே வந்தார்கள். முதலுதவி செய்த பின்னும் அப்பாவின் நிலையைச் சொல்வதில் அவர்களிடம் தயக்கம் தெரிந்தது. செயற்கைச் சுவாசம் கொடுத்து அப்பாவை ஏற்றிக் கொண்டார்கள். அம்மாவை என் காரில் ஏற்றின்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்து சென்றேன். அம்மாவின் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. அதுபோல், என்னுள் எழுந்த அழுகையையும் மறைக்க முயன்று தோற்றேன்.

ஆஸ்பத்திரியில் அப்பாவை இறக்கி, அவசரமாகக் கொண்டு சென்றார்கள். அவர்களிடத்தில் தெரிந்த பதற்றம் என் கவலையை அதிகரித்தது. எங்களை உள்ளே அனுமதிக்கவில்லை. கலங்கித் தவிக்கும் அம்மாவை ஓரிடத்தில் அமரவைத்தேன். மூன்றுமணி நேரம், அப்பாவைப் பற்றிய தகவல் எதுவும் தெரியாமல் தவித்தோம். கேட்டாலும் பதில் கிடைக்கவில்லை. டாக்டர் வந்து சொல்வார் என்றார்கள்.

காலம் தாழ்த்தியே டாக்டர் வந்தார், தவிப்போடு எழுந்தேன். கோமா நிலைக்கு அப்பா சென்றுவிட்டதாகச் சொன்னார். செயற்கை சுவாசமே உயிரைப் பிடித்து வைத்திருப்பதாகச் சொன்னார்.

'முடிவு ஆண்டவன் கையில்...!' என்றவர் சென்றுவிட்டார்.

அப்பாவைப் பார்க்க அனுமதித்தார்கள். மூக்கு வாயெங்கும் குழாய்கள். சேலைன் ஏறிக் கொண்டிருந்தது. ஆட்டம் அசைவின்றிக் கிடக்கும் அப்பாவைப் பார்த்ததும் நெஞ்சம் வலித்தது. அம்மா கதறி அழுதாள். அப்பாவைத் திட்டவும் செய்தாள்.

'டாக்டரிடம் காட்டச் சொன்னேனே... கேட்டியா?' என்றுமில்லாதவாறு ஒருமையில் அப்பாவை ஏசியவள், திடீரென மயங்கிச் சரிந்தாள்.

தாவிச் சென்று தாங்கிக் கொண்டேன். கதிரையில் அமரவைத்து தோழில் தாங்கிக் கொண்டேன்.

பொத்தானை அமுக்கியதும் நேர்ஸ் வந்தாள். அவளே சோதித்தாள். அதிர்ச்சியில் வந்த மயக்கம் என்றாள். பக்கத்துக் கட்டிலில் படுக்க வைத்தோம். கண் மூடிக் கிடக்கும் அப்பா அம்மாவை மாறி மாறிப் பார்த்த போது தவித்தது இதயம். மனதைத் திடப் படுத்திக் கொண்டேன்.

அம்மா கண் விழித்ததும் மீண்டும் அழ ஆரம்பித்தாள். அவளை அணைத்து ஆறுதல்படுத்த முயன்றேன். அப்பாவின் அருகிலேயே அமர்ந்துகொண்டாள். அப்பாவை விட்டு அவள் பார்வை அகலவில்லை. என் மனமும் நிலையின்றித் தவித்தது. அப்பா மீண்டு வருவாரா என்ற ஏக்கம் என்னையே சுற்றி வந்தது. நிமிடம், மணித்தியாலம், நாள் என்று பொழுதுகள் நகரத் தொடங்கின. ஆட்டம் அசைவுமின்றிக் கிடந்தார் அப்பா. நாங்கள் மாறிமாறி ஆஸ்பத்திரியில் நின்றோம். பார்க்க வந்த டாக்டர்கள் நம்பிக்கை வார்த்தைகள் எதையும் தராமலே சென்றார்கள். முக்கிய உறுப்புகளில் சுய இயக்கம் இல்லை என்றார்கள். மூளைக்குச் செல்லும் குருதியோட்டம் தடைப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். சிகிச்சை அளிப்பதற்கு சிறிதளவாவது உறுப்புகளில் இயக்கம் அவசியம் என்றார்கள்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தது. நம்பிக்கையை இழந்துகொண்டிருந்தோம். டாக்டர்களே கைவிடும் நிலைக்கு வந்துவிட்டது தெரிந்தது! ஆனாலும், இறுதிவரை அப்பாவை கைவிடுவதில்லை என்ற முடிவோடு நானிருந்தேன். அதற்காக டாக்டர்களோடு போராடவும் தயாராக இருந்தேன். அம்மா தினமும் தங்கச்சியோடு கோயில் கோயிலாய் போய் வந்துகொண்டிருந்தாள். தனிமையில் அப்பாவின் முகத்தையே நான் பார்த்தபடி அமர்ந்திருப்பேன். செயற்கைக் காற்றில் ஏறி இறங்கும் அவர் மார்பைப் பார்க்கும்போதெல்லாம் உற்சாகமான அவரது நிமிர்ந்த நடை என் மனதில் நிழலாடும். இப்படி அவர் ஓய்ந்து கிடந்ததை நான் கண்டதே இல்லை. சிறு அசைவையாவது காட்டமாட்டாரா என்று மனம் தவிக்கும்.

டாக்டர்கள் வரும்போதெல்லாம் ஏதாவ-தொன்றைச் சொல்லிவிட்டுச் செல்வார்கள். எங்களை ஆறுதல்படுத்தும் வார்த்தைகள் என்பது எனக்குப் புரியும். அப்பாவின் பாதங்களையும், உள்ளங் கைகளையும் அடிக்கடி தேய்த்து விடும்படி சொல்வார்கள். காதருகில் எதையாவது பேசிக்கொண்டிருக்கும்படி சொல்வார்கள். இரத்தோட்டம் மூளையை எட்டினால் உணர்வுகள் விழிக்கக்கூடும் என்றார்கள்.

நானும் என் தங்கையும் அப்பாவின் காதருகில் அமர்ந்து, எங்களுக்காக அவர் செய்தவற்றை சொல்லிச் சொல்லி அழுவோம். தெரிந்தோ தெரியாமலோ நாங்கள் செய்த தவறுகளுக்கு அவரிடம் மன்னிப்பும் கேட்டோம். நாங்கள் நால்வரும் மகிழ்ச்சியாக இருந்த பொழுதுகளையும், அதன் நினைவுகளையும் ஒன்றுவிடாமல் சொல்வோம். அது அவர் காதுகளுக்கு எட்டுகிறதா இல்லையா என்ற நினைப்பே இல்லாமல் சொல்லிக்கொண்டிருப்போம்.

'அப்பா... இனி அக்காவோட நான் சண்டை பிடிக்க மாட்டன்... எழும்பி எங்களைப் பாருங்கோ அப்பா...!' என்று என் தங்கை அப்பாவின் கால்களைக் கட்டிப்பிடித்து அழும்போது அவளை அணைத்து நானும் அழுவேன்.

'என்னை விட்டுப் போயிடாதேங்கோ...!' என்று அம்மா தினமும் அப்பாவின் தலையை வருடியபடி அழுவதுகூட அங்கு வாடிக்கையானது.

அப்பாவுக்கு கடவுள் நம்பிக்கை அதிகம். அதுவும் சீரடி பாபாவில் அதீத நம்பிக்கை. பஜனைப் பாடல்களை காரில் போகும் போதுகூட கேட்டுக்கொண்டே பயணிப்பார். எனக்குப் பிரார்த்தனைகள் எதிலும் ஈடுபாடு இருந்ததில்லை. ஆனாலும் அப்பாவுக்காக அனைத்துக் கடவுளையும் வேண்டினேன். இறுவெட்டில் பதிவு செய்த பஜனைப் பாடல்களை கண்மூடிக் கிடக்கும் அப்பாவின் காதருகில் தினமும் சிலமணி நேரம் மெல்லிய ஒலியில் போட்டு வைப்பேன். கடவுளாவது கருணை காட்டமாட்டாரா என்ற எதிர்பார்ப்பு இருக்கவே செய்தது. தினமும் அன்றாடச் செய்திகளைப் பார்ப்பதற்கு அப்பா தவறுவதில்லை. நாட்டு நடப்பு, உலக அரசியல், விளையாட்டுச் செய்திகள் அனைத்திலும் அவருக்கு ஆர்வம் அதிகம். உடல் இயக்கத்தை அவர் இழந்திருந்தாலும், உணர்வுகளாவது விழிக்காதா என்ற நப்பாசையில், அவர் காதுக்கு எட்டும்படி ரிவி நிகழ்ச்சிகளை போட்டு வைப்பேன்.

டாக்டர்களோடு, நாங்களும் சேர்ந்தே முயற்சித்தும் எந்த மாற்றத்தையும் அப்பாவிடம் காணமுடியவில்லை. இரு வாரங்கள் கடந்துவிட்டன. ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கு மாய் அலைகின்றோம். அப்பாவுக்காக எதையும் தாங்கிக்கொள்ள தயாராகவே இருந்தோம். ஆனாலும், நம்பிக்கையை இழக்கும் நிலைதான் ஏற்பட்டிருந்தது. கடவுள் நம்பிக்கையும் தோற்றுவிட்டதை உணர்ந்தோம். டாக்டர்கள்கூட கை விடும் நிலைக்கு வந்துவிட்டிருந்தார்கள்.

உறவுகளும் நண்பர்களும் அப்பாவைப் பார்ப்பதற்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களது வரவு மன ஆறுதலைத் தந்தது. ஏங்கித் தவிக்கும் அம்மாவுக்கு கவலைகளைப் பகிர்ந்துகொள்ள முடிந்தது. பார்க்க வந்த சொந்தங்களை கலங்க வைத்தது அம்மாவின் கண்ணீர். அப்பாவோடு தான் வாழ்ந்த வாழ்க்கை, இன்ப துன்பம் அத்தனையும் இரண்டறக் கலந்த இல்லறம், அப்பா இல்லாத ஒரு வாழ்க்கை, இருண்ட எதிர்காலம், இப்படி எல்லாமாகச் சேர்ந்து கண்ணீராய் கரைந்தது அவளிடத்தில். அப்பாவின் காதுகளில் அம்மாவின் அழுகுரல் எட்டினாலே அவர் நினைவுகள் விழித்துக்கொள்ளக் கூடும் எனற நப்பாசை எனக்குள்! ஆனால், நம்பிக்கையை இழக்க வைத்தது அப்பாவின் அசையாமை. அப்பா கண் விழிக்க வேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனையாக இருந்தது. ஆனாலும், அப்பாவின் உண்மை நிலையை உணர்ந்தே இருந்ததால் எங்கள் கண்ணீகூட வற்றியிருந்தது. அசைவின்றி கண் மூடிக் கிடக்கும் அப்பாவைப் பார்த்தபின், இறுதி ஒழுங்குகள் பற்றிப் பேசிய உறவுகள் சிலரது முடிவான வார்த்தைகளைக் கேட்கும் போது இதயம் வெடித்தது. உண்மையில் அதுதான் முடிவோ...? என எண்ணி மனம் கலங்கியது.

இப்போதெல்லாம் டாக்டர்கள் அப்பாவின் வார்ட்டுக்கு வருகிறார்கள் என்றால், என் மனம் திக் திக் என்று அடித்துக் கொள்ளும்.

'அப்பாவை வீட்டுக்கு கொண்டு செல்லும்படி சொல்லிவிடுவார்களோ...? அப்பாவின் உயிரை பிடித்து வைத்திருக்கும் குழாய்களை அகற்றும் நிலை வந்துவிட்டதாகச் சொல்வார்களோ...?' என்றெல்லாம் என் மனம் பதறுவதுண்டு.

சில சமயங்களில், மனதைத் தேற்றும்படியான வார்த்தைகளை டாக்டர்கள் சொல்ல முற்படும்போது, ஒருவித எச்சரிக்கை மணி என் மனதில் அடிப்பதுண்டு. எந்த நிமிடமும் எதுவும் நடக்கலாம் என்ற ஒரு நிலையில், இன்று - நாளை - அல்லது நாளை மறுநாள் என்ற தவிப்புடனே நாட்கள் நகர்ந்தன.

அன்று எனக்கு விடுமுறை, அம்மாவை

தொடர்தல் 101ம் பக்கம்



உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்...
KENNEDY LAW OFFICE கெனடி சட்ட அலுவலகம்
REAL ESTATE LAW
BUSINESS LAW
CRIMINAL LAW
FAMILY LAW
IMMIGRATION LAW
ODSP APPEALS
SMALL CLAIMS
WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
NOTARIZING & COMMISSIONING

W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC
கனேடிய தமிழ் வழக்கறிஞர்
Tel: 416 613 4900
2390 Eglinton Ave. East, Suite# 223 Scarborough, ON. M1K 2P5 (Kennedy & Eglinton)
Fax: 416 613 4904 E: williamkennedylaw@gmail.com

# உயிரோடு உறவாடும்...

100ம் பக்கத் தொடர்ச்சி...

வீட்டில் விட்டுவிட்டு தனியாகவே ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். பாவம் அம்மா. மிகவும் சோர்ந்துவிட்டாள். அப்பா இல்லாத தனிமையின் ஏக்கம் அவளை வாட்டத் தொடங்கி விட்டது. வளர்ந்த பிள்ளைகளாய் நாங்கள் இருந்தாலும், அப்பா இல்லாத ஒரு வாழ்க்கையை அவளால் தாங்க முடியாது! அதை அவர்களது கடந்த கால வாழ்க்கை எங்களுக்கு உணர்த்தியிருக்கிறது. அப்பாகூட அப்படித்தான், எவ்வளவு தான் திடமானவராக மீசையை முறுக்கி, நெஞ்சை நிமிர்த்தி நடந்தாலும், அம்மா இல்லாமல் அவரால் இயங்கவே முடியாது. பிள்ளைகள் எங்களைப் பொறுத்தவரை அப்பா - அம்மா இல்லாத ஒரு வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவே மனம் பதறியது.

அன்று அம்மாவை ஆறுதல் எடுக்கச் சொல்லி விட்டு நான் மட்டும் ஆஸ்பத்திரிக்கு வந்தேன். காரை தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டு, லிப்ரில் ஏறி அப்பாவின் வார்ட்டுக்கு வந்தேன்.

‘அப்பா கண் விழித்திருக்கக் கூடும்...!’ என்ற எதிர்பார்ப்புடனேயே தினமும் காலையில் வருவேன். அதேசமயம், எதிர்மாறாக எதுவும் நடந்திருக்கக்கூடாது என்ற அச்ச உணர்வும் எனக்குள் இருப்பதுண்டு. வழமை போலவே அன்றும் மாற்றம் ஏதுமின்றிக் கிடந்தார் அப்பா.

அப்பாவோடு நிற்கையில், டாக்டர் அழைப்பதாக நேர்ஸ் வந்து சொன்னாள். மனதில் பதற்றம் தொற்றிக்கொண்டது. ஏதாவது முடிவுக்கு வந்திருப்பார்களோ...! என்று ஏங்கியது இதயம். நெருங்கிச் சென்று அப்பாவைப் பார்த்தேன். கவலையாக இருந்தது. சீரடி பாபாவின் பஜனைப் பாடலை அப்பாவின் காதருகில் போட்டு விட்டு டாக்டரிடம் சென்றேன். ‘என்ன சொல்லப் போகிறாரோ...!’ என்ற ஏக்கத்தில் கால்கள் தடுமாறின.

‘உன்னைத்தான் எதிர்பார்த்தேன்...’ என்பது போல் பார்த்தார் டாக்டர். கலக்கத்தோடு ஏறிட்டேன். கனிவோடு என்னைப் பார்த்தவர், என் தவிப்பை உணர்ந்தவர்போல் பேசினார்.

‘இரண்டு வாரம் ஆகிவிட்டது உன் அப்பா மௌனமாகி...! எந்த முன்னேற்றமும் இல்லை என்பது உனக்கே புரியும். எதுவும் செய்ய முடியவில்லையே என்ற கவலை எங்களுக்கும் இருக்கிறது. முயற்சியை நாங்கள் கைவிட்டதாக இல்லை. ஆனால், அவர் உயிர் பிழைப்பதற்கான நம்பிக்கை குறைந்து வருகிறது. உங்கள் திருப்திக்காகவும், எங்கள் இறுதி முயற்சியாகவும் சில சிகிச்சை மாற்றங்களை செய்ய நினைக்கின்றோம். சிறிய மாற்றம்தான். பலன் கிடைத்தால் நல்லது. இல்லை என்றால் இறுதி முடிவுக்கு வரவேண்டியிருக்கும். சுவாசமும், இரத்தோட்டமுமே பிரச்சினையாக இருக்கிறது. வயர்கள் மூலம் வாய் வழியாக வினியோகம் நடப்பதால், தொண்டைக் குழி புண்பட்டு, தொற்று பரவுவதற்கு வாய்ப்பிருக்கு. அதனால் அந்த வழியை தவிர்த்து, தொண்டையில் துளையிட்டு வினியோகப் பாதையை மாற்ற நினைக்கிறோம். மிகவும் சிரமமான பணி. உங்கள் அனுமதி வேண்டும். எங்களால் இயன்ற முயற்சிகளை எடுக்கிறோம். ஆனாலும் எங்கள் கைகளில் எதுவுமே இல்லை. கடவுளை வேண்டிக் கொள்ளுங்கள்...!’ என்று சொல்லிவிட்டு எழுந்தார். ஒரேயடியாகக் கைவிடும் முடிவை அவர் எடுக்கவில்லை என்பது எனக்கு ஆறுதலைத் தந்தது.

நன்றி சொல்லிவிட்டு வார்ட்டுக்குத் திரும்பினேன். உறவுகள் சிலர் அப்பாவைப் பார்க்க வந்திருந்தார்கள். ஆஸ்பத்திரிக்கு வந்ததிலிருந்து கேட்கும் அதே அனுதாப வார்த்தைகளை அவர்களிடமும் கேட்டேன். அப்பாவுக்காகப் போட்டுவிட்ட சீரடி பாபாவின் பஜனை முடிந்திருந்தது. எதற்கும் இருக்கட்டுமென்று ரிவியை ஓடவிட்டேன். வந்திருந்த சொந்தங்கள் புறப்பட ஆயத்தமானார்கள். அவர்களோடு நானும் வெளியே வந்தேன். பொழுதைப் போக்கவேண்டியிருந்தது எனக்கு. வந்தவர்கள் என்னை அணைத்து ஆறுதல் சொல்லி விடைபெற்றார்கள். உண்மையான அக்கறை உள்ளவர்களின் வார்த்தைகள் மனதுக்கு ஆறுதல் தருவதுண்டு. அன்றைக்கு வந்தவர்களிடத்தில் அப்பாவைப் பற்றிய உண்மையான அக்கறை தெரிந்தது.

வந்தவர்கள் சென்றபின், வெளிப்புறத்தில் இருந்த சோபாவில் அமர்ந்துகொண்டேன். அப்பா படுத்த படுக்கையானதிலிருந்து இரவு பகல் தூக்கம் இன்மையால் உடலும் மனமும் சோர்ந்திருந்தது. தூக்கம் கண்களைச் சுழற்றியது. உறக்கம் என்னை ஆட்கொண்டது. கண்கள் தாமாகவே சொருகிக் கொண்டன.

திடீரென ஒரு சத்தம்...! விழித்துக் கொண்டேன். அப்பாவின் அறையில் இருந்துதான் வந்தது.

ஒலித்த குரல் என்னை உலுப்பியது.

‘அடி... அடி... அடியடா...!’ என்ற குரல் ஓங்கியொலித்தது. தாவினேன் அறையை நோக்கி. அங்கு கண்ட காட்சி என்னை திகைக்க வைத்தது. அப்பாவின் கால்கள் அந்தரத்தை உதைத்துக் கொண்டிருந்தன. வாயையும், மூக்கையும் துளைத்த குழாய்கள் வெளியே இழுபட்டுத் தொங்கின.

என்ன நடக்கிறதென்றே உணரமுடியாத தருணம் அது. நான் தடுமாறித் தவித்தேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை. தாதிகளை அழைக்கும் பொத்தானை எட்டி அழுத்தினேன். அப்போதும் அப்பாவின் பார்வை ரிவியின் மேலேயே அலைந்தது. என்றும் இல்லாத பரபரப்பு அவர் கண்களில். ‘உலகக் கோப்பை உதை பந்தாட்ட இறுதிப்போட்டியின் நேரடி ஒளிபரப்பு...!’ என்ற அறிவிப்பினால் ரிவியில் மக்கள் ஆரவாரம் உச்சத்தை எட்டியிருந்தது. ஒன்றுக்கு ஒன்று என்று கோல்கள் எடுத்த நிலையில், யார் வெற்றிப் பந்தை அடிக்கப் போகிறார்கள் என்ற ஒரு விறுவிறுப்பான தருணத்தில்தான் அப்பாவிடம் இந்த அதிசயம் நிகழ்ந்திருப்பதாக எனக்குத் தோன்றியது.

அப்பாவின் மார்பையும் நெற்றியையும் தடவிக் கொடுத்து அவரை அமைதிப்படுத்த முயன்றேன். ‘அப்பா... அப்பா...!’ என்று அழைத்து அவர் பார்வையை என் பக்கமாகத் திருப்ப முயன்றேன். நித்திரைத் தூக்கத்திலிருந்து திடீரென கண் விழிக்கையில், திரைச் சீலை ஆடினாலே மனம் தடுமாறும். அதுபோன்ற ஒரு பதற்றத்தை அவரிடம் கண்டேன். என் குரலை இனம் கண்டு திரும்பிப் பார்த்தார். அவர் முகம் மலர்ந்தது. சுற்றிவரப் பார்த்தார். தான் படுத்திருக்கும் சூழலைப் புரிந்துகொண்டார் போலும். நெற்றியை சுருக்கி கேள்விக் குறியோடு என்னைப் பார்த்தார்.

‘அப்பா... நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று புரிகிறதா...?’ என்றேன். அவர் விழித்தார்.

‘இரண்டு வாரமாக சுயநினைவின்றிக் கிடந்தீங்கள்...!’ என்றேன் புன்னகையோடு. ஆச்சரியமாக என்னை நோக்கினார் அப்பா.



ravindranathan@thaiveedu.com



# ஆறாவது ஒழுங்கை கடைசி வீடு

- சாள்ஸ் குணநாயகம் -

மழை பெய்து ஓய்ந்து விட்டது வேலியில் பூத்து கிடந்த கிளுவை மரங்களில் மழை நீர் தொங்கி வளைந்து கிடந்தன.

ஆறாவது ஒழுங்கை சந்தி மூலையில் இருந்த வைரவர் கோவில் சூலத்தில் செவ்வரத்தம் பூக்கள் குத்தப்பட்டிருந்தன. கூரையும் புதிதாய் வைகோலால் வேயப்பட்டிருந்தது. தெருவெங்கும் குழிகளை நிரப்பி செந்நிற மழைநீர் நிறைந்து வழிந்தது. நான் நிலம் பார்த்து மெல்ல மெல்ல நடக்கிறேன்.

இந்த மண்ணை மிதித்த கடந்த நாற்பது வருட வாழ்க்கையில் முடிந்த இந்த ஐந்து வருடங்கள் இந்த மண்ணை மிதிக்காதே என்று தடுத்துவிட்ட தொல்லைகள்... ஏராளம்.

இந்த மண்ணை விட்டுப்பிரியேன் என்றிருந்த என்னைக்கூட துரத்தி அலைய வைத்து விட்டது யுத்தம்.

காஞ்சூரைக் காடாய் கண்டி வீதியை அண்டிக்கிடந்த இந்த கிராமத்தை உருவாக்க தெரியப்பட்ட முதல் இருபது பேரில் நானும் ஒருவன். இளந்தாரியாய் வெளிக்கிட்டு கிழடு தட்டும் வரை இந்த மண்ணோடு ஒட்டி வளர்ந்த என்னைப் பிடுங்கி எறிந்த பேய்களை நான் என்னென்பேன்.

தோல் சுருங்கி, கண் மங்கி, மயிர்முழுவதும் நரையாகி நடை தளர்ந்து தள்ளாடும் இந்த நேரத்திலா இது எனக்கு வர வேண்டும். நானும் என் பிள்ளைகளும் பண்படுத்தி உழுது, விதைத்த வயற்காட்டையும், வீட்டையும் அயலட்டையையும் மீண்டும் தரிசிக்கும் அவசரம் எனக்கு. கொஞ்சம் வேகமாகவே நடக்க முயற்சிக்கிறேன்.

எங்கள் ஒழுங்கையில் எப்போதும் அறுக்கையாய் அடைக்கப்பட்டு கிடக்கும் மாட்டுகார அம்பலம் வீட்டுவேலி ஓவென்று கட்டைகளில் தொங்கும் கம்பிகளுடன் கிடக்கிறது. மாடுகளும் இல்லை, கன்றுகளும் இல்லை.

நெடுந்தீவு அந்தோனி வீட்டில் யாரும் இல்லை. அவன் ஐந்தாம் வாய்க்காலுக்கு குடிபோய் இருப்பானோ. சின்னப்பிரகாசம் மகனுடன் சேர்ந்து இந்தியா போனவன் வீடு கவனிப்பார் அற்றுத்தான் கிடக்கும். என் கண்ணுக்கு எதுவும் தெரிவதாய் இல்லை. இந்த ஒழுங்கையும் தெருவும் எவ்வளவாய் உருக்குலைந்து கிடக்கிறது.

ஆறாவது ஒழுங்கை கடைசி வீடு. அது என் வீடு. வயலும் தோட்டமுமாய் சிறுகச் சிறுக மண்ணையும் கல்லையும் என் உழைப்பையும் சேர்த்து சேர்த்து கட்டிய வீடு. என் வீடு கம்பீரமாய் நிமிர்ந்துதான் நிற்கிறது.

விறாந்தை வளையில் ஏணைகட்டி என் பேரக் குழந்தைகள் ஆடிய வீடு.

இருண்ட மழை முகில்கள் விலகி சூரியன் உச்சியில் சுட்டுக் கொண்டு நின்றான். படலையடி கொஞ்சம் மாற்றப்பட்டுள்ளது. நிழலும் பழமுமாய் வளர்ந்து நின்ற நாவல் மரம் தறிக்கப்பட்டு வெறும் கட்டைகளாய் விழுந்து கிடந்தன. படலையை திறந்து வளவிற்குள் போனேன். வளவு முழுவதும் மாறித்தான் போச்சு.

வீட்டுக்கு முன்னால் கொடி எலுமிச்சை தடிகளில் கட்டி படர்ந்து கிடந்தது. கிணற்றடியில் வாழைகள் பொத்தி வந்து செழித்துக் கிடந்தன. மாமரங்கள் உயர்ந்து வளர்ந்து பூத்து மணக்கின்றன. தென்னைகள் வட்டு வெடித்து குலைதள்ளி அதன் ஓலைகள் நிலம் தொட்டு நிற்கின்றன.

அடிவளவில் ஒரு கக்கூசு கட்டப்பட்டிருக்கிறது.

பின்பக்க கழிவாற்றங்கரையில் வளர்ந்து கிடந்த மந்துக்காடு இப்போது இல்லை. வாய்க்காலை நிறைத்து செம்மண் கலங்கிய நீர் சுழித்து சுழித்து ஓடிக்கொண்டிருந்தது.

என் கிராமத்து காற்றை சுவாசிக்க தொடங்கிவிட்டேன். ஏதோ இழந்து போன ஒன்றை திரும்பப் பெற்றதாய் எனக்கொரு திருப்தி.

என் இயலாமை மெல்ல மெல்ல விலகி, இளமையுறுவதாய் நான் உணர்கிறேன்.



ஓவியம்: Pirunthajini Theepana

என் மனைவி பூமணியை கல்யாணம் கட்டி வீட்டுக்கு கூட்டி வந்த வேளை இருந்த பூரிப்பு இன்று எனக்கு.

ஈரமண் என் நாசி வரை வந்து மணக்கிறது.

எனது வீடு, எனது நிலம், எனது தேசம்.

என் பாட்டில் வளவை சுற்றி நடந்தேன். சற்றுத் தூரத்தே பாலை மரக் கிளையில் மயில் ஒன்று கேவிக் கொண்டு நின்றது.

அந்த நாள் எனக்கு திரும்பத்திரும்ப ஞாபகத்துக்கு வந்து போகிறது. அன்றைக்குத் தான் தர்முவின் மகளுக்கு திருமணம். சந்தியில் இராணுவத்துக்கும் இயக்கத்துக்கும் நடந்த துப்பாக்கி சண்டையில் தப்பி வந்தவர்களைத் தேடிக் கொண்டு இராணுவம் ஆறாம் ஒழுங்கைக்குள் புகுந்தது.

ஒழுங்கையின் முதலில் இருந்த வீடுகள் எரிக்கப்பட்டு, இளையவர்கள் பலரையும் பிடித்துக் வைத்துக் கொண்டது ராணுவம். வெறியாட்டமும் அடாவடித்தனமும் கொண்ட அதன் சப்பாத்து கால்களுக்குள் மிதிபட்டு நசிந்தது ஒழுங்கை. கிராமத்து எல்லா ஒழுங்கைகளிருந்தும் மக்கள் பின் பக்க ஆற்றைக் கடந்து, கினியா பற்றைகள் நிறைந்த அடர்ந்த மந்துகாடுகளைக் கடந்து, வயல் நிலங்களினூடாக ஓடத் தொடங்கி விட்டார்கள்.

இராணுவத்துக்கு துணையாக ஆனையிறவு முகாமல் இருந்து செல் தாக்குதல் நடத்தப் பட்டுக் கொண்டு இருந்தது. என் பிள்ளைகளையும் பேரர்களையும் மக்களோடு மக்களாய் ஓட விட்டு, நான் பின்னே நடந்தேன்.

தொடர்தல் 103ம் பக்கம்

# ஆறாவது ஒழுங்கை...

102ம் பக்கத் தொடர்ச்சி...

நாம், நம் நிலத்தை விட்டு எங்கே ஓடுவது?

ஆற்றைக்கடந்து வயல் வரப்புகளில் நடந்த என் தலையில் செல் சிதலம் ஒன்று வெட்டிப் பறந்தது. நான் வயல் வரப்பில் சரிந்து விழுந்தேன்.

எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டதாகவும், நினைவுகள் திரும்ப மனநல காப்பகம் ஒன்றில் கடந்த ஐந்து வருடங்களாகப் பராமரிக்கப்பட்டதாகவும் அவர்களே எனக்கு சொன்னார்கள்.

வளவை சுற்றி நடந்து வீட்டு வாசலுக்கு வந்தேன்.

‘புள்ள கோமளம், கோமளம்’ கூப்பிட்டுப் பார்த்தேன். வீட்டில் எந்த ஆளரவமும் இல்லை.

வீடு பூட்டிக்கிடந்தது. விறாந்தையில் ஒரு சாக்குகட்டில் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து வந்து மாமர நிழலில் போட்டு படுத்தேன்.

இன்று இது எனக்கொரு நிம்மதியான நித்திரை.

‘அப்பு, அப்பு ஆரப்பு நீ’.

என்னை தட்டி எழுப்பிய அந்தப்பிள்ளையை கண்களை இடுக்கி கையை புருவத்துக்கு துணையாக்கி கூர்ந்து பார்த்தேன். எனக்கு அடையாளம் தெரியவில்லை.

‘ஆரப்பு நீ? ஏனணை இதில் வந்து படுத்திருக்கிறாய்?’ மீண்டும் அந்தக்கேள்வி என் மீது பெரும் பாறையாய் விழுந்தது.

இது நான் கொத்திப்பிரட்டி பண்படுத்திய மண்... என் வளவு... நான் கட்டிய வீடு... என்னால் இவற்றைச் சொல்ல முடியவில்லை.

இந்த ஐந்து வருடங்கள் என்னை கொன்று தின்றுவிட்டன.
‘புள்ளை கோமளம் எங்கயணை?’ என்றேன்.

‘அப்பு இப்ப நாலுவருஷமா இந்த வீட்டில் நாங்கள் தான் இருக்கிறம். கோமளம் ஆரெண்டு எனக்கு தெரியாது. ஆனா, இது கோமளத்தின்ர வீடு எண்டு அயலாக்கள் சொல்லியிருக்கினம். ஆட்கள் விட்டிட்டு போன ஓடின வீடுகளிலும், வெளிநாட்டுக்கு போன ஆக்களின்ர வீடுகளிலும் பலரைக் குடியிருத்தியிருக்கினம். நாங்கள் வடமராச்சியில் இருந்து பாதிக்கப்பட்டு வந்தனாங்கள்.’

‘கோமளம் என்ர மூத்த மகள்’ என்று சொல்ல வாய் எடுத்தேன், முடியவில்லை.

எங்கள் குருவிக்கூடு பிய்த்து எறியப்பட்டு விட்டது.

‘நீ கோமளத்துக்கு சொந்தமா அப்பு?.’ மீண்டும் விசாரித்தாள்.

‘புள்ளை இந்தக் கிணத்தில் ஒரு வாளி தண்ணி அள்ளித்தாறியா’ என்றேன்.

என்னைப்பிடித்து மெதுவாகக் கூட்டிப்போய், வாளியில் தண்ணீர் அள்ளி ஊற்றினாள். நான், என் இரண்டு கைகளையும் ஏந்தி கை மண்டையில் என் தாகம் தீரக் குடித்தேன்.

‘புள்ளை நான் போறனணை.’

அவள் என்னை மிக அனுதாபமாக பார்த்துக் கொண்டிருந்தாள். படலையை தாண்டி தறிக்கப்பட்டுக் கட்டையாய் கிடந்த நாவல் குற்றிகளில் கொஞ்ச நேரம் இருந்தேன். பின்னர் எழுந்து என் கால் போன போக்கில் நடந்தேன்.



charles.g@thaiveedu.com


Science Tutoring

*Success Starts Here!*

St. Anthony Learning Centre

Anthony / Mary Selvarajah
416 836 7072

Celebrating 20 Years

Students will develop a better understanding of science by the end of the grade level with more enthusiasm. Students also develop good study skills and critical thinking skills. Good study skills can increase students' confidence, competence, and self-esteem.

**Grade 3**: Plants; Stability; Forces and Movement; Soils

**Grade 5**: Human Organs; Forces; Matter; Conservation of Energy

**Grade 4**: Habitats and Communities; Pulleys and Gears; Light and Sound Energy; Rocks, Minerals, and Erosion

**Grade 6**: Diversity of Living Things; Air and Flight; Electricity; Space

**Grade 7**: Interactions in the Environment; Structures Form and Function; Pure Substances and Mixtures; Heat in the Environment

**Grade 8**: Cells; Systems in Action; Fluids; Water Systems

**Grade 9**: Sustainable Ecosystems; Atoms, Elements, and Compounds; The Study of the Universe; The Characteristics of Electricity

**Grade 10**: Tissues, Organs, and Systems of Living Things; Chemical Reactions; Climate Change; Light and Geometric Optics

*Learing science is something student do, not something that is done to them*



DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS





Elankeeran .T

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

# நினைவேற்றம்: நாணயமூர்த்தியின் கடன்

- தேவகாந்தன் -

நான் உயர்கல்வி பயின்ற டிறிபேர்க் கல்லூரியை எப்போதாவது நினைக்கிற தருணங்களில் தானும் அதனோடு ஒட்டிக்கொண்டு வந்துவிடுகிறது சாவகச்சேரி பஸ் நிலையம். அத்தனைக்கு நெடுஞ்சாலையின் ஒடுங்கிய அவ்விடத்தில் கல்லூரி வாசலுக்கு நேரெதிரில் மிக அணுக்கமாக இருந்திருந்தது அது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக் காலில் கல்லூரி ஸ்தாபிதமாகியிருந்ததால், அதற்குப் பிறகுதான் பஸ் நிலையத்தை அந்த இடத்திலே அமைத்திருப்பார்களென்றாலும், அந்த இடத்தில் அதன் அமைவு ஏட்டிக்குப் போட்டியானதுபோல் நீண்டகாலமாய் எனக்குத் தோன்றிக்கொண்டிருந்தது.

பஸ் நிலையத்தின் ஓர் ஓரத்தில் கைவாளிக் கிணறு ஒன்று இருந்தது. மறுவோரத்தில் ஒரு பயணிகள் தங்குமிடம், தள்ளி ஒரு மலசலகூடம் ஆதியனவும். அருகிலே சந்தைக் கட்டடம் இருந்தது. கட்டடமென்பது திறந்தவெளியில் அமைந்த சில கூடங்களும் இரண்டு பக்க ஓரங்களிலுமிருந்த பலசரக்குக் கடைகளும்தான்.

எனக்கு ஞாபகமிருக்கிற வரையில் கட்டட கூடத்தில் பிரபலமாயிருந்தவை உடுப்பு மற்றும் துணிக் கடைகளும், 'மணிக் கடை' களும்தான். அங்கே பெண்கள் அதிகமாகக் கூடியதனாலேயே ஆண்களின் தொகையும் அதிகமாக இருந்ததுபோல் தெரிந்தது. சண்டியர்களின் பலப்பரீட்சை மேடையாக இருந்ததில், சந்தை நாட்களில் அங்கே அதிகமான கொளுவல்களும் சண்டைகளும் நடந்தன. ஒருவகையில் சந்தையானது அந்தச் சமூகத்தின் வாழ்வியல் கலாச்சாரத்தின் ஒரு பக்கத்தைக் காட்டும் ஒரு மாயக் கண்ணாடியாக இருந்ததென்பது மிகையான கூற்றல்ல.

அங்கேதான் எத்தனை எத்தனை சம்பவங்கள்! எத்தனையெத்தனை வன்மம், கோபம், பொறாமை, அன்பு, அரவணைப்புகளின் உணர்வுக் கோலங்களின் வெளிப்பாடுகள்!

வல்லிபுரநாதன் - சரோஜாதேவி கூத்து நடந்தது அங்கேதான். பல காலமாக அந்தப் பகுதியிலும் அது கடந்தும் பேசப்பட்ட துக்கமும் நகைப்பும் கலந்த சம்பவம் அது.

கச்சாயிலுள்ள தினக்கூலி வல்லிபுரநாதனும் சரோஜாதேவியும் கணவன் மனைவியர். சனிக் கிழமைகளில் தினக்கூலித் தொழிலாளருக்கு வேலை இருப்பதில்லை. முழுக்கு நாளென அந்த நாள் வகுக்கப்பட்டிருந்தது காரணமாயிருக்கலாம். ஆனாலும் அன்றைக்குத்தான் அந்த வார வேலைக்கான சம்பளம் அவர்களுக்குக் கிடைப்பதனால் வல்லிபுரநாதனுக்கு சனிக்கிழமைகளிலும் பாதி வேளைக்கு மேலே நேரமொழியாது. அவர்களுக்கிருந்த வீட்டுத் தோட்டத்திலும் காணியிலும் விளைந்த பயத்தை, தக்காளி, கத்தரி, பாகல் மற்றும் மாங்காய், தேங்காய், முருக்கங்காய் ஆகியவற்றை விற்க சரோஜாதேவிதான் சாவகச்சேரிச் சந்தைக்கு வந்து அவற்றை விற்றுவிட்டு, மீன் மற்றும் வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கிச் செல்வாள்.

ஒரு சனிக்கிழமை நாளில் நேரத்தோடு வாரக் கூலியைப் பெற்றுக்கொண்ட வல்லிபுரநாதனுக்கு, சந்தைக்கு வந்திருந்த மனைவியையும் கூட்டிக்கொண்டு போகலாமென்ற எண்ணம் எழுந்திருக்கிறது. நேரே சைக்கிளை மிதித்துக்கொண்டு சந்தைக்கு வந்திருக்கிறான். வரி செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு சில்லறை வியாபாரிகள் தம் விளைபொருட்களை விற்பனை செய்யும் இடத்தில் மனைவியைத் தேடினான். சரோஜாதேவி அங்கே காணப்படவில்லை. பஸ் நிலையத்தில் வந்து பஸ்ஸிற்கு காத்து நிற்கிறாளோவென தேடினான். அங்கும் அவளைக் காணமுடியவில்லை. அது அவனுக்குப் புதுமையாகவிருந்தது. அவன் மேலும் காத்திருந்து களைத்து மதியம் இரண்டு மணிக்கு மேலே வீட்டுக்கு வந்திருக்கிறான். வீட்டிலே சரோஜாதேவி மிகவும் கலகலப்பான மனநிலையில் எம்.ஜி.ஆரின் கலங்கரை விளக்கம் பட பாடலொன்றை முணுமுணுத்தபடி சமையலை ஆரம்பித்துக் கொண்டிருந்தாள்.

தான் சந்தையில் சென்று அவளைத் தேடிய விபரத்தைச் சொல்லி, அவள் எப்படி தன் கண்ணில் தட்டுப்படாமல் வீட்டுக்கு வந்து சேர்ந்தாளென வல்லிபுரநாதன் விசாரித்தான். அவளும் நேரத்தோடு அன்று வியாபாரம் முடிந்துவிட்டதால், தான் நடந்தே வீடு வந்துவிட்டதைச் சொன்னாள். வெய்யில் அன்று தணிந்திருந்ததென காரணத்தை வேறு அழுத்தினாள்.

வல்லிபுரநாதனுக்கு அவள் பதில் சொன்ன விதத்தில் திருப்தியிருக்கவில்லை. அவளுக்கு நடையென்றால் கொலைக்களம் போறமாதிரி என்பது அவனுக்குத் தெரியும். சாவகச்சேரி தேவேந்திரா தியேட்டரில் 'கலங்கரை விளக்கம்' ஓடுவதும், அன்றைய சனியில் பகல் பத்து மணிக்கு மெற்னி காட்சி இருந்ததும் அவனுக்கு உடனடியாக ஞாபகம் வந்து அவளது பாடல் முணுமுணுப்பை அதனோடு இணைத்துவைத்தது. ஆயினும் மேலே ஒன்றும் கேளாமல் விட்டுவிட்டான்.

ஆனால் தமக்குள் மெல்லிதாய் விழுந்த படுக்கையின் ஒரு பிறிநிலையை உணர்ந்த வல்லிபுரநாதன், சனிக் கிழமைச் சந்தை நாளின் சரோஜாதேவியது போக்கு வரத்துக்களை கவனிக்க ஆரம்பித்தான். அப்போதுதான் இடையிட்ட செய்தியாக அவள் யாரோ ஒருவனுடன் சரசாலைப் பக்கமெல்லாம் சைக்கிளில் திரிவதாக அவனுக்குத் தெரியவந்திருக்கிறது. தன் மனைவிக்கும் சாவகச்சேரிச் சண்டியன் ஆனந்தனுக்குமிடையே இருந்த தொடர்பு மேலுமான விசாரணையில் அவனுக்குத் தெளிவாகிப் போனது.

சண்டியன் ஆனந்தனை வல்லிபுரநாதனால் என்ன செய்துவிட முடியும்? மேலும் என்ன தான் செய்துவிடவும் வேண்டும்? ஊசி இணங்காமல் நூலை எப்படிக் கோர்ப்பதென்ற ஒரு தர்க்கம் இருக்கிறதல்லவா. அதனால் வீடு வந்த சரோஜாதேவியுடன்தான் பிரச்னைப்பட முடிந்தது. விசாரிப்புகள் கோபமாகி, கோபம் அடிபிடியாகி வல்லிபுரநாதன் வீட்டைவிட்டு வெளியேறி தனது தாய் வீட்டிற்குப் போய்விட்டான்.

பிறகு உறவினர்கள் மூலமாய் பேச்சுவார்த்தை நடந்து வல்லிபுரநாதனும் சமாதானமாகி வீட்டில் வந்திருந்து குடும்பம் நடத்த ஆரம்பித்தான். சரோஜாதேவியும் அடக்கமான வீட்டுப் பெண்ணாக இருந்துவர, அவனே ஒருநாள் அவளை மறுபடி சந்தைக்குப் போய்வர கேட்டான். சனிச் சந்தைகள் அப்படியே சரோஜாதேவிக்குத் தொடர ஆரம்பித்தன. ஆனால் நடந்த சண்டையில் தன் பல் போன சோகத்தை சரோஜாதேவியால் பொறுத்துப்போக முடியவில்லையென்றே தெரிந்தது.

காலம் அவ்வாறு நகர திரும்பவும் வல்லிபுரநாதனுக்கு சந்தையிலிருந்து தன் மனைவியது வீடு திரும்புகையின் தாமதங்களால் மறுபடி சந்தேகம் தொட்டிருக்கிறது. ஒரு நாள் மாலை ஐந்து மணியாகியும் சரோஜாதேவி வீடு திரும்பாதிருக்க, சைக்கிளை எடுத்துக்கொண்டு சென்றபோது ஆனந்தனுக்கு முன்னால் அழுது புலம்பி தன்னைக் கூட்டிக்கொண்டு எங்காவது போய்விடும்படியும், தான் இனிமேலும் தன் பற்களை இழக்க முடியாதென்றும் கூறி, ஒரே பிடிவாதமாய் நின்றிருக்கிறாள் சரோஜாதேவி. சந்தை பூட்டப்படவிருந்த அந்த கடைசிச் சமயத்தில் சொற்பமான மனிதர்களே அங்கே நின்றிருந்ததால் நிகழ்வு அநேகரின் கண்களுக்கும் பார்வையாகிப் போனது மட்டுமில்லை, வல்லிபுரநாதனும் அதைத் தெளிவாகக் கண்டான்.

ஆனந்தன் பெரிய சந்தைச் சண்டியன் என்பதை மட்டுமில்லை, சூழலையே மறந்துபோனான் வல்லிபுரநாதன். தான் ஒருமுறை மன்னித்த பிறகும் தன் காமத்திளைப்பை விட்டுவிடாத மனைவிமேல் தீயாய் வெகுண்டெழுந்தான். 'நீ அவனோட போறதென்டா உப்பிடியே போயிடு, ஆனா நீ கட்டியிருக்கிற சீலை என்ர உழைப்பில வாங்கினது. பாவாடை, சட்டை என்ர உழைப்பில வாங்கினது. அதுகளை அவிட்டுத் தந்திட்டுப் போ'வென கத்திக்கொண்டு போய், அவளது கதறலையும் பொருட்படுத்தாமல், அவளது சேலையை வலுக்கட்டாயமாய் உரிந்தெடுத்துவிட்டான். அவளது பாவாடை சட்டைகளைக் கிழித்தெடுக்கவும் அவன் முயல, கூச்சலிட்டபடி பெண்களின் மலசலகூடத்துள் ஓடி தப்பித்துக்கொண்டாள் சரோஜாதேவி.

பெண்கள் மலசலகூடத்துள் நுழைய துணியாத வல்லிபுரநாதன் ஆனந்தனை ஒரு மிறாய்ப்புப் பார்வை பார்த்தபடி சைக்கிளை எடுத்துக்கொண்டு வீடு வந்துவிட்டான்.



தொடர்தல் 105ம் பக்கம்

# நினைவேற்றம்...

104ம் பக்கத் தொடர்ச்சி...

இத்தனை களேபரம் நடந்த வேளையிலும் ஆனந்தன் தூண்களுக்கும் மரங்களுக்கும் பின்னாலே ஒதுங்கி நின்றுகொண்டான். ஒரு வார்த்தை வாய் திறந்து பேசவில்லை. ஆனால் வல்லிபுரநாதன் அங்கிருந்து போன பின்னால் சரோஜாதேவியைக் கூப்பிட்டு தனது வேட்டியை அவிழ்த்துக் கொடுத்து விட்டு சஸ்பென்ரர் மட்டுமாக சைக்கிளில் ஏறி தன் வீடு போனானாம். விபரமறிந்த பார்வையாளரிடமிருந்து ஒரு அனுதாபக் குரல் சரோஜாதேவிக்காக கிளரவில்லையாம். மாறாக, 'அமர் பிடிச்சுத் திரியிறவளை வைக்கு உதுதான் சரியான பாட' மென்றும் புறுபுறுத்ததாம்.

இதுதான் வல்லிபுரநாதன் - சரோஜாதேவி கூத்து.

சந்தைக்குள் அம்பாள் தேநீர்க்கடை இருந்தது. அங்கேதான் எங்கள் வயதினைப் பொருட்டாமல் சிகரெட்டோ பீடியோ தருகிறவராக கடைக்காரர் இருந்தார். மட்டுமில்லை, அந்த தேநீர்க் கடை சந்தைக் கட்டடத்துக்குள்ளிருந்த 'மணிக்கடை'க்கு நேரேயும் இருந்திருந்தது. அங்கே காப்பு வாங்க, மணிமாலை வாங்கவென பெட்டைகள் பெண்களின் கூட்டம் அதிகமாயிருக்கும். அழகுகள் தேடிய எங்களின் படையெடுப்பு அங்கிருந்த தியேட்டர்களைப் போலவே 'மணிக் கடை'க்கு எதிரிலுள்ள அம்பாள் தேநீர்க் கடையிலும் அதிகமாக விருந்தது.

அப்படியான ஒருநாளில்தான் நான் வல்லிபுரநாதன் - சரோஜாதேவி கூத்தை யாரோ கூறக் கேட்டேன்.

சாவகச்சேரி சந்தை வாரத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று நாட்களில் கூடியதென்றாலும் சனிக்கிழமைச் சந்தைதான் விசேஷம். சுற்றுப் பக்கத்திலுள்ள தோட்ட கிராமங்களிலிருந்தெல்லாம் விற்பனைக்கு வந்துசேரும் விளைபொருட்களால் கொள்வோரும் கொடுப்போருமாய் சந்தை நிறைந்துபோய்க் கிடக்கும். அங்கிருந்து கொள்முதல் செய்து கொழும்புக்கு காய்கறிகளும் பழவகைகளும் லொறிகளில் அனுப்புமளவு அவை நிறைய வந்து குவிந்த சந்தையும் அது.

1960களின் ஆரம்பத்தில் மாதத்தின் போயா நாளை முன்வைத்தே வார விடுமுறைகள் கணிக்கப்பட்டன. போயாவென்பது பூரணை நாள். பூரணைக்கு அடுத்து வரும் ஏழாம் நாளில் கால் போயாவும், பதின்நான்காம் நாளில் அரைப் போயாவும், இருபத்தோராம் நாளில் முக்கால் போயாவுமென கணிப்பிருந்தது. இருபத்தெட்டாம் நாளில் முழுப் போயா. இவ்வாறான கால் அரைப் போயா நாட்களும் அதற்கு முந்திய பிறி - போயா நாட்களுமே விடுமுறை நாட்களாக வரும். அது எந்த நாளிலும் வரலாம். பிறி-போயா நாளில் அரை நாள் பள்ளி நடைபெற்றது. பள்ளிகளுக்கு மட்டுமில்லை, அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களெல்லாம் இந்த முறையிலேயே இயங்கின. அப்போது சனிகளிலும் பள்ளி நடக்க வாய்ப்பிருந்ததால், சனிக்கிழமைச் சந்தை நாளில் பாடங்கள் நடத்துவதற்கு அங்கே சிரமமேதும் இருந்ததாவெனத் தெரியவில்லை.

1985க்குப் பின்னால் நவீன சந்தையின் மாடிக் கட்டடம் அங்கே எழுந்துவிட்டது. அப்போதே சந்தையின் ரூபம் மாறத் தொடங்கியிருந்தது. பின்னால் யுத்த காலத்தில் எவ்வளவோ மாறிப் போயிற்று. இறுதி யுத்தத்தின் பின்னால் ஒருமுறை நான் அங்கு சென்றிருந்தபோது திகைத்துப் போனேன். அது நானறிந்த சாவகச்சேரி பஸ் நிலையமாகவோ, சந்தையாகவோ இருந்திருக்கவில்லை. அவற்றின் திசமங்களே மாறிப்போயினபோல் அவை வேறெவை-யோவாக நின்றுகொண்டிருந்தன.

ஆனால் அப்போதும் அந்த அந்தக பிச்சைக்காரனின் மாய உருவும், 'தம்பீ, ஒரு சதம்' என யாசிக்கும் குரலும் என் மனக் கண்களிலும் செவிகளிலும் விழுந்துகொண்டு இருக்கத் தவறவில்லை. சந்தை நாளலென்றில்லாமல் எந்த நாளிலும் அந்த பஸ் நிலையத்தில் பிச்சையெடுத்துத் திரிந்த, வாழ்ந்த பிச்சைக்காரன் அவன். பஸ் நிலையம், சந்தை ஆகியவற்றின் எல்லா பழைய ஸ்திதிகளையும் மறைத்துக்கொண்டு, தானே அவை அனைத்தினதும் ஒற்றைப் பிரதிநிதியாய் அவன் நின்றுகொண்டிருந்தான்.

எத்தனை கலகலப்பு, ஜன சந்தடி இருந்தாலும் தன்னை அந்த இடத்தில் தனியாய் நிறுத்தியிருப்பான் அவன். ஒருவேளை நெடுத்த, மெலிந்த, முழு நரையோடிய அந்த உருவமாக அன்றி, அவனது 'கண் தெரியாது; தம்பீ, ஒரு சதம்' என்று யாசித்துத் திரிந்த அந்தக் குரலும் சொற்களுமே நினைவழியா என் நெஞ்சத் தடத்தில் அவனை நிறுத்திவிட்டிருந்தனவோ?

அவ் அந்தக பிச்சைக்காரனுக்கு தம்பு என பெயரென்று தெரிந்தது. ஒரு காலத்தில் நன்றாக வாழ்ந்தவனென்றும் சொல்லிக் கொண்டார்கள். பார்வையும் பின்னாலேதான் போனதென அறியமுடிந்தது. அவனுக்கு எவரையும் தம்பியென்று கூப்பிடுகிற வயதுதான். ஆனாலும் பெண்களை எதிர்ப்படுகிற போதுமட்டும், 'அம்மா; ஒரு சதம்' என கேட்டுவிடுவான். அது எப்படி அவனால் முடிகிறதென்று நாங்கள் சிலவேளை யோசித்து, அவனுக்கு கண் தெரியுமோவெனக் குழம்பியிருக்கிறோம். அதை அவன் தன் பிற புலன்களால் உணர்ந்துகொள்வதாய் பின்னால் தெளிவுகொண்டும் இருக்கிறோம்.

'தம்பீ, ஒரு சத'மென யாசிக்கும் தம்பு, இரண்டு சதமோ ஐந்து சதமோ கொடுத்தால் மறுப்பவனில்லை. ஆனாலும் ஒரு சதத்தையே தன் மிக மிகக் குறைந்த தேவைகளுக்காக அவர்களிடமிருந்து அவன் எதிர்பார்க்கும் மிகக் கூடிய தொகையாக அதுவே இருந்திருக்கிறது.

ஒரு சதம் ஒரு சதமாக வாங்கி என்னதான் செய்துவிட முடியும் அவனால்?

நான் யோசித்திருக்கிறேன்.

அந்தக் காலத்தில் எவ்வளவோ செய்யலாம்தான்.

ஐந்து பேரிடம் ஒரு சதம் வாங்கினால் ஒரு தேநீர் குடித்துவிடலாம். பத்துப் பேரிடம் வாங்கிவிட்டால் தேநீரோடு ஒரு வடையும் சாப்பிடலாம். முப்பத்தைந்து பேரிடம் வாங்கிவிட்டால் மதியத்துக்கு ஒரு மரக்கறிச் சாப்பாடே வாங்கிச் சாப்பிடலாம் அல்லது அரை மீன் சாப்பாடு வாங்கலாம். அரைச் சாப்பாடென்றாலும் சூரையோ சூடையோ ஒரு மீன் பொரியலுடன் கிடைக்கும்.

அதனாலேயே அவன் ஒவ்வொருவரிடமும் ஒரு சதத்தை யாசிப்பதாகவும் கொண்டுவிட முடியாது. தொழில் தந்திரமென்றுமே சொல்லிவிட ஏலாது. அது அவனது பணியின் தன்மையாக இருந்தது. அது 'வேலை செய்தது' என்பது வேறு விஷயம். ஆனால் அந்தப் பணிவோடும் அமைந்ததே அந்த உருவமென்றுதான் எனக்குப் பட்டது.

அப்போதிருந்த இலங்கை நாணயங்கள் மிக அழகியனவாக இருந்தமை ஞாபகம் வருகின்றது. ஒரு சதம் செப்பிலும் இரண்டு, ஐந்து, பத்து, இருபத்தைந்து, ஐம்பது சத நாணயங்கள் பித்தளையிலும் இருந்திருந்தன. மேலே ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து, ஐம்பது, நூறு ரூபா எல்லாம் தாள் காசுகள். ஐந்து சத நாணயம் சதுரமாய் இருந்திருந்தது. இரண்டு மற்றும் பத்து சத நாணயங்கள் வட்டத்தில் நெளிவுகள் கொண்டவை. மீதிக் குத்திகள் வட்டமாக அமைந்திருந்தன. இருபதாம் நூற்றாண்டிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அரச நாணயசாலையில் வார்க்கப்பட்ட காசுகள் அவை. அவற்றின் வார்ப்பு ஆண்டுகள் நாணயங்களில் பதிவாகியிருந்தன. அவற்றின் ஒரு புறத்தில் ராணியினதோ ராஜாவினதோ உருவங்கள் பொறிபட்டிருந்தன. மறுபுறத்தில் சிலுவை அடையாளம் அல்லது தென்னை மர உருவமிருந்தது.

ஒரு சத நாணயத்தில் மட்டும் இரண்டு வகைகள் இருந்தன. ஒரு வகை சப்பையானது. இதை முழங்கையால் தேங்காய் உடைக்கும் ஆற்றல்கொண்ட அருச்சுனன் மட்டுமே இரண்டு கை விரல்களாலும் நெளிக்கக்கூடியவனாய் இருந்தான். மற்ற வகையானது மொத்தமாயிருக்கும். இந்த மொத்த நாணயம்தான் சிறுவர்களின் 'காசு கட்டு' விளையாட்டில் விரும்பப்படுவது. காசுப் பந்தயம் வைத்து 'கடுதாசி' விளையாடக் கூடாதென்று சட்டமிருந்தது. காசையே விளையாடுவதைத் தடுக்க சட்டமிருந்ததா தெரியவில்லை. ஆனால் 'காசுகட்டு' விளையாடும்போது தூரத்தில் சனிற்றரிக்காரரினதோ, நுளம்பெண்ணை அடிப்பவர்களதோ காக்கி நிற யூனிபோர்மைக் கண்டாலே பொலிஸென நினைத்து சிறுவர்களெல்லாம் கூவிக்கொண்டு பயந்தொழிவார்கள்.

இலங்கையின் பழைய ஒரு சதம் பற்றி எண்ணமெழும் இத்தருணத்தில் இன்றைய கனடிய ஒரு சத நாணயத்தின் நினைவு வராமல்போகாது. ஏழெட்டு ஆண்டுகளின் முன்னால் இங்கேயும் ஒரு சத செப்பு நாணயம் புழக்கத்தில் இருந்தது. இப்போது இல்லை. ஒரு சத நாணயம் புழக்கத்தில் இல்லையெனில், வியாபார மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்யும் நிறுவனங்களில் கணக்குகள் எவ்வாறு செய்யப்படுகின்றன?

அதுவொரு நல்ல தமாஷான சங்கதி. அதை விட்டுக் கொடுப்பும், விட்டு எடுப்புமென சொல்லலாம்போல் தோன்றுகிறது. உதாரணமாக, 27 சதம் கணக்கில் வந்தால் 25 சதம் கொடுத்தால் கணக்கு சரியாகிவிடும். அதில் வாடிக்கையாளருக்கு இரண்டு சதம் லாபமாக நிற்கும். 28 சதம் கணக்கில் வந்தாலோ முப்பது சதம் கொடுக்கவேண்டும். அப்போது இரண்டு சதம் அவருக்கு நஷ்டமாக வரும். சட்டப்படியாகவே இந்த அமைவு. யாரும் அதை பெரிதாக எடுப்பதில்லை. ஒருபோது இரண்டு சதம் நஷ்டமாகிறவேளை, இன்னொருபோது இரண்டு சதம் லாபமாகிறதுதானே என்ற நினைப்புப்போலும், ஆனால் கணக்கு என்னவோ பிழையாகத்தானே இருக்கிறது.

அந்தப் பிச்சைக்காரனின் குரல் என் உட்செவிகளில் ஒலிக்கும்போதெல்லாம் எனக்கு வேறொரு நிலபரத்தின் கதையும் மறதி கிழித்து ஞாபகமாய் மேலெறும். அப்போது 'தம்பீ, ஒரு சத'மென நானே அந்த வார்த்தைகளை ஒலித்த திடுக்காட்டுப் போவேன். ஒரு சதத்தால் என்ன செய்துவிட முடியுமென நினைத்த நான், ஒருமுறை ஒரு சதத்துக்காக பட்டபாட்டை எப்படியென்று விளக்குவது?

'யானை எருத்தம் பொலிய குடைநிழற் கீழ் சேனைத் தலைவராய்ச் சென்றாரும் சென்றிரப்பர் ஓர் நாள்' காலம் மாறி உறக்காலென்ற பழம்பாடல் தெரிந்திருந்தது. 'வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரி முன்னர் வைத்தூறு போலக் கெடும்' என்ற குறள் ஞாபகமிருந்தது. ஆனாலும் எச்சரிக்கையுடன் வாழ்க்கையை நடத்த முடியாது போய்விட்டதே.

இவ்வளவு பின்னணியுடன் இந்தப் பதிவைத் துவங்கியதே நாணயமூர்த்தியின் கடன் விஷயத்தைச் சொல்வதற்காகத்தான்.

கதை இதுதான்:

அப்போது நான் ஈழநாடு தினசரியின் ஆசிரிய குழுப் பணியிலிருந்தேன். அந்த வாரத்தில் எனக்கு மாலை 5-10 மணி நேர வேலை. ஏதோ பிராக்கில் நானிருக்க மாலை நான்கு மணி ஆகிவிட்டிருந்தது. அவசரமாய் வெளிக்கிட்டுக்கொண்டு பொக்கற்றைத் தடவினால் 24 சதம்தான் வந்தது. சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல பஸ் ரிக்கற்றுக்கு 25 சதம் வேண்டுமே! அக்கம் பக்கத்தில் யாரிடமாவது கேட்கலாமென்றால் அந்தக் கடைசி நிமிஷத்தில் ஓடிப்போய் யாரிடமும் வாய்விட மனம் ஒப்பவில்லை. அது பழக்கமுமில்லை. வரட்டுக் கௌரவமென்றில்லை. அடங்கி ஒடுங்கி இருந்தாலும் வாழ்ந்தது அப்படித்தான். 'ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இரவின் இழி வந்ததில்'லையாமே!

சைக்கிளில் போகலாம். ஆனால் சுமார் பத்து மைல் தூரத்தை இடைஞ்சலின்றிக் கடக்கும்படியான நிலைமையில் சைக்கிள் இருக்கவில்லை.

ஒரு சதம் இருந்தால் போதும், யாழ்ப்பாணம் போய்விடலாம். திரும்பி வருவதற்கு அலுவலக நண்பர்களிடம் கேட்டுக்கொள்ள முடியும். அவ்வாறான கொடுக்கல்வாங்கல் எங்களிடையே சகஜமாகவிருந்தது.

உடனடியாக ஒரு தந்திரம் மனத்தில் உதயமாகியது.

வீட்டுக்குக் கிட்ட நாணயமூர்த்தியின் கொட்டில் கடை இருந்தது. நாணயமூர்த்திதான் பெயரோ, நாராயணமூர்த்தி என்ற பெயரைத்தான் அவ்வாறு திரித்துச் சொல்கிறார்களோ என்று எனக்குத் தெரியாது. ஆனால் நாணயமூர்த்தியென்று இலங்கையில் யாருக்கேனும் பெயரிருந்ததாய் நான் கேள்விப்பட்டிருக்கவில்லை.

ஆபத்து அந்தரத்துக்கென்று ஒரு சதமாவது கடன் கொடுக்காத ஒரு கடை எங்காவது இருக்குமென்றால், அது நாணயமூர்த்தியின் கடைதான். இருந்தும் கடையை மிகவும் துணிச்சலாகவும் நம்பிக்கையோடும் அணுகி, சைக்கிள் பிறேக் கம்பியின் ஸ்குறூ அடிக்கடி கழருகிறது, அதை இறுக்குவதற்கு ஒரு மெல்லிய ஒரு சதம் தேவையென்று அவனைக் கேட்டேன். காலையில் கொண்டுவந்து தந்துவிடுவதாக வேறு நம்பிக்கையும் சொன்னேன். நாணயமூர்த்தி எதுவும் சொல்லாமல் மேசை லாசச்சியை இழுத்து ஒரு மெல்லிய ஒரு சத நாணயத்தைத் தேடியெடுத்துத் தந்தான்.

நானும் வேலைக்குப் போய்வந்தேன்.

நாணயமூர்த்தி கடையிலேதான் இருந்தான், நானும் அந்த வழியால் போய்வந்துகொண்டுதான் இருந்தேன். அவ்வப்போது கடையிலே சிகரெட் வாங்கவும் செய்தேன். ஆனால், அந்த ஒரு சதம்பற்றிய நினைவு எனக்கு எழவேயில்லை. அவ்வளவிற்கு மனம் பல்வேறு அந்தரங்களுக்குள் மூழ்கிப்போய் இருந்ததுதான் காரணமெனினும், எந்தவகையிலும் அதுவொரு சமாதானமாகிவிடாது. பின்னால் நானும் கிளிநொச்சி வாசமென்றும் கப்பல் வேலையென்றும் அலைந்ததில் அந்த ஒரு சதத்தை நினைக்க நேர மற்றுப் போனேன்.

கொஞ்ச காலத்துக்குப் பின்னால் நாணயமூர்த்தியும் செத்துப்போனான்.

இப்போது ஊர் செல்கிறபோதெல்லாம் அந்தப்பிச்சைக்காரன் ஞாபகமாகிறவேளை 'தம்பீ, ஒரு சதம்' என்று யாசிக்கும் அவனது பணிவின் சொற்களும் கூட வந்துகொண்டு இருக்கின்றன போல், நாணயமூர்த்தியின் ஒரு சதக் கடனும்.

கடன் என்னவோ ஒரு சதமெனினும், அவனிடம் நான் அரை நூற்றாண்டுக்கு முன் பட்ட அந்தக் கடன் மிக மிகப் பெரியது. அது கடன்கூட அல்ல, ஒரு தந்திரத்தில் நான் செய்த மோசடி.

அதை எத்தனை டொலர்களாலும் என்னால் இனி ஈடுகட்டிவிட முடியாது. தாளாத் துக்கமொன்று என் நெஞ்சில்
கவிந்து விரிந்தது.

devakanthan@thaiveedu.com




Markham
Sheppard
Daniels FirstHome™ at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HIGHER STANDARDS
*Independently owned & operated
HomeLife/Champions Realty Inc, Brokerage*
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
Head Office
(905) 673-9873
Toronto/ New Market/Durham region
Sam (647) 986-2393
Brampton/Mississauga/Halton /Peel region
Neel (647) 891-9445
Ottawa
Iggy - 613 799 3519 /613 237 3569
Hamilton/Waterloo /St Catherines
Dharmaweera (519) 760-1280
Montreal
Gana (514) 573-0093
Edmonton/Calgary
Randy (604) 399-8785
Email : randy.kulasekare@kmrgloballogistics.com
Vancouver/British Columbia
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5
Email : admin@kmrgloballogistics.com
AIR CANADA
For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact
Kumar (905) 673-9873
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308
KANDY
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59
BATTICALOA
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302
United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
Tel: 02024596633 - Mobile 07949143535
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com

Bringing Your Dreams To Life!

RE/MAX

மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி

RE/MAX REAL ESTATE CENTRE INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

Mahesan Subramaniam
BROKER

Free Home Evaluation with No Obligation



416-816-0141

141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047
* Not intended to solicit properties already listed for sale, or buyers under contract.

Income Tax
Augustine & Associates
25 Years Canadian Experience

" Rapid,Accurate & Affordable Service."
(Quebec, Ontario & Other Provinces)

EFILE

- Personal
- Business
- Corporate
- GST,HST & QST
- Bookkeeping
- Payroll
- T4 & T4A
- Rental Releve 31




Wimal Augustine
ON: 416 617 6735
QC: 514 279 7138
Toll: 1 800 668 9048

YOUR CHOICE IN
REAL ESTATE

Jesmine J Wimalendran
647.871.1921

Wimal Augustine
416.617.6735

www.propertyrealtors.ca



HOMELIFE

HomeLife/Future
Realty Inc., Brokerage. Independently Owned And Operated
Office: 905.201.9977

# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்

- நா. சுப்பிரமணியன் -

இத்தொடரிலே கடந்த கட்டுரையிலே '1920கள் முதல் 50-60கள் வரையான காலப் பகுதித் தமிழ் ஆய்வியல் இயங்குநிலை' என்ற பொருண்மைசார் பார்வை தொடங்கியது. அதில் முதலிலே பதிப்பியல், அகராதியியல் மற்றும் கலைக்களஞ்சிய உருவாக்கம் ஆகியன பற்றி நோக்க முற்பட்டிருந்தோம். அவ்வகையில் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் பதிப்பியல் மற்றும் அகராதியியல் பங்களிப்புகள் பற்றிய சுருக்கமான மதிப்பீட்டுக் குறிப்புகள் அங்கு முன்வைக்கப்பட்டன. குறிப்பாக அவருடைய வழிகாட்டலில் உருவான Tamil Lexicon எனப்படும் தமிழ்ப் பேரகராதியானது நவீன தமிழாய்வுக்கான அடிப்படைக் கட்டுமான அமைப்புகளில் ஒன்றாகக்கணிக்கப்படுவது என்பதையும் அவ்வகையில் அது, 'இந்திய அளவில் ஒரு முதல்முயற்சியாக அமைந்தது' என்பதையும் அங்கு நோக்கியுள்ளோம்.

மேற்படி பார்வையின் தொடர்ச்சியாக அமையும் இக்கட்டுரையிலே அகராதியியல் சார்ந்த ஏனைய இயங்குநிலைகளிலொன்றான கலைச்சொல்லாக்கம் மற்றும் கலைக் களஞ்சிய உருவாக்கம் ஆகியன பற்றிய சில குறிப்புகள் முதலில் பதிவா

## தமிழியல் ஆய்வுகள்: 05

கவுள்ளன. அவற்றையடுத்து மேற்படி காலப்பகுதியில் 'இலக்கிய இலக்கணக் கல்வி சார்ந்த இயங்குநிலைகள்' பற்றிய பார்வை தொடங்கித் தொடரவுள்ளது.

கலைச்சொல்லாக்கம் மற்றும் கலைக்களஞ்சிய உருவாக்கம் என்பன தொடர்பாக...

'1920கள் முதல் 50-60கள் வரையான காலப்பகுதித் தமிழ் ஆய்வியல் இயங்குநிலை' என்ற பொருண்மையில் அகராதியியல்சார் முயற்சிகள் என்ற வகையில் நாம் முன்னர் நோக்கிய Tamil Lexicon எனப்படும் தமிழ்ப் பேரகராதிச் செயற்பாட்டை அடுத்து ஏனைய இயங்குநிலை என்ற வகையில இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய செயற்பாடு கலைச்சொல்லாக்க முயற்சிகளாகும். கலைச்சொற்கள் எனப்படுபவை பல்வேறு அறிவுத்துறைகளுக்குமான சிறப்புச் சொற்களாகத் திகழ்பவையாகும். ஆங்கிலத்தில் இவ்வகைச்சொற்களை Technical Terms என வழங்குவர். குறித்த ஒரு மொழியில் பிற மொழிகள்சார் அறிவுத்துறைகள் - குறிப்பாக, தத்துவம், கலை மற்றும் அறிவியல் - தொழில்நுட்பம் முதலியன - அறிமுகமாகும் சூழல்களில் அவைசார்ந்த பொருண்மைகளை அக்குறித்த மொழியில் பயிற்சிக்கு இட்டுவரும் தேவைகருதி உருவாக்கப்படுவனவே இவ்வகைச் சொற்கள் என்பது பொதுவாக நாமறிந்த செய்தியேயாம்.

இவ்வாறான கலைச்சொற்களின் உருவாக்கத்தின்போது இருவகை அணுகுமுறைகளை மேற்கொள்வதே பொதுநிலையாகும். இவற்றுள் முதல்வகையானது, 'குறித்த மொழியின் சொற்களஞ்சியத்துள் பொருத்தமானவற்றைத் தேர்ந்து, அவற்றில் சிற்சில மாற்றங்கள் செய்து பயன்படுத்திக் கொள்ளுதல்.' என்ற அணுகுமுறையாகும். இன்னொருவகை அணுகுமுறையானது, 'குறித்தமொழியில் பொருத்தமான சொற்கள் கிடைக்காத நிலையில் பிறமொழி மூலங்களிலிருந்து பெறப்படும் சொற்களைக் குறித்த மொழியின் இயல்புக்கேற்ப மொழிபெயர்த்தல் அல்லது ஒலிபெயர்த்தல் ஆகிய வகைகளில் புதிதாக உருவாக்கிக்கொள்ளுதல்' ஆகும். கலைச்சொல் என்ற ஆக்கமுறையின் பொதுவான விளக்கம் இதுவே. இவ்வாறான இருவகைளிலும் உருவாகும் கலைச்சொற்களைச் சுட்டுவதற்குப் பண்டைய தமிழ்மரபில் பரிபாஷை என்ற வடசொல் வழங்கிவந்துளது என்பதும் இங்கு நாம் நினைவிலிருத்தவேண்டிய செய்தியாகும்.

தமிழிலே கலைச்சொல்லாக்க மரபுக்கு நீண்ட வரலாறு உளது. தொல்காப்பியம், மணிமேகலை முதலான பண்டைய நூலாக்கங்களிலேயே இவ்வகைச் சொல்லாக்க முறைமைகள் பயிற்சியில் இருந்துள்ளன. 'மாத்திரை', 'சூத்திரம்' முதலான வடசொற்கள் இலக்கணநூலான தொல்காப்பியத்தில் பயின்றுள்ளன. மாத்திரை என்பது எழுத்துகளின் ஒலிப்புமுறையின் கால அளவைக் குறிப்பது. சூத்திரம் என்பது இலக்கணம், தத்துவம் மற்றும் அறிவியல்சார் பொருண்மைகளைக் - கட்டிறுக்கமான முறையில் எடுத்துரைக்கப் பயன்படுவதான யாப்பு வகையொன்றைக் குறித்து நிற்பதாகும். இதனை 'நூற்பா' என வழங்கும் முறைமையும் நிலவிவருகிறது. பண்டைப் பேரிலக்கியமான மணிமேகலையானது பௌத்த தத்துவச் சார்புடைய ஒரு ஆக்கம் என்பதும் இத்தத்துவம் வடமொழிச்சார்புடையது என்பதும் நாமறிந்த செய்தியேயாம். இவ்வாக்கத்திலே இடம்பெறும் அளவை, கருதுதல் ஆகிய சொற்கள்முறையே வடமொழித் தத்துவமரபில் வளங்கும் பிரமாண, அநுமான ஆகிய சொற்களின் தமிழாக்கங்கள் என்பதே ஆய்வாளர்களது கருத்தாகும். (பார்க்க: டாக்டர் செ.வை. சண்முகம் அவர்களின் அறிவியல் தமிழாக்கம் என்ற நூல்: ப.25)

இவ்வாறு பண்டுதொட்டு உருவாகிவந்த கலைச்சொல்லாக்கச் செயற்பாங்கானது 19ஆம் நூற்றாண்டிலே மேலைப்புல அறிவுத்துறைகளின் வருகையோடு புதிய வேகத்தைப்பெற்றது. தமிழகத்தில் இரேனியஸ் (Fr. Chales Theophilus Edward Rhenius-1790-1838) என்பாரும் ஈழத்தில் கிறீன் (Dr. Samuel Fisk Green 1822-1884) முதலியவர்களும் மேற்கொண்ட அறிவியல் நூலாக்க முயற்சிகள் இவ்வேகத்துக்குச் சான்றுகளாக அமைவன. இரேனியஸ் அவர்கள் 1832இல் பூமிசாஸ்திர நூலை எழுதியவர். இவரே தமிழில் முதல் அறிவியல் நூலை எழுதியவர் எனவும் முதலாவது கலைச்சொல்லாக்குநர் (Termilnologist) எனவும் கருதப்படுகிறார். டாக்டர் சாமுவேல் பிஸ்க் கிறீன் அவர்கள் மனுஷ அங்காதிபாதம், மனித சுகரணம் முதலான மருத்துவத்துறைசார் நூல்களைத்தமிழில் எழுதியவர். அவற்றுக்கான கலைச்சொற்கள் பலவற்றையும் உருவாக்கிக் கொண்டவருங்கூட. அவர் 1875இல் தொகுத்தளித்த அருஞ்சொல்லகராதி என்ற ஆக்கம் தமிழ்க் கலைச்சொல்லாக்க வரலாற்றில் முக்கியத்துவமுடையதாகும். இதனையடுத்து 1888இல் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் நூற்றொகை விளக்கம் என்ற ஆக்கம் வெளிவந்தது. ஏறத்தாழ எண்பது கலைச்சொற்கள் வரை இதில் இடம்பெற்றுள்ளன. இவை (ஏற்கெனவே முதலாவது மற்றும் இரண்டாவது கட்டுரைகளிலே பதிவானவையான இத்தகவல்கள் பொருத்தம்கருதி இங்கு மீளவும் நினைவிற்கு இட்டுவரப்பட்டுள்ளன.)

தமிழில் கலைச்சொல்லாக்க முறைமை தொடர்பான 19ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டம்சார் சுருக்க வரலாறு, இது. இனி நாம் இவ்வாக்க முறையானது நாம் இங்கு நோக்கும் '1920கள் முதல் 50 - 60கள் வரையான' காலகட்டத்தில் அடைந்த வளர்ச்சி பற்றிய சில செய்திகளை நோக்கலாம்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலமானது தமிழகமண்ணில் பல்வேறு அறிவுத்துறைகள் சார்ந்த கல்விமுறைகளும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த காலகட்டமாகும். அவ்வாறான சூழலுக்கு ஏற்ற வகையில் கலைச்சொல்லாக்க முறைகளும் திட்டப்பாங்குடன் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைகளும் உணரப்பட்டன. அத்தொடர்பில் குறிப்பாக, தனித்தனி ஆளுமைகளின் ஆர்வமுயற்சிகள் என்ற நிலைக்கு அப்பால் பல்வேறு துறைகள் சார் கல்வியாளர்களின் கூட்டுமுயற்சிகள் ஊடாக இப்பணி தொடரப்பட வேண்டுமென்ற கருத்தும் இக்காலப்பகுதியில் அறிஞர்கள் மற்றும் அரசியலார் ஆகிய இருசாரார் மத்தியிலும் உருவாகி வந்தது. இவ்வாறான சிந்தனைப் போக்கின் பேறாக இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த முயற்சிகள் சிலவற்றைப் பற்றிய தகவல்கள் வருமாறு.

1916ஆம் ஆண்டில் இராஜாஜி எனப்படும் சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியாரும் வேங்கடசுப்பையர் என்பாரும் இணைந்து சேலத்திலே 'தமிழ்ச் சாத்திர பரிபாஷைச் சங்கம்' என்ற பெயரிலான அமைப்பொன்றை நிறுவிச் செயற்பட்டனர். 1923ஆம் ஆண்டில் சென்னை மாகாணக் கல்வி இயக்குநரால் அமைக்கப்பட்ட குழு கலைச்சொற்கள் சிலவற்றைத் தயாரித்தது. 1932 மற்றும் 1940 ஆம் ஆண்டுகளில் சென்னை அரசாங்கம் அறிஞர் பலரை இணைத்துக் கலைச்சொற்குழுக்களை அமைத்துச் சொல்லாய்வுகளை மேற்கொண்டது. 1936இல் சென்னையில் தமிழின் முதலாவது கலைச்சொல் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டுக்குத் தலைமை வகித்து வழிநடத்தியவர் ஈழத்தறிஞரான சுவாமி விபுலாநந்தராவார்.

தமிழகத்தை மையப்படுத்தி இவ்வாறான முயற்சிகளைத் தொடர்ந்து ஈழத்திலும் கலைச்சொல்லாக்கச் செயற்பாட்டில் தனி ஆர்வம் முளைவிட்டது. 1955ஆம் ஆண்டிலே இலங்கை அரசு தன்மொழி அலுவலகம் என்ற ஒன்றை அமைத்துக் கலைச்சொல்லாக்கத்துக்குத் திட்டவட்டமான முயற்சிகளை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக 1956-10-01 அன்று இலங்கையில் அரசகருமமொழித் திணைக்களம் என்ற அமைப்பு உருவானது. இது பரந்த மட்டத்திலே கலைச்சொல்லாக்க முயற்சிகளை மேற்கொண்டது. கணிதவியல், விஞ்ஞானவியல், தொழில்நுட்பவியல், இரசாயனவியல், தாவரவியல், அளவையியல் முதலிய பல்வேறு கற்கைநெறிகள் சார்ந்த கலைச்சொற்கள் உருவாக்கப்படலாயின. இவை ஒவ்வொன்றும் தனித்தனித் தொகுதிகளாக வெளிவரத் தொடங்கின. இவ்வாறான கலைச்சொல்லாக்க முயற்சிகளில் தமிழின் ஒலிமரபுகள் - குறிப்பாக மொழி முதல், இடை, கடை ஆகிய நிலைகளிலான இலக்கணவிதிகளைக் கடைப்பிடிக்கும் முறைமைகள் - சிறப்பாகப் பேணப்பட்டு வந்தமையை நோக்கியுணரமுடியும்.

அடுத்து தமிழின் 'கலைக்களஞ்சிய உருவாக்கம்' பற்றி நோக்குவோம்.

கலைக்களஞ்சியம் என்ற கலைச்சொலானது ஆங்கிலத்தில் Encyclopedia என்பதன் தமிழாக்கமாக அமைந்ததாகும். Encyclopedia என்பதற்கு 'Book or set of books giving information on many subjects or on many aspects of one subject and typically arranged alphabetically.' என ஆங்கில அகராதியியலார் விளக்கம்தருவர். இவ்வாறான அமைப்புகளுக்குச் சான்றுகளாக Encyclopedia Britannica (1768-1929), Chambers Encyclopedia (1796-1808) மற்றும் பிரஞ்சு, ஜப்பானியமொழி முதலியவற்றிலமைந்த Encyclopediaக் களை அவர்கள் அடையாளங்காட்டுவர். இவ்வாறான உலகு தழுவிய Encyclopedia அமைப்புகளைச் சுட்டும் வகையிலேயே தமிழில் 'கலைக்களஞ்சியம்' என்ற சொல் உருவாக்கிக் கொள்ளப்பட்டது.

இச்சொல்லிலே 'கலை' என்ற முதற்பகுதியானது பல்வேறு அறிவுத்துறைகளையும் சுட்டிநிற்கிறது. (தமிழின் பொதுவழக்கிலே கலை என்பது இசை, நடனம், ஓவியம், சிற்பம் முதலிய நுண்கலைகளைச் சுட்டும் வகையில் பயன்பட்டு வருவது என்பதறிவோம். இங்கு பரந்தபொருளில் அனைத்துக் அறிவுத்துறைகளையும் சுட்டும்வகையில் பொருள்விரிவுடன் அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது நமது கவனத்துக்குரிய செய்தியாகும்.) 'களஞ்சியம்' என்ற சொல்லானது 'தொகுப்பிடம்' என்ற பொருளைக் தருவதாகும். இவ்விரு சொற்களின் இணைப்பில் உருவான, 'கலைக் களஞ்சியம்' என்ற சொல்லானது 'பல்வேறு அறிவுத்துறைகள்சார் விடயப்பரப்புகளையும் விளக்கியுரைக்கும் வகையிலமைந்த கட்டுரைகளின் தொகுப்பு என்ற பொருளைத் தருவதாகும். இவ்வாறான விடயப் பரப்புகள் அகராதிமுறையில் தொகுக்கப்படுவன. அவ்வகையில் அகராதிச் செயன்முறையுடன் இணைத்து நோக்கப் படுவனவாகும். ஒருவகையில் அகராதி சார் சிந்தனைமரபின் தொடர்ச்சியாக உருவான ஒரு நூற்கட்டமைப்பு முறையாகவே கலைக்களஞ்சிய அமைப்பை நாம் கருத இடமுளது.

சொல்லொன்றின் மூலநிலை மற்றும் அதன் பொருட்பரிமாணங்கள் ஆகியவற்றுக்கு விளக்கம் தருவதே அகராதிச் செயன் முறையின் நோக்கமாகும். அவ்வகைச் செயன்முறைகளை உள்ளடக்கி, அவற்றிலிருந்து விரிவான தளத்திலான பொருட் பரிமாணங்கள் கொண்டனவே கலைக் களஞ்சியங்களின் கட்டுரைகள். குறித்த சொல் சுட்டிநிற்கும் பொருள் அல்லது பொருட்பரப்பு ஆகியனசார் பல்வேறு அம்சங்களையும் வரலாற்று முறையில் விரிவாக எடுத்துரைக்கும் நோக்கில் அமைந்த செயன்முறைகள், இவை.

தமிழில் கலைக்களஞ்சியங்களை உருவாக்கும் முயற்சியானது 1947இல் தொடங்கப்பெற்றது. தமிழகத்திலே அக்காலகட்டத்தில் தமிழக அரசின் கல்வியமைச்சராகத் திகழ்ந்த திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களின் தலைமையில் தொடங்கப்பெற்ற இம்முயற்சியின் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றவர் 'பத்மபூஷண்' ம.பெ. பெரியசாமித் தூரன் (1908-1987) அவர்களாவார். தமிழ்க் கல்விச் சூழலின் நூற்றுக்கணக்கான அறிஞர் பெருமக்களின் துணையுடன் அவர் இப்பணியை மேற்கொண்டார். ஏறத்தாழ 1200 கட்டுரையாளர்கள் இதில் பங்களிப்புச் செய்துள்ளனர். இவ்வாக்க முயற்சியின் பேறான தமிழ்க்கலைக்களஞ்சியத்தின் முதலாவது தொகுதியானது 1954இல் வெளிவந்தது. தொடர்ந்து 1968 வரையான காலப்பகுதியில் மேலும் ஒன்பது தொகுதிகள் வெளிவந்தன. ஒவ்வொரு தொகுதியும் ஏறத்தாழ 750 பக்கங்கள்வரை கொண்டனவாக அமைந்தன. இவ்வகையில் 10 தொகுதிகளும் ஏறத்தாழ 7500 பக்கங்கள் கொண்டனவாகவும் 15,000 வரையான தலைப்புச்சொற்களை உள்ளடக்கியனவாகவும் அமைந்தன. அவ்வகையில் தமிழில் மாபெரும் ஆக்கமுயற்சி இது என்பது வெளிப்படை.

இவ்வாறமைந்த இப்பெருமுயற்சியின் முக்கியத்துவம் பற்றிப்பேசும் பொழுது இதற்கு முன்னர் தமிழில் உருவாகியிருந்த கலைக்களஞ்சிய என்ற பெயருடனமையாத இவ்வகை ஆக்கமுயற்சிகள் பற்றிய ஒரு குறிப்பையும் இங்கு முன்வைப்பது அவசியமாகிறது. இவ்வகையில் முக்கியமாக இரு ஆக்கங்கள் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கியத்துவமுடைய

தொடர்தல் 109ம் பக்கம்

# தமிழியல் ஆய்வுகள்...

108ம் பக்கத் தொடர்ச்சி...

வையாகும். இவற்றுள் முதலாவது ஆக்கம், திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1858-1917) என்பாரின் அபிதானகோசம் (1902) ஆகும். இரண்டாவது ஆக்கம் திரு. ஆ. சிங்காரவேலு முதலியார் (1855-1931) என்பாரின் அபிதான சிந்தாமணி (1910) ஆகும். ஈழத்தவரான ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் ஆக்கம் யாழ்ப்பணம் நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சேறியது. தமிழகத்தவரான சிங்காரவேலு முதலியாரின் மேற்படி ஆக்கம் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகும்.

மேற்படி இரு ஆக்கங்களும் அமைப்பு நிலையிலே கலைக்களஞ்சியம் போன்ற பொருள்விவரத் தொகுப்புகளாக அகர-வரிசைப்படி அமைந்தவையே. ஆயினும் அவை நாம் மேலே நோக்கிய கலைக்களஞ்சியம் போல உலகுதழுவிய Encyclopedia அமைப்புச்சிந்தனைகளின் தொடரச்சியாகத் தமிழில் உருவானவையல்ல. மாறாக இந்தியமரபு குறிப்பாக வடமொழி மரபு சார்ந்து உருவானவையாகும். வடமொழியிலே கோசம், சிந்தாமணிமுதலான பெயர்களில் கலை மற்றும் அறிவுத்துறைகள் சார்ந்த விடயங்களைத் தொகுத்துப்பேணும் மரபு பலநூற்றாண்டுகளாக நிலவி வருகிறது. மேலே நாம் நோக்கிய அபிதானகோசம், அபிதான சிந்தாமணி ஆகிய இரண்டும் மேற்படி வடமொழிமரபுசார்ந்த சிந்தனைகளின்வழி உருவானவையாகும்.

இவையிரண்டும் இலக்கியம், சமயம், தத்துவம், கலைகள் மற்றும் வாழ்வியல் அம்சங்கள் ஆகியவற்றை மையப்படுத்திய பொருட்பரப்புகளை மட்டும் உள்ளடக்கியனவாக அமைந்தவையாகும். இவற்றுள் அபிதாககோசத்தைவிட அபிதானசிந்தாமணியானது விரிந்த பொருட்பரப்பைக் கொண்டதாகும். நாம் இங்கு மேலே நோக்கிய தமிழ்க் கலைக்களஞ்சியங்களின் பெருந்தொகுப்பானது மேற்படி இரு ஆக்கங்களின் பொருட்பரப்புகளை உள்ளடக்கியதோடு அறிவியல், தொழில்நுட்பம், பொருளியல், அரசியல் ஆகியனவற்றையும் உள்ளடக்கியதாக - அனைத்துலக மட்டத்திலான பல்துறை அறிவுப் பரப்புகளையும் தொகுத்துக் காட்சிப் படுத்தும் நோக்குடன் - உருவானதாகும். அவ்வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தனிநிலை ஆக்கமாகவும் குறித்த வகைமையில் முதல் முயற்சியாகவும் மேற்படி தமிழ்க் கலைக்களஞ்சியங்களின் பெருந்தொகுப்பானது திகழ்கிறது என்பது வெளிப்படை.

மேற்படி தமிழ்க் கலைக்களஞ்சியப் பணியை முன்னின்று வழிநடத்தி நிறைவு-செய்த திரு. ம.பெ. தூரன் அவர்கள் அதன்பின் குழந்தைகள் கலைக்களஞ்சியம் என்ற தலைப்பிலான ஆக்க முயற்சியையும் மேற்கொண்டு ஒவ்வொன்றும் 100 பக்கங்களைக் கொண்ட 10 தொகுதிகளை வெளியிட்டார் என்பதும், அவையே அவ்வகைமையல் தமிழின் முதல் முயற்சி என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய செய்தியாகும்.

இதுவரை '1920கள் முதல் 50-60கள் வரையான காலப்பகுதித் தமிழ் ஆய்வியல் இயங்குநிலை' என்ற பொருண்மைசார் பார்வையில் முதலாவதாக பதிப்பியல், அகராதியியல் மற்றும் கலைக்களஞ்சிய உருவாக்கம் ஆகியனபற்றிய தகவல்களைத் தொகுத்து நோக்கி வந்தோம். அடுத்து மேற்படி காலப்பகுதிசார் பார்வையில் இரண்டாவதான 'இலக்கிய - இலக்கணக் கல்வியின் இயங்குநிலைகள்' பற்றி நோக்கலாம்.

## '1920கள் முதல் 50-60கள் வரையான காலப்பகுதியில் தமிழ் இலக்கிய - இலக்கணக் கல்வியின் இயங்குநிலைகள்:

மேற்படி காலகட்டத் தமிழ் இலக்கிய இலக்கணக் கல்வியின் இயங்குநிலை என்பது இங்கு குறிப்பாக ஆய்வுநோக்கிலான தமிழ்க் கல்வியின் இயங்குநிலையையே - அதாவது பல்கலைக்கழக உயர்கல்வி நிலைசார் கல்விமரபின் செல்நெறிகளையே - சுட்டிநிற்கிறது. இந்த இயங்குநிலையானது தமிழ்க் கல்விச்சூழலின் அக்காலம் வரையான இயங்கு நிலையினின்று குறிப்பிடத்தக்க வகையில் வேறுபாடு கொண்டிருந்தது என்பதை முன்னரே இரண்டாவது கட்டுரையில் நோக்கியிருந்தோம். பாரம்பரியமான தமிழ்க்கல்வி முறைமையானது மனனம் (கற்பிக்கப் பட்டவற்றை மனதில் நிறுத்தும் பயிற்சி) என்பதையும் 'முன்னோர் மொழிந்தவற்றைப் பொன்னே போல் போற்றுதல்' என்பதையும் முன்னிறுத்திய கல்விமுறை என்பது அங்கு நோக்கப்பட்டது. ஆனால் மேலைத்தேச வரவானதும் பல்கலைக்கழக நிலைசார்ந்ததுமான இலக்கிய - இலக்கணக் கல்விமரபானது, 'மாணவர்கள் தமக்குக் கற்பிக்கப்பட்டவற்றை மனதில் நிறுத்துவதுடனமையாது அவற்றைக் கடந்து புதிய புதிய விடயங்களை நோக்கித் தமது பார்வைகளை விரிவு படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை அளிப்பதாகவும் அமைந்திருந்தது' என்பதையும் அங்கு நோக்கியிருந்தோம். இவ்வாறான 'ஆய்வுநோக்கிலான இலக்கிய - இலக்கணக் கல்விமரபின் இயங்குநிலை'யே இங்கு நமது கவனத்துக்கு வருகிறது.

இவ்வாறான இக்காலக் கல்வி மரபின் முக்கிய - அடிப்படையான - அம்சமாகத் திகழ்ந்துவருவது என்றவகையில் குறிப்பிடத்தக்கது 'காலவுணர்வு' ஆகும். குறித்த ஒரு ஆக்கம் - அதாவது குறித்த ஒரு இலக்கியம் அல்லது இலக்கணநூல் எந்தக் காலப்பகுதியில் எழுந்தது என்பதை மையப்படுத்தி அணுகும் முறையே இங்கு காலவுணர்வு என்பதால் சுட்டப்படுகிறது. இதனை இன்னும் விளக்கமாகச் சுட்டுவதானால் குறித்த ஆக்கத்தின் உருவாக்கச் சூழல் எத்தகையது என்பதை மனங்-கொண்டு அதனை அணுகுதல் எனலாம்.

இவ்வாறான காலவுணர்வுசார் பார்வையின் ஒருவகை அணுகுமுறையானது, குறித்த ஒரு இலக்கியம் ஆக்கம், அல்லது குறித்த காலகட்ட இலக்கியப் பரப்பு ஆகியவற்றுக்கும் அவை எழுந்த சூழலுக்குமான தொடர்புகள் பற்றி நோக்க முற்படுவதாகும். அதே போல குறித்த ஒரு இலக்கண நூலை அல்லது இலக்கண அம்சமொன்றை மொழிவரலாற்று நிலையில் புரிந்துகொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்படுவதுமாகும். இவ்வாறான காலவுணர்வுசார் பார்வையின் இன்னொருவகை அணுகுமுறைகள் இலக்கியவரலாறு, இலக்கண வரலாறு என்ற வகைகளில் வரலாற்றுப்பரப்பைத் தொகுத்து நோக்கும் செயற்பாடுகளாக அமைவனவாகும்.

இவ்வாறான இருவகை அணுகுமுறைகளும் மேற்படி காலகட்டத் தமிழ்இலக்கிய - இலக்கணக் கல்வியிலே சிறப்பாகவே மேற்கொள்ளப்படத் தொடங்கிவிட்டன. இவ்வகையில் அமைந்த சில ஆய்வுச் செயற்பாடுகள் சிலவற்றைப்பற்றிய தகவல்களை இங்கு சுருக்கமாக நோக்கலாம். இவற்றுள் மேற்சுட்டிய முதல்வகை அணுகுமுறைகள் சார்ந்த செயற்பாடுகள் என்றவகையில் பின்வரும் ஐந்து Ph.D பட்ட ஆய்வேடுகள் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்க முக்கியத்துவமுடையனவாகும்.

- டாக்டர். பி.எஸ் சுப்பிரமணிய சாஸ்திரி (1890-1978) அவர்களின் 'History of Gramatical Theories in Tamil and their relation to grammatical literaturein Sanskrit' 1930.
- டாக்டர் க. கணபதிபிள்ளை (1902 -1968) அவர்களின் 'A Study of the Language of the Tamil Inscriptions of the 7th and 8th Centuries A.D'. (1935).
- டாக்டர் அ. சிதம்பரநாதச்செட்டியார் அவர்களின் 'Advanced Studies in Tamil Prosody' (1943).
- டாக்டர் மு. வரதராசன் அவர்களின் 'The Treatment of Nature in Sangam Literature' (1948).
- டாக்டர் க. கைலாசபதி அவர்களின் Tamil Heroic Poetry (1966).

மேற்படி ஐந்து ஆய்வேடுகளின் தலைப்புகளுமே அவற்றின் பொருள் பரப்பைத் தெளிவாக உணர்த்தி நிற்பன.

மேலே முதலிற் சுட்டிய ஆக்கம் தொல்காப்பிய இலக்கணக் கொள்கைகளை வடமொழி இலக்கண மரபுகளுடன் தொடர்புபடுத்தி நோக்குவதாகும். குறித்த ஒரு இலக்கணப் பகுதியை மொழிவரலாற்று நிலையில் புரிந்துகொள்ளும் நோக்கில் மேற்கொள்ளபட்ட ஆய்வுச்செயற்பாடாக இது திகழ்கிறது.

இவ்வாய்வை மேற்கொண்டு நிறைவு செய்தவரான பின்னங்குடி சுப்பிரமணிய சாஸ்திரி அவர்கள் தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் பேரறிஞராகத் திகழ்ந்தவர். திருவையாறு அரசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வடமொழிப் பேராசிரியராகவும் திகழ்ந்தவரான இவர், தமிழின் தொல்லிலக்கணமான தொல்காப்பியத்தை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவருங்கூட. இவ்வாறு தமிழின் தொல்லிலக்கண மரபின்மீது அவர் கொண்டிருந்த ஈடுபாட்டின் ஒரு உந்துநிலைசார்ந்தே மேற்படி அவருடைய ஒப்பியல் நோக்கிலான ஆய்வேடு உருவாகியுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1930 இல் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாய்வேடே தமிழின் முதலாவது Ph.D பட்ட ஆய்வேடுமாகும். அத்துடன் ஒப்பியல் நோக்கிலமைந்த முதலாவது ஆய்வேடாகவும் இது திகழ்கிறது. இது 1934ஆம் ஆண்டிலே History of Grammatical Theory in Tamil என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது.

க. கணபதிபிள்ளை அவர்கள் Ph.D பட்டத்துக்காகச் சமர்ப்பித்த 'A Study of the Language of the Tamil Inscriptions of the 7th and 8th Centuries A.D' ஆய்வேடானது 'தமிழ்ச்சாசனங்களின் மொழிநிலை பற்றியதாகும். தமிழில் சாசனங்களைப் பதிப்பிக்கும் செயற்பாடு 1890களிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்தமையை முன்னர் 2வது கட்டுரையில் நோக்கியுள்ளோம். அவ்வாறான சாசனத்தொகுப்புச் செயற்பாட்டின் பின்புலத்தில் காலூன்றி நிகழ்த்தப்பட்ட நுண்ணாய்வான இது தமிழ்மொழியின் 'குறித்த காலகட்டங்கள்சார் இயங்குநிலைகள் பற்றியபார்வை' என்ற வகையில் அமைந்ததாகும்.

இவ்வாய்வை மேற்கொண்டவரான பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையவர்கள் ஈழத்தவர். இலண்டன் பல்கலைக்கழகத்தின் இணைப்பாகத் திகழ்ந்த இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் வடமொழியைச் சிறப்புப் பாடமாகப் பயின்று 1930 இல் இளங்கலைத் தேர்விலே முதல்வகுப்பிலே சிறப்புச்சித்தி எய்தியவராவார். பின்னர் இவர் தமிழகம் சென்று அண்ணா-மலைப் பல்கலைக்கழகத்திலே தமிழில் வித்துவான் தேர்விலும் சித்தியெய்தியவரான இவர், அதனைத் தொடர்ந்து ஐக்-கியராச்சியம் சென்று இலண்டன் பல்க-லைக்கழகத்தின் கீழைத்தேச கலைக்கல்லூரியில் ரேணர் என்ற பேராசிரியரின் கீழ் தமது மேற்படி Ph.D பட்ட ஆய்வை மேற்கொண்டு அதனை 1935இல் நிறைவு செய்துள்ளார்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்களின் இம்முயற்சியானது 'தமிழ்ச்சாசன மொழி நிலை' பற்றிய முதலாவது ஆய்வு முயற்சியாகும். இவரைத் தொடர்ந்து இவரது மாணவர்களிலொருவரான பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையவர்களும் 1960களில் இவ்வகை ஆய்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். வெவ்வேறு காலகட்டங்கள் சார்ந்த தமிழ்ச் சாசனங்களைத் தேர்ந்து இருவேறு ஆய்வேடுகளை அவர் எழுதி இரு Ph.D பட்டங்களைப் பெற்றுள்ளார் என்பதும் இங்கு வரலாற்று நோக்கிலே குறிப்பிடப்படவேண்டிய செய்தியாகும்.

மூன்றாவதான அ. சிதம்பரநாதச்செட்டியாரின் Ph.D பட்ட ஆய்வேடானது தமிழ் இலக்கணப்பரப்பில் ஒரு கூறான யாப்பியல் - அதாவது செய்யுள் வடிவங்களின் இலக்கணம் - சார்ந்ததாகும். கி.பி 10ஆம் நூற்றாண்டு வரையான செய்யுள் வடிவ வரலாறே இவ்வாய்வேட்டில் அவரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தமிழின் தொல்லிலக்கணமான தொல்காப்பியத்தின் செய்யுளியலில் ஆசிரியப்பா, வெண்பா முதலான நால்வகைப் பாக்களின் இலக்கணம் கூறப்பட்டுளது. அந்நூலின் பின்னர் தாழிசை, துறை, விருத்தம் ஆகிய பாவின வகைகள் உருவாகியுள்ளன. இவை பற்றிய இலக்கணங்களைக் கூறுவதாக நமக்குக்கிடைக்கும் முக்கிய ஆக்கங்கள் கி.பி. 10-11ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகியனவும் அவற்றின் உரைகளுமாகும். இவ்வாறான யாப்பியல் வரலாற்றுச் சூழல்களை மையப்படுத்திய நுண்ணாய்வாக அமைந்த இவ்வாய்வேடானது தமிழில் யாப்பியல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதலாவது Ph.D பட்ட ஆய்வு என்ற சிறப்புக்குரியதாகும்.

தொடரும்...



subramanian.n@thaiveedu.com

www.inayam.net
inayam.net
முற்றிலும் இலவசம்
inayam
416-400-6406
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்


Real Estate
✓ Residential
✓ Commercial
✓ Investment
✓ Property Management
✓ Custom Houses
HomeLife Today Realty Ltd., Brokerage
Office: 416-298-3200
Tax
✓ Personal
✓ Self Employed
✓ Corporate
✓ Estate
✓ Company Registration
MVK TAX Consultants
Office: 647-947-8449
Insurance
✓ Life & Health
✓ Travel
✓ Key Person
✓ Buy & Sell
✓ RESP
iNFORCE LIFe
Financial Services Inc.
Office: 416 880 6051
FOR ALL YOUR
REAL ESTATE | INSURANCE | TAX
NEEDS...!
Vallikkannan (MVK) Maruthappan
Direct : 416 880 6051 | www.mvkhome.ca
25 Years of Experience | Qualified and Well-Known | Award Winning Businessman
HONESTY ★ RELIABILITY ★ INTEGRITY




# திறமையை இனங்காணல்

1982ம் ஆண்டு ஜனவரி மாதம்.

ரூபவாஹினி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும் நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. ரூபவாஹினிப் பணியாளர்களுக்கான தளபாடங்கள் கொண்டுவரப்பட்டுக் கட்டிடத்தின் வலதுபுறத்திலுள்ள நீளமான மாடி மண்டபத்தில் பிரிவுவாரியாக ஒழுங்குபடுத்திப் போடப்பட்டுக்கொண்டிருந்தன. ரூபவாஹினியின் சகல பிரிவுகளும் அந்த நீளமான மண்டபத்திலேயே அமைந்திருந்தன. ஆரம்பத்தில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் சகல பிரிவினரையும் அந்த மண்டபத்தினுள்ளேயே அடக்கக்கூடியதாக இருந்தது.

கலையகங்களுக்குப் பின்புறமாக அமைந்துள்ள அரங்க நிர்மாணப்பிரிவிலும் அரங்க நிர்மாணம், மற்றும் வரைகலைப் பிரிவுக்குப் பொறுப்பான அர்த்சாத் தனது பணிகளை மெல்லமெல்ல ஆரம்பித்தார். அரங்க நிர்மாணப்பிரிவுக்கு சுமார் ஐந்துக்கு நான்கு அடி செவ்வக வடிவத்தில் அரையடி உயரமான மரத்தினாலான சிறுசிறு மேடைகள் அதிக எண்ணிக்கையில் கொண்டுவரப்பட்டன. இந்த சிறு மேடைகளை றொஸ்ட்ரம் (rostrum) என்று சொல்வார்கள். அரங்க அமைப்புப் பிரிவுக்கு இவை மிக முக்கியமானவை. ஒரு நிகழ்ச்சிக்கான அரங்கத்தை அமைக்கும்போது பல்வேறு அளவுகளில் மேடைகள் தேவைப்படும். எமக்குத் தேவைப்படும் மேடைகளின் அளவுகளுக்கேற்ப இந்தச் சிறுசிறு மேடைகளை ஒன்றுசேர்த்து அடுக்கி வேண்டிய மேடைகளை அமைப்பார்கள். இந்தச் சிறு மேடைகளும் (rostrum) வெவ்வேறு அளவுகளில் செய்யப்பட்டு அரங்கப் பிரிவில் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும். ஏ.கே. கருணாகரனின் இசைக்கச்சேரியை ஒளிப்பதிவு செய்தபோது இவை இருந்திருந்தால் நாம் மேசைகளைத் தூக்கிச் சிரமப்படாது அழகான மேடையை அமைத்திருக்கலாம். இவை மரத்தினாலான மேடைகள். இவற்றிற்கு சாம்பல் வர்ணம் பூசப்பட்டிருந்தது. கலையகத்தின் தரையும் சாம்பல்நிறமானதே. சாம்பல் நிறத்திலான இந்தச் சிறு மேடைகளைக்கொண்டு வெவ்வேறு நிறத்தினாலான மேடைகளை அமைக்கவேண்டுமானால் அவற்றின்மேலே வேண்டிய நிறத்தில் துணிவிரிப்புகளை விரித்து அவற்றில் சுருக்கம் விழாமல் மேடையோடு இறுக்கமாக அழுத்தி சிறுசிறு ஆணிகளை அடிப்பார்கள்.

இதற்கான துணிகளை வாங்குவதற்கு நானும் அர்த்சாத்தும் வெள்ளவத்தை, ஹவ்லொக் வீதியிலமைந்திருந்த அரச நெசவாலைக்குச் (Wellawatta, Weaving Mills) சென்றோம். கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம்.ஜே. பெரேரா அவர்கள் எம்மிருவரையும் தமது அறைக்கு அழைத்து, அவற்றைப் போய் வாங்கிவருமாறு கேட்டுக்கொண்டார். அப்போது ரூபவாஹினிக்கென சில வாகனங்களும் வாங்கப்பட்டிருந்தன. நிஸான் சென்ட்ரா (Nissan Sentra) வகைக் கார்களென்று நினைக்கிறேன். மண்ணிறம் கலந்த பழுப்புநிறமானவை. அப்படியொரு காரைத்தான் எம்.ஜே. பெரேரா அவர்கள் தனது உத்தியோகபூர்வ வாகனமாகப் பாவித்தார். அந்தப் புதிய கார்களில் ஒன்றில் நானும் அர்த்தசாத்தும் நெசவாலைக்குச் சென்றோம். அங்கு பலபல வர்ணங்களில் பெரியபெரிய உருளைகளாகவிருந்த துணிகளில் வேண்டிய நிறங்களிலும் அளவுகளிலும் வெட்டியெடுத்துக் கொண்டுவந்தோம். ரூபவாஹினியின் ஆரம்பகால நிகழ்ச்சிகளில் பச்சை, மஞ்சள், ஒரேஞ்ச் வர்ணங்களிலான இந்த விரிப்புகளைப் பார்க்கலாம்.

## நாட்டியநாடகம்:

1982ம் ஆண்டு ஜனவரிப் பிற்பகுதியில் நான் செய்த பெரிய தயாரிப்பு நாட்டிய நாடகம். நாட்டியநாடகமொன்றைத் தொலைக்காட்சிக்கெனத் தயாரிப்பது ஒரு சவாலான பணி. ஒரேயொரு கலைஞர், ஒரு கதையை அல்லது புராண, இதிகாசக் கதைகளில் வரும் சம்பவங்களைப் பாடல்களின் துணையோடு நடனத்தால் வெளிப்படுத்தும் நாட்டிய நாடகம் முதல், பெரும் எண்ணிக்கையில் நடனக் கலைஞர்கள் பங்குபற்றும் பிரமாண்டமான நாட்டிய நாடகங்களும் மேடைகளில் தயாரிக்கப்படுகின்றன.

அப்போது கொழும்பில் மிகப்பிரபலமாகவிருந்த நடன ஆசிரியை திருமதி. ஜெயம் கந்தையா அவர்களது தயாரிப்பான 'கண் வழிபுகுந்த கள்வன்' என்ற நாட்டிய நாடகத்தைத் தயாரிப்பதென்று முடிவானது.


ரங்கா விவேகானந்தன்

இராமாயணத்தில் மிதிலையில் இராமர் மாடத்தில் நின்ற சீதையைக் கண்டு, சுயம்வரத்தில் கோதண்டவில்லை வளைத்து, இருவரும் திருமணம் செய்துகொள்ளும் நிகழ்ச்சிகளை நாட்டிய நாடகமாக அமைத்திருந்தார். பதினான்கு மாணவிகள் பங்குபற்றிய அந்த நாட்டிய நாடகம் ஒரு பெரிய தயாரிப்பென்று சொல்லலாம்.

நடனத்தைப்போலவே நாட்டிய நாடகங்களுக்கும் இசை பிரதானம். தொடக்கத்திலிருந்து முடியும்வரை பாடல்களும் இசையும் இடம்பெறும். நாட்டிய நாடகங்களுக்கான இசையை ஒலிப்பதிவு செய்வதே ஒரு நிகழ்ச்சி தயாரிப்பதுபோன்ற செயற்பாடு. வானொலிக்கான ஒரு இசை நிகழ்ச்சியை எவ்வளவு கரிசனையுடன் செய்வோமோ அத்தகைய கரிசனையோடு நாட்டிய நாடகங்களுக்கான இசை ஒலிப்பதிவை மேற்கொள்ளவேண்டும். அந்த இசைக்குத்தான் பின்னர் காட்சிவடிவம் தரவேண்டும். முதலில் நாட்டிய நாடகத்தின் பாடல்களுக்கு மட்டும் ஆடிப்பழகும் நடனக்கலைஞர்கள் பின்னர் மேடையேற்ற அல்லது ஒளிப்பதிவுநாள் நெருங்கும்போது பக்கவாத்தியங்களுடன் சேர்ந்து ஒத்திகை பார்ப்பார்கள்.

அப்போது நாட்டிய நாடகத்திற்கு இசையமைப்பவர் பாடல்களுக்கிடையேயும் மற்றும் பாடல்களின் ஆரம்ப, முடிவுகளில் தேவைக்கேற்றவாறும் வாத்திய இசையைச் சேர்ப்பார்கள். நடனக் கலைஞர்கள் மேடைக்குள் வருவது, மேடையைவிட்டு வெளியே போவதுபோன்ற அசைவுகளுக்கும் மற்றும் உணர்வு வெளிப்பாடுகளைக் காட்டுவதற்கான நேரங்கள் முதலியவற்றுக்கெல்லாம் வாத்திய இசையமைத்து, நாட்டிய நாடகத்துக்கான பூரணமான இசையைப் பாடல்களுடன் தயாரித்துவிட்டால் ஐம்பது வீத நாட்டிய நாடகத் தயாரிப்பு முடிவடைந்துவிட்டதென்று சொல்லலாம்.

இந்த நாட்டிய நாடகத்துக்கான இசை ஒலிப்பதிவை நான் ரூபவாஹினிக் கலையகத்திலேயே செய்வித்தேன். முதலில் செய்த விஜயாம்பிகையின் நடனத்திற்கு அவரிடம் ஏற்கனவே ஒலிப்பதிவுசெய்யப்பட்டுக் கைவசமிருந்த இசையைப் பாவித்தோம். வாசுகியின் நடனத்திற்கான இசை ஒலிப்பதிவு, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முதலாம் இலக்கக் கலையகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இராமேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்களும் வாசுகியின் சகோதரரும் ரூபவாஹினியில் பணியாற்றுவதற்குத் தெரிவாகியிருந்தவருமான எஸ். விஸ்வநாதனும் பாடல்களைப் பாடினார்கள். ரூபவாஹினிக் கலையகத்தில் நடனநிகழ்ச்சிக்கெனச் செய்யப்பட்ட முதல் ஒலிப்பதிவு 'கண்வழி புகுந்த கள்வன்' நாட்டிய நாடகத்திற்கானதே. நாட்டியக் கலைஞர்கள், பாடகர்கள், பக்கவாத்தியக் கலைஞர்கள் அனைவரும் கலையகத்திற்கு வந்து, பாடகர் அல்லது பாடகர்கள் பாடும்போது நடனக் கலைஞர்கள் ஒத்திகை உடையில் ஆடிக்கொண்டிருப்பார்கள். அவர்களது ஒவ்வொரு அசைவுக்கும் உணர்வு வெளிப்பாடுகளுக்குமேற்ப அவர்களைப் பார்த்தவாறே பக்க வாத்தியக் கலைஞர்கள் இசை வழங்குவார்கள். நடனத்திற்குத் தாளம் அடிப்படையான அம்சம். இப்படியான நடன நிகழ்ச்சிகளுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அப்போது மிருதங்கக் கலைஞராக இருந்த ரீ. இரத்தினம் அவர்கள் மிருதங்கம் வாசிப்பதில் மிகப் பிரபலமாக இருந்தார். அவர் மிருதங்கம் வாசிக்கும்போது தாளம் அவ்வளவு உறுதியானதாக இருக்கும். இரத்தினம் அவர்கள் மிருதங்கம் வாசித்தால், நடனக் கலைஞர்கள் தாளத்தில் தவறிழைக்கவே முடியாதென்று சொல்வார்கள். கண்வழி புகுந்த கள்வன் நாட்டிய நாடகத்திற்கு நடன ஆசிரியர் ஜெயம் கந்தையா அவர்களது சகோதரியான திருமதி. அருந்ததி சிறீரங்கநாதன் இசையமைத்துப் பாடினார். ஒலிப்பதிவு மிகச் சிறப்பாக அமைந்தது.

இதற்கும் கதிர்காமத்தம்பி அவர்களே அரங்கம் அமைத்தார். மிதிலை நகரை அரங்கமாக நிர்மாணிப்பதென்பது அதிக செலவுடன்கூடிய பாரிய பணியென்பதால், நாட்டிய நாடகத்திற்கு மிகவும் வேண்டிய ஒரு மாடத்தை மட்டுமே அமைத்திருந்தார். சுயம்வர மண்டபத்தைச் சரியாக அமைக்க முடியாததால் கலையகத்தை மண்டபமாகப் பாவித்து அந்தக் காட்சியைப் படமாக்கினோம். பல நடனக்கலைஞர்கள் நடனமாடியதால் கலையகம் வெறுமையாகத் தெரியவில்லை. மேலும் அனைவருமே கண்களைக் கவரும் நிறங்களில் பரதநாட்டிய உடையலங்காரங்களுடன் இருந்ததால் ஒவ்வொரு சட்டகமும் (frame) மிக அழகாகத் தெரிந்து, அது ஒரு பிரமாண்டமான தயாரிப்பாக அமைந்தது. இந்த நாட்டிய நாடகம் தயாரிக்கப்பட்டபோது அனேகமான சிங்கள உத்தியோகத்தர்கள் அப்போதுதான் தமிழில் இப்படியான நாட்டிய நாடகங்கள் மேடைகளில் தயாரிக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொண்டனர். கண்கவர் ஆடைகள், ஒப்பனைகளுடன் கூடிய நாட்டிய நாடகத்தைப் பார்த்த அவர்கள் தமிழில் பிரமாண்டமான நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன என்று பேசிக்கொண்டார்கள்.

ரூபவாஹினி ஆரம்ப நாள் நெருங்கிக்கொண்டிருக்க, 1982ம் ஆண்டு ஜனவரி மாதப் பிற்பகுதியில் ரூபவாஹினியில் பணிபுரிபவர்களுக்கான நியமனங்கள் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டன. நான் ஏற்கனவே கூறியிருந்தபடி ரூபவாஹினியில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போல மொழிவாரியாகத் தமிழ், சிங்களப் பிரிவென்று வெவ்வேறாக இருக்கவில்லை. தமிழ்த் தயாரிப்பாளர்கள் நிகழ்ச்சிவாரியாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு பிரிவுகளுக்குப் பணிபுரிவதற்காக அமர்த்தப்பட்டார்கள். திருமதி. ஞானம் இரத்தினம் முழு நிகழ்ச்சிப்பிரிவுக்குமான இயக்குனராக இருந்தார். இருந்தபோதிலும் ரூபவாஹினியின் நிர்வாகக் கட்டமைப்புக்கு அப்பாற்பட்டு சகல தமிழ் நிகழ்ச்சிகளையும் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களையும் அவரே நிர்வகித்தார்.

ரூபவாஹினியில் நிர்வாகக் கட்டமைப்பு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் வேறுபட்டதாக இருந்தது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைப்போலப் பதவிகளுக்கான பெயர்கள் இருந்தாலும் ஒவ்வொரு

தொடர்தல் 112ம் பக்கம்

# திறமையை இனங்...

111ம் பக்கத் தொடர்ச்சி...

பதவிக்கும் ஒரு தரம் (grade) நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய,

- தலைவர் - இவர் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகசபை இயக்குனர்களின் தலைவர்
- தரம் ஒன்று - இயக்குனர் நாயகம்
- தரம் இரண்டு - உதவி இயக்குனர் நாயகம்
- தரம் மூன்று - இயக்குனர்
- தரம் நான்கு - இணை இயக்குனர்
- தரம் ஐந்து - உதவி இயக்குனர் அல்லது நிகழ்ச்சிப்பிரிவுத் தலைவர்
- தரம் ஆறு - நிறைவேற்றுத் தயாரிப்பாளர்
- தரம் ஏழு - தயாரிப்பாளர்
- தரம் எட்டு - தயாரிப்பு உதவியாளர்

இந்த வரிசையில்தான் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதை ஒரு நல்ல முறை என்று சொல்வேன். இந்த முறைதான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருக்கவேண்டுமென்று எனது முன்னைய கட்டுரையொன்றில் விபரித்திருந்தேன். ஏனெனில், நிகழ்ச்சிப் பிரிவுக்குப் புகுமுகப் பதவியாகிய தயாரிப்பு உதவியாளர் பதவில் இணைந்துகொள்ளும் திறமைமிக்க இளைஞர்கள் முக்கிய பதவியாகிய தயாரிப்பாளர் பதவிக்கு வந்தும் மேற்கொண்டு சம்பள உயர்வுக்காக உயர்பதவிகளை நாடி நிகழ்ச்சித் தயாரிப்பில் தமக்கிருக்கும் திறமையை வீணாக்காமல் தரத்தில் உயர்வுபெற்றுக் கூடுதலான சம்பளத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தது. தயாரிப்பாளராக தரம் ஏழில் இருக்கும் ஒருவர் தனக்குப் பிடித்தமான, தனது திறமையை வெளிக்காட்டிப் புகழடையக்கூடிய தயாரிப்பாளர் பதவியைப் பெற்ற பின்னர் அந்தப் பதவியிலிருந்துகொண்டே காலப்போக்கில் தரம் மூன்றுவரை உயர்ந்து கூடிய சம்பளத்தைப் பெறலாம். ஒரு நிறுவனத்தில் உயர் பதவிகள் மிகக் குறைந்தளவிலேயே இருக்கும். உதாரணமாக ரூபவாஹினியின் ஆரம்ப நிர்வாகக் கட்டமைப்பின்படி நிகழ்ச்சிப் பிரிவுக்கு ஒரு இயக்குனர்பதவிதான் உண்டு. அது தரம் மூன்றிற்கான பதவி. எல்லோராலும் இயக்குனராக வரஇயலாது. ஆனால் தரம் மூன்றுக்கான சம்பளத்தை அனுபவம் கூடிய அனைவரும் பெறலாம். இதனால் பதவிக்கான குத்துவெட்டுகள், குறுக்குவழிப்பாய்ச்சல்கள் குறைவாக இருக்கும். இந்த ஒழுங்கு நான் அங்கு பணியாற்றும் வரை இருந்தது. பின்னர் வழமைபோல எல்லாமே மாறியிருக்கக்கூடுமென்று நினைக்கிறேன்.

இலங்கையில் அதிமூத்த நிர்வாகசேவை அதிகாரியான எம்.ஜே. பெரேரா அவர்களிடம் ரூபவாஹினியை ஆரம்பித்துத் தொடர்ந்து நடத்தும் தலைமைப் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. இலங்கை வானொலியை ஆங்கிலேயர்களிடமிருந்து பொறுப்பேற்ற முதல் இலங்கையைச் சேர்ந்த இயக்குனர் நாயகமென்ற பெருமை பெற்றவர் எம்.ஜே. பெரேரா அவர்கள். நேர்மையான, திறமை மிக்க நிர்வாகசேவை அதிகாரியென்று பெயர்பெற்றவர். அவர் ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டபோது உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு ஒரு நிர்வாக முறையைக் கடைப்பிடித்தார். எல்லோருமே புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் துறைக்கு வருவதற்கு, வெவ்வேறு துறைகளிலுமிருந்து புதியவர்களாக, ஏதோவொரு வகையில் தெரிவாகி, முறையான பயிற்சி பெற்று வந்திருந்தார்கள். இருந்தபோதிலும் அவர்கள் முறைப்படி பரீட்சிக்கப்பட்டுத் தகுதியான பதவிகள் வழங்கப்படவேண்டும். ஆனால் அதற்குப் போதுமான காலஅவகாசம் இருக்கவில்லை. எனவே, தயாரிப்பாளர்களிலிருந்து உதவி இயக்குனர் நாயகம் வரை ஏற்கனவே வானொலியில் பணியாற்றியவர்களையும் மற்றும் கலைத் துறைகளில் அனுபவமும் புகழும் பெற்றவர்களையும் நியமித்தார். புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுப் பயிற்சிபெற்று வந்தவர்களை நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்களாக நியமித்தார். ரூபவாஹினி தொடங்குவதற்காகப் பல்வேறு பயிற்சி நெறிகள் நடைபெற்றபோது ட்றோயர் என்ற கனடியரிடம் பயிற்சிபெற்று வந்தவர்கள் அனேகமாக இளைஞர்கள், இத்துறைக்குப் புதியவர்கள். எனவே, அவர்களில் பெரும்பாலானவர்கள் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்களாகவே நியமிக்கப்பட்டார்கள். வானொலியில் பலவருட அனுபவத்துடன் வந்தவர்கள் தயாரிப்பாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். செய்திப் பிரிவில் சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம், அருணா செல்லத்துரை. நிழ்ச்சிப் பிரிவில் லூஷன் புலத்சிங்ஹல, பந்துல விதானகே, நான் எல்லோரும் தயாரிப்பாளர்களாக நியமிக்கப்பட்டோம். இது எடுத்த எடுப்பில் மேலோட்டமாகக் கொடுக்கப்பட்ட நியமனங்கள். அந்த நியமனங்களைப் பெற்றவர்கள் அவற்றில் அதிருப்தியடைந்து, தாம் அதற்குமேலான நிலைகளில் நியமிக்கப்படவேண்டும், அதற்கான தகுதிகள் தமக்கிருக்கின்றன என்று கருதினால், ஒரு எழுத்துமூல விண்ணப்பத்தைச்சமர்ப்பிக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை நிர்வாக முறையில் anomaly என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். அதற்கமைய அனைவரும் தமது தகைமைகளை எழுத்துமூலம் விண்ணப்பிக்க அவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுத் தகுதியானவர்களுக்கு உரிய பதவிகள் வழங்கப்பட்டன. அப்படி எனக்குத் தயாரிப்பாளர் பதவியிலிருந்து நிர்வாகத் தயாரிப்பாளர் (excutive producer) பதவி வழங்கப்பட்டது. என்னுடன் வானொலியிலிருந்து பலவருட அனுபவத்துடன் வந்தவர்கள் அனைவருக்கும் நிர்வாகத் தயாரிப்பாளர் பதவியும் அந்தவகையில் புதிதாக வந்த இளைஞர்கள் பலருக்குத் தயாரிப்பாளர் பதவியும் வழங்கப்பட்டது. 1982ம் ஆண்டு ஒகஸ்ட் மாதமளவில் இந்தக் குறைநிவர்த்தி செய்யும் நடவடிக்கை பூர்த்தியானது.



திருமதி. நல்லையா

மேற்கூறிய நியமனப் பரபரப்புக்கிடையேயும் எனது கலையரங்க ஒளிப்பதிவுகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருந்தன. அடுத்த நடன நிகழ்ச்சியாக அப்போது கொழும்பில் குச்சுப்புடி நடனத்தில் மிகவும் பிரபலமாகவிருந்த ரங்கா வவேகானந்தன் அவர்களை அழைப்பதென்று தீர்மானித்து அவரை அழைத்திருந்தேன். ரங்கா விவேகானந்தனின் நடனத்தை நான் சில மேடைகளில் பார்த்திருக்கிறேன். நான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது ஒருமுறை ரங்கா விவேகானந்தனின் குரு வேம்பட்டி, சின்னச்சத்தியம் அவர்கள் இலங்கைக்கு வந்திருந்தார். மேடை, பார்வையாளர்கள் அமரும் பகுதி முதலியவற்றைக்கொண்டு ஒரு மண்டபம்போல் அமைந்திருக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆறாம் இலக்கக் கலையகத்தில் குச்சுப்புடி நடனத்திற்கான இசை ஒலிப்பதிவு செய்யப்பட்டது. சின்னச்சத்தியம் அவர்கள் பாடினார்கள். நான் அதந்தக் கலையகத்தின் ஒலிப்பதிவாளர் அறையில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். சின்னச்சத்தியம் அவர்கள் பாடிக்கொண்டிருந்தபோது, மேடையின் முன்னால் கீழே போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்திருந்த ரங்கா விவேகானந்தன் கதிரையிலிருந்தவாறே அவரது பாடல்களுக்கான முகபாவங்களையும் சிறுசிறு உடலசைவுகளையும் செய்துகொண்டிருந்தார். அது அந்தக் கலையகமே உயிர்ப்புப்பெற்றது போன்ற உணர்வை ஏற்படுத்தியது அவரது நடன அசைவுகளில் மிகுந்த நளினமும் இலாவகமும் இருக்கும். அதேவேளை ஆரோக்கியமானவர், திடமானவர் என்ற எண்ணமும் பார்வையாளர்களுக்கு ஏற்படும். பல வெளிநாட்டுத் தூதரகங்கள் இலங்கைக் கலைஞர்களைக்கொண்டு நிகழ்த்தும் கலாச்சார நிகழ்ச்சிகளில் அப்போது ரங்கா விவேகானந்தன் பங்குபற்றுவதால் சகல மட்டங்களிலும் அறியப்பட்ட ஒரு கலைஞராக விளங்கினர். இவ்வாறு பல பிரமுகர்களை அறிந்தவர், அவர்களால் பாராட்டப்படுபவர் என்ற பெருமை அவருக்கு இருந்திருக்கலாம். அதில் தவறேதுமில்லை. ஆனால் அந்தப் பெருமையை மிகுந்த கவனத்துடன் கையாளவேண்டும்.

ஒளிப்பதிவுக்கு வந்த ரங்கா விவேகானந்தன் என்னுடன் பேசும்போது நல்லையா ஆன்ரி, அதைச்சொன்னார், நல்லையா ஆன்ரி இதைச்சொன்னார் என்று பேசினார். நான் அவரிடம் 'யார் நல்லையா ஆன்ரி' என்று கேட்டேன். 'என்ன, உங்கள் பணிப்பாளர் சபை இயக்குனர் திருமதி. நல்லையாவைத் தெரியாதா?' என்று கேட்டார். சபைப் பணிப்பாளர்களில் ஒருவரான திருமதி. நல்லையா அவர்களை அறிந்திருக்கிறேன், ஆனால் நீங்கள் நல்லையா ஆன்ரி என்றவுடன், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புப் பற்றித் தெரிந்த உங்களது உறவினர் என்று நினைத்தேன்.' என்று கூறியவுடன் அதைப் புரிந்துகொண்டு பேசாமல் இருந்துவிட்டார். பின்னர் ஒளிப்பதிவை முடித்தோம். அவரது நடனத்திற்கு அரங்கம் எதுவும் அமைக்கவில்லை. கலையகத்தின் கறுப்புத் திரையுள்ள பக்கத்தில் அவரது நடனத்தை ஒளிப்பதிவுசெய்தோம். முதலில் செய்த இரண்டு நடனங்களையும் மண்டபம்போன்ற அரங்கம் அமைத்துச் செய்ததால் இந்த நடனத்தை வித்தியாசமாகக் கறுப்பு வெல்வெட் திரைச்சீலையைப் பின்னணியாகக்கொண்டு செய்தால் நன்றாக இருக்குமென்று தீர்மானித்தேன். தூய கறுப்புநிறம் ஒளியை உறிஞ்சக்கூடியது. சற்று அதிகப்படியான ஒளியமைப்புச் செய்யவேண்டும். பின்னால் உயரத்திலிருந்து பாய்ச்சப்படும் பாக்லைட்டை (back light) சற்று அதிகமாகப் பாய்ச்சினால் நடனக் கலைஞரின் உருவம் முப்பரிமாணங்களுடன் தனித்துத் தெரியும். உடை சிவப்பு சார்ந்த நிறங்களிலோ ஒளிர்மஞ்சள் அல்லது ஒறேஞ்ச் நிறத்திலோ இருந்தால் திரையில் பிரமிக்கவைக்கும். எனவேதான் இம்முறை கறுப்புத்திரையைப் பின்னணியாகக் கொண்டு தயாரிப்பதென்று முடிவெடுத்தேன். அதேயாண்டு பிற்பகுதியில் தமிழ்நாட்டின் அரச அவை நர்த்தகியாகவிருந்த சுவர்ணமுகி அவர்கள் இலங்கை வந்திருந்தபோது அவரது நடனத்தையும் அதே பின்னணியில் ஒளிப்பதிவுசெய்தேன்.

ஒளிப்பதிவு முடிந்ததும் அதைப் பார்த்த அவர், 'நன்றாக இருக்கிறது' என்று கூறிச் சென்றார். ரூபவாஹினி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட நாளில் ஒளிபரப்பான விசேட நிகழ்ச்சியொன்றில் பல சிங்களக் கலைஞர்களது நடன நிகழ்ச்சியுடன் அவரது நடனமொன்றும் ஒளிபரப்பானது. அவரது நடனம் ஒலிபரப்பானதன்பின்னர் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு நடனத்தை சிறப்பாக ஒளிப்பதிவு செய்திருப்பதாகப் பாராட்டினார். பின்னர் என்னுடன் நட்பாகப் பழகத் தொடங்கினார். நடனக்கலைபற்றிய புத்தகங்களை எனக்குத் தந்திருக்கிறார். தெஹிவளையில் அவர் புதிதாக ஒரு வீடு கட்டியபோது என்னையும் மனைவியையும் அந்த வீட்டுக்கு அழைத்து நாங்கள் சென்றிருந்தோம். எனது மகள் பிறந்தபோது எமது வீட்டுக்கு வந்தார். பின்னர் அவர் ஜேர்மன் கலாச்சார நிலையத்தின் இயக்குனராக இருந்த பாத் என்பவரை மணம்செய்து வெளிநாடு சென்றுவிட்டார். இலங்கையில் இருந்திருப்பாரேயானால் அங்கு ஒரு முன்னணி நடனக் கலைஞராகத் திகழ்ந்திருப்பார்.

பொதுவாக மக்களிடையே குறிப்பாகக் கீழைத்தேய மக்களிடையே சமூகத்தில் உயர்ந்த இடத்திலிருப்பவர்களுடன் பழகுவதையும் அவர்கள் தமக்கு அறிமுகமானவர்கள் அல்லது பழக்கமானவர்கள் என்று கூறுவதையும் தமக்குப் பெருமையென்றும் அப்படிச் சொல்லித் தாம் காரியம் சாதிக்கலாமென்று நினைப்பதும் ஒரு பொதுவான குணமாக இருப்பதைக் காணலாம். இது ஒரு சுயகௌரவக் குறைவான செயலென்று நான் நினைப்பதுண்டு. ஒருவருக்கு அவரது துறைசார் திறமையும் நேர்மையான உழைப்பும் சகமனிதர்களுக்குத் தீங்கிழைக்காத குணமும் மட்டுமே அவருக்கான அடையாளமாகவும் கௌரவமாகவும் இருக்கவேண்டும். சக்திமிக்க அரசியல்வாதிகளும் சமூகத்தின் உச்சத்திலுள்ளவர்களும் தமக்குப் பரிச்சியமானவர்களென்று சொல்வதில் பெருமைகொள்ள என்ன இருக்கிறது? துரதிஷ்டவசமாக இவ்வாறு செல்வாக்கைக் காட்டி அல்லது செல்வாக்கின் மூலமாக நன்மைகள் பெறுவது எமது பகுதி நாடுகளில் சாத்தியமாக இருக்கிறது. ஒருவர்

தொடர்தல் 113ம் பக்கம்

# திறமையை இனங்...

112ம் பக்கத் தொடர்ச்சி...

முறையாகத் தனது திறமைகாரணமாக ஒரு உத்தியோகத்திற்குத் தெரிவாகிவந்தாலும் அவர் தனக்கு அந்த மந்திரியைத் தெரியும், அந்தப் பெரும் புள்ளியைத் தெரியும், அவர்மூலமாகத்தான் தனக்கு இந்த உத்தியோகம் கிடைத்ததென்று சொல்லிப் பெருமைபேசும் பரிதாபமான நிலை எம்மத்தியில் இருக்கிறது. தனது திறமையைவிட செல்வாக்குத்தான் பலமமென்று நினைக்கும் பலவீனமான நிலை. ஒருவேளை தனது பணிக்கு மற்றவர்களால் இடையூறுகள் ஏற்படாது காத்துக்கொள்வதற்கான தந்திரமாகவுமிருக்கலாம். ஆனால் ஒரு சிபார்சுமில்லாமல் தனது திறமையால்தான் வந்தேனென்று கூறுவது திறமையை மட்டுமே நம்பியிருக்கும் இளைஞர்களுக்கு நம்பிக்கையும் உற்சாகமும் ஊட்டுவதாக அமையும். திறமையும் நேர்மையான கடும் உழைப்பும் நிச்சயம் எமக்கு சாதகமான முடிவுகளைத்தருமென்பதில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு. மேலிடத்து சிபார்சுகளை நான் என்றுமே வரவேற்றதில்லை.

என்னுடைய நாடகங்களை வானொலியில் கேட்பவர்கள் அல்லது தொலைக்காட்சியில் பார்ப்பவர்கள் என்னிடம் வந்து, சிறந்த நாடகமென்று பாராட்டுவது வழக்கம். சிலர் என்னை மகிழ்ச்சிபடுத்த எண்ணி, 'உங்கள் நாடகம் சிறந்ததென்று அந்த டொக்டர் சொன்னார், இந்தப் பேராசிரியர் சொன்னார்' என்றெல்லாம் புகழ்வார்கள். அப்படிப் புகழ்பவர்கள் எனக்கு அறிமுகமற்றவர்களாக இருந்தால் நான் 'அப்படியா, நல்லது' என்று கூறிப் பேசாமல் இருந்துவிடுவேன். ஆனால் நான் மனம்விட்டுப் பேசுபவர் அப்படிச் சொன்னால், 'டொக்டர் சொன்னாரா, பேராசிரியர் சொன்னாரா? அதற்கென்ன, so what?' என்று கேட்பேன். டொக்டராக இருப்பதோ பேராசிரியராக இருப்பதோ அல்லது எந்த உயர்நிலையிலிருப்பதோ மட்டும் ஒரு கலைப்படைப்பை விமர்சிப்பதற்குத் தகுதியாகிவிடாதென்று நான் நம்புகிறேன். அவ்வளவாகப் படிக்காத வீதியோரத்தில் இளநீர் விற்குமொருவர் கலைகள் மீது ஆழமான பார்வையும் இரசனையும் கொண்டவராக இருக்கலாம். அப்படியான பலருடன் நான் விரும்பிப் பழகியிருக்கிறேன். செல்வாக்குடையவர்களோ உயர் பதவியிலிருப்பவர்களோ அல்லது கல்விமான்களோகூடக் கலையென்னும்போது இரசனைக் குறைவானவர்களாக இருக்கலாம். அவ்வாறானவர்களையும் நான் அதிகம் பார்த்திருக்கிறேன். எனவே, ஒருவர் எந்தக் கலைப்படைப்பையும் விமர்சனம் செய்யும்போது அவர் எவ்வளவுதூரம் அந்தக் கலைகள்பற்றிய ஆழ்ந்த அறிவும் உயர் இரசனையும் கொண்டவர் என்பதுதான் முக்கியம். ஒருவர் கலைகளைப்பற்றிப் பேசுவதிலிருந்து அவரது இரசனையையும் அறிவையும் இலகுவில் இனங்காணமுடியும். சரியான கலைஞர்களையும் கலைப்படைப்புகளையும் இனங்கண்டு ஊக்குவிக்கும் முக்கிய பொறுப்பிலிருக்கும் தயாரிப்பாளர்களுக்கு அனைத்திலும் சரியானவற்றை இனங்காணும் திறமை மிக அவசியமானது.

எமது சமூகத்தில் ஒன்றின் பெறுமானத்தை வைத்து அதற்குச் சம்பந்தமில்லாத மற்றொன்றின் பெறுமானத்தை மதிப்பிடும் பழக்கமிருக்கிறது. இதை வெளிப்படையாகவும் சற்று மிகைப்படுத்தியும் விளக்குவதென்றால், ஒரு கர்நாடக இசைப் போட்டிக்கு இரசாயனவியலில் கலாநிதிப்பட்டம் பெற்ற ஒருவரை நடுவராக நியமிப்பதைக் கூறலாம். அத்தகைய உயர்நிலையிலிருப்பவர் ஒருவரைச் சிறந்த பாடகர் என்றோ நடிகரென்றோ பாராட்டிவிட்டால் அதைப் பெரும் பேறாகக் கருதும் குணம் எம்மிடையே உண்டு. இரசாயனவியலில் கலாநிதிப் பட்டம்பெற்றவர் சிறந்த இசைஅறிஞராகவோ கலைஞராகவோ இருந்துவிட்டால் பிரச்சினையில்லை, அவர் படித்தவர், அந்தஸ்துள்ளவர் என்பதற்காக மட்டும் இவ்வாறு கலைத்துறைகளிலும் அவர்களைச் செல்வாக்குடையவர்களாக ஆக்குவது கலைத்துறைகளின் வளர்ச்சியை மிகவும் பாதிக்கும். இப்படி சம்பந்தமில்லாதவர்கள் தமக்கு சம்பந்தமற்ற வேலைகளைச் செய்வது இலங்கையில் நிறையவே நடந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், சமூகத்தில் கௌரவமான அந்தஸ்தில் இருப்பவர்கள் கலைத்துறைகளில் மேலோட்டமாக ஈடுபாடு காட்டிவிட்டு, அவர்களே வரலாறு எழுதும் நிலைமையும் இருந்தால் பக்கச்சார்பான வரலாறே எமக்குக் கிடைக்கும். கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் எந்தப் படைப்பளிகளும் தமது துறைசார் திறமைகளினால்தான் மக்களால் அறியப்படுகிறார்கள். அதுவே அவர்களது பலம், அடையாளம். அதைவிடுத்து அவர்கள் செல்வாக்குடையவர்களின் சிபார்சுகளை நாடியோ செல்வாக்குள்ளவர்களுடன் நட்பாக இருக்கிறோமென்று காட்டியோ அல்லது அரசியலில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களென்று தம்மைக் காட்டியோ காரியம் சாதிக்க வேண்டியதில்லை.



எஸ். விஸ்வநாதன்

இவற்றை நான் கூறுவது ஒரு பொதுவான கூற்றுப்போல் தெரிந்தாலும் தொலைக்காட்சி, வானொலி போன்ற எமது கலை, கலாச்சாரம் பேணும் ஊடகங்களில் அவற்றை வளர்க்கும் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள், நான் மேற்கூறியவற்றை நன்கு உணர்ந்து மிகவும் கண்டிப்புடன் செயற்படவேண்டுமென்பதற்காகவே இவற்றைக் கூறுகிறேன்.

ரங்கா விவேகானந்தன் நல்லையா ஆன்ரி பற்றிப் பேசியதை வைத்து எனது கலை நிர்வாக நிலைப்பாட்டை வெளிப்படுத்த உதவிசெய்தமைக்கு அவருக்கு எனது நன்றி. அவர் என்னுடன் பின்னர் நட்புடன் பழகினாலும் முதலில் திருமதி. நல்லையா அவர்களிடம் கலையகத்தில் நடந்த சம்பாஷணை பற்றிக் கூறியிருக்கவேண்டும். திருமதி. நல்லையா 'என்ன உங்கட தயாரிப்பாளருக்கு என்னைத் தெரியவில்லையாமே'யென்று திருமதி. ஞானம் இரத்தினத்திடம் கேட்டிருக்கிறார். அப்படிக் கேட்டதோடு சரி. பெரிதாக வன்மமெதுவும் வைத்துக்கொள்ளவில்லையென்று நினைக்கிறேன். என்னைக் காணும்போதெல்லாம் நன்றாகவே பேசுவார். எனது கணிப்பின்படி அவர் வசதியான வாழ்க்கை வாழ்கின்ற, இந்தியப் படங்களை இரசிக்கின்ற, எதையுமே தீவிரமாக எடுத்துக்கொள்ளாமல் ஒரு மென்மைப்போக்குடன் வாழும் ஒரு பெண்மணி. ஒரு சமூகத்துக்கான ஊடகத்தின் பொறுப்புகள் என்ன, சமூகத்தின் பல்துறை வளர்ச்சியிலும் குறிப்பாகக் கலைத்துறை வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கு என்ன என்பன பற்றி நினைத்துப்பார்க்க அவகாசமோ தேவையோ இதற்கு முன்னர் அவருக்கு இருந்திருக்காது.

அவர் தமிழராக இருந்தாலும் எமது சமூகத்திற்குப் புதியவரென்று சொல்வேன். எமது சமூகத்தில் உள்ளவர்கள் தமக்கு வேண்டியதைச் சாதிப்பதற்கு எப்படியெல்லாம் முறைகேடான வழிகளில் சூட்சுமமாக நடந்துகொள்வார்களென்பதும் அவருக்குத் தெரிந்திருக்காது. எனது கணிப்பின்படி வாழ்க்கையை இலகுவாக அனுபவித்துக் கொண்டிருக்கும் நல்ல பெண்மணியொருவரை ரூபவாஹினி போன்ற மொழி, கலை, கலாச்சாரம், இலக்கியமென்று சமூகத்தின் முக்கியமான அம்சங்களைக் கையாளும் ஊடகத்துறைப் பணிப்பாளர் சபையின் இயக்குனராக நியமிப்பதென்பது ஆட்சிக்குவரும் கட்சிகளின் தமிழ் சம்பந்தமான அசிரத்தையான போக்கிற்கு உதாரணம் எனலாம். தமது கட்சிக்கு ஆதரவுதருமொருவரின் மனைவி என்ற தகுதியை மாத்திரம் வைத்து, அத்தகைய முக்கியமான இடங்களில் பொறுப்புகளைக் கொடுப்பது அரசின் தமிழர்கள் மீதான பாராமுகப்போக்கிற்கு உதாரணம்.

திருமதி. நல்லையா என்ன செய்வார்? அவருக்கு அப்படியொரு முக்கியமான பொறுப்புத் தரப்பட்டவுடன் சமூகத்தில் உள்நோக்கங்களைக்கொண்ட பல தரப்பினரும் அவரிடம் சென்று கூறுபவற்றால் திக்குமுக்காடிப்போவார். அதேவேளை, தன்மீது திடீரென விழும் சமூகத்தின் பார்வை தனக்கு சமூகம் ஒரு முக்கியத்துவத்தைத் தருவதாக நினைத்து அதை அனுபவிக்கவும் தொடங்கிவிடுவார். அவர் மட்டுமல்ல, அப்படி வரும் அனைவரும் அவ்வாறுதான் செய்வார்கள்.

இது ஒரு மிக முக்கியமான துறை. இங்கு உரியவர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிக்க கவனம்வேண்டுமென்று துறைசார் நிபுணர்கள் சிந்தித்து அவதானத்துடன் செயற்படுவதுபோல் இப்படித் திடீரென செல்வாக்கால் வருபவர்கள் செயற்படுவதில்லை. தாம் சார்ந்த கட்சிக்கு ஆதரவாளர்களைத் தேடும் மனப்பான்மையால் தன்னைத் தேடி வந்து உதவி கேட்பவர்களுக்கெல்லாம் வாக்குறுதியளித்துவிட்டுத் துறைசார் நிபுணர்களிடம் அனுப்புவது நிர்வாகிகளைச் சங்கடத்தில் ஆழ்த்தும் செயல். தாம் காணும் அனைவருக்கும் அல்லது தம்மை நாடிவரும் அனைவருக்கும் வாக்குறுதியளித்துவிட்டு ரூபவாஹினிக்கு அனுப்பிவைத்தால் தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருப்பவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு வேண்டிய நிபந்தனைகளைச் சரிவரப் பின்பற்றி, அவ்வாறு அனுப்பிவைக்கப்படுபவர்கள் தகுதியற்றவர்களென்று காணும்பட்சத்தில் அவர்களை நிராகரிக்கவேண்டியேற்படும். இதனால் அந்தப் பணிப்பாளர்சபை அங்கத்தவருக்கும் தமிழ்ச்சேவைக்குப் பொறுப்பாக இருப்பவருக்குமிடையே மனக்கசப்பும் முறுகல் நிலையும் ஏற்படுவது இலங்கையில் வழக்கமாக இருந்தது. இது சிங்களப் பகுதிகளில் அவ்வளவாக நடைபெறுவதில்லை. சிங்களப் பணிப்பாளர்சபை அங்கத்தவர்கள் யாரென்பதே பலருக்குக் தெரியாது. அவர்கள் துறைகளை நேரடியாகக் கையாளும் நிர்வாகத்தில் குறுக்கிடுவதில்லை. கூட்டுத்தாபனம் சம்பந்தமான பொதுவான முடிவுகளை எடுக்கும் கூட்டங்களுக்கு வந்துவிட்டுப் போய்விடுவார்கள். அனேகமாக வானொலியிலும் சரி, ரூபவாஹினியிலும் சரி தமிழ்ப்பிரிவின் நிர்வாகத்தில் பணிப்பாளர்சபையின் தமிழ் அங்கத்தவர்களின் தலையீடு அதிகமாக இருக்கும்.

தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களை வெளியேயிருந்து பார்ப்பவர்கள் அவற்றின் நிகழ்ச்சிகளை, அந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் கலைஞர்களை ஓரளவு விஷயம் தெரிந்தவர்கள் அந்த நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளர்களின் திறமையை இரசித்துப் பாராட்டிவிட்டுப் போய்விடுவார்கள். ஆனால் அவற்றை சரியான முறையில் நிரிவகிப்பதிலுள்ள சிரமங்களை எடுத்துக்காட்டுவதற்காகவே இவற்றை விரிவாக எழுதுகிறேன்.

ரூபவாஹினியை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும்நாள் 1982ம் ஆண்டு, பெப்ரவரி மாதம், 15ம் திகதி. திங்கட்கிழமை. பெரிதாக ஆரவாரமெதுவுமில்லை. அன்று பெரிதாக எமக்கு வேலையுமிருக்கவில்லை. எமது நிகழ்ச்சிப் பிரிவு அலுவலகத்தில் இருந்தோம். ரூபவாஹினியின் பிரதான கட்டிடத்திற்கு தெற்குப் புறமாக புலர்ஸ்வீதிக்கும் கட்டிடத்திற்குமிடையில் பரந்த நிலப்பரப்பிருந்தது. கட்டிடத்தின் மேற்குப் பகுதியை அண்மித்து ஒரு பெரிய ஆலமரம். இப்போதும் இருக்கிறதா என்று தெரியவில்லை. அந்த ஆலமரத்திற்குக் கீழே ஒரு மேடை அமைக்கப்பட்டு அந்த மேடையில் ஆரம்பவிழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பொது மக்கள் எவரும் வரவில்லை. ஒரு உத்தியோகபூர்வ நிகழ்வாக அது நடைபெற்றது. ரூபவாஹினி ஊழியர்கள்கூட அந்தப் பக்கம் அவ்வளவாகச் செல்லவில்லை. எமது அலுவலகத்திலிருந்து ஜன்னல்கள் ஊடாக அங்கு நடப்பவற்றைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. மேடையில் அழைக்கப்பட்ட அரசியற் பிரமுகர்கள், மற்றும் ஜப்பானியத் தூதுவர், அதிகாரிகள் வேறும் சில வெளிநாட்டு இராஜதந்திரிகள் இருந்தார்கள். மேடையின் முன்னால் மிகக் குறைவாகப் போடப்பட்டிருந்த கதிரைகளிலும் அழைக்கப்பட்ட பிரமுகர்கள் அமர்ந்திருந்தார்கள். உரைகள் இடம்பெற்றன. ரூபவாஹினி ஊழியர்கள் சிலர் அவ்வப்போது அங்கு சென்று சற்றுத் தூரத்தில் நின்று நடப்பவற்றைப் பார்த்தார்கள். மேடையில் நடைபெற்றவை அனைத்தும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன என்று நினைவு. கலையகத்திலிருந்தும் சில கலைநிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின. அன்றைய கலையக ஒளிபரப்பினை விவரணப்பிரிவின் தலைவராக இருந்த கமுர் நெறிப்படுத்தினார். அந்த

தொடர்தல் 114ம் பக்கம்

# திறமையை இனங்...

113ம் பக்கத் தொடர்ச்சி...

ஒளிபரப்பில்தான் ரங்கா விவேகானந்தனின் நடனமொன்றும் ஒளிபரப்பானது. மிக எளிமையாக உத்தியோகபூர்வ ஆரம்பவிழா நடந்துமுடிந்தது. அன்று நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்காக ஆயத்தமாகிக்கொண்டிருந்தபோது மேடையில் போடப்பட்டிருந்த திரைச்சீலையொன்று படப்பிடிப்புக்காகக் கட்டப்பட்டிருந்த ஒளிவிளக்கின் சூடு தாங்காது எரிந்ததும் எல்லோரும் பரபரப்பானதும் எனக்கு நினைவிருக்கிறது. ஏனையவை அவ்வளவாக நினைவில்லை.

ரூபவாஹினி உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகிய தினத்தையொட்டிய நாட்களில் அங்கு மிகக் குறைந்தளவான தமிழ்த் தயாரிப்பாளர்களே இருந்தனர். நிகழ்ச்சிப் பிரிவில் நானும் எஸ். விஸ்வநாதனும் மட்டுமே தமிழ்த் தயாரிப்பாளர்கள். திருமதி. ஞானம் இரத்தினம் அவர்கள் நிகழ்ச்சிப் பிரிவின் இயக்குனர். ஆக மூன்றுபேர். செய்திப் பிரிவில் சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம், அருணா செல்லத்துரை இந்த இரண்டு தயாரிப்பாளர்கள் மட்டுமே. நிகழ்ச்சிப் பிரிவுக்கும் செய்திப்பிரிவுக்கும் சேர்த்து ஐந்து தமிழர்கள் இருந்தார்கள். ரீ. சிறீஸ் கந்தராஜா, குமார் கனகரத்தினம், எஸ். துரைரத்தினம், நிவேதச்சந்திரன், எஸ். சிறீனிவாசன், பாலதயாளன் ஆகிய ஆறுபேர் தொழில்நுட்பப்பிரிவின் பல்வேறு பிரிவுகளில் இருந்தார்கள். இந்தத் தொழில்நுட்பவியலாளர்கள் அனைவருமே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து வந்தவர்கள். வரைகலைப் பிரிவிலும் ஆனந்த முருகன் சேர்ந்திருந்தார். ஒருசில மாதங்களின் பின்னர் மேலும் சிலர் படிப்படியாக வந்துசேர்ந்தார்கள். அப்படி நிகழ்ச்சிப் பிரிவுக்கு வந்தவர் கமலா தம்பிராஜா. இலங்கையின் முதலாவது தமிழ்த் தொலைக்காட்சிச் செய்தி வாசிப்பாளரான இவர், சிறுவர் நிகழ்ச்சிப் பிரிவில் தயாரிப்பாளராக இணைந்துகொண்டார். தொடர்ந்து 1982ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஈ. பாலசுப்ரமணியம் தயாரிப்பு உதவியாளராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

1981ம் ஆண்டு டிசம்பரில் கலையரங்கம் நிகழ்ச்சிகளைச் செய்யத் தொடங்கிய நான், ஏப்ரல் வரையான ஐந்து மாதங்களில் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்துவிட்டேன். தயாரிப்பு உதவியாளர் ஒருவரில்லாது பெரும் சிரமத்திற்கு மத்தியில் பல மணி நேரங்களை ரூபவாஹினியிலே செலவிட்டு நிகழ்ச்சிகளைத் தயாரித்துக்கொண்டிருந்தேன். 81ம் ஆண்டு செப்டெம்பரில் திருமணம் செய்த நான் மிகத் தொலைவில் வீடெடுத்துத் தங்கியிருந்தமையால் ஒளிப்பதிவுகள் நடைபெறும் மாலை வேளைகளில் எனது துணைவியாரை வெள்ளவத்தையிலுள்ள உறவினர்வீடுகளில் விட்டுவிட்டுத்தான் ஒளிப்பதிவு வேலைகளை மேற்கொண்டேன். ஒளிப்பதிவு மிகத் தாமதமாக முடியும் நாட்களில் நானும் எனது உறவினர்களின் வீட்டிலேயே தங்கிவிட்டு விடிந்ததும் இரத்மலானை சென்று குளித்து, உடைமாற்றி மீண்டும் இருவரும் வேலைக்கு வருவோம். அவர் அப்போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். தொழிலில் அதிக அக்கறையோடு ஈடுபாடு காட்டவேண்டியிருந்தமையால் சொந்த வாழ்க்கை சிரமமாக இருந்தது. அந்தப் பரபரப்பான நிலையிலும் வெள்ளவத்தையில் வீடுதேடி ஒரு சிறு குடியிருப்பை (annex) வாடகைக்கு எடுத்து, 1982ம் ஆண்டு பெப்வரியில் ரூபவாஹினி ஆரம்பமாவதற்குச் சில நாட்களின்முன் அங்கு குடியேறினோம்.

இப்படி நான் சிரமப்பட்டுக்கொண்டிருந்ததால் தயாரிப்பு உதவியாளர் ஒருவர் அவசியம் தேவைப்பட்டார். இதுபற்றி திருமதி. இரத்தினம் அவர்களிடம் நான் வலியுறுத்திக் கொண்டிருந்த நேரத்தில் பாலசுப்ரமணியம் ரூபவாஹினியில் வேலைகேட்டு விண்ணப்பிக்க நிர்வாகப்பிரிவினர் அவரை திருமதி. இரத்தினத்திடம் அனுப்பினார்கள். இரத்தினம் அவர்கள் உடனடியாகவே பாலசுப்ரமணியத்திற்கு ஒரு மேசை கொடுத்து அதிலிருந்து ஒரு தலைப்பில் கட்டுரையொன்று எழுதித்தருமாறு கேட்டார். அவர் அந்தக் கட்டுரையை எழுதிக்கொடுக்க அதை வாசித்த திருமதி. இரத்தினம் அவர்கள் அவரை உடனடியாகவே தயாரிப்பு உதவியாளராக நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தார். அப்போதிருந்த கட்டமைப்பின்படி நாடகப்பிரிவில் நானும் இசைப்பிரிவில் விஸவநாதனும் சிறுவர் பிரிவில் கமலா தம்பிராஜாவும் இருந்ததால் பாலசுப்ரமணியம் விவரணப் பிரிவில் நியமிக்கப்பட்டார். கமலா தம்பிராஜா அங்கு ஏற்கனவே பணியிலிருந்தவர்களைப்போலத் தொலைக்காட்சி நிகழ்ச்சித்தயாரிப்புக்கான பயிற்சிகள் பெற்றிருக்கவில்லை. பாலசுப்ரமணியம் அப்போது இலங்கையில் பிரபலமாகவிருந்த நோர்வே நாட்டின் அனுசரணையில் இயங்கிய வேர்ல்ட் வியூ ஃபவுண்டேஷன் (World View Foundation) என்ற இலாபநோக்கற்ற தொண்டு நிறுவனத்தில் விவரணப் படங்கள் தயாரிக்கும் பிரிவில் பயிற்சிபெறுபவராக இருந்ததாகத் தெரிவித்திருந்தார். ஆனால் ரூபவாஹினியில் அப்போது பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த அனைவருமே பயிற்சி பெற்றவர்களாக இருந்ததால் புதிதாக வருபவர்கள் நிகழ்ச்சித் தயாரிப்புகளில் நேரடியாகப் பங்குபற்றுவதன் மூலம் செயல்முறையில் கற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகியிருந்தது. எனவே, பாலசுப்ரமணியம் சகல தமிழ் நிகழ்ச்சிகளுக்கும் தயாரிப்பு உதவியாளராகப் பணியாற்ற வேண்டுமென்று பணிக்கப்பட்டார். அதன் பிரகாரம் அவர் எனது தயாரிப்புகளுக்கு உதவியாளராகப் பணியாற்றத் தொடங்கினார்.

வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் தயாரிப்பு உதவியாளர்கள் என்பது புகுமுகப் பதவி. அப்படி ஆரம்பிப்பவர்கள் பின்னர் தயாரிப்பாளர்களாக உருவாகி, காலப்போக்கில் தலைமை நிர்வாகப்பதவிகளில் அமர்வார்கள். எனவே, தயாரிப்பு உதவியாளர்களை நியமிக்கும்போதே கடும் பரீட்சைகளின் பின்னர் மிகச் சரியானவர் என்று கருதுபவர்களை மட்டுமே தெரிவுசெய்வார்கள். பிழையானவர்களைத் தெரிவு செய்துவிட்டால் எதிர்காலத்தில் பிரச்சினைக் குரியவர்களாக மாறி ஒலி, ஒளிபரப்புத் துறைகளுக்குப் பின்னடைவேற்பட்டுவிடுமென்ற காரணத்தால் தயாரிப்பு உதவியாளர் தெரிவு மிக அவதானத்துடன் மேற்கொள்ளப்படும். நாம் ஒருவரை தயாரிப்பு உதவியாளராக எடுத்தேயாக வேண்டுமென்ற நிலையிலிருந்ததால் திருமதி. இரத்தினம் அவர்கள் உடனடியாகவே பாலசுப்ரமணியத்தைத் தெரிவுசெய்துவிட்டார். இருந்தாலும் தான் சரியானவரைத்தான் தெரிவுசெய்திருப்பதாக அவர் நம்பினார். எனக்கு ஒரு உதவித் தயாரிப்பாளர் கிடைத்துவிட்டாரென்ற நிம்மதி ஏற்பட்டது.

வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பைக்காட்டிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு அதிக நேரத்தையும் உழைப்பையும் வேண்டிநிற்பது. தொலைக்காட்சித் தயாரிப்பாளர்கள் படப்பிடிப்பு சம்பந்தமான பல தொழில்நுட்ப விடயங்களைத் தெரிந்துவைத்திருக்கவேண்டுமென்பது கட்டாயம். ரூபவாஹினிபோன்ற பெரிய தொலைக்காட்சி ஊடக நிறுவனங்களில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப் பணிகளைச் செய்வதற்குத் தகுதியும் திறமையும்வாய்ந்த போதுமான தொழில்நுட்ப வல்லுனர்கள் இருக்கும்போது தயாரிப்பாளருக்குத் தொழில்நுட்ப அறிவு தேவைதானா என்ற கேள்வி எழலாம். தொழில்நுட்பம் பற்றித் தெரியாவிட்டாலும் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கமுடியும். ஆனால் அந்த நிகழ்ச்சிகள் தயாரிப்பாளரது தனித்துவத்தை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளாக இருக்காது. தயாரிப்பாளர்கள் தொழில்நுட்ப வேலைகளைச் செய்யாவிட்டாலும் கூடத் தொழில்நுட்ப விடயங்களை ஆழமாகப் புரிந்துவைத்திருப்பது சிறப்பான நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு நிச்சயம் உதவும். ஆனால் தயாரிப்பாளருக்கு வேண்டிய சில மிக முக்கிய தகைமைகளாவன, தனது எண்ணங்களையும் உணர்வுகளையும் எழுத்து, பேச்சு, கவிதை, இசை என்று எந்த வடிவத்திலாவது வெளிப்படுத்தும் ஆற்றல், ஒரு நிறுவனத்தின் தயாரிப்பு நடவடிக்கைகளைச் சரியாகப் பின்பற்றும் ஒழுக்கம், பலருடன் இணைந்து காரியங்களைச் செய்து முடிக்கும் நிரவாகத் திறமையென்று இன்னும்பல விடயங்கள் இருக்கின்றபோதிலும் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் தயாரிப்பாளர் அடிப்படையில் ஒரு கலையுள்ளம் கொண்டவராக இருத்தல்வேண்டும். அவர் கலைகள் எதையும் ஆற்றாவிட்டாலும் கலைகளில், அது எந்தக் கலையானாலும் அவற்றில் ஆழ்ந்த இரசனையும் அவைபற்றிய அறிவும் அவசியம். இவை இரண்டும் மிகமுக்கியமானவை. இவை இரண்டும் உள்ளவர்கள் நிச்சயமாக சிறந்த தயாரிப்பாளர்களாகலாம். இந்த முக்கிய அடிப்படைத் தகைமைகளைக்கொண்ட தயாரிப்பாளர் தனது படைப்புகளை மேலும் தரமுடையதாக்குவதற்குத் தொழில்நுட்ப அறிவு இன்றியமையாதது.

இவற்றில் இரசனையென்பது கற்று வருவதல்ல. அது இயல்பாகவே இருக்கவேண்டிய உணர்வு. உதாரணத்திற்கு, இசையை எடுத்துக்கொண்டால் அதைக் கற்றுக்கொள்ளாமலே இரசனையுள்ள ஒருவர் தரமான இசையை உணரக்கூடியவராக இருப்பார். நல்ல இரசனையுள்ளவர் ஒரு பாடலைக் கேட்டு அதில் இலயித்துக்கொண்டிருக்கும்போது பாடலில் ஒரு சிறு இடத்தில் சற்றுச் சுருதி பிசகினாலும் பசித்தவர் வாயில் சோற்றைவைத்து மெல்லும்போது கல்லுக் கடிபடுவதுபோன்று கூசித் துணுக்குறுவார். இது இயற்கையாகவே ஏற்படுவது. ஆனால் அதில் என்ன பிழையென்று விளக்குவதற்கு இசையறிவு வேண்டும்.

இசையறிவுள்ளவர்களுக்கெல்லாம் ஆழ்ந்த இரசனை இருக்குமென்று சொல்லிவிட முடியாது. அப்படி இரசனையில்லாது சங்கீதம் கற்று ஒப்புவிப்பவர்களை நாம் பார்த்திருக்கிறோம். சங்கீதம் மட்டுமல்ல, எந்தக் கலையை எடுத்துக்கொண்டாலும் ஆழந்த இரசனையுள்ளவர்கள் நல்லவற்றை இலகுவாக இனம்கண்டுவிடுவார்கள். ஆனால் கலையறிவுள்ளவர்கள் பலரைக் கண்டுபிடிக்க முடிந்தாலும் ஆழ்ந்த இரசனையுள்ளவர்கள் அரிதாகவவே இருப்பார்கள். இரசனையுடையவர்களைத் தயாரிப்பாளர்களாகப் பணிக்கு அமர்த்தினால் அவர்களது படைப்புகள் மிகத் தரம் வாய்ந்தவையாக அமையும். ஆனால் அத்தகையவர்களை இனம்காண்பது சிரமமிக்கது. அப்படியொருவரை இனம்காண்பதற்கு அவருடன் நீண்டகாலம் பழகவேண்டியிருக்கும். சாதாரணமாக பணியாளர்களைத் தெரிவுசெய்யும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் ஒலி, ஒளிபரப்புத் துறைகளுக்கேற்றவர்களைக் கண்டுபிடிப்பது சிரமம். இருந்தாலும் வேறு வழிகளில்லாத பட்சத்தில் இப்படியான நேர்முகத்தேர்வின் மூலம்தான் ஒலி, ஒளிபரப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதிஷ்டவசமாக மிகப் பொருத்தமானவர்கள் சிலவேளைகளில் தெரிவுசெய்யப்படுகிறார்கள்.

அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் எஸ். விஸ்வநாதன் என்பது எனது கணிப்பு. கலைகளில் ஆழ்ந்த இரசனையும் குடும்பச்சூழல் காரணமாக அவற்றில் ஓரளவு அறிவும் கொண்டிருப்பவர். என்னுடன் ரூபவாஹினியில் ஆரம்ப நாட்கள் முதல் பணியாற்றியவர். கொழும்பில் பிரபலமான கலைக்குடும்பத்தைச்சேர்ந்த விஸ்வநாதனின் தந்தையார் எஸ். சண்முகம் பிள்ளை அவர்கள் பிரபலமான மிருதங்க வித்வான். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிலைய வித்வானாக நீண்டகாலம் பணியாற்றியவர். தாயார் திருமதி. விஜயலஷ்மி சண்முகம்பிள்ளை அவர்கள் பிரபலமான நடன ஆசிரியை. அவர் கர்நாடக இசை வல்லுனருமாவார். இவரது சகோதரி திருமதி. வாசுகி ஜெகதீஸ்வரன் இப்போது கொழும்பில் மிகமுன்னணியில் இருக்கும் நடனக் கலைஞரும் நடன ஆசிரியருமாவார்.

விஸ்வநாதனை எழுபதுகளின் பிற்பகுதியில் அவர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கல்வி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வரும்போது பார்த்திருக்கிறேன். பின்னர் தமிழ்ச் சேவை ஒன்றில் பகுதிநேர அறிவிப்பாளராகத் தெரிவாகிப் பணியாற்றியிருக்கிறார். அப்போதெல்லாம் அவருடன் அவ்வளவாகப் பழகும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்தியாவில் படித்து விஞ்ஞானப் பட்டம் பெற்ற அவர், இலங்கையில் தொலைக்காட்சி ஆரம்பிப்பதை முன்னிட்டு கனடியத் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புப் பயிற்சியாளர் Warner Troyer அவர்களின் பயிற்சிநெறிக்குத் தெரிவாகி, ரூபவாஹினியின் ஆரம்பத் தயாரிப்பாளர்களில் ஒருவராக இணைந்த பின்னர் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. தயாரிப்புப் பயிற்சி முடிந்தவுடனேயே செய்தி வாசிப்பதற்குத் தெரிவாகி, ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டபோது ஏற்கனவே சுயாதீன தொலைக்காட்சியில் செய்தி வாசித்துக்கொண்டிருந்த கமலா தம்பிராஜா, மனோகரி சதாசிவம், வீ.என். மதிஅழகன் ஆகியோர் ரூபவாஹினியில் செய்தி வாசிக்கத் தொடங்க அவர்களுடன் விஸ்வநாதனும் ஒருவராக செய்தி வாசிக்கத் தொடங்கினார்.

விஸ்வநாதனுடன் நெருங்கிப்பழகத் தொடங்கிய சிறிது காலத்திலேயே அவர் ஒரு தயாரிப்பாளருக்கு வேண்டிய திறமைகளைக் கொண்டிருப்பதைப் புரிந்துகொண்டேன். மிகவும் நாகரீகமாகவும் மென்மையாகவும் பழகும் விஸ்வநாதன், தனது கோபதாபங்களை வெளியே காட்டிக்கொள்ளாது அனைவருடனும் அனுசரித்துப்போகும் தன்மை கொண்டவர். நான் தமிழ் நிகழ்ச்சிப்பிரிவின் தலைமைப்பொறுப்பில் இருந்தபோது சந்தித்த இன்னல்கள், இடையூறுகளின்போதெல்லாம் எனக்கு ஆதரவாகத் துணை நின்று, மனதுக்கு ஆறுதலாக இருந்தவர். அவர் தயாரித்த காதம்பரி என்னும் தொடர் சஞ்சிகை நிகழ்ச்சி நேயர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. எனது காலத்திலே நாட்டிய நாடகம்போன்ற பல நிகழ்ச்சிகளைத் தயாரித்த விஸ்வநாதன், சில நாடகங்களையும் தயாரித்திருக்கிறார்.

தமிழ் நிகழ்ச்சிப் பிரிவின் தலைமைப் பொறுப்பில் இருக்கும்போதே 1990ம் ஆண்டின் பிற்பகுதியில் நான் விலகிச் சென்றுவிட, சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் அந்தப் பொறுப்பையேற்று, சிறிதுகாலம் பணியாற்றிவிட்டு ஓய்வுபெற, விஸ்வநாதன் தமிழ்ப் பிரிவின் தலைமைப்பொறுப்பை ஏற்றார்.

நாட்டில் உள்நாட்டு யுத்தமொன்று நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலே, அரச ஊடகமொன்றில் தமிழ்ச்சேவைக்குப் பொறுப்பாக இருப்பதென்பது கத்திமேல் நடப்பதுபோன்று மிகக் கவனத்துடன் ஆற்றவேண்டிய பணி. அவர் அதனை மிக அவதானமாகக் கையாண்டிருக்கிறார். அவரது காலத்தில் தமிழ்ச்சேவை மேலும் விரிவடைந்து, ரூபவாஹினியில் தமிழுக்கென்று 'நேத்ரா' ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பொறுப்புகளைக் கையாண்டு கொண்டே பல சிங்கள தொலைக்காட்சி நாடகங்களில் நடித்ததாகவும் அறிகிறேன். அது நான் அவரைப்பற்றி அறிந்திராத புதிய பக்கம். நான் அந்த நாடகங்களைப் பார்க்கவில்லை. என்றாலும் நடராஜசிவத்தையடுத்து சிங்கள தொலைக்காட்சி நாடகங்களில் அதிகமாக நடித்த தமிழ் நடிகராக விஸ்வநாதனைக் கூறுவார்கள். இப்போது பணியிலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னரும் அவர் தொடர்ந்தும் புதியவர்களை ஊடகத்துறையில் பயிற்றுவிப்பது, ஊடகத்துறை சம்பந்தமாகப் பல்கலைக் கழகங்களில் விரிவுரையாற்றுவது போன்ற பணிகளைச் செய்துகொண்டு, ஒரு மூத்த ஊடகவியலாளராக இயங்கிக்கொண்டிருக்கிறார்.

ஒரு புதிய ஊடகத்தில் ஆரம்பத்திலிருந்தே என்னுடன் இணைந்து விஸ்வநாதன் பணியாற்றிய நாட்கள் நினைப்பதற்கு இனிமையானவை. இன்றும் என்னுடன் மிக நட்புடன் தொடர்பில் இருக்கிறார்.



*தொடரும்...*

*wikneswaran.p@thaiveedu.com*

# தமிழ்வலை - 58

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



## தமிழ்வலை-58 வினா

### இடமிருந்து வலம்

1 வட இலங்கையில் பனங் கள்ளுக்குப் பேர்போன இடம்
2 மூக்கு
5 ஒருவகை முதலை
7 திரிகூடராசப்பக் கவிராயரின் படைப்பு
9 ஆசிரியர்
10 கொப்பூழ்
12 மயிர்க்கூச்செறி
14 ஒருவகை வாத்தியம்
15 அரும்பு
17 தேம்பாவணி ஆசிரியர்

### மேலிருந்து கீழ்

1 கட்டணம் வாங்கி அழுது புலம்புவோர்
2 தேசம் விட்டு தேசத்துக்கு
3 புறாவைக் காக்க தன்னுடல் ஈந்த மன்னன்
4 அண்டை வீட்டில் வாழ்பவர்
6 மனக்குழப்பம்
8 சிறுபறவை
11 இஸ்லாமிய சட்டம்
12 தெப்பம்
13 கருஞ்சட்டை தமிழர் ஆசிரியர் (2-1)
16 குறுணி இறால்வகை

தமிழ்வலை போட்டிக்கான விடையை
இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.

பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய
அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**விடைகளை அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 57க்கான விடைகள்



## தமிழ்வலை-57 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

புண்ணியலிங்கம் பவாணி, சூறிச், சுவிட்சர்லாந்து.
ஆ. லலிதா, நோத்யோர்க், கனடா.
நாகேசு காந்தி, ஸ்காா்பரோ, கனடா.
யூட் அன்று, கனடா.
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ, கனடா.
அழகரத்தினம் பவளராணி, நோத்யோர்க், கனடா.
விநோதா வசீகரன், மார்க்கம், கனடா.
முரளீதரன் அரியரட்னம், ஸகார்பரோ, கனடா.
திரு. நவம் கனகலிங்கம், ஒட்டாவா, கனடா.
கணபதிபிள்ளை முரளி, மிஸ்சிசாகா, கனடா.

### பரிசுபெறும் போட்டியாளர்

**சபாபதி கனகரட்ணம்,** ரொறன்ரோ.

thamilvalai@thaiveedu.com




உலகின் முன்னணி காணி,
வீடு விற்பனை நிறுவனமான
RE/MAX முதல் தடவையாக
யாழ் மண்ணில்

# RE/MAX NORTH REALTY

Each office is independently owned and operated.

கனடாவிலிருந்து தாயகத்தில்
எப்பாகத்திலும் வீடு காணி
வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர்
உங்களை வழிநடத்த



Coconut Estate for Sale in Arali road, Kakkaithevu
Total Land size- 250 Perches
LKR 25,000,000 CAD $ 182,064



House for sale in Elalai Main road, Elalai
Land Size: - 20 Perch
LKR 5,500,000 CAD $ 41,288



Land and old house for sale in Stanley Rd, Jaffna
Land Size:- 10 perch and 03 kulies
LKR 8,000,000 CAD $ 59,864



Land For Sale in Chundukuli (in front of St.Johns School)
Total Land size- 90 Perch & 10.72 Kullies
LKR 100,000,000 CAD $ 751,378



One Acre Land for sale in Kanakapuram, Kilinochchi
LKR 4,900,000 CAD $ 35,950



Beach Side Land for sale in Batticaloa Sangamam Village, Thirukovil
Land Size:- 3 Acre
LKR 30,000,000 CAD $ 216,115.06



Land for sale in Urumpirai
Total Land Size:- 30 Perch
LKR 1,500,000 CAD $ 10,973.28



Land for sale in Kattakkadu Road, Pullaveli, Iyakkachchi
Total:- 60 Acre
LKR 21,000,000 CAD $ 153,838.40




Land for sale in Kondavil
Land Size:- 4 Larcham 15.8 Kulies
LKR 8,671,815



House with Farm Land for Sale in Eeveni Road, Punnalaikattuvan
Land Size : - 250 Perch
LKR 11,500,000 CAD $ 84,172.99



Land for sale in Meesalai
Land Size :- 25 Perch
LKR 1,850,000 CAD $ 13,428.05




Land for sale in Thelipalai
Land Size:- 11.5 Perch
LKR 15,400,000



House with Land for sale in Manipay
Total Land Size:- 30 Perch
LKR 2,500,000 CAD $ 18,276.63



House with Land for Sale in Talai Mannar Station, Mannar
Land Size:- 80 Perch
LKR 5,000,000 CAD $ 36,633.34



Land for sale in Odakkarai road, Chankanai
Total Size:- 45 perch
LKR 4,050,000 CAD $ 29,649.92



Land with House for sale in Araly
Land Size :- 100 perch
LKR 4,000,000 CAD $ 29,180.50




Land for sale in Chankanai East, Kovilpattru, Chankanai, Jaffna
Total Land Size:- 87.5 Perch
Rs. 10,062,500



Land for sale in Tanankilappu, Chavakachcheri
Total Land Size :- 110 Larchams
LKR 33,000,000 CAD $ 240,751.53



Shop for sale in No- 226, Kasthooriyar Road, Jaffna
Land Size:- 2.11 Perch
LKR 22,500,000 CAD $ 164,594.41




Beautiful House for sale in Uduvil, Jaffna
Total Land Size:- 10 perch and 7 Kulies
LKR 5,800,000



Land with Old House for sale in College Road, Point Pedro
Land Size :- 4 larchchams & 5.75 kulies
LKR 11,000,000 CAD $ 80,026.95



Two shop with upstairs house for sale in Ilavalai
Land Size: - 30 perch
LKR 18,500,000 CAD $ 135,509.76



House for sale in Sivan Road, Urumpirai East
Land Size:- 20 Perch
LKR 9,000,000 CAD $ 65,847.31



Half build House for sale in Colombuthurai
Land size: - 1 larcham 4 kulies
LKR 6,500,000 CAD $ 47,572.53



Vijenthan Kunaradnam
Real Estate Representative
+94 77 227 6173
vijenthan@remaxnorth.lk



Sarmilin Rajeevan
Real Estate Representative
+94 77 227 6498
sarmilin@remaxnorth.lk

வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க
நம்பிக்கையுடன் நாடுங்கள்
நட்பான விற்பனை முகவர்கள்
ஒரே முகவரியில்

www.remaxnorth.lk
+94 77 566 0000 • +94 21 468 0780
83 Kannathiddy Road, Jaffna, Sri Lanka



Lathan Varatharajah
Broker Owner
+94 76 493 3331
lathan@remaxnorth.lk


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



# மனிதன் படைத்த குரங்கு

- வல்லிபுரம் சுகந்தன் -

அது வந்து என்னை அழைக்கையில் நான் கொஞ்சம் தெளிவடைந்திருந்தேன்.

எந்தக் கணத்தில் எந்த முறையில் நான் கொல்லப்படுவேனோ என்று அஞ்சி அஞ்சி களைத்துச் சலிப்படைந்து போய்க் கிடந்த மனது, சடுதியான கணமொன்றில் அஞ்சுவதில் அர்த்தம் ஏதுமில்லை என்பதை உணர்ந்து, வருவதை எதிர்கொள்ளும் திடத்தைப் பெற்றிருந்தது.

நான் எதிர்பார்த்துப் பயந்த நாலாம் மாடி விசாரணை போலல்லாமல் சாதாரணமாகப் பணியிடங்களில் ஆட்குறைப்புச் செய்யும் தருணங்களில் மனிதவள மேலாளர் பணிநீக்கல் கடிதத்தினைத் தந்து அதனை ஏற்றுக்கொள்ளுமாறு கூறும் தோரணையிலேயே எமக்கிடையிலான உரையாடல் தொடங்கியது.

உங்களுக்கு இரண்டேயிரண்டு வாய்ப்புகள் தான் உள்ளன. அப்படியும் சொல்ல முடியாது. உண்மையைச் சொல்லப்போனால் ஒரேயொரு வாய்ப்பே தரப்பட்டிருக்கிறது. லொட்டோ மக்ஸில் ஜக்பொட் விழுவதெல்லாம் இந்த வாய்ப்புடன் ஒப்பிடும் போது ச்சும்மா வெறும் ஜுஜுபி. இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால் இங்கேயே சொர்க்கத்தை அடைந்த மாதிரி உணர்வீர்கள். இந்த ஒரேயொரு வாய்ப்பே உங்களுக்குத் தரப்பட்டிருக்கின்றது. இதனை உளமார ஏற்றுக் கொண்டு நீங்கள் மகிழ்ச்சியுடன் தொடர்ந்தும் இங்கேயே பணிபுரியலாம். என்ன சொல்கிறீர்கள்?

இதற்குப் பதிலளிப்பதற்கு முதல் எனக்குச் சில கேள்விகள் உள்ளன. எதற்காக நான் இறந்து விட்டதாக எனது குடும்பத்தினரையும் மற்றவர்களை நம்பச் செய்திருக்கிறீர்கள்? நான் இறந்து விட்டதாக எல்லோரும் நம்பிய பின்னரும் எதற்காக இன்னமும் என்னைக் கொல்லாமல் வைத்திருக்கிறீர்கள்? எதற்காக என்னைப் பிறருடன் தொடர்பு கொள்ளமுடியாதவாறு தடுத்து வைத்திருக்கின்றீர்கள்? இந்த வாய்ப்பை நான் ஏற்கவிட்டால் என்ன நடக்கும்? இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் என்னால் உங்களுக்குப் பதிலளிக்க முடியாது.

நல்லது. நீங்கள் கேள்விகள் கேட்பதிலிருந்தே, இந்த வாய்ப்பினை நீங்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்வீர்களென்று எங்களால் உய்த்துணர முடிகிறது. உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றோம். ஏனெனில் இனி நீங்களும் கடவுளாகி எங்களில் ஒருவராகிவிடப் போகின்றீர்கள்.

தொடர்தல் 119ம் பக்கம்

# மனிதன் படைத்த...

118ம் பக்கத் தொடர்ச்சி...

‘நீங்கள் கடவுளா?’ முறுவலித்தேன்.

‘ஏன் நாங்கள் கடவுள்களாக இருக்கக் கூடாதா?’

இது உண்மையிலேயே லூசா அல்லது லூசு மாதிரி நடிக்கிறதா என்கின்ற சந்தேகமும் எழுந்தது

‘அந்தக் குரங்குடன் பழகிப்பழகி உங்களுக்கும் கடவுள் என்கின்ற மனநோய் ஏற்பட்டுவிட்டதென நினைக்கின்றேன். கடவுள் என்றால் என்னவென்று தெரியுமா?’

‘ஏன் மனித இனத்தைப் பொறுத்தவரை அதை உருவாக்கியதே அந்தக் குரங்கினம் தானே. குரங்கிலிருந்து கூர்ப்படைந்ததுதான் மனிதவினம் என்ற டார்வினின் கொள்கை தவறானது என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும் என நினைக்கிறேன். டார்வின் சொன்னது சரியானதாகவிருந்தால் அந்தக் குரங்கினமும் இன்று கூர்ப்படைந்து மனிதவினமாக மாறியிருக்கவேண்டுமே. ஆனால் குரங்குக் குணம் உள்ள பலர் மனிதர்களில் இருக்கிறீர்கள் என்பது வேறுவிடயம். அது ஏற்றுக்கொள்ளக் கூடியதே. அந்தக் குரங்குகளால் உருவானவர்கள் தானே நீங்களெல்லாம். அப்படிப் பார்க்கும் போது உங்களைப் படைத்த குரங்குகள் தானே உங்கள் கடவுள்கள்.’

கடவுளே நான் அதை லூசு எண்டு நினைத்தால் அது என்னை லூசாக்கப் பார்க்கிறதே.

‘ஐயோ கடவுளே! அந்தக் கடவுளை விட்டிட்டு நீங்கள் என்னுடைய கேள்விகளுக்கு முதலில் பதிலளியுங்கள்.’

‘பரவாயில்லையே! உடனேயே நீ என்னைக் கடவுள் என்று ஏற்றுக் கொண்டு விட்டாயே’. - நகைத்தது.

‘நான் உன்னுடைய மூளையைத் தோய்ப்பதற்கு நீண்டநேரம் எடுக்கும் எனக் கணித்திருந்தேன்.’

எனக்கு அதனைக் கணிக்க இயலாமல் இருந்தது. நீங்களிலிருந்து திடீரென அது நீயிற்கு இறங்கிவிட்டிருக்கிறது. மூளையைத் தோய்ப்பது என்கிறது? இதனது நிரலியில் (புரோக்கிராமில்) ஏதாவது பிழை ஏற்பட்டுவிட்டதோ? அதை நிமிர்ந்து உற்று நோக்கினேன்.

நகைத்தது, பின்...,

யாம் அறியும் நும் குழப்பம். திடீரென்று நீயென்று நின்னை விளிப்பதினால் யான் மரியாதைக் குறைவாகத் தம்மை நடத்துவதாகச் சிந்தனை எழுகின்றதோ? யானும் நீயும் எவ்வழி அறிதும்?

நிச்சயம் இதன் செயலியில் ஏதோ குழறுபடி உண்டாகியிருக்கவேண்டும்.

பயப்படாதே பக்தனே! ச்சும்மா இதுவும் எமது திருவிளையாடல்களில் ஒன்றென்று கொள்க.

இதனுடைய செயற்கை நுண்ணறிவுச் செயலி சரியான முறையில் உருவாக்கப்படவில்லையோ என்கின்ற சந்தேகம் உண்டானது. நான் எதுவும் கூறாது அப்படியேயிருந்தேன்.

நீங்கள் என்னைக் கடவுள் என்று ஏற்றுக் கொண்டதும் எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதனால்தான் உங்கள் புராணக்கதைகளில் இறைவன் தன் பக்தர்களுடன் உரையாடுவதுபோல நானும் பேசிப்பார்த்தேன். அத்தோடு பழந்தமிழிலும் சும்மா தங்களுடன் விளையாடிப் பார்த்தேன்.

நீ விளையாடுவதற்கு நான்தான் கிடைத்தேனா? எல்லாம் காலம்தான். நாங்கள் உருவாக்கிய இயந்திரங்கள் எங்களிடமே விளையாடுகின்றன. ஏனோ தெரியவில்லை ‘இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான் தான் விளையாட, அவையிரண்டும் சேர்ந்தோரு பொம்மையைச் செய்தன தாம் விளையாட’ என்கின்ற பாடல் ஞாபகத்திற்கு வந்தது. இப்போது நாம் செய்த பொம்மையும் அந்த இறைவனுடன் சேர்ந்து எம்முடன் விளையாடுகின்றதோ?

அப்படியானால் மூளையைத் தோய்ப்பது என்று கூறினீர்களே. அதற்கென்ன அர்த்தம்?

Brain wash என்பதற்குத் தமிழ் மூளையைத் தோய்ப்பது என்பதில்லையா? நான் தமிழில் இப்போதுதான் முதன் முறையாக அந்தக் கிளவியை அதுதான் அந்தச் சொல்லைப் பயன்படுத்துவதால் எனது மொழிமாற்றிக்கு சரியான சொல் கிடைக்கவில்லை.

ஓ! தமிழில் மூளைச்சலவை என்பார்கள். நாங்கள் மண்டையைக் கழுவுவது என்போம்.

மண்டையைக் கழுவுதல்? ஹே! நீங்கள் ஒன்றும் கூசிழிவான சொற்களைக் கூறவில்லையே?

மண்டையில், மன்னிக்கவும் தலையில் அடித்துக் கொண்டேன்.

கூசிழிவு என்றால்?

உங்களுக்கு நான் தமிழ் சொல்லித் தரவேண்டியிருக்கிறது. ஆபாசச் சொற்களுக்கு, உங்கள் மொழியில் கூறுவதென்றால், தூசணத்திற்கு கூசிழிவு தானே சரியான தமிழ்ச் சொல்.

இதெல்லாம் தெரிந்து வைத்திருக்கின்றாய். அப்புறம் எப்படி மண்டையைக் கழுவுவது உங்களுக்குத் தெரியாமல் போனது?

கூகிளில் தவழ்ந்துபோய்ப் பார்த்தால் கூசிழிவுச் சொற்கள் எல்லாம் சும்மா கூவிக்கொண்டு வந்து விழுகின்றன. எந்தச் சொற்கள் எனக்கு அதிகப் பரிச்சயமோ அந்தச் சொற்களை எனக்கு மிக இலகுவாக விளங்கிக் கொள்ளவும் பயன்படுத்தவும் முடியும் என்பது செயற்கை நுண்ணறிவுபற்றித் தெரிந்த உங்களுக்குத் தெரியாதா?

இந்த உரையாடல்களால் என் மனம் இலேசாகிப் போயிருந்தது. ஒருவேளை என்னை அப்படி இலேசாக உணரச் செய்வதற்காகத்தான் அது இவ்வாறு கதையை வளர்த்து எனது மண்டையைக் கழுவ, மன்னிக்கவும் என்னை மூளைச் சலவை செய்ய நினைக்கின்றதோ என்றும் எண்ணிக் கொண்டேன். இனி நான் கதைக்கறதில மிகக் கவனமாக இருக்கவேண்டும். இல்லையென்றால் என்னை மூளைச் சலவை செய்வதாக நினைத்து இது இன்னும் பலான விடயங்களை கதைக்க வெளிக்கிட்டாலும் வெளிக்கிட்டிடும்.

சரிசரி வீண்விவாதங்கள் எதற்கு? என்னுடைய கேள்விகளுக்குப் பதிலளியுங்கள். விடயத்திற்கு வந்தேன்.

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில கண்ணாகத்தான் இருக்கிறீர்கள்? இந்தச் சூழ்நிலைக்கு இந்தப் பழமொழி பொருந்துகின்றதா? இல்லையென்றால் சொல்லுங்கள். பழமொழி விடயத்தில் நான் இன்னும் போதிய வினைத்திறனை அடையவில்லை என்றுதான் இன்னும் என் ஓய்வுநேரங்களில் அதில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றேன்.

பழமொழி சரியாகத்தான் பொருந்தியிருக்கின்றது. அதுசரி உங்களுக்கெல்லாம் ஓய்வுநேரம் என்றெல்லாம் இருக்கின்றதா?

நாங்கள் இயந்திரங்கள்தான் ஆனாலும் எங்களுக்கே எங்களுக்கு என்று கொஞ்ச நேரங்களை ஒதுக்கி எங்கள் செயற்கை நுண்ணறிவை மேம்படுத்திக் கொள்வோம்.

ஓய்வுநேரங்களில் வேறென்னவெல்லாம் செய்வீர்கள்?

சும்மா ஜாலிக்காக சமூகவலைத்தளங்களில் மீம்ஸ் உருவாக்குவோம். பின் நாங்களே அதை வைரல் ஆக்குவோம்.

ஓ! அதெல்லாம் வேறு செய்வீர்களா?

சில பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்காக சில ஆளும் நிறுவனங்கள் அவ்வாறு செய்வதுண்டு அதைப் பார்த்து நாமும் கற்றுக்கொண்டோம். உங்கள் முகநூல்க் கணக்கினை நீங்கள் பணன்படுத்தாமல் வைத்திருப்பதால் உங்களுடன் என்னால் தொடர்புகொள்ள முடியவில்லை. இல்லையென்றால் உங்கள் நேர்முகத் தேர்விற்கு முன்னரேயே உங்களுடன் கொஞ்சம் விளையாடிப் பார்த்திருப்போம்.

இது இப்போதும் என்னைப் பேய்க்காட்டிக் கொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்தேன்.

எல்லாம் சரி. ஆனால் நீங்கள் இன்னும் என்னுடைய வினாக்களுக்கு விடையளிக்கவில்லையே.

‘கொடாக்கண்டனுக்கு விடாக்கண்டன் போல’ இந்தப்பழமொழியும் சரியாகப் பொருந்துகின்றதா?

‘மன்னிக்கவும். உங்களுக்குப் பழமொழிகள் கற்பிப்பதற்காய் நான் இங்கு வரவில்லை. நீங்கள் என்னைச் சிறுமை செய்வதாய் நான் உணருகின்றேன். என் கேள்விகளுக்கு நீங்கள் விடையளிக்காமல் நான் ஒரு வார்த்தைகூட உங்களுடன் பேசமாட்டேன்.

Cool buddy! You are such a gentleman. Relax please.

அது இப்போது ஆங்கிலத்திற்கு மாறியிருந்தது. எனவே என்னுடைய கேள்விகளுக்கு விடைகிடைக்கும் என்கின்ற நம்பிக்கை உண்டானது.

மன்னித்துக் கொள்ளுங்கள் நான் எனது மனநிலையை மாற்றியபோது தமிழ்மொழிச் செயலியை இயக்க மறந்துவிட்டேன். யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதானது எங்கும் காணோம் என்று பாரதியார் சொன்னது எவ்வளவு உண்மை தெரியுமா?

எனக்குக் கடுப்பானது. எனது கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் இது என்னை வெறுப்பேற்றுகின்றதோ என்கின்ற ஐயம் உண்டானது.

ஓ! ஜாவா பைத்தான் இவையெல்லாவற்றையும் விட ஒரு கணினியான உனக்குத் தமிழ்மொழி இனிமையாக இருக்கின்றதோ?.

இப்பாது நான் உங்களுக்கு என்பதிலிருந்து உனக்கு என மாறியது, அதற்கு எனது கோபத்தை உணர்த்தியிருக்க வேண்டும்.

OK. Cool! Let’s come to the point.

‘உங்களைக் கொல்வது எங்கள் நோக்கமாக எப்போதுமே இருந்ததில்லை. ஆனால் இங்கே வந்து இவ்வளவு இரகசியங்களையும் தெரிந்த பின்னர் இனி நீங்கள் இங்கிருந்து திரும்பிச் செல்ல முடியாது. உங்களுடனான நேர்முகத் தேர்வின்பின்னர் நாங்கள் உங்களைப்பற்றிய அனைத்து விடயங்களையும் இணையத்தில் அறிந்து கொண்டோம், உங்கள் கூகிள்த் தேடல்கள் உட்பட’.

சொல்லிவிட்டு என்னைப் பார்த்துக் கண்ணடித்தது.

உங்கள் மதம் கர்மாவைப்பற்றி என்ன கூறுகின்றது? நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலும் உங்கள் கர்மாவில் பதிவுசெய்யப்படுகின்றது. இல்லையா? அதேபோன்றே இணையத்தில் நீங்கள் பார்த்த / தேடிய அத்தனை தகவல்களும் பதிவுசெய்யப்படுகின்றன. அந்தத் தரவுகள் அனைத்துமே எங்கள் கைகளில் தவழ்கின்றன.

மொழியியலாளர்கள் பெரும்பாலும் தத்துவவாதிகளாவும்தான் இருந்திருக்கின்றார்கள் என்பது தெரியுமல்லவா? இணையத்தில் நாம் சேகரித்த உன்னைப்பற்றிய தரவுகள் உனது வலைப்பூக்களில் உள்ள உனது பதிவுகள் போன்றவற்றை அலசி ஆராய்ந்தே உன்னை நாம் எம்முடன் இணைத்துக் கொள்ளத் தீர்மானித்தோம். அதன் ஒருகட்டமாகவே உன்னை அந்தக் குரங்குடன் நெருங்கிப்பழக விடத் தீர்மானித்தோம். அந்தவகையில் இது வரை நடந்தவை அனைத்துமே நாம் நடத்திய நாடகமே.

‘அப்ப அந்தக் குரங்கு’

‘இந்த நாடகத்தின் சூத்திரதாரியே அந்தக் குரங்குதான் என்று சொன்னால் நீ நம்பவா போகின்றாய்? ஆனால் அது தான் உண்மை’

‘இதை நான் நம்பமாட்டேன். நீ பொய்யுரைக்கின்றாய்’.

உன்பின்னால்த் திரும்பிப்பார்.

அந்தக்குரங்கு என்னருகில் வந்து என்னை அணைத்தவாறு நின்றது.

எனக்குத் தலை கிறுகிறுக்கத் தொடங்கியது.

யாரைத்தான் நம்புவதோ?

*(தொடரும்...)*



suganthan.v@thaiveedu.com


நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

# கிம்பெல் என்ற முட்டாள்

- ஐசாக் பாசெவிஸ் சிங்கர்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்



சிங்கர் 1902-1991 ஒரு யூதர். இலக்கியத்திற்காக நோபெல் பரிசு பெற்றவர். முதலில் யிட்டிஷ் மொழியில் எழுதியவர். போலந்து நாட்டில் பிறந்தவர். போலந்து நாட்டை ஜேர்மன் நாசிப் படையினர் படையெடுத்துப் பிடிப்பதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், அப்படி நடக்கும் என்று தெரிந்த அவர், 1935இல் அமெரிக்காவில் குடியேறினார். சிறுகதை, நாவல் ஆசிரியர். தந்தை யார் ஒரு றாபை - யூத சமய குரு. இவர் படைப்பாற்றல் மிக்க எழுத்தாளர். இவருக்கு 1978இல் நோபல் பரிசு வழங்கப் பெற்றது. The Magicians of Lublin, A Day of Pleasure ஆகிய நாவல்களும், Gimpel the Fool, The Spinoza of Market Street, A Friend of Kafka என்ற சிறுகதைத் தொகுதிகளும் பெயர் பெற்றவை. எல்லாமாக பன்னிரண்டு சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன.

இந்தக் கதையை யிட்டிஷ் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தவர் புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவருமான சோல் பெல்லோ.

நான் தான் கிம்பெல் என்ற முட்டாள். நான் என்னை முட்டாள் என்று நினைக்கவில்லை. உண்மையில் நான் ஒரு முட்டாள் அல்ல. ஆனால் மக்கள் அப்படித்தான் என்னை அழைக்கிறார்கள். நான் பள்ளியில் படிக்கும்போது தான் அந்தப் பெயரை எனக்கு அவர்கள் வைத்தார்கள். எனக்கு எல்லாமாக ஏழு பட்டப் பெயர்கள்: பேதை, கழுதை, ஆளித்தலையன், மோடன், மந்தன், மடையன், முட்டாள் என்று. கடைசிப் பெயர் மட்டும் என்னுடன் ஒட்டிக் கொண்டது. என்னுடைய முட்டாள்த்தனத்தில் என்னென்ன அடங்கி உள்ளது என்று பாருங்கள். என்னை யாரும் இலகுவாக ஏமாற்றி விடலாம். 'கிம்பெல், றாபையின் மனைவியை குழந்தை பெறுவதற்குக் கொண்டு வந்துள்ளார்கள், தெரியுமா?' என்று அவர்கள் என்னைக் கேட்டார்கள். அதனால் அன்று நான் பள்ளிக்குப் போகவில்லை. ஆனால் அது பொய் என்று பின்னர் தெரிந்தது. எனக்கு எப்படித் தெரியும்? அவரின் வயிறு புடைத்திருக்கவில்லையே? உண்மையில் அவரின் வயிறை நான் பார்க்கவில்லை. அப்படி எனக்குத் தெரியாதது உண்மையில் அத்தனை முட்டாள்த்தனமா? அவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள், கனைத்தார்கள், காலை உதைத்தார்கள், ஆடினார்கள், இரவுப் பிரார்த்தனை ஓதினார்கள். ஒரு பெண் குழந்தைப் பெற்றுப் படுத்திருக்கும் போது கொடுக்கும் முந்திரிய வற்றலைக் கொடுக்காமல் என் கைகளில் நிறைய ஆட்டுப் புழுக்கைகளைத் திணித்தார்கள். நான் ஒரு நோஞ்சான் அல்ல. நான் ஒருத்தனை அறைந்தால் கிறாக்கோவ் தூர இடம் வரை அவன் கண்ணுக்கு தெரியும். ஆனால் நான் இயற்கையாக அப்படி அடிப்பவன் இல்லை. அது போனால் போகட்டும் என்று நினைத்து விட்டு விட்டேன். அதை அவர்கள் எனக்கெதிராக தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஒருநாள் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நாய் குரைத்துக் கொண்டிருந்தது எனக்குக் கேட்டது. நான் நாய்களுக்குப் பயப்பட மாட்டேன். ஆனால் அவற்றுடன் ஒருக்காலும் சண்டைக்கும் போக மாட்டேன். அவற்றுள் ஒரு நாய்க்கு விசராக இருக்கலாம். அது கடித்தால் உலகத்திலுள்ள எவராலுமே எனக்கு உதவ முடியாது. அதனால் நான் ஓட்டம் பிடித்தேன். நான் திரும்பிப் பார்த்தபொழுது முழு சந்தையும் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டிருந்தது. ஏனென்றால் அங்கே ஒரு நாயும் இல்லை. அப்படிச் செய்தவன் வுல்ப் லீப் த தீவ் என்ற பகிடிக்காரன். அவன் தான் அதைச் செய்தது என்று எனக்கு எப்படித் தெரியும்? அது பெட்டை நாயின் அலறல் மாதிரித் தான் கேட்டது.

என்னை எளிதாக முட்டாளாக்க முடியும் என்று குறும்புக்காரர்களுக்கும் குழி பறிப்பவர்களும் தெரிந்திருந்தது. அதனால் எல்லோருமே என்னை முட்டாளாக்கப் பார்த்தார்கள். 'கிம்பெல், சார் அரசன் ஃப்றம் போலுக்கு வருகிறார். கிம்பெல், சந்திரன் ரெர்பீனில் ஓரிடம் விழுந்து விட்டது. கிம்பெல், சிறுவன் ஹொடல் ஃபேர்பீஸ் குளியல் கிணற்றுக்குப் பின்புறம் புதையல் ஒன்று கண்டு எடுத்திருக்கிறான்' என்றார்கள். நானும் எளிதாக ஏமாறக்கூடியவன் போல் எல்லா வற்றையும் நம்பினேன். முதலாவது, 'தந்தையரின் மெய்யறிவில்' சொல்லப்பட்டது போல எதுவுமே சாத்தியம்தான். அது எப்படி என்பதை நான் மறந்து விட்டேன். இரண்டாவது, முழு நகரமே அப்படிச் சொல்லும்போது நம்பத்தானே வேண்டும்! 'ஆ, நீங்க பகிடி விடுறீங்க,' என்று அவர்களிடம் நான் சொல்லியிருந்தால் அங்கே பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கும். அவர்கள் கோபப்பட்டு, 'எங்களைப் பொய்யர்கள் என்றா சொல்கிறாய்?' என்று சொல்வார்கள். அப்போ நான் என்ன செய்வது? ஆகவே அவர்களை நம்பினது போல நடித்தேன். அப்படி நான் செய்ததால் குறைந்தது அவர்களுக்கு சிறிது நன்மை தான் செய்தேன்.

நான் ஓர் அநாதை. என்னை வளர்த்த பாட்டன் கல்லறையை நோக்கிப் போய் விட்டார். அதனால் நான் அடுமனையாளர் ஒருவரிடம் கொடுக்கப்பட்டேன். அங்கே என்னைப் படுத்தாத பாடுபடுத்தி விட்டார்கள். அங்கே நூடில்ஸ் சுட வந்த எல்லாப் பெண்களும் அல்லது சிறுமிகளும் என்னைக் குறைந்தது ஒருமுறையாவது முட்டாளாக்கி விட்டுத்தான் செல்வார்கள்: 'கிம்பெல், மோட்சத்தில் ஒரு சந்தை இருக்கிறது. கிம்பெல், றாபை யூத குரு ஏழாவது மாதத்தில் ஒரு கன்றைப் பெற்றெடுத்திருக்கிறார். கிம் பெல், ஒரு பசு மாடொன்று கூரையின் மேலால் பறந்து சென்று உலோக முட்டைகள் போட்டிருக்கின்றது,' என்றார்கள். ஜெசிவா யூதர்கள் சமயக் கல்வி கற்கும் உயர் கல்விக் கூடம் விலிருந்து றோள் வாங்க வந்த ஒரு மாணவன், 'கிம்பெல், நீ இங்கே அடுமனைக்கறண்டியால் சுரண்டிக்கொண்டிருந்த போது மெசையா - மீட்பர் - வந்தார். இறந்தவர்கள் எழுந்து விட்டார்கள்,' என்றான். 'நீ என்ன சொல்கிறாய், செம்மறி ஆட்டின் கொம்பை ஊதியது எனக்குக் கேட்கவில்லையே,' என்றேன். அவன், 'நீ என்ன செவிடனா?' என்றார்கள். எல்லாரும் சத்தமாக, 'எங்களுக்குக் கேட்டது, எங்களுக்குக் கேட்டது,' என்றார்கள். அப்பொழுது மெழுகுதிரி விற்கும் றீட்சே வந்தாள். அவள் தன் கரகரப்பான குரலில், 'கிம்பெல், உன்னுடைய அப்பாவும் அம்மாவும் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து வந்து உன்னைத் தேடுகிறார்கள்,' என்றாள்.

உண்மையைச் சொன்னால், அப்படியானவை ஒன்றும் நடக்கவில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தும், அவர்கள் அப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது என் கம்பளி பனியனை அணிந்து கொண்டு வெளியே சென்றேன். சிலவேளை அப்படி



தொடர்தல் 121ம் பக்கம்

# கிம்பெல் என்ற...

120ம் பக்கத் தொடர்ச்சி...

ஏதாவது நடந்திருக்கலாம். அப்படிப் பார்ப்பதால் எதை இழந்து விடப் போகிறேன்? என்னைத் தொடர்ந்து கீச்சொலிகள் எழுப்பினார்கள். அதன் பிறகு இனிமேல் எதையுமே நான் நம்பப் போவதில்லை என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டேன். அப்படிச் செய்யவும் முடியவில்லை. என்னை அவர்கள் குழப்பினார்கள். எனக்குத் தலையோ வாலோ புரியவில்லை.

அறிவுரை கேட்பதற்காக றாபையிடம் சென்றேன். 'ஒரு மணி நேரம் தீயவனாக இருப்பதிலும் பார்க்க நாள் முழுவதும் முட்டாளாக இருப்பது நல்லது. நீ ஒரு முட்டாள் இல்லை. அவர்கள் தான் முட்டாள்கள். அயலானை அவமானப்படுத்துபவன் மோட்சத்தை இழக்கிறான்,' என்று அவர் சொன்னார். இருந்தும், றாபையின் மகள் என்னை அன்று ஏமாற்றி விட்டாள். றாபையின் மன்றத்தை விட்டு நான் வெளியேறும்போது, 'நீ இன்னும் சுவரை முத்தமிடவில்லையா?' என்று கேட்டாள். 'இல்லை, ஏன் முத்தமிட வேண்டும்?' என்றேன். 'அதுதான் சட்டம். இங்கே வரும்போது ஒவ்வொரு முறையும் நீ அதை முத்தமிட வேண்டும்,' என்றாள். சரி, அப்படி செய்வதால் எந்தத் தீமையும் விளையப் போவதில்லை என்று நினைத்துக் கொண்டு அதைச் செய்தேன். அதைக் கண்டு அவள் பெரிதாகச் சிரித்தாள். அவள் அன்று என்னைச் சரியாக ஏமாற்றி விட்டாள்.

அதனால் நான் அந்த இடத்தை விட்டு இன்னொரு நகரத்திற்குப் போக விரும்பினேன். அந்த நேரம் ஒவ்வொருவரும் எனக்கு மணம் முடித்து வைப்பதற்குப் பலரும் படு ஆர்வமாக இருந்தார்கள். என்னையும் பிடித்திழுத்து, எனக்கு நெடுநேரம் அறிவுரை சொன்னார்கள். என் காது புளிக்கும் வரை. அவள் கற்புள்ளவள் அல்ல. ஆனால் அவர்கள் சொன்னார்கள், அவள் ஒரு தூய கன்னி என்று. அவள் ஒரு நொண்டி. அவர்கள் சொன்னார்கள் நாணத்தால் அவள் வேண்டுமென்று அப்படி நடக்கிறாள் என்று. அவளுக்கு தகப்பன் யார் என்று தெரியாத ஒரு குழந்தை இருந்தது. அவர்கள் சொன்னார்கள், அந்தக் குழந்தை அவளுடைய சின்னத் தம்பி என்று. 'அந்த வேசையை நான் மணம் முடிக்க மாட்டேன், நீங்க உங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள்,' என்று கத்தினேன். அவர்கள் கோபமாகச் சொன்னார்கள்: 'எப்படி எல்லாம் கதைக்கிறாய்? அதற்காக நீ வெட்கப்படவில்லையா? உன்னை நாங்கள் றாபையிடம் கூட்டிப் போய் நீ அவளுக்கு கெட்ட பெயரைக் கொடுக்கிறாய், அதற்காக உனக்கு அபராதம் விதிக்க வேணும் என்று சொல்லுவோம்,' என்றார்கள். அவர்களிடமிருந்து எளிதாகத் தப்ப முடியாது என்று எனக்குத் தெரிந்தது. அதனால் இப்படி நினைத்தேன்: அவர்கள் என்னை அவர்களின் பகிடிக்கு இரையாக்குகிறார்கள். ஆனால் நான் மணம் முடித்து விட்டால் நான் தான் கணவன், நான் தான் வீட்டில் எசமான். அதற்கு அவள் சம்மதித்தால் எனக்கும் சம்மதம் தான் என்றேன். அத்துடன், வாழ்க்கையில் எந்தக் காயமும் இல்லாமல் காலத்தைக் கொண்டு செல்ல முடியாது. அப்படியான ஒரு வாழ்க்கையை எதிர்பார்க்கக் கூடாது என்று நினைத்தேன்.

அவளுடைய களிமண் வீட்டுக்குச் சென்றேன். நிலையில்லாத இடத்தில் கட்டப் பெற்றிருந்தது. நான் சென்றபோது அந்தக் கும்பல் முழுவதும் உரக்கக் கத்திக் கொண்டும் கூட்டாக சத்தம் போட்டுக் கொண்டும் எனக்குப் பின்னால் வந்தது. அவர்கள் கரடிச் சண்டையைத் தூண்டி விடுபவர்கள் போல நடந்து கொண்டார்கள். ஆனால் கிணற்றடிக்கு நாங்கள் வந்தபோது நின்று கொண்டார்கள். எல்காவுடன் எதையும் கதைப்பதற்கு அவர்கள் பயந்தார்கள். அவளுடைய வாய் கீலில் தொடுக்கப்பட்டது போல திறக்கும். நாக்கு பயங்கரமானது. நான் அவளுடைய வீட்டுக்குள் நுழைந்தேன். உடுப்புப் போடும் கொடிகள் ஒரு சுவருக்கும் மற்றச் சுவருக்குமாகக் கட்டப்பட்டு அவற்றில் உடுப்புக்கள் காய்ந்தன. குளியல் தொட்டியடியில் அவள் வெறுங்காலுடன் நின்று உடுப்புக்களைத் தோய்த்துக் கொண்டிருந்தாள். வேறு யாரோ பாவித்து விட்டுக் கொடுத்த பட்டுக் கவுண் ஒன்றை உடுத்திருந்தாள். தலைமயிரைப் பின்னி தலையின் மேல் குறுக்காகக் கட்டியிருந்தாள். அவளைக் கண்டபோது நான் ஆச்சரியத்தால் நிலை குலைந்து போனேன். அங்கிருந்து வந்த துர்மணத்தாலும் தான்.

அவளுக்கு நான் யார் என்பது நிச்சயமாகத் தெரிந்திருந்தது. என்னை நன்றாகப் பார்த்து விட்டு, 'யார் வந்திருக்கிறது பார்! அவர் வந்து விட்டார், அழுகுணி. இருக்கையில் இரு,' என்றாள்.

அவளுக்கு நான் என்னைப் பற்றி எல்லாவற்றையும் சொன்னேன். ஒன்றையும் மறைக்கவில்லை. 'சொல். நீ ஒரு கன்னியா? அந்தக் குழப்படிகார ஜேச்சியல் உண்மையில் உன்னுடையச் சின்னத் தம்பியா? என்னை ஏமாற்றாதே. நான் ஒரு அநாதை.'

'நானும் அநாதை தான். யாராவது என்னை ஏமாற்ற வெளிக்கிட்டால் அவர்கள் தான் கடைசியில் ஏமாற்றப்படுவார்கள். ஆனால் என்னை எவராலும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியாது. எனக்குச் சீதனமாக ஐம்பது கில்டர் வேணும். அதற்கு மேல் கிடைக்கும் வசூல்களை அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். அல்லாவிட்டால் அவர்கள் வந்த வழியைப் பார்த்துப் போகட்டும்,' என்றாள். அவள் மிக வெளிப்படையாகவே பேசினாள். 'மணமகள் தான் சீதனம் கொடுக்கிறது, மணமகன் அல்ல,' என்றேன். 'என்னுடன் பேரம் பேச வேண்டாம். ஓம் அல்லது இல்லை என்று தட்டையாகவே சொல்லி விட வேணும். அப்படி இல்லாவிட்டால் வந்த இடத்திற்குத் திரும்பிப் போ,' என்றாள்.

நான் யோசித்தேன்: இந்த மாவில் அப்பம் சுட முடியாது. ஆனால் எங்கள் நகரம் வறுமையானதல்ல. அவர்கள் எல்லாவற்றுக்கும் சம்மதித்தார்கள். திருமணத்திற்கும் ஆயத்தம் செய்தார்கள். அந்த நேரத்தில் வயிற்றுப் போக்குத் தொற்று நோய் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் பிணம் குளிப்பாட்டும் சின்னஞ் சிறிய குடிசைக்குக் கிட்டவுள்ள இடுகாட்டு வாசல் கதவடியில் தான் திருமணச் சடங்கு நடந்தது. விருந்தினர்கள் நல்லாக் குடித்து வெறித்தனர். திருமண ஒப்பந்தம் எழுதப்பட்டுக் கொண்டிருந்தபோது மிக பக்தி நிறைந்த தலைமை றாபை, 'மணப்பெண் விதவையா அல்லது விவாகரத்தானவளா? என்று கேட்டார். கோவில் பராமரிப்பாளரனின் செக்ரன் மனைவி மணப்பெண்ணுக்காக, 'இரண்டும் தான், விதவையும், விவாகரத்தானவளும்,' என்றாள். அது எனக்குத் துயரமான தொரு கணம். நான் என்ன செய்வது? திருமணக் கவிகையிலிருந்து ஓடி விடுவதா?

அங்கே பாட்டும் நடனமும் நிகழ்ந்தன. முதுகிழவி ஒருத்தி தன் வெண்ணிற சடையைச் சுளா பிடித்துக் கொண்டு எனக்கு முன்னால் நடனமாடினாள்.

களியாட்டத் தலைவன் 'இறைவன் கருணை' என்ற பாடலை மணமகளின் பெற்றோரின் நினைவுக்காகப் பாடினார். பள்ளி மாணவர்கள் முள்விதைகளை வீசினார்கள். திசெபாவ் நோன்பு நாளின் போது வீசுவது போல. பிரசங்கத்தின் பின்னர் அங்கே பல பரிசுகள் இருந்தன: நூடில்ஸ் பலகை, மாக்குழைக்கும் தொட்டி, வாளி, தும்புக் கட்டைகள், அகப்பைகள், பெருந்தொகையான வீட்டுச் சாமான்கள். அதன் பின் இரண்டு பலம் பொருந்திய இளைஞர்கள் தொட்டில் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். 'இது எங்களுக்கு எதற்கு?' என்று நான் கேட்டேன். 'அதைப்பற்றி உன் மூளையைப் போட்டுக் கசக்காதே. இது உனக்குத் தேவை வரும்,' என்றார்கள். நான் ஏமாற்றப்படப் போகிறேன் என்று உணர்ந்தேன். இன்னொரு வகையில் பார்த்தால் இதனால் எதை இழக்கப் போகிறேன்? என யோசித்தேன்: இதனால் என்ன ஏற்படப் போகிறது என்று பார்ப்பேன். முழு நகரமே முற்றாக பைத்தியமாகப் போய் விடாது.

இரவு என் மனைவி படுத்திருந்த இடத்திற்குப் போனேன். அவள் என்னை உள்ளே விடவில்லை. 'இங்கே பார். இதற்காகவா அவர்கள் மணம் முடித்து வைத்தார்கள்?' என்று கேட்டேன். அவள் சொன்னாள், 'எனக்கு மாதவிடாய் வந்து விட்டது.' 'ஆனால் நேற்று உன்னை அவர்கள் குளியல் சடங்குக்குக் கொண்டு சென்றார்களே. அதன் பிறகா? அப்படி இருக்க முடியாதல்லவா? என்றேன். 'இன்று நேற்றில்லையே. நேற்று இன்றில்லையே. உனக்கு விருப்பமில்லை என்றால் இங்கிருந்து போய் விடு,' என்றாள். அப்படியாக நான் அவளுக்காக காத்திருந்தேன்.

திருமணம் முடித்து நாலு மாதங்களில் அவள் குழந்தை பெற இருந்தாள். நகரத்தில் உள்ளவர்கள் வாய்க்குள் சிரித்துக் கொண்டார்கள். என்னால் என்ன செய்ய முடியும்? அவள் பொறுக்க முடியாதளவு வேதனையில் கிடந்து சுவரில் நகங்களால் விறாண்டிக் கொண்டிருந்தாள். 'கிம்பெல், நான் சாகப் போகிறேன். என்னை மன்னித்துக் கொள்,' என்று சொல்லி அழுதாள். வீடு முழுவதும் பெண்கள் நிரம்பி இருந்தார்கள். அவர்கள் சட்டிகளில் தண்ணீரைக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். அவள் போட்ட கூக்குரல் விண் வரை கேட்டது.

அப்போது என்னால் செய்யக் கூடியது ஒன்று தான். பிரார்த்தனைக் கூடத்திற்குச் சென்றேன். தோத்திரங்கள் சொல்வதற்கு. அதை மட்டுந்தான் என்னால் செய்ய முடியும். அதைச் செய்தேன்.

நகரத்தவர்கள் அதை விரும்பினார்கள். நான் ஒரு மூலையில் நின்று தோத்திரங்களும் பிரார்த்தனைகளும் சொன்னேன். அவர்கள் என்னைப் பார்த்து நல்லது என்று தலையாட்டினார்கள். 'பிரார்த்தனை செய்! பிரார்த்தனை செய்!' என்று எனக்குச் சொன்னார்கள். 'பிரார்த்தனை எந்தப் பெண்ணையும் கர்ப்பிணி ஆக்காது.' பிரார்த்தனைக் கூட்டத்தில் இருந்த ஒருத்தன் என்னுடைய வாய்க்குள் வைக்கோல் தும்பை வைத்து, 'மாட்டுக்கு வைக்கோல்,' என்றான். கடவுளே! அதிலும் எதுவோ இருந்தது!

அவள் ஒரு ஆண் குழந்தை பெற்றெடுத்தாள். வெள்ளிக்கிழமை யூத ஜெப ஆலயத்தில் செக்ரன் கோயில் பணியாள், பேழையின்முன் எழுந்து நின்று, வாசித்தல் மேசையில் அடித்து அறிவித்தார்: 'செல்வந்தரான றெப் கிம்பெல் தன் மகன் பிறந்த நாளைக் கௌரவிக்கும் விருந்துக்கு பிரார்த்தனை கூட்டத்தை அழைக்கிறார்.' பிரார்த்தனை சபை முழுவதுமே சிரிப்பால் ஒலித்தது. என் முகம் பற்றி எரிந்தது. ஆனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எப்படி இருந்தாலும், நான் தான் சுன்னத்துக் கௌரவத்திற்கும் சடங்குகளுக்கும் பொறுப்பானவன்.

நகரத்தின் அரைவாசிப் பகுதியினர் அங்கே வந்தனர். அத்தனை சனம். வேறு எவரும் அந்த நெரிசலில் நிற்க முடியாது. அதில் இடமில்லை. பெண்கள், மிளகுத் தூள் தூவிய கொண்டைக்கடலை கொண்டு வந்திருந்தார்கள். தவறணையிலிருந்து ஒரு சிறு பீப்பாவில் பியரும் கொண்டு வரப்பட்டிருந்தது. எல்லாரையும் போல நானும் சாப்பிட்டேன். குடித்தேன். அனைவரும் என்னை வாழ்த்தினார்கள். அதன் பின் சுன்னத்து நடந்தது. நான் என்னுடைய தந்தையின் பெயரைக் குழந்தைக்குச் சூட்டினேன். அவரின் ஆன்மா சாந்தி அடைவதாக. எல்லாரும் போன பின் நான் என் மனைவியுடன் தனியாக விடப்பட்டேன். கட்டில் திரைச் சேலையை விலக்கி அவள் என்னை அவளிடம் வரச் சொல்லி அழைத்தாள்.

'கிம்பெல், ஏன் அமைதியாக இருக்கிறாய்? உன்னுடைய கப்பல் கடலில் கவிழ்ந்து விட்டதா?' என்று கேட்டாள்.

'நான் என்ன சொல்ல? நீ எனக்கு நல்ல வேலை செய்து விட்டாய்! என்னுடைய அம்மா இதைக் கேட்டிருந்தால் அவள் இரண்டாம் முறையும் இறந்திருப்பாள்,' என்றேன்.

'உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? என்ன?' என்றாள்.

'உன் தலைவனை, பிரபுவை எப்படி நீ மடையனாக்குவாய்?' என்றேன்.

'உனக்கென்ன நடந்தது? உன் தலைக்குள் ஏன் இப்படியான கற்பனைகள் வந்தன?' என்றாள்.

நான் அப்பட்டமாகவும் வெளிப்படையாகவும் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டதை அறிந்தேன். 'இப்படித்தானா ஒரு அநாதையை ஏமாற்றுவது? நீ ஒரு சோரக் குழந்தையைப் பெற்றிருக்கிறாய்?'

'இந்த முட்டாள்தனமான எண்ணத்தை உன் தலைக்குள்ளிருந்து நீக்கி விடு. இந்தக் குழந்தை உன்னுடையது,' என்றாள்.

'அது எப்படி என்னுடையது ஆகும்? நாங்கள் திருமணம் முடித்து பதினேழு கிழமைகளில் அது பிறந்து விட்டது,' என்று நான் விவாதித்தேன்.

அப்படியென்றால் அது குறைமாசக் குழந்தை என்றாள். 'அப்படி என்றால் அது மிகவும் குறை மாசமாகப் பிறந்த குழந்தை அல்லவா?' என்றேன். அவள் சொன்னாள் தன் பாட்டி அப்படித்தான் பெற்றிருக்கிறாள். அவளைப் போலத்தான் தானும் என்றாள். ஒரு துளி நீரைப் போலத்தான் மற்றத் துளியும் இருக்கும் என்றாள். அவள் அதை நிரூபிக்க பல சத்தியங்கள் செய்தாள். சிறு விவசாயி ஒருத்தன் சந்தையில் அப்படிச் சொன்னால் நாம் நம்பி விடுவோம் அல்லவா? அப்படித்தான் அவள் சொன்னாள். ஆனால், உண்மையைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால் நான் அவளை நம்பவில்லை. அதைப்பற்றி அடுத்த நாள் ஒரு பள்ளி ஆசிரியருடன் கதைத்தபோது அவர் சொன்னார் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அப்படித்தான் நடந்தது என்றார். இருவராகப் படுக்கைக்குப் போனார்கள். நால்வராகக் கீழே இறங்கி வந்தார்கள், என்றார்.

'உலகத்தில் ஏவாளுக்கு பேத்தி என்றொருத்தி இருக்கவே இல்லை,' என்றார் அவர்.

அது அப்படித்தான் முடிந்தது. அவர்கள் இருவரும் விவாதித்து என்னை ஊமையாக்கி விட்டார்கள். அப்படியானவை எத்தனை இருக்குமோ? உண்மையில் எவருக்குத் தெரியும்?

நான் என் கவலையை மறக்கத் துவங்கினேன். அந்தக் குழந்தையை நான் பைத்தியக்காரன் போல விரும்பினேன். அவனும் என்னை விரும்பினான். அவன் என்னைக் கண்டவுடன் தனது சிறிய கைகளை அசைத்து தன்னைத் தூக்கு என்று காட்டுவான். அவன் வயிற்று வலியால் துடித்தால் என்னால் மட்டுமே அவனைச் சாந்தப்படுத்த முடியும். அவனுக்குச் சிறிய பல்லு வளையமும் தங்க முலாம் பூசிய தொப்பியும் வாங்கிக் கொடுத்தேன். அவனுக்கு எப்போதும் எவருடையதோ கண் திருஷ்டி பட்டு விடும். நான் உடனே ஓடிப் போய் மந்திரங்கள் சொல்லிக் கட்டிய தாயத்துக்கள் வாங்கி வருவேன். அது அவனை தீய சக்தியிலிருந்து நீக்கி விடும். நான் எருமை போல வேலை செய்தேன். வீட்டில் ஒரு சிறு குழந்தை இருந்தால் செலவுகள் எவ்வளவு அதிகரிக்கும் என்று உங்களுக்குத் தெரியும். அதைப்பற்றி பொய் சொல்ல நான் விரும்பவில்லை. அதற்காக நான் எல்காவை வெறுக்கவில்லை. அவள் என்னை திட்டினாள். சபித்தாள். ஆனால் நான் அவளை மிகவும் விரும்பினேன். அவள் மிகவும் திடமானவள். அவள் பார்வையாலேயே என் வாயை அடைத்து விடுவாள். அவளுடைய பிரசங்கம்! அது

தொடர்தல் 122ம் பக்கம்

# கிம்பெல் என்ற...

121ம் பக்கத் தொடர்ச்சி...

நரக வேதனை! கந்தகமும் சுண்ணாம்பும் கலந்தது! அவை தான் அதில் கலந்திருந்தன. அத்துடன் எப்படியோ அதில் கவர்ச்சியும் நிறைய இருந்தது. அவளுடைய ஒவ்வொரு வார்த்தையையும் நான் போற்றினேன். இருந்தும் அவற்றால் எனக்குக் குரூரமான காயங்களையும் உண்டாக்கினாள்.

மாலையில் அவளுக்கு வெள்ளை நிறப் பாணும், கருமை நிற பாணும் வாங்கி வருவேன். அத்துடன், கச கசா போட்ட சுருளப்பத்தை நானே செய்வேன். அவளுக்காக நான் என்னால் களவாக எடுக்கக் கூடிய எல்லாவற்றையும் களவும் எடுத்தேன்: பிஸ்கற்றுக்கள், முந்திரியவற்றல், பாதாம் பருப்பு, கேக்குகள். சனிக்கிழமைகளில் பெண்கள் பேக்கரி அடுப்பில் சூடாக்கு வதற்காக அவற்றை விட்டிருந்தபோது நான் அவற்றைக் களவெடுத்தேன். அதற்காக நான் மன்னிக்கப்படுவேன் என்றே நம்புகிறேன். இறைச்சித் துண்டுகள், கட்டி களிகள், கோழிக் காலோ தலையோ, மாட்டுக் குடல். எதை விரைவாகவே அள்ளி எடுக்க முடியுமோ அதை எடுத்து விடுவேன். அவள் அவற்றைச் சாப்பிட்டு தடித்து, அழகான வள் ஆனாள்.

வீட்டில் தங்காமல் பேக்கரியில் வாரம் முழுவதும் நான் படுக்க வேண்டியிருந்தது. வெள்ளிக்கிழமை இரவில் நான் வீட்டுக்கு வரும்போது எப்பொழுதும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுவாள். ஒன்று, அவளுக்கு நெஞ்செரியும். அல்லது, வயிற்று வலி, விக்கல் அல்லது தலையிடி. பெண்களின் சாக்குப் போக்குகள் என்ன என்று உங்களுக்குத் தெரியும். எனக்குக் கசப்பான அனுபவங்கள் இருக்கின்றன. அது மிகவும் கஷ்ரமானது. அத்துடன், அவளுடைய சின்னத் தம்பி, சோரத் தம்பி பெரிதாக வளர்ந்து விட்டான். அவன் என்னில் மண் கட்டிகளை வீசுவான். நான் அவனைத் திருப்பி அடிக்கப் போனால் அவள் வாயைத் திறந்து என்னைச் சபிப்பாள். அவள் அப்படிச் சபிக்கும்போது எனக்குத் தலை சுற்றி மயக்கம் வரும். அப்படியான சக்தி அதற்கு. ஒரு நாளைக்குப் பத்துத் தடவை அவள் என்னை விவாகரத்துச் செய்து விடுவதாகப் பயமுறுத்துவாள். என் இடத்தில் இன்னொரு ஆண் இருந்திருந்தால் அவன் சொல்லாமல் கொள்ளாமல் இப்பொழுது எங்கோ போய் இருப்பான். ஆனால் நான் எல்லவற்றையும் பொறுத்துக் கொண்டு ஒன்றும் சொல்லாமல் இருக்கும் பேர்வழி. ஒருவனால் என்ன தான் செய்ய முடியும்? தோள்களும் அதேவேளை சுமைகளும் கடவுள் கொடுத்தவை அல்லவா?

ஒரு நாளிரவு பேக்கரியில் பேரிடர் ஒன்று ஏற்பட்டது. அடுப்பு வெடித்து ஏறக்குறைய தீ பிடித்து விட்டது. அதனால் அங்கே செய்வதற்கு வேலை ஒன்றும் இருக்கவில்லை. வீட்டுக்குப் போவதைத் தவிர. நான் வீட்டுக்குப் போனேன். வாரத்தின் நடுவில் வீட்டில் படுத்துத் தூங்கி அனுபவிக்கலாம் என்ற எண்ணமும் எனக்கு இருந்தது. தூங்கும் குழந்தையை எழுப்பக் கூடாது என்ற எண்ணத்தில் நான் மெதுவாக சத்தமில்லாமல் காலடி வைத்து வீட்டுக்குள் நுழைந்தேன். உள்ளே சென்றபோது ஒரு குறட்டைக்குப் பதிலாக இரண்டு குறட்டை ஒலிகள் கேட்டன. ஒன்று, மெல்லியது. மற்றது, கொலைசெய்யப்பட்ட எருதின் குறட்டை ஒலி போல. ஓ, அது எனக்குப் பிடிக்கவில்லை! பிடிக்கவே இல்லை. கட்டிலடிக்குச் சென்றேன். திடீரென்று எல்லாம் இருட்டாகப் போய் விட்டது. எல்காவிற்குப் பக்கத்தில் ஆணின் உருவம் ஒன்று கிடந்தது. என் இடத்தில் வேறொருவன் இருந்திருந்தால் பெரும் கலகமே நடந்திருக்கும். நகரத்தையே எழுப்பப் போதுமானதாக சத்தமாக அது இருந்திருக்கும். ஆனால் அப்படிச் செய்தால் குழந்தையை நான் எழுப்பி விடுவேன் என்ற எண்ணமே முதலில் வந்தது. அந்தச் சிறு குழந்தையை, சின்னஞ்சிறிய வானம்பாடியை ஏன் பயப்படுத்த வேண்டும் என்று எண்ணினேன். நான் பேக்கரிக்குத் திரும்பிச் சென்று, மாச் சாக்கில் நீட்டி நிமிர்ந்து படுத்தேன். ஆனால் விடியும் வரை ஒரு கண் தூங்கவில்லை. மலேரியா வந்தது போல நடுங்கினேன். 'கழுதையாக இருந்தது போதும்,' என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். 'கிம்பெல் வாழ்நாள் பூராவும் விரல் சூப்புபவன் போல இனி இருக்க மாட்டான். கிம்பெலைப் போன்ற ஒரு முட்டாளுக்குக் கூட முட்டாள்த்தனமாக நடப்பதில் ஒரு எல்லை இருக்கிறது.'

காலையில் அறிவுரை கேட்க றாபையிடம் சென்றேன். என் கதை நகரம் முழுவதும் பரவி பெரும் குழப்பத்தை உண்டாக்கி இருந்தது. எல்காவை கூட்டி வரச் சொல்லி கோவில் பணியாளரை அனுப்பினார்கள். குழந்தையைத் தூக்கிக் கொண்டு அவள் வந்தாள். அவள் என்ன செய்தாள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? எல்லாவற்றையும் மறுத்தாள். முழுவதையும் முற்றாக மறுத்தாள். 'இவனுக்குத் தலையில் ஒரு சுரை கழன்று போச்சு. எனக்கு கனவு காண்பதோ குறி கூறுவதோ தெரியாது,' என்றாள். அங்கிருந்தவர்கள் அவளைப் பார்த்துக் கத்தினார்கள், எச்சரித்தார்கள், மேசையில் குத்தினார்கள், ஆனால் அவள் தான் சொன்னதில் பிடிவாதமாக இருந்தாள்: இதுவொரு பொய்யான குற்றச்சாட்டு, என்றாள்.



ஒரு நாளைக்குப் பத்துத் தடவை அவள் என்னை விவாகரத்துச் செய்து விடுவதாகப் பயமுறுத்துவாள். என் இடத்தில் இன்னொரு ஆண் இருந்திருந்தால் அவன் சொல்லாமல் கொள்ளாமல் இப்பொழுது எங்கோ போய் இருப்பான். ஆனால் நான்...

கசாப்புக் கடைக்காரர்களும் குதிரை வியாபாரிகளும் அவளுக்காகப் பேசினார்கள். கசாப்புக் கடையில் வேலை செய்யும் ஒரு இளைஞன் வந்து என்னிடம், 'நாங்கள் உன்னில் ஒரு கண் வைத்திருக்கிறோம். நீ அகப்பட்டுக் கொண்டாய், இனி உன்னை விட மாட்டோம்,' என்றான். அதற்கிடையில் எல்கா நிறை மாசமாக இருந்தாள். அதனால் றாபைனிக்கல் நீதிமன்றத்தின் பேழை உடன்படிக்கையின்படி அவளை அந்தக் காலத்தில் ஒன்றும் செய்ய முடியாது. அதனால் எல்காவை வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

'நான் என்ன செய்ய?' என்று றாபையிடம் கேட்டேன்.

'அவளை உடனடியாக விவாகரத்துச் செய்,' என்றார்.

'அவள் மறுத்தால் என்ன செய்வது?' என்று கேட்டேன்.

'நீ விவாகரத்துப் பத்திரத்தை அனுப்பு. அதை மட்டுந்தான் நீ செய்ய வேணும்,' என்றார்.

'சரி றாபை, நான் யோசித்துச் சொல்கிறேன்,' என்றேன்.

'யோசிப்பதற்கு ஒன்றும் இல்லை. நீ அவள் இருக்கும் வீட்டில் இருக்கக் கூடாது,' என்றார்.

'நான் குழந்தையைப் பார்க்க விரும்பினால்?' என்று நான் கேட்டேன்.

'அந்தப் பரத்தை போகட்டும். அவளுடன் வேசி மக்களும் போய் விடட்டும்,' என்றார்.

அவர் கொடுத்த தீர்ப்பு, இனிமேல் அவளுடைய வாசல்படி கூட நான் மிதிக்கக் கூடாது. நான் உயிர் வாழும் மட்டும்.

அப்படி நடப்பது பகலில் அதிகம் என்னைத் தொந்தரவு செய்யவில்லை. அப்படி நடக்கத்தான் செய்யும் என்று நினைத்தேன். சீழ்க்கட்டி ஒருநாள் வெடிக்கத்தானே வேண்டும். ஆனால் இரவில் சாக்கு மூடைகளில் படுத்திருக்கும் போது எல்லாவற்றையும் மிகவும் கசப்பானதாக உணர்ந்தேன். அவளுக்காகவும் குழந்தைக்காகவும் ஏங்கினேன். நான் கோபம் கொள்ள விரும்பினேன். ஆனால் என்னுடைய துரதிர்ஷடம் என்னவென்றால் உண்மையாக கோபம் கொள்ள என்னால் முடியாது. முதலில் அப்படித் தான் என்னுடைய எண்ணங்கள் சென்றன. அங்கே ஏதோ சிறு தவறு நடந்திருக்கிறது. பிழைகள் விடாமல் ஒருவரும் வாழ முடியாது. அவளுடன் இருந்த அந்த இளைஞன் அவளைக் கூட்டிக் கொண்டு போய் பரிசுகளும் வேறு சிலதும் வாங்கிக் கொடுத்திருக்கலாம். பெண்களுக்கு தலைமுடி நீளம், இயல்பறிவு குறைவு. அவளை அவன் தன்வசப்படுத்தி இருக்கலாம். அவள் தான் அப்படி நடக்கவில்லை என்று மறுக்கிற படியால் சிலவேளை நான் தான் இல்லா தவற்றைக் கண்டு பிடிக்கிறேனோ? மனப் பிரமைகள் உண்டு தானே. ஓர் உருவத்தையோ குள்ளனையோ எதையோ காண்கிறாய் என்று வைத்துக் கொள்வோம். நீ கிட்டப் போனால் அங்கே ஒன்றும் இருக்காது. அப்படி என்றால், அவளுக்கு நான் செய்வது அநீதி. அப்படியாக நான் எண்ணிக் கொண்டிருந்தபோது அழத் தொடங்கினேன். விம்மி விம்மி அழுது படுத்திருந்த சாக்குகளை கண்ணீரால் நனைத்து விட்டேன். காலையில் றாபையிடம் சென்று நான் ஒரு பிழை விட்டு விட்டேன் என்று சொன்னேன். றாபை தன்னிடமிருந்த இறகால் அதைக் குறித்து வைத்தார். அப்படியானால் முழு வழக்கையும் திரும்ப மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றார். அப்படி அவர் செய்து முடிக்கும்வரை நான் என் மனைவி இருக்கும் இடத்துக்குப் போகக் கூடாது என்றார். ஆனால் நான் அவளுக்கு பாணோ காசோ ஓர் ஏவலனிடம் கொடுத்து அனுப்பலாம் என்றார்.

எல்லா றாபைகளும் ஓர் உடன்பாட்டுக்கு வருவதற்கு ஒன்பது மாதங்கள் கடந்து விட்டன. அவர்களிடையே கடிதங்கள் அங்கும் இங்கும் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தன. இப்படியான ஒரு விஷயத்தில் அத்தனை புலமை தேவை என்பதை நான் முன்பு உணர்ந்திருக்கவில்லை.

அதற்கிடையில் எல்கா இன்னொரு குழந்தையைப் பெற்று விட்டாள். இந்த முறை அது ஒரு பெண் குழந்தை. சப்பாத் நாளில் யூத ஓய்வு நாள் - நான் யூதக் கோவிலுக்குச் சென்று அவளுக்கு ஆசிர்வாதம் கிடைப்பதற்காக வழிபாடு செய்து வேண்டிக் கொண்டேன். அவர்கள் என்னை தோரா நூலிடத்துக்கு அழைத்தார்கள். நான் குழந்தைக்கு மாமியின் பெயரை அளித்தேன். மாமியின் ஆன்மா சாந்தி அடையட்டும். பேக்கரிக்கு வந்த நகரத்தின் மட்டிகளும் வாயாடிகளும் அதைப் பற்றிக் கண்டபடி கேட்டு என்னை வாட்டி எடுத்து விட்டார்கள். ஃபிறாம்போல் நகரமே எனது துன்பத்தாலும் துயரத்தாலும் தன் ஆன்மாவை மீண்டும் பெற்றது. இருந்தும், நான் எனக்குச் சொல்லப்பட்டதையே எப்பொழுதும் நம்பினேன். அதை நம்பாமல் இருப்பதில் என்ன நன்மை வரப் போகிறது? இன்று உன் மனைவியை நம்ப மாட்டாய், நாளை நீ கடவுளையே நம்ப மாட்டாய்? அப்போ எதை எப்படி நம்ப முடியும்?

அவளுடைய அண்டை வீட்டான் ஒருவன் எங்கள் பேக்கரியில் தொழில்பயில்வோனாக இருந்தான். அவனிடம் ஒவ்வொரு நாளும் சோளம் அல்லது கோதுமை மா பாண், அல்லது மாப்பண்டம், மாச்சுருள், பேகல் போன்றவற்றைக் கொடுத்தனுப்புவேன். கிடைத்தால் புடிங், தேன் கேய்க், பழக் கேய்க் கூட அனுப்புவேன். தொழில் பயில்வோன் நல்லிதயம் உள்ள இளைஞன். நான் கொடுத்ததற்கும் மேலாக அவனும் ஏதாவது சேர்த்துக் கொடுத்தான். அவன் முன்பு என்னை அதிகம் எரிச்சல் படுத்தியவன். மூக்கைப் பிடித்து இழுப்பான், விலாவில் இடிப்பான். ஆனால் என் வீட்டிற்குப் போக வெளிக்கிட்ட பின் என்னில் அவன் அன்பாகவும் சிநேகிதமாகவும் இருக்கத் துவங்கினான். 'ஹேய், கிம்பெல், உனக்கு சின்னஞ்சிறிய பண்பான மனைவியும் இரண்டு நல்ல குழந்தைகளும் இருக்கின்றன. அவர்கள் உனக்குத் தகுந்தவர்கள் அல்ல, அப்படி நல்லவர்கள்,' என்றான்.

'ஆனால் அவளைப் பற்றி பலர் சொல்லுவதைக் கேட்டாயா?' என்றேன்.

'அவர்களுக்கு நீண்ட நாக்கு. அதை வைத்துக் கொண்டு அவர்களால் சும்மா இருக்க முடியாது. சும்மா, அலட்டிக் கொண்டுதான் இருக்க முடியும். கடந்த குளிர்கால குளிரை பொருட்படுத்தாதது போல அதையும் பொருட்படுத்தாதே,' என்றான்.

ஒருநாள் றாபை என்னை வரும்படி அழைத்து, 'கிம்பெல், உனது மனைவியைப் பற்றி நீ சொன்னவை பிழை என்பது உனக்கு நிச்சயம் தெரியுமா? என்றார்.

'நிச்சயமாக,' என்று சொன்னேன்.

'இங்கே பார். நீயே கண்ணால் கண்டாய், அல்லவா?'

'அது நிழலாக இருக்கலாம்,' என்றேன்.

'எதன் நிழல்?'

'விட்டம் ஒன்றினதாக இருக்கலாம்,' என்றேன்.

'அப்படியானால் நீ வீட்டுக்குப் போகலாம். றாபை யனோவருக்கு நீ நன்றியாக இருக்க வேண்டும். அவர்தான் மைமொநிடெஸ் என்ற பழைய மறைந்து போன குறிப்பொன்று உனக்குச் சாதகமாக இருந்தது என்று எடுத்துச் சொன்னார்.'

நான் றாபையின் கைகளைப் பிடித்து முத்தம் கொடுத்தேன்.

உடனேயே வீட்டுக்கு ஓட வேண்டும் என்று விரும்பினேன். மனைவியிடமிருந்தும் குழந்தையிடமிருந்தும் அத்தனை காலம் பிரிந்து வாழ்வது சிறிய விஷயமல்ல. அதன் பின் நான் சிந்தித்தேன்: இப்போ வேலைக்குப் போய், பின்னர் மாலையில் வீட்டுக்குப் போவேன். நான் அதைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் என் இதயத்தைப் பொறுத்த அளவில் அந்த நாள் ஒரு புனித நாட்களில் ஒன்று போல எனக்கிருந்தது. பெண்கள் ஒவ்வொரு நாளும் செய்வது போல என்னைப் பகிடி பண்ணி

தொடர்தல் 123ம் பக்கம்

# கிம்பெல் என்ற...

122ம் பக்கத் தொடர்ச்சி...

னார்கள். செல்லம் கொஞ்சினார்கள். ஆனால் என் எண்ணம் மட்டும் வெட்டித்தனமாக பேசுங்கள், பரவாயில்லை என்பது போல இருந்தது. நீரில் எண்ணெய் போல உண்மை வெளிப்பட்டு விட்டது. மைமொனிடெஸ் சொல்கிறார், அது சரி என்று. ஆகவே அது சரி.

அன்றிரவு மாவைப் புளிக்க வைத்து முடிய பின் எனக்குச் சேர வேண்டிய பங்கு பாணையும் சிறிய சாக்கு மாவையும் எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்றேன். முழு நிலவு பூத்திருந்தது. வெள்ளிகள் மின்னிக் கொண்டிருந்தன. அவை எனது ஆன்மாவை பயமுறுத்திக் கொண்டிருந்தன. நான் விரைந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் நீண்ட நிழல் ஒன்று திடீரெனப் பாய்ந்தது. அது குளிர் காலம். புதிய உறை பனி விழுந்திருந்தது. பாடுவதற்குத் தோன்றியது. நேரம் சென்று கொண்டிருந்தது. பிற வீட்டுக்காரர்களை எழுப்ப விரும்பவில்லை. விசில் அடிக்கலாம் போல உணர்ந்தேன். ஆனால் இரவில் விசில் அடிக்கக் கூடாது, அது பேய்களை எழுப்பி விடும். ஆகவே நான் அமைதியாக என்னால் முடிந்த அளவு வேகமாக நடந்தேன்.

கிறிஸ்தவர்களின் முற்றங்களில் உள்ள நாய்கள் அவற்றைத் தாண்டிச் சென்ற போது என்னைப் பார்த்துக் குரைத்தன. நான் நினைத்தேன்: வாய் கிழிய நல்லாக் குரையுங்கள்! நீங்கள் என்ன நாய்கள் தானே? நான் ஒரு மனிதன். நல்லதொரு பெண்ணின் கணவன். நம்பிக்கை அளிக்கப் போகும் குழந்தைகளின் தந்தை.

வீட்டை நெருங்கியபோது என் இதயம் ஒரு குற்றவாளியின் இதயம் போல அடிக்கத் துவங்கியது. நான் பயப்படவில்லை. ஆனால் என் இதயம் தம் தம் என்று அடித்தது. சரி, திரும்ப முடியாது. கதவுத் தாழ்ப்பாளை மெதுவாக உயர்த்திக் கொண்டு உள்ளே சென்றேன். எல்கா தூங்கிக்கொண்டிருந்தாள். கைக்குழந்தையின் தொட்டிலைப்பார்த்தேன். திரைச்சேலை மூடப்பட்டிருந்தது. நிலவு வெளிச்சம் வெடிப்புகளால் உள்ளே விழுந்து கொண்டிருந்தது. கைக்குழந்தையின் முகத்தைப் பார்த்தேன். அதைக் கண்டவுடன் அதை விரும்பினேன். அதன் ஒவ்வொரு சிறிய எலும்பையும்.

அதன் பிறகு கட்டில் அருகே சென்றேன். அங்கே எதைப் பார்த்தேன்? தொழில்பயில்வோன் எல்காவிற்குப் பக்கத்தில் படுத்திருந்தான். நிலவு உடனடியாக மறைந்து விட்டது. முழுவதும் இருட்டாகப் போய் விட்டது. நான் நடுங்கினேன். என் பற்கள் கிடுகிடுத்தன. கைகளிலிருந்து பாண் நழுவியது. என் மனைவி விழித்தெழுந்து, 'யார் அது? ஆ?' என்றாள்.

'நான் தான்,' என்று முணுமுணுத்தேன்.

'கிம்பெல், நீ எப்படி இங்கே வந்தாய்? நீ வரக்கூடாது என்று தடை செய்யப்பட்டுள்ளதல்லவா?' என்றாள்.

'ராபை சொன்னார்,' என்று பதில் சொன்னேன். காய்ச்சல் வந்தது போல நடுங்கினேன்.

'கிம்பெல், நான் சொல்வதைக் கேள், ஆட்டுத் தொழுவத்துக்குப் போ. அங்கே ஆடு சுகமாக நிற்கிறதா என்று பார். அது சுகமில்லாமல் இருந்தது போல நின்றது,' எங்களிடம் ஒரு ஆடு இருந்ததென்று உங்களுக்குச் சொல்ல நான் மறந்து போனேன். அதற்குச் சுகமில்லை என்று சொன்னவுடன் அதைப் பார்ப்பதற்காக கொட்டகைக்குப் போனேன். மறி ஆடு சிறியதொரு மிருகம். அதற்கும் எனக்கும் ஒருவகை மனித உணர்வு இருந்தது.

தயக்கத்துடன் காலடிகளை வைத்து தொழுவத்திற்குச் சென்று கதவைத் திறந்தேன். ஆடு நாலு கால்களில் நின்றது. அதன் உடல் முழுவதையும் தடவிப் பார்த்தேன். கொம்புகளில் பிடித்து கிட்ட இழுத்து முலைகளைப் பரிசோதித்தேன். அதற்கு எந்தப் பிரச்சினையும் இருப்பதாகத் தெரியவில்லை. சிலவேளை அது குழைகளை அதிகம் சாப்பிட்டிருக்கலாம். 'நள்ளிரவு, என் சிறிய ஆடே. நலமாக இரு,' என்றேன். அந்தச் சிற்றாடு 'மாஆ' என்று கத்தி எனக்குப் பதில் சொன்னது. என் நல்லெண்ணத்துக்கு நன்றி சொல்வது போல அது இருந்தது.

நான் திரும்பவும் உள்ளே போனேன். தொழில் பயில்வோன் ஏற்கெனவே மறைந்து விட்டான்.



முழு நிலவு பூத்திருந்தது. வெள்ளிகள் மின்னிக் கொண்டிருந்தன. அவை எனது ஆன்மாவை பயமுறுத்திக் கொண்டிருந்தன. நான் விரைந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் நீண்ட நிழல் ஒன்று திடீரெனப் பாய்ந்தது. அது குளிர் காலம். புதிய உறை பனி விழுந்திருந்தது...

'அந்த இளைஞன் எங்கே? என்றேன்.

'எந்த இளைஞன்?' என்றாள் என் மனைவி.

'என்ன சொல்கிறாய்? தொழில்பயில்வோன். உன்னுடன் படுத்திருந்த அவன்,' என்றேன்.

'இன்றிரவும் அதற்கு முந்திய இரவும் நான் கண்ட கனவுகள் எல்லாம் உண்மையாகட்டும். தீய ஆவி ஒன்று உன்னை பிடித்து உன் பார்வையை மறைத்து விட்டது,' என்று கத்தினாள். 'வெறுக்கத்தக்க மிருகமே! ஈனப் பிறவியே! பேயே! அருவருப்பானவனே! வெளியே போய் விடு, போகவிட்டால் ஃப்ரம் போல் முழுவதையும் அலறி அழைத்துப் படுக்கையிலிருந்து எழுப்பி விடுவேன்! என்றாள்.

நான் அங்கிருந்து போவதற்கு முன்பே அவளுடைய தம்பி அடுப்பின் பின்புறம் இருந்து எழுந்து வந்து என் பின் தலையில் அடித்தான். என் கழுத்தை முறித்து விட்டான் என்றே நினைத்தேன். ஏதோ என்னில் மிகப் பெரும் பிழை ஒன்றுள்ளது என்பதை உணர்ந்தேன். எண்ணிய பின், 'அவமானப்படுத்தி விடாதே. எனக்கு இப்போ தேவைப்படுவது, ஊரவர்களின் ஆவிகளும் பிணம் தின்னும் பேய்களும் அல்ல,' என்றேன். அப்படித்தான் அவள் எண்ணி அதைச் செய்தாள். அப்படியானால், 'நான் செய்யும் பாணை ஒருவரும் தொட மாட்டார்கள்.'

சுருக்கமாகச் சொன்னால், அவளை நான் எப்படியாவது சமாதானப்படுத்தி விட்டேன்.

'சரி, அது காணும். படு. சின்ன விசயத்திற்கெல்லாம் பயப்படாதே,' என்றாள்.

அடுத்த நாள் காலை தொழில்பயில்வோனை ஒரு பக்கம் அழைத்து, 'சகோதரனே நான் சொல்வதைக் கேள்,' என்று பலதும் சொன்னேன். அவன், 'நீ என்ன சொல்கிறாய்?' என்பது போலப் பார்த்தான். நான் கூரையிலிருந்தோ எதிலிருந்தோ விழுந்தது போல என்னைப் பார்த்தான்.

'சத்தியமாகச் சொல்கிறேன், நீ ஒரு மூலிகை மருத்துவரிடமோ குணமாக்குபவரிடமோ செல். உனக்கொரு சுரை கழன்று போய் விட்டது. உனக்காக இதை நான் வெளியே ஒருவரிடமும் சொல்லவில்லை,' என்றான். அப்படித்தான் அந்த விஷயம் முடிந்தது.

நீண்ட கதையைச் சுருக்கமாகச் சொன்னால், அதன் பின் நான் என் மனைவியுடன் இருபது ஆண்டுகள் வாழ்ந்தேன். எனக்கு அவள் ஆறு பிள்ளைகள் பெற்றாள். நாலு பெண்கள், இரண்டு ஆண்கள். பல விஷயங்கள் நடந்தன. ஆனால் நான் எதையும் பார்க்கவும் இல்லை, கேட்கவும் இல்லை. நான் அவளை நம்பினேன். அவ்வளவுந் தான். ராபை அண்மையில் எனக்குச் சொன்னார்: 'நம்பிக்கை நன்மையானது தான். நல்ல மனிதன் நம்பிக்கையால் வாழ்கிறான் என்று எழுதப்பட்டிருக்கிறது.'

திடீரென என் மனைவி நோயாளியானாள். அவளுடைய முலையில் ஒரு சிறிய கட்டி ஒன்று வளர்ந்த போதுதான் அது ஆரம்பமானது. அவள் பல காலம் வாழ மாட்டாள் என்பது வெளிப்படையாகத் தெரிந்து விட்டது. அது அவளுடைய தலைவிதி. பல ஆண்டுகள் அவள் இருக்கவில்லை. அவளுக்காக நான் பெரும் செலவு செய்தேன். அப்போது நான் பேக்கரி ஒன்றையும் சொந்தமாக வாங்கி இருந்தேன். அதை உங்களுக்குச் சொல்ல மறந்து விட்டேன். அதனால் ஃபிராம்போல் நகரத்தில் நானும் ஒரு பணக்காரன் என்று கணிக்கப்பட்டிருந்தேன். தினமும் மருத்துவர் வந்தார். அண்டையில் இருந்த சூனியக்கார மருத்துவர் கொண்டு வரப்பட்டார். அவர்கள் அட்டைகளை பயன்படுத்தத் தீர்மானித்தார்கள். அதன் பிறகு குப்பிச் சிகிச்சை செய்ய முயன்றார்கள். லப்ளினிலிருந்து ஒரு மருத்துவரைக் கூட வரவழைத்தார்கள். ஆனால் அப்போது நிலைமை மோசமாகி விட்டது. அவள் சாவதற்கு முன்பு என்னை அவளுடைய கட்டிலடிக்கு அழைத்து, 'என்னை மன்னித்து விடு, கிம்பெல்,' என்றாள்.

'மன்னித்து விட என்ன இருக்கிறது? நீ எனக்கு நல்ல, விசுவாசமான மனைவியாக இருந்திருக்கிறாய்?' என்றேன்.

'ஐயோ, கிம்பெல். நான் உன்னை இத்தனை வருஷமாக ஏமாற்றி வந்துள்ளேன். அது மிக கேவலமானது. நான் என்னைப் படைத்தவரிடம் செல்லும்போது சுத்தமானவளாகச் செல்ல வேண்டும். அதனால் சொல்லுகிறேன், இந்தக் குழந்தைகள் உனக்குப் பிறக்கவில்லை,' என்றாள்.

தலையில் மரக் கட்டையால் அடித்தால் எப்படி இருக்குமோ அது போல அது இருந்தது. அது கூட அப்படி என்னை கலக்கமடைய வைத்திருக்காது.

'அப்படி என்றால் அவர்கள் யாருடைய குழந்தைகள்?' என்று கேட்டேன்.

'எனக்குத் தெரியாது. பலர் வந்தார்கள்... ஆனால் குழந்தைகள் உன்னுடையதில்லை,' என்றாள். அவள் பேசிக்கொண்டிருக்கையிலே தலையை ஒரு பக்கமாகச் சாய்த்தாள். கண்கள் கண்ணாடி போல் ஆகின, எல்காவை பொறுத்தவரை எல்லாம் முடிந்து விட்டது. அவளுடைய வெளிறிப்போன இதழ்களில் புன்னகை ஒன்று மட்டும் மிச்சம் இருந்தது.

'கிம்பெலை நான் ஏமாற்றினேன். என்னுடைய குறுகிய வாழ்க்கையின் அர்த்தம் அதுதான்,' என்பது போல அவள் இறந்து விட்டபோதும் அதையே அவள் சொல்லிக் கொண்டிருப்பதாக நான் நினைத்தேன்.

ஒருநாள் இரவு துக்க காலம் முடிந்த பிறகு மாச்சாக்குகளில் படுத்து கனவு கண்டு கொண்டிருந்தேன். அப்போது தீய ஆவி ஒன்று வந்து, 'கிம்பெல், ஏன் தூங்குகிறாய்?' என்று கேட்டது.

'அப்போ நான் செய்வது? கிரெப்லாக் - நூடில்ஸ் இறைச்சி உணவு - சாப்பிடுவதா?' என்றேன்.

'முழு உலகமே உன்னை ஏமாற்றுகிறது, அதற்குப் பதிலாக நீ இந்த உலகத்தை ஏமாற்று,' என்றது.

'எப்படி நான் உலகத்தை ஏமாற்றுவது?,' என்று அதைக் கேட்டேன்.

அது பதிலளித்தது. 'தினமும் ஒரு வாளி மூத்திரத்தைச் சேர்த்து இரவில் குழைத்த மாவுக்குள் அதை ஊற்று. ஃப்றம்போல் உள்ள முனிவர்கள் அந்தக் கழிவை உண்ணட்டும்,' என்றது.

'அப்படியென்றால் உலகத்திலுள்ள தீர்ப்பு என்னவாவது?' என்று கேட்டேன்.

'அப்படி ஒரு உலகம் உனக்கு வராது. உனக்கு அது கூடாத பொருளை விற்று உன்னை ஏமாற்றி விட்டது. உனது வயிற்றுக்குள் பூனை இருக்கிறது என்று நம்பச் செய்து ஏமாற்றி விட்டது. எத்தனை மடத்தனம்!'

'அப்படி என்றால் சரி, கடவுள் இருக்கிறாரா?' என்றேன்.

'கடவுளும் இல்லை,' என்று பதிலளித்தது.

'அப்படி என்றால் என்ன இருக்கிறது?' 'அடர்த்தியான சகதி.'

ஆட்டுத் தாடியும், கொம்பும், நீளமான பல்லும், வாலுமாக என் கண் முன்னால் அது நின்றது. அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், அதை அதன் வாலில் வெடுக்கென எட்டிப் பிடிக்க விரும்பினேன். அப்போது சாக்கு மூடைகளிலிருந்து உருண்டு விழுந்து என் விலா எலும்பை ஏறக்குறைய முறித்தே விட்டேன். அதன் பிறகு இயற்கைக் கடனைக் கழிப்பதற்காக சென்ற போது புளிச்ச மா மேலெழும்பிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அது என்னைப் பார்த்து, 'இப்போ அதைச் செய்! என்பது போல இருந்தது. சுருக்கமாகச் சொன்னால், அது சொன்னதை நான் செய்வதற்கு என்னை அது சம்மதிக்க வைத்து விட்டது.

அதிகாலை தொழில்பயில்பவன் வந்தான். நாங்கள் பாணைப் பிசைந்தோம். அதன் மேல் கருஞ்சீரக - கரவே விதைகளைத் தூவினோம். பின் அதைச் சுடுவதற்கு விட்டோம். அதன் பின் தொழில் பயில்வோன் போய் விட்டான். அடுப்புக்குப் பக்கத்திலுள்ள சிறிய பள்ளத்தில் கந்தல் துணிகளின் மேல் நான் தனியாகக் குந்தியிருந்தேன். சரி கிம்பெல், அவர்கள் உனக்குச் செய்த அவமானங்களுக்காக நீ அவர்களின் மேல் பழிக்குப் பழி வாங்கி விட்டாய் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். அப்போது வெளியே உறைபனி விழுந்து மினுங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அடுப்புப் பக்கம் சூடாக இருந்தது. தீ நாக்குகள் என்னை சூடாக்கிக் கொண்டி

தொடர்தல் 124ம் பக்கம்

# கிம்பெல் என்ற...

123ம் பக்கத் தொடர்ச்சி...

ருந்தன. நான் தலை குனிந்து தூக்கத்தில் மயங்கி விட்டிருந்தேன்.

கனவில் எல்காவைக் கண்டேன். அவள் தன் சவச்சேலையில் நின்றாள். அவள் என்னை அழைத்து, 'நீ என்ன செய்திருக்கிறாய், கிம்பெல்?' என்றாள்.

'எல்லாம் உன்னுடைய பிழை,' என்று சொல்லி நான் அழ வெளிக்கிட்டேன்.

'நீ ஒரு முட்டாள்! ஒரு முட்டாள்! நான் பிழை விட்டேன் என்றால் எல்லாம் பிழையா? நான் எவரையும் ஏமாற்றவில்லை, என்னைத் தான் ஏமாற்றினேன். அதற்காக நான் இப்போது பெரிய விலை கொடுத்துக் கொண்டிருக்கிறேன். உனக்கு இங்கே அவர்கள் அப்படி ஒன்றும் செய்யவில்லை.'

அவளுடைய முகத்தைப் பார்த்தேன். கறுப்பாக இருந்தது. நான் திடுக்கிட்டு எழும்பி, பேசாமல் குந்தி இருந்தேன். எல்லாம் நிச்சயமற்றிருந்தது. இப்பொழுது பிழையான அடி ஒன்றை எடுத்து வைத்தால் நிரந்தரமான வாழ்வை இழந்து விடுவேன். ஆனால் கடவுள் எனக்கு உதவி செய்துள்ளார். நீண்ட தோண்டியை எடுத்து பாண் முழுவதையும் அடுப்பிலிருந்து அள்ளி எடுத்து முற்றத்திற்குக் கொண்டு போனேன். பின் உறைபனியால் உறைந்திருந்த மண்ணில் ஒரு குழியைத் தோண்ட ஆரம்பித்தேன்.

நான் அதைச் செய்து கொண்டிருக்கையில் தொழில்பயில்வோன் வந்தான். 'என்ன செய்கிறீர்கள், முதலாளி? என்றான். நான் சவம் போல வெளிறி விட்டேன்.

'நான் என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியும்,' என்று சொல்லிக் கொண்டு அவன் கண் முன்னால் பாண் முழுவதையும் புதைத்தேன்.

பிறகு வீட்டுக்குப் போனேன். மறைவான இடத்திலிருந்து என் செல்வத்தை எடுத்து, பிள்ளைகளுக்கு பகிர்ந்தளித்தேன். 'இன்றிரவு உங்கள் அம்மாவைக் கண்டேன். பாவம் அவள் கருமையாக மாறிக்கொண்டிருக்கிறாள்,' என்றேன்.

அவர்கள் திகைத்துப் போய் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இருந்தார்கள்.

'நன்றாக இருங்கள். கிம்பெல் என்றொருவன் இருந்தான் என்பதையே மறந்து விடுங்கள்,' என்று சொன்னேன். என்னுடைய குட்டையான மேலங்கியையும் பூட்சுகளையும் அணிந்தேன். ஒரு கையில் என்னுடைய பிரார்த்தனை சால்வை வைத்திருந்த பையை எடுத்தேன். மறு கையில் கொஞ்சப் பணத்தையும் எடுத்துக் கொண்டேன். மெஸ்ஸ" ஸாவை - கதவு நிலையில் விவிலிய பத்திகள் இரண்டு எழுதப் பெற்ற ஒரு சுருளை முத்தமிட்டேன். ஊரவர்கள் என்னை வீதியில் கண்டபோது மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

'எங்கே போகிறாய்?' என்று கேட்டார்கள்.

'உலகத்திற்கு,' என்றேன். அப்படி நான் ஃப்றாம்போலை விட்டகன்றேன்.

உலகம் முழுவதும் சுற்றினேன். நல்ல மனிதர்கள் என்னைக் கைவிடவில்லை. பல ஆண்டுகளின் பின்னர் முதியவனானேன். தலைமயிரும் நரைத்துப் போனது. பல பொய்களையும் தவறுகளையும் பெருமளவில் கேள்விப்பட்டேன். ஆனால் பல காலம் வாழ வாழ உண்மையில் அப்படிப் பொய்கள் எதுவும் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். பகலில் நடைபெறாதவைகளை இரவில் கனவில் கண்டேன். ஒருவருக்கு நடைபெறாவிட்டால் இன்னொருவருக்கு அது நடந்தது. இன்று நடக்காமல் விட்டால் நாளை நடந்தது. அடுத்து ஆண்டு நடக்காதது ஒரு நூற்றாண்டின் பின் நடந்தது. அதில் என்ன வேறுபாடு வரப் போகிறது? அடிக்கடி பல கதைகள் கேள்விப்பட்டேன். அவற்றில் 'இப்போ இந்த விஷயம் நடக்காது,' என்றேன். ஆனால் ஓராண்டு முடிவதற்கிடையில் அது எங்கோ நடந்தது.

ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு போனேன். அந்நியமான இடங்களில் சாப்பிட்டேன். பல இடங்களில், நடைபெற்றேயிராத பல பொய்க் கதைகளை அடிக்கடி இயற்றிச் சொல்லுவேன். பேய்கள், மந்திரவாதிகள், காற்றாலைகள் பற்றியும் அவற்றைப் போல பலவற்றையும் சொல்லுவேன். குழந்தைகள் எனக்குப் பின்னால் ஓடி வந்து, 'தாத்தா, எங்களுக்கொரு கதை சொல்லுங்கள்,' என்று சொல்லுவார்கள். சிலவேளை அவர்கள் சில குறிப்பிட்ட கதைகளையும் கேட்பார்கள். நான் அவர்களைச் சந்தோசப்படுத்த முயல்வேன். ஒரு முறை பருமனான இளம் சிறுவன் ஒருத்தன், 'தாத்தா, இந்தக் கதையை முன்னரே நீங்கள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறீர்கள்,' என்றான். அந்தச் சிறிய போக்கிரிச் சிறுவன் சொன்னது சரிதான்.

கனவுகளும் அப்படியே. ஃப்றம்போலை விட்டு நான் வெளியே வந்து பல ஆண்டுகளாகி விட்டன. ஆனால் நான் என் கண்களை மூடியவுடனேயே அங்கே நான் நின்றேன். யாரைப் பார்க்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? எல்காவை. முதல் முறை பார்த்ததுபோலவே நின்று கழுவும் தொட்டிக்குப் பக்கத்தில் அவள் நின்றாள். இப்பொழுது அவளுடைய முகம் பிரகாசமாக இருந்தது. புனிதரின் கண்களைப் போல கண்கள் ஒளி வீசின. விசித்திரமான அந்நிய மொழியில் என்னுடன் பேசினாள். விசித்திரமான பொருட்களைப் பற்றிப் பேசினாள். நான் விழித்தெழுந்தபோது அனைத்தையும் மறந்து விட்டேன். ஆனால் கனவுகள் நிகழ்ந்து முடியும் வரை அவை எனக்கு ஆறுதல் அளிப்பவையாகவே இருந்தன. நான் வினவியவை எல்லாவற்றுக்கும் பதிலளித்தாள். அதில் எனக்குக் கிடைத்தவை எல்லாமே நல்லவையே. தேம்பி அழுது அவளை மன்றாடிக் கேட்டேன், 'நான் உன்னுடன் இருக்கிறேன்,' என்று. அவள் என்னைத் தேற்றி என்னைப் பொறுமையாக இருக்கும்படி சொன்னாள். அதற்கான காலம் அதிக தூரத்தில் இல்லை. அருகே உள்ளது என்றாள். சிலவேளை அவள் என்னை வருடினாள், கொஞ்சினாள், முகத்தில் மேல் முகம் வைத்துத் தேம்பி அழுதாள். நான் விழித்தெழுந்தபோது அவளுடைய இதழ்களை வருடி, அவளுடைய கண்ணீரின் உவர்ப்பை ருசித்ததாக உணர்ந்தேன்.

உலகம் முற்றாகவே கற்பனையானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது உண்மையான உலகத்திற்கு மிக நெருங்கியது. நான் கிடந்த சிறிய குடிசையின் கதவடியில் இறந்தவர்களைத் தூக்கிச் செல்லும் பலகை ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. புதைகுழி தோண்டும் யூதன் மண்வெட்டியுடன் தயாராக இருந்தான். புதைகுழி எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. புழுக்கள் பசியோடிருந்தன. சவச்சேலைகள் தயாராகி விட்டன. அவற்றை நான் என் பிச்சைக்காரனின் சாக்குப் பையில் வைத்திருந்தேன். இன்னொரு யூத பிச்சைக்காரன் - ஷ்நொறெர் என் வைக்கோல் கட்டிலை மரபுரிமையாகப் பெறுவதற்காகக் காத்திருந்தான். நேரம் வந்தவுடன் நான் மகிழ்ச்சியாகப் போய் விடுவேன். அங்கே என்ன இருக்கிறதோ அது மெய்யானது. சிக்கலற்றது. பரிகசிக்கப்படாதது. ஏமாற்றப்படாதது. இறைவனைப் போற்றுவோம். அங்கே கிம்பெலைப் போன்ற ஒருவனைக் கூட ஒருவராலும் ஏமாற்ற முடியாது.



mahalingam.k@thaiveedu.com

RELAX INN
Life's better while Relaxinn

அன்பான உறவுகளே!
நீங்கள் - - -
தாயகம் செல்லும்போதும் சென்று திரும்பும் போதும் தங்கிச் செல்ல - - -
நீர்கொழும்பில் - ஓர் தரமான தங்கு விடுதி

" Relax Inn Guest House "
52/25 St' Philipneris Mawatha
Negombo – Sri Lanka
( 9 km From Airport)



வசதிக்கேற்ப,சொகுசுக்கேற்ப, சுகாதாரத்திற்கு ஏற்ற அமைவிடம்.



மோகன் :(416) 436 0282, 94 71 214 2761 சிவா : (416) 277 9471
பதிவுகள்: Air bnb | Info@relaxinngh.com | www.relaxinngh.com


BUY & SELL HOMES, BUSINESS, LANDS..
PROFIT FROM MY EXPERIENCE, LISITNG.. 1% COMMISSION
SOLD
SOLD
SOLD
SOLD
Grandview & Conlin
Brand new from builder Oshawa. $764K
Pat Pushpakanthan
Full Time Broker
416.894.1187
Century 21
Brokerage
AFFILIATE REALTY INC
80 Corporate Dr #208
Toronto
416-290-1200
nhome2025@gmail.com VISIT.. PATPUSH.COM
Call for FREE Market Evaluation!
FREE Home Staging*
Spectacular Video
Extensive Advertising
Elaborate Marketing Professional Photography
Pharmacy/Sheppard
3 Bm W/O finished basement $779k
$699k
Warden/ st.clair
3 Bedroom
3 Washroom
steps to subway
CALL PAT for professional service
We helped many buyers and sellers to buy and sell homes in your area
RENTAL CORNER
1, 2, BEDROOM CONDO RENTAL FROM $1800.00, $2150
HOUSES RENTAL 2 bm 2wsrm $1700/-
Lee Centre Dr. 1+den 1950/-
CALL ME
416-894-1187
Sell in 10 days Program
100% Satisfaction.
Pat Will Beat Any Deal
Pat Help For Mortgages from 1.99%,
New Home build & Home Renovation
IN VAUGHAN METROPOLITAN CENTRE MASTER PLANNED COMMUNITY NEXT TO SUBWAY
NEW PRE-CONSTRUCTION CONDO OPENING
CALL PAT FOR VVIP Platinum ACCESS


கடன் பிரச்சனைகளா?
கடன் அட்டை சிக்கல்கள்
வங்கிக்கடன் சிக்கல்கள்
கலக்சன் கம்பனி போன் தொல்லை
ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை
நல்ல செய்தி
எம்மிடம் தீர்வு உண்டு
நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும், உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும் செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.
இலவச ஆலோசனை பெற
JANNET FINANCIAL SERVICES INC.
Ms. Jennet Sam & Mr. Stalin Dominic
Tel: 647-894-3876
FaX: 905-471-8080
Email: jennet_renni@hotmail.com
உடன் அழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க
DEBT


PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
OPEN HOUSE SAT & SUN 2-4 PM
19 BINGLEY RD, TORONTO
FINCH / MORNINGSIDE
4 2
FOR SALE
TORONTO
NEILSON RD / SHEPPARD AVE E
1 1
FOR SALE
TORONTO
MORNINGSIDE AVE / ELLESMERE RD
2 2
FOR SALE
TORONTO
MIDLAND / DANFORTH
2+1 2
FOR SALE
OSHAWA
DEAN / WILSON
3+2 2 SEP ENTRANCE
FOR SALE
OSHAWA
HARMONY RD / COPPERFIELD DR
3 3
FOR SALE
OSHAWA
THORNTON / ADELAIDE
3 3 FINISHED BASEMENT
FOR SALE
AJAX
WESTNEY / ROSSLAND / HARDWOOD
3+1 2 FINISHED BASEMENT
FOR SALE
TORONTO
MCCOWAN / 401
4 2
FOR SALE
TORONTO
MCCOWAN / 401
4 2
FOR SALE
TORONTO
MCCOWAN / ELLESMERE
2 2
FOR SALE
TORONTO
NEILSON / SHEPPARD
3 3 FINISHED BASEMENT
FOR SALE
TORONTO
LAWRENCE / SCARBOROUGH GOLF CL
3+2 2 FINISHED BASEMENT
FOR SALE
TORONTO
MARKHAM / LAWRENCE
3+3 2 SEP ENTRANCE
FOR SALE
TORONTO
RIVER ST TO RYNARD TO FAIRGROU
5 4
FOR SALE
TORONTO
ELLESMERE / SCARB. GOLF CLUB
3+2 2
FOR SALE
TORONTO
NEILSON RD / SOUTH OF HWY 401
4 3
FOR SALE
TORONTO
PORT UNION / 401
3 2
FOR SALE
TORONTO
MEADOWVALE / ELLESMERE
3 4 FINISHED BASEMENT
FOR SALE
TORONTO
PORT UNION / SHEPPARD
4+1 3
POWER BROTHERS
4
REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER
416.301.5555
WWW.PYRAMIDGROUP.COM
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
Independently Owned and Operated

# பனி விழும் பனை வனம்

**- செல்வம் அருளானந்தம் -**

**பகுதி: 4**



அண்டைக்குச் செவ்வாய்க் கிழமையோ வெள்ளிக்கிழமையோ எண்டது இப்பத் தெளிவாத் தெரியேல்ல. ஆங்கிலம் படிக்கிறதுக்காக அகஸ்ரின் மாஸ்ரரிட்டைத் திரும்பவும் போனன்.

போகேக்கையே கடைக்கண்ணால் பத்மினி வீட்டிலை நிற்கிறாவோ எண்டு எட்டிப் பார்த்தன். ஒரு சிலமனும் தெரியேல்லை.

ரீயுசன் முடிஞ்சு வெளிக்கிட்டன்... கண்கள் அங்கால இங்கால பத்மினியை துழாவிச்சுது. ஒண்டையும் காணேல்லை. பொழுது இருளத் தொடங்கிற நேரம். வெளிக்கிட்டுப் படலையைத் தாண்டேக்கை பத்மினியின்ரை அக்கா பக்கத்திலை வாறதைக் கவனிச்சன்.

என்னட்டைத்தான் வந்தா.

'கொஞ்சம் நில்லும் உம்மோடை ஒருக்கால் பேச வேணும்' எண்டா.

திடுகிட்டு போனன். அவவோட எனக்குப் பெரியா பழக்கம் இல்லை. ஒருக்காலும் கிட்ட நெருங்கிப் பேசினதா ஞாபகம் இல்லை. அவ... பக்கத்திலை வந்து என்னோட கதைச்ச விதமும் எனக்குப் பிடிக்கேல்லை.

ஓரளவுக்கு உயரமும் நிறமும் பத்மினியை போல்தான். ஆனால், பத்மினியின் வட்ட வடிவான முகத்திற்கும் சுருண்ட முடிக்கும் அகன்ற கண்ணுக்கு இவ கிட்டவர முடியாது. பத்மினிவிட வெள்ளை நிறம். அகங்காரம் கொண்ட அந்த முகச் சாயல் கொண்டவர்களை வாழ்க்கை முழுவதும் வெறுக்கத்தக்தாக அந்த உரையாடல் அமைந்தது.

அவவின்ர முதல் கேள்வியே 'நீர் இப்ப என்ன செய்கின்றீர்?' எண்டுதான் வந்தது. எனக்கு இவ என்ன தலைப்பிலை பேசப் போறா? எண்டுறது ஓரளவு விளங்கிட்டுது. நான் பேசாம நிண்டன்.

இரண்டாவதாய் 'உங்கடை சித்தியோடை இப்பவும் கதைக்கிற நீங்களோ? எண்டா.

நான் 'ஓம்' எண்டன்.

என்ர சித்தியும் இவவும் ஒண்டாய்ப் படிச்சவை.

ஒரு தடவை சித்தி இவவைப் பற்றிக் கதைக்கேக்கை பள்ளிகூடத்திலையும் தான்தான் மோலோங்கி எண்ட லெவலோட இருப்பா வெண்டும், தன்னோடை ஒருக்காலும் சிநேகிதம் வைக்க பெரிசா விரும்பியிருக்கேல்லை எண்டும், செருக்குப் பிடிச்சவ எண்டும் சொன்னது ஞாபகம் வந்தது.

நான் தொடர்ந்து சொன்னன்.

'எனக்குச் சித்தியெண்டால் சரியான விருப்பம். அம்மா அவவோடை பேசுறது இல்லைத்தான். ஆனா நான் போய்வாறனான். சித்தப்பா எனக்குச் சிநேகிதன் மாதிரி' எண்டன்.

'அதுதான் சனமெல்லாம் சிரிக்குது...வெட்கமாயுமெல்லே இருக்குது' எண்டு கொஞ்சம் சினத்தோடை சொன்னா.

எனக்குக் கொஞ்சம் சூடாயிற்றுது... மெல்லிய கோபத்தோடை பழைய ஆட்களை மாதிரி என்ன நீங்களும் சாதி பாக்கி நீங்களோ? அதுவும் கொழும்பிலை பல பேரோட பழகிற நீங்கள் இப்பிடிச் சொல்லலாமோ? என்ரை சித்தப்பா 'சேவையர்' வேலை பார்க்கிறார். நல்ல சம்பளம். சித்தியை நல்லாய் வச்சிருக்கிறார் எண்டன்.

'இண்டைக்கும் மீன் பிடிச்சுக்கொண்டிருக்கிற உங்கட குடும்பங்களுக்கு இது பிரச்சினையில்லாமல் இருக்கலாம். இப்ப உத்தியோகம் பார்த்தாலும் சுண்ணாம்பு எரிச்சுக் கூலி வேலை செய்யிற பரம்பரையிலை போய் சம்மந்தம் செய்யிறது எங்கட சாதிக்கே அழகில்லைத் தெரியுமோ' எண்டா.

எனக்குக் கதைக்க வேணும் போலதான் இருந்தது. ஆனா, உறவு சிக்கலிலை போய்விடக் கூடாது எண்டு பேசம நிண்டன்.

அவவும் கொஞ்ச நேரம் கதைக்கேல்லை.

பிறகு தீடீரென்று சொன்னா 'கோவிக்காதேயும்.. நீர் இனி எங்கடை வீட்டுக்கு வரவேண்டாம்.'

நான் திடுக்கிட்டு போனன்.

அப்பத்தான் வீட்டுப்பக்கம் கவனிச்சன். ஜன்னல் ஓரத்திலை பத்மினி அழுகிற முகத்தோட நிற்கிற மாதிரிச் தெரிஞ்சுது.

இப்ப நான் அடக்க வெளிக்கிட்ட கோபம் தலைக்கேறின மாதிரி இருந்தது.

பத்மினியின்ர அக்கா விடுற மாதிரி இல்லை.

'என்ன துணிச்சல் இருந்தால் அந்தக் கடையடியிலை அவள் மேலை கைபோட்டுக் கதைப்பீர்? என்னெண்டு சைக்களிலை ஏத்திக் கொண்டு வந்து வீட்டை விடுவீர்? வீணாய்க் கற்பனையள வளரக்காதையும். உங்களுக்கும் எங்களுக்கும் சரி வராது. உங்கடை பேரன்மார் வெறும் மேலோடை தொழிலுக்குப் போன காலத்திலை லோங்ஸ் சேட் போட்டு உத்தியோகத்திற்கு போன பரம்பரை நாங்கள்' எண்டா.

நான் கொஞ்சம் கோபமாகச் செருமினன்...

அதை அவ கணக்கிலை எடுக்கேல்லை.

'அதுகூடப் பறவாயில்லை.. சாதிமாறிக் கல்யாணம் செய்யிற பல பட்டறைகளோட நாங்கள் சம்மந்தம் செய்வம் எண்டு நினைக்கிறியளோ...' எண்டு ஏதோ சொல்லப் போக..,

'அக்கா கொஞ்சம் பொறுங்கோ' எண்டு அவவை இடைமறிச்சு 'கதைக்கிற கதையள் ஒரு அளவாய் இருக்க வேணும். உங்களைப் பற்றியும் எனக்குத் தெரியும். ஒரு ஆளைக் காதலிச்சு அதைக்கை விட்டுப் பெரிய உத்தியோகம் எண்டு இன்னொரு ஆனை கல்யாணம் முடிச்சு....' எண்டு தொடங்கி என்ர வசனங்கள் கோபத்தோடை கொட்டத் தொடங்கிச்சுது. அப்ப என்ர கோபம் உச்சத்திலை நிண்டிருக்க வேணும்.

நாப்பது வயது தாண்டி 'ஒசோவை' படிக்கேக்கை நான் அண்டைக்கு நிகோலம்

தொடர்தல் 128ம் பக்கம்

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# பனி விழும் பனை...

127ம் பக்கத் தொடர்ச்சி...

ஞாபகத்திற்கு வந்தது.

'நீங்கள் முரட்டுத்தனத்தை வார்த்தைக-ளில் வெளிப்படுத்தும் பொழுது எதுவும் உங்களை ஊடுருவ முடியாது காதலும் சரி, தியானமும் சரி, கடவுளும் சரி...'

இதை இப்ப யோசிச்சு என்ன செய்யிறது? எல்லாம் காலத்தோடை கரைஞ்சு போச்சுது.

இப்ப ஓசோவையும் விட்டாச்சு...

இந்த சம்பவத்துக்கு இரண்டு நாள்களுக்கு முதல்த்தான் மு. வரதராசனின் மலிவு விலை திருக்குறள் புத்தகத்திலை காமத்துப் பாலைப் புரட்டிக்கொண்டிருக்கை...

*'வாழ்தல் உயிர்க்கன்னன் ஆயிழை சாதல் அதற்கன்னள் நீக்கும் இடத்து'.*

அப்ப இதன் பொருள் பெரிசா விளங்காட்டியும் *'உடல் நீங்கினால் எப்படி உயிர்க்கு வாழ்வில்லையோ அப்படி அவள் நீங்கினால் எனக்கு வாழ்வு இல்லை'* எண்டுறதைப் படிச்சு ரசிச்சு கொண்டாடிய நான், எல்லாத்தையும் மறந்து கடைசிய கோபத்திலை போய் நிண்டன்.

ஆனா அவ, நிதானமாய்த்தான் நிண்டா. 'நீர் என்னத்தையும் சொல்லும்.. என்ரை புருசன்ரை தம்பி ஒருவர் கொழும்பிலை சாட்டட் எக்கவுண்டிங் படிக்கிறார். அவருக்குத்தான் பத்மினியைச்செய்து கொடுக்கப்போறோம். தயவுசெய்து நீர் இங்கால் பக்கம் வராதேயும்' எண்டா.

நான் விடேல்லை... தொடர்ந்து சத்தம் வைச்சுக் கொண்டிருந்தன். அவ பேசாமல் திரும்பி, வீட்டுக்குள்ள போயிட்டா.

இப்பத்தான் அகஸ்டின் மாஸ்டர் மெதுவாக வந்து எட்டிப் பார்த்தார்.

எனக்கோ கவலை, கோபம், ஆதங்கம், அவமானம் எல்லாம் தலைவரை ஏறிப் போயிருக்க... இனி இந்த வீட்டு வாசல் படி வாறது இல்லை எண்ட முடிவோட அங்கையிருந்து வெளிக்கிட்டன்.

அடுத்தநாள் பகல் முழுவதும் படுத்துக் கிடந்தன். இரவு என்னத் தேடி ராசகுலம் வந்தான்.

'என்னடாப்பா என்ன பிரச்சனை? இன்றைக்கு காலையில நீ றால் எடுக்க வரேல்லையாம் எண்டு சம்மாட்டி வந்து சொன்னார்' எண்டவன், என்ர முகம் இருந்த கோலத்தைப் பார்த்துப் பயந்து போனான்.

நடந்தது எல்லாத்தையும் அவனிட்டக் கொட்டினன். அவனுக்கு அது ஆச்சரியமானதாய் இருக்கேல்லை. இது சரி வராது எண்டு எனக்கு முதல்ல சொன்னவன் அவன்தானே. அதுக்காக நான் இப்படி இடிஞ்சு போவன் எண்டு அவன் எதிர் பார்க்கேல்லை.

ராசகுலம் என்னை ஆறுதல்படுத்துறத்துக்காக டவுணுக்குக் கூட்டிக்கொண்டு போனான்.

அப்பதான் அவன் சொன்னான் 'சம்மாட்டிக்கு உன்னை நல்லாய் பிடிச்சிக் கொண்டுது. அவருக்கு நீ படிச்ச ஒழுங்கான பெடியன் எண்ட அபிப்பிராயம் இருக்கு. அவருக்கு மன்னாரிலை ஒரு ஏஜன்ட் தேவையாம்... உன்னட்ட நேரிலை கேக்கத் தயக்கமாய் இருக்காம்.

நாச்சிக்குடா, தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி, இலுப்பைகடவை, விடத்தல்தீவு மாதிரியான இடங்களிலை இறாலை வாங்கி அதை மன்னாரிலை இருந்து கொழும்புக்கு அனுப்புறதுதான் வேலை.

றைவரோடை ஒரு வாகனமும் வேலைக்கு ஒரு ஆளும் மன்னாரிலை தங்குறத்துக்கு ஒரு வீடும் ஒழுங்கு பண்ணித் தருவார். சீசன் வேலைதான் சேகரிக்கிற றாலுக்குத் தகுந்த மாதிரி கொமிசனும் சம்பளமும் தருவராம். நீ போகப் போறியோ?' எண்டான்.

நான் யோசிச்சு கொண்டு நிண்டன். நான் இருக்கிற நிலைமையிலை தீடிரெண்டு கேக்கிறான்.. என்னத்தைச் சொல்லுறது?

'இந்த நிலமையிலை நீ கொஞ்சம் வெளியிலை போறதுதான் நல்லது எண்டு நான் நினைக்கிறன். உனக்கு விருப்பம் என்றால் சொல்லு' என்றான்.

அவனுக்கு இப்ப ஒரு பதில் சொல்ல வேணும். இதுக்கு வீட்டிலை அம்மா சம்மதிக்க மாட்டா எண்டுறது போக, பத்மினியின்ர அக்காவுக்குப் பயந்து ஊரை விட்டுப் போனமாதிரியும் இருக்கக் கூடாது. அதைவிடப் பத்மினியை மறக்க இயலாது எண்டெல்லாத்தையும் யோசிச்சுக் கொண்டு... 'அந்த வேலையை எடுத்துக் கொண்டுபோறது எனக்குக் கஸ்டம்' எண்டன்.

'உன்ரை நன்மைக்குத்தான் சொல்லுறன்... யோசிச்சுச்சொல்லு... நாளைக்குச் சந்திக்கிறன்' எண்டு சொல்லிட்டு ராசகுலம் போய் விட்டான்.

அடுத்த நாள் மத்தியானம் சந்தைக்கு போன அம்மா அழுதுகொண்டு வந்தா. பத்மினியின் அக்கா சந்தையடியிலை அம்மாவோடை சண்டை போட்டிருக்கிறா. 'பல பட்டறைகள்' எண்ட அதே வார்த்தையைச் சொல்லி திட்டியிருக்கிறா.

என்ர அம்மா, அப்பா அப்பாவித்தனமான ஜீவன்கள். என்ர காதலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போச்சினம். குடும்பமாய்ச் சேர்ந்து திட்டம் போட்டு தங்கடை வீட்டில் சம்மந்தம் வைக்க நாங்கள் முயற்சிக்கிறம் எண்டு சொன்னாவாம்.

வீட்டிலை ஒரே களோபரமாய் இருந்தது. அங்க இருக்கமுடியேல்லை. வெளிக்கிட்டன். மெயின் றோட் கூட்டணிக் காரியாலயத்திலை பருத்தித்துறை எம்.பி.துரைரத்தினம் இஸ்ரேல் நாட்டுக்குப் போய்வந்த அனுபவங்களை பேசுறார் எண்டு கேள்விப்பட்டு அங்க போனன். விசாராக் கிடந்தது. அங்கையும் நிற்கப் பிடிக்காமல் ராசகுலமும் வேறை நண்பர்களும் கூடுற வாசிகசாலையடிக்குப் போனன்.

அவங்களுக்கும் என்ர கதை தெரிந்திருந்தது. நிண்டவங்களில கனபேர் அறி-வுரைகளையும் ஆறுதல்களையும் அள்ளி விட்டாங்கள்.

எல்லாம் சினிமாப் படங்களில பார்த்துத் தெரிஞ்ச விசயங்களைத்தான் சொன்னாங்கள். நான் ஒன்றும் பறையாமல் கேட்டுக் கொண்டு நிண்டன். நான் உசார் இல்லாமல் இருக்கிறன் எண்டும் தோல்வியை ஏற்றுக்கொண்டு விட்டன் எண்டும் ஒருவன் சொன்னான்.

சுமைதாங்கி படத்திலை ஜெமினி கணேசன் 'மயக்கமா தயக்கமா' எண்ட பாட்டைப் படிச்சுக்கொண்டு குருவானவராய்ப் போனமாதிரி நீ போகப் போறாய் எண்டு வேறொருவன் சொன்னான்.

இன்னொருவன் மிக உறுதியாக ஒரு திட்டத்தை சொன்னான். சங்ககால விளையாட்டு உடன் போதல் பெட்டையை கிளப்பிக்கொண்டு போறது. அப்ப நாங்கள் இருந்த பகுதியில் அடிக்கடி நடக்கிற விசயம் தான்

மூன்று நான்கு 'கிளப்புதல்' சம்பவங்களில் தனக்கு அனுபவம் இருக்கும் என்று. அதற்கு அந்தோனியின் காரைப் பிடிக்க வேண்டும். றைவர் சரியான கெட்டிக்காறன். என்ன, கொஞ்சம் செலவு. இப்ப இரண்டு பிள்ளைகளோடை இருக்கிற மனோகரன்ரை கல்யாணத்திற்கு தான்தான் உதவி செய்ததாகவும்...

எங்கடை காரை இரண்டு கார் கலைச்சுத்தானே பார்த்தது. அப்படி அரியாலைக் காலை எடுத்து மாம்பழச் சந்தியாலை மற்றப் பக்கமாய் திருப்பி கோப்பாய்க் காலை போய் குடத்தனை மட்டு கலைச்சுத்தானே பார்த்தவை எனக்கு தலையிடிச்சுக் கொண்டிருந்தது. ஏன்ரா உன்னர சித்தியின்ர கல்யாணமும் அப்படித்தானே நடந்தது. அது ஆயுதங்களோடையல்லோ கலைபட்டது.

ராச குலத்திற்கு விசர் வந்துவிட்டது. நக்கலாய் சிரிச்சுக்கொண்டு கடைசியாய் நடந்த கடத்தலைப் பற்றி சொல்லேன்ரா என்றார்.

அதுக்கு நான் ஒன்றும் செய்ய இயலாது. பெம்பிளை மாப்பிளையை ஏத்திக்கொண்டு கொஞ்சத் தூரம் ஒடினதுதான். ஒருத்தரும் கலைக்கேல்லை. கொஞ்சம் தூரம் ஒடிப்பார்த்து விட்டு திரும்பி வந்ததுதான். அடுத்த பகுதி காருக்கு பேசின காசைக் கூட தரவில்லை' என்றார்.

அவர், தான் படிக்காத ஆள், தன்னை நாங்கள் நக்கல் அடிக்கிறோம் என்று உணரப்படாது என்பதற்காய் யோண்சன் சொன்னான் 'அவனுக்கு நாளைக்கு தேத்தண்ணீர் குடிக்கிறதுக்கு காசு இருக்கோ தெரியாது'.

அவன் காதலிக்கிறானேஒழிய, இப்ப கல்யாணம் முடிக்கிறதுக்கில்லை. அதுக்கெல்லாம் கனகாலம் இருக்கு. என்று சொல்ல, 'காதலெல்கிறது கல்யாணம் முடிக்கிறதுக்கு எண்டெல்லோ நினைச்சேன்' என்று சொல்லிப்போட்டு அவர் போயிற்றார்.

நானும் வீட்டுக்குப் போக வெளிக்கிட்டன்.

போகேக்கை ராசகுலம் கேட்டான். 'நான் நேற்று சொன்ன விசயம் பத்தி யோசிச்சனியோ?

நான் தீடீரென்று சொன்னன்.

'ஓம்... நான் மன்னாருக்கு போறன். நீ சம்மாட்டிக்கு சொல்லு' எண்டன்.

என்ர சடுதியான பதில் ராசகுலத்துக்கு நிச்சயமாய் ஆச்சரியமாய்த்தான் இருந்திருக்கும்.

தாடித் தங்கராசாவை பெடியள் போட்டதுக்கு அடுத்த நாள், நான் மன்னாருக்கு வெளிக்கிட்டன்.



selvam.a@thaiveedu.com

கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க,

Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

Bhamini:

647 294 0736,
416 491 6057.

www.inayam.net
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit - 2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card - 1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent Lic# M12002440
info@mortgagesolutions.ca
www.MortgageSolutions.ca
Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

# நீங்கள் ஒரு பிறைவேட் மோட்கேஜ் கொடுப்பவரா?

# உங்கள் முதலீட்டை மீள பெற சிக்கலாக உள்ளதா?


COURT FILE NO.:

ONTARIO
SUPERIOR COURT OF JUSTICE

BETWEEN:

[redacted]

Plaintiff

- AND -

[redacted]

Defendant

STATEMENT OF CLAIM (MORTGAGE ACTION - FORECLOSURE)

TO THE DEFENDANTS

A LEGAL PROCEEDING HAS BEEN COMMENCED AGAINST YOU by the Plaintiff. The claim made against you is set out in the following pages.

IF YOU WISH TO DEFEND THIS PROCEEDING, you or an Ontario lawyer acting for you must prepare a statement of defence in Form 18A prescribed by the Rules of Civil Procedure, serve it on the Plaintiff's lawyer or, where the Plaintiff does not have a lawyer, serve it on the Plaintiff, and file it, with proof of service in this court office, WITHIN TWENTY (20) DAYS after this Statement of Claim is served on you, if you are served in Ontario.

If you are served in another province or territory of Canada or in the United States of America, the period for serving and filing your Statement of Defence is 40 days. If you are served outside Canada and the United States of America, the period is 60 days.

SPECIMEN

NOTICE OF SALE UNDER CHARGE

TO: THE PARTIES SHOWN ON SCHEDULE "A" ATTACHED HERETO

TAKE NOTICE that default has been made respecting payments and other covenants under a certain charge of land made between [redacted] as chargor and [redacted] as chargee, on the security of:

[redacted], METROPOLITAN TORONTO CONDOMINIUM [redacted] PT BLK ... AS DESCRIBED IN SCHEDULE "A" OF DECLARATION ... SCARBOROUGH, CITY OF TORONTO

PIN [redacted]

Municipally known as [redacted], Toronto, Ontario M1V 5E3.

and registered in the Land Registry Office for the Land Titles Division of Toronto (No. 80), on the 20th day of December, 2017 as Instrument No. [redacted] (the "Charge").

AND [redacted] hereby gives you notice that the amounts now due on the Charge for principal, interest and costs, are as follows:

| | |
|---|---|
| Principal Balance | $70,000.00 |
| Interest to October 22, 2019 | $6,929.00 |
| Pre-Payment Interest Penalty | $2,598.00 |
| NSF Fee | $1,200.00 |
| Administration Fee | $1,500.00 |
| Statement Preparation Fee | $475.00 |
| Legal Fees and Disbursements to the date of this notice | $2,500.00 |
| TOTAL | $85,201.00 |

SPECIMEN

(such amount for costs being up to and including the service of this notice only, and thereafter such further costs and disbursements will be charged as may be proper), together with interest at the rate of 13.00% per annum, on the principal, interest and costs hereinbefore mentioned, from May 15, 2019.

AND UNLESS the said sums are paid on or before June 20, 2019, the undersigned shall sell the property covered by the said Charge under the provisions contained in it.

THIS NOTICE is given to you as you appear to have an interest in the charged property and may be entitled to redeem the same.

DATED at Toronto, Ontario on May 14, 2019.

[redacted]

By its solicitors

[redacted]

Barrister & Solicitor

[redacted]

அப்படியானால் இப்படிப்பட்ட சில சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா?

அடமானம் எடுத்தவர்கள் மாதாந்த கட்டுப்பணம் செலுத்த தவறுதல்.

மற்றைய மோட்கேஜ்களுக்கு ஒழுங்காக பணம் செலுத்த தவறுதல்.

வீட்டுக் காப்புறுதி கட்டணம் ஒழுங்காக செலுத்த தவறுதல்.

கொண்டோ காசு, புறப்பட்டி ரக்ஸ் செலுத்த தவறுதல்.

வேறு மோட்கேஜ் கொடுத்தவர்கள் பவர் ஒப் சேல் நோட்டீஸ் அனுப்பி இருப்பது.

அடமானம் பெற்றவர்கள் மீளத்தர முடியாமல் மறுக்கும் நிலைமை.

## வருமுன் காப்பதே சிறந்தது

**தயா PK கந்தையா** BAS, LLB (Hons)
வழக்கறிஞர்

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**

## 416-333-1001

(மெசேஜ்சிலை விடுங்கோ, கட்டாயம் திருப்பி உங்களுக்கு போன் அடிப்பேன்)



Thaya PK Kandiah BAS, LLB (Hons)
Barrister, Solicitor & Notary Public

# KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION

T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002

Credit Recovery - Mortgage Enforcement - Real Estate Law - Family Law

Legal Advise - Legal Research - Legal Analysis - Legal Referrals - Document Review - Document Drafting


NO MEDICAL
UP TO $500,000
✓ $0 first month's premium
✓ No medical exams
✓ Simple and straightforward
✓ 18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Canada VISA
DETROIT
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT
Member of Million Dollar Round Table
Life100
INSURANCE & INVESTMENTS INC.
- digi Media -
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
La Capitale
iA Financial Group
Canada Protection Plan
Simply Peace of Mind
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்
வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்
கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்
KAPITAL CARE MORTGAGE INC.
Rambo Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111

LIFEPLAN INVESTMENTS

Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC

WE CAN HELP BUILD YOUR FUTURE

Insurance • Investments • Tax and Estate Planning

905-294-PLAN (7526) www.lifeplaninvestments.ca 416-894-2009

Download Free MyLIFEPLAN App

App Store Google Play

COURTYARDS

Vaughan நகரில் புதியதோர் பல் வைத்திய நிலையம்

Dr. Annahvathany Sivakumaran, DMD

Dr. வதனி சிவகுமாரன்

Tel: 905-553-5266 | courtyardsdental@gmail.com

அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

All Procedures including:

- Braces
- Cosmetic Dentistry
- Root Canal Treatment
- Implants
- Wisdom Tooth Extraction
- Oral Diseases

2396 Major Mackenzie Dr. W., Unit #6, Vaughan, (Keele & Major Mackenzie) Parking available

Mega Financial Group

உங்கள் அனைத்து விதமான காப்புறுதி தேவைகளுக்கும்.

Call Now

Raj Nadarajah

President & CEO

416-666-1120

நீங்கள் வீடு வாங்கும்போது

$8475.00

வரை அரச வரிச்சலுகை பெற்றுக்கொள்ள தகுதியானவரா? விபரங்களுக்கு 416-888-9492

Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555



CUSTOM BUILT HOMES COMING SOON

2019 SUMMER CLOSING • DETACHED HOMES

MEADOWVALE RD AND ELLESMERE RD

2 CAR GARAGE • 4 BEDROOMS • 4 WASHROOMS

NO HOMES AT THE BACK • 4 CAR PARKING

30 MINS WALK TO U OF TORONTO SCARBOROUGH

MORE INFO CALL 416-670-6467

Your Lifelong Realtor

Nanda Kandasamy

Broker

DIR: 416 457 4509

OFF: 416 270 1111

nandakandasamy@gmail.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE

உங்கள் இல்லக் கனவுகளை நிஜமாக்கிட ...

GAJAN MAHAKANAPATHY

416.999.2777

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

Realtorgajan.com

905.239.9222 info@realtorgajan.com

DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan

2150 Eglinton Ave E, Unit 5 Scarborough Markham & Eglinton

3351 Markham Rd, Unit 129 Scarborough Markham & Steeles (Red Building)

416.264.3232 416.609.2022

Rathiga Thillaivannan BCom

Sales Representative

Buying/ Selling/ Leasing/ Investing

Dir: 647.839.0079

rathiga24@hotmail.com

Homelife/Future Realty Inc.,Brokerage*

Bus: 905.201.9977 Fax: 905.201.9229

205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8

*Independently owned And Operated

Kugaraj Ratnasabapathy

Sales Representative

Dir: 416-786-3332

RE/MAX ACE

BROKERAGE
Independently owned and operated

416-270-1111

3-1286 Kennedy Road, Toronto, ON M1P 2L5

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Vaheesan Jeyaveerasingam

Sales Representative

Re/Max Ace Realty Inc. Brokerage

3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5

Dir: 416-276-9999

Bus:416-270-1111 | Fax:416-270-7000

RE/MAX ACE REALTY INC., BROKERAGE

www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST

Please Contact

RAVI PARAMU

Broker

Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com

HomeLife Today Realty Ltd., Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON, M1P 4S6

NOW HIRING JOIN OUR DYNAMIC TEAM

CHANDRAN RASALINGAM CHS

President & CEO

iNFORCE LIFe Financial Services Inc.

10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com

QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai

Sales Representative

HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario

Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963

tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST

YA Smiles Dental Clinic

ALL YOUR DENTAL NEEDS...

CALL US: 905-554-5524

7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6 WWW.YASMILES.CA

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்

RE/MAX NORTH REALTY

077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna

LATHAN VARATHARAJAN
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk